[illegible]

Sarvanaya [illegible]

RRjun 2.4 -1- 18[illegible]7


@6w m01
m98
114327

# சவரிராய பிள்ளை

## யவர்கள்

# சரிதமும் காகிதங்களும்.

௧௮௱௩௬-௵ முதல் ௭௪-௵ வரை.

---

முதல் புஸ்தகம்

௧௮௱௩௬-௵ முதல் ௬௩-௵ வரை.

---

[௧௮௱௬௯-௵ முதலுள்ள குடும்ப செய்திக் குறிப்புகளுடன்]

மகன்

யோவான் தேவசகாயம்

தன் ஆறுதலுக்காகவும் தன் பிள்ளைகள் அறிய விரும்பியும்

அச்சிட்டது.

---

பாளையங்கோட்டை, சிந்தாமணி யந்திரசாலை,

௧௮௱௯௮-௵

Acc. No. 2157

# THE JOURNAL AND LETTERS
OF
# SAVARIRAYA PILLAI

*(A Catechist of the Church Missionary Society)*

TINNEVELLY DISTRICT, SOUTH INDIA.

**1836—1874**

---

VOLUME I.

1836—1863

---

*Chinthamani Press, Palamcottah.*
1898.

M98
808.6
114327



*[Note by one of the sons].*

—:o:—

THIS Tamil book is the first volume of the private Diary and Letters of an humble Christian in the Tinnevelly District, S. India.

Savariraya Pillai was born in 1801 and died in 1874. He was ignorant of the English language.

The Diary commences from the time in 1836 when he joined THE GERMAN EVANGELICAL MISSION as Catechist. But the entries till 1844 are very brief. The Diary is written on palm leaves, and consists of ten books.

Five hundred and forty Letters have been secured. They are on paper. The earlier Letters, written on palm leaves, have been lost. The Letters, nearly all of them, were addressed to his children and relate, like the Diary, mostly to family matters.

For the events before 1836, he seems to have kept some record. Probably they were on isolated palm leaves, and were lost in places where he left them during his troubled life after his father's death; or he latterly destroyed them keeping only a memorandum of the chief events of the period. For, such a memorandum exists in chronological order.

This memorandum and some other accounts of the family selected from writings from 1791 are printed as an Appendix to the present volume. It is believed that a Tamil record of this kind was never printed before.

As Catechist, he had to write an account of the daily work, which he delivered monthly to his Inspecting Catechist or Missionary. It was read, or taken as read, and destroyed. No portion of that official Diary now exists. Mr. RHENIUS' directions to Catechists about writing this Diary are printed at page 9. It was called the Catechist's "Report". Adopting this word, Savariraya Pillai calls his private Diary also by the English word 'Report'.

A simple, faithful story of the family from 1700 to 1851 exists in manuscript.

In spite of every care, some of the palm books have been injured by insects. With the object of preserving the record, the printing was undertaken, that the family may cherish in everlasting memory their sainted father, on whose death the Rev. (afterwards Bishop) E. Sargent preached from the text, *Noah was a just man and perfect in his generations, and Noah walked with God.*

Neither the Letters, nor the Diary can interest any but his children. To strangers much would seem worthless. But to the son who writes this note, the record is precious: *my father's hand wrote them.* It is the vision of the now unseen home, father and mother, and of hallowed, happy early days. The book is not for any but his children. It would be unwise to publish a family



chronicle of a recent date. Only twenty five copies have been printed. But who can tell into whose hands one of these may not fall? Hence this note in English, the language of the present world.

The work of collecting the accounts from 1791 and arranging them, and copying them and the Diary and the Letters on paper, and carrying them through the press, entailed much labour to one whose business detained him often till late in the night. Difficulty was also experienced in deciphering many of the words in the early records. Pains have been taken to keep the copy faithful to the original.

During a long series of years, a great portion of which was one of hard toil and untold worry and anxiety, nothing was a greater consolation than this blessed task which the writer of this note was enabled to accomplish thus far.

*December 1898.*

[1836—1838

## வடக்குன்குளம் மதுரேந்திரம்பிள்ளை மகன் சவரிராயன் ரிப்போராட்டுச் சுருக்கம்.

---

௲௮௱௩௰௬-ம் ஹு நவம்பர்௴ ௰௨யில் சிந்துபூந்துறையிலிருக்கும் கனம் இரேனியுஸ் ஐயரவர்களிடத்தில் உதவியிற் சேர்க்கப்பட்டேன்.

௲௮௱௩௰௭-ஹு சுலாய்௴ ௧௰௨ ௸ கனம் ஐயரவர்களால் சேருவைகாரன்மடத்துசபைக்கு உபதேசியாய் அனுப்பினது.

௸ வருஷம் ஆகஸ்டு௴ ௰௨ வியாழக்கிழமை ௸ கனம் ஐயர்மகள் கனம் மில்லர்ஐயரவர்கள் பெண்சாதி தலைப்பிள்ளை பெண்பிள்ளைபெற்றது ௸ சிந்துபூந்துறையில் அக்கினிசாய்பு பங்களாவில்.

௰௮-ஹு மார்ச்சு[௴ ௧௮௨ அப்போதான் சமுசாரத்துடன் சேருவைகாரன்மடத்துக்கு வந்தது] மாசஞ் சீவானந்தபுரத்துக்கு ௸ கனம் இரேனியூஸ்ஐயரால் மாற்றி சுலாய்௴ வரை சீவானந்தபுரம், சேருவைகாரன்மடம், காட்டுச்சக்கம்மாள்புரம், ராமலிங்கபுரம், நயினார்புரம், சுப்பிரமணியபுரம், கயிலாசபுரம், ஆக ௭ ஊருக்கும் சபைவீடு ௨௰ம் விசாரித்துச் செபஞ்செய்துவந்தேன். ௸ சுலாய்௴ ௨௮௨ எனக்குப்பதிலாகச் சாமுவேல்நாயக்கர் வந்து உத்தரவு கனம் சாப்பட்டரவர்களால், கருத்தப்பிள்ளையூர் கலியாணபுரத்துக்குப் போகும்படிவந்தது.

ஆகஸ்டு௴ கருத்தப்பிள்ளையூர்.

௸ வருஷம்செப்தெம்பர்௴ ௰௨ கனம் சாப்பட்டர்ஐயர் சற்கமிஷியோனிற்சேர்ந்து உபதேசிமார் வாத்திமார் பிரிவினைகளில்லாமல் ஒருமையானது ௨௨ ௫-௨ முருகன்குறிச்சிக்கோவிலில்.

௰௫-௨ ௸ கலியாணபுரத்தில் ஆர்லிஐயர்வந்து அந்த ஊர்சபையை ஒன்றித்துச் செபம்பண்ணினார்கள்.

அக்டோபர்௴ ௰௨ கனம் பெற்றிற்றுஐயரவர்கள் தங்கள்சேகரம் இன்றுமுதல் உபதேசிக்கு உத்தரவனுப்பி ௸ சபைமுழுவதும் எனக் கொப்புவித்தார்கள். முன்வேதன்பன்பிள்ளை விசாரணை, பின்புசீனிவாசகம்பிள்ளைவிசாரணையாயிற்று.

௰௨ நீதிபுரம், மேலவிசுவாசபுரம், இவைஞ்சசேருவைகாரன்பட்டிக்கும் போய், ௸ விசாரணைப்பிள்ளைவீட்டிற் சாப்பிட்டேனிரவில்.

நவம்பர் ௴ ௰௮௳ ஓய்வுநாள்; ஆராதனை, வி. வேதன்பண்பிள்ளை செபம்
டிசம்பர் ௴ ௨௳ ஓய்வுநாள், கனம் பெற்றிற்று ஐயரவர்கள் பிரசங்கம்,
மத். ௫-அதி. ௪-வாக்கியம்.

௰௩௳ எனக்குப்பதிலாகவந்த உபதேசி மாசில்லாமணியாபிள்ளையிடத்தில்கோவில் புஸ்தகம் சபை டாப்புமுதலியவைகளை யொப்புவித்துச் சிவானந்தபுரத்துக்குப்போகப் புறப்பட்டேன். முன்னிருந்து மாற்றப்பட்ட வூர்தான். கருத்தப்பிள்ளையூரிலிருந்தது நான்மாத்திரம். சமுசாரங் குழந்தைகள் சுவிசேஷபுரத்திலிருந்தது.

## இரவாரபட்டி உபதேசி.

௩௯-௵ செப்தெம்பர் ௴ ௭௳ காலையில் பன்றிகுளம்விட்டு இரவாரபட்டிக்குப்போக வில்லிசேரிக்குப்போய் விசாரணை வேதன்பண்பிள்ளையவர்களிடத்திற் பேசிக்கொண்டிருந்து சாயந்திரம்மக்கித்தோப்புக்குப்போய்த் தங்கினேம், நானுமென்மகன் மரியசவரிமுத்தும்.

௮௳ பனையடிப்பட்டியிற்போய் ஓய்வுநாள்பகல் ஆராதனையும் இரவு செபமுஞ் செய்திருந்து,

௯௳ காலையில் இரவாரபட்டிக்குப் போய்ச்சேர்ந்து, அங்கிருந்தசவளக்காரன் ஆபிரகா முபதேசியாரையும் சமுசாரங் குழந்தைகள் மற்றும் சபையாரையுங் கண்டுபேசிக்கொண்டு, இரவில் சபையாருக்குஇப்போதுஉங்களுக்கு உபதேசியாராக வந்திருக்கிறவர்க ளிவர்களென்று ஷை உபதேசியார் சொல்லி செபம்பண்ணினர்.

௰௳ ஷை உபதேசியார் சாமான் ஒதுக்கிப்போகுமுன் வீட்டு முத்தத்திற் சமையல்செய்துசாப்பிட்டுக் கோவிலிற் படுத்திருந்தோம்.

௰௧௳ யவர்போனபின்பு வீட்டிற் பிரவேசித்திருந்து வேலை பார்த்திருந்தோம். மரிய சவரிமுத்துதான்கூட.

## பன்றிகுளம்.

௩௯-௵ ஜூன் ௴ ௧௳ குட்டத்துறையிற் சம்பளக்கூட்டத்துக்கு வந்தேன், சம்பளம் ரூ ௫, படி ரூ வ.

௨௳ கைம்பெண் சங்கத்தைக்குறித்துப் பேசும்படியிருந்து பின்பு கனம் சாப்பட்டர்ஐயரவர்களிடத்தில் வடக்குன்குளத்துக்குப் போய்வர உத்தரவு வாங்கிக்கொண்டு ௫ மணிக்குப்புறப்பட்டு தட்சநல்லூரில் தங்கி

௪௳ பண்ணிகுளத்தில்வந்து சேர்ந்தேன்.

௫௳ வடக்குன்குளத்துக்குப்போகப் புறப்பட்டுவந்து தாதன்குளத்தில்





இரவுதங்கி,

௬௳ சுவிசேஷபுரத்துக்கு வந்து இரவுதங்கினேன். விசாரணைப்பிள்ளைக்குச் சுகமில்லை.

௭௳ சாயுங்காலம் புறப்பட்டு ராதாபுரத்திற்றங்கி

௮௳ வடக்குன்குளத்துக்குப் போய்ச்சேர்ந்து லண்டன் மிசியோனைச் சேர்ந்த கோவிலிருந்திறைற் செபத்துக்குப்போனேன்.

௪௰-௵ பிற்பரவரி ௴ தேசாந்திர உபதேசியனுவலாய் ஷை மாசம்பனிரண்டாந்தெய்தி சுப்பலாபுரத்துச் சபை ரிப்போர்ட்டுமுதலான புஸ்தகங்களையும் இராயப்பஉபதேசிக்கு ஒப்புக்கொடுத்துவரும்படி போய்

௰௯௳ ஒப்புவித்து

௰௪௳ முதற் கிராமங்களைச் சுத்திப்போதித்துவந்தேன்.

௪௰-௵ ஏப்பிரல் ௴ வரை தேசாந்திரி உபதேசிவேலை.

௪௰-௵ மெய் ௴ ௰௯௳ அச்சங்குண்டுவந்துசேர்ந்தேன். ஷை உபதேசியார் பெரியநாயகம்பிள்ளையிடத்தில் சபையின் டாப்பு, புஸ்தகம் முதலானது ஒப்புக்கொண்டேன். அவருக்கு சஸ்பெண்டு.

௪௰-௵ மெய் ௴ ௨௫௳ அச்சங்குண்டிலிருந்து வீரகோன்புதூருக்கு ஆராதனைக்குப்போனேன், கனம் சாப்பட்டர்ஐயரவர்கள் ஆராதனைபிரசங்கம. பேதுருப்பிள்ளை விசாரணை.

௲௮௪௰-௵ செப்தெம்பர் ௴ ௰௫௳ குட்டத்துறையில் சேமத்து மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை மரித்தசெய்தி கேட்டேன்.

௪௰-௵ அகஸ்டோபர் ௴ ௯௩௳ சேமத்திலிருந்துசுவிசேஷபுரம்வந்து சேர்ந்தோம், உடனே கனம் மெல்லர்ஐயரவர்களைக்கண்டு அவர்களுத்தரவு சத்தியநகரத்துக்கு உபதேசியாய், நவம்பர் ௴ ௨௳.

௯௳ பன்றிகுளத்தில் வைத்துவந்தசாமானையும் குருவினத்தத்தில்விட்டு வந்த குசைமகியானையுங் கூட்டிவர உத்தரவுவாங்கி ௪௳ போய் ஷை சாமானும் பிள்ளையும் கூட்டி எடுத்துவந்து ௰௨௳ சத்தியநகரம் வந்து

௰௩௳ சுவிசேஷபுரம்.

௰௪௳ சுவிசேஷபுரத்திலிருந்த என் சமுசாரங் குழந்தைகளையுங் கூட்டிக்கொண்டு ௰௪௳ வியாழக்கிழமை சத்தியநகரஞ் சேர்ந்தோம்.

வெள்ளிக்கிழமை கிறிஸ்துபிறந்தபண்டிகை யாசரித்தோம், உதவி விசாரணை பரமானந்தம்பிள்ளை. உதவிக்காரன் கிறிஸ்தாசனுபதேசி பெரிய மனுவேல்.

டிசம்பர்௴ ௩௰௨ சுவிசேஷபுரத்திற் கனம் மில்லர்ஐயாவர்களால் ஷெ விசாரணைப்பிள்ளை குழந்தைக்குஞானஸ்நானங்கொடுத்து செபத்தியாயியென்று பேரிடப்பட்டது. கூட ஷெயார் தவசிபபிள்ளை முத்துசுவாமிக்கும் ஞானஸ்நானங் கொடுத்தார்கள்.

---

௨

சேருவைகாறன்மடம் உபதேசி சவரிராயபிள்ளைக்குக் கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் நீ யிந்த உத்தரவு கண்டவுடனே சிவானந்தபுரத்துக்கு வந்து அவடத்திலுள்ள ஞானக்கண்ணுஉபதேசியினிடத்திலிருக்கிற திப்போறட்டு முதலானவைகளை ஒப்புக்கொண்டதின்பேரில்நீயவ்விடத்தில்தானே குடியிருந்துகொண்டு ஷெ ரெண்டுகிருமத்திலும் அதைச் சேர்ந்த சுத்துக்கிருமத்திலுமுள்ள சபையைச்சேர்ந்த காரியங்களையும் ஒழுங்காய் நடப்பிவிச்சுக்கொண்டு வருகிறதுந்தவிர ஷெ சிவானந்தபுரத்திலுள்ளபிள்ளைகளுக்கும் படிப்புச்சொல்லிக் குடுத்துக்கொண்டுவரவும். யிதுகளில் அசாக்கிறதையாகயிருந்தா லதைக்குறித்து உன்னிடத்தில் விசாரிக்கிறதாயிருக்கும். C. Rhenius.

௲௮௱௩௰௮௵ பிப்பிரவரி௴ ௨௰௨ சிந்துபூந்துறை.

௨

[சேருவைகாறன்மடம் உபதேசி சவரிராயபிள்ளைக்கு]

* சுவிசேஷபோதகசங்கத்தைச்சேர்ந்தஇரேனியுஸையர்சிவானந்தபுரத்திலுள்ள உபதேசிக்கும் சபையாருக்கும் கருத்தராகியஇயேசுக்கிறிஸ்துவினுடையகிருபையை வாழ்த்தி யெழுதுகிறதென்னவெனில்,

நான் பண்ணைவிளையிலிருந்து உங்களுநக்குவந்து உங்களுக்குச்சில ஞானநன்மைகளைச் செய்யும்படிக்கு விருப்பமாயிருந்தேன். அதற்குத் தடையுண்டாயிற்று. வேறொருகாலத்திலே அப்படிச்செய்யும்படிக்குக் கருத்தர் கிருபைசெய்வாரென்று நம்புகிறேன். நீங்களெல்லாரும் அவரைப்பற்றும் விசுவாசத்திலேயும் அவருடைய வசனத்திற்கேற்ற நீதியுள்ள நடக்கையிலேயும் பெருகுவீர்களாக-அப்படிச்செய்தால் மரணம் உங்களுக்குச் சந்தோஷமான இடத்துக்குக் கொண்டுபோம்-இவ்வுலகப் பொருளின்மேல் நம்பிக்கையை வையாதிருங்கள். அது காற்றுபோலப் பறந்தோடிப்போகிறதே. பராபரன் இயேசுக்கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தினாலே நமக்குக்கொடுக்கிற ஞானதிரவியத்தையே யடையும்படி மிகவுஞ் சாக்கிரதையாயிருங்கள். நித்தியமகிமையுடைய கிறிஸ்துநாதர் எளியவர்களாகியநம்மை ஐசுவரியவான்களாக்கும்படிக்கு இவ்வுலகத்திலே எளியவரானாரென்று இந்தக்கிருபையை மறவாமல் நன்

* இந்தக்காகிதம் இரேனியூஸ்அய்யரவர்களுடைய சொந்தக்கையெழுத்து. J. D. S.



றாய் நினைத்து அவருடைய திருவசனத்தை நாடோறும் கருத்தோடே படித்துக் கொள்வீர்களாக- உங்கள் கவலைகளெல்லாவற்றையும் அவருடைய பாதத்தில் வைத்துவிடும்படிக்கு உத்தரவுகொடுத்தாரே. அந்தப்படியே செய்யுங்கள்.

அன்புள்ள பராபரன் உங்களையென்றென்றைக்குங் காப்பாற்றக்கடவர்.

Palamcottah, Oct. 21st, 1837. C. Rhenius.

இதைச் சேர்வைகாரன்மடத்திலுள்ள சபைக்கும்போய் வாசித்துக்காட்டவேண்டும்.

[இது சிவானந்தபுரத்திலுள்ள ஞானக்கண்ணுபதேசியாருக்குஞ் சபையாருக்குங் கொடுக்கப்படுவது]

மேற்றிசையிலிருக்கிற சுவிசேஷபோதகசங்கத்தைச்சேர்ந்தஉபதேசிமார்களுக்கு யெழுதுகிறதென்னவென்றால்,

இப்பவும் நம்முடையஅன்புள்ள சகோதரராயும் கிறிஸ்துவுக்குள் தகப்பனுகவுமிருந்த கனம் இரேனியூஸ்ஐயரவர்கள் நாளது௴ ௩௨ செவ்வாய்க்கிழமை சாயுங்காலம் ஆறுமணிக்கு மிகுந்த சமாதானத்துடனே கர்த்தருடையஇராட்சியத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இந்தப்பெரியதுக்கமான செய்தியை யறிந்துகொள்ளுகிறசகல உபதேசிமார்களும் (சபையார்களும் வருகிறவர்கள்) ௩௨ புதன்கிழமை மூனுமணிக்குள்ளாகவரும்படி சாக்கிறதையாகவேண்டியது.

௲௮௱௩௰௮௵ ஜூன்௴ ௩௨, சிந்துபூந்துறை. P. Schaffter.

| |
|---|
| மேற்றிசையிலுள்ள சுவிசேஷபோதக சங்கத்தின் உபதேசிமார்கள்சபையார் பார்க்கிறவர்கள் மற்றவர்களுக்கு துரிதமாயனுப்பவேண்டும். |

---

௨

சிவானந்தபுரம் சவரிராயஉபதேசியாருக்கு கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாக வாழ்த்தியெழுதுகிற உத்தரவு யென்னவென்றால்,

இப்பவும் யிந்தஉத்தரவுகொண்டுவருகிற உதவி சாமுவேல்நாயக்கனிடத்தில் உம்மிடத்திலிருக்கிற சபையின்டாப்புக் கோவில்புத்தகமுதலானதை ஒப்புக்கொடுத்து ரசீதுவாங்கிக்கொண்டு உடனேபிறப்பட்டு குட்டத்துறைவந்து சேறவேண்டும். தாமிதமில்லாமல் சீக்கிறத்தில் வரவேண்டும்.

௲௮௱௩௰௮௵ சுலாயி௴ ௨௰௧. குட்டத்துறை.

P. Schaffter.

[சிவானந்தபுரம் சவரிராயஉபதேசியாருக்கு வருவது]

சிவானந்தபுரம் உபதேசி சவரிருயபிள்ளைக்குக் கர்த்தருடைய ஆசீர்வாதமுண்டாக வாழ்த்தி யெழுதுகிறது.

இந்தஉத்தரவு பார்த்தக்கொண்டவுடனேத்தாமிதம் பண்ணாமல்க் கலியாணிபுரத்துக்குப்போய் அவ்விடத்தில் உபதேசியாயிருந்த மிக்கேலுப்பிள்ளையிடத்தில் இருந்த கோவில் புத்தகமுதலான சபையின் டாப்புக்களை ஒப்புக்கொண்டு இன்னமொருஉத்தரவு கொடுக்கிறவரைத்

னும் அவ்விடத்திலிருந்துச் சாக்கிறதையாய் வேலைபார்த்துவருவாயாக. நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துநாதர் திருவுளம்பற்றுகிறபடி ஒருவருங்குற்றந்தி லகப்படாமல் யெச்சரிக்கையாய் விழித்திருந்து செபம் பண்ணும்படிக்குப் புத்திசொல்லுவாயாக.

௲அ௱௩௰அ௵ ஜூலை௴ ௩௰௨. குட்டத்துறை.

P. Schaffter.

[இவை சவரிராயபிள்ளைக்குக் கொடுப்பது]

---

௨

சீவானந்தபுரம் உபதேசி சாமுவேல் நாயக்கருக்கு கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் யிந்தஇந்தரவு கொண்டுவருகிற உபதேசி சவரிராயபிள்ளையை உனக்குப்பதிலாக திட்டஞ்செய்துஅனுப்பியிருப்பதால் உன்னிடத்திலிருக்கிறக்கோவில்ப்புஸ்தகம் சபையின்டாப்புமுதலானதைஒப்புக்குடுத்து ரசீது வாங்கிக்கொண்டு யிவடம்வந்து சேருவாயாக.

௲அ௱௩௰அ௵ டிசம்பர்௴ ௧௨. குட்டத்துறை.

P. Schaffter.

[(கலியாணிபுரம்உபதேசியார் சவரிராயபிள்ளைக்குகொடுப்பது) சீவானந்தபும் உபதேசியார் சாமுவேல்நாயக்கருக்கு]

---

பிரியமுள்ளசவரிராயபிள்ளைக்கு கர்த்தாவினுடைய கிருபையுண்டாக.

இப்பவும் பண்ணிதுளத்திலிருக்கிற மரபெட்டி சொளைப்புமுதவான சாமான்களில் சிலதைவிய்க்கவும் சிலதை பாளையங்கோட்டைக்குக் கொண்டுவரவும் எனக்கும் விசாரிப்புச் சொக்கலிங்கம்பிள்ளை யவர்களுக்கும் உத்தரவு கொடுத்திருக்கிறபடியினாலே தாமுங் கூடயிருந்து அவடத்துக்கு அனுப்புகிறசாமானுக்கும் பணத்துக்கும் தம்முடையகையெழுத்தும்போட்டு திப்போதட்டு பண்ணிக்கொள்ளவேண்டியது. என்னுடையதாயார் முதலியவர்களையும் கண்பார்த்துக்கொள்ள வேண்டியது. கர்த்தா சுகத்தைக்கொடுத்தால் இந்த ௴ கடைசியில் கண்டு பேசிக்கொள்ளலாம்.

இப்படிக்கு தம்முடைய சுகநன்மையை விரும்புகிற

ஞானவுயிர்ப்பிள்ளை.

௲அ௱௩௰௯-ம்௵ ஜனவரி௴ ௮௨ அவசரமாய் எழுதினேன்

[இது பண்ணிதுளத்துக்கு உபதேசியாக வருகிற சவரிராயபிள்ளையிடத்தில் கொடுக்கவும்]

---

௨

சவரிராயபிள்ளைக்குக் கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் உன்னை இறவாரபட்டிக்கு உபதேசியாக நியமித்திருக்கிறபடியினாலே நீமுன்னிருந்த ஆபிரகாமுபதேசியிடத்தில் சபையின்டாப்புக்கோவில்ப் புஸ்தகமுதலானவைகளை ஒப்புக்கொண்டு ஷை கிராம



த்திலிருந்து உண்மையோடுஞ் சாக்கிரதையோடும் வேலைபார்த்துவரவும்

௲அ௱௩௰௮-௵ செப்டம்பர்௴ ௨௨. குட்டத்துறை.

P. Schaffter.

[சவரிராயபிள்ளைக்கு வருவது]

---

இறவாரபட்டி உபதேசியார் சவரிராயபிள்ளைக்கு கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் உம்மை தற்காலத்துக்கு சிப்பிலாபுரம் தீமோத்தேயுப் பிள்ளைக்குப்பதிலாக திட்டஞ்செய்திருப்பதால் உடனே ஷை கிராமத்துக்குப்போய் சபைகளுக்குப் போதித்துவருகிறதுந் தவிர பள்ளிப்பிள்ளைகளையும் கூட்டிப்படிப்பித்துக் கொடுத்துவரவேண்டும். மேலும் லவுகீகஅலுவல்களில் தலையிடாமல் சபைகளுக்குள்ளும் பள்ளிப்பிள்ளைகளுக்குள்ளும் வழக்கப்படிக்கு அலுவல் செய்துவரவேண்டும்

௲அ௱௩௰௮-௵ அக்டோபர்௴ ௰௨. சங்கரநயினார்கோவில்.

உத்திரவுப்படிக்கு

முத்துசுவாமி.

௨

[இறவாரபட்டி உபதேசியார் சவரியபிள்ளைக்கு]

---

௨

சிப்பிலாபுரம் உபதேசியார் சவரிராயபிள்ளைக்குக் கருத்தருடைய ஆசீர்வாத முண்டாவதாக.

இப்பவும் ஷையூர் வாத்திமுத்திருளப்பபிள்ளை அலுவலை நிறுத்திப்போட்ட படியினாலே ஷையாரிடத்திலிருக்கிற பள்ளிக்கூடத்துப் புத்தகமுதலானதை நீர் ஒப்புக்கொண்டு ஷையூரிலிருக்கிறபிள்ளைகளையும் சேர்த்துப் படித்துக்குடுத்துக்கொண்டுவரவும்.

௲அ௱௩௰௮-௵ நவம்பர்௴ ௨௰௨. குட்டத்துறை.

P. Schaffter.

௨

[சுப்பலாபுரம் உபதேசியார்சவரிராயபிள்ளைக்கு]

---

௨

தேசாந்திரி சவரிராயபிள்ளைக்கு கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் அச்சங்குண்டம் உபதேசி பெரியநாயகம்பிள்ளைக்கு பதிலாகஉம்மை திட்டஞ்செய்து அனுப்பியிருப்பதால் உடனே ஷைபெரியநாயகம்பிள்ளை யிடத்திலிருக்கிற சபையின் டாப்புக் கோவில் புத்தகமுதலானதை ஒப்புக்கொண்டு ரசீதுகுடுத்து ஷையூரிலுள்ள சனங்களுக்குத் தேவவசனத்தைப்போதித்து வரவேணும்.

௲அ௱௪௰-௵ மெய்௴ ௬௨. குட்டத்துறை.

P Schaffter;

[தேசாந்திரி சவரிஇராயம்பிள்ளைக்கு]

---

அச்சங்குண்டஞ் சவரிராயம்பிள்ளைக்கு கர்த்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் தமக்குவதிவாக இந்தஉத்தரவு கொண்டுவருகிற பெரிய நாயகம்பிள்ளையை திட்டஞ்செய்திருப்பதால் உன்வசமாயிருக்கிற கோவில்பொஸ்தகம்சபையின்டாப்புமுதலானதுகளைஒப்புக்கொடுத்துரசீது வாங்கிக்கொண்டு திருநெல்வேலிக்கு தம்மை உபதேசியாக நேமித்திருப்பதால் ஷெயூரில் கர்த்தருடைய வசனத்தை சனங்களுக்குப்போதித்து உண்மையோடுஞ் சாக்கிரதையோடும் நடத்திவருவாயாக.

ரு அாசம ஞு குலாயிமீ சஉ. குட்டத்துறை.

P. Schaffter.

[இவை அச்சங்குண்டு உபதேசியார் சவரிராயகம்யம்பிள்ளைக்கு]

---

௨

திருநெல்வேலியுபதேசியார் சவரிராயபிள்ளைக்கும்ஷெயூர் வாத்தியார் சுப்பிரமணியபிள்ளைக்கும்கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக.

இப்பவும் நான்து ஆகஸ்ட்டுமீ முதல் ஷெயூர்ச் சபையும் ஷெயூர்ப் பள்ளிக்கூடம் கோவில்முதலான சாமான்களையும் கனம் பெற்றிறையாவர்கள் விசாரணைக்கு நாமொப்புக் குடுத்தபடியால் இந்த மாதமுதல்நீங்கள் உங்களுடைய ரிப்போர்ட்டுமுதலான கணக்குகளை வழக்கப்படியொப்புக்கொடுத்து உங்களுடைய சம்பள உபகாரங்களைப்பெற்றுக்கொண்டுவருகிறது மல்லாமல் உங்களுடையவேலைகளை மிகுந்தசாக்கிரதையோடே உங்களுடைய இசமான்களுக்குச் சந்தோஷமுண்டாகத்தாக நடத்திக்கொண்டு வரவேண்டும்.

கருத்தர் உங்களையாசீர்வதிக்கக்கடவர்.

ரு அாசவ ஞு ஆகஸ்ட்டுமீ உஎவ. நல்லூர்.

P. Schaffter.

(இவை திருநெல்வேலியிலிருக்கும் சவரிராயபிள்ளை உபதேசியாருக்கும் ஷெயூர் வாத்தியார் சுப்பிரமணியபிள்ளைக்கும் வருவது.)

---

மிகவுங்கனம்பொருந்தியசாப்பிட்டனாய்யாவர்கள் சமுகத்துக்கு அடியேன் திருநெல்வேலி உபதேசி சவரிராயன் மிகுந்த வணக்கமாய் சலாஞ்செய்து பெழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

சமுகத்திலிருந்து ஆகஸ்ட்டுமீ உகூவ அடியேனுக்கு வந்தஉத்தரவுக்கு கூகவயில் அடியேன் தங்களிடத்தில் வந்து மிகவுங் கனம்பொருந்தியபெற்றிற்றுஅய்யாவர்கள் விசாரணையில்சேர்ந்திருக்கஅடியேனுக்கு மனமில்லையென்று அறிவித்துக்கொண்டதுந்தவிர என்சம்பளஉபகாரத்தைப்பெற்றுக்கொண்டுபின்புஇராசினமாய்க்கொடுக்கலாமென்றெண்ணி இதுவரைக்குங் காத்திருந்தஎன்வூழியத்தையுஞ் செய்துகொண்டுவந்தேன். ஆனால்இதுவரைக்கும்என்சம்பளங்கொடுக்கப்படாததினாலே அடியேன்சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லாமல்மிகுந்தவருத்தப்படுகிறேன். ஆகையால் தாங்கள் தயவுசெய்து அடியேனுக்கு ஆகஸ்ட்டுமாஸத்தை உபகாரமும் காளதுவரைக்குமுள்ள உபகாரமுங்கொடுத்து கோவில் புத்தகமுதலான



சாமான்களை ஒப்புக்கொள்ளும்படியாய் உத்தரவாக மன்றாடுகிறேன். இதுவுந் தவிர அடியேனுக்கு வேறே புகலிடமில்லாத படியால் தங்கள் விசாரணைக்குள்வைத்துக் கொள்ளும்படியாவது அல்லவென்றால் மிகவுங் கனம்பொருந்திய மில்லராய்யாவர்கள் என்னை யேற்றுக்கொள்ளும்படிக்கு ஒருகாயிதமாவது அல்லாதிருந்தால்பொதுவான ஒருசர்ட்டிபிக்கற்றாவது கொடுத்து உதவிசெய்யும்படியாய் தங்களை மிகவுமன்றாடி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ரு அாசம ஞு செப்ட்டெம்பர்மீ ௰அ௨ — இப்படிக்குத் தங்கள் தாழ்மையுள்ள ஊழியக்காரனாகிய அடியேன்

சவரிராயன்.

---

சவரிமுபபிள்ளைக்குக்கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாகவும்.

இப்பவும் சத்தியநகரத்துக்கு உபதேசியாக அனுப்பிவித்திருக்கிறபடியினாலே ஷெயூருக்குப் பேர்யவடத்திலுள்ள ஞானமுத்து உபதேசியிடத்தில் கோவில்ப்புத்தகம் சபையின் ரிப்போறட்டு இருமக்கணக்கு முதலானவைகளை யொப்புக்கொண்டு ஷெயூர் சனங்களுக்குத் திவ்விய வசனத்தைச் சாக்கிறதையாய்ப் போதித்துவருவாயாக.

ரு அாசம ஞு நவம்பர்மீ உவ, சுவிசேஷபுரம்.

J. Muller.

---

ஐயாவர்கள் உத்தரவு நகல்.

‡ சீனிவாசம்பிள்ளை உபதேசியாருடைய விசாரணைக்குள்ளாயிருக்கிற உபதேசிகளுக்கு கர்த்தாவினுடையஆசீர்வாதமுண்டாக வாழ்த்தியெழுதுகிற உத்தரவென்னவென்றால்,

நீங்கள் நாள்தோறு முங்களுக்கொப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற சபையாருக்குத்திவ்விய அறிவும் மோட்சகெதியை அடைகிறதற்கு ஏதுவானபரிசுத்த நடக்கையுமுண்டாகும்படிக்கு நாடோறுந் தேவவசனங்களையுஞ் சன்மார்க்கப்புத்தகங்களையும் வாசித்துப் புத்திசொல்லி வருகிறதையும் நீங்களிருக்கிற விடத்தைச்சூழ்ந்திருக்கிற விக்கிரக பத்திக்காரர் முதலானவர்களும் இரட்சிப்பின் மார்க்கத்தை யறிந்து கர்த்தாவினிடத்துக்கு மனந்திரும்பும்படிக்குத் தேவ வசனங்களைச்சொல்லிச் சிறு புஸ்தகங்களைக்கொடுத்து வருகிறதையும் நீங்களுந் திவ்விய வறிவிலே அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு நாடோறுமின்னின்ன புஸ்தகங்களைப் படித்தறிந்து வருகிறீர்களென்பதையுங் கிறீஸ்தவர்களிலும் விக்கிரக பத்திக்காரர் முதலானவர்களிலுந் தேவவசனத்தினாலே உத்தம விசுவாச முதலான நன்மைகளுண்டாயிருக்கிறதென்று நம்புகிறதற்கு விசேஷமானநன்மைகளுண்டாயிருக்கிறது என்பதையுங்குறித்து மறியவேண்

---

‡ இந்தக்காகிதம் மிசியோனில் ஐயா சேர்வதற்கு நாலு வருஷத்துக்கு முன்னுள்ளதாயினும் தங்கள் பார்வைக்குக் கிடைத்தபோது நகல் எழுதி வைத்துக்கொண்டதாயிருக்கிறது. J. D. S.

டியந்தாயிருக்கிறபடியினாலே நீங்கள் நாடோறும் காலையிலுமிராவிலுஞ் சனங்களுக்கு வாசிக்கிற வேதவாக்கியமின்னதென்றும் இத்தனை சனங்கள் கோவிலுக்கு வந்தார்களென்றும் விசேஷமாய் ஓய்வு நாட்களில் நீங்கள் எந்தத்திருவசனத்தைக்குறித்து எவ்விதமாய்ப் பிரசங்கம் பண்ணினீர்களென்றும் அன்றைத்தனை சனங்கள்கூடி வந்திருந்தார்களென்றும் விக்கிரகபத்திக்காரரிடத்தில் திருவசனங்களைக்குறித்துப் பேசிக்கொண்டு அவர்களுக்கு என்ன புஸ்தகங் கொடுத்தீர்களென்றும் இந்த நாடோறும் நீங்கள் செய்கிற வேலைகளை அதிக விரிவாயும் அதிக சுருக்கமாயும் எழுதாமல் ஷை வேலைகள் தெரியும்படிக்கு மாத்திரம் நிதானமாயெழுதி உங்கள் விசாரணை உபதேசியிடத்தி லொப்புவிப்பீர்களாக.

௲௮௱௪௰௧-௵ சனுவரி௴ ௮௳ இரேனியூஸ் ஐயர்.

---

௪௧-௵ சனுவரி௴ ௪௳ காலையில் விசோப்புசனம் பென்சர்களம்மெல்லர்ஐயர் சத்திய நகரத்தில்வந்து கோவில்பார்த்து விசாரணைப்பிள்ளைமார் உபதேசிமார் வாத்திமார் யாவருங்கூடச் சாத்தான்குளத்துக்குப் போனோம்.

௰௳ செவ்வல்ப்பட்டியிலிருந்த மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை மரித்தசெய்தி கேட்டோம்.

௰௫௳ முருகன்குறிச்சியிற் சங்கத்துக்குப்போனோம். ௰௮௳ சென்னர் சுருட்டு. என்மகன் மதுரேந்திரம் உதவியில் குட்டத்துறையிற் படித்தவனு மென்கூட வந்தான்.

மார்ச்சு௴ ௰௪௳ விசாரணைப்பிள்ளை மரியம்மாளைப் போகச்சொல்லி வார்த்தைபேசித்தாத்தஅவள்என்கூடத்தேரிவரைவந்துவேறுமனிதர்வந்து கூப்பிட்டதினாற்போனாள்.

ஏப்பிரல்௴ ௪௳ உத்தரவுவாங்கிக் கருசற்காட்டுக்குப்போயவ்விடத்துத் துட்டு கேட்டுக்கொண்டுதிரும்பி ௮௳ சத்தியநகரம்வந்து சேர்ந்தேன்.

௨௯௳ செந்திகாத்தபுரம் உபதேசியார் ஞானப்பிரகாசம்பிள்ளை மூத்த மகளுக்குக் கலியாணப்பாக்கு வைத்தார்.

௯௰௳ ஏகதாசன்னையில் ஞானப்பிரகாசம் எழுத்தாணியினாற்குற்றி மிகுந்த உபத்திரவமாயிற்று.

மெய்௴ ௯௳ நாசாவின்னா அண்ணன்மகன் அப்பாவுவந்தான். ௭௳ மெய்ஞானபுரத்துக்குக் கூட்டிப்போனேன்.

ஜுன்௴ ௯௰௳ சங்கத்துக்குப் பாளையங்கோட்டைக்குப் போனேன். திருநெல்வேலியில் ஒரு வட்டில்வாங்கிவந்தேன்.



ஆகஸ்ட்௴ ௰௨௳ வடக்குன்குளத்துக்குப் போனேன். அந்தவருஷம் தேரோட்டமில்லையாம்.

காணுசாபுரத்து உபதேசியார் தலைப்பிள்ளை பெண்குழந்தை பெற்றிருந்த குழந்தையையும் தாயையும் கூட்டிப்போக வந்தார்.

செப்தெம்பர்௴ ௯௳ வடக்குன்குளம் மிராசு மிக்கேல்பிள்ளை மகன் பாக்கியம்பிள்ளைக்கும் மரியமிகேலுக்குங் கலியாணத்துக்குப் புறப்பட்டு,

௰௨௳ ஷை ஊருக்குப் போய்ச்சேர்ந்தோம். அவ்விடத்துக்குக் குருவிணத்தத்தில் என்தமையனார் மிக்கேல்ப்பிள்ளை இறந்ததாக எனக்குஓலைவந்தது அப்போதுகூடமதுரேந்திரமும் வந்திருந்தான். ௰௭௳ நல்லூருக்குப்போனான்.

அகஸ்டோபர்௴ ௰௭௳ சத்தியநகரங்கோவிலில் கனம் மில்லர்ஐயரவர்களால் ௪௰-பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

---

†

‡ கடவுள் துணை.

கனம் மில்லரையரவர்களால் சத்தியநகரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் விபரக்கணக்கு.

௲௮௱௪௰௧-௵ அக்ஸ்டோபர்௴ ௰௭௳.

| | | | |
|---|---|---|---|
| பழையபேர், ஆறுமுகம், | புதுப்பேர், | ஆபிரகாம் | வயசு-௬௫ |
| ஷை மகள் ஏசுவடியாள் | | | வயசு-௰௪ |
| ஷை மகன் சாமுவேல் | | | வயசு-௮ |
| பழையபேர் வீராவுக்கு | புது | ஈசாக்கு | வயசு-௬௫ |
| ஷை மகன் அருணாசலம் | புது | ஆபிரகாம் | வயசு-௰௬ |
| ஷை மகள் வள்ளி | புது | நல்லமுத்து | வயசு-௰௨ |
| பழையபேர் மூக்குப்பூரி | புது | ஞானக்கண்ணு | வயசு-௯௰ |
| ஷை மனைவி பிச்சைக்கு | | ஞானப்பூ | வயசு-௨௨ |
| ஷை மகன் | | தாவீது | வயசு-௧௩ |
| பழையபேர் குமரவேல் | புது | மனுவேல் | வயசு-௫௫ |
| ஷை மருமகள் தேவிப்பிள்ளை | புது | ஞானவடிவு | வயசு-௨௰ |
| ஷையாள் மகன் தாவீது | | | வயசு-௩ |
| ஒண்டிக்காரன் | புது | சற்குணம் | வயசு-௨௰ |
| கைம்பெண் அன்னாள் மகன் பவுல் | | | வயசு-௰௬ |
| லாசரு அன்னமுத்து மகன் சுவாமியடியான் | | | வயசு-௯ |
| மரியமுத்து மகன் சாந்தப்பன் | | | வயசு-௰ |
| ஷையாள் மகள் நல்லாயி | | | வயசு-௫ |
| பழையபேர் ஐயண்டியாளுக்கு | | ஏசுவடியான் | வயசு-௫௰ |
| கைம்பெண் சாந்தாயி மகன் நல்லதம்பி | | | வயசு-௨௰ |
| ஷை மகன் சாமுவேல் | | | வயசு-௰௫ |

---

‡ வேறு ஏட்டிலிருந்ததை யிங்கே சேர்த்திருக்கிறேன், J. D. S.

| | | |
|---|---|---|
| பழையபேர் சடலைமாடன் புது. | பேரின்பம் | வயசு-௨௫ |
| ஷைசகோதரி பலவேசமுத்துக்கு | பாக்கியம் | வயசு-௰௧ |
| பழைய. மாரிமுத்துக்கு | மரியமுத்து | வயசு-௨௰ |
| பழைய. சுவாமிக்கண்ணுக்கு | சாமியடியாள் | வயசு-௨௫ |
| ஷையாள் மகன் பாக்கியநாதன் | | வயசு-௪ |
| ஷையாள் மகன் தாவீது | | வயசு-௯ |
| பழைய. இசக்கிமுத்துக்கு | ஏசுவடியாள் | வயசு-௪௨ |
| ஷை. மகள் பிரமராக்கிக்குப் பரமாயி | | வயசு-௪௰ |
| ஷை. மகன் லாசர் | | வயசு-௰ |
| ஷை. மகன் பரமானந்தம் | | வயசு-௫ |
| கை. பழைய. ஆத்தாங்கரையாளுக்கு | அன்னம்மை | வயசு-௪௫ |
| கை. ஷையான் மகள் அனந்தம்மைக்கு ஆனந்தாயி | | வயசு-௨௨ |
| கைம்பெண் மாடத்திக்கு | மரியாள் | வயசு-௨௭ |
| ஷைமகன் பாக்கியநாதன் | | வயசு-௫ |
| பழைய. பார்வதிக்கு | பாக்கியம் | வயசு-௯௰ |
| பழைய. ஆருளுக்கு | ஆரோக்கியம் | வயசு-௯௰ |
| ஷையாள் மகன் சாமுவேல் | | வயசு-௨௯ |
| கை. ரூசன்னாள் மகள் ரெபெக்காள் | | வயசு-௰௨ |
| ஷை. மகள் கல்லமுத்து | | வயசு-௮ |
| ஷை. மகன் சுவாமிதாசன் | | வயசு-௪ |

ஆக சனம் ௪௰-க்கு புருஷர் ௰. ஸ்திரி. ௰௯. ஆண் குழ. ௰௨. பெண். ௫.

கனம் மில்லர் ஐயரவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள்.

---

நவம்பர்மாசம் ௮௨ உதவிஉபதேசியாய் முத்துசுவாமியாபிள்ளைபுதுசாய் நேமித்துவந்தார்.

௨௯௨ சம்பளக்கூட்டத்தில் கனம் ஐயர் வேத உதாரணத்திரட்டை வாசிக்கவும் ஒரு திக்கில்லாமல் வாசித்தவர்களுக்கு ஷை புஸ்தகமும்இரண்டு திக்குக்கு வேறு புஸ்தகமுமென்று வாசித்ததில் எனக்கு மேற்படிபுஸ்தகம்-௧-அகப்பட்டது.

டிசம்பர்மீ ௰௨ பிள்ளையவர்களுக்கு வடக்குன்குளத்தில் வீடுகட்டுகிறதுக்கு பெரியஉத்திரம்இவட்த்திலிருந்து ஒருவேம்புமரம்வெட்டி ௰௪௨ அனுப்பினோம் சுவிசேஷபுரத்துக்கு.

௨௪௨ கனம் ஐயரவர்களிடத்தில் மோட்சமார்க்கமென்னும் புஸ்தகம் ௲௯-க்கு வாங்கினதற்கு சந்தோஷமாய் ௨இ௲ விலைக்குவாங்கினபெரியசெப புஸ்தகங் கொடுத்தார்கள்.

---



[1842

௪௨-ஆம் சனுவரிமீ ௪௨ பாளையங்கோட்டைக்குப்போனேன்.

இ-௨ ௯-௨ சங்கம்.

௭௨ கனம் மெல்லர்ஐயரவர்களிடத்திலுத்தரவுவாங்கிக் குருவிகத்தத்து அண்ணன் மிக்கேல்பிள்ளைமரித்த துட்டிகேட்டுக்கொண்டு ௰௧௨ அச்சங்குளத்துக்குவந்து அக்காள்மரியவியாகம்மைமகன் வியாதிப்பட்டதைப்பார்த்திருந்துசற்றுவாசியாயிருந்தது. ௰௨௨ தெக்குத்திந்தான்பட்டிச்குவந்து செவ்வல்பட்டி அருளம்மாளைக் கூட்டிக்கொண்டு பிள்ளையெடுக்க ஒருமணிதனுக்குசம்பளம்௲ காலேமாகாணியும் சாப்பாடுங்கொடுத்து ௰௪௨ புறப்பட்டு ௰௯௨ சத்தியநகரம்வந்து சேர்ந்தோம். உத்தரவுக்கு அதிகம் நாள் ௪.

௰௮௨ என்சமுசாரத்துக்குபிரவசகாலத்துவருத்தமிகுதியாய் ௰௧௨ புதன்கிழமை விடியற்காலம் ௫ மணிக்குமேல் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. நேமத்துச்சுவாமியடியாள் வீட்டில் உதவியாயிருக்கிறாள். ஷை குழந்தைக்கு சஞ்சீவியென்று பேரிட்டோம். ௨௰௨ சுவிசேஷபுரத்து மரியம்மாள் வந்தாள்.

பிற்பரவரிமீ ௭௨ குருவினத்தத்திலிருந்து தொட்டன்பட்டி அன்னன்ஞானப்பிரகாசம்பிள்ளை வந்தார். அவரிடத்தில்மதுரேந்திரத்துக்கு மேற்படியார் மருமகள் மரியம்மாளைக் கேட்டோம்.

௰௭௨ பிள்ளையவர்களிடத்தில் உத்தரவுகேட்டு வடக்குன்குளத்துக்குப்போய் ௨௰௨ உதையத்தில் வந்துசேர்ந்தேன்.

மார்ச்சுமீ ௨௨ கல்லூர் மதுரேந்திரம் காயிதம்வந்தது.

௯௨ ஷையானும் தம்பி டாக்கிட்டர்தேவசகாயம்பிள்ளையும் சத்தியநகரத்தில் வந்தார்கள்.

ஏப்பிரல்மீ ௭௨ ஷைமதுரேந்திரம் கல்லூருக்குப்போனான்.

௨௰௨ நேமத்துசுவாமியடியாளை சுவிசேஷபுரத்துக்கு அனுப்பினோம்.

௨௪௨ விசாரணைப்பிள்ளை உத்தரவுவந்தது ஷை மதுரேந்திரத்துக்குப் பெண்பேசிக் கூட்டிவரும்படிகுருவினத்தத்துக்குப் போகும்படிக்கு. அந்தப்படி

௨௫௨ சபையான் பவுலையுந்துணைக்குக் கூட்டிப்போனேன். அன்றுசெட்டிமூலம்பட்டிக்குப் போனோம். அவ்விடத்தில் ஷை பெண்தகப்பனார்வந்தவரைக் கூட்டிக்கொண்டுபோய்குருவினத்தத்தில் ௨௭௨ஷைபெண் காரியத்தைப்பேசிக்கொண்டு சுவிசேஷபுரத்துக்குஓலை அனுப்பினேன் ௩௰௨ சனிக்

ஜெனமசாயந்திரம் பெண்கூட்டிக்கொண்டு அச்சங்குளத்து அன்றுட்சிபண்டிதர்வீட்டில்தங்கி மெய்மீ௳ க-உ ஓய்வுநாளவ்விடத்திலிருந்து உ-உ நீத்தான்பட்டிக்குவந்து ஷை வர்தங்கச்சி அந்தோனிமுத்து செவ்வல்பட்டியிலிருந்த என்மதினி சவரியம்மாள் இலந்தூரக்கான்மிகேல் இவர்களும் வடக்குன்குளத்துக்குப் புறப்பட்டவர்களுமாக ௩-உ இட்டம்புளியிற் சொக்கலிங்கம்பிள்ளைவீட்டிற்றங்கி விடியக்காலம் ஷை கூடவந்தபெண்பிள்ளைகள் வடக்குன்குளத்துக்குப்போனூர்கள். நானும் பெண்ணும் பெண் தகப்பனுந் தம்பியும் ஷை அந்தோனிமுத்து மகனையதுஞ் சுவிசேஷபுரத்திற் காலையில் ச-உ வந்தோம்.

ஐந்தாந்தேதி கல்லூரிலிருந்த மதுரேந்திரம்பிள்ளை சாயந்திரம் வந்து இன்பின்பு மூன்றுவிசாரணைச்சேகரத்துக்கும் பாக்கனுப்பி, நம்முடைய இன முறைக்குப் பாக்கனுப்பவில்லை.

கூ-உ மதியத்துக்குமேல் சுவிசேஷபுரங்கோவிலில் ஷை மதுரேந்திரத்துக்கும் மரியம்மாளுக்கும் விவாகம்நிறைவேற்றினது. முடித்தவர் விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்கள். கனம் மெல்லரீஐயரவர்கள் குத்தாலத்துக்குப் போயிருந்தார்கள். டாக்டர் தேவசகாயம்பிள்ளை யிடத்திலிருந்து தம்பூர் விலை ரூ கஇ-க்குக் கொடுத்தனுப்பினூர், ரூ கஇ-யும் கொடுத்துவிட்டேன்.

௰ச-உ சாயந்திரஞ் சத்தியநகரத்துக்கு எல்லாரும்பிள்ளையவர்களுங்கூட வந்தோம்.

௰ச-உ வடக்கத்தியார் வடக்குன்குளத்துக்குப்போன ஷை பெண்பிள்ளைகள்வந்து ௰ரு-உ போனூர்கள். அருளம்மாளுங்கூடப்போனூள்; ஆவிணண்டபுரம் முத்துசெட்டிதாவேண்டியது ஏரைபெஅரைக்காலுக்கும் எழுதியனுப்பினேன். பின்பு தென்காசி மிக்கேல்பிள்ளை யிறந்தசெய்தியுங் கேட்டோம்.

௰கூ-உ பரமானந்தம்பிள்ளை மகனையவர்மருமகன் மாசில்லாமணிய பிள்ளைக்குக் கலியாணமுடித்தது ஊ-ஸ்ரீ விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்கள்.

மெய்மாசம் உசு-உ மதுரேந்திரம்பிள்ளை மாத்திரம் கல்லூருக்குப் போனூன் அலுவலவ்விடத்தில்.

உஎ-உ ஊ-ஸ்ரீ விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்கள் வந்து ஞானயுதருபதேசிக்கும் யாக்கோபு உவாத்தியகன் ஏசுவடியாளுக்கும் கலியாணமுடித்தார்கள்.

உஅ-உ ஜுன்மீ௳ க-உ மத்தியானத்தில் மதுரேந்திரம்பிள்ளை கல்லூரிலிருந்து சுவிசேஷபுரஞ் சேகரத்துக்கு கனம் சாப்பட்டர்ஐயரிடத்தில் உத்



தரவுவாங்கிவந்தது. கூடவந்த ஆண்டிபட்டி மதுரநாயகம்வந்து மூ-உ கால் ரூபாயுங்கொடுத்து அனுப்பினேம்.

௰௩-உ சுவிசேஷபுரத்தில் கனம் ஐயர் அம்மாளைக்காண மதுரேந்திரஞ் சமுசாரத்துடன் போய்வந்தார்கள். கனம் ஐயருக்கு சுகமில்லை.

உகூ-உ சங்கத்துக்குப் பாளையங்கோட்டைக்குப் போனேன். ௬-உ சங்கம்.

மதுரேந்திரத்துக்கு மீனூட்சிநாதபுரத்தில் அலுவல்.

ஜுலாய்மீ௳ க-உ வடக்குன்குளத்துக்குப்போய் ரு-உ வந்தேன்.

கூ-உ என் தங்கச்சி ஜெத்தேரியம்மாளை யவடத்துக்கு அனுப்பினேன்.

௰கூ-உ என்கொழுந்தி தெய்வாயி சுவிசேஷபுரத்துக்கு வந்தாள்.

---

௲அ௱சஉ-ஞு ஆகஸ்டுமீ௳ அ-உ.

எல்லா உபதேசிமார்களுக்கும் எழுதினபொதுவான உத்தரவுக்கு நகல்.

‡ சத்தியநகரம் ௱: ௱: உபதேசியாரவர்களுக்கும் கிருபாபுரம் ஞானக்கண்ணு உபதேசியாருக்கும் இப்பவும் க-வது ஒரு சபையில் ஒரு உபதேசியாரும் ஒரு உதவி யுபதேசியாரும் ஒருகிறிஸ்தமான வாத்தியாரும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் ஒவ்வொரு நாளிலும் காலையிலும் இராவிலும் ஓய்வுநாட்களின் மத்தியான வேளையிலுங் கூடிவருகிற சனங்களுக்கு உபதேசியார்தானே சுவிசேஷத்திலிருந்து ஒருசரித்திரத்தை வாசித்துப் புத்திசொல்லிச் செபம் பண்ணிக் கொடுக்கவேண்டும். தனக்கு ஷை கோவிலுக்குப்போகவும் சரித்திரங்களைவாசிக்கவுங் கூடாத வியாதியாயிருந்தால் உதவி உபதேசியாரும். மேலே கண்டபடி செபம் பண்ணிக் கொடுக்கலாம். அவருக்கும் மேல்கண்டபடி வியாதியாயிருந்தால் ஷை வாத்தியார்செபம் பண்ணிக்கொடுக்கலாம், ஓய்வுநாட்களிலும் விசேஷமானபண்டிகை நாட்களிலும் அதற்கடுத்த பாடங்களுந்தெரிந்து கொள்ளப்பட்ட வாக்கியங்களுந் தெளிவாயிருக்கவேண்டும். உ-வது ஒரு சபையிலொரு வுபதேசியார் மாத்திரமிருந்து தனக்குப் பள்ளிக்கூடவேலையும் ஒப்புவிக்கப்பட்டிருந்தால் தான்காலையிலும் இராத்திரியிலும் மேலே கண்டபடி செபம் பண்ணிக் கொடுக்கிறதுந்தவிரத் தனக்கு வியாதியாயிருந்தால் தனக்குச் சமீபமாயிருக்கிற ஒருசபையில் இரண்டு உபதேசிமாரிருக்கிற விடத்துக்குத் தெரியப்படுத்தினுல் அவர்களில் ஒருவர் வந்து ஆராதனை செய்யவேண்டுந் தன் சபையிலுள்ள எவ்விதமான சங்கதிகளையும் பள்ளிக்கூட வேலையிருக்கிறபடியினுலே தன்னை விசாரித்துவருகிற விசாரணை உபதேசியாருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். தன்னிடத்தில் படிக்கிற பிள்ளைகள் இரண்டுவேளை வழக்கத்தின்படி சாப்பிடப்போகும்போது சபையிலுள்ள ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் பத்துக்கற்பனை விசுவாசப்பிரமாணம் கருத்தருடைய செபம் ஞான உபதேசங் குறிப்பிட்ட முதலானவைகளைப் படித்துக்கொடுக்கிறதுந் தவிர சனங்கள் காலையிலு மிராவிலுஞ் செபத்துக்

---

‡ இந்தக்காலத்தில் கனம் மில்லரையரவர்கள் வியாதியாயிருந்ததினூல் ௱: ௱: விசாரணைப்பிள்ளையவர்கள்தான் சேகரத்துக்காரியங்களைப்பொறுப்பாய்ப்பார்த்து வந்தார்கள், J. D. S,

ருவரும்பொழுதுங் கற்றுக்கொடுக்கவேண்டும். ௩-வது ஒருசபையின் இரண்டு உபதேசிமாரிருந்தால் அந்தவூர்ச்சனங்களையாவது தெருவீதிகளையாவது பங்கிட்டு மேற்காட்டிய உபதேசங்களை ஒவ்வொரு நாளிலுங் கற்றுக்கொடுக்கவேண்டும். ௪-வது ஒரு உபதேசியார் தன்சொந்தப் பிரயோசனத்துக்காக ஒவ்வொருநாளிலும் வேதபொஸ்தகத்திலிருந்து மூன்று அதிகாரங்களை வீடுகளில் ஒழுங்காய்வாசித்துத்தியானம் பண்ணவேண்டும். ௫-வது தனக்குப்பிரயோசனமாகவும் மற்றவர்களுக்கு மாதிரியாகவும் நடந்துவரும்படிக்கு காலையிலெழுந்திருக்கும்பொழுதும் இராவில் நித்திரைக்குப்போகும்பொழுதும் வேதத்திலுள்ள வசனங்களில் ஒன்றைத் தன்வீட்டில் வாசித்துத் தியானம் பண்ணவேண்டும். ௬-வது சபையைச்சேர்ந்த ஒருவன்தன்சொந்த வேலைசெய்கிற இடங்களில் ஏதாவது ஒரு சங்கடம் நேரிட்டதாய்வந்து சொல்லிக்கொண்டால் அது தகுதியான சங்கதியாயிருக்குமாகில் ஷெ உபதேசியார் மாத்திரம்போய்ப்பார்க்கலாம். அற்பசங்கதியாயிருந்தால் எவ்விதமும் போகக்கூடாது. ௭-வது ஒருசபையாருக்குள் ஒருவருக்கொருவர் மனஸ்தாபமாயிருந்தாலும் அஞ்ஞானிகளாலே அற்பமாயுள்ள ஒரு துன்பம் நேரிட்டாலும் அதைக்குறித்து ஒருகாலத்திலும் தீர்மானம் பண்ணிக்கொண்டு அதைத்தான்விசாரித்து முடிவுசெய்கிறது அல்லது தன் விசாரணை உபதேசிமாருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் ஒவ்வொரு நாளிலுந் தான்செய்யவேண்டிய வேலைகளெல்லாவற்றையும் சபையாருக்கு ஒருமணித் திட்டமாவது காலத்தையாவது குறித்துக்கொள்ளவேண்டும். அந்தக்காலத்தில் மற்றொரு வேலையையும் செய்யக்கூடாது. ௮-வது ஒவ்வொரு உபதேசிமார் தானிருக்கிறசபையைவிட்டு உத்தரவில்லாமற் கால்நாழிகைவழித்தூரமுள்ள ஊர்களுக்காவது இனத்தார்களுடைய வீடுகளுக்காவது சந்தை முதலான இடங்களுக்காவது போகக்கூடாது. ௯-வது ஒருவன் அஞ்ஞானமார்க்கத்தைவிட்டு சபையில் சேர்ந்தாலும், சபையிலுள்ளவர்களில் மரணம் அடைந்து போகும்போது அவர்கள் நிலைமையைக்குறித்தும் விவரமாய் தெரியவரும்படிக்குச் செய்யவேண்டும். ௰-வது விவாகம் பண்ணுகிறதைக்குறித்து மூன்று வாரத்துக்கு முன்னதாகத் தெரியப்படுத்தவேண்டும். ௰௧வது இந்த விவரப்படி ஒவ்வொரு நாளிலும் தனக்கு தன்கடமையின்படி சபையாருக்கும் முன்பாகத்தான் செய்துவந்த நடபடிக்கைகளைக்குறித்துப் பொருள்விளங்கும்படிக்கு அவரவர்களுந் தங்கள் தினசரி ரிப்போட்டாகப் பொஸ்தகமாகச் சேர்க்கப்பட்ட ஒருஓலை கட்டிஎழுதி வாரத்தின் கடைசிநாளாகிய சனிக்கிழமை தங்கள் ஓலையுடனே தங்கள் சபையை விசாரிக்கிற விசாரணை உபதேசியார்வசஞ் சேரப்பண்ணவேண்டும். ௰௨-வது ஷெ ரிப்போட்டில் காலையிலுமிராவிலும் ஒவ்வுநாளிலும் பண்டிகை நாட்களிலும் வாசிக்கிற பாடம் வேதவாக்கிய முதலானவைகளைக் கண்டெழுதுகிறதுந்தவிர செபத்துக்கு வருகிற சனங்களின் தொகைகளையுங் கண்டெழுதியனுப்புவிக்கவேண்டும்.

௪௨-௵ ஆகஸ்டு௴ ௮-௳.

ஐ-ஈ-ஸ்ரீ-சவரிமுத்துப்பிள்ளையவர்கள்,

ஒப்பம், நகல்.



ஆகஸ்டு௴ ௰௮-௳ ஒரு சபையான் வந்து சொன்ன அடையாளங்களினால் வடக்குன்குளத்துக் கிளைத்தாங்கனா மிக்கேல்பிள்ளை இறந்துபோனாரென்றறிந்தோம்.

௨௭-௳ சுவிசேஷபுரத்து விசாரணைப்பிள்ளை பேரில் திருவடிபாதமென்ற சபையான் பராது கொடுத்து வாரண்டு வருகிறதாகக்கேட்டு அவர்களுக்கு எழுதினேன்.

செப்டெம்பர்௴ ௯-௳ ஷெ பிள்ளையவர்கள் ஓலைவந்ததினால் உடனே சுவிசேஷபுரத்துக்குப்போய்ப் பேசி வந்தேன்.

௫-௳ ஷெ காரியத்துக்கு குலசேகரம்பட்டணத்துக்கு ஆளனுப்பினேன். ஷெ ஊருக்குச்சேவகன் வசமாய்ப்பூச்சிக்காட்டு ஆண்டித்தேவர்வீட்டில் வந்தவர்களைக் கண்டுகொள்ள நானும்வாத்தியும் மூனு சபையாரும் போனோம். அவர்களிடத்திற் பேசிக்கொண்டு வந்தோம்.

௯-௳ மேஸ்திரோட்டுக்கு அனுப்பினார்கள்-திருநெல்வேலிக்கு.

௰௯-௳ மதுரேந்திரம்பிள்ளை அவர்களத்தானை விசாரித்துவர திருநெல்வேலிக்குப்போனான்.

அக்ஸ்டோபர்௴ ௭-௳ ஷெ பிள்ளையவர்கள்பேரில் பண்ணின பிராது தப்பென்று தள்ளுபட்டு விடுதலையாய் வந்ததை விசாரிக்கவும் கனம் மில்லர் ஐயரவர்கள் சுகசெய்தி விசாரிக்கவும் போய்வந்தேன், சுவிசேஷபுரத்துக்கு.

௨௮-௳ சத்தியநாத சஞ்சீவிக்கு வியாதியினால் வருத்தமாயிற்று.

௨௯-௳ அச்சம்பாட்டுக்கு மதுரேந்திரம்பிள்ளைக்கும் சுவிசேஷபுரத்துக்கு மரியம்மாளுக்கும் ஆளனுப்பினேன், மரியம்மாளு மவள் மாப்பிள்ளையும் அவருடப்பிறந்தாளும் வந்தார்கள், பிள்ளை ௰-மணிக்கு மரணமானபின்பு அடக்கம் பண்ணினோம், கோவிலுக்கு தெற்கு புளியமரத்துக்குத் தென்கிழக்கில் இரண்டு வட்டிலிக்கிடையில். மரியம்மாளிருந்தாள். மற்றவர்கள் போனார்கள். மதுரேந்திரன் சாயங்கிரம் வந்தது.

௪௨-௵ நவம்பர்௴ ௬-௳ இன்னாசியம்மாளுக்கு சன்னியுண்டாய் வருத்தப்பட்டது.

---

சத்தியநாதன் சவரிராயபிள்ளைக்குக்கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாகவும்.

இப்பவும் உன்னை கிருபாபுரத்துக்கு மாற்றியிருக்கிறபடியினாலே அவடத்திலுள்ள ஞானக்கண்ணு உபதேசி வசத்திலிருக்கிற கோவில்ப்

புத்தகம் சபையின் ரிப்போறட்டு கிறுமக்கணக்கு முதலானவைகளை யொப்புக்கொண்டு ஷெ யூரிலுள்ள சனங்களுக்குத் திவ்வியவசனத்தைச் சாக்கிரதையாய்ப் போதித்து வருவாயாக.

௲௮௱௪௰௨-ஆ நவம்பர்மீ ௮-௳. சுவிசேஷபுரம். J. Muller.

---

௮-௳ கிருபாபுரத்துக்கு என்னைமாற்றி சகாயமுபதேசியார் சத்தியநகரத்துக்குமாசமாற்றினதினால் உத்தரவு ௯-௳ வந்தஉடனே நானும்மதுரேந்திரம் பிள்ளையும் சங்கீதபுஸ்தகத்தைத் திறந்தபோது ௪௯-சங்கீதம் வந்ததை வாசித்துப்பின்பு கனம்மில்லர் ஐயரவர்களுக்கு என் குழந்தை யிறந்தது, ௰௧-நாள். என்பிள்ளை இன்னாசியம்மாளுக்குஞ் சன்னி வந்து நல்லசுகமில்லை யென்பதைக்காட்டி எழுதிக் கொஞ்சநாள் இவடத்திலிருக்கவேண்டுமென்று கேட்டதுக்கு இன்னம் ஒரு உத்தரவு வரும் வரையும் இருக்கலாமென்றுத்தரவு வந்தது.

௰௮-௳ சிரிவைகுண்டம் அண்ணன் மிக்கேல்பிள்ளை வந்தார்கள்.

௰௯-௳ சுவிசேஷபுரத்துக்குப் போனார்கள்.

டிசம்பர்மீ ௫-௳ சுவிசேஷபுரத்துக்குப் போனேன். கனம் மெல்லர் ஐயரவர்கள் இளைய சகோதரரான ஐயர் பிரசங்கம், பாஷையில், தமிழில் ஷெ ஐயர் விஸ்தரிப்பு. ௯-௳ இராப்போசனம்- சற்சுமிசியோன் சங்கத்தார் ஒழுங்குப்படி செய்தது.

௰௯-௳ மதுரேந்திரமும் இன்னாசியம்மாளும் மீனாட்சிநாதபுரத்திலிருந்தவர்களை விசாரித்து வந்தேன்.

௰௭-௳ வடக்குன்குளத்திலிருந்த என் வீட்டுக்காரியத்தைப்பற்றி ஞானப்பிள்ளையும் அவர் மாமியாரும் ௭-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு எழுதியதைப் பற்றிப் பேசும்போது ஷெயார்கள் பாரிசமாய்ப் பிள்ளையவர்கள் பேசினதில் தமக்கு ஆசேபண்ணலாமென்ற கோக்கந்தோன்றினதால் உடனே சம்மதியாமல் வந்து விட்டேன்.

௨௰-௳ சம்பளத்துக்குப்போனேம். அவடத்தில் ௩௩-௳ உபதேசி உவாத்திகள் தாங்கள்பிறந்தவருஷம், வயசு, மார்க்கம், அலுவல் முதலானசரித்திரமெழுதினார்கள், கனம் ஐயர் புஸ்தகத்தில், பின்வரும் கனம் சார்ஜென்றய்யருக்குக்கொடுக்கும்படி. நானெழுதிவைத்தது: அச்சங்குளத்தில் ௲௮௱-ஆத்திற் பிறந்து, வடக்குன்குளத்தில் ௲௮௱௨௰-ஆ வண்டன் மிசியோனிற் கிறிஸ்துமார்க்கத்திற் சேர்ந்து, ஒருவருஷத்தில் மறுதலித்து, ௲௮௱௩௰-ஆ



நவம்பர்மீ கனம் இரேனியூஸ் ஐயரிடத்தில் உதவியிற் சேர்ந்து, அம்மீத்துக்குப்பின்பு ௩௭-ஆ சேருவைகாரன்மடத்துக்குஉபதேசியாக அனுப்பப்பட்டு, ௩௯-ஆ கனம்சாப்பட்டர்ஐயர் ௨-மீ அலுவலைவிட்டு நீக்கிவைத்தார்கள், என் மகன் மூத்தவனைப் பாப்புமார்க்கத்தான் வீட்டில் விட்டதுக்காக. மற்றநாளெல்லா மிதுவரையும் உபதேசி அலுவல் பார்த்துவருகிறேனென்பதே.

௭-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைவீட்டில் ஞானப்பிள்ளையும் அவர்மாமியார் சவரியம்மாளும் அவர்களிடத்தில் அடமானஞ் செய்திருந்த வீட்டுக்கு என்னிடத்திற்பணம் வாங்க ஷெயார் சிபாரிசு செய்ய எட்டொனாய் வந்திருக்கிறார்கள்

---

௪௩-ஆ சனுவரிமீ ௧-௳, ஓய்வுநாள். ௨-௳ கனம் ஐயரவர்கள் சந்திப்புவைத்துக் கண்டோம். அவர்கள் சீர்மைக்கு வியாதியினால் போகவேண்டியதானதினால் மிகவும் துக்கப்பட்டு ஆறுதல் பேசினார்கள்.

சாயுங்காலத்தில் பிள்ளையவர்கள் நாலுபேரைத் திட்டஞ்செய்து ஷெஞானப்பிள்ளை மாமியார் விபகாரத்தைப்பேசச் சொன்னார்கள். நான்சொன்னது ஷெயார்கள் முன்னென் தமையனார் ஆஸ்தி யெடுத்துக்கொண்டதுபோல ஷெ வீட்டையும் மனையும் விற்றுக்கொள்ளட்டும், அல்லது எடுத்துக்கொள்ளட்டும் என்றேன். ஷெ நியாயம் பேசக்கூடினவர்களுக்கு சம்மதமில்லை, அவர்களாலொன்றால், விசாரணைஉபாத்தியார் ஞானபூரணம்பிள்ளை, சத்தியநகரம் விசாரணைபரமானந்தம்பிள்ளை, அதிசயபுரம் விசாரணை தேவத்துணையம்பிள்ளை, சுப்பா உபாத்தியார் முத்துக்குமாரசாமியாபிள்ளை, ஆச்சரியபுரம் உபதேசியார் சாமிதாசபிள்ளையும், இவர்கள் நான் சொன்னதை ஷெயார்கள் அநியாயமாய்ச் சொன்னதாகச்சொன்னார்கள். மறுபடியும் நான்சொன்னதை ஈ: ஈ: பிள்ளையவர்களுக்குஞ் சொல்லிவிட்டேன். ஷெயார்களுக்கு பிள்ளை வீட்டிற் சாப்பாடு. நானும் மதுரேந்திரமும் அசல் வீட்டிற் தட்டிக்கொடுத்துச் சாப்பிட்டோம். ௩-௳ சத்தியநகரத்துக்கு வந்தேன்.

௯-௳ என்சமுசாரமும் சபையாரிற் சிலரும் கனம் ஐயர் அம்மாளையும் கண்டனுப்பிக்கொள்ளப்போனார்கள். கனம் அம்மாளவர்கள் ஒரு கோப்பையும் அரை ரூபாயும் கொடுத்தார்களென் சமுசாரத்துக்கு. உடனே வீட்டுக்கு வந்து விட்டாள்.

௯-௳ ஷெ யென் வீட்டு வழக்கு முடிவு சொல்லும்படி இட்டம்புளிச் சொக்கலிங்கம்பிள்ளை யிடத்துக்குப்போக உத்தரவு வந்ததுக்குப் போய்ப்பேசிவந்தேன்.

௰௫-உ சுவிசேஷபுரத்துக்குப்போய் கனம் ஐயரவர்களிடத்தி லுத்தரவு வாங்கி ௰௬-உ வடக்குன்குளத்தில் ௱: ௱: விசாரணைப்பிள்ளை கட்டின வீட்டுப் பால்காய்ச்சப் போனேன். ௰௧-மணிக்கு அதற்குமுன் பால்காய்ச்சியாயிற்று.

௰௭-உ சின்னையா கொச்சிப்பிள்ளையவர்களும் ஷெ என் வீட்டுக்காக ஷெயாளுக்குப் பணத்தைக் கொடுத்துவிடென்றும் பேசினார்கள். ௱: ௱: விசாரணைப்பிள்ளையும் ஒத்தாசை பேசினார்கள். அதற்கு நான் பல நியாயங்களையும் காண்பித்து பணம் கொடுக்கவேண்டியதேயில்லையென்று ஒப்புவித்தேன்.

௰௮-உ வீட்டுக்குப் புறப்பட்டோம். பிள்ளையவர்கள் கூட நம்பிகுறிச்சி வரை. பின்பு சத்தியநகரத்துக்கு வந்தேன்.

---

கனம்பொருந்திய மில்லனாயரவர்கள் சீர்மைக்குப்போகப் புறப்படும்போது சத்தியநகரம் விசாரணைச்சேகரத்துக்கு எழுதினபொதுவான நிருபம். ௲௮௱௪௰௩-௵ ஜனவரிமீ ௰௯-உ.

பிரியமுள்ள உதவிவிசாரணை பரமானந்தம்பிள்ளைக்குந் தம்முடைய சேகரத்திலிருக்கிற உபதேசிமார் வாத்திமார் சபையாருக்குங் கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாக. இப்பொழுது உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நாங்கள் கருத்தருடைய சித்தத்தினால் உங்களைக் கொஞ்சக் காலத்துக்காக விட்டுவிட வேண்டியதாயிருக்கிறபடியினாலேயும் இதைக்குறித்து உங்களெல்லாரையும் பார்த்துப்பேசிக்கொள்ளுகிறதுக்குச் சமையம் நேரிடாதகினாலேயும் இந்தவசனங்களை யுங்களுக்கு ஆறுதலாக எழுதுகிறோம். கருத்தரிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். இந்நாள் வரையில் அவருங்களை விசாரித்ததுபோல இனிமேலும் அப்படிச் செய்வாரென்று விசுவாசித்துக்கொள்ளுங்கள். நம்மை இரட்சித்துக் கொண்டுவருகிற இயேசுகிறிஸ்துவை மரணபரியந்தம் உண்மையாய்ப் பற்றிக்கொண்டு அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள், சுவிசேஷமார்க்கமாகிய சத்தியத்திலே நிலைத்திருங்கள், அப்பொழுது கருத்தர்உங்களோடிருப்பார். மேலும் அவர் உங்களைத் திக்கற்றவர்களாகவிடார். கனம்பொருந்திய சார்சென்றய்யரவர்கள் உங்களைஅன்பாய் விசாரிக்கும்படிக்குச் சித்தமாயிருக்கிறார். ஷெ ஐயரவர்கள் வரும்பொழுது அவர்களுடையஉத்தரவின்படிநடந்துகொண்டு கருத்தருக்குள் அவர்களுக்குக்கீழ்ப்படிந்துபொறுமையாயும்தாழ்மையுள்ளமனசுள்ளவர்களாயுமிருங்கள், அப்பொழுது கருத்தர் உங்களையுமுங்கள் வேலையையும் ஆசீர்வதிப்பார். சகோதரருஞ் சிநேகிதர்களுமானவர்களே, எங்களுக்காகவும்செபம்பண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காக செபம் பண்ணி உங்களை யடிக்கடி நினைத்துக்கொள்வோம். கருத்தருக்குச்சித்தமானால் இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பின்பு திரும்ப உங்களிடத்தில் வரவிரும்புகிறோம். நாங்கள் வந்தாலும் வராவிட்டாலுங்கருத்தரிடத்தில் நிலைத்திருக்கிறீர்களென்று நாங்கள் கேள்விப்படும்பொழுது சந்தோஷமாயிருப்போம். கருத்தர்உங்களை யாசீர்வ





தித்து உங்களைக் காத்தருளக்கடவர். கருத்தர் தம்முடைய திருமுகத்தை யுங்கள்மேற் பிரகாசிக்கப்பண்ணி உங்கள்மேற் கிருபையாயிருக்கக் கடவர். கருத்தர்தம்முடைய திருமுகத்தையுங்கள்மேலேறெடுத்துஉங்களுக்கிப்பொழுது மெப்பொழுதுஞ் சமாதானங் கட்டளை யிட்டருளக் கடவர். ஆமன்.

௲௮௱௪௰௩-௵ ஜெனவரிமீ ௰௯-உ. சுவிசேஷபுரம்.

கனம் எசமான் ஒப்பம்.

இந்தக் காகிதத்தை யொவ்வொரு உபதேசிமாருந் தங்கள் சபைகளுக்குவாசித்துக் காண்பிக்கவும்.

இதனடியிலும் ஒப்பம் வைத்திருந்தது.

---

௨௧-உ சிரிவைகுண்டத்து அண்ணன் மகன் தேவசகாயம் வந்தான்.

௨௪-உ சுவிசேஷபுரத்துக்குப்போய் கனம் ஐயரவர்கள்சீர்மைக்குப்போகிறதினாற் புத்திசொல்லி யனுப்பினார்கள். ௨௭-உ பாளையங்கோட்டையிற் சங்கத்திற்கிருந்து ௨௯-உ ஷெ கனம் ஐயரவர்களை பெரியாத்துக்கு அப்புறங் கூடப்போயனுப்பினோம்.

௩௰-உ பங்காளத்துக் கண்காணியாரவர்கள்.

பிப்பரவரிமீ ௧-உ ஷெ கனம் கண்காணியாரவர்கள் பிரசங்கம்.

௨-உ சத்தியநகரத்துக்கு நானும் மதுரேந்திரமும் வந்தோம்.

௩-உ முதலாவது கனம் சார்சென்றய்யரவர்களுத்தரவுபடிக்கு ௫-ரூ வரும்படி சுவிசேஷபுரத்துக்கு பிள்ளையவர்களுத்தரவு வந்தது. அப்படியே சபையார்களையுங் கூட்டிப்போனோங் கனம் கண்காணியாரவர்களையுங் கண்டோம். யோவான்-௫-௫, வாக்கியத்தின்பேரிற் புத்திசொன்னார்கள். ௧-வது செடி. ௨-வது காய். ௩-வது கனி.

௮-உ முதலாவது சார்சென்றய்யர் விசாரணை செய்து ௯-உ சினவரிமீ சம்பளங் கொடுத்தது.

௰௬-உ கிழாக்குளத்து அத்தான்மகளுக்குத் தலைப்பொங்கப்படிக்கென்று ௫ கலி கொடுத்தார்கள், அவர்கள் வசம் அச்சங்குளம் அண்ணனுக்கும் அத்தான் நித்தான்பட்டி ஞானப்பிரகாசம்பிள்ளைக்கும் ஞானப்பிள்ளையும் மாமியும் செய்த காரியங்களைக் குறித்து எழுதியனுப்பினேன்.

௰௭-உ சுவிசேஷபுரத்துக்குப்போனோம். கனம் ஐயர் சீர்மையிலிருந்து கொண்டுவந்த விசேஷித்த பதார்த்தங்களையும் கல்லுக்கள் ஒலிவமரத்து இலை

கெத்துசேமனேத் தோட்டத்து இலையுங்காண்பித்து, பெருங்காயம் ஒருமரத்தின் பிசினென்றுங் காண்பித்தது மரங்களிற் பிசின் ஓடியபடி யெடுத்துவந்ததையுங் காண்பித்தார்களவ்விடங்களிலுள்ள சிலசெய்திகளுமறிவித்தார்கள்.

உகூ-உ சத்தியநகரங் கிருபாபுரம் இரண்டு ஊருக்குங் கனம் சிக்கட்டேரிஜபரவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். சுகமில்லாமல் உடனே சுவிசேஷபுரத்துக்குப் போய்விட்டார்கள்.

உஎ-உ சுவிசேஷபுரத்தில் ச ஜபர்மார்கூடிவந்து உபதேசி வாத்திசபையார்களுமாக ஆலயக்கட்டு சங்கமேற்படுத்தினார்கள். இரவில், வானம்பூமி நட்சத்திரங்கள் காணும்படி, கண்ணாடியிற் குழல்விளக்குச் சூத்திரத்தினாற் காண்பித்தார்கள்,

௲அ௱சஙு-ஹு மார்ச்சுமீ.

உச-உ காயுதம்வந்ததில் நாளது மார்ச்சுமீ ௰அ-உ சனிக்கிழமை கனம் மெல்லரய்யரவர்கள் சென்னபட்டணத்தில் மரணமானதாகஎழுதினதில் சிகாரியங்களைக்குறித்து உகூ-உயிற் சுவிசேஷபுரத்துக்குச் சகலரும் வரவும் தேவாராதனையிற் கனம் சார்சென்றய்யரவர்கள் பேசமனதாயிருக்கிறதாகவும் பிள்ளையவர்கள் உத்தரவு. அந்தப்படிக்கு உகூ-உ காலையிற் பிள்ளையவர்கள் வீட்டில் போய்பேசிவைத்துக்கொண்டு. கனம் மெல்லரய்யரவர்களைப்பற்றித் துக்கங் கொண்டாடினதாகவே அநேக சனக்கூட்டம். பின்பு கோவிலிற் தேவாராதனை கனம் சார்சென்றய்யரவர்கள். க-ம்பாட்டம் பிரசங்கி எ.உ-ம் பாட்டம் உ௦.௰எ-முதல். பிரசங்கவாக்கியம் வெளி. ௰ச.௰௩-ம் வாக்கியம். அதில் கனம் மெல்லரய்யரவர்கள் மரணகாரியங்களை யறிவித்து மிகுந்த துக்கமாயழுது பேசினதினாற்சனங்களெல்லாருமழுது இழவுகொண்டாடினோம். பின்பெல்லாரும் ஊருக்குவந்து விட்டோம்.

---

* கனம் சார்சந்தையபர் அ௱சஙு-ஹு மார்ச்சுமீ உகூ-உ கனம் மில்லரய்யரவர்கள் மரித்த துக்கத்துக்காகப் பண்ணின பிரசங்கம்;

கனம் சார்சென்றய்யர்.

பிரசங்கி-எ. அதி. க-பாட்டம். உ-ம் பாட்டம். அப். உ௰. அதி. ௰எ-முதல். கொஞ்சநாள். உ-வது-அகல் துன்மார். வெளி. ௰ச-௰௩. இதிலிரண்டு காரியங்கள் காட்டப்படுகின்றது.

---

* பிரசங்கக்குறிப்பேட்டிலிருந்ததை யிங்கே சேர்த்திருக்கிறேன்- J. D. S.



க-வது; கருத்தருக்குள் மரிக்கிறவர்களாரென்று சிந்திக்கக்கடவோம் தி. மொ. உ.

கருத்தருக்குள்ப்படுகிறதற்கு அநேக வழிகளுண்டு. உரோமர். ௬. கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள்.

மெய்ஞ்ஞானஸ்நானம். ஞானஸ்நானத்தினாலே மரிக்கிறது. பா-குலோசர்-௩-௨-வாக்கியம்.

உ-வது; சீவனுள்ள விசுவாசத்தோடே கிறிஸ்துவோடே இணைபடவேண்டும்.

௩-வது; உண்மையினாலும் அன்பினாலும் அவருக்குள்ளுமவர் நமக்குளிருக்கும்படி கிரியையுள்ளவனாயிருக்கவேண்டும்.

நோவாவைப்போலப் பேழைக்குள் பிரவேசிக்கவேண்டும். அடைக்கலப் பட்டணத்துக்குள்ப்பட்டதுபோல- உள்ப்பிரவேசிக்கவேண்டும், கிறிஸ்துவுக்குளப்போ.

கிறிஸ்துநாதருக்குள் மரிக்கிறவர்களின் நிலைமையைப் பார்ப்போம், அவர்களாசீர்வதிக்கப்பட்டவர்கள். எபி.௩.௰ச-வசனம். பராபரன் தம்முடைய பிள்ளைகளை மகிமையடைய சேர்த்துக்கொள்ளுகிறார்கள்.

கனம் அய்யரவர்கள் மார்ச்சுமீ ௰உ-உ ஓய்வுநாளன்று வைத்தியர்கள் கூடிச் சீக்கிரத்தில் மரணம் வருமென்றபோது-பஞ்சாங்கத்தை வாங்கிப்பார்த்து, எனக்கு விவாகம் முடித்து அ-ஹு இந்தநாளில், என்றும்; இப்பொழுது சீக்கிரத்தில் மரணம் வருமென்றதையறிந்து கொண்டோமென்றுஞ்சொல்லி; கர்த்தருக்குள் சந்தோஷப்படுகிறேனென்றும்; அம்மாளவர்களைத் தாயார் வீட்டில்வந்திருக்கச்செய்ததுக்கும்; விட்டுவந்தசபைகளையும் உபதேசிமார்களையும் கனம் சார்சென்றய்யர் நன்றாய் விசாரிப்பாரென்று நம்புகிறதினாலும்; கப்பல் யாத்திரை நிறுத்தப்பட்டதினாலும், கருத்தருக்குள் களிப்பாய்த் துதிக்கிறேனென்றுஞ் சொன்னார்களாம். பின்பு ௰அ-உ சனிக்கிழமையன்று மரணத்துக்குமுன்பும் பஞ்சாங்கம் பார்த்து, தாமிவிடத்துத்திசையில் வந்ததைக்குறித்துப்பேசி; பின்பு, செபம் பண்ணத்துவக்கி, இஸ்மித்தய்யர் என்றவர்கள் முன்னிருந்து கைகுவித்துச் செபம்பண்ணும்போது, மார்பில் சாய்ந்தவிதமாக கருத்தருடைய ராட்சியத்துக்குப்போய் விட்டார்கள். சிலநேரமவரை செபம் பண்ணுகிறாரென்றிருந்தவர்கள், பார்க்கும்பொழுது, மரித்ததைக்காணமற் போனோமென்றார்கள்.

கனம் அய்யரவர்கள் அடிக்கடி, கர்த்தாவே, சீக்கிரமாய் வாரும், வாருமென்று செபம்பண்ணி, மரணத்தையடைந்தார்.

அம்மாளவர்களிவ்விடத்திலுள்ள யாவருக்கும்தங்களை கைம்பெண்ணென்றுந் தங்கள் பிள்ளைகளை தகப்பனில்லாபிள்ளையென்று நினைத்துச் செபம்பண்ணக் கேட்டுக்கொள்ள சொன்னார்களாம்.

கனம் அய்யரவர்கள் தாம் அனுப்பிக்கொண்ட பாவிளையாகவும் கனம் சார்சென்றய்யரவர்களைப் பேசக்கேட்டதாகவும் அப்படியே அறிவித்தார்கள்.

எப்பிரல்மீ ௯-உ முதலாவது ரேமத்தய்யாள் வந்தது. ௪-உ என்கூட சத்தியநகரத்துக்கு வந்தார்கள்.

---

கடவுள் துணை.

சத்தியநகரத்தில் புதுசாய் ஞானஸ்நானம் பெற்றவர்களின் விவரக் கணக்கு. கனம் சார்சென்று ஐயரவர்களால்.

௲௮௱௪௰௩-ஹூ எப்பிரல்மீ ௰௪-உ பெரிய வெள்ளிக்கிழமையன்று.

விசாரணை பரமானந்தம்பிள்ளை மகன் ௧. மரியாள் வயசு ௰. தாய் பரிபூரணம். ஞானத்தாய், மரியவியாகுலம், மரியம்மாள். ஞானத்தகப்பன் அருளானந்தம்பிள்ளை.

பவுல் வாத்தி மகள் அன்னம்மை வயசு ௧. ௧. தாய், அன்னம்மை. ஞானத்தாய், வட்டி பாக்கியம்.

நல்லவடிவு ௧,
மகள் பாக்கியம் ௧.
மகன் சாமுவேல் ௧.
உதவி தானியேல் மகள் பாக்கியம் ௧.
ஈசாக்கு ௧.
சின்னக்கண்ணு மக்கள் ஞானப்பூ. அன்னம்மை ௨.
பெரியவன் மகன் தானியேல் ௧.
பண்டாரம் மகன் ஈசாக்கு ௧.
லாசர் மகன் பாக்கியம் ௧.
ஆரோக்கியம் மகன் கோவில்பிள்ளை ௧.
ஷை மகன் ஞானக்கண்ணு ௧.
தேவசகாயம் பெண்சாதி அன்னமரியாள் ௧.
மகள் பாக்கியம், அன்னம்மை ௨.
மகன் தாவீது ௧.
ஞசன்னுன் மகள் நட்சத்திரம் ௧,
ஈனமுத்து மகள் பாக்கியம் ௧.
முத்தாயி, விசுவாசம் ௨.
ஆக சனம் ௨௰௨. கனம் சார்சென்றையாவர்களால்.

---

௪௩-ஹூ எப்பிரல்மீ.

எப்பிரல்மீ ௨௩-உ மதுரேந்திரம்பிள்ளை உபதேசியாராக ஒய்வுநாள் காலைச் செபஞ் செய்யப்போனார்.

மெய்மீ ௨௨-உ நானும் உதவி தானியேலுந் தேரி பார்க்கப் போனவர்கள் அழகியவிளை சமாதானபுரம் வரைபோய்த்திரும்பவந்த சமையத்திற் கனம் காவன் ஐயருஞ் சார்சந்தையரும் வந்தார்கள். இரவு செபஞ்செய்து ௨௩-உ முதலூருக்குப் போனார்கள்.



௨௭-உ சுவிசேஷபுரத்துக்குப்போயிருந்து ௨௮-உ இராப்போசனம்.

௨௯-உ சம்பளம். கோவிற் கட்டியாயிருந்த சுவிசேஷமுத்தென்னும் பையனை ஐயரவர்கள் பள்ளிக்கூடத்திற் சேர்த்து. சாயங்கிரம் இட்டம்புளி உபதேசி மதுரேந்திரம்பிள்ளையும் கூட, சத்தியநகரத்துக்கு வந்தோம்.

௩௰-உ வடக்குன் குளத்திலிருந்து மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை வந்தார்.

௪௩-ஹூ ஜூன்மீ.

௧-உ உதவி தானியேலை சவிக்கியபுரத்துக்கு மாற்றினார்கள்.

௫-உ ஐந்து நாளிருந்து மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை கிரிவைகுண்டத்துக்குப்போனார். சுவிசேஷபுரத்துக் கிணற்றில் வீரனென்றொருவனிறந்ததாகக் கேள்வி.

௰-உ கனம் சார்சென்றய்யரும் அம்மாளும் வந்து இருந்து
௰௧-உ இராப்போசனம் புதிதாய்ச் சிலருக்குங் கொடுத்தார்கள்.

---

கடவுள் துணை.

கனம் சார்சென்ற ஐயரவர்களால் சத்தியநகரத்தில் புதுசாய் ராப்போசனத்துக்கு சேர்ந்த கணக்கு.

௲௮௱௪௰௩-ஹூ ஜூன்மீ ௰௧-உ திரித்துவத்தின் பண்டிகையன்று.

| | | | |
|---|---|---|---|
| பவுல் வீடு அன்னம்மை | ௧. | ஞசன்னுன்கிழவி | ௧. |
| ஞசன்னுள் | ௧. | வட்டி பாக்கியம் | ௧. |
| அன்னுள் | ௧. | மொ. மரியாள் | ௧. |

ஆக சனம் ௬-க்கும் கனம் சார்சென்றய்யாவர்களால்.

---

௰௩-உ மதுரேந்திரம்பிள்ளை வந்து தங்கினார்.

௨௰-உ மெஞ்ஞானபுரம் கோவிலுக்கு அஸ்திபாரம்போட அங்கே கலைக்கட்டர் தாமசந்துரையும்பட்டணத்து சங்கத்து சிக்கட்டேரியார் கனம் டக்கரய்யாவர்களும் மற்றய்யன்மார்கள் ௯-பேரும் வந்தார்கள். ௨௪-உ வீட்டுக்கு வந்தோம், மதுரேந்திரம்பிள்ளையும் நானும். பின்பு அந்திரேயா இடத்திற் சட்டைகள் அரக்குச்சேலை சேலத்து வேட்டிகள் ௲ எளுக்கு வாங்கினோம்.

௨௮-உ பாளையங்கோட்டைக்கு சங்கத்துக்கு நானும் மதுரேந்திரம் பிள்ளை முதலானவர்கள் போனோம். ௨௯-உ சங்கங் கூடி ௩௰-உ சத்தியநகரத்துக்கு வந்தது.

ஜுலாய்மீ உ-௰ இட்டேம்புளிக்குப்போனர் மதுரேந்திரம்பிள்ளை.

௲-௰ இன்னாசியம்மாளுக்கு சுகமில்லை. ஷி. பரமானந்தம்பிள்ளை தம்பி அருளானந்தம்பிள்ளை இடையன்குடிச்சேகரத்தைவிட்டு இராசிநாமாக் கொடுத்து வந்தார்.

௰உ௰ இட்டேம்புளிக் குமாருசாமியாபிள்ளையவர்கள், மரியம்மாளையும் பிள்ளைகளையும் கூட்டிப்போக வந்தார்கள். நாங்களனுப்பவில்லை.

௰௩௰ சேமத்துச் சுவாமியடியாள் வந்தாள்.

௰ரு௰ ஷெ பாளைக் கூட்டிவந்ததுணையாளுக்கு சம்பளங்கொடுத்து நல்லதம்பியாபிள்ளைக்கு மறுபடி எழுதியனுப்பினேன். தமிழ் ஆடிமீ ௧௰.

௰அ௰ மரியம்மாளைக் கூட்டிப்போக ஒரு சானான்வந்தானவள்போகவில்லை.

உஉ௰ இருபாபுரத்தில் கனம் சார்சென்றய்யாவர்கள்வந்து செபத்துக்கு சத்தியநகரத்தார்களெல்லாரும் போனோம். ஒரு துலுக்கன் சுவாமியடியான் வாயிட்டர் பேரிலும் பரமானந்தம்பிள்ளை பேரிலும் பராதுசொன்னான்.

உ௯௰ தங்கச்சி ஐத்தேரியம்மாளும் மாப்பிள்ளையும் குழந்தைகளும் வந்திருந்து, உஅ௰ தங்கள் மகனிவட்டத்திலிருந்த தருமாநதனையும் கூட்டிப்போனார்கள்.

உ௯௰ விசாரணைஉவாத்தியார் மரியம்மாளைக் கூட்டிப்போகப்பார்த்தார். விடவில்லை. ௩௰ விசாரணைப்பிள்ளை பரமானந்தம்பிள்ளைக்கு ஓலையெழுதிப் பிள்ளைகளுக்குக் குதிரையும் அனுப்பினார்கள். ௩௰ குதிரையையும் குதிரைக்காரனையும் அனுப்பிவிட்டோம். ௩௧௰ பிள்ளைகளுக்குப்பழங்களனுப்பினார்கள்.

ஆகஸ்டுமீ ௧௰ சம்பளம். சுவாமியடியான் றயிட்டனாத்தள்ளி சகாய உபதேசியாரை ஷெ வேலைபார்க்கவைத்து பிள்ளையவர்கள் சம்பளங் கொடுத்தார்கள். ஐபரில்லை.

* உ-௰ தமிழ் ஐப்பசிமீ புரட்டாசிமீ ௰அ௰ திங்கள்கிழமை விடிந்து ௰ந்து நாழிகைக்குள்ளாக சத்தியநகரத்தில் சுவிசேஷபுரம் மரியம்மாள் நாலாவது பெண்பிள்ளைப்பெற்றாள். உத்திராட நட்சத்திரம் நவமி அதிகண்டம் சுபயோகம்.

* ஷெ ஆகஸ்டுமீ உ௯௰ வியாழக்கிழமைஷெ சத்தியநகரத்தில் பத்தாவது தேவசகாயம் பிறந்தான்.

---

* இது பிற்காலத்தில் எட்டில் சேர்த்து எழுதியிருக்கிறது. மேலே உ௰ என்றும் ஷெ ஆகஸ்டுமீ என்றும் எழுதியிருப்பது அக்டோபர்மீ என்றிருக்கவேண்டியது. J. D. S.





கடவுள் துணை.

சத்தியநகரஞ் சபையார் ஞானஸ்நானம் பெற்றவர்களின் விபரக்கணக்கு ௲அ௱௪௰௩-ஷு நவம்பர்மீ ௧-௰.

௧. அந்திரேயா- பிரகாசி, மகன் ஆபிரகாம். ஞானத்தகப்பன், சற்குணம், ஞானக்கண்ணு. ஞானத்தாய், மரியாள், மகன், நல்லதம்பி, ஞானத்தகப்பன், பவுல், ஞானக்கண்ணு. ஞானத்தாய் அன்னம்மை.

௨. சற்குணம்-பாக்கியம், மகன் மெஞ்ஞானவடிவு. ஞானத்தகப்பன், அந்திரேயா. ஞானத்தாய் அன்னம்மை, ஏசுவடியாள். [மகன்] அருள்நாயகம். ஞானத்தகப்பன், பவுல், ஞானக்கண்ணு. ஞானத்தாய், அன்னம்மை.

௩. வள்ளி-மாடக்கண்ணு. பெரியதங்கத்துக்கு மரியதங்கம். ஞானத்தகப்பன், அந்திரேயா. ஞானத்தாய், ஏசுவடியாள், அன்னம்மை. [மகன்] சாமுவேல். ஞானத்தகப்பன், பவுல், ஞானக்கண்ணு. ஞானத்தாய், அன்னாள்.

௪. சந்தனம்-முத்துமாலை. வேலாயுதப் பெருமாளுக்கு வேதமாணிக்கம், ஞானத்தகப்பன், மனுவேல், பவுல். ஞானத்தாய், அன்னம்மை. [மகன்] நல்லமுத்து. ஞானத்தகப்பன், பவுல். ஞானத்தாய், அன்னாள், அன்னம்மை.

௫. பெண் பார்வதி பாமாயி, ஞானத்தகப்பன், மனுவேல்- தாய், அன்னாள். ஏசுவடியாள் (மகன்) லாசர். ஞானத்தகப்பன், பவுல், ஞானக்கண்ணு. ஞானத்தாய், அன்னம்மை.

வேதமாணிக்கம். ஞானத்தகப்பன், பவுல், அந்திரேயா. ஞானத்தாய், அன்னாள்.

பெண்சுவர்ணந்தம். ஞானத்தகப்பனை, மனுவேல், ஞான-அன்னாள், ஏசுவடியாள். மகன், பாக்கியநாதன். ஞானத்தகப்பன், மனுவேல், ஈசாக்கு- தாய் மரியமுத்து.

பிள்ளையார்தாய் பிறமராக்கிசத்தி, தகப்பன் ஆபிரகாம். வேதமாணிக்கம். ஞானத்தகப்பன், பவுல், ஞானக்கண்ணு- தாய் மரியமுத்து.

நல்லமுத்து, ஞானத்தாய், ஏசுவடியாள் ஞானத்தகப்பன், மனுவேல்.

ஷெ மகன் தாவீது. ஞானத்தகப்பன், நல்லதம்பி, சாமுவேல்- தாய், சாந்தாயி,

அன்னம்மை. ஞானத்தகப்பன், மனுவேல்- தாய் அன்னம்மை, சுவாமியடியாள். சார்சந்தய்யரவர்களால்.

ஸ்திரீகள் ௫. புருஷர் ௫. ஆண்குழந்தை ௫. பெண்குழந்தை ௨. ஆகசனம் ௧௭.

குடியேறின காலம் சத்தியநகரம்.

சார்சன்ஜையரவர்களிடத்தில் எழுதிவைத்தது: உய. சவரிராயபிள்ளை.

கஅ௱ஙு ஆகஸ்டுமீ இருபாபுரத்திலிருந்து சஉ வீட்டுக்காரர் சுவிசேஷபோதக சங்கத்தைச்சேர்ந்த கனம் இரேனியூஸ் ஐயரவர்களைச்சேர்ந்து முழுக்கைதட்டுவென்ற விளையை பிள்ளையார் மகன் ஆறுமுகத்தினிடத்தில் வாங்கி அதில் வந்து குடியேறினார்கள். அப்போது தோமாசு உபதேசியாருங் கூடத் தான். அந்த நாளிலேதானே கூட்டப்பத்து வீடு சேர்ந்தது. ஆக ருங வீடு. கஅ௱ஙு எ-வீடுவந்தது. ஆக சுய வீடு. கஅ௱ஙு மில்லர் ஐயர்வர்கள் விசாரணையால் ஒரு கல்கோவில் கட்டப்பட்டது. உ-வது பிலிப்பு உபதேசியார். ஙு-வது மாணிக்கம்பிள்ளை உபதேசி. ச-வது ஞானமுத்துபதேசி. ரு-வது சஅ௱ஙு முதல் சவரிராயபிள்ளை உபதேசி. அன்றுமுதலின்று வரையும் வருகிறதும் போகிறதும். போனாலும் வீடு சுய.ல் குறைவில்லாதிருக்கிறது. முதலாவது வந்தவர்களில் சமுசாரமாக வந்தவர்களின் நாமங்கள்:-

தோமாசு உபதேசியார் - பவுல் வாத்தியார் - ஞானவொளி - அந்திரேயா - ஆறுமுகம் முக்கந்தன் - ஞானக்கண்ணு முக்கந்தன் - மோசே, அப்பொழுது மூக்கந்தம் - சின்னக்கண்ணு - லாசர் - பன்னீர்சம் - நல்லதம்பி - பெரியசாக்கு - சின்ன சாக்கு - பெரியவன் - தேவசகாயம் உபதேசி - வெட்டாட்டுத் தேவசகாயம் உபதேசி - விட்டி அனைஞ்சபெருமாள் - வயனப்பெருமாள் - பரப்பாடி எனபெருமாள் - பிள்ளைகுடியிருப்பு குருபாதம் - கட்டேறி பாக்கியநாதன் - பனையேறி தேவசகாயம் - வேலாயுதப்பெருமாள் - சற்குணநாதன் - சாந்தாயி நல்லதம்பி - ஏசுவடியான் வேதநாயகம் - பெரியசாமி - சனுவன் . சீலன் ' நட்சத்திர யோவான் - கோவில் கூட்டி பாக்கியம், முதலானவர்களே,

க.வது விசாரணை சவரிமுத்துப்பிள்ளை. உ-வது சஅ௱ஙு பரமானந்தம்பிள்ளை விசாரணை, ஙுசஅ௱ஙு மாசிலாமணியாபிள்ளை.

---



கஅ௱சச-ளு ஜனுவரிமீ முதல் சத்தியநகரம் உபதேசி.

க-உ காலைச்செபம்பண்ணி பின்பு சுவிசேஷபுரத்துக்குப்போய் கனம் சார்சென்ற் ஐயரவர்களுக்கு சந்திப்பு. கோவிலில் செபம். பின்பு விசாரணைப் பிள்ளைக்கும் விசாரணை உவாத்தியார் ஞானபூரணம்பிள்ளைக்கும் சந்திப்பு. சாயந்திரம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டேன்.

ஙு-உ முருகன்குறிச்சியிற் சங்கங்கூடி ச-உ பாளையங்கோட்டையிலும் நாகர்கோவிலிலும் பொதுவான சங்கத்தைப்பிரித்து திருநெல்வேலியிலுள்ள சன்மார்க்கப் புஸ்தக சங்கமாகத் தீர்ந்தது.

ரு-உ திருநெல்வேலியில் வாத்தியார் சிவசுப்பிரமணியபிள்ளை மூலமாய் க சுவடு நஞ்சக்குற்றுக்கடுக்கன் ரூ ஙு-க்கு வாங்கினோம்.

தேசாந்திரி சங்கம் நல்லூர்ச் சேகரத்தில் சு-மீத்துக்கு ரூ மூன்று மாகாணி கொடுத்தேன்.

சா-உ சத்தியநகரத்துக்கு நானும் மதுரேந்திரம்பிள்ளையும் வந்தோம்.

எ-உ வந்த காயிதத்தில் குருவிரத்தம் மரியசிங்கம் பெண்சாதி மாதாவடியாள், அச்சங்குளம் அக்காள் மரியவியாகம்மையும் காவனூர்ட்சம்புதூர் கவாயானன் இன்னாசிமுத்துப்பிள்ளையும் பேதி வியாதியிலிறந்தது.

உய-உ நைக்குழந்தை தேவசகாயத்துக்கு வியாதி வருத்தம்.

உங-உ விசையராமபுரத்துச் சானூத்தி மருந்து செய்தாள்.

உச-உ மதுரேந்திரம்பிள்ளை சமுசாரம் றெட்டியம்புளிக்குப்போனான்.

உரு-உ உபதேசிமார் யாவருஞ் சுவிசேஷபுரத்துக்குப்போனோங் கலெக்கட்டர் துரையவர்கள் வந்தார்கள். ஙுய-உ கனம் ஐயர்கூட சத்தியநகரத்துக்கும் வந்து செபம் பண்ணினார்கள்,

பிற்பரவரிமீ க-உ சத்தியநகரத்துச் சபையிலிருந்த ஏமன்-மகன் ராகசுவாமியை கனம் ஐயரவர்கள் சபைக்குப்புறம்பாக்கித் தள்ளினார்கள். சடலைமுத்தென்பவன் ரூ க கொடுத்துப்போகவும், வன்னியப்பெருமாள் உடம்படிக்கையை விசாரணை பரமானந்தம்பிள்ளை கொடுத்துவிட்டதாகவும் அறிந்தார்கள்.

மறிய ஆராதனையில் யோவான் தேவசகாயத்துக்கு சத்தியநகரஞ் சபையின் பிள்ளைகளிற் சிலருக்கும் அவ்விடத்தில் ஞானஸ்நானங் கொடுத்தார்கள்

---

✝

கடவுள் துணை!

கனம் சார்சென்றய்யரவர்களால் சத்தியநகரத்தில் ஞானஸ்நானம் பெற்ற சனங்களின் விபரக்கணக்கு. கஅ௱சச-ளு பெப்ரவரிமீ கஉ

௧. பேதுரு வயசு ௨௰௫. தகப்பன் ஆபிரகாம் தாய்-பிரமராக்கி. ஞானத்தகப்பன் ஞானக்கண்ணு. முக்கந்தன், திருபாபுரம் ஆசீர்வாத முக்கந்தன். ஞானத்தாய், சூசன்னாள்.

௨. ராமசாமி வயசு ௰௭, மறுபேர் யோவான், தகப்பன் காலபெருமாள்: தாய் பிரமமுத்து. ஞானத்தகப்பன் ஷை. ஞானக்கண்ணு, ஷை. ஆசீர்வாதமுக்கந்தன், ஞானத்தாய் ஷை சூசன்னாள்.

௩. யோசேப்பு வயசு ௪. தகப்பன் நற்குணத்தான்; தாய் அன்பாயி. ஞானத்தகப்பன் வடக்குத்தெரு பெரிய ஈசாக்கு, ஞானக்கண்ணு முக்கந்தன் ஞானத்தாய் ஷை சூசன்னாள்.

௪. அன்னமரியாள் வயசு ௨. ஷை தகப்பன் தாய், ஷை ஞானத்தாய் சூசன்னாள். தகப்பன் ஈசாக்கு.

யோவான் தேவசகாயம் வயசு மீ ௪. தகப்பன் சவரிராய் உபதேசி தாய் மரியவியாகுலம். ஞானத்தகப்பன் சனம் யோவானையாவர்கள், விசாரணை பரமானந்தம்பிள்ளை. ஞானத்தாய் சுவிசேஷபுரம் மரியம்மாள்.

---

௨-டை சுவிசேஷபுரத்துக்கு சம்பளம். அப்போதான் உபதேசிமார்களை ௯-வகுப்புச்செய்து சம்பளங்கொடுத்தது. இரவிலிட்டமுளிக்குப்போய் மதுரேந்திரமும் நானும் சாப்பிட்டோம்.

௩-டை சுவிசேஷபுரத்தில் மொட்டைப் பராதாகத் தானியேலென்ற உபதேசி பரமானந்தம்பிள்ளை பேரிற் பராதெழுதிப்போட்டதினாலவருக்குத் தள்ளுதலுண்டாயிற்று, என்னையும் மதுரேந்திரம்பிள்ளையையும் சாட்சிபோட்டிருந்தான், நாங்களறியாதபடி.

தேவத்துரையம்பிள்ளை பேரிலு மெழுதினது. ருசுவாகாமற் போனதினாலவனுக்குந் தள்ளுதலாயிற்று. பின்பு சத்தியநகரத்துக்குவந்து நல்லதம்பிக்கும் ஈனமுத்து மகள் பாக்கியத்துக்குங் கலியாணம் உத்தரவுப்படி முடித்தேன் இரவில். ஓலை கூறுதலுக்கு ௯ ௧ வாங்கப்பட்டது. அகிலாண்டபுரம் முத்து செட்டியார் வந்திருந்து ஒரு ரூபாய்க்கு கதவும் வாங்கிப்போனார்.

௭-டை காருகுறிச்சி அந்தோணிமுத்துப்பிள்ளையும் மரியாம்பிள்ளை, மரிய செபத்தியாம்பிள்ளையும் வந்து மெஞ்ஞானபுரத்துக்கு பாக்கு சங்கதிக்காகக் கலெக்கட்டரிடத்துக்குப் போனார்கள். ஏசுதாசனுக்குச் சுரம். ௯-டை வரைக்குஞ்சுகமில்லை. யோவான் தேவசகாயத்துக்கு குத்திருமல். ௰-டை ஷைபிள்ளைமார்கள் வந்து விருந்து சாப்பிட்டு வடக்குன்குளத்துக்குப் போனார்கள்.

௰௨-டை பெரிய கலெக்கட்டர் தாமிஷந் துரையவர்களைக் காணச் சுவிசேஷபுரத்துக்குப் போனோம். அவர்களப்போது புஞ்சை நிலத்திற் கிணறுவெட்டி





நஞ்சைப்பயிர் செய்தால் புஞ்சைத் தீருவையும் சீர்மைப்பருத்தி தனிப்பட விதைத்தால் ஒருவருஷத்துக்கு அரைத்தீருவை யென்றும், ௨-ம்௵ ௫-தீருவையும், ௩-ம்௵ முழுத்தீர்வையென்றும் பட்டாப்புள்ளி தெரிஸ்தவர்கள் மனுக்கொடுத்தால் கர்ணனுக்கு உத்தரவு கொடுக்கப்படுமென்றும் சொன்னார்கள். பின்பு சத்தியநகரத்துக்கு வந்தோம்.

௰௪-டை புதுசாய் உதவிவிசாரணைக்கு பாளையங்கோட்டை மாசில்லாமணியாபிள்ளை வந்தார்கள். ௨௰-டையும் ௨௪-டையும் இட்டம்புளியில் உபதேசி மதுரேந்திரம்பிள்ளைக்குச் சுரத்துக்குப்போய் மருந்து கொடுத்து வந்தேன்.

மார்ச்சுமீ ௬-டை சம்பளத்துக்குப்போனோம். ௫-டையில் மதுரேந்திரம் பிள்ளை ஆயாசத்தினால் மயங்கி விழுந்தான். பின்பு தெளிந்தது.

௭-டை ஐயரிடத்தில் உத்தரவுவாங்கி வடக்குன்குளத்துக்குப்போய் ௮-டை சிறிவைகுண்டம் அன்னாட்சியிடத்திலிருந்த கடன்கைக்கணக்கு ‡ முதலானது வாங்கி ௯-டை சிலாக்குட்டி ஞானப்பிரகாசம்பிள்ளையும் நானும் சத்தியநகரத்தில் வந்தோம்.

௰௭-டை வடக்குன்குளத்துக்குப்போன மரியசவரிமுத்து ௨௨-டையில் வந்தான்.

௨௪-டை சத்தியநகரத்திற் சனம் ஐயர் வந்து நற்போசனங் கொடுத்தார்கள். என்சமுசாரம் முதலாவது சேர்ந்தாள்.

---

‡ ஒரு ஓலையில் இருக்கிற பின்வரும் நகல் இந்தக் கைக்கணக்கின் நகலாயிருக்கும். J. D. S.

அசலுக்குச் சரியான நகல்.

௲௮௱௰௫ ௵ ஆனிமீ ௰௬-டை வடக்குன்குளத்திலிருக்கும் ஸ்ரீவைகுண்ட மிக்கேல்பிள்ளைக்கு ஷையூரிலிருக்கும் மதுரேந்திர மேன் கடன் முறி யெழுதிக்கொடுத்தபடி கடன்முறியாவது இந்தநாளென்னவசரநிமித்தியம் கடனாக வாங்கினது பூவராகன் ௵ ௰௯ இந்தப்பூவராகன் பதினைறக்கும் வட்டி நூற்றுக்கு மீ ௧-க்கு ஒரு வராகன் வீதம் வட்டி கூட்டி கூடின வட்டியு முதலுமுடையார் வேண்டும்போது சம்மதிசெய்து போதவேணுகவு மிந்த உடபடிக்கைப்படி செலுத்தாதே போனால் என் நடைமாடு செய்கால் ஐவகைப்பட்ட பலன்படு பொருளும் தடுத்து மறித்து வாங்கிக் கொள்வாராகவும் தடுத்தபொருளுக்கு அழிவு வருகில் தடுத்தார் மேலும் பொருள்மேலும் சாராதேபோவேணுகவும் இப்படிச் சம்மதித்துக் கடன்முறி எழுதிக்கொடுத்தேன் மிக்கேல்பிள்ளைக்கு மதுரேந்திரம்பிள்ளை யிதற்குச் சாட்சி துரைகளுக்கு மரியதாசுப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை இவர்கள் அறிய இந்த முறி எழுதினேன் மதுரேந்திரம்பிள்ளை தற்குறி.

௨௧-௳ மதுரேக்கிரத்துக்கு உப்பிசம்போல வாந்தி கண்டதினால் மருந்து சாப்பிட்டு சுகமாய் ௨௭-௳ தன்சமுசாரமுந் தம்பி சவரிமுத்துங் கூட இட்டம்புளிக்குப் போனார்கள்.

௨௮-௳ சுவிசேஷபுரத்துக்குப் பிள்ளைகளைப் பார்க்கப்போனேன். அவ்விடத்தில் பிள்ளை மருமகள் சேபத்தியாயியைப்பற்றியும் தவசிப்பிள்ளையைப் பற்றியும் சந்தேகத்துப் பேச்சுண்டாயிற்று.

ஏப்பிரல்மீ ௭-௳ சுவிசேஷபுரத்தில் இராப்போசனத்துக்குப்போய் வந்தேன்.

௮-௳ வயித்தியத்திற் கைச்சாடம் எழுதம்படி வேதி சேர்த்தேன்.

௰௮-௳ இட்டம்புளிக்கு வந்த தொட்டணம்பட்டி அண்ணன் ஞானப்பிரகாசம் பிள்ளையும் டவிக் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வந்திருந்து சத்தியாகரத்துக்கு வாராமற் போனார்கள்.

மெய்மீ ௪-௳ சுவிசேஷபுரத்தில் என் முறைபாடம் வாசிப்பு. கனம் ஐயர் பிரசங்கம் செபம்.

௬-௳ உதவி விசாரணை மாசில்லாமணியாபிள்ளை மகன் விசுவாசத்துக்கு காது குத்தினார்கள்.

௭-௳ கோவிற்கூட்டி குருபாதத்தைக் கூட்டிக்கொண்டு குருவினத்தத்துக்குப் போகப்புறப்பட்டுச் சிரிவைகுண்டத்துக்குச்சேர்ந்தோம். அவ்விடத்துஉபதேசியார் சேர்வைகாரன்பட்டி அத்தான் ஞானப்பிரகாசம்பிள்ளை மகன் ராயப்பன் கொழும்புக்கோடிப்போய் விட்டதாகக் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்த கிறிஸ்தவனாகிய சட்டைக்காரிச்சி சொன்னாளவர் வீட்டிலிருந்து உடனே செட்டிமூலம் பட்டிக்குப்போய் ரா தங்கி.

௮-௳ செவ்வல்பட்டிக்குப்போய் இலத்தூர் சவரிமுத்துசெட்டியார்பெண்சாதி தெய்வாயி மரித்ததுட்டிகேட்டுக் கொண்டு அவ்விடத்திலிருந்து ௯-௳ நித்தான்பட்டி அத்தான் ஞானப்பிரகாசம்பிள்ளை வீட்டிற்சாப்பிட்டு அச்சங்குளத்துக்குப்போய் அக்காள் மரியவியாகம்மை மரித்த துட்டி அத்தான் மரியசிங்கஞ்செட்டியாரிடத்திற் கேட்டுத்தொட்டணம்பட்டிக்குப் போயவர்மகளின் ஞெசியம்மாளையும் விசாரித்துத்தங்கி ௰-௳ குருவினத்தத்தில் மரியசிங்கம்பெண்சாதி மரித்த துட்டியுங்கேட்டுக் கொப்பன்பட்டிக்குப்போய் அத்தானிடத்திலும் அக்காளிடத்திலும் தங்கள் மகள் துட்டி விசாரித்துத் நித்தான்பட்டிக்குப்போய்த்தம்பி தேவசகாயம் வீட்டிற் தங்கி,

௰௧-௳ காலையிற் காமனாயக்கன்பட்டிக்குவந்து பட்டியம்மான் ஞானப்பிரகாசஞ் செட்டியாரிறந்த துட்டிக்கவர் மனைவியிடத்திற் கேட்டு குருவினத்தத்துக்கு வந்தேன்.



௰௨-௳ என்கொழுந்தி தெய்வாயி முதலானவர்கள் வடசேரியில் விசுவாசநாதர் கல்லறை பார்க்கப்புறப்பட்டார்கள். எட்டுநாய்க்கன்பட்டி வரைக்கும் போய் வழியனுப்பி வந்தேன்.

௰௩-௳ தொட்டணம்பட்டிக்குப்போய், ௰௪-௳ என் தங்கச்சி நகையைப் பற்றிப்பேசினதில், கூடினவர்கள் ஷையவளிருக்கும்போது விற்றதுங் கலைந்ததுந்தவிர மற்றதைக்கொடுக்கும்படி தீர்த்தார்கள். அதற்கு ஷையாள் மாப்பிள்ளை மிக்கேல்பிள்ளை என்பற்று மென் தமையனார் சவரிமுத்துப்பிள்ளையும் பற்று வழிக்கணக்குண்டென்று கொண்டுவந்தார், ௰௫ விராகன் ௫-பணத்துக்கு அவைகளிற் கடன்வாங்கினதும் வாங்காததுமான கணக்காயிருந்தது மன்றி உபசாரமாய்க்கொடுத்ததும் என் தகப்பனார் தாயார் மரித்தபின் கிழமைக்கு வைத்ததும் கோடி போட்டதும் ௰௬ நாள்ச்சருள் வைத்துக் கொடுத்ததுமான செலவுக்குக்கொடுக்கவேண்டிய நகைக்கு விராகன் ௨௪-க்கு பணம் ௬௬ என்றும் ஆக ௰௪ விராகன் பணம் அரு செல்வானமுங் கூட்டினதையும் நான் மனம் பொறுத்து வீணை கணக்கு பிடித்தம் பொல்லாப்புக்கெட்டாமல் ஷை பணந் தருகிறேனென்று நகைகளின் விபரம் பார்க்கும்பொழுது முடிச்சென்ற கனத்த நகை விற்று சாப்பிட்டோமென்றும் மற்றவைகளிருக்கிறதாகவும் கணக்கெழுதினபின் கடுக்கன் மோதிரம் அரைஞாண்கொடி மடிச்சீலைப் பணம் இவ்வளவும் அவருக்குடையதென்றும் அது கொடுக்கிறதில்லையென்றுஞ் சொன்னார். அதினாலவ்விடத்திற் கூடினவர்கள் நியாய உத்தாரமெழுதிக்கொடுத்து காமனாயக்கன்பட்டிக்கனுப்ப,

௰௭-௳ காலையிற்போய் அவ்விடத்துஉபதேசியார்சத்தியநாதமுதலியார் கருத்தய்யாஞானப்பிரகாசமுதலியார் ஊர் அம்பலம் தேவசகாயநாடான் முதலானவர்களுக்குச்சொல்லி ஷை நியாயவுத்தாரங் கொடுத்தோம். ஷை உபதேசியாரிடத்திற் கூடினவர்கள் நாளைக்கு வாருங்கள் பேசுவோமென்று சொல்லி விட்டதினாற் குருவினத்தத்துக்குவந்து தங்கி ௰௮-௳யும் போயிருந்து ௰௯-௳ காலையிலுங் குருவினத்தத்துக்குவந்தேன். அதற்கு முன் ஷை மிக்கேல்பிள்ளையிடத்திற்ப்பேசிக்கொண்டு யாவையுங் கொடுத்துவிடத்தீர்மானித்ததில் அவர் சொன்னது; கடுக்கன் மோதிர மரைஞாண் விற்றுச் செலவு பண்ணிப்போச்சுது. அதற்குச்சாட்சி ஒப்புவிப்பேனென்றார். அதினாற் கூடினவர்களதை விட்டுவிடவும் மடிச்சீலைப் பொன்னஞ்சும் வாங்கிக்கொள்ளவும்வேண்டுமென்று சொன்னார்கள். அண்ணன் சவரிமுத்துப்பிள்ளை முதலானவர்கள், அந்தப்படிச்

குத்தான் நாமிருவருமன்னியரல்லவே என்றுநினைத்துப் பொல்லாப்புக்கட்ட மனமில்லாமல் ஒத்துக்கொண்டு

ஆனி௴ ௰-௳ கணக்குப்படிக்குச் செல்லவேண்டியதைக்கொடுத்து நகை திரும்ப வாங்கிக்கொள்வதென்றுடம்படிக்கை யெழுதிக்கொடுத்துக். கணக்கும் நகைக்குச் சாபிதாவும் வாங்கிக்கொண்டு திரும்பக் காமனுயக்கன்பட்டிக்குப்போய் ஷெ வழக்குத்தீர்ந்ததை யறிவித்து, பின்தொட்டன்பட்டிக்கு வந்து அவருக்கிளையகுடியாள் இன்னாசியம்மாளிடத்திலுமவரிடத்திலுஞ் சமாதானமாய்ப் பேசிக்கொண்டு அவர்களுக்கப்பொழுதிருக்கிற பெண்குழந்தைக்கு என் தங்கச்சி பேரிட்டிருக்கிறது அதற்குத் தங்களிடத்திலிருக்கிற நகைமுதலான யாவையும் விட்டு விடுவேனதப்பிள்ளையை என்மகனுக்குக் கொடுங்கள்ளென்றும்போது கெடுகிலுமுறவுண்டுமென்றதுக்குமந்த மனுஷர்கள்சம்மதியாதிருந்துஞ்சந்தோஷமாயனுப்பிக்கொண்டு, உ௰௳ அச்சன்குளத்துக்குவந்து பண்டிதாண்ணாட்சியிடத்திலும் அத்தான்மரியசிங்கஞ் செட்டியாரிடத்திலுஞ் சொல்லிக்கொண்டு தெற்குத் தித்தான்பட்டிக்கும்வந்து அத்தான் ஞானப்பிரகாசஞ் செட்டியார் முதலானவர்களிடத்திலுஞ் சொல்லிக்கொண்டு கொம்பாடியில் வந்து தங்கி,

உக-௳ செட்டிமலம்பட்டியில் எனது அக்காளும் அக்காள் மக்களுமிருக்கிறதினாலவிடத்தில் தங்கி, உஉ-௳ காலையிற் புறப்பட்டு சாயங்காலம் சுஇ மணியில் சத்தியநகரத்தில் வந்தோம்.

உச-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய்ப் பாடம் ஒப்புவித்து இட்டம்புளியில் வந்து தங்கினேன்.

உரு-௳ சத்தியநகரத்துக்கு வந்தேன்.

ஙக-௳ சம்பளக்கூட்டத்துக்குப் போனோம்.

ஜூன்௴ க-௳ குமாரபுரத்து எல்லையில் சின்னமூளி வுறணிக்கரையிற் கிடந்த பெரிய கல்தொட்டியை வண்டியிலேத்தி யிழுத்துக்கொண்டுவந்து சுவிசேஷபுரத்து பங்களாவுக்குக்கிழ்புறம் கீரவிக்கரையில் பதித்தோம் கனம்சாரசின்று ஐயரும்பதேசி வாத்திகளுஞ் சபையாரும்.

குருவினத்தத்துக்கு ௰ரு நாளுத்தரவுக்கு சம்பளம் பிடிக்கவேண்டியதுக்கு அ-நாள் சம்பளம் ரூ கவ-மாகாணி-ரு-ம் பிடித்துக்கொண்டு எழுதினுத்தரவு என்றார்கள். ஷெயிரவிலிட்டம்புளியில் தங்கினேன்.

கூ-௳ தத்தம்பள்ளி மாப்பிள்ளை மிக்கேல்முத்துப்பிள்ளை வந்தார்.



எ-௳ விசாரணை உவாத்தியார் ஞானபூரணம்பிள்ளை கைக்குழந்தை யிறந்ததுட்டிக்கு என் சமுசாரம் போனாள், சுவிசேஷபுரத்துக்கு. பின்பு பண்ணிகுளம் அண்ணாவி தருமக்கண்ணுப்பிள்ளை வந்தார்.

௰உ-௳ வேதியரொழுக்கம் ரூ இ கிரியாங்கம் ரூ மாகாணி சு.க்கு வந்தது.

௰ங-௳ வலா தருமக்கண்ணுப்பிள்ளை யிருந்து போனார் தன்னூருக்கு.

௰ச-௳ காமநாயக்கன் புதூர் கவிராயர் மகன் பாக்கியம்பிள்ளையும் உபதேசி மிக்கேல்பிள்ளையும் அருளானந்தஞ்செட்டியார் மகன் ஞானப்பிரகாசம் பிள்ளையும் வந்தார்கள் கோவில் யாசகத்துக்கு ரூ க-கொடுத்தேன்.

௰சு-௳ ஞானப்பிரகாசங் கணையாளன் மகன் மிக்கேல்பிள்ளை வந்தார்.

௰அ-௳யில் மதுரேக்கிரம்பிள்ளை இட்டம்புளியில் ஒருமாத்திரையவைத்திருக்கிறதாகவும் அவர் பெண்சாதி சொன்னதாக ஷெ மாவரேற்படுத்தி கனம் ஐயரிடத்தில் பாரதாய் ஷெ காரியம் விசாரணைப்பிள்ளையும் உதவி விசாரணை மாசில்லாமணியாபிள்ளையும் போய் விசாரித்து ஷெ மாவரேற்படுத்தினதன்றி ருசுவாகவில்லையென்று திரும்ப கனம் ஐயருக்கு உத்தரவு எழுதினார்களாம்.

உச-௳ என் சமுசாரம் இட்டம்புளிக்குப் போயிருந்தவள் மருமகளைக் கோவித்ததுக்கு ஷெ மகன் தாயைக்கோவித்து அனுப்பிவிட்டார்.

உஅ-௳ ஒவ்வொருஉபதேசியும் வயசும் மிஸியோனில் வேலைபார்த்து வந்த வருஷமும் அவர்கள் தகப்பன் தாய்களிருந்த மார்க்கங்களும் கனம் ஐயரிடத்தில் எழுதி வைத்தோம்.

ஜுலாய் ௴ க-௳ பிள்ளையவர்கள் தங்கள் குமாரன்வியாகப்பனுக்கு வியாதியாயிருக்கிறதை வந்துபார்த்துப் போகும்படி எழுதினார்கள். நானுடனேபோய்ப்பார்த்து அந்தவியாதியவனுக்குக் குத்திருமலினால் கண்வீக்கமுஞ் சிகப்புமுண்டாயிருந்தது. அதுக்கு அநேக வயித்தியர்களநேகமருந்துக்குச் சிலவு செய்யச்சொன்னதினால் ஷெ கண்ணுக்குப் பழுது வராது ஷெ இருமல் குணத்தினாலன்றி வேறில்லையென்றும் அப்படிப்பழுது வந்தால் நானே உத்தரவாதி யென்று நான்சொன்னதின்பேரில் பிள்ளையவர்களொப்புக்கொண்டு மருந்தை நிறுத்தினார்கள். வெகு நாளுக்குப்பின் னின்றுதானவர்கள் வீட்டிலிரவு சாப்பிட்டது.

உ-௳ சத்தியநகரத்துக்கு வந்து உடனே நானுமதுரேக்கிரம்பிள்ளையும் சங்கத்துக்குப் புறப்பட்டுப் பாளையங்கோட்டைக்குப் போனோம்.

௩-௳ சங்கத்தில் இந்த வருஷத்தில் ௯ உபதேசிகள் மரித்ததாகவாசித்துக் கேட்கப்பட்டது. இராவிற் கனம் பெற்றிற்று ஐயாவர்கள் பிரசங்கம். நீதிமொழி ௩௧.௩௰-ம் வாக்கியம். கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள்.

௪-௳ வீட்டுக்கு வந்து சேர்ந்தது. ௧-௳ சுவிசேஷபுரத்தில் ஷெ குழந்தையைப் பார்க்கப்போன என் சமுசாரமும் வந்தாள்.

௫-௳ மரியசவரிமுத்துக்கு ரூ இ-க்கு வெள்ளிகட்டிஎழுத்தாணி வாங்கினது மரியம்மாள் தம்பிக்காகக் கொடுத்தது.

௬-௳ செங்குளத்து மிராசு தெய்வக்கண்ணுப்பிள்ளை நமது தம்பிக்கு நமது மரியபாக்கிய மின்னாசியம்மாளைக் கேட்டு வந்தார். சம்மதிக்கவில்லை.

௮-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் மரியம்மாளிடத்திலும் கேட்டு ஊருக்குப்போனாராம்.

௰௧-௳ ஷெ வியாகப்பனைப்பார்க்கச் சுவிசேஷபுரத்துக்குப்போனேன் அப்போது மூன்று மாசத்துக்கு முன்வந்த தத்தம்பிளிப்பிள்ளை போகப் புறப்பட்டார். வழியனுப்பி வீட்டுக்கு வந்தேன்.

௰௮-௳ விசாரணை மாசில்லாமணியாபிள்ளை வீட்டாருக்கெல்லாம்விருந்துசெய்தோம். இரவில் நமது வீட்டிற் கள்ளர்வந்து பெட்டியிலிருந்த சேலத்துப்பட்டுக்கலைச்சோமனும் துவைத்துப் போட்டிருந்த உடை வேட்டியுமெடுத்துப் போய்விட்டான், தயிருஞ் சாதமும் சாப்பிட்டுக்கொண்டான்.

௨௬-௳ சுவிசேஷபுரத்திற் குழந்தைகளுக்குச் சுகமில்லையென்பதைப் பார்க்க என்சமுசாரத்தை யனுப்பினேன். அச்சங்குளத்து அண்ணனும் அவர் மகன் விசேந்தியும் வந்தார்கள்.

௨௮-௳ பன்றிகுளம் வண்டானத்து அந்தோனிமுத்துப்பிள்ளை வந்து, ௨௯-௳ போனார்.

௩௰-௳ வீட்டுக்களவு காரியத்துக்கு நானும் ஷெ விசாரணைப்பிள்ளையும் தட்டான்மடத்துக்குப் போலீசமீன்தாரிடத்துக்குப்போய் வந்தோம். என்சமுசாரஞ் சுவிசேஷபுரத்துக்குப்போயிருந்து கைக்குழந்தைக்குச் சுகமில்லாமற் கொண்டு வந்தாள்.

ஆகஸ்டு௴ ௧-௳ மரியசவரிமுத்து நம்பிகுறிச்சியிற்போய் பிள்ளையவர்களுக்கு ௫ கோட்டை நெல் வாங்கி வந்ததாம்.

௫-௳ சோதிநகரத்தில் சத்தியநாதவுபதேசியார் பெண்சாதி ராயப்பவுப



தேசியார் மகளிறந்து போனாள், திருபாபுரத்திலன்று சற்குண வாத்தியாருக்குத் தகப்பனார் வீட்டில் வந்திருந்தார்.

௬-௳ மதுரேந்திரமும் அச்சங்குளத்து அண்ணனும் வந்தார்கள்.

௭-௳ ஷெ சற்குண வாத்தியாரைப்போய்க் கேட்டு வந்தோம்.

௮-௳ ஷெ அண்ணனை அனுப்பினோம். சாயங்கிரம் அத்தான் கிழாக்குளத்து மதுரேக்கிரம்பிள்ளையும் செட்டிமூலம்பட்டி வியாகப்பபிள்ளையும் கூட ஒரு இடையனும் வந்தார்கள்.

௯-௳ சுவிசேஷபுரத்துக்குப் போனார்கள்.

௰௧-௳ தஞ்சாவூர் சத்தியநாதபிள்ளையும் மனைவி மங்களமும் மாமியும் வந்தார்கள். இட்டம்புளியிலிருந்து மதுரேந்திரமும் மரியம்மாளுமவள் தகப்பனாரவர்கள் தலைப்பிள்ளைப் பேறுக்கழைத்துப்போகும்படிக்கு சத்தியநகரத்துக்கு வந்தார்கள். ரூ ௩ சுருள் வைத்துக்கொடுத்தார்கள், வேண்டாமென்று கட்டுச்சாதமுங் கட்டிக்கொடுத்து குருவினத்தத்துக்கு சேமத்துசுவாமியடியாளையும் மரியம்மாளையுங்கூட அனுப்பினது.

௰௫-௳ முதல் இட்டம்புளிக்கு இன்னாசியம்மாளை அண்ணனுக்கு சமைத்துக்கொடுக்க அனுப்பினோம்.

௨௰-௳ செட்டிமூலம்பட்டி அக்காள் மகன் மிக்கேல்பிள்ளையும் தொட்டன்பட்டி அண்ணன் ஞானப்பிரகாசம் பிள்ளையும் வந்தார்கள்.

௨௧-௳ கட்டுச்சாதமுங் கட்டிக்கொடுத்தனுப்பினோம்.

௨௩-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய்க் குழந்தைகளைப்பார்த்து இட்டம்புளிக்கு வந்தேன். இன்னாசி அம்மாளுக்குச் சுகமில்லை.

௨௪-௳ சத்தியநகரத்துக்குக் கூட்டி வந்தேன்.

௨௬-௳ வயிரவத்தில் ா-ஸ்ரீ தேவத்துணையம்பிள்ளை தம்பி கலியாணத்துக்கு மொய்ச்செய்ய பிள்ளையவர்களும் நானும் போயிருந்தோம். இரவில் இன்னாசியம்மாளுக்கு வியாதி வருத்தமாயிருக்கிறதென்று ஆள் வந்தது.

௨௭-௳ காலையில் வந்தேன்.

௨௮-௳ சுவிசேஷபுரத்திலிருந்து என் மகன் மரியசவரிமுத்தும் வாத்தியார்சத்தியநாதபிள்ளையும்வடக்குன்குளம்கடைவீட்டு சவரிமுத்துப்பிள்ளையும் அவளைப் பார்க்க வந்தார்கள். சிரிவைகுண்டம் தேவசகாயத்துக்கும் குருவினத்தம் அந்தோனிமுத்துக்கும் கொப்பன்பட்டி மரியசெபஸ்தியானுக்கும் கலியாணம்என்று ஷெ சவரிமுத்துப்பிள்ளைவசத்தில் பாக்கும் அத்தான் மரியசிங்கஞ்செட்டியாரழைப்புச் சுருள் ரூ அனாக்காலும்வந்தது, அவர்கள் திரு

ம்பி சுவிசேஷபுரத்துக்குப்போய் மரியம்மாளிடத்தில் இன்னாசியம்மாளுக்கு மிகுந்தவருத்தமென்றதினாலவளும் வயித்தியனும் அந்திரோயாப்பிள்ளையும் மோசே உபதேசியாரும் விசாரணைப்பிள்ளையும் விசாரணை உவாத்தியார் ஞானபூரணம்பிள்ளையும் சபை மூக்கந்தன்குருபாத முதலானவர்களும் பெண்பிள்ளைப்பள்ளி வேதமாணிக்கவாத்தியாரும் வந்தார்கள் பார்க்கமிகவும் வருத்தமாயிருக்கிறபோது போகாதிருந்தார்கள். பிள்ளையவர்களுக்கு மாசில்லாமணியாபிள்ளை வீட்டிற் சாப்பாடு மரியம்மாள் போகமாட்டேனென்றாளவர்கள் வீட்டுக்கு.

௨௯-௳ சாத்தன்குளம் அழகப்ப வயித்தியனைக் கூட்டிவந்து மருந்து செய்யத் தீர்மானித்திருந்து ௩௰-௳ சற்றே வாசியாயிருந்ததுகண்டு மரியம்மாள் தவிர மற்றவர்கள் சுவிசேஷபுரத்துக்குப்போனார்கள். ௸ அழகப்ப வயித்தியனும் மரியம்மாளுக்கும் ஒருமருந்து செய்து கொடுத்தார். இன்னாசியம்மாளுக்குச் சுகமாய்,

செப்தெம்பர்௴ ௩-௳ தலைக்குத் தண்ணீர்விட்டு ௸ வயித்தியனுக்கும் ரூ ௧ மருந்து சிலவல்லாமல் கொடுத்தோம்.

௪-௳ மரியம்மாள் சுவிசேஷபுரத்துக்குப் போனாள்.

௬-௳ செங்குளத்துக் கலியாணப்பாக்கு ௸ மாசில்லாமணியாபிள்ளை கொழுந்தியை சத்தியநாதபிள்ளைக்குக் கலியாணம் என்று வந்தது.

௭-௳ சம்பளம். பாடம் படியாததுக்கும் பிரசங்கம் எழுதாததுக்கும் அபராதம் ரூ அணாக்கால்.

கந்தன்குடியிருப்புக்கு மாற்றும்படி யுத்தாரவாயிற்று.

---

சத்தியநகரம் உபதேசி சவரிராயபிள்ளைக்குக் கருத்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாகவும்.

இப்பவும் உன்னைக் கந்தன்குடியிருப்புக்கு உபதேசியாக மாற்றியிருக்கிறபடியால் உனக்கு வதிலாய் வருகிற வேதன்பன்பிள்ளை வசத்தில் ௸ சத்தியநகரங் கோவில் புத்தகஞ் சபை ரிப்போறட்டு கிறுமக்கணக்கு முதலானவைகளை யொப்புக்குடுத்து கந்தன்குடியிருப்புக்குப் போயவடத்திலுள்ள கோவில் புத்தகம் ரிப்போரட்டு முதலானவைகளை யொப்புக்கொண்டு ௸ யூர் சனங்களுக்குத் திவ்விய வசனத்தைச் சாக்கிறதையாய்ப் போதித்து வருவாய்.

௲௮௱௪௪௵ சப்ட்டம்பர்௴ ௭௳, சுவிசேஷபுரம்.

Edw. Sargent.

---



௳

கடவுள் துணை.

கந்தன்குடியிருப்புகோவில் பொஸ்தகம்முதலானவைகளுக்குக்கணக்கு.

௲௮௱௪௰௪௵ சவுட்டம்பர்௴,

மோசை யாகமம் முதலாபங்கு பழைய பொஸ்தகம் ௧. ரெண்டாம் பங்கு ௧. மூன்றாம் பங்கு ௧. நாலாம் பங்கு ௧. மோட்ச மார்க்கம் ௧. கம்மன்பெரோர் அட்டைவிட்ட பெரிய பொஸ்தகம் ௧. வேதப்பொருள் அட்டையில்லாத பழைய பொஸ்தகம் ௧. ரெண்டு மூன்று வேடு கிழிந்த பிராத்தினை ௧, செப பொஸ்தகம் ௧. ரிப்போறட்டு ௯.

ஆகப்பொஸ்தகம் ௯-ம் ரிப்போறட்டு ௯-ம் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சன்னலுக்குக் குடுத்த ரூபா ௧௫-க்கு
பலகை வகக்கு குடுத்த ரூபா ௫
அறப்புக்கூலி ரூபா காலே அணாக்கால்
யிரும்புக்கு குடுத்த ரூபா வ
அடிகூலிக்கு குடுத்த ரூபா அணாக்கால் பைசா ௯
சன்னலுங் கதவும்பிடிங்கி வக்கிற வகைக்கு தச்சனுக்குகுடுத்த அறை ௩ பைசா ௬

ஆக ரூபா ஒன்னரையே மூனுமாகாணி பைசா ௰ போக நீக்கி யிருப்பு பைசா ௨-ம் ௸ பிள்ளையவர்கள் வசம் குடுத்திருக்கிறது.

சங்கன்குடியிருப்பு கோவில் முன் கொட்டகை வைக்கக் குடுத்த ரூபா ௨௫-க்கு

ஓலைக்கு ரூபா காலேமாகாணி பைசா ௮, வேப்பமரம் வெட்ட ஆள் ௩-க்கு அணா ௨ பைசா ௨. ஆக ரூ காலேமூனுமாகாணி பைசா ௰ போக நீக்கி ரூபா ௨ பைசா ௨, நிலை வகையில் யென் வசம் ரூபா ௨, ஆக ரூபா ௪ பைசா ௨-க்கு விசாரணைப்பிள்ளை யவர்கள் பற்று ரூபா ௩ போக நீக்கி ரூபா ௧ பைசா ௨ சவரிராயபிள்ளை யவர்கள் வசம் சவுட்டம்பர்௴ கடைசியில் குடுத்துவிடுகிறேன்.

யிந்தப்படிக்கு உபதேசி வேதன்பன்.

---

கந்தன்குடியிருப்பு.

௰௩-௳ கந்தன்குடியிருப்பு உபதேசியார் வேதன்பன்பிள்ளை யிடத்திற் கோவிற்புஸ்தகமுதலான கணக்கொப்புக்கொண்டு சத்தியநகரத்துக் கணக்கு ௸ உபதேசியாருக்கு ஒப்புக்கொடுத்தேன், ௰௨-௳யில்.

௰௩-௳யில் ௸ வேதன்பன்பிள்ளை சத்தியநகரத்துக்கு வந்தார். நான் மறுநாள் ௰௪-௳ சமுசாரங் குழந்தைகளுடன் ௸ ஊருக்குப் போனோம்,

௰௫-௳ சகாயனுபதேசியார் வடக்கேபோய்க் கலியாணஞ்செய்து நன்னிகுளத்துக்கு வந்திருந்தார்.

அக்டோபர்மீ ௩-உ குருவினத்தம் மரியசிங்கத்தாக்கும் அச்சங்குளம் அன்னாட்சி சவரிமுத்துப்பிள்ளைக்கும் ஓலை யெழுதியனுப்பினேன்.

ரு-உ முதல் நன்னிகுளத்திலப் பிள்ளையவர்கள் வந்திருந்து நமது வீட்டுச்சாப்பாடனுப்பினோம், மரியசவரிமுத்து வசமாய்.

௰-உ பந்தயப் பிரசங்கம் சுவிசேஷபுரத்துக்கனுப்பினேன்.

௰௧-உ சத்தியநகரத்துக் கோவிலில் ராப்போசனம்.

௰௪-உ மரியசவரிமுத்தும் கூலியாள் பவுல் இருவரையும் தொட்டன்பட்டிக்குப்போகவும் அன்னம்மாள் நகைவகைக்குச்செல்லவேண்டிய ரூ-யும் ஓலையும் எழுதி அனுப்பினேன்.

௨௨-உ நித்தேரியம்மாள் வந்தாள் கந்தன்குடியிருப்புக்கு.

௨௪-உ இட்டம்புளியிற் சொக்கலிங்கம்பிள்ளைக்கு வியாதி வருத்தமாயிருக்கிறதினாற் பார்க்கப்போய் வந்தேன்.

௨௮-உ கோவிற்கூட்டி ஐயரிடத்தில் தன்னைக் கள்ள சாணானென்றதாகச்சொன்னதாகப் பாராது சொன்னதை ஒப்பிக்கவும் ஐயர் ரூ-ல எனக்கு அவராதமென்று சம்பளத்திற் பிடித்தார்கள்.

நவம்பர்மீ ௩-உ யிரவில் மீனாட்சிநாதபுரத்திற் புதிதாய்க் கட்டின கோவிற் பிரதிஷ்டைக்குப் போனோம்.

எ-உ தம்பி டாக்கிட்டர் தேவசகாயம் பிள்ளையும் மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளையும் வந்தார்கள்.

௯-உ அன்னம்மாள் பதார்த்தத்தில் சிலதை விலைக்கிரையம் பண்ணிக்கொடுத்தேன். சுவிசேஷபுரத்தில் கடன் வாங்கின ரூ ௯௧-க்கு ௩-வகை ரூ ௨௯-ம் ரொக்கம் ரூ ரு-ங் கொடுத்துக் கணக்குத் தீர்த்தேன். மரியம்மாளுக்கு ஒரு கெண்டியும் அவள் மகள் செபத்தியாயிக்கு ஒரு பொன்குளையுங் கொடுத்தேன்.

௨௰-உ பாளையங்கோட்டை முத்தையபிள்ளை கருங்கடலிலிறந்ததாகக் கேள்வியானோம்.

௨௩-உ பள்ளந்தட்டு ஆபிரகாம் உவாத்தியைத்தள்ளினார்கள். மதுரேந்திரம்பிள்ளை தன்சமுசாரம் பேறுகாலத்துக்குப் போயிருந்ததினால் இட்டம்புளியிலிருந்து கந்தன்குடியிருப்புக்குவந்து சாப்பிட்டதுக்கு அபராதம் ரூ க போட்டார்கள். ஞானமரியாளுக்கும் ஏசுதாசனுக்கும் சுரம் வந்தது. ஞானமரியாளுக்குப்பத்து நாள் வரை வயிற்றளைச்சலுண்டாயிருந்தது.



௨ரு-உ சகாயனுபதேசி பெண்சாதிக்கு தம்பி தேவசகாயம்பிள்ளை வருரி வைத்தார்.

௨௬-உ சாயந்திரம் டவிற்பிள்ளையும் ஊறணிக்கரை அந்தோணிமுத்துப்பிள்ளையும் சுவாமிமார் தர்க்கத்துக்குப் பேசும்படிக்கு கூட்டிப்போகவந்தார்கள். சுவிசேஷபுரத்துக்குப் போயவடத்தில் வயிற்றளைச்சலாய்த் தேவசகாயம்பிள்ளை யிருந்தார். நம்முடைய வீட்டில் ௨௯-உ வரையும் சமுசாரங் குழந்தைகளுஞ் சுகமில்லாமலிருந்தது.

௨௯-உ போன தேவசகாயம்பிள்ளை டிசம்பர்மீ ௨-உ திரும்ப யிவடத்துக்கு வந்தார்.

௧௮௪௪ டிசம்பர்மீ ௨-உ உதவி விசாரணை மாசில்லாமணியாபிள்ளைக்கு சங்கரன்குடியிருப்பில் வீடு கட்ட இடம் பார்க்கப்போனோம். நான் சுவிசேஷபுரம் வரையும் போய் பகல் முழுவதுஞ் சாப்பிடாமலிரவில் வீட்டிற்கு வந்து சாப்பிட்டேன். இட்டம்புளிஞானியார்மகன்முத்தவனுக்குக்கலியாணமென்று நமக்குப்பாக்கு வந்தது. தம்பி மதுரேந்திரம்பிள்ளை யவடத்துபதேசி. சுவிசேஷபுரத்தில்மரியம்மாளுக்கு ௨-உ முதல்ச்சுரம்உண்டாய், ௪-உ வரைவிட்டதினால், ஐந்தாந்தெய்தி ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் அவள் தாயாரை யனுப்பும்படி உத்தரவு வந்தது.

௬-உ காணமே யனுப்பினேன்.

௮-உ சாயங்காலம் தம்பி தேவசகாயம்பிள்ளையையும் என்னையும் ஷெ-அம்மாளுக்கு வருத்தமாயிருக்கிறதினாற் கூட்டிவரப்பிள்ளை யனுப்பினார்களென்று ஆள்வந்தவுடனே பிள்ளைகளை வீட்டில் வைத்துச் சுவிசேஷபுரத்துக்கு வந்து ௰௨-உ வரையிருந்து திரும்பி வந்தேன்.

௰ரு-உ என் சிறிய தாயார் சுவிசேஷபுரத்தில் வந்திருக்கிறதாக நேமத்தம்மாள் வந்து சாப்பிட்டபின் ஷெ-தேவசகாயம் பிள்ளையையும் கூட்டிப்போனார்கள்.

௰௬-உ ஷெ-சிறியதாயாரும் என் தங்கச்சி நித்தேரியம்மாளும் அந்தோணிமுத்துப்பிள்ளை பெண்சாதி செபத்தியாயியும் வந்து இருக்கும்போது சிலருடைய தாராதரமான பேச்சைக்கேட்டு வந்ததாகச் சொன்ன அவர்களுக்கு ௬எ-ம் சங்கீதத்தை வாசித்துக் காண்பித்தேன்.

௰எ-உ விடியற்காலம் இட்டமுளிப்பாளைக் கனுப்பிவிட்டுச் சுவிசேஷ

புரத்துக்குப்போயிருந்த என்மகளின்னுசியம்மாளுக்கு பழையவலிபோலிருக்கிறதாகவும் கேட்டு ஷை மரியம்மாளையும் பார்த்து வந்தேன்.

௰௯-௳ சின்னய்யா திவ்வியானந்தம்பிள்ளை யவர்கள் வந்து பேசிவிச்சுக்கொண்டதில்கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்துப்பேசினேன். சாப்பிட்டு, பின் சுவிசேஷபுரத்துக்குப்போனார்கள். தனக்கர்குளம், பெத்தாரெங்கபுரம் சோலியங்குளம், சமூகரெங்கபுரம் இரட்டியார்களுங் காருகுறிச்சி அந்தோனிமுத்துப்பிள்ளை தீத்தான்பட்டி அண்ணன் மிக்கேல்பிள்ளையுங் கிராமக்காரியங்களுக்குவழக்குப்பேசப்பிள்ளையவர்களிடத்தில் வந்துபோனதாகவும் தொட்டன்பட்டி அண்ணன்ஞானப்பிரகாசம்பிள்ளையும் மதினியார்சவரியம்மாளும் சிரிவைகுண்டம் அண்ணனு மரியம்மாளைப் பார்க்க வந்திருக்கிறதாகவுஞ் செய்தி.

௨௰-௳ இரவில் நானுந் தம்பி தேவசகாயம்பிள்ளையும் இரவிற் போய்.

௨௧-௳ காலையில் வந்து செபம். இரவில் மரியசவரிமுத்துக்குச் சுகமில்லாததுக்கு அன்னப்பாலும் வைத்து மருந்துகளுஞ் செய்து மிருந்தேன்.

௨௨-௳ விசாரணை மாசில்லாமணியாபிள்ளை சபை விசாரணைசெய்து மதிய ஆராதனையுஞ் செய்தார்கள். நமது வீட்டிற் சாப்பாட்டுக்கு எதுவில்லாமல் வியாதியாயிருந்ததினாற் தவசிப்பிள்ளையைக் கோவித்து சாப்பாடு கொண்டுவந்ததைக்கொண்டு நன்னிகுளத்துக்குப் போய்விட்டார்கள். பின்பு நேமத்தம்மானும் அண்ணன் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வந்து பார்த்துக்கொண்டுபோனார்கள்.

௨௭-௳ சம்பளத்துக்குப்போயிருந்து ௨௯-௳ நானுந் தம்பி தேவசகாயம்பிள்ளையும் கூட வந்தோம்.

௩௧-௳ கட்டுச்சாதமுங்கட்டிக்கொடுத்துப் பாளையங்கோட்டைக்குச் சம்பளம்வாங்கப்போகும்படி யனுப்பினேன். இட்டம்புளியிலிருந்து ஆள்கூட்டி வந்து வீடு தீத்தினேன். இன்பத்திலுந் துன்பத்திலுங் கர்த்தர் காப்பாற்றி இந்த வருஷத்தை முடிக்கச் செய்தவருக்கு ஸ்தோத்திரம்.

௪௪.ம்ஞூ முடிந்தது.



௲௮௱௪௫ ஞூ கந்தன்குடி உபதேசி சவரிராயன் ரிப்போட்டு.

ஜனவரி௴ ௧-௳ புதன்கிழமை, சுவிசேஷபுரத்துக்குப்போய்க் கனம் சார்சென்றப்யாவர்களை சந்திப்பு வைத்து பின்பு தரித்திர சங்கங்கூடி பின் மதியத்துக்குமேல் உபதேசி உவாத்திமார்களுக்குத் தனித்துப் புத்திசொல்லி யனுப்பினதின்பின்பு விசாரணைப்பிள்ளைக்குஞ் சந்திப்புக்கொடுத்தது. மரியம்மாளுக்கும் முன்போலச் சுகமில்லை.

௯-௳ தொட்டன்பட்டி மிக்கேல்செட்டியார் அன்னம்மாள் நகைக்காரியத்தில் மாறுபாடு செய்திருக்கிறதைக்காட்டி ஷையாருக்கும் அந்தவூர்கணக்கனுக்கும் குருவினைத்தம் அண்ணாச்சி சவரிமுத்துப்பிள்ளைக்குங் காயிதமெழுதியதை எ-௳ மரியசவரிமுத்துப்பிள்ளை வசமனுப்பி அவர் தமையனார் மதுரேந்திரம்பிள்ளை பெண்சாதி மரியம்மாள் தலைக்குழந்தை பெற்றிருக்கிறவளையும் கூட்டி வரும்படிக்கு அனுப்பினது. பாளையங்கோட்டை சங்கத்துக்கு நான் போகவில்லை, என்சமுசாரஞ் சுவிசேஷபுரத்திலிருந்ததினால். மதுரேந்திரம் பிள்ளை இட்டம்புளியிலிருந்து ஷை சங்கத்துக்குப்போனார்.

௰௯-௳ இரவில் இன்னாசியம்மாளுக்கு ஒருவலிப்புண்டானதினால் வயித்தியனை யழைத்துவரச்சொல்லி மருந்து கொடுத்து ௰எ-௳யிற் சுகமாயிற்று

௰௯-௳ முதல் எனக்கு வயிற்றளைச்சலுண்டாயிருந்தது.

௨௧-௳ தம்பி டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் வந்தார்.

௨௪-௳ தீத்தான்பட்டி யக்காள் மரியம்மாள் என்னைப் பார்க்கவந்துஞ் சாப்பிடயேதுவில்லாமலுடனே இட்டம்புளிக்குப்போனாள். ௩௰-௳ வரையுமெனக்குச் சுகமில்லை. நேமத்து மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளையும்வந்து பார்த்துக்கொண்டு சுவிசேஷபுரத்துக்குப்போனாரவட்டத்திலவர் தமைக்கையாளிருக்கிறாள். மரியம்மாளுக்குஞ் சுகமில்லை.

பிப்பிரவரி௴ ௪-௳ சுவிசேஷபுரத்துக்கு மதுரேந்திரம்பிள்ளை பெண்சாதி தலைப்பிள்ளையுங் கொண்டுவந்தாள்.

அ-௳ ஷையார்கள் இட்டம்புளிக்குப்போய்ச்சேர்ந்தார்கள்.

௨௪-௳ வரையில் யோவான் தேவசகாயத்துக்கு மண்ணன் வந்தவீக்கஞ் சுகமாயிற்று.

௨௫-௳ ஆலங்கிணத்து முதலியார் திருச்செந்தூரிற் பேதியிலிறந்துபோனார். தேவாலய சங்கத்துக்கு உபதேசிமாருக்கு ௲ மாகாணி மீ தோறும் பிடிக்கத் தீர்த்தார்கள்.

மார்ச்சு௴ ௩௧-௳யில் மரியம்மாளுக்குச் சுகமானதுக்கு அசனங்கொடுத்தார்கள்.

ஏப்பிரல்௴ ௨௮-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் நேமத்தன்னம்மைக்கு வசூரி குத்தினேன்.

மெய்௴ ௯-௳ மரியம்மாளுக்கு ஒரு வெள்ளாட்டுக்குட்டி ரூ ௧-க்கு வாங்கியனுப்பினேன், இட்டம்புளி ஞானமுத்துத் தாசன் வசம். ௸ அம்மாளுக்கு வியாதி பார்க்கப் போயிருந்தவன் ஐந்து ௴ மிருந்து வந்தாளின்று. தம்பி டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் மாப்பிள்ளை யின்னாசிமுத்துப்பிள்ளையும் வந்தார்கள், திரும்பவும்.

௭-௳ யோவான் தேவசகாயத்துக்கு வசூரி குத்திற்று.

௯-௳ சம்பளத்துக்குப் போனேன்.

௨௯-௳ கனம் சார்ஜென்றய்யாவர்கள் கந்தன்குடியிருப்புச் சபையாரை விசாரிக்க வந்தார்கள். சபையார் ஒழுங்காய்ச் செபத்துக்கு வாராததினாலும் பிள்ளைகளைப்படிக்க விடாததினாலுங் கோவித்து சாயந்திரம் வரையும் செபம் பண்ணாமலிருந்து அடவெடுத்து வரும்படி செய்து கோவிலைப்பூட்டி என்னையுஞ் செபம்பண்ணாமலுத்தரவுகொடுத்து சுவிசேஷபுரத்தில் குருபாதமுக்கந்தன் மகன் இறந்துபோனவனை யடக்கம் பண்ணப்போய் விட்டார்கள். குருவினத்தம் மரியசிங்கம்பிள்ளையும் வேதபோதகம்பிள்ளையும் ௸ தேவசகாயம்பிள்ளையும் வந்து விசாரித்துக்கொண்டு அவர்கள் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க இரண்டு நெடுங்கணக்குப் புஸ்தகமும் வாங்கிப்போனார்களுடனே. ௩௰௧-௳ வரையும் யிவடத்திற் செபமில்லை. அபராதம் ரூ ௧௫ வசூல் செய்தனுப்பி ௰௨ பிள்ளைகள் பெண்ணும் ஆணும் படிக்கவிடத்தீர்மானித்துச் சூன்௴ ௪-௳ கோவில் திறந்து செபம் பண்ணினேன்.

௰௪-௳ கலைய அரிசி போடும்படிக்கு புத்திசொல்லிக் கலையங்கள் வாங்கிக் கொடுத்தேன்.

௰௮-௳ சம்பளம். தேவாலயங் கட்டுகிற வகைக்கு ஒருமாச சம்பளமுபதேசிமாருக்குப்பிடித்தமென்றுடனே கால் ௴ சம்பளம் பிடித்துக்கொண்டார்கள். கோவில்களுக்கு ஒரு கிலமேசையுங் கொடுத்தனுப்பினார்கள்.

௨௧-௳ மரியசவரிமுத்து கனம் ஐயரவர்களிடத்தில் உதவியிற்படிக்கும்படி சேர்க்கப்பட்டது.

௨௮-௳ பிரமமுத்து வளவிலிருந்த மண்பீடத்தை எடுத்துப்போடவும், ௨௯-௳ அந்திரமுடையான் வளவிலிருந்த பேய்க்கோவிலைப் பிடுங்கி வந்து கக்கூஷ் கட்டச் செய்வித்தோம்.

சூலாய்௴ ௨-௳ மதுரேந்திரம்பிள்ளையும் நானுமுருகன்குறிச்சிச்சங்கத்



துக்குப்போனோம். பந்தயப்பிரசங்கம் ௪-வது ஆரோக்கிய முபதேசியாருடையது. விசுவாசத்தையும் அதின் தன்மையையுங் குறித்தது.

௯-௳. ௰௨ மணிக்கு கைம்பெண் சங்கத்துக்குப் புதியசட்டமேற்படுத்தப்பேசினார்கள். ௪ ரூ, ௫ ரூ-க்குத் திட்டப்பணம் செலுத்தப் புதிதாய்ச்சேருகிறவர்கள் செலுத்தக்கூடாதென்றும், முன் செலுத்தினவர்களுக்கு மாத்திரந் திட்டப்பணங் கொடுக்கப்படுமென்றும் சத்தியவேதாகமச் சங்கத்தையும் ஏற்படுத்தி அச்சுக்கூட்டமும் முருகன்குறிச்சியில் வைக்கிறதென்றும் தீர்ந்தது. முடிந்தது சங்கம்.

ஆகஸ்டு௴ ௮-௳ நேமத்து நல்லதம்பியாபிள்ளை மனைவி சுவிசேஷபுரத்துக்குவந்து ௨௮-௳ நம்முடைய வீட்டுக்குவந்தாள். ஆகஸ்டு௴ ௯-௳ சங்கரங்குடி விசாரணை மாசில்லாமணியாபிள்ளைக்கு ஒருஆண்குழந்தை பிறந்தது என்மனைவி உதவிசெய்தாள். சத்தியநகரத்துக்கு வேதன்பன் பிள்ளையிடத்தில் தரவேண்டிய ரூ ௨-ம் கேள்க்கப்போனேன் அவர் இல்லுமல்லாய்ச் சொன்னார் ஐயரவர்களுக்கறிவிப்பேனென்று வந்து விட்டேன்.

௯-௳ நேமத்துச் சுவாமியடியாளுமவள் மகளுங்கூடவந்து ௰௨-௳ நல்லதம்பியாபிள்ளை பெண்சாதியுங்கூட நேமத்துக்குப்போனார்கள்.

௰௭-௳ நாஞ்சிநாட்டிலிருந்து வந்தபனையேறி நல்லமுத்து குணப்பட்டு வேதம் படிக்க வந்தான்.

௰௮-௳ சாத்தன்குளத்தில் விசாரணை வாசர் மாசில்லாமணியா பிள்ளை மனைவி யிறந்த சாட்டிக்குப்போய் வந்தேன்.

௨௫-௳ சித்தான்பட்டி அத்தான் மருமகன் சாண்டைப்பிள்ளை வந்து ௨௬-௳ போனார்.

௨௭-௳ மீனாட்சிநாதபுரத்துக்கு மரியசவரிமுத்து தற்காலத்துக்கனுப்பப்பட்டான், உதவி உபதேசியாக.

செப்தெம்பர்௴ ௯-௳ டாக்கிட்டர் தேவசகாயம் பிள்ளையிடத்தில் சுவிசேஷபுரத்துக்குச் செபத்தியாயிக்கு ஒரு சாயச்சீலை கொடுத்தனுப்பினோம்.

௭-௳ இன்னாசியம்மாள் முதலியார் வளவுக்கிணத்தில் விழுந்து தலையிற் காயப்பட்டது. ௮-௳ காயத்தினால் மயக்கமும் உபத்திரவமுண்டாயிருந்தது செபம்பண்ணிக் கர்த்தருக்கு ஒப்புவித்தோம். ௯-௳ சுகமாயிற்று.

௰-௳ சுவிசேஷபுரத்திற் கனம் கண்காணியாரவர்கள் வந்து பெரியகோவில்கட்ட அஸ்திபாரம் போட்டது.

௨௰-௳ சனிக்கிழமை யிரவிற் பன்னிரண்டு மணிக்கு வைப்புத்தியினால்

சுவிசேஷபுரம் விசாரணைப்பிள்ளை வீடு வெந்துபோனதாக உகஉ காலையில் கேட்டோம்.

உருவ முருகன்குறிச்சிக்குப்போய் உசுவ கனங் கண்காணியாரவர்கள் பிரசங்கம். சபையான் நல்லமுத்து என்கூட வந்தான்.

அகஸ்டோபர்மீ சு-உ ஷை நல்லமுத்து உதவியிற் சேர்க்கும்படி கனம் சார்சென்றய்யரவர்களுக்கு விண்ணப்பம் எழுதி அனுப்பினேன்.

யஉவ மரியசவரிமுத்து உதவிப்படிப்பிலிருந்துவீட்டுக்கனுப்பிவிட்டார்கள்.

யசவ தொட்டன்பட்டி அண்ணன் ஞானப்பிரகாசம்பிள்ளையுங் கிழாக்குளத்துப்பிள்ளை மகனும் வண்டியில் விறகு கொண்டுவந்து போட்டுப்போனார்கள்.

நவம்பர்மீ யசு-வ டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை வந்து முதலூருக்குப் போனார்.

உக-வ கனம் சார்சென்றய்யரவர்கள் தர்யார் துட்டிக்காக சுவிசேஷபுரத்துக்குப் போனோம்.

உரு-வ என் பேரன் வியாகப்பனுக்கு ஒரு வேட்டி சாயங் காய்ச்சிக் கொடுத்தேன்.

டிசம்பர்மீ க-வ மரியம்மாளுக்குப் பழய வாய்வு போனுபத்திரமுண்டானதால் அவள் தாயவ்விடத்திலிருந்தாள்.

உ-வ பெருங்காற்றும் மழையுமுண்டாய் கோவில் பள்ளிக்கூடம் உபதேசி வீடுகளுஞ் சேதமானது. ஷையிடங்கள் பழுதுபார்க்கச் சிலவு நூ ாருப கண்டது.

எ-வ ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் இன்னாசியம்மாள் பெரிய மனுஷியானாள், அவள் தாய் சுவிசேஷபுரம். இட்டம்புளியிலிருந்து அவள் மதினி மரியம்மாள் வந்து உதவி செய்தாள்.

யகூ-வ ஷை தாயும் வியாகப்பனுந் தங்கச்சி செபத்தியாயியும் வந்தார்கள். கூ-வ வண்ணான் பிள்ளையவர்கள் வீட்டுக்குப் போய்ச்சொன்னதினால்

யகூ-வ விசாரணை மாசில்லாமணியாபிள்ளை சமுசாரங் குழந்தைகளுடனே முத்துசுவாமியாபிள்ளை யுபதேசியாருமாகப் பலகாரங் கொண்டுவந்தார்கள்.

உஉ-வ இன்னாசியம்மாள் வீடு கூடினாள், சிலவில்லை.



உசு-வ வேதன்பன் பிள்ளையிடத்தில் வரவேண்டிய ரூபாய்க்குக் கனம் சார்சென்றய்யர் கடிதம் ஆபீஸ் அய்யரவர்களுக்குக் கொண்டுபோய்க்கொடுத்தேன்.

உஅ-வ சுவிசேஷபுரத்துப்பிள்ளைகளை யனுப்பிவிட்டேன். கர்த்தரிந்த சரு-ம்வருஷத்தில் இன்பத்திலுந் துன்பத்திலுங் காப்பாற்றினதற்கவருக்குத் தோத்திர முண்டாவதாக.

---

* டிசம்பர்மீ கூ-வ சனிக்கிழமைகாலையில் வடக்குன்குளஞ்சின்னய்யாகொச்சிப்பிள்ளையவர்கள் குமாரன் மூத்தவன் கால்க்கரையூருக்குப்போய்ப் பேதிவாந்திகண்டு உடனே யவ்விடத்திலிருந்தெடுத்து வீட்டுக்குக் கொண்டுவந்து வடக்குன்குளத்தில் சாயந்திரம் மரித்தானும். அதின்பின்பு கிழாக்குளம் கொத்தனார் மகன் இன்னாசிமுத்துப்பிள்ளைக்குப் பேதிகண்டு கொப்பன்பட்டி சவரிமுத்துப்பிள்ளை வீட்டில் ஷை யிரவில் மரித்து எ-வ ஞாயிற்றுக்கிழமை யடக்கம்பண்ணின பின்பு அவர் மாமனார் குருவினத்தம் என் பெரிய தகப்பனார் மகன் சவரிமுத்துப்பிள்ளைக்குப் பேதி துவக்கிச் சிரிவைகுண்டம் அண்ணன் மிக்கேல்பிள்ளையவர்கள் வீட்டிற்றானே மருந்து முதலானது செய்தும் பாவசங் கீர்த்தன அவஸ்தை பூசுதல் உத்தரியமும் பெற்று அ-வ யிரவில்மரித்து கூ-வ பகலில் அடக்கம் பண்ணினார்களாம். ஷை மரித்தவர்கள் இரண்டுபேரும் ஷை அண்ணன் சமுசாரம் அன்னம்மாளும் பின்னுஞ் சிலருங் கோட்டாத்துக்கு சவரியார் திருநாளுக்கு வந்தவர்கள் இவர்கள். யக-வ புறப்பட்டுக் குருவினத்தத்துக்குப் போனார்கள். ஷை அண்ணன் மக்கள் தேவசகாயமும் நேவிசும் ஊரிலிருந்தார்கள். தகப்பனார் மரணத்திற் காணவில்லை. யஉ-வ சுவிசேஷபுரத்துக்கு வந்த அத்தான் சின்னப்பன் செட்டியார் சொல்லிசாயங்காலம் போனார். ஷை காரியம் தமிழ் உக-ம்வரு கார்த்திகைமீ உகூ-வ முதல் உஅ-வக்குள் நடந்தது. மார்கழிமீ உ௫-வ நான் வடக்குன்குளத்துக்குப் போய் சின்னய்யாகொச்சிப்பிள்ளையவர்கள் மகளிறந்ததையும்அம்மான் செய்யப்பபிள்ளைமனைவியிறந்ததையும் சின்னய்யாதிவ்வியானந்தம்பிள்ளையவர்கள் மகள் மாதாவடியாளிறந்ததையும் துட்டி கேட்டுக்கொண்டும் மற்றும் உறமுறையார்களையும் தித்தான்பட்டி அண்ணன் மிக்கேல்பிள்ளை தொட்டன்பட்டி அண்ணன் ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களையும் கண்டு பேசிக்கொண்டும் மறுநாள் மூன்றும் நாள் சமாரியாவுக்கு வந்து சேர்ந்தேன்.

---

* தனியேடு-பிந்திஎழுதி இடையில் சேர்த்ததாயிருக்கிறது. J. D. S.

கடவுள் துணை.

கந்தன்குடியிருப்பு அஞ்ஞானிகள் வீடு தொகை காணும்படி கணக்கு.

௲அ௱ச௰ரு௵ நவம்பர்௴ ௰௪-ௗ

| | |
|---|---|
| திருமாலைகுடி அம்பலம் | வழிகாத்தான் |
| ஷை மகன் ராமசாமி | சாணி ஈனன் |
| ஷை மாடக்கண்ணு | தரசன் ஆறுமுகம் |
| வெள்ளையன் | வடிவேல் |
| ஆண்டி | ஷை மகன் ஆறுமுகம் |
| பெருமாள் | கருத்தா மாரிமுத்து கைம்பெண் |
| முத்துமாலை கைம்பெண் | தென்சிறகு நட்டாறு கைம்பெண் |
| வள்ளி கைம்பெண் | பெருமாளடிமை |
| வடக்கத்தியான் முத்து | கிழக்கினின்று தெய்வேந்திரன் |
| உருதமாலை கைம்பெண் | கொண்டிசுடலைமாடன் |
| சின்ன அந்தர முடையான் | சுடலைமாடன் |
| தென்சிறகுமேற்கினின்றுசித்திரபுத்திரன் | பெரிய சுடலைமாடன் |
| சின்ன இசக்கி கைம்பெண் | சின்னச்சுடலைமாடன் |
| சிதாலகுளம் ஆண்டி | ஷை சுடலைமாடன் |

ஆக வீடு உ௰அ.

பேய்க்கோவில்.

அம்மன்கோவில் க. செங்கடர்ய்க்காரன் க.

ஆகக்கோவில் உ.

ரோமானில்லை. தனுக்கு இல்லை. அஞ்ஞானபள்ளிக்கூடமில்லை.

கடவுள் துணை.

ஆலங்கிணறு அஞ்ஞானிகள் கோவில்கள் வீடுகள் தொகையறியும்படி கணக்கு. ௲அ௱ச௰ரு௵ நவம்பர்௴ ௰ரு-ௗ.

| | | |
|---|---|---|
| பிள்ளையார்கோவில் மாணிபம் | சங்குபண்டாரம் | க. |
| அம்மன்கோவில் | ஆறுமுகம்பிள்ளை | க. |
| மாரியம்மன்கோவில் | அளகப்பபிள்ளை | க. |
| கெட்டைமொட்டைஐயன்கோவில் | ராமலிங்கம் பண்டாரம் | க. |
| பறைச்சேரி அம்மன்கோவில் | சுப்புபண்டாரம் | க. |
| ஆக அஞ்ஞானக்கோவில் ரு. | ஆகப்பண்டாரங்கள் வீடு | எ. |
| வீடுகள். | சங்கரக்குமாருபிள்ளை | க. |
| முத்தயமுதலியார். (யார் வீடு க. | பெரியநம்பியாபிள்ளை | க. |
| மகன் முத்துக்குமாருசுவாமி முதலி | சங்கரநாராயணபிள்ளை | க. |
| பேய்க்குளம்முத்தயன்பண்டாரம் க. | குலசேகரப்பெருமாள்பிள்ளை | க. |

ஆகக் களையாளர் வீடு ச.



| | |
|---|---|
| மண்டலமாடம்பெருமாள்பிள்ளை வீடு க. | சுப்பிரமணியபிள்ளை க. |
| வடிவு கைம்பெண் வீடு க. | சண்முகம்பிள்ளை க. |
| தண்டல் ஆண்டியாபிள்ளை வீடு க. | ஆண்டியாபிள்ளை க. |
| சுப்பிரமணியபிள்ளை வீடு க. | வடக்கு முத்துப்பிள்ளை க. |
| கலியுகராமபிள்ளை வீடு க. | ஆகவீடு ௰ரு. |
| சிவசுப்பிரமணியபிள்ளை க. | |
| சங்கரநாராயணபிள்ளை க. | |
| முத்துப்பிள்ளை க. | |
| தொப்பையபிள்ளை க. | |
| வள்ளிநாயகம்பிள்ளை க. | |
| சிவன்பிள்ளை க. | |

இடையர் வீடு.

| | |
|---|---|
| நல்லசிவன் | வண்ணமுத்து |
| சிவனேன் | சிவனேன் |
| மலையன் | நல்லசிவன் |

ஆக வீடு சு.

மறவர் வீடு.

| | |
|---|---|
| சிவசுப்பிரமணியத்தேவர். | ராமசுவாமி |
| அணைஞ்சபெருமாள் த | ஆண்டித்தேவன் |
| தொப்பை மகன் | திருப்பாற்கடல் |
| அணைஞ்சபெருமாள் த | ராமசுவாமி |
| ஆயம்பூர் ஜனப்பெருமாள் | முத்தாசுத்தேவர் |
| மாடசுவாமி த | மாடசுவாமி |
| பலவேசத் தே | சாமி த |
| சுப்பிரமணிய த | ஆண்டி த |
| திருப்பாக்கடத்தேவர் | நல்லகண்ணு த |
| பளனித்தேவர் | பொத்தையன் |
| அருணாசல த | ஆக வீடு உ௰க. |

குசவன்.

நல்வகண்ணு க. ஷை சுப்பிரமணியன் க. ஆக உ வீடு.

பறைச்சேரி வீடு.

| | | |
|---|---|---|
| சுடலை சாம்பான் | புலமாடன் | ஆறுமுகம் |
| ஒளிமுத்து | சுடலைமுத்து | செம்பன் |
| பலவேசம் | தூங்கன் | கருத்தான் |
| பலவேசம் | ஈனன் | வெள்ளையன் |
| மொட்டையன் | சுடலை | மாசாணமுத்து |
| பலவேசமுத்து | மூச்சுமாடன் | ஈனன் |
| வாலன் | ஈனன் | ஆக வீடு உ௰. |

ஆக

| | |
|---|---|
| கந்தன்குடியிருப்பு வீடு உக. | இடையர் வீடு சு. |
| ஷை அஞ்ஞானக்கோவில் உ. | மறவர் வீடு உக. |
| ஆலங்கிணறுகோவில் ரு. | குசவன் வீடு உ. |
| பண்டாரங்கள் வீடு எ. | பறையர் வீடு ௰சு. |
| களையாளர் வீடு ச. | ஆக எ௰ரு. ஆக வீடு ௱௬. |
| பிள்ளைமார் வீடு ௰ரு. | கோவில் எ. 7 |

௲௮௱௪௰௬ ௵ ஜனுவரி௴ முதல்.

௬-௳ பாளையங்கோட்டையிற் சங்கத்துக்குப் புறப்பட்டோம். ௮-௳ சங்கமென்று இவட்டத்திலுந்தரவு. ௭-௳ சங்க முடிந்து போனதின்பிறகு சேர்ந்தோம் பாளையங்கோட்டையில். ௮-௳ கோட்டைக்குள் கல்வெட்டாங்குளி மதுர்நாயகம்பிள்ளை வீட்டில் தம்பி டாக்கிட்டர் செலவிலுற் சாப்பிட்டுக் கட்டுச் சாதமுங் கட்டிக்கொண்டு வந்தோம்.

௭-௳ இன்னாசியம்மாளிரண்டாஞ் சாமத்தியமானாள்.

௰-௳ மதுரேந்திரம்பிள்ளை வயித்தியச் சுவடியும் மருந்தும் என்கையி ஞல்த்தரவேண்டும் வயித்தியஞ் செய்யவென்று வாங்கிக்கொண்டு இட்டம்புளிக்குப் போனார்.

௰௭-௳ வடக்குன்குளத்து கொப்பன்பட்டி யன்னன் சவரிமுத்துப்பிள்ளை மேலே வண்டி விறகு விழுந்து வருத்தப்பட்டிருக்கிறதாகக் கேட்டோம். ௨௨-௳ யவர் மரித்ததாக ஓலையும் வந்தது. துட்டி சொல்லி வந்தவனுக்கு சாப்பாடும் படித் துட்டும் பழவேட்டியுங் கொடுத்தனுப்பினோம்.

௩௧-௳ சுவிசேஷபுரத்தில் கனம் ஐயரவர்கள் சீர்மையிற் கும்பினியாரோடெதிர்த்துப் போர் செய்து வந்த அறபியரைக் கர்த்தர் பிறந்த பண்டிகையிற் செயித்ததாகச் சொன்னார்கள்.

பிப்பரவரி௴ ௪-௳ சுவிசேஷபுரத்தில் விசாரணை மாசில்லாமணியாபிள்ளை மகன் சங்கரன்குடியிற் பிறந்தவனுக்கு ஞானத்தகப்பனாயிருந்தேன்.

௯-௳ என் சமுசாரத்தையும் என் மகன் குசைமரியானையும் வடக்குன்குளத்துக்கு ஷெ கொப்பன்பட்டிச் சவரிமுத்துப்பிள்ளை மோட்ச விளக்கு ௯ இ-யும் மொய்க்குக் கொடுத்தனுப்பினேன். அதோடே காமனுதித்தன் புதூர் க்ஷையாளன் பெண்சாதி சுவாமியடியாளுக்கு ௯ ௧ கொடுத்துவிட்டேன்.

௫-௳ ஆலங்கிணற்று சிவசுப்பிரமணியத்தேவன் திருச்செந்தூர் பப்பிமுத்தய்யன் வீட்டிற் கொள்ளையிட்டதாகச் சேவகர் வந்து பெண்பிள்ளைகள் முதலானவர்களை இம்மிசு செய்தார்கள்.

௨௰-௳ மரியம்மாள் தன்மகள் அருளம்மாளைக்கூட்டிப்போகச் சொன்னதினாற் கூட்டி வந்தேன் வீட்டுக்கு.

௨௧-௳ வடக்குன்குளத்துக்கு அனுப்பினவர்கள் வந்து சேர்ந்தார்கள்.



௨௩-௳ இன்னாசியம்மாளுக்குப் பழய சன்னியிழுப்புண்டாயிற்று.

௨௪-௳ குசைமரியானுக்குச் சுரமுண்டாயிற்று.

மார்ச்சு௴ ௧-௳ தேவசகாயங் கைப்பிள்ளைக்குத் தடையிற் புறப்பாடுமிருந்த வருத்தமாயிருந்தது.

௨-௳ தவசி யாசாரி மருமகள் மூத்தவளிறந்த துட்டிக்குப் போய் வந்தேன்.

௰௬-௳ சுவிசேஷபுரத்தில் பிள்ளையவர்கள் குழந்தைகளுக்கு சுகமில்லாதிருந்து வாசியானதையும் அவர்கள் மாடொன்று அசுப்பிலிறந்ததையும் விசாரிக்கப்போய் வந்தேன்.

௨௰-௳ மாசில்லாமணியர்பிள்ளை தவசிப்பிள்ளை கொழும்பிலிருந்து வந்தவன் நமது பிள்ளைகளுக்கு ஒரு சட்டையும் இரண்டு சிறுசீத்தை லேஞ்சியும் ஒரு சிறு பீங்கானுங் கொடுத்தான்.

௨௯-௳ நானும் மதுரேந்திரம்பிள்ளையும் திருபாபுரத்தில் வந்திருந்த சற்குண உவாத்தியார் அவர்கள் சமுசாரங் குழந்தைகளையும் போய் விசாரித்து வந்தோம்.

௨௪-௳ முதல் இன்னாசியம்மாளுக்குச் சுகமில்லை. ௨௭-௳யிற் கனம் ஐயரவர்களிடத்தில் மருந்து வாங்கி வந்து கொடுத்தேன்.

மெய்௴ ௰௧-௳ மரியசவரிமுத்து அவர்கள் தானுக்குதவியாயிருந்தவன் வண்டியடிக்கிறதைவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டான்.

சேமத்துசுவாமியடியாள் சுவிசேஷபுரத்துக்கு வந்திருக்கிறாள். பின்பு இன்னாசியம்மாள் கனம் ஐயர் மருந்து சாப்பிடப்போயிருந்து ௰௪-௳ சுகமாய் வந்தாள். புசற்காத்திற் சேதப்பட்ட கிறிஸ்தவர்கள் வீடு கட்டுச் செலவும் தருமமாக கனம் ஐயரவர்கள் கொடுத்தார்கள். மெஞ்ஞானபுரங் கோவிலுக்குச் செலவு ௲ கொடுத்தவர்கள் பேருந் தொகையும் அச்சிற் பதித்து ௲ புஸ்தகம் வந்ததாகவும் வாசித்து சுவிசேஷபுரங் கோவிலுக்கும் ௯இ ௲-க்கு அதிகமாய்க் கொடுக்கிறவர்கள் பேர் செப்புத்தகட்டிலெழுதி கோவிலில் வைக்கப்படுமென்றுஞ் சொல்லியனுப்பினார்கள். பிள்ளையவர்கள் வீட்டில்புல்லுப்பழயது சாப்பிட்டுடனே வந்து விட்டேன்.

௨௰-௳ காரன்காட்டுவிளை உபதேசியார் சவரிமுத்துப்பிள்ளை மகனுக்குப் பெண் கேள்க்க அவர் மச்சினன் அருளானந்த செட்டியார் மகள்

ஞானப்பிரகாசம் பிள்ளையுங்கூட வந்தார்கள். அவர்களுக்குப் பெண் பேச்சுக்கிடங் கொடுக்கவில்லை.

உக-உ அருளப்பபிள்ளைகூட நன்னிருளத்துக்குப்போயவடத்திலிருந்த கிரகோரிதாத சுவாமியாரைக்கண்டு பேசினதில் அவர்கள் மார்க்கத்திராய்க்கட்டு புஸ்தகம் ஒன்று கொடுத்தார்.

உஉ-உ சனம் ஐயரவர்களை முருகன்குறிச்சிக்குப்போகவும் குருப்பட்டத்துக்குப் படிக்கிற தமிழருக்குப் படித்துக்கொடுக்கவும் உத்தரவு வந்ததென்றார்கள்.

ஜுன்மீ உ-உ மதுரேந்திரம்பிள்ளை வந்து சமாரியாபுரத்துக்கு உங்களை மாத்திரார்களென்றார். சாயந்திர மந்தப்படி ரு-மணிக்குச் செபஞான உபதேசி உத்தரவு கொண்டு வந்தது.

---

கந்தன்குடியிருப்பு உபதேசி சவரிராயபிள்ளைக்குக் கருத்தருடைய ஆசிர்வாதமுண்டாகவும்.

உனக்கு வதிலாய் வருகிற செப்ஞானம் உபதேசி வசம் ஷையூர் கோவில்ப் புத்தகம் சபை ரிப்போறட்டு முதலானவைகளை யொப்புக் குடுத்து சமாரியாபுரத்துக்குப்போய் அவடத்திலுள்ள ஞானப்பிரகாச உபதேசி வசத்தில் ஷையூர் கோவில்ப் புத்தகம் சபை ரிப்போற சங்கக்கணக்கு மற்றும் பல கணக்குகளையும் ஒப்புக்கொண்டு ஷையூர்சனங்களுக்குத் திவ்வியவசனத்தைச் சாக்கிறதையாய்ப் போதித்து வருவாயாக.

௲அ௱சயகூ௵ ஜுன்மீ க-உ. சுவிசேஷபுரம்.

Edw. Sargent.

---

கடவுள் துணை.

சமாரியாபுரம் கோவில்ப் புஸ்தகம் சாமான் ஒப்புக்கொண்ட கணக்கு.

௲அ௱சயகூ௵ ஜுன்மீ யக-உ.

| | | | |
|---|---|---|---|
| செபபுத்தகம் | க. | கிழிந்த பிரார்த்தனை | க. |
| சுவிசேஷம் | க. | சபை ரிப்போறட்டு | க. |
| முதலாம் பங்கு | க. | மேசை | உ. |
| இரண்டாம் பங்கு | க. | அப்புவினைப்புஸ்தகம்உள்பட | |
| காலாம் பங்கு | க. | மாற்குசெட்டு | க. |
| பழய செபபுத்தகம் | க. | இரும்புதூக்குவிளக்கு | க. |





அப்பவினை.

| | | | |
|---|---|---|---|
| மோசே ஆகமம் | க. | சபைறிப்போறட்டு | க. |
| இரண்டாம் பங்கு | க. | மத்தேயுக்கட்டு | ரு. |
| மூன்றும் பங்கு | க. | ஞானதீபம் | க. |
| கிளிந்த பிரார்த்தனை | க. | சந்தி | கூ. |
| சுவிசேஷம் | க. | லூக்காக்கட்டு | க. |
| செபபுத்தகம் | க. | யோவான் கட்டு | ரு. |

ஆக யிவ்வளவும் சவரிராயபிள்ளை உபதேசியாரவர்களுக்கு நான் ஒப்புக்குடுத்திருக்கிறேன்.

இப்படிக்கு ஞானப்பிறகாசமுபதேசி.

---

✝

கடவுள் துணை.

சமாரியர்புரம் சபையின் ஆறுமாசக் கணக்கு.

௲அ௱சயகூ௵ ஜுன்மீ யஎ-உ:

| | | | |
|---|---|---|---|
| கோவில் | க. | மரணம் | ங |
| பள்ளிக்கூடம் | க. | வரவு | யக. |
| உபதேசி வீடு | க. | ராப்போசனம் புருசர்கள் ங. | |
| சபை வீடு | சரு. | ஸ்திரிகள் | ச |
| சனம் | ஙரு-க்கு | திடப்படுத்தல் | உய |
| ஞானப்புருசர் | யகூ. | முடித்தவர்கள் | ச |
| ஷைஸ்திரிகள் | யரு. | பள்ளிக்கூடப்புஸ்தகம் ரிப்போரட்டுக் கணக்கு. | |
| ஷை பெத்தகுழந்தைகள் | யரு. | ௲அ௱சகூ௵ ஜுன்மீ உஉ-உ. | |
| ஆக சகூ. | | மாற்கு சுவிசேஷம் | ரு |
| ஞானஸ்திஞனம்பெறுதபுருசர்க்ள் ஙங | | வேதவசனக்கொத்து | க |
| ஷை ஸ்திரிகள் | உகூ. | சத்தியவேதச்சுருக்கம் | உ |
| ஷை பெறுத குழந்தைகள் | உஎ. | ஷைபுத்தகம் பியர்த்தது | க |
| ஆக சனம் அகூ. | | அட்டைபியந்த ஞானதீபம் | க |
| ஆக வகை-உ-ல்-ஙரு-சரி. | | மாசரிப்போர்ட்டு | க |
| கலியாணம் | ங | கிதசரி ரிப்போர்ட்டு | க |

## சமாரியாபுரம் உபதேசி.

கூ-உ நானும் மரியசவரிமுத்துங்கூடச் சுவிசேஷபுரம் பாதைக்கு சமாரியாவில் வந்து கணக்குப்புஸ்தகமுதலானதை ஒப்புக்கொண்டு திரும்பக் கந்தன்குடியிருப்புக்குப் போனேன். புலியக்குறிச்சி டோணவூர் விசாரணை மாசில்லாமணியாபிள்ளைமகள் மூத்தவள் கலியாணமில்லாதிருந்தவளிறந்த துட்டிக்காக ச-உ சங்கரன்குடி விசாரணை மாசில்லாமணியாபிள்ளை வீட்டுக்கு நானுமென் சமுசாரமும் போய்க்கேட்டு வந்தோம்.

இ-உ சாமான்களைத்தூக்கிக்கொண்டு இரண்டு வண்டியும் வைத்துச் சாயந்திரம் ச-மணிக்கு சமாரியாவுக்கு வந்து சேர்ந்தோம், வெள்ளிக்கிழமையன்று. பள்ளிக்கூடத்திற் சமையல் செய்திருந்தோம்.

சு-உ விசாரணைப்பிள்ளை வந்து உபதேசி வீடு சுத்தஞ்செய்ய உத்தரவு கொடுத்து அ-உ ஷை வீட்டிற் போயிருந்தோம். ஷைபிள்ளை நம்முடைய வீட்டிற் சாப்பிடவில்லை.

கூய-உ பாளையங்கோட்டை சங்கத்துக்குப் போகத்தக்கதாக மதுரேந்திரம்பிள்ளையும் நானுங் கூட சமாரியாவிலிருந்து கட்டுச்சாதமுங் கொண்டு போய்ச் சுவிசேஷபுரத்துப்பிள்ளை வீட்டிற்சாப்பிட்டுபுறப்பட்டுப்போகையில்- பசுவந்தனை அந்தோனிமுத்துப்பிள்ளை வந்து- அண்ணன் நல்லதம்பியாபிள்ளை மகன் அப்பாவு மரியதாசனும் நொண்டிமுதலிமகன் மூத்தவனும் இறந்துபோனதாகச் சொன்னார். நாங்களுடனே முருகன்குறிச்சியிற் சேர்ந்தோம்.

சுலாய்௴ க-உ பாளையங்கோட்டையில் சின்னத்தம்பியாபிள்ளையும் அவர் மூத்த மகனுந் தங்கள் வீட்டில் விருந்துசெய்து ஷை இளைய குமாரன் ராயப்பபிள்ளைக்கு இன்னாசியம்மாளைப் பெண் கேட்டார்கள். யோசித்துப் பின்னாலே சொல்வோமென்று வந்து விட்டோம்,

உ-உ வடக்குன்குளத்துக்கு வந்து அவடத்திலுள்ள துட்டி முதலான காரியங்களையும் விசாரித்து இருந்து, ச-உ வழியிற் தங்கி, ரு-உ சமாரியாவுக்கு வந்தோம். மதுரேந்திரம்பிள்ளை சாயந்திரம் இட்டம்புளிக்குப் போனார்.

சு-உ முத்துசுவாமியாபிள்ளைக்கு சாத்தன்குளத்தில்விசாரணை லாசர் மாசில்லாமணியாபிள்ளை மகள் பாக்கியத்தைக் கலியாணம் முடிக்கபோகிறவர்தன் கூட என்சமுசாரம் பிள்ளைகளையும் அனுப்பிப்பின்பு நானும் போனேன்.



இரவில் எட்டு-மணிக்குக் கனம் பெரிய ஆபீஸ் அய்யாவர்கள் ஷையாருக்கு விவாகம் நிறை வேற்றினார்கள்.

உச-உ தன்டையார் குளத்தில் விசாரணைப்பிள்ளைக்கு நஞ்சை நிலங்கள் வாங்கும்படி என்மகன் மரியசவரிமுத்து வசம் உா ரூயுங் கொடுத்தனுப்பினார்கள்,

ஆகஸ்டு௴ கூ-உ மகியத்துக்குமுன் சுவிசேஷபுரம் மரியம்மாள் ஐந்தாவது பெண்குழந்தை பெற்றாள். அவள் தாயை அனுப்பினோம் அவர்கள் தாயாருமவடத்திலிருந்தார்கள். ய-உ நான் போய் ஷை எங்கள் அத்தையைக்கூட்டி வந்தேன், சமாரியாவுக்கு. யச-உ மரியசவரிமுத்துமவர்களும் வடக்குன்குளத்துக்குப் போனார்கள், திருநாளுக்கு.

யஎ-உ இன்னாசியம்மாளுக்குச் சுகமில்லாதிருந்தது. யகூ-உ யவள் தாய் சுவிசேஷபுரத்திலிருந்து வந்தாள்.

உக-உ மரியசவரிமுத்தும் அவர்கள் ஆத்தாளுமாக வந்தார்கள்.

உஉ-உ தம்மு முதலிக்குப் பழயகடனுக்கு ரூ கூஇ-க்கு ஒரு கண்டாங்கி வாங்கிக் கொடுக்க எழுதியனுப்பினேன், மதுரேந்திரம்பிள்ளைக்கு.

செப்தெம்பர்௴ யஉ-உ இலத்தூர் அக்காள் மிசேலும் தங்கச்சி அன்னம்மாளும் வடக்குன்குளத்தாரநேகரும் மணப்பாட்டுச்சுத் திருநாளுக்குப் போக வந்தார்கள். யரு-உ திரும்பவந்தவர்களுக்கு ஒருவேளை விருந்துக்கு ரூ க-க்கு அதிகஞ் செலவு. அவ்வளவு பேரும் பிள்ளையவர்கள் யசு-உ தங்கள் வீட்டுக்கு கூட்டிப்போனார்கள். இட்டம்புளியிலிருந்து மரியம்மாள் பேறுகாலத்திற்கு நம்முடைய வீட்டில் வந்திருக்கிறாள். இரண்டு நாளாய்ச் சபையார் ஒழுங்காய்ச் செபத்துக்கு வாராததினால் உய-உ காலையில் எல்லாரையுங் கூடி வரச்செய்து ஒழுங்குடம்படிக்கை செய்து பின்பு ஆராதனைசெய்தேன்.

உரு-உ குருவினத்தத்திலிருந்து அண்ணன் ஞானப்பிரகாசம் பிள்ளை வந்தார்.

உசு-உ பிள்ளையவர்கள் ஷை குழந்தைக்கு ஞானத்தகப்பன் தாயாயிருக்கும்படி வரச்சொன்னபடிக்கு உஎ-உ ராப்போசனத்துக்கு வருகிற சனங்களோடுகூட நானுஞ் சமுசாரமும் போனோம். இரவில் ஞானஸ்நானம். ஷை பிள்ளைக்கு மரியவியாகுலமென்றுபேர்கொடுத்து ஞானஸ்தானம் கொடுத்தது, கனம் சார்சென்றய்யர். உதவிக்காரன் நல்லமுத்துக்கு சமாரியாவிற் செபஞ்செய்ய அன்றைக்குத்தரவு. உஅ-உ நாங்கள் வந்தோம்.

அகஸ்டோபர்௴ ௨௳ கிறிஸ்துமார்க்கப்பிள்ளையை அஞ்ஞானவிதமாய்க் கலியாணமுடித்துக்கொடுத்த கைம்பெண் சின்னக்கண்ணுக்கு ரூ ௧ அபராதம் வாங்கி ஐயருக்கனுப்பினேன்.

௪௳ மதுரேந்திரம்பிள்ளை பெண்சாதி மரியம்மாள் ௨-வது பெண்குழந்தை பெற்றாள், தமிழ் புரட்டாசி௴ ௨௰௳.

௯௳ ஷை மதுரேந்திரம்பிள்ளை குருப்பட்டத்துக்குக் கல்விச்சாலையிற் படிக்கும்படி தீர்மானஞ் செய்தது.

௰௳ மரியசவரிமுத்து நேமத்துக்குப்போய் வந்தான்.

௰௪-௳ என் பெரியதகப்பனார் வியாகப்பன் செட்டியார் அச்சங்குளத்தில் மரித்ததாகவும் ஓலை வந்தது. ஷையார் தமிழ் புரட்டாசி௴ ௯௪-௳ மரித்தது. ௰௯-நாள் மோட்ச விளக்கு என்று ஓலை கொண்டுவந்த சக்கிலியர் இரண்டு பேருக்கும் சாப்பாடும் போட்டு துட்டு ௯ கொடுத்தனுப்பினோம்.

௰௫-௳ யோவான் தேவசகாயத்துக்கு சுரத்தினால் வருத்தம்.

௰௭-௳ வியாகப்பனுக்கு விளாப்புரத்தில் ஒரு புறப்பாடுண்டாய் சத்திரமிடப்பட்டது.

௨௧-௳ கனம் இரேனியூஸ் ஐயரவர்கள் சுவிசேஷபுரத்துக்குப்புதுசாய் வந்தார்கள்.

௨௪-௳ மதுரேந்திரம்பிள்ளை வந்து சமுசாரத்தையும் பிறந்த குழந்தையையும் பார்த்துக்கொண்டிரவு தங்கி ௨௫-௳ போய்விட்டது.

௨௮-௳ மரிய சவரிமுத்து சுவிசேஷபுரத்துக்குப் போனான்.

௨௯-௳ நல்லம்மாள்புரத்திற் புதுசாய்க் கட்டின கோவிலைப்போய்ப் பார்த்து வந்தேன்.

௩௰-௳ சம்பளக்கூட்டத்துக்குப் போனேன். அவ்விடத்தில் வந்திருந்த கனம் ஞானப்பிரகாசம்பிள்ளையவர்களிடத்தில் ௨-இராசா ௯-௯௧-ம் வாக்கியத்தின் பொருள் கேள்விக்குச் சரியாயுத்தரவு சொல்லித் தந்ததை யெழுதிக் கொண்டோம். கனம் ஐயரவர்கள் சபையிலிருக்கிற கைம்பெண்கள் இன்றொன்று எழுதிவைத்துப்படித்து வரும்படி எட்டு நாளைக்கொருதரம் படியும் பின்பு ஒரு சேலையுங் கொடுக்கும்படி உத்தரவு; மதுரேந்திரம்பிள்ளையும் முத்துசுவாமியாபிள்ளையும் கல்விச்சாலைக்கு முருகன்குறிச்சிக்குப் போக உத்தரவு. ௩௧-௳ சமாரியாவுக்கு வந்து கைம்பெண்களானவர்களுக்கு ஷை காரியங்களை யறிவித்து ௧, தீமோ. ௫. அதிகாரத்தை வாசித்துப் புத்தி சொன்னேன்.



நவம்பர்௴ ௪௳ என் கொழுந்தி தெய்வாயி குருவினத்தத்திலிருந்து சுவிசேஷபுரத்துக்கு வந்தாள், அவளும் பிள்ளைகளும், ௰௧-௳ சமாரியாவுக்கும் வந்தார்கள்.

௰௭-௳ சுவாமியடியான் றயிட்டர் வந்து மதுரேந்திரம்பிள்ளை பிறந்த ஊரும் வருஷமும் மாசமுந் தெய்தியும் நாளும்நட்சத்திரமும் ஞானஸ்நானம் பெற்ற வயசும் கொடுத்த குருவின் பேர்விபரமும் எழுதிக்கொண்டுபோனார். ௰௯-௳ இரவில் ஷையார் குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுத்து முத்துமரியவியாகுலமென்ற பேரிட்டார்கள். ஞானத்தகப்பன் நான்தான், ஞானத்தாய் என்சமுசாரமும் என் மகள் மரியம்மாளும், ஞானஸ்நானம் கொடுத்தது கனம் சார்சென்ற் ஐயரவர்கள். ௨௧-௳ ஷை தெய்வாயி வண்டிக்காரர் கூடப் பேய்க்குளம் வரையும்போய் ௨௨-௳ இட்டம்புளிக்கு வந்து சேர்ந்தாள். ௨௩-௳ மதுரேந்திரம்பிள்ளை சமான்களிற்சிலது வந்தது. ௨௭-௳ கனம் ஐயரவர்கள் சபையிலுள்ள பிள்ளைகளுக்கு நான் வசூரிவார்ப்பிக்கும்படிக்கு கத்தியுந் தந்து உத்தரவு கொடுத்தார்கள். ௨௮-௳ மதுரேந்திரம்பிள்ளை பாளையங்கோட்டைக்குப் போகும்படிகணக்கொப்புவித்து சம்பளம் வாங்க வரச்சொல்லி யுத்தரவு.

௨௯-௳ கனம் ஐயர் சமாரியாவுக்கு வந்து சிலருக்கு ஞானஸ்நானங் கொடுத்துப் போனார்கள், பின்பு நானிட்டப்புளிக்குப்போய் தெய்வாயியை மரியசவரிமுத்துகூட சிரிவைகுண்டத்துப் பாதைக்குப்போகும்படிக்குத் திட்டஞ்செய்து நானும்மதுரேந்திரம்பிள்ளை முத்துசுவாமியாபிள்ளையுங்கூட நன்னிகுளத்து வரையும் போய்த்தங்கி ௩௰-௳ காலமே யனுப்பிவிட்டு ஷை மதுரேந்திரம்பிள்ளையும் முத்துசுவாமியாபிள்ளையும் நானும் ஆலங்கிணற்றுக்கு வந்து மிராசுமுத்துக்குமாருசுவாமி முதலியாரைக்கண்டு பேசிக்கொண்டு சங்கரங்குடியிலிருக்கிற விசாரணை மாசில்லாமணியாபிள்ளையவர்கள் வீட்டிற் சாப்பிட்டு பின்பு இட்டம்புளிக்கு வந்து மீதியான சாமான்களையு மெடுத்துக் கொண்டு நேமத்து அத்தையையுங் கூட்டிக்கொண்டு சுவிசேஷபுரத்துக்கு வந்து பின்பு சமாரியாவுக்கு வந்தேன். ஆலங்கிணற்றிலிருந்த நமது பத்தாயமுங் கொண்டு வரப்பட்டது.

டிசம்பர்௴ ௧௳ கனம் ஐயரவர்களுத்தரவுப்படி இரண்டு பெண்குழந்தைகளுக்கு வசூரி குத்தினேன். பின்பு வடக்குன்குளம் தேவசகாயம் ஓலை வந்தது. விசேஷம், தன் தகப்பனார் சிரிவைகுண்டம் எனது தமையனார் மிக்கேல்பிள்ளையவர்கள் திருவனந்தபுரத்தில் தமது மூத்தமகள் மிக்கேல் அம்

மாள் வீட்டுக்குப் போனவர்கள், தமிழ் ௨௨-ஞ கார்த்திகைமீ ௰௯-உ வியாழக்கிழமை பேதி துவக்கி இரவில் ௰௭-நாளிகையளவில் மரித்துப் போனதாக. ஓலை கொண்டு வந்தவனுக்குப் பரியாற்றி படித்தட்டு ௧௪-யும் கொடுத்தனுப்பினேன். ௨-உ கொச்சி வெள்ளையம்பிள்ளை மகன் மூத்தவரும் கன்னவராயபிள்ளையும்வந்து சாப்பிட்டவுடனே வடக்குன்குளத்திலும் விஷபேதியுண்டாயிறந்தவர்களும் வருத்தமாய்க்கிடக்கிறவர்களுமுண்டென்று போய்விட்டார்கள்.

௪-உ சுவிசேஷபுரத்துக்குப் பாடத்துக்குப் போனேன். சுரமுண்டாயிருந்து ௯-உ சமாரியாவுக்கு வந்து ௮-உ சுவிசேஷபுரத்துக்குப்போய், தங்கை ௯-உ மரியம்மாளும் உடையத்தேவர் பெண்சாதியும் நானும் வடக்குன்குளத்தில் ஷை சிரிவைகுண்டம்தமையனார் தட்டிக்குப்போனோம். ௰-உ வழியில் தங்கி ௰௧-உ சுவிசேஷபுரத்தில் ஷை மரியம்மாளைச் சேர்த்து இரவிற் சமாரியாவுக்கு வந்தேன். ௰௮-உ குருவினத்தத்திற்குச் சிறியதாயைக் கூட்டிப்போன மரியசவரிமுத்து வந்தான் ௰௯-ம் நாள்.

௨௧-உ சுவிசேஷபுரத்துக்குப் பாடத்துக்குப்போனேன். அம்மான் குசைமரியாம்பிள்ளையவர்கள் வடக்குன்குளத்து வீடு நிலம் முதலானதை விலையாக்குகிறதாகக் கேட்டேன். இரவில் வீட்டிற்கு வந்தேன். என்சமுசாரத்துக்குத் தவாலை யெடுத்து மிகுந்த வருத்தமாய் ௨௨-உயும் வருத்தமுண்டாய் இரண்டுபிள்ளைக் கருப்போன்றது விழுந்ததாம். அப்பொழுது வீட்டிலிருந்துதவி செய்தது என்மாமியாரும் என்மருமகள் மரியம்மாளும். ஷை அம்மான் விளைகளையும் புளியமரத்தையும் ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைக்கு விலைக்கிரயமாய்க் கொடுத்து ரூ ௰௯-யும் வாங்கினதாகவும். ௨௩-உ மகளைப்பார்க்க வந்தார்கள். ௨௫-உ மகளுக்கு ரூ ௧, இன்னாசியம்மாளுக்கு ரூ ஒன்ணேஅரைக்கால். குசைமரியாளுக்கு ரூ காலேஅரைக்காலுக்கும் புடவைகள் வாங்கிக்கொடுத்தார்கள். ௨௬-உ மரியசவரிமுத்தையுங் கூட்டிப்போனார்கள் வடக்குன்குளத்துக்கு.

௩௧-உ சபையானாகிய வெள்ளைக்கண்ணுமவன் தமையனும் கள்ளர்களிடத்தில் வாழைக்காய் வாங்கி சந்தைக்குக்கொண்டு போகிற வழியில் மறவர் பிடித்து என்னிடத்தில் கொண்டுவந்து விட்டார்கள். அவர்கள் சபைக்கட்டு ஒழுங்கில்லாதவர்களானதால் ஷை காவல்காரருக்கு ஒப்புவித்தேன்.

இந்த வருஷமுடிவைக்காண என்னையும் என்சமுசாரங்குழந்தைகளையுங் காப்பாற்றின கிருபையுள்ள ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்,

---

34



## ௲௮௱௪௰௭-ம்௵ சமாரியாபுரம் உபதேசி சவரிராயன்.

சனுவரிமீ ௫-உ பாளையங்கோட்டைக்கு சங்கத்துக்குப் போனேன். கல்விச்சாலையில் மதுரேந்திரம்பிள்ளை முதலானவர்களையுங் கண்டு பேசிக்கொண்டேன்.

௯-உ பந்தயப்பிரசங்கம். முதலாவது மதுரேந்திரம்பிள்ளை. ௨-வது திருவரங்கநேரிஉபதேசியார். ௩-வது உதவி வி. ஆபிரகாமுபதேசியார். முன்சொல்லியபடி கனம் சார்சென்றஐயரவர்கள் கையினால் முதற் கெடியாரம் மதுரேந்திரம்பிள்ளை முதலாவது பிரசங்கத்துக்குக் கொடுத்தார்கள், முருகன்குறிச்சித் தேவாலயத்திற் சபைக்கூட்டத்தில். மற்ற இரண்டு பேருக்கு பின்னாலே கொடுக்கப்படுமென்றுஞ் சொன்னார்கள்.

௭-உ இராப்போசனம். இரவிற் பேதுருப்பிள்ளை பிரசங்கம். கனம் பெற்றிற்றையரவர்கள் சீர்மைக்குப்போறதாக அறிவித்துப் புத்திசொன்னார்கள். கனம் இரேனியூஸ் ஐயரவர்கள் குமாரன் சின்ன இரேனியூஸ் ஐயரவர்கள் இங்கே புதிசாய் வந்திருக்கிறதாகவும் அறிவித்துத் தமக்காகச் செபம் பண்ணும்படி கேட்டுக்கொண்டார்கள்.

௮-உ விடியற்காலம் நான் புறப்பட்டு வடக்குன்குளத்துக்கு வந்து கோட்டாத்துபதேசியார் மாசில்லாமணியாபிள்ளை இறந்த தட்டியவர் மச்சினர்களாகிய என் மச்சினர்களிடத்திலுங் கேட்டுக்கொண்டேன். ௯-உ புறப்பட்டு சமாரியாவுக்கு வந்தேன்.

௰௯-உ ஷை மதுரேந்திரம்பிள்ளை தமக்குக்கிடைத்தகெடியாரமுங் கொண்டு வந்தார்.

௰௬-உ நாலாந்தலாவுக்கு ஞானபூரணம்பிள்ளை தாயிறந்த தட்டிக்கு நானுமவரும் போய் வந்தோம்.

௰௯-உ சபையார் கலியாணத்துக்கு வேதக்காரனைக்கொண்டு கொட்டலாமென்றும் மற்ற அஞ்ஞானி கொட்டப்படாதென்றும் முக்கந்தன் மார்களிடத்திற் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள், கனம் சார்சென்ற ஐயரவர்கள். ௨௧-உ முதல் ௨௪-உ காலைவரையும் எனக்குச்சுகமில்லை. ஷை மதுரேந்திரம்பிள்ளை தான் கோவிலிற் செபஞ் செய்தார்.

௨௭-உ பட்டி பெருமாளென்றவன் கிறிஸ்துமார்க்கத்திற்சேர்ந்துபடிக்க ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் முன்பாக உடம்படிக்கைபண்ணினான்.

பிப்பரவரிமீ ௧-உ மரியசவரிமுத்து கனம் கார்வல்ஐயரவர்கள் சேகரத்துக்குப் போகும்படி கனம் சார்சென்றய்யரவர்கள் உத்தரவு வந்தது. சாயுங்

காலம் நாலாந்தலாவுக்குப்போய் விசாரணைவாத்தியாருக்கு மொய் ரூ இ கொடுத்து வந்தோம்.

௪-உ அம்மான் ஞானசமரியாம்பிள்ளையவர்கள் வந்து ௫-உ மரியசவரி முத்துக்குக் கொடுத்திருந்த பச்சைக்கம்பிவேட்டியும் வாங்கிக்கொண்டு ஷெயான் வசத்தில் கொடுத்த ரூ ௧-ம் வாங்கிக்கொண்டு கோபமாய்ப் போய்விட்டார்கள். ஷெ மரியசவரிமுத்து ௪-உமுதல் கனம் கார்வேல் ஐயரவர்களிடத்திற் சேர்ந்தான்.

௮-உ முன் மதுரேந்திரம்பிள்ளைக்குக் கொடுத்தகெடியாரம் இரவலாகவும் பட்டணத்திலிருந்து வந்த ஏ௩ ரூ...க்கடியாசத்தைக் கொடுத்தனுப்பி முந்தினதைத் திரும்ப வாங்கிக்கொண்டார்கள்.

௰௪-உ கனம் சார்சென்றய்யரவர்கள் உத்தரவுப்படி நீலன்மகன் தருமக்கண்ணுக்கு கலியாணத்துக்கு முதலாவது ஓலை கூறினேன்.

௰௭-உ மதுரேந்திரம்பிள்ளை கடாட்சபுரத்தித் சீவற்னம்மாளிடத்திற்குப் போனார். பின்பு மத்தியானத்தில் ஈ.ஈ. விசாரணை பேதுருப்பிள்ளை வீரகேரளம்புதூரில் ௰-உ மரித்ததாகக் கேட்டோம், விஷபேதி.

௨௰-உ மரியசவரிமுத்து காசிகோவிலுக்கு உபதேசியாராக அனுப்பப்பட்டான்.

௨௧-உ சாயுங்காலம் ௪-மணிக்கு தொட்டன்பட்டியிலிருந்து ஓலை வந்தது, எனது அம்மான் விசேந்திமுத்து செட்டியாரவர்கள் மரித்த செய்திக்கு.

௨௨-உ அப்பவிளை யூரிலிருந்த நமது கோவிலில் அகுசிப்படுத்தினவாடாக்களுக்கு பாரதுக்கு ரிப்போராட்டுச் செய்யப்பட்டது,

௨௪-உ சுவிசேஷபுரங் கல்விச்சாலைக்கு மதுரேந்திரம்பிள்ளை முதலானவர்கள் திட்டப்படிக்குப் போனார்கள். ஷெ மதுரேந்திரம்பிள்ளை சமுசாரங் குழந்தைகளை ௨௫-உ அனுப்பினேன்.

௪௭-௵ பிற்பாவரி௴ ௨௪-உ சுவிசேஷபுரத்துக்கு கல்விசாலையிற் மதுரேந்திரம்பிள்ளை முதலானவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். ஷெ ௨௫-உ மரியம்மாள் குழந்தைகளும் போனார்கள்.

மார்சு௴ ௧-உ தேருரு இன்னாசிமுத்துப்பிள்ளை வந்துபோனார். ௰௭-உ சாயுங்காலம் ௯-மணிக்குமேல் சுவிசேஷபுரம் பூலுக்கு ௫-வது பெண்குழந்தை பிறந்தது. இரவிற் சாமத்துக்கு மேல் விடிய ௰-நாளிகையில் வியாழக்கிழமை விடிய தமிழ் பங்குனி௴ ௪-உ அன்று கயிலாசம் பெண்சாதி நட்சத்திரம் தலைச்சன் ஆண்குழந்தை பெற்றாள்.



மார்சு௴ ௨-உ சுவிசேஷபுரத்தில் கொச்சி சின்னய்யாவிடத்தில் நல்லதம்பியாபிள்ளை என்மனையில் கிணா விதைக்க நீர் சம்மதிக்கப்படாதென்று சொல்லிவிட்டேன். ௪-உம் ௫-உம் பந்தயப் பிரசங்கமெழுதிக் கொடுக்க சகாயமுபதேசியாரிடத்தில் சங்கரங்குடியிருப்புக்குப்போய் வந்தேன்.

௬-உ சங்கத்துக்கும் பெரியகோவில் கட்டுவதைக்கும் கொடுத்தவர்கள் கொடாதவர்கள் பேரெழுதியனுப்பினேன், / ஐயரவர்களுத்தரவுப்படிக்கு மரியசவரிமுத்துப்பிள்ளைக்கு கனம் கார்வல் ஐயரவர்கள் உதவி சம்பளம் ௧-வது ரூ ௨ கொடுத்தார்கள்.

௰௩-உ நேமத்துக்கு அத்தை போகப்புறப்பட்டார்கள். சிலையுஞ் சாயஞ் சாய்ச்சிக் கொடுத்தோம்.

௰௪-உ ஓய்வுநாளாராதனைக்கு முன் மூக்கந்தன் வீட்டார் யாவரும் அடுத்த வீட்டுக்காரரிடத்திற் சண்டை பண்ணினார்கள்.

௰௭-உ சுவிசேஷபுரத்தில் ஆலைய சங்கங் கூடினது.

௨௨-உ விசையநாராயணத்து மறவர் மறுதலித்ததினாலவர்கள் பேரில் பிள்ளையவர்கள் பாரதுக்கு உத்தரவு வந்தது. முத்தாயிக்கும் பட்டி பெருமாளுக்கும் வழக்கு முடித்துத் தீர்ப்பெழுதி முடிந்தது. ௨௬-உ நீலன் மகள் பாக்கியத்துக்கும் இடையங்குடி புகழும்பெருமாள் மகனுக்குஞ் சுவிசேஷபுரத்தில் விசாரணைப்பிள்ளை யவர்களால் கலியாண முடித்தது. ௩௰-உ ஷெ நீலன் மகன் தருமக்கண்ணுக்கு ஆசீர்பாதபுரஞ் சேகரம் வஞ்சிகுடியிருப்பு விசுவாசநாடான் மகள் பாக்கியத்துக்குங் கலியாண முடிக்கப்போறபோது காயுதத்தைப் போட்டுவிட்டுப் போனான். ௩௧-உ கலியாணம் புதன்கிழமை காலையில். சாயந்திரம் டபில் ஞானப்பிரகாசம்பிள்ளை வந்தார், முதனூரிலிருந்து. இலத்தூர் சவரிமுத்துசெட்டியார்மகன் செவ்வல்பட்டியில் காலில் கட்டை குத்தினதின் பேரில் சன்னி வந்து செத்துப்போனதாகவும் சொன்னார்.

எப்பிரல்௴ ௧-உ கோவிற்கூட்டி மேசையைப்பிள்ளைகள் தள்ளி உடைத்ததை யில்லையென்றதினால் தள்ளி வேறு கயிலாசத்தைநியமித்தது. ௰௨-உ மூக்கந்தனும் மக்களும் நீலன் தருமக்கண்ணை யடித்ததை விசாரிக்கும்படி ஐயங்கண்ணு நாடானுக்கு எழுதினேன்.

௰௫-உ இடையங்குடியில் பெரிய கோவிலுக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. அதுக்குத்திரியேகர் ஆலயமென்ற பேர்.

௨௨-௳ சுவிசேஷபுரத்திலிருந்து சுவாமியடியானை யவன் மதினிக்கு சுகமில்லாததற்குதவி செய்ய எழுதினேன், வந்தாள்.

௨௮-௳ பெரியவனுக்குப் பேதி யெடுத்துவருத்தப்பட்டுப்பிழைத்தான்: மரியசவரிமுத்துக்குச்சொக்கலிங்கபுரத்துக்கு உபதேசியாக உத்தரவு. ௩௰-௳ முதலாவது ரேனியுஸ் ஐயர் சம்பளங் கொடுத்தார்.

மெய்௴ ௧-௳ சனம் இரேனியூஸ் ஐயர் புதுசாய் வந்து பள்ளிப்பிள்ளைகள் சருவ சோதனை. சாயந்திரம் சமாரியாவுக்கு வந்தது. விசாரணைப்பிள்ளையவர்களுங் கூட வந்தார்கள்.

௩-௳ இரண்டாம் பட்டம் பெறக் கொழும்புக்குப் போனார்.

௭-௳ பாளையங்கோட்டை சின்னத்தம்பியாபிள்ளை மகன் இராயப்ப பிள்ளைக்கு இரண்டாந்தாரமாக இன்னாசியம்மாளைக் கட்டிக்கொடுக்கச் சம்மதித்தோம்.

௰௭-௳ நேமத்திலிருந்து ஓலை வந்தது, ஷெ ௯-௳ தமிழ் ௲௨௨-ம்ஞு சித்திரை௴ ௨௮-௳ ஞாயிற்றுக்கிழமையில் என்மாமியாரவர்கள் மரித்ததாக. ஷெ தேட்டிக்கு ௨௯-௳ என் சமுசாரத்தை யனுப்பினேன்.

௨௮-௳ விசாரணை வாத்தி ஞானபூரணம்பிள்ளை தம்பி கலியாணமொய் ௯ ரூ கொடுத்தது.

௩௰-௳ சமாரியாவுக்கு ரா-ஸ்ரீ விசாரணைப்பிள்ளை வந்தார்கள். ஆராதனைக்கு முன் சாமிதாச நாடானேவுதலினால் முத்தன் பறையன் வார்த்தை பேசினான்.

ஜுன்௴ ௯-௳ சுவிசேஷபுரத்தில் யோவான் அப்போஸ்தலர் பேரால் கட்டப்பட்ட பெரியகோவிற் பிரதிஷ்டை. கூடிய ஐயன்மார் ௰௨. விசாரணை உபதேசிமார்கள் ௫. சுவிசேஷபுரம் இடையங்குடி மெஞ்ஞானபுரம் ஆசீர்வாதபுரம் இந்தச்சேகரம் உபதேசிமார் வாத்திமார் சபையார்கள் ஆராதனை ராப்பேர்சனமுங் கூடிய சனங்களுக்கு விருந்துஞ் செய்யப்பட்டது. இரவில் சில வாணவேடிக்கையும் நடந்தது.

௰௬-௳ மலையாளத்துக்குப்போன என் சமுசாரம் வந்தாள்.

௩௰-௳ முருகன்குறிச்சி சங்கத்துக்குப்போனேன். பந்தயப்பொருள்பிரசங்கத்திற் சிலர் கள்ளப்பிரசங்க மெழுதினவர்களில் நாலுபேரை உடனே கடிந்து சஸ்பெண்டு செய்தார்கள். மற்றவர்களைப் பின்பு சோதித்து சந்தோஷங் கொடுக்கிறதென்றுத்தரவு கொடுத்தனுப்பினார்கள்,



சுலாய்௴ ௬-௳ சிரிவைகுண்டம் மாப்பிள்ளை வியாகப்பபிள்ளை செட்டிமூலம்பட்டியிற் கானா வீட்டுக்குப் பனைங்கட்டைக்காக வந்தார்.

௰௧-௳ பிற்காகச்சேரிக்குப்போய் பறை முத்தன் பேரில் பாராதுக்குச் சாட்சிக்குப்போய் வாக்குமூலம் எழுதிவைத்துச் சாயுங்காலம் வடக்குன்குளத்துக்குப்போனேன்.

௰௫-௳ சமாரியாவுக்கு வந்தேன்.

௨௫-௳ இன்னாசியம்மாளைப் பேசி வந்தார், கடை மாசில்லாமணியாபிள்ளை. ௨௬-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் ௨௭-௳ விசாரணைப்பிள்ளை விசாரணை வாத்தி ஞானபூரணம்பிள்ளை டாக்கிட்டர் அந்திரோயாப்பிள்ளை இவர்கள் கூட இருந்து மாப்பிள்ளை பத்து விராகன் நகைபோடுகிறது கலியாணச் செலவு பாதியுங் கொடுத்துச் சமாரியாவிற் கலியாணஞ் செய்துகொண்டு போகிறதென்று தீர்மானித்து வீட்டுக்கு வந்தேன்.

ஆகஸ்டு௴ ௨-௳ கல்விச்சாலையிலிருந்து, மதுரேந்திரம்பிள்ளை வந்து ௩-௳ அவர் சமுசாரத்தை யவர்கள் தகப்பனார் வீட்டுக்கு குருவினத்தத்துக்கு அனுப்பினோம்.

௰௨-௳ ஷெ தம்பி வடக்குன்குளமுதல் மலையாளம் வரையும் போய்ப் பாக்கு வைத்து வரும்படி யனுப்பினோம்.

௰௫-௳ முதல்ஓலை கூறினோம். ௨௭-௳ நான் வடக்குன்குளத்துக்குப் போனேன் மதுரேந்திரமும் வந்தது, இருவரும் அழைப்புச்சுருளும் வைத்து ஞானுப்பிள்ளைக்கு மாத்திரம் சுருள்வைக்கவில்லை. ௨௯-௳ தீத்தான்பட்டி அத்தான் ஞானப்பிரகாசம்பிள்ளை வந்தார். ௩௰-௳ மரியசவரிமுத்துமவரும் பாக்கு வைக்கும்படி கருசக்காட்டுக்குப் போனார்கள்.

செப்தெம்பர்௴ ௨-௳ மதுரேந்திரம்பிள்ளை விடுதலை நாள் முடிந்தது.

௬-௳ சனம் இரேனியூஸ்ஐயரும் அம்மாளும் வந்திருந்ததை முதலாவது காணும்படி உபதேசிமாரெல்லாம் போனோம்.

௭-௳ மரியசவரிமுத்து வடக்கே யிருந்து வந்தான்.

௮-௳ பெண்ணழைத்துக்கொண்டு சுவிசேஷபுரத்துக்குப்போய் சனம் சார்செந்துஐயரவர்களால் பத்துமணியிற் கலியாணம்முடிந்தது: ௰௨ மணியில் சமாரியாவுக்கு வந்து சேர்ந்தோம். வடக்குன்குளத்தாரும் வந்தார்கள். சிரிவைகுண்டத்துப்பிள்ளை வீட்டாரும் மக்கள் மருமக்கள் மாத்திரம் வரவில்லை குருவினத்தத்துப் பெரியய்யா மக்கள் மருமக்கள்மாரும் வரவில்லை. பாளையங்கோட்டையிற் சிலரும் கொம்பாடிக் கரையாளபிள்ளை மச்சினும் சவரிமுத்து

லத்துவயித்தியநாதபிள்ளைபோனார், வயித்தியநாதபிள்ளையும் வந்தார், தொட்டன்பட்டி ஞானப்பிரகாசம்பிள்ளை வீட்டார் ஷையூர் மிக்கேலு செட்டியாரும் வரவில்லை. ௰-௳ சிலர் தவிர மற்ற யாவரும் போனார்கள். சாயுங்காலம் பெண் மாப்பிளளை மற்றவர்களுஞ் சுவிசேஷபுரத்திற் தங்கி மறுநாள் போகும்படி யனுப்பினோம். மரியசவரிமுத்தும் அன்னம்மையையுங் கூட அனுப்பினோம்.

அகஸ்டோபர்௴ ௧-௳ வனா யவட்டத்திலிருந்து வந்தாள்.

௩-௳ மரியாம்பிள்ளையும் முத்துப்பிள்ளை மகன் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வந்து இருந்து ௪-௳ போனார்கள்.

௫-௳ டோனாவூருக்கு கனம் சார்சென்றய்யர்கூட மதுரேந்திரம்பிள்ளை போனாராம்.

௬-௳ வனாயும் இவட்டத்திலிருந்த அன்னம்மையையும் அருளம்மாளையுஞ் சுவிசேஷபுரத்துக்கு அனுப்பினோம்.

௩௰-௳ சபையானையிருந்த சித்திரபுத்திரன் இன்று முதல் வேதமில்லையென்று பாதிரியாருக்குச் சொல்லுமென்றான்.

நவம்பர்௴ ௫-௳ சுவிசேஷபுரத்துக்குப்போனேன். மதுரேந்திரம்பிள்ளை குழந்தைக்குக் காலில் ஒரு வியாதியாயிருந்ததைப் பார்க்கும்படி.

௰௯-௳ வடக்குன்குளத்திலிருந்து ஞானுப்பிள்ளை மகளுக்குக் கலியாணமென்று வியாகப்பமுதலிவசம் பாக்கு வந்தது.

௨௰-௳ பெரியண்ணாவி மகன் மூத்தபிள்ளை யென்று பேர் வழங்கியமதுரேந்திரம்பிள்ளை யிறந்து போனதாகவும் ௨௧-௳ அவர் மகன் வாசலுபதேசியார் சவரிமுத்துப்பிள்ளை சொக்கன்குடியிருப்பிலிருந்து சாலைப்பாதை போகிறதாகக் கேள்வியானோம். மத்தியான ஆராதனையில் ஷை சித்திரபுத்திரன் பலவிதமாய் அலப்பினான். அதற்கிசைவாய் ஞானவொழி முக்கந்தனும் பேசினான், இராவிலவன் மக்களிடத்திற் சொன்னேன்.

௨௯-௳யில் மதுரேந்திரம்பிள்ளை ஐயர் மேசையிற் சேர்ந்து தேத்தண்ணீர் சாப்பிட்டாராம். என் பெரிய தகப்பனார் தருமநாதபிள்ளை பெண்சாதி மரிகருதம்மாள் மரித்ததாக ஓலை வந்தது.

டிசம்பர்௴ ௩-௳ முத்துசுவாமியாபிள்ளைக்குத் தலைப்பிள்ளை பிறந்து ஐந்தாம் நாளிறந்ததாகக் கேள்விப்பட்டேன்.

௯-௳ மெஞ்ஞானபுரம் பெரியகோவில் கட்டிப்பிரதிஷ்டை செய்யப்பட்டது. நான் போகவில்லை.



௰௪-௳ விசாரணைப்பிள்ளை யவர்கள் வந்து இசக்கிப்பிள்ளைக்கு மவன் பிள்ளைகளுக்கு மவன் மாமனிடத்தில் கிலபனை விட்டுக்கொடுக்கும்படி பேசி முறியுடம்படிக்கையும் செய்து கொடுத்தார்கள்.

௰௩-௳ கயிலாசபுரத்துபதேசியார் புதூரிலிருந்த தேவசகாயம்பிள்ளையும் மரியசவரிமுத்துப்பிள்ளையும் புதுக்கோட்டையிற் சோதனைக்குப்போனார்கள்.

௰௫-௳ சுவிசேஷபுரத்திற்குப் போனேன். அச்சங்குளம் அண்ணன் சவரிமுத்துப்பிள்ளை வந்ததும், வடக்குன்குளம் ஞானேந்திரம்பிள்ளை மரித்துப்போனதாகவும் தங்கம்மை மகள் கைம்பெண் அன்னம்மை பெற்றிருந்த ஆண்குழந்தை பேனாய் கடித்திறந்ததாகவும் செய்தியென்று மரியம்மாள் சொன்னாள்.

௨௧-௳ புதூருக்குப்போய் ஷை தேவசகாயம்பிள்ளையிட்டத்திலு மவர் மனைவியின் தகப்பனார் ஆசையாபிள்ளை இறந்த துட்டி கேட்டு வந்தேன்.

௨௩-௳ இவடத்தில் வந்திருந்த ஞானமுத்துபதேசி தன் பிள்ளைக்கு அவஸ்தை ஞானஸ்நானங் கொடுக்கவேண்டு மென்றானது சற்சபை மிஷியோன் சங்கத்தாருக்குள் வழக்கமில்லை யென்றேன். அந்தக்குழந்தை சாயந்திரம் மரித்துக் கோவிலுக்குக் கிழ்புறத்து விளையில் வெலிக்கலாயிற் புதைக்கப்பட்டது.

௩௧-௳ வடக்குன்குளத்தில் சங்கறுசேரியிலிருந்து மாமனார் ஞானேந்திரம்பிள்ளை துட்டிக்கு வந்த மருமகனென்று இரவிற் பேதியிலிறந்ததாகக் கேள்வி, சாயுங்காலம் அத்தான் கிழாக்குளத்துப்பிள்ளை வந்தவர் நித்தான்பட்டித் தம்பி தேவசகாயம் மகன் மூத்தவன் பேதியினாலிறந்ததாகச் சொன்னார். குருவினத்தத்து சஞ்சீவிக்குங் குழந்தை யிறந்ததாகவும்.

௲அ௱௪௰அ௵ ஜனுவரி௴ முதல்

க-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் கனம் சார்சென்றையரவர்களையும் கனம் இரேனியூஸ் ஐயரவர்களையும் ஈ.ஈ. விசாரணைப்பிள்ளையையுஞ் சந்திப்புவைத்துக்கண்டு மத்தியானங் கோவிலிற் தரும சங்கங்கூடின பின் கனம் இரேனியூஸ் ஐயரவர்கள் உபதேசி உவாத்திமார்களுக்கும் தனிமையாய்ப்புத்திசொல்லி அனுப்பினார்கள். விசேஷமாயவர்கள் சொன்னது ஒவ்வொருவரும் இரவில் நித்திரைசெய்யுமுன் தனித்துத் தன் வேலைகளையும் பராபரனுக் கேற்ற வைகளையும் அவருக்கு விரோதமாய்ச் செய்தவைகளையும் தனக்கொப்புவித்தவேலைகளைஒழுங்காய்ச்செய்ததையுஞ் செய்யாததையுங்குறித்துத்தியானிக்கவும் படிக்கிற பாட்டுகளை கட்டாயமாய்ப் படியாமல் தனக்குப் பிரயோசனத்துக்காகவும் சபையாருக்குப் படித்துக்கொடுப்பதிலும் பள்ளிப்பிள்ளைகளுக்கும் படிப்பிப்பதிலுஞ் சுறுசுறுப்பா யிருக்கவேண்டுமென்பதே பிரதான உபதேசம். பின்பு நானும் பிள்ளைகளுஞ் சமாரியாபுரத்துக்கு வந்து மாலைச்செபம்.

ங-௳ வடக்குன்குளம் சின்னய்யா திவ்வியானந்தம்பிள்ளையவர்கள் வந்தார்கள். அவர்கள்கடனுக்கு. சேருவைகாரன்பட்டி அத்தான்ஞானப்பிரகாசம் பிள்ளை இன்னாசியம்மாள் கலியாணத்துக்கு அழைப்பு சுருள் வைத்ததக்கு ௲ வ கொடுத்துடன் கூட ௲ மாகாணியும் கொடுத்தனுப்பினேன். கடன் தீர்ந்தது.

ச-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் அடவுவைத்து ௲ உ-ம் வாங்கிக்கொண்டு மற்றுஞ் சாமான்களுங் கூடக்கொண்டு மதுரேந்திரம்பிள்ளையுங் கூட நானும் பாளையங்கோட்டைக்குப் போய்ச் சேர்ந்து இன்னாசியம்மாளுக்கு முதலாவது தைமீ௴ப்படி யென்று கொடுத்தோம்.

ரு-௳ சங்கம். அவ்விடத்தில் விஷவியாதியினாற் சிலர் இறந்தகினாற் சங்கத்துக்கு அனேகர் வரவில்லை. சாயந்திரம் ஈ.ஈ. விசாரணைப்பிள்ளையவர்களுக்குக்காயிதம் வந்தது. திசையன்விளையில் நமதுவீட்டில்க் கிழாக்குளம் மதுரேந்திரம்பிள்ளை விஷவியாதியாய் வந்து கிடக்கிறதாகச் செய்தி கேட்டு ஷை என் மகன் மதுரேந்திரம்பிள்ளையும் நானும் உடனே புறப்பட்டு சா-௳ மதியத்துக்குமேல் வந்து சேர்ந்தோம். ஷை அத்தான் மதுரேந்திரம்பிள்ளைக்குச் சுகமாயிற்று. சபையானுதவியில்லை, ஒரு அஞ்ஞானி வாணியன் மாத்திரம் பெண்பிள்ளைகளுக்கும் வயித்தியனுக்கு முதவியாயிருந்தான் நாங்கள் வருமுன்.

எ-௳ முக்கந்தன் விளை வியாச்சியத்துக்கு கனம் ஐயரவர்களுக்கு எழு



தினேன். சாயந்திரம் ஷை கனம் இரேனியூஸ் ஐயரவர்களும்வந்து சந்திப்பார்த்துப் போனார்கள்.

அ-௳ மரியசவரிமுத்துப்பிள்ளை பாளையங்கோட்டையிலிருந்து வந்தான். அவனைப் புதூரிலிருந்து தருவையில் மேல ஊருக்குப்போக உத்தரவு வந்தது. ௯-௳யும் ௰ச-௳யும் ஷை ஊருக்குப்போய்ச்செபம்பண்ணிவந்தான். ஷை கிழாக்குளத்துப்பிள்ளையும் அவர்கள் மகளுஞ் சுவிசேஷபுரத்துக்குப் போனார்கள்.

௰உ-௳ தமிழ் தைமீ௴ப்பிறப்பு. இன்னாசியம்மாளும் மாப்பிள்ளையும் மறுபடியழைத்துவந்தார்கள் ௰ங-௳யில்- ௰ச-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய்ப்பிள்ளையவர்கள் வீட்டாரையும் குழந்தைகளையும் அழைத்ததற்கு போக்குச் சொல்லிவிட்டார்கள். ௰அ-௳ ஷை மரியசவரிமுத்துப்பிள்ளைக்குமுதுமொத்தம்புளிக்கு உபதேசியாக உத்தரவாயிற்று. ௰கூ-௳ மறுபடி வந்த மாப்பிள்ளையும் பெண்பிள்ளைகள் முதலானவர்களையும் அனுப்பிவிட்டோம். அன்று கனம் சார்சென்றய்யரவர்களுஞ் சுகத்துக்காக மலையாளத்துக்குப்போனார்கள்.

உஉ-௳ ஓய்வுநாள் மீறி வேலைசெய்த சபையான் ஒருவனுக்கு அபராதம் பத்து பைசு.

பிற்பரவரி௴ ௩-௳ சனப்பயிரொடுப்புக்கு நம்பர் கணக்கப்பிள்ளை வந்தெழுதினார். அ-௳ அணைக்கரைத்தொம்மைப்பிள்ளை தாயார் இறந்ததான துட்டி கேட்வரப் போய் வந்தேன்.

௰உ-௳ என்சமுசாரத்துக்குப் பேறுகால் வருத்தந் துவக்கிற்று. ௰ங-௳ சேமத்து சுவாமியடியாள் வந்தாள். ௰ச-௳ சுவிசேஷபுரத்துக்கு அவள் மகன் அன்னம்மையை மரியம்மாளுக்கு பிள்ளை யெடுக்க உதவிக்கனுப்பினோம். ஷை மரியம்மாளிவடத்துக்கு வந்திருந்தாள். ௰கூ-௳ சாயந்திரம் ரு மணிக்கு அவள் தாய் ௰ச-வது ஆண்குழந்தை பெற்றாள். உக-௳ மரியம்மாள் சுவிசேஷபுரத்துக்குப் போனாள்.

உங-௳ கனம் ஐயரவர்களிடத்தில் மூன்றுநாளுக்குத்தரவு பெற்று வடக்குன்குளத்துக்குப்போய் அவ்விடத்தில் டாக்கிட்டர் தேவசகாயம் பிள்ளையிடத்திலும் அவர் மாமியாரிடத்திலும் ஷையார் மாமனார் கொத்துவால்ப்பிள்ளையிறந்த துட்டியும் ஷை குழந்தை யிறந்ததும் பின்னும்சமதுறவின் முறையார்கள் வீடுகளிலும் எழு குழந்தைகளிறந்த துட்டியுங் கேட்டு பெரிய ஆண்பிள்ளைகளும் ரு பேரிறந்தார்களாதுவும் மூன்று மாசத்துக்குள்தான் அதையெல்லாம் விசாரித்துக்கொண்டு உரு-௳ இன்னாசிமுத்துப்பிள்ளை வீட்டில் வைத்திருந்த பெரிய பெட்டகத்தையும் கூலியாள்வசத்தில் எடுத்துக்கொண்டு நானும் என்

னகன் மதுரேந்திரம்பிள்ளையும் காலையில் அந்தை மரியசுந்தரி யென்றவர்கள் வீட்டிற் சாப்பிட்டுச் சமாரியாவுக்கு வந்தோம். ஷை மதுரேந்திரத்துக்குக் கல் விச்சாலை விடுமுறை முடிந்து ௨௭-௳ சுவிசேஷபுரத்துக்குப் போனார்.

௨௯-௳ சபையான் வெள்ளைக்கண்ணுங் கூசாலிப்பெருமாளுங் களவுசங் கதியினாற் கோட்டுக்கனுப்பப்பட்டார்கள்.

மார்ச்சுமீ ௰-௳ சத்தியநகரத்திலிருந்து ஏசுவடியான் மூத்தமகன்வேத நாயகத்துக்குக் கலியாணமென்று பாக்கு வெத்திலை அமுதுபடி கோழியெல் லாங்கொண்டு வந்தான். ௰௩-௳ அனுப்பினோம்.

௰௫-௳ வீட்டிற் பலவித மனஸ்தாபம் நேரிட்டதினால் எங்கேயாவது போய்விடுகிறதென்று சிலதூரம்போய் யோசித்துத் திரும்பினேன்.

௰௭-௳ நேமத்துசுவாமியடியாள் சேலை களவு போனதுக்குப்பதில் வா ங்கிக்கொடுத்தேன்.

௰௯-௳ அதிசயபுரத்துக்கு ராப்போசனத்துக்குப் போனோம். அமிர்த நாயகமுங்கூட. அவன்முந்தின வருஷத்துச் சங்கப்பணங் கொடாததுக்கு கனம் இரேனியூஸ் ஐயரவர்கள் அவனை விசனப்பட்டார்கள்.

௨௧-௳ ஷை சுவாமியடியாள் சுவிசேஷபுரத்துக்குப் போனாள். அவள் மகள் நம்மிடத்தில்தானிருக்கிறது. இரவில் ஷை கனம் ஐயரவர்களால் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம். நமது குழந்தைக்கும் ஞானஸ்நானங் கொடு த்து தருமநாத சஞ்சீவியென்றுங் கொடுத்தது.

௨௫-௳ வடக்குன்குளத்திலிருந்த வீட்டைத் தனதிலெடுத்துக்கொண்டு உன்தமையனார் பெண்சாதிக்கு ௫௲ கொடுத்துவிடென்று சின்னய்யா கொச் சிப்பிள்ளை எழுதினதுக்குச் சம்மதித்து பதிலெழுதியனுப்பினேன். *

---

* எங்கள் மதினி சவரியம்மாளிடத்தில் எழுதி வாங்கின உடன்படிக் குச் சரியான நகல்.

௲௮௱௪௮ ஆம்௵ அக்டோபர்மீ ௰௨-௳ வள்ளியூர்த்தாலூகாச் சேக ரஞ் சமாரியாபுரத்திலிருக்கும் என் கொழுந்தனார் சவரிராயபிள்ளைக்கு ஒட் டப்பிடாரந்தாலூகாச் சேகரம் செவ்வல்ப்பட்டியிலிருக்கும் ஷை தமையனார் சவரிமுத்துப்பிள்ளை பெண்சாதி சவரியம்மாளேன் உடம்படிக்கை பணப் பற்று ரசீதெழுதிக்கொடுத்தபடி என்னவென்றால் என் புருஷன் ஷை சவரி முத்துப்பிள்ளை இறந்துபோனபின்பு எனக்கு ஆண்குழந்தையில்லாதபடியினா லே என்தகப்பனார்எனக்காக என்புருஷனுக்குக்கொடுத்த மடிச்சீலைப்பொன் மற்றவகையறுக்கூடியதுகை பொன் பதினெட்டுபணம் அரையேஅரைக்கால் க்கு ஷை வள்ளியூர்த்தாலூகா வடக்குன்குளத்தில் என் புருஷனும் நீருங்குடி



௨௭-௳ மதுரேந்திரம்பிள்ளை விடுமுறை முடிந்ததினால் சுவிசேஷபுரத் துக்குப் போனார்.

௨௮-௳ பாளையங்கோட்டையிலிருந்து இன்னாசியம்மாளைப் பேறுகாலத் துக்காக ௭-மீ தில் அழைத்து வந்தது சுவிசேஷபுரத்தில்ச் சிலநாள் அக்கா ளிடத்திலிருந்து,

ஏப்பிரல்மீ ௭-௳ சமாரியாவுக்குவந்தாள். பின்பு நான் பாடமுறைக்குப் போனேன். பிள்ளையவர்களிடத்தில் ஒளிமுத்து முக்கந்தன் சாணூங்குளம் ஐய னடியான் முக்கந்தன் இருவர் வியாச்சியங்களையும் தீர்ப்புச்செய்யக் கேட்ட போதவர்கள் ஷை ஒளிமுத்து முக்கந்தன் மகள் என் தீர்ப்பை அங்கிகரிக்கா மலும் நியாய உத்தாரமும் வாங்காமல் ஆனைகுடியிருப்புக்குப் போனதினால தினாலவனைச் சபைக்குப் புறம்பாக்கவேணுமென்றார்கள்.

௯-௳ மரியம்மாளுக்கு உதவி செய்யும்படிக்கு சுவிசேஷபுரத்துக்கனுப் பினோம்.

௰௨-௳ வடக்குன்குளத்திலிருந்து தம்பு முதலியார் பழையகடனுண் டென்று வந்தார். முன்னமேயது தீர்த்து ௫௲ ௬௯-க்குப் பெரும்பனை யூரில் உம்முடையதம்பி கலியாணத்துக்கு கண்டாங்கிவாங்கிக்கொடுத்துத் தீர்ந்ததே யினியுண்டென்று வந்தால் கொடுத்தவரிடத்திற் போய் வாங்கிக்கொள்ளு மென்றேன். உடனே சாப்பிடாமற் சொல்லாமற் போய்விட்டார்.

௰௫-௳ மரியசவரிமுத்துப் பிள்ளையவர்க ளத்தானிடத்திற் போய் ஒரு

---

யிருந்த வீட்டின் பேரிலும் மனையின்பேரிலும் அடமான அவதிக்கிரைய முறி எனக்கெழுதித்தந்து நானுங் குடியிருக்கும்போது ஷை பத்திர வாய்தாவில் பணங்கொண்டுவந்து கட்டினதற்கு நான் குடியிருக்கிறதற்கு வேறுவீடு திட் டஞ்செய்து கொண்டு ஷை பணத்தைப் பத்திக்கொள்ளுகிறேனென்று நான் சொல்லியிருந்தபடிக்கு இப்போது ஷை வீட்டில் தமக்குச்சேரவேண்டிய சா மான் முதலானவைகள் என் மாரிபத்திலிருந்ததற்கும் ஷை வீட்டுமேல்கூரை முழுவதும் ஷை வீட்டுச்சாமான் வீட்டிலிருக்கிற சகல நிலையுங் கதவுகளும் ஷை பொன் ௰௮ பணம் அரையே அரைக்காலுக்கு நான் கிரையமாக ஒப்புக் கொண்டு வாங்கிக்கொண்டபடியினாலே ஷை மனையைத் தொட்டு எனக்கு யா தொருசம்பந்தமுமில்லை. நீரெழுதித்தந்த அவதிக்கிரைய முறி என்னிடத்தில் ஆசிரில்லாதபடியால் ஆசிர் ஆன உடனேதந்து போகவேணுமெனவும். இப்படிச் சம்மதித்து என்மனராசியின் இந்த உடம்படி பணரசீதெழுதிக்கொடுத்தேன், என் கொழுந்தன் சவரிராயபிள்ளைக்குச் சவரியம்மாளேன்.

தற்குறி——சவரியம்மாள்.
சாட்சி நல ஞானப்பிரகாசப் பிள்ளை.
டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை.
கைவெழுத்து சிறிவைகுண்டம் தேவசகாயம்பிள்ளை;

சட்டை வேண்டும் என்று கேட்டதாகவும் ஒரு சட்டை கொடுத்து உங்களுக்கு சுறணையில்லையாவென்றுஞ் சொன்னதாகவும் வந்து சொன்னான். அவனை நான்கோவித்தேன். அவன் அவர்கள் சொல்லுக்கென்னவென்றான்.

௰௯-௳ வடக்குன்குளத்துச் சனங்கள் மணப்பாட்டுத் திருவிழாவுக்குப் போகவந்தவர்கள் தம்முடைய வீட்டுக்குவந்துபோனார்கள். கூடவந்த தொட்டன்பட்டி அண்ணன் ஞானப்பிரகாசம்பிள்ளை சந்தைச்சாலையிலிருந்தார். நான் போய் வாவழைத்து மந்தப்பாதைக்கே போய்விட்டார்.

௨௧-௳ பாளையங்கோட்டை மாப்பிள்ளை இராயப்பபிள்ளை வந்தார்கள். ௨௯-௳ சுவிசேஷபுரத்தில் கர்த்தருடையபந்திக்கு எல்லாரும்போனோம். ஷை மாப்பிள்ளை பாளையங்கோட்டைக்குப் போனார்கள் ௨௪-௳ காலையில். நாங்கள் சமாரியாவுக்கு வந்தோம்.

மெய்மீ ௯-௳ திருச்செந்தூருக்குப்போனேன், ஏனென்றால் கல்விச்சாலையிற் பட்டத்துக்குப்படிக்கிற என்மகன் மதுரேந்திரம்பிள்ளை சீனிவாசகம் பிள்ளை கல்லத்திக்கிணறு மிக்கேல்உபதேசியார் இந்த மூவருக்கும் ஞானஸ்நானங் கொடுத்தவர்கள் கணக்குக்கிடையாததினால் பிறந்தமாசந் தெய்தியில்லையென்றதினால் ஷைமானுக்கர் மூன்றுபேருக்கும் ஞானஸ்நானங் கொடுத்திருக்கிறதென்றதுக்குசத்தியவாக்காகத் திருநெல்வேலியாஸ்டாண்டுகலெக்கட்டராகிய மகா-௱-ஸ்ரீ தாம்சன் துரையவர்கள் கச்சேரியில் ௰-மணிக்கு எழுதிவைக்கும்படிக்கு ஷை சீனிவாசகம்பிள்ளை தமையனார் மாசில்லாமணியாபிள்ளையும் ஷை மிக்கேல் உபதேசியார் தகப்பன் அருளப்பனென்பவரும் ஷை மதுரேந்திரம் பிள்ளை தகப்பனாகிய சவரிராயனும் போய்ச்சேர்ந்து நானெழுதிவைத்த விவரம். வடக்குன்குளம் சவரிராயபிள்ளையின் மகன் மதுரேந்திரம் பிள்ளையும் சற்சு மிசியோனைச் சேர்ந்து இப்பொழுது திருநெல்வேலிச் சற்சு மிசியோன் சங்கத்தைச்சேர்ந்த கல்விச்சாலையிற் படித்துவருகிற மதுரேந்திரமாகிய இவர் ௲௮௱௨௰௨-ம்௵ பிற்பரவரிமீ ௰௯-௳பிறந்து அந்தவருஷத்தில் இப்பொழுதவ்விடத்திலிருக்கிற உரோமான் கோவிலில் பிரஞ்சிஸ்கு குருவினால் ஞானஸ்நானம் பெற்றாரென்றும் அவர்தகப்பனாகிய நான் அப்போதுகூட இருந்தேன் பிரமாணமாக அறிவிக்கிறேன் என்றெழுதின காயிதத்தில் இப்படிக்கு சமாரியாபுரம் உபதேசி சவரிராயபிள்ளை என்றுங் கையெழுத்து வைத்தேன். இதற்குச்சாட்சி சீனிவாசகம்பிள்ளை தமையனார் மாசில்லாமணியாபிள்ளை, மிக்கேல் உபதேசி தகப்பன் அருளப்பன் ,அறிவு சாட்சி ஒப்பம் எழுத்து,



இப்படியே ஷைபார்களுக்குளழுதினதுக்கு நானும் அறிவுசாட்சிக்கு கையெழுத்தும் வைத்தேன். பின்பு ஷை துரையவர்க ளனுப்பிவிட்டார்கள்.

௰-௳ சாயந்திரம் ௯-மணிக்கு சமாரியாபுரத்துக்கு வந்தேன். வீட்டில் இன்னாசியம்மாளுக்கும் தாய்க்குந் தம்பிக்குஞ் சுகமில்லை.

௰௨-௳ சாயுங்காலம் கயிலாசபுரத்துக்குப்போய் உபதேசியார் தேவசகாயம்பிள்ளை கொழுந்தி முத்தம்மையை உதவிக்குக் கூட்டி வந்தேன். ௰௮-௳ காஞ்சிகாட்டிற் குருக்கள் மடமென்ற ஊரிலிருந்து வந்த அப்புப்பிள்ளை ஷை முத்தம்மையை உரோமான் மார்க்கத்துக்குக் கொண்டுபோய்க்கலியாணமுடித்துக்கொடுக்கும்படி யோசனைபண்ணி வந்தவருக்குப் புத்திசொல்லி ஷை பிள்ளையை விடமாட்டேனென்றனுப்பிவிட்டேன் அந்தமனிதனை.

ஜுன்மீ ௧-௳ செவ்வாய்க்கிழமை ஏசுதாசனை ஒருநாய் வலது கையில் ஒரு பற்படக் காயப்படக்கடித்தது.

௮-௳ வைகுரி வார்ப்பிக்கத் தம்பி தேவசகாயம்பிள்ளை வந்துபோயிருக்கையில் என்னை ஊருக்கு வாருங்கள் உங்களுக்கொரு குதிரைதருகிறேனென்றார்.

௰௧-௳ கல்லத்திக்கிணத்து மிக்கேலுபதேசியாருக்குச் சுவிசேஷபுரத்திற் பிறந்த குழந்தை ௰௧-ம் நாளில் மரித்தது.

௰௪-௳ ஆனைக்குட்டி மகள் பேச்சிக்குக் கலியாணமுடிக்க இஸ்டினாபுரம் உபதேசியாருக்கெழுதிவிட்டேன். தமிழ் ஆனிமீ ௯-௳.

௨௬-௳ கயிலாசபுரத்து உ' தேசியார் வந்து ஷை முத்தம்மையை அழைத்துப்போனார். ஷை பிள்ளைக் வ சந்தோஷங் கொடுத்தேன்.

௨௭-௳ முருகன்குறிச்சியில் சங்கம். நான் போகாததுக்கு முகாந்திரம் இன்னாசியம்மாளுக்குப் பேறுகாலம். ஏசுதாசனுக்குத் தலையில் கட்டைதைத்த காயம், மரியசவரிமுத்துக்கு மேகமுமரையாப்பு வியாதி. தேவசகாயத்துக்குக் கால்விரலில் புண்ணுபத்திரம். எனக்கு நல்லசட்டையில்லை. மற்றச்சிலவுக்குப் பணமுட்டுமாயிருந்ததே.

௨௯-௳ செல்வமருதூர் வயித்தியன் சுப்பன் ரூ ௧-வாங்கி மருந்துவைத்துக்கொண்டுவந்தான் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கு. ஷை சுகயீனத்துக்கு சணம் கார்வேல் ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்தக் காயிதமெழுதியனுப்பினேன்.

சுலாய்மீ ௨-௳ ஞாயிற்றுக்கிழமை பாளையங்கோட்டை மாப்பிள்ளை வந்தார்கள்,

௫-௳ இன்னாசியம்மாளுக்கு குட்டுவலி போலுண்டாயிற்று. ஷை பேறு

காவ உதவிக்கு சுவிசேஷபுரத்திலிருக்கிற சுவாமியடியாளைக்கேட்டதுக்கு விசாரணைப்பிள்ளையவர்கள் தங்களுடப்பிறந்தாள் கொழுந்தி முதலானவர்களைக் கூப்பிட்டு வரவேண்டியது இவ்விடத்திலிருந்து ஒருவரும் வருகிறதில்லையென்றதாக ௸ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் வந்து பிள்ளை வீட்டுக்காருக்குள் சண்டை யுண்டாயிற்றென்று சொன்னார்கள். ௰௨-௳ முதலதிக வருத்தப்பட்டும் பேறுகாலமாகவில்லை.

௰௭-௳ ௸ விசாரணைக்குப் பிள்ளையவர்கள் வந்திருந்தார்கள், இராவில் மிகுந்தவருத்தப்பட்டுங் குழந்தைபிறக்கவில்லை யென்று கண்டபின்சுவிசேஷபுரத்துக்குப்போய் ௸ சுவாமியடியாளை யனுப்பினார்கள். ௰௯-௳ மதுரேந்திரம்பிள்ளை சமுசாரத்தை யனுப்பினார். ௨௧-௳ கனம் இரேனியூஸ் ஐயரவர்களுக்கும் மதுரேந்திரம்பிள்ளைக்கும் இன்னாசியம்மாள் வருத்தத்தை எழுதினேன் அதறிந்து ௨௨-௳ மரியம்மாள் தங்கச்சியைப் பார்க்கவந்தாள். அவள் வீட்டுக்காரியங்களையும் மக்களைப்படிப்பிக்கவிட்டதில் தன்கொழுந்தனார் இராயப்பபிள்ளையவர்கள் நடப்பித்த விதங்களையும் பேசி விடிய விடிய தங்கச்சியுபத்திரவத்தையும் பார்த்து துக்கப்பட்டிருந்தாள். ௨௩-௳ காலையில்போய் விட்டாளென்று ராப்போசனம். ௨௪-௳ வீட்டில் பலபேச்சுண்டானதில் இன்னாசியம்மாள் பிழைக்கவும் மரிக்கவும் நிச்சயமில்லாத சமையத்தை யோசியாமல் அவள் மாப்பிள்ளை நீயுங்கள் தகப்பனார் வீட்டில்தானிரு, கலியாணச்சில்லவை கொடுக்கச்சொல்லென்றார்களாம், ௨௭-௳ மதுரேந்திரம்பிள்ளை வந்து தங்கச்சியைப் பார்த்துக்கொண்டு ௨௮-௳ தன்சமுசாரத்தையும் /கூட்டிப் போனார். அச்சங்குளம் தேவசகாயம்பிள்ளை மிஷியோனில் அலுவல் தள்ளப்பட்டு வந்து சுவிசேஷபுரத்துக்கும்போய் வடக்குன்குளத்துக்குப்போனார்.

௨௯-௳ பாளையங்கோட்டைக்குப்புறப்பட்ட மாப்பிள்ளை இன்னாசி/யம்மாள் வருத்தத்தினாற் போகவில்லை.

ஆகஸ்டு௴ ௰௨-௳ வடக்குன்குளத்தில் மருமகள் செபத்தியாயி குடியிருக்க விசாரணைப்பிள்ளையவர்கள் வாங்கிக்கொடுத்தமனைக்கு ௸ யாள் புருஷன் ரூ ௯௰-ம் வாங்கிப்போனதாகக் கேள்வி.

௨௰-௳ யின்னாசியம்மாள் ஆண்குழந்தை பெற்றாள்.

௩௧-௳ மீன் குருபாதம் கோவிலுக்கு மணி வாங்க ரூ ௭. கொடுத்தான்.

செப்தெம்பர்௴ ௧-௳ சுவிசேஷபுரத்துக்குப் போனேன். கனம் சார்சென்று ஐயரவர்களும் கனம் இரேனியூஸ் ஐயரவர்களும் சமாரியாபுரம் சபையார்கள் ஒழுங்கில்லையாதலால் உன்னைத்தகுதியான இடத்திற்கு அனுப்புவோம். ஆகையால் நீ யெத்தனமாயிரு என்றார்கள்.



௬-௳ பிள்ளையவர்களாற் செலவு கேட்டதை நினைத்து முன் வாங்கியிருந்த ரூ ௫-ல் ஒன்றுமாத்திரமனுப்பவும் மற்ற ரூ ௪-ந் தரவேண்டாமென்றெழுதி யனுப்பினார்கள். ௰௩-௳ ௸ பிள்ளையவர்கள் வந்து ஆலயச்சங்கமுமல்லாமல் புதுசாய்வருஷத்தில் ஒருநாளை வருமானமென்றுமெழுதி சபையில் ஏற்படுத்திப் போனார்கள்.

௨௯-௳ என்மனைவிக்குக்கொடுத்திருந்த தூக்குவிளக்கை வார்ப்புக் கூலி ரூ காலே அரைக்கால் ௪ கொடுத்து மாடாக்குழி விளக்காக மாற்றினேன்.

அக்டோபர்௴ ௧-௳ சுவிசேஷபுரத்துக்கு மரியம்மாளுக்கு உதவியாகக் குழந்தைகளெடுத்துஞ் சொன்னபடி செய்திருக்கவும் தற்காலத்துக்கு அன்னம்மையை அனுப்பினோம்.

௨௪-௳ சுவிசேஷபுரத்துக்கு இன்னாசியம்மாள் பெற்ற குழந்தையும் அவளும் மாப்பிள்ளையும் நானுங் கூடப் புறப்பட்டுப்போனோம். அவர்கள் ௨௫-௳ மழையதிகமிருந்ததினாலங்கிருந்தார்கள் மறுநாள் பாளையங்கோட்டைக்குப்போக. நானவர்களிடத்தி லனுப்பாமல் வந்துவிட்டாலிந்த மழைகாலத்திற்போகமாட்டார்களென்று வந்துவிட்டேன். ௸ மாப்பிள்ளை முறண்டுத்தனமாய்க்கூட்டிப்போய் வழியில் மழையுஞ் சகதியும் பிள்ளையை இன்னாசியம்மாள் தானே எடுத்துக்கொண்டு போனதாகவும் மிகுந்த அவதிப்படுகிறதாக வழியிற்கண்ட ஒரு மனிதன் சுவிசேஷபுரத்தில் வந்தறிவித்ததாக கேள்வியாய்த் துக்கப்பட்டிருந்தோம் ௨௭-௳. ௸ ௨௫-௳யில் வடக்குன்குளத்திலிருந்து கொப்பன்பட்டிச்செபத்தியானுமவன் பெண்சாதிவியாகம்மையும் அவர்கள் பேரிற் பிராதுக்கொழித்து வந்திருக்கிறதாகவுங் கேள்வி பிள்ளையவர்களிடத்திலிருந்துசிபாரிசுக்கு வந்திருந்தவர்களை நமதூருக்கும் வரச்சொன்னேன்.

நவம்பர்௴ ௧-௳ சற்சு மிஷியோன் சங்கத்தின் ௫௰-ஆமாகிய யூபிலே சங்கங்கூடினது சுவிசேஷபுரத்தில். காணிக்கைக்கு நான் ரூ ௨ கொடுத்தேன். இப்படியாக இந்தச்சேகரத்துத் தொகை ரூ ௨௱௫௯ சேர்ந்தது.

௪-௳ கல்விச்சாலையில் முத்துசுவாமியாபிள்ளைக்கு இரண்டாவதுபெண் குழந்தை பிறந்ததுஎன்று கேள்வி. ௨௰-௳ வடக்குன்குளம் மரியம்பிள்ளை மகன் செபத்தியாம்பிள்ளைக்குக்கலியாணம். அழைப்புச்சுருள் வந்தது. ௨௨-௳ ௸ யூர் அம்மான் இன்னாசிமுத்துப்பிள்ளை தமிழ் ௨௪-௵ கார்த்திகை௴ ௯-௳ ஞாயிற்றுக்கிழமை மரித்ததாக ஓலைவந்தது. வந்தவனுக்குபடிகொடுத்தனுப்பினோம். ௨௪-௳ கிறிஸ்துசபை சரித்திர புஸ்தகம் ௧-க்கு ரூ காலேஅரைக்கால்

கூ கொடுத்து வாங்கினேன். டிசம்பர் ௴ ௯-வ ஷை இன்னாசிமுத்துப்பிள்ளைக்கு ௰கூ-ம் நாள் என்சமுசாரத்தை மொய்க்கு ரூபாயுங் கொடுத்தனுப்பினேன்.

கூ-வ பாளையங்கோட்டையில் என் மகளின்னாசியம்மாள் குழந்தைக்கு வியாதி வந்தவஸ்தையாயிருக்கிற தென்றெழுதியது ௰-வ வந்தது. ௰௧-வ ஷை வந்த காயிதத்தில் ஷை குழந்தை கூ-வயிந்தானே மரித்து முருகன்குறிச்சிக் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ணினதாக எழுதி வந்தது.

உகூ-வ கனம் இரேனியூஸ் ஐயரவர்கள் டோனாவூரில் காரிசனாய் போகிறதாக உபதேசிமாரை அனுப்பிக்கொண்டார்கள்.

---

* சர்ச்சு மிஷியோன் கனம் ஐயன்மார்கள் உத்தரவு நகல்.

சகூஅ மெய் ௴ உச-வ.

திருநெல்வேலியிலுள்ள சற்சு மிஷியோன் சங்கத்தைச்சேர்ந்த ஐயன்மார்கள், ஷை சங்கத்தைச்சேர்ந்த உபதேசிமார்களுக்குஞ் சபையாருக்குங் கர்த்தருடைய கிருபையும் ஆசீர்வாதமுமுண்டாவதாக வாழ்த்தி எழுதி யறிவிக்கிறதென்னவெனில்:—

இந்த மிஷியோனைச்சேர்ந்த டோனாவூர்ச் சேகரத்தில் நடந்ததாகப் பிரஸ்தாபமாயிருக்கிற துக்கமும் வெட்கமுமான சங்கதிகளை அறிந்திருப்பீர்களே. இவைகளைக்குறித்துக் கனம் கமிற்றியாரவர்களுக்கும் ஐயன்மார்களாகிய எங்களுக்கு முண்டாயிருக்கிற அபிப்பிராயத்தை நீங்களறியத்தக்கதாக இப்பொழுது ங்களுக்கெழுதுகிறோம்.

சுவிசேஷத்தைக் கொஞ்சம்மாத்திரம் படித்திருக்கிறவர்கள் முதலாய் பராபரன் பரிசுத்தத்தில் மகிமை பொருந்தினவரென்றும், அவரருளியவேத முங் கற்பனையும் பரிசுத்தமுள்ளதென்றும், அந்தவேதத்தை யனுசரிக்கிறவர்கள் சகல மாமிச இச்சைகளை வெறுத்து பரிசுத்தமுள்ளவர்களாய் நடக்கக் கடனாளிகளாயிருக்கிறார்களென்றும், நன்றாயறிவார்களே. உலகத்தார் தங்கள் கெட்ட இச்சைகளை நிறைவேற்றித் தேவ கோபத்தை நிறைய மூட்டுகிறவர்களாயிருக்கக் கிறிஸ்தவர்கள் உலகத்தார்களிலிருந்து பிரிக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்களே. அந்தப்படி நடக்க அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிறார்களே. அந்தப்படி பரிசுத்தபேதுரு வெழுதின முதலாம் நிருபம் உ-அதி. ௰௧, ௰உ-ம் வசனங்களிலே: பிரியமானவர்களே, வழிப்போக்கருமாய் அந்நிய நாட்டாருமாயிருக்கிற உங்களுக்கு நான் புத்திசொல்லுகிற தென்னவெனில், ஆத்துமாவுக்கு விரோதமாய்ப்போர்செய்கிற மாமிசஇச்சைகளுக்குநீங்களிடங் கொடாமல், அஞ்ஞானிகள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு கண்காணிப்பின் நாளிலே பராபரனுடைய மகிமை விளங்கப்பண்ணும்படிக்கு, நல்ல நடக்கையோடே அவர்களுக்குள்ளே நடக்கக்கடவீர்கள், என்று புத்தி சொல்லுகிறார். இப்படியிருக்க, இந்தக் கட்டளைக்கு உட்பட்டவனாய் பத்தி

---

* இந்தக்காகிதம் இதற்குமுந்தி டோனாவூரிலிருந்த டெண்டையனைக் குறித்துள்ளது. J. D. S.



யோடு நடவாதவன், கிறிஸ்துவின் நாமத்தைப் புறம்பாகத் தரித்துக்கொண்டும், அவன் பரிசுத்த தேவனுக்குப் பகைஞனும் பரிசுத்த வேத மார்க்கத்துக்கு விரோதியுமாய் இருக்கிறானென்பது, தெளிவாய் விளங்குகின்றதே. அல்லாமலும், அஞ்ஞானிகள் முதலானவர்கள் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்தவர்களுடைய நடக்கையைக்கண்டு, அதற்குத்தக்கதாக அந்த மார்க்கத்திலே நடந்துவருகிற கிறிஸ்தவர்கள் வேதப்பிரபலிய மாகாதபடி தடையாயிருக்கிறது மல்லாமல், பராபரனுடைய திருநாமம் அஞ்ஞானிகளுக்குள்ளே தூஷணிக்கப்படக் காரணமாயுமிருக்கிறார்கள். இப்படி யிருப்பதாற் கிறிஸ்தவர்களாகிய யாவரும் இவ்வுலகத்திலே தேவகிருபையை முன்னிட்டு இச்சை யடக்கமும் பரிசுத்தமு முள்ளவர்களாய் நடக்க எவ்விதத்திலுங் கடமை பெற்றவர்களாயிருக்கிறது மல்லாமலும், எவனாவது தேவ கட்டளையை மீறித் துன்மார்க்கத்தில் நடந்தால், அதையறிந்த மற்றவர்கள் தாங்களும் அவனோடே அந்தக்குற்றத்தில் ஐக்கியப்பட்டவர்களல்லவென்று காண்பிக்கத்தக்கதாகவும், செய்தகுற்றத்தினால் வருங் கொடிய தீங்குக்குத்தக்கதாகவுங் குற்றத்தைச் செய்தவன் சீர்ப்படுகிறதற்கு ஏதுவுண்டாகத் தக்கதாகவும் தகுந்த இடத்தில் தெரியப்படுத்துகிறது அவர்களுக்குக் கடமையென்று, நீங்களே கிதானித்துப் பாருங்கள். இப்படியிருக்க, டோனாவூர்ச் சேகரத்தில் நெடுநாளாய் நடந்துவந்த துன்மார்க்கச் செய்கைகளைக்குறித்துப் பல இடங்களில் பிரஸ்தாபமுண்டாயிருந்தும், ஒருவரு மவைகளை எங்களுக்குத் தெரியப்படுத்தாமல் போனது எங்களுக்கு ஆச்சரியமாகவும் மனஸ்தாபத்தை யுண்டாக்குகிறதற் கேதுவுள்ளதாயுமிருக்கிறது. விசேஷமா யந்தச் சங்கதிகள் நடந்த சேகரத்திலுள்ளவர்கள் எங்களில் ஒருவருக்கும் அவைகளை யறியப்படுத்தாமலிருந்தது அதிக குற்றமென்று துக்கத்தோடே சொல்லவேண்டியது. தேவபணிவிடைசெய்கிறவர்களே தேவபத்திக்கும் பரிசுத்தத்திற்கும் ஏற்றவர்களாய் நடவாவிட்டால், அவர்களாற் போதிக்கப்படுகிறவர்கள் தேவபத்தியிலும் சன்மார்க்கத்திலும் நடக்க என்னமா யேவப்படுவார்கள்: மேலும், நடந்த சங்கதிகளை நாங்கள் அறிந்து கண் சாடையாய் விட்டுவிட்டோமானால், இப்படிப்பட்ட குற்றங்களை செய்கிற சபையாரிடத்திலே என்னமாய்த் திருச்சபை ஒழுங்கின்படி கண்டிப்புச்செய்ய நியாயமிருக்கும்: ஆகையினாலே பிரியமானவர்களே, உங்களை நடத்துகிறவர்களாகிய நாங்கள் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கிறவர்களாய் உங்கள் ஆத்துமாக்களுக்காக விழித்துக்கொள்ள வேண்டியவர்களானதால், நம்மிலொருவனைப்பற்றி இப்படிப்பட்ட சங்கதி நடந்திருக்கிறது எங்களெல்லாருக்குங் கர்த்தருக்குமுன்பாகமிகுந்த மனத்துக்கத்தையுந் தாழ்மையையும் உண்டாக்கி, எங்களை வெட்கப்படுத்துகின்றது. இந்தப் பாவத்தையிட்டுக் கர்த்தர் எங்களைத் தம்முடைய தயவையும் ஆசீர்வாதத்தையும் நீக்காதபடிக்குந் தம்முடைய திருநாமத்திற்கு மகிமை விளங்கச்செய்யவும், யாவரு மவரிடத்தில் கருத்தாயும் தாழ்மையாயும் மன்றாடுகிறவர்களாயிருக்கக் கடவோம். மேலுமிந்தக் காரியத்தைக்குறித்துக் கனம் கமிற்றியாரானவர்களும் ஏகமனமுள்ளவர்களா யிருக்கிறோமென்று நீங்களறிந்துகொள்ளத் தக்கதாக அவர்களெழுதியனுப்பின தீர்மானங்களை உங்களுக்குத்தெரியப்படுத்துகிறோம்-

க-வது, கமிற்றியாரவர்கள் தங்களைச்சேர்ந்த ஒருசேகரத்திலே இப்படிப்

பட்டதன்மார்க்கங்கள் நடந்ததெனவென்கிற பேச்சுமுதலாய்க் கேள்விப்பட்டுத் தாங்கள் துக்கத்தினாலும் வெட்கத்தினாலும் வியாகுலப்படுகிறார்களென்றும், ௨. இவ்வளவு காலமாயும் வெளியரங்கமாயும் நடந்துவந்த இந்தச்சங்கதியைக்குறித்து மிசியோனில் அலுவலாயிருக்கிறவர்களும் மற்றுஞ் சபையாருங் கனம் ஐயன்மார்களிடத்திலாவது கமிற்றியாரிடத்திலாவது யாதொன்றுந் தெரியப்படுத்தாமல் போனது தங்களுக்கு மிகவுந் துக்கமாயிருக்கிறதென்றும்: ௩. இப்படித் தெரியப்படுத்தவேண்டிய காரியத்தைத் தெரியப்படுத்தாமற்போனதினாலே, உபதேசிமார் சபையார் முதலானவர்கள் கமிற்றியார்களுக்குத் தெரிந்திருக்குமென்பதுபோல மனதிலெண்ணியிருப்பார்களென்று மிகுந்த விசனத்தோடு நினைக்கவேண்டியதென்றும், யாராவது இந்தச்சங்கதி * ஐயன்மார்களுக்குங் கமிற்றியாருக்கும் இப்படித்தெரிந்திருக்குமென்றும் எண்ணியிருப்பார்களானால், அவர்களிந்தப்பாவத்தின் கொடுமையை தகுந்தபடியெண்ணியிருக்கமாட்டார்களென்பது நிருட்டாந்திரமாயிருக்குமென்றும்; ஆனதால் இப்படிப்பட்ட தப்பான எண்ணத்தை யாதாமொருதன் கொண்டிருப்பானானால், அதைக்கூடிய மட்டும் நீக்கத்தக்கதாகவும், இந்தச்சங்கதி நடந்த சேகரத்திலுள்ள உபதேசிமார்முதலான உத்தியோகஸ்தர்கள் இச்சங்கதிகளை நன்றாயறிந்து கொள்ளச் சமயமுடையவர்களாயும், உடனேக்குடனே தெரியப்படுத்தவேண்டிய அகத்தியமுடையவர்களாயுமிருக்க, மிசியோனிற் சம்பளம் வாங்கி இவையெல்லாவற்றையும் மறைத்துக்கொண்டு வந்ததால், அப்படிப்பட்டவர்கள் துரோகமாய்ச் செய்திருக்கிற பெருங்குற்றத்தை நாங்கள் முற்றும் அருவருக்கிறோமென்று, மிசியோனைச்சேர்ந்தவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் நன்றாய்விளங்கத்தக்கதாகவும், டோனாவூர்ச்சேகரத்திலுள்ள உபதேசி முதலான உத்தியோகஸ்தரெல்லாரையும் உடனே தள்ளிப்போட்டுத் தாங்கள் கடமையுடையவர்களென்று தீர்மானிக்கிறார்கள். அல்லாமலுமிப்படித் தள்ளப்பட்டவர்களை இதுமுதல் டோனாவூர்ச் சேகரத்திலாவது மிசியோனிலுள்ள மற்ற எந்தச்சேகரத்திலாவது ஒருபோதும் மறுபடியும் அலுவலிலிருக்கலாகாது. ஆகிலுமிவர்களிற் கொஞ்சநாள் மாத்திரம் அலுவல் செய்து வாலிபப்பிராயமுந் தேவபத்தியுமுள்ளவர்களாகிய சிலரிருப்பார்களானால், அவர்களிப்போது மற்றவர்களோடே தள்ளப்பட்டு, இனிமேல் மற்றச்சேகரங்களிலுள்ள ஐயன்மார்கள் சேர்த்துக்கொள்ள மனமுண்டானால், அப்படிச்சேர்த்துக்கொள்ளத் தடையிருக்கமாட்டாதென்று தெரியப்படுத்துகிறார்கள்.

இதை யின்று வியாழக்கிழமை சாயந்திரஞ் சபையாருக்கு வாசித்துக் காண்பித்து நாளை வெள்ளிக்கிழமை பாடத்துக்கு வரும்போது அகத்தியமாய்க் கொண்டு வரவும். உத்தரவு கனம் சார்சென்றய்யர்.

* இந்தச்சங்கதி ஐயன்மார்கள் பலருக்குந் தெரிந்திருந்ததென்றும், எவனாவது வாதியாயேற்பட்டு வரட்டுமப்போது விசாரிக்கலாமென்றிருந்தார்களென்றும், மிசியோன் ஆட்களுடைய பொதுவானஎண்ணமாம்.

J. D. S.



௲அ௱௪௯ மெய்மீ ௭-உ. தமிழ் உரு-ஞ சித்திரைமீ ௨௭-உ வெள்ளிக்கிழமை வடக்குன்குளத்தில் என் தங்கச்சி சித்தேரியம்மாளுக்கு நாலாவது பெண் பிறந்தது, பெயர் இன்னாசியம்மாள்.

௨௨-உ சுவிசேஷபுரத்துக்கு என் சமுசாரம் மகனைப் பார்க்கப்போனாள். அங்கிருந்து ௨௭-உ சாயுங்காலம் வந்தாள். பிள்ளையவர்கள் உடன்பிறந்தாள் சின்னாயி வந்திருக்கிறாளாம்,

௨௫-உ நான் பாடத்துக்குப்போய் வந்தேன், ௨௭-உ ராப்போசனத்துக்குப் போனேன். பாளையங்கோட்டையில் என்மக்கினினாசியம்மாளுக்குப் பழைய வியாதி கைகாலிழுப்புண்டாய் வருத்தப்பட்டதாய்க் கேள்வி. ஷை மாப்பிள்ளைமுனிசுப்பிள்ளை ஒன்றுமதைப்பற்றியெழுதவில்லை. மதுரேந்திரம்பிள்ளை வீட்டிற் சாப்பிட்டு உடனே வந்தேன் சமாரியாவுக்கு.

௩௰-உ பகலில் கனம் ஏசுதாசன் ஐயரவர்கள்வந்து மதியச்செபஞ்செய்துபோய் விட்டார்கள். வடக்குன்குளம் மாப்பிள்ளை யின்னாசிமுத்துப்பிள்ளை வந்திருந்து ௩௧-உ காலையிற் சாப்பிட்டு ஊருக்குப்போனார். மதுரேந்திரம்பிள்ளை வீட்டுக்கு கடைச்சிலவு வாங்கியனுப்ப எழுதியபடிக்கு வாங்கியனுப்பினேன். வடக்குன்குளம் ஞானசயாசாரி மகன் அந்தோனிமுத்தும் சில சாணாருங் கொழும்புக்குப்புறப்பட்டவர்கள் வந்தார்கள், திரும்பியூருக்குப்போனார்கள். ஷை ஆசாரிக்கு நமது சாப்பாடு மற்றவர்கள் சமைத்து சாப்பிட்டார்கள், பின்பு போனார்கள் ஊருக்கு.

ஜூன்மீ ௩-உ ஞாயிற்றுக்கிழமை இராத்திரி இருபது நாழிகைக்குமேல் சுவிசேஷபுரம் மரியம்மாள் ௬-வது ஆண்குழந்தை பிறந்தது. ௨௧-உ அத்தை மரியசுந்தரி இறந்ததாக ஓலை வந்தது. ௨௭-உ நளத்து வீட்டு அந்தோனிமுத்துப்பிள்ளை மகன் தேவசகாயத்துக்கும் ஏ.ஏ. சின்னய்யா திவ்வியானந்தம்பிள்ளை மகள் அந்தோனியம்மாளுக்கும் கலியாணமென்று மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை பாக்குக் கொண்டு வந்தார். ஷை ஊரில் அக்காள் நித்தான்பட்டியாள்மகன் சவரிமுத்துப்பிள்ளைக்குத் தேருரின்னாசிமுத்துப்பிள்ளை மகள் மரியாயியைக் கலியாணமுடிக்கக்கோட்டாத்துக்குப் போயிருக்கிறதாகச் சொன்னார்.

சுலாய்மீ ௫-உ பாளையங்கோட்டையில் சத்தாம்புளிப்பிள்ளை மகன் மதுரநாயகம்பிள்ளைக்கும் முத்துசுவாமியாபிள்ளை தங்கச்சி பாக்கியத்துக்குங் கலியாண முடிந்தது. நானும் மதுரேந்திரம்பிள்ளையும் ஒருப்போது சாப்பிட்டு கூடமாய்க் கொடுத்தோம்.

ஆகஸ்டு௴ ௪-௳ மதுரேந்திரம்பிள்ளை தமது பெரியம்மாளைச் செவ்வற் பட்டியிலிருந்து கூட்டி வந்தார் எனக்குப் பிரியமில்லை. மரியசவரிமுத்துக்கு கனம் கார்வேல் ஐயரவர்கள் சுலாய்௴ சம்பளத்தில் ரூ இ கூட்டிக்கொடுத்தார்கள். ஆகஸ்டு௴ ௯-௳ சம்பளத்துக்கு சுவிசேஷபுரத்துக்குப்போன நான் மதுரேந்திரம் மரியம்மாளிருவரும் ஷை பெரியம்மையைச் சேர்த்ததினால் ஒரு வீட்டிலுஞ் சாப்பிடவும் போகவுங்கூடாதென்று வந்துவிட்டேன், தாகத்துக்குஞ் சாப்பிடவில்லை. ௰௨-௳ ராப்போசனத்துக்கும் ஷை மனஸ்தாபத்தினாற் போகவில்லை.

௰௭-௳ பாடத்துக்குப்போயு முன்போலவே உடனே வந்துவிட்டேன். ௨௧-௳ சம்பளத்துக்குப்போனபோது மரியம்மாள் அவள் பெரியதாயைப்பார்க்கிலுமவள் பேரனார் சூசைமரியாம் பிள்ளைபொல்லாப்புச் செய்தவர்போலப் பேசினதினாலவளைக் கோவித்து வைதுவிட்டு வீட்டுக்கு வந்து விட்டேன் உடனே. ௩௰-௳யும் பாடத்துக்குப் போயுஞ் சாப்பிடாமல் வந்துவிட்டேன்.

செப்தெம்பர்௴ ௪-௳ இன்னாசியம்மாள் வீட்டுக்கு முதலாவதாகப்போகப் பலகாரஞ்செய்துகொண்டு அவள் தாய் பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டாள். மரியசவரிமுத்து சூசைமரியான் தருமநாதன் கைப்பிள்ளையுங்கூடப் போனார்கள். சுவிசேஷபுரத்துக்கு தொட்டன்பட்டி அண்ணன் வியாதியாய் வந்திருந்தார் ௩-௳யில். ௰-௳ ஏசுதாசன் ஒரு சிறு கண்டாங்கி கண்டெடுத்து வந்தான்.

௰௫-௳ கனம் ஏசுதாசன் ஐயர் சமாரியாவிற்கு வந்து ௪ குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்கள். பாளையங்கோட்டை யின்னாசியம்மாள் முருகன்குறிச்சியில் ௰௬-௳ ஞாயிற்றுக்கிழமை காலையில் ௬ மணியில் இரண்டாவதாண்குழந்தை பெற்றதாகக் காயுதம் வந்தது. ௨௨-௳ பாளையங்கோட்டை மதுரநாயகம்பிள்ளை மகன் பெரியநாயகம்பிள்ளையைக் கல்விச்சாலையிற் சேர்த்துக்கொண்டதாகச் செய்தி.

அகஸ்டோபர்௴ ௪-௳ ஷை தொட்டன்பட்டி யண்ணனை வடக்குன்குளத்துக்கு எடுத்து போனார்கள். முருகன்குறிச்சியில் இன்னாசியம்மாள் பெற்றபிள்ளை செப்தெம்பர்௴ ௨௯-௳ மரித்துப்போனதாகக் கடிதம் வந்தது. ௫-௳ ஷை அண்ணன் மகளின்னாசியம்மாளை யிவடத்துக்குக்கூட்டிவந்தேன். இரவிற் செபத்துக்குப் பின்பு கனம் சார்செந்தய்யரவர்கள் வந்து வியாதியாயிருந்த ஞானவொளி முக்கந்தனுக்குப் புத்திசொல்லித் தன்புண்ணியத்தினால் மோட்சம் வருமென்றதினால்ப் புத்தியீனமென்று போய்விட்டார்கள்.



௰௭-௳ வடக்குன்குளம் தம்பிபரஞ்சோதியாபிள்ளை காணாவீடு கட்டினதில் பால் காய்ச்ச வர ஓலை வந்தது. ஃ ஏசுதாசனை சுவிசேஷபுரத்து மரியம்மாள் கூட அனுப்பினேன். நேமத்து மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளை மச்சினனும் அணைக்கரைப்பிள்ளை மகனையும் கூட்டி வந்தான். ௰௮-௳ வழிச்சிலவுக்கு ரூ அரைக்கால் கொடுத்தனுப்பினேன். அவன் கொண்டு வந்தது தேங்காய் ௨, சேனைக்கிழங்கு பாதி. ௰௯-௳ தத்தம்பள்ளி மிக்கேல்முத்துப்பிள்ளை மரித்தாகக் கடிதம்வந்தது. ௨௨-௳ இன்னாசியம்மாளும் சூசைமரியானுமவர்கள் தாயும் பாளையங்கோட்டையிலிருந்து சுவிசேஷபுரத்துக்கு வந்தார்களிவடத்துக்கு ௨௩-௳ சாயுங்காலம் வந்தார்கள்.

௨௯-௳ மரியம்மாளுக்குச் சுரமென்று கேட்டோம். கயிலாசபுரத்து உபதேசியார் தேவசகாயம்பிள்ளை வந்து இன்னாசியம்மாள் இரண்டாவதாண்பிள்ளை இறந்து போனதைக் கேட்க வந்து போனார்.

நவம்பர்௴ ௨-௳ பாடத்துக்குப் போனேன். ஷை மரியம்மாளுக்கு ஷை சுரமதிக வருத்தமாய் ஐயர் மருந்து கொடுத்தார்கள். ௪-௳ ஷையாள் தாயை அனுப்பினேன். மரியசவரிமுத்தும் போய் வந்தான். ௮-௳ அவஸ்தைப்படுகிறதாக ஆள் வந்தது இரவில் உடனே போய்விட்டேன். ௯-௳ இன்னாசியம்மாளும் மற்றப்பிள்ளைகளும் வந்தார்கள், அதற்கு முன்னமே வாய் பேசவுங் காதுகேள்க்கவும் இல்லை, கண்ணொளிமாத்திரமுண்டு அதினால்தானவளிடத்திலிருக்கிறது தெரியும். அறிவுக்கு மயக்கமில்லை. ௯-௳ காலையில் செவி கேள்க்கவும் தெளிவுண்டாயிருந்து மதியத்தில் பின்னும் மயக்கமுண்டாயிற்று. அந்தச் சமையத்திற் பாளையங்கோட்டைக்குப் படிக்கப்போன பிள்ளைகளும் சுவாமியடியாளும் வந்தார்கள். ம-ஸ்ரீ இராயப்பபிள்ளை வரவில்லை. பின்புந் தெளிவுண்டாய் ஷை பிள்ளைகளைப் பார்த்து மூத்தகுமாரன் வியாகப்பனைக் கைப்பிடித்து மாமனார் மதுரேந்திரம்பிள்ளையிடத்தில் ஒப்புவிக்கிறது போலச் சாடை காண்பித்துப் பின்பு பிள்ளைகளெல்லாரையும் அணைத்துக் கொண்டாள். பின்பு சாயுங்காலம் ௭ மணி வரைக்கும் மிகுந்த வுபத்திரவத்தைப் பொறுமையாய்ச் சயித்துப்பரலோகப்பிராத்தியானாள். ௰-௳ சனிக்கிழமை காலை ௭ மணிக்கு அடக்கஞ் செய்தது. கனம் சார்சந்தய்யரவர்களம்மாள் பிள்ளைகளும் கூட வந்தார்கள். அம்மாள் மரியம்மாள் பிள்ளைகளையன்பாயணைத்து கூட்டிப்போய் வந்தார்கள். மதியத்துக்குமேல் வடக்குன்குளத்திலிருந்து டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை சிரிவைகுண்டம் தேவசகாயம்பிள்ளை குருவினத்தம் தேவசகாயம்பிள்ளை மிராசுபிள்ளை மகன் ஞானப்

பிரகாசம் பிள்ளையும் மரியம்மாள் வியாதியாயிருக்கிறாளென்று பார்க்கப் புறப்பட்டு வழியில் வரும்போது மரித்தடக்கின செய்தி கேட்டு வந்தார்கள்.

௰௧-௳ சாயந்திரம் ௬ மணிக்கு வடக்குன்குளத்திற் சிலர் தவிர மற்ற சனங்கள் சகலரும் வந்தார்கள். ஷை சனங்கள் ௰௨-௳யும் ௰௩-௳யுமாகப் போனார்கள். ௰௫-௳ நான் சமாரியாவுக்கு வந்தேன். ௨௰-௳ சாயுங்காலம் ஆக வேண்டிய சாமான்களோடே சுவிசேஷபுரத்திற்குப்போய் ௨௧-௳ மோட்ச விளக்கென்று செய்து ௨௨-௳ தலைமுழுக்குச் சிலவு நமக்கு ௲ ௨, சுருள் ௲ ௫.

௨௩-௳ உரோமர் கிருப வியாக்கியானத்தின் பேரிற் கனம் சார்சென்றய்யர் முதலான ஐயர்மார் சோதனை. இரவில் நேமத்து நல்லதம்பியாபிள்ளையும் ராமபுரத்துச்சவரிமுத்துப்பிள்ளையும் காவனூதித்தன்புதூர் அந்தோனிமுத்துப்பிள்ளையும் வந்தார்கள்.

௨௪-௳ ஈ.ஈ. பிள்ளையவர்கள் இரகசியமாய் உடையாத்தேவன் மருமகளைப் பால்க்காரியாகத் திட்டஞ்செய்து கைப்பிள்ளைக்குப் பால்கொடுக்கும்படி செய்து இன்னாசியம்மாள் பால் கொடுத்ததை மாற்றும்படி செய்தது வெளிப்பட்டது. ஷை ௨௪-௳, ௨௫-௳, சம்பளம் கேள்விகளிருந்ததினால் தங்கியிருந்து ௨௬-௳ வீட்டுக்குவந்தேன். ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் மனம் வேறிட்டுப்போச்சுது என்றுகண்டு என்சமுசாரத்தை யவர்களிஷ்டப்படி நடக்க மனதிருக்குமானாலிவடத்திலிருக்கலாம், இல்லையென்றால்வீட்டுக்கு வாவென்று வந்தேன் சமாரியாவுக்கு.

௨௭-௳ சாயந்திரம் போனேனவடத்துக்கு. அவ்விடத்திற் குழந்தைகளுக்குச் சுகமில்லை,

௨௮-௳ மெஞ்ஞானபுரம், இடாட்சபுரம், சாத்தன்குளம், சுவிசேஷபுரம் இந்த நாலுசேகரம் விசாரணைஉபதேசிமார் உபதேசிமார், யாவருக்கும் ஷை கிருபத்தின் மேற் சோதனை. ௨௯-௳யும் அப்படியேசோதனை. நேமத்து நல்லதம்பியா பிள்ளை முன் வந்து போனவர் வடக்குன்குளத்திலிருந்து எனக்குச்சுகமில்லை என்று கேள்விப்பட்டுத் திசையன்விளைக்கு வந்து அவடத்தில் நாங்களில்லாததினாற் சுவிசேஷபுரத்துக்கு வந்தார். ௩௰-௳ நம்முடைய பிள்ளைகளை கூட்டிச் சமாரியாவுக்கு வந்தேன். டிசம்பர் ௴ ௨-௳ இராப்போசனத்துக்குப் போனேன். ஈ-ஸ்ரீ ஞானவுயிர்ப்பிள்ளைக்குப் புழலை வியாதியால் வருத்தமாயிருந்தது சற்று வகுவாயிற்று. ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளை வீட்டிற் குழந்தைகளுக்குஞ் சுரம்விட்டு இருக்கிறதுகண்டேன். அவர்கள் வீட்டிற்சாப்பிடமனமில்லாமலிவடத்துக்குவந்து சாப்பிட்டேன். ஏனென்றால் பிள்ளையவர்களுக்கான்



என் மனைவியை அவடம்விட்டுப்போகும்படி பலவிதமாய்ப்பேசினது மன்றி: உன் மகள் போனாளே, யினி உனக்கிங்கென்ன, வெளியே போவென்றுஞ் சொன்னதற்கும், பிள்ளையவர்கள் யாதொன்று சொல்லாதிருந்ததே காரணம். ௪-௳ இரவில் நான் மரியம்மாள் மரணத்தையும் அவள் வீட்டிலிப்பொழுது நடக்கிற காரியங்களையுந் தியானித்து, நித்திரையில்லாமற் துக்கித்துக்கொண்டிருந்து, ௫-௳ விடியக்காலஞ் சுவிசேஷபுரத்துக்குப்போய்ச்சுகமில்லாதிருந்த பிள்ளைகளை விசாரித்தேன். அவடத்தில் விசாரணை முத்துசாமி நாயக்கர் தன் சமுசாரத்துடனே வந்திருந்து டோனாவூருக்குப் போனார்கள். நானுமிவடத்துக்குவந்து காலைச்செபம். இரவில் சபையான் தருமக்கண்ணு தன்கலியாணத்துக்குக் கொட்டுப்போட்டுக் கொண்டு போனான்.

௬-௳ கனம் ஞானமுத்து ஐயர் வந்து முதலாவது செபம் பண்ணினார். பின்பு முதலூர் ஐயர் நம்முடைய காயிதமில்லாமற் கலியாண முடிக்கவில்லையென்றாள் வந்தது. ஷை ஐயர் தானே காயிதங்கொடுத்தனுப்பிக் கலியாணம் முடிந்தது.

௮-௳ அச்சங்குளம் அண்ணன் சவரிமுத்துப்பிள்ளையும் அவர்மகன் மிக்கேலும் மரியம்மாள் துட்டிக்காக வந்தது. சத்தியநகரத்திலிருந்து ஏசுவடியாளும் வந்தாள். பின்பு சுவிசேஷபுரத்துக்குப்போனேனவடத்தில் ஷை அண்ணன் சமுசாரமும் என் கொழுந்தி தெய்வாயியும் வந்திருந்தார்கள். பிள்ளையவர்களன்று தான் மரியம்மாள் மரித்ததின் பின்பு கிராமங்களுக்குப் புறப்பட்டார்கள். ௯-௳ நான் இவடத்துக்கு வந்தேன். அம்மான் சூசைமரியாம்பிள்ளையவர்களு மவர்கள் தம்பி இன்னாசிமுத்துப்பிள்ளையும் சுவிசேஷபுரத்திலிருந்து ௰-௳ போய்விட்டார்கள். காலையில் செட்டிமூலம்பட்டி மாப்பிள்ளை வியாகப்பபிள்ளையும் ஷை சகலன் மிக்கேல்ப்பிள்ளையும் அவர்சமுசாரம் மரியவியாகுலமும் என் தமையனார் மகளருளம்மாளும் இலத்தூராக்காளும் முதல் நாளே வந்ததினால் மதியத்துக்கு மேல் புறப்பட்டுப்போனார்கள். இலத்தூர் அக்காள் என்னைவிட்டுப் பிரியும்போது மிகுந்த துக்கப்பட்டாள். பின்பு வீட்டுக்கு வந்து ௰௪-௳ கோவிற் பழைய புஸ்தகங்களை உத்தரவுப்படி சுவிசேஷபுரத்திற் கனம் சார்சென்று ஐயரவர்களிடத்திற் கொடுத்துப் புது வேதாகம கட்டு ஒன்று வாங்கினேன். மரியசவரிமுத்தும் புதுக்கோட்டை உப. தேவசகாயமு மவடத்திலிருந்து வந்தார்கள். ஷையவடத்திலிருந்து பிள்ளைக்குப் பால்கொடுத்த மறத்தி சண்டையினாற் போய்விட்டாள். அவள் முகாந்

திரத்தினால் மற்றப் பெண்பிள்ளைகள் நம்முடைய வீட்டுக்காரியைக் குற்றஞ் சாற்றப் பார்ப்பார்களென்று வீட்டுக்கு கூட்டிவரவென்று இரவு தங்கினேன். நம்முடைய சிவலைப் பசுக்கால் முறிந்து போச்சென்று ௰௫-உ நாங்கள் வரும் வழியிலாள் வந்தது. அதுவுந் தேவசெயல்தானென்று வந்தோம்.

௨௪-உ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு நான் எழுதினது: உங்கள் மாமியார் தங்கள் குழந்தைகளுக்கு உபகாரமாயிருக்கிறாளென்று இருந்தீர்களானாலவ டத்தில்வைத்துக்கொள்ளுங்கள், அப்படியல்லவென்றிருப்பீர்களானாலவளை யிவடத்துக்கனுப்பிவிடுங்களென் றெழுதினேனவர்கள் உடனே யவளை யனுப்பிவிட்டார்களதினாலவர்களந்தரங்க யோசனை வேறாயிற்று என்று விளங்கிற்று.

௨௯-உ வரையும் இன்னாசியம்மாளவள் தமையனார் மதுரேந்திரம்பிள்ளை வீட்டிலிருந்து வந்தாளிவடத்துக்கு. ௨௧-உ இவடத்துக்கு வந்த மாப்பிள்ளை தருமநாதபிள்ளையும் மரியமுத்தும் அவசரமாய்ப் போறோமென்று போனவர்கள் ௨௯-உ வரையும் மதுரேந்திரப்பிள்ளை வீட்டிலிருந்தார்கள். வடக்கன்குளம் மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை தமக்கு வீடுகட்டவளை வாங்கித்தரச் சொன்னதற்காகமுத்தத்திலிருந்த ஆக்குப்புரையைப்பிரித்து சூஇ முளத்தில் நல்லவயிரவளை மூன்று பிடுங்கிக்கொடுத்து மூன்றுநாள் சாப்பாடுஞ் செய்து ரூ இ-யும் செலவுக்குக் கொடுத்தனுப்பினேன்.

௩௧-உ மதியத்திற்கு மேல் பொதூருக்குப் போய்ச் சுகமில்லாதிருந்த வாத்தியார் அணைஞ்சபெருமாள்பிள்ளையை விசாரித்துக்கொண்டு கயிலாசபுரத்துக்கும் வந்து ஷை உப. தேவசகாயம்பிள்ளை கொழுந்தி அன்னம்மை வியாதியாய் செங்கொளத்திலிருந்து வந்திருந்தவளையும் விசாரித்துக்கொண்டு சமாரியாவுக்கு வந்து சேர்ந்தேன்.

௲அ௱ச௰௯-ம௵ முடிந்தது.

இதுவரையுங் கர்த்தரிரக்கஞ்செய்து காப்பாற்றினவருக்கு ஸ்தோத்திரம்.

---



௲அ௱ரு௰-ம்௵ சனுவரி௴ க-உ சமாரியாபுரம் உப. சவரிராயன் ரிப்போறட்டு.

இந்த வருஷத் துவக்கத்தைக் காணவைத்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

க-உ காலைச் செபம் முடித்துச் சுவிசேஷபுரத்துக்குப்போய்க் கனஞ் சார்சென்ற் ஐயரவர்களைக்கண்டு சந்திப்பு வைத்துப்பின்பவர்களுக்கு உதவியாய் வந்திருக்கிற ஞானமுத்து தேவசகாயம் ஐயரவர்களைக்காணத் தெற்குப் பங்களாவுக்குப் போய் சந்திப்புவைத்துக் கண்டோம். விசாரணைப்பிள்ளை விசாரணை உபதேசிமார் விசாரணை உபாத்தியார் உபதேசிமார் உபாத்திமார் யாவருக்கும் மகிமையாய் உபசரித்திருத்தித் தாம்பூலம் பரிமாறினார்கள். பின்பு அனுப்பித் திரும்பினோம்.

அ-உ பாளையங்கோட்டைச் சங்கத்துக்குப் போனேன். ௯-உ சங்க முடிந்து, ௰-உ விடியக்காலம் புறப்பட்டுச் சாயுங்காலம் வடக்கன்குளத்துக்குப் போனேன். என்பிரியதாயார் முதலான யாவரையுங்கண்டு பேசிக்கொண்டிருந்தேன். ௰௪-உ தளத்துவீட்டு அந்தோனிமுத்துப்பிள்ளை மனைவி என் மாமனார் மகள் அருளாயி வியாதியாய் மரண அவஸ்தையிலிருந்தவளிடத்திற்போய்ப் பார்த்துப்பேசி யனுப்பிக்கொண்டு இனிமேலவளைச் சரீரத்தின்படி காண ஏதுவில்லையென்று துக்கப்பட்டேன். ௰௨-உ சமாரியாபுரத்துக்கு வந்து சேர்ந்தேன்.

௨௨-உ சுவிசேஷபுரத்திலிருக்குமென் மகன் மதுரேந்திரம்பிள்ளை மனைவி மரியம்மாள் தன் மூத்தமாமியார் சவரியம்மாளிடத்தில் மனஸ்தாபமாய் இங்கு வந்தாள். ௨௯-உ என் மகன் காயிதம் அவளை யனுப்பும்படி வந்தது. அவள் மனஸ்தாபமாயும் வந்தாள் என்று வந்ததினால் அனுப்பிவிட்டோம் சுவிசேஷபுரத்துக்கு.

௨௫-உ பாடத்துக்குப் போனேன். அப்போது கனம் சார்சென்ற் ஐயரவர்களிடத்தில் இங்கிலீசு படிக்கும்படிக்கு ஞானசமரியான் ஏசுதாசனிருவரையும் மதுரேந்திரம்பிள்ளை வீட்டிற் சாப்பிட்டுக்கொண்டு படிக்கலாமென்ற உத்தரவு கேட்டு விசாரணைப்பிள்ளையவர்கள் வீட்டுக்கு வந்தேன். முருகன்குறிச்சிக்குப் பிள்ளைகள் படிக்கப்போகிறதையும் கூட நேமத்து சுவாமியடியாள் போகிறேன் என்பதைப்பற்றி யொன்றும் பேசாதிருந்தாள். பிள்ளையவர்களும் அதைக்குறித்துச் சொல்லவுமில்லை. பின்பு சமாரியாவுக்கு வந்தேன்.

௨௯-௳ வடக்குன்குளத்திலிருந்து உபரிக்கு வந்தவர்கள் அக்காள் நீத்தான்பட்டி மரியம்மாளும் பெரியண்ணாவி மருமகள் மரியமுத்தும் என்மகள் மரியம்மாள் துட்டி கேள்க்க வந்தார்கள். ௩௰-௳ சுவிசேஷபுரத்துக்குப் போனார்கள் சாயங்காலம் பாளையங்கோட்டை மாப்பிள்ளை மாசில்லாமணியா பிள்ளையும் நம்மைக் கேள்க்கவந்தார்கள். ௩௧-௳ ஷெயூருக்குப்போனார்கள். சுவிசேஷபுரத்தில் விசாரணைப்பிள்ளை மருமகள் பிள்ளைகள் யாவரும் வந்திருக்கிறதாகக் கேள்வி.

பிற்பரவரிமீ ௧-௳ மதுரேந்திரம்பிள்ளை சமுசாரத்தோடு ஷெயார்பெரிய தாயார் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு இங்கு வந்தார்கள். இனியவளிடத்திற் போகமாட்டேனென்றவர்களுக்குப் புத்திசொல்லி ௯-௳யனுப்பினேன் சுவிசேஷபுரத்துக்கு.

௯-௳ விசாரணைப்பிள்ளை வந்துசெபஞ்செய்து உடனே போய்விட்டார்கள். மரியசவரிமுத்து இரவில் நித்திரையில் தன் அக்காள்மடியில் குழந்தை வைத்திருக்கவும் வேலைக்காரராயிருக்கிற சிதம்பரமென்ற இருவரும் என் வீட்டுவேலை செய்யாதகினாற் தள்ளிப்போட்டேனென்றதாகவும்; தம்பி, நீ பிழைக்கமாட்டாயே, ஆனதாலுனக்கு ஒருவரிடத்திலும் மனஸ்தாபம்வேண்டாமென்றவள் முகத்தோடு தன்முகத்தை வைத்தழுகிறதாக சொர்ப்பனங் கண்டு எழுந்திருந்துகொண்டு, அக்காள், அக்காளென்றழுதான். நாங்கள் ஆறுதல் சொல்லியும் வெகுவாய்த் துக்கப்பட்டமந்தான்.

௨௯-௳ பிள்ளையவர்கள் சகலனுக்கு எழுதினது; நானும் பிள்ளைகளும் இறந்ததுபோலத் திசையன்விளை அம்மான் அத்தை மாப்பிள்ளைமார்களும் நினைத்திருக்கிறார்கள், அவர்களுக்கு நான் தீங்கு நினைக்கவில்லை, அவர்கள் நினைக்கிறார்கள், அவர்களதின் பலன் அவர்களுக்குக் கர்த்தர் கொடுப்பார், உம்மையும் அப்படியே நினைக்கிறேன், என்பதே.

௰௫-௳ பாடத்துக்குப்போனேன். கனம் சார்சென்ற் ஐயரவர்கள் உபதேசிமார்கள் சீட்டுக்கூட்டவும் பயிரிடவும் நிலங்கள் ஒத்தியாவது விலைக்காவது வாங்கக் கூடாதென்று முன்னுத்தரவிருக்கச் சிலர் மீறி நடக்கிறதாய்க் கேள்விப்பட்டு விசனித்துப் புத்திசொல்லி விட்டார்கள். விசாரணைப்பிள்ளையவர்கள் வடக்குன்குளத்துச் சுயசனங்கள்பேரிற் சானார் பிராதுசெய்ததைத் தள்ளும்படிக்குப் பிள்ளைமாருக் குதவியாயிருக்கிறதாக பிச்சைகுடியிருப்பு கனம் ஐயர்சார்சென்ற் ஐயரவர்களுக்கு எழுதினதாகவும் ஷெ பிள்ளையவர்களையிட்டுத் தனித்து விசாரித்ததாகவும் கேள்வி.



௰௭-௳ இன்னாசியம்மாள் தமையனார் இருக்கிற சிதம்பரபுரத்துப் பாளைக்குப்போய் மறுநாள் வடக்குன்குளத்துக்குப் போனாள். சாயந்திரம் நீத்தான்பட்டி அத்தான் ஞானப்பிரகாசம் செட்டியாரும் அவர் சகலன் ஆண்டிபட்டி மதுரநாயகஞ் செட்டியாரும் தொட்டன்பட்டி மாப்பிள்ளை மிக்கேல் செட்டியாருஞ் சுவிசேஷபுரத்துக்கு வந்து நம்மிடத்திலுந் துட்டி கேள்க்கவும் வந்தார்கள். இரவு செபத்துக்கு ஷெ அத்தான் வந்தார் கோவிலுக்கு. ௰௮-௳ அவருக்கு வேதத்தைக்குறித்துப் பேசி சத்தியவேதச் சுருக்க புஸ்தகம் ஒன்று கொடுத்து மற்றவர்களுங் கூடத்தானே ஊருக்குப்போனார்கள். அவர்களிடத்திலும் பின்னுஞ் சிலரிடத்திலும் பிள்ளையவர்கள் தன் வீட்டில் வேலைக்குவிட்ட பிள்ளையைத்தானே கலியாணம் முடிக்க நினைத்திருக்கிறதாகவும் பேசிக்கொண்டதாகக் கேள்வி.

---

௫௰-ம் ௵ எப்பிரல்மீ

௰௯-௳ இரவில் யோசித்து ஷெ அன்னம்மை நம்முடன் பட்சங் காண்பிக்கிறதினால் நாங் கூப்பிட்டால் வந்து விடும். அப்போது கனம் ஐயரவர்களிடத்திற் பேசிக்கொள்ளுகிறதென்று ௨௰-௳ விடியக்காலஞ் சுவிசேஷபுரத்திற்போய் மதுரேந்திரம்பிள்ளை வீட்டிலும் போய் யோசித்து, அவர் பெரிய தாயார் விசாரணைப்பிள்ளை வீட்டிற் போய்க் கூப்பிடவும் அந்தப்பிள்ளை வந்தவுடனே கூட்டிப்போகிறதென்று, அவர்கள் புறவாசலிற் போய்க் கூப்பிட்டார்கள். அன்னம்மை வந்தவளிடத்தில் உங்களண்ணாவி கேற்றுவாசலுக்கு வெளியே நிற்கிறார்கள் உன்னை வரச்சொல்லுகிறார்கள் என்ற உடனே தெருவிலே வந்தது. நான் திசையன்விளைக்கு வா வென்றேன். அதற்கவள் அண்ணன் கிட்டகேட்டு உத்தரவுகொடுத்தால் வருவேனென்றாள். நானுத்தரவென்ன, கேள்க்கிறதென்னவென்று கையைப்பிடித்திழுத்தேன்: அவள் வரமனமில்லாமல் கையைப்பின்னுக்கிழுக்க, உடனே கூடவந்த மதுரேந்திரம்பிள்ளை, அவர்கள் கைபிடித்திழுக்கப்போவென்று பிடரியைப்பிடித்துத்தள்ள நானிழுக்க, அவள், வருகிறேன், கையைவிடுங்கள், வீட்டுத்துறவுகோல் என்னிடத்திலிருக்கிறது, கொடுக்கவேண்டுமென்றவளிழுக்கப், பிடித்தபிடி விடாமல் ஊருக்குத்தெற்கேவந்தபின்முன்னே நடவென்று நான்பின்னே நடந்தோம். சற்றுத்தூரம்போனபின்முன்னாலே நான்போக அவள்பின்னாலே வந்தாள். குறுக்குநேர்வழியாய்ச் சமாரியாவில்காலை ௭-மணிக்குவந்துசேர்ந்தோம். இராத்திரி இடையங்குடிக்குப் போயிருந்த மரியசவரிமுத்து வரவில்லை. சுவிசேஷபுரத்தில் ஷெ பிள்ளையைக் கூட்டிவந்த தறியவில்லை யப்போது. பின்பு

சின்னயியும்மகளுமிருந்தவர்கள்ஷை பிள்ளையைத்தேட, ஆரோ அவன்மாமனார்
கூட்டிப்போனாரென்றதினால், விசாரணை உவாத்தியாருக்கும் கனைக்கு முத்
துக்குமாருசாமியாபிள்ளைக்குந் தெரியப்படுத்தினதாயும், அவர்கள் மதுரேந்
திரம்பிள்ளை வீட்டில் வந்ததாவென்று விசாரித்ததாயும், ஷை முத்துக்குமாரு
சாமியாபிள்ளை ஆள்ச்சேகரஞ் செய்துபோய்ப் பெண்ணை யிழுத்துக்கொண்டு
வந்திடலாமென்றுஞ் சொன்னாராம். இருந்தவர்கள் அப்படியல்லவென்று,
சிலர் நல்லம்மாள்புரத்துக்குப் போயிருக்கிற விசாரணைப்பிள்ளைக்குத் தெரியப்
படுத்துகிறதன்றி யதைக்குறித்து நாமொன்றுசெய்யக்கூடாதென்று தீர்மானி
த்து, அன்னம்மையைத் திசையன்விளைக்குக் கூட்டிப்போய்விட்டார்களென்
றெழுதிவிட்டார்களென்றும், சிலர் பிள்ளையவர்கள் வருகிற பாதைக்கு ஆள்ச்
சேகரித்து இழுத்துக்கொண்டு வந்துவிடுவாரென்றுஞ் சிலர் சொல்லிக்கொள்
ளுகிறதாக, நானெழுதியபடிக்கு உபதேசியாருக்கு மாத்திரந் தெரியப்படுத்
துகிறேன், ஷை முத்துக்குமாருசாமியாபிள்ளை முதலானவர்களுக்குத்தெரியப்ப
டுத்தமனமில்லையென்று,என்மகன் உடனேயெனக்கெழுதினார். முன்சொன்ன
படிக்கு விசாரணைப்பிள்ளை நல்லம்மாள்புரத்தில் ஆள்சேகரித்துக் கொண்டுவந்
துவிட எத்தனித்ததாயும், அங்கிருந்தவர்கள் அப்படியாகாதென்று கனம் ஐய
ருக்குப் பயந்து சுவிசேஷபுரத்துக்கு வந்துவிட்டார்களாம். பின்பு திசையன்
விளைக்கு மணியம் முத்தையபிள்ளையும், முத்துக்குமாருசுவாமியாபிள்ளையையும்
உடையாத்தேவனையும் ஷை அன்னம்மையைக் கூட்டி விடச்சொல்லிக் கூப்
பிடுங்கள் என்றனுப்பி யவர்கள் மதியத்தில் வந்தார்கள். இதற்குமுன் ஊர்க
ளிலுந் தெருக்களிலு மிதுவே பேச்சுங் கூட்டமுமாயிருந்தது. நல்லம்மாள்
புரத்திலிருந்துஞ் சிலர் வந்தார்கள். யாக்கோவு தகப்பன் முத்தைய முக்கந்த
னும் வந்தான். ஷை மணிபாசப்பிள்ளையை நமது வீட்டில் வந்ததைக்கண்ட
வுடனே அவர்ஓட்டப்போய் முன்னின்றாள். அப்போதென் சமுசாரம் அந்தப்
பிள்ளையை நோக்கி நீஎப்போதும் இங்கேவரவேண்டும், அத்தையைப்பார்க்க
வேண்டுமென்றுஞ்சொல்லிக்கொண்டிருந்ததினால், நாங்கள் அந்தப்பிள்ளைக்கு
விசாரணைப்பிள்ளைக்குக் கட்டுப்பட மனம் இல்லைப்போனாலும், தாயும் மற்றவர்
களும் அவருக்குக்கட்டிக்கொடுக்க மனதிருக்கிறதென்றதுபோலும், நாங்கள்வி
னைத்ததுந்தவிர, பிற்காலத்தில் நலத்தைப்போல்கஷ்டமிருந்தால், எனக்குமன
மில்லை,என்மாமியாருமவர்கள் மக்களும்என்னைத்தள்ளிவிட்டார்கள்,பாவிகள்
என்றுநீசொல்லாதபடிக்கு,இங்கேகூட்டிவந்து, உன்மனம்அறிந்துவிடத்தான்
இப்போ கூட்டி வந்தது: இப்போதுன்மனம் அண்ணாட்சிக்கு வாழ்க்கைப்



படமனமோ, அல்லது அத்தானுக்குமனமோ, சொல்லுஎன்று அநேகதரமாயங்
கள் முன்பின் நடக்குங்காரியங்களைச்சொல்லியும், ஒன்றும் பேசவில்லை. யதை
யறிந்து: எங்கள் கடன் உன்னைக் குழந்தையிற்கொண்டுவந்து வளர்த்து உங்
கள் மதினிக்கு உதவிக்குஅனுப்பினோம், அதினாற்சொல்லவேண்டியதைச்சொ
ன்னேன், பதிலொன்றுஞ்சொல்லுகிறாயில்லை, கஞ்சியைக்குடித்துக்கொண்டு,
உங்கள் அத்தானுக்கு வாழ்க்கைப்பட மனமில்லை, அண்ணனுக்கு மனமென்
றால், வந்தவர்கள் கூடத்தானே போவென்ன, உடனேபுறப்பட்டது. கஞ்சி
விட்டுக் குடிக்கச்செய்து என்னையுந் தேய்த்துவிட்டாள். பகல்பொடிச்சுடு
கால் கீழே வைக்கப்படாத நேரமானதால் காலிற் போட்டுக்கொள்ளென்று
நான் என் செருப்பைக் கொடுத்தேன். அவள் போகிறது பிரியத்தில் வேண்
டாமென்று வந்தவர்களுக்கு முன்னடந்து விட்டாள் அனுப்பாமல். பிள்ளைய
வர்கள் அரங்குத்திறவுகோலிவளிடத்திலிருந்ததினால் குழந்தைகளுக்கும் பிள்
ளையவர்களுக்குஞ் சாப்பாட்டுக்குச் சாமான்கள் எடுத்துச்செய்ய நிலைநாராங்கி
யைப் பிடுங்கித்திறந்ததாகப் பின்பு கேட்டோம். இந்தப்பெண் வந்ததினால்
பிள்ளையவர்களிடத்தில்வருகிறபெரியமனுஷர், தமக்கிசைவானஆள்கள், முன்
எங்கள் தப்பிதத்தைக் காண்பிக்க ஷை அன்னம்மையைக் கூப்பிட்டு ஒவ்வொ
ருவர் முன் விட்டு, உன்னைத் திசையன்விளைக்குக் கூட்டிப்போன செய்தி
சொல்லென்பார்களாம். அப்பொழுதந்தத் துணிகரமுள்ள வெள்க்கமில்லாத
முருகம்லேவிடியான தாசிபோலச்சிரித்துக்கொண்டுஞ் சொல்லுகிறதாமிப்படி
வெகுநாள் நடந்ததாகக்கேள்வி. இங்கே மரியசவரிமுத்து வந்து சங்கதிகளை
யறிந்து எங்களைக்கோவித்து, பின்பு கனம் ஐயன்மார்களுக்கு விசாரணைப்பிள்
ளை எனக்குச் சுதந்தரப்பெண்ணை யாசித்தெடுத்துக்கொண்டதை அறிவிப்பே
னென்று, கனம் கார்வேல் ஐயரவர்களுக்குங் கனம் சார்சென்ற் ஐயரவர்களுக்
குங் காயிதமெழுதித் தெரியப்படுத்தினான். * ஷை ஐயன்மார்களவனுக்குப்
பதிற் செய்தி சொல்லவில்லை. அவர்கள் பெரிய உபதேசியாகிய விசாரணைப்
பிள்ளையாயிருக்கிறவர் நியாயக்கேடு செய்கிறதினால் அவனுக்குப்பதில் எப்படி
யெழுதலாமென்று இருக்கிறார்களாக்கும்மென்று நாங்கள் நினைத்துக்கொண்
டோம்.

* கனம் கால்வெல் ஐயரவர்களுக்கு எழுதியனுப்பின காயிதத்துக்கு இ
ரண்டு ஓலை மசோதா இருக்கிறது. இந்த இரண்டில் அனுப்பினது எதுஎன்று
தெரியவில்லை. இரண்டையும் இங்கே அச்சடித்திருக்கிறது. இரண்டாவது
அச்சடித்திருக்கிறது தான் அனுப்பினதாயிருக்கலாம். கனம் சார்சென்றய்ய
ரவர்களுக்கு எழுதினதுக்கு நகலில்லை. J. D. S.

மக-ா-ா-மன்னிய ஈ-ஸ்ரீ மகாகனம் பொருந்திய போதக பிதாவாகிய இசமான் ருப்போட் கால்வேலையரவர்க ளிரக்கமுள்ள சமட்சமத்துக்கு அடியேன் சவரிமுத்து அநேக வணக்கத்துடனே சலாஞ்செய்து சித்தத்துக்குத் தெரியப்படுத்திக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

என்னவென்றால், என்தாயின் கூடப்பிறந்த என்மாமனார் இறந்துபோன பின்பு, அவருடைய பெண்சாதியையும் அவருடைய மகளையுங் கூட்டிக்கொண்டுவந்து, எங்களுடையவீட்டில் சேர்த்துவைத்து, அந்தப்பிள்ளையை எனக்குக் கலியாணஞ் செய்யவேணுமென்று தீர்மானித்துத் திட்டமாயுடம்படிக்கை பண்ணியிருந்தது. அப்போது அந்தப்பிள்ளைக்கு ஐந்து வயசு. அப்படியிருக்குங் காலத்தில், என்னுடைய அத்தான் சுவிசேஷபுரம் விசாரணை சவரிமுத்துபதேசியாரும் அவருடைய பெண்சாதி என் சகோதரியும் தங்களுக்கு உதவியாயிருக்கும்படி என்மாமியாளையும் அவள்மகள் என் கொழுந்தியையும் விடவேணுமென்று வருந்திக் கேட்டுக்கொண்டபடிக்கு அனுப்பியிருந்தது. இப்படியிருக்கிறபோது அந்தப் பிள்ளையைப் படிக்க வைத்தால்த்தான் கலியாணஞ்செய்கிறதற்கு கனம் இசமானவர்களுத்தரவு கொடுப்பார்கள், ஆகையால் படிக்கவைக்கவேணுமென்று அடிக்கடி என்னுடைய சகோதரிக்குச் சொல்லியனுப்புவேன். அந்தப்படியே அந்த பிள்ளை படிக்கவைத்தாள். என்னுடைய சகோதரியிறந்து போனபின்பு இப்போது விசாரணை சவரிமுத்துபதேசியார் அந்தப்பிள்ளையைப் படிக்கப்போக விடுகிறதில்லை. படியாவிட்டால் அவளை அவனுக்குக் கலியாணஞ் செய்கிறதற்கு உத்தரவு கொடுக்கமாட்டார்களென்று ஒரு மனிதனிடத்தில்ச் சொல்லியிருக்கிறார். அந்த எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு தனக்குக் கலியாணஞ்செய்துகொள்ளவேணுமென்று படிக்கவிடாமலிருக்கிறார். அந்தப்பிள்ளை என் மாமனுடைய மகளானபடியினாலே எங்களுடைய வழக்கப்படி சற்கார்பேரிலாணையிட்டு மறித்துவைத்துக் கட்டலாம். கிறிஸ்துமார்க்க ஒழுங்கு இராசிப்படிசெய்கிறது. அப்படிப்பார்த்தாலும் என்னுடையபேரில்தானவள் இராசியாயிருப்பாள். அவருக்கு அவள் சகோதரியாயிருந்தும் அவரிப்படிப்பட்ட முறைகேடான காரியத்தைத் தீர்மானித்திருக்கிறார். அந்தப்பிள்ளையை எனக்குக் கலியாணஞ் செய்யத் தீர்மானித்தபோது, இந்தச்சிறுபிள்ளையைக் கட்டவேண்டாமென்று அநேகர் சொல்லியும், அந்தப்பெண்ணினுடைய தாயின் வார்த்தைப்பாட்டுக்காகவும், என்முறைப்பெண்ணென்றதற்காகவும், நானிவ்வளவு வயசுவரையுங் காத்திருந்தேன். இந்தப்பிள்ளையைத் தான் ஆயித்துக்கொள்ள வேணுமென்று



தீர்மானித்த விசாரணை உபதேசியார், பெத்லேசுரூர் குருபாத உபதேசிக்கும் சோதிநகரம் முருகப்பனுக்கும் மாதேவன்குளம் ஐயனடியான்முக்கந்தனுக்கும் சொன்னது உங்களுடைய வயசுக்குத்தக்க பெண்ணைக் கலியாணஞ்செய்யவேணுமென்று வெகுஉறுதியாய்ப் புத்திசொன்னார். அவர்கள் முறைகேடாய்க் கலியாணஞ் செய்யவில்லை. முன் என்னுடைய சகோதரியை அவருக்கு இரண்டாந்தாரமாகக் கலியாணஞ்செய்து கொடுத்தபோது நானவனாயும் என் சகோதரியையும் பார்த்துக்கொண்டு என்தகப்பனாரிடத்திலிருந்துக் கிழவனுக்கா அக்காளைக் கட்டிக்கொடுத்தீர்களென்று கேட்டேன். இப்படிப்பட்ட பெரிய மனிதனையும் விசாரணை உபதேசியாராயுமிருக்கிற வரிப்படிப்பட்ட தார் எண்ணத்தை யுடையவராயிருக்கிறார். இப்போது என் கொழுந்திக்குப் பன்னிரண்டு வயசு. அந்தப்பிள்ளை எனக்கு நேமிக்கப்பட்டிருக்கிறது சுவிசேஷபுரம் உபதேசிமார் சபையார்முதலான யாவருக்கும் தெரிந்திருக்கிறதுந்தவிர இடையன்குடிச் சேகரத்திலுள்ள விசுவாசம்ரயிட்டர், வாத்திச்சி எலினோராள், விசாரணைத் தானியேலுபதேசியார் பெண்சாதி, தருவை ஞானப்பிரகாசம் வாத்தியார், சத்தியநாத உபதேசியார், அவருடைய பெண்சாதி, பாக்கியம், உவரித் தானியேலுபதேசியார், கயிலாசபுரம் உபதேசியார் பெண்சாதி முதலான பின்னும் அநேகருக்குந் தெரியும். அந்தப்பிள்ளையைக்குறித்து நீதியின்படி விசாரணைசெய்து இடையன்குடிப் பள்ளிக்கூடத்திலாவது சுவிசேஷபுரம் பள்ளிக்கூடத்திலாவது சேர்த்துப்படிப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தப் பிள்ளையை என்னுடைய தகப்பனார் சனிக்கிழமை எங்களுடைய வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்ததற்கு அநேகஞ் சாணாரையும் மறவரையும் விட்டு சாரசல்லியஞ் செய்து கூட்டிக்கொண்டு வாருங்களென்று அனுப்பினார். அதின் பேரில் கலகம்பண்ண இடைவைக்கவேண்டாமென்று சிலமத்தியஸ்தர் சொன்னதினாலே நியாயப்படி தீருமென்று அனுப்பியிருக்கிறார்களாம், இப்படி அவர் வீணானகாரியத்துக்குத் துணிந்து இருக்கிறார். ஆகையால் அடியேன் நடக்கவேண்டிய புத்திக்கிது புத்தியென்று உத்தரவாகவேண்டியது. சித்தமறியத் தெரியப்படுத்திக் கொண்டேன். உத்தரவானபடி நடந்து கொள்ளுகிறேன். வேணும் அநேகஞ் சலாம்.

---

என்னவென்றால் என்தாயின் கூடப்பிறந்த என் மாமனாரிறந்துபோன பின்பு அவருடைய பெண்சாதியையும் மகளையும் நாங்கள் கூட்டிக்கொண்டு வந்து எங்களுடைய வீட்டில்ச் சேர்த்து வைத்து அந்தப்பிள்ளையை எனக்கு

விவாகஞ் செய்யும்படியாய்த்தீர்மானித்துத்திட்டமாயுடம்படிக்கை செய்திருந்தது. அப்போது அதற்கு ஐந்து வயது. இப்படியாக அந்தப்பிள்ளையை எனக்கு விவாகஞ்செய்யத்திட்டஞ்செய்து அந்தப்பிள்ளையுந்தாயும் எங்களிடமாயிருக்க சுவிசேஷபுரத்தில் என்சகோதரிக்கு முன்னொருவதலி சவுக்கியத்தப்புண்டான பின்பு ஷை என் சகோதரியும் அவள்புருஷனாகிய விசாரணை சவரிமுத்துபதேசியாரும் தங்கள் வீட்டில் ஷை என் மாமியாரை உதவியாயிருக்கும்படி கேட்டுக்கொண்டதுமல்லாமல் ஷை பிள்ளைக்கும் எனக்கும் விவாகம் நடக்கும்போது அதற்குப்போடவேண்டிய நகைகள் நானே போடுவேனென்றும் வாக்குச்சொல்லியிருந்தார். அந்தப்படிக்கு என்மாமியாரையும் அந்தப்பிள்ளையையும் அனுப்பினோம். அப்படியே அதுமுதல் என் சகோதரி மரிக்கும்வரையும் மரித்தபின்பும் இதுவரையும் அந்தத் தீர்மானத்தின்படியே யிருந்தது. இப்படியிருக்க ஷை விசாரணை சவரிமுத்துபதேசியார் எனக்கு நேமிக்கப்பட்டிருந்த அந்தப்பெண்ணைத்தான் விவாகஞ்செய்யும்படியாய் அபசடமான எண்ணங்கொண்டு அதற்கேற்ற உபாய தந்திரங்கள் செய்துகொண்டுவருகிறதாக சிலகாலத்துக்குமுன் கேள்வியானோம். ஆனால் நானும் எங்கள் தகப்பனார் முதலானவர்களும் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டார்களென்றும், ஒருவேளை மற்றவர்களாலே இப்படிப் பேச்சுண்டாயிருக்கலாமென்றும் இப்படிக் காரியம் எவ்விதத்திலும் நடக்கமாட்டாதென்றும் கபடமில்லாமையினால் நம்பியிருந்தோம். ஆனால் ஷை விசாரணை உபதேசியார் இரகசியமாய்க்கொண்டிருந்த எண்ணத்தை வெளியரங்கமாய்ச் சொல்லவும் இதிலென்ன விரோதம் நேரிட்டாலும் இதையே நடப்பிப்பேனென்றும் சவரிமுத்துப்பிள்ளை யெடுத்த எந்தக்காரியத்தைவிட்டு விட்டானென்றும் ஆங்காரத்துடனே சபதங்கூறினாராம். இதுகாரியங்களை எங்கள் தகப்பனார் மற்றவர்களாலறிந்து அப்படியானால் இனிமேலந்தப் பிள்ளையை அவ்விடத்தில் வைக்கப்படாதென்று யோசித்து போன சனிக்கிழமை காலமே என் தகப்பனார் போய் சமாரியாபுரத்துக்குக் கூட்டிக்கொண்டு வந்தாராம். என் தகப்பனார் கூட்டிக்கொண்டு வந்ததின் பேரில் ஷை விசாரணை உபதேசியார் அதற்கு எதிராக * *. * கலகத்துக்காரம்பமாய்ப் பலரை அனுப்பி மரியாதைத் தப்பான வார்த்தைகளைச் சொல்லச் செய்ததுமன்றி கலகத்துக்கென்று பின்னும் பலரைச் சேகரஞ்செப்தனுப்பவும் எத்தனஞ் செய்துகொண்டிருந்தாராம். இப்படிக் கலகத்துக்கேத்த

* ஓலை முனியில் ஒரு சிறுபத்தி எழுத்து எழுதியிருந்திருக்கிறது அ[illegible] முறிந்துபோய்விட்டது. J. D. S.



ணமாயிருக்கிறதை பொதுவான சிலமனுஷர்கள் அறிந்து என்தகப்பனாரிடத்தில் வந்து: காரியமுண்டானால் கனம்பொருந்திய ஐயரவர்களிடத்திலப் பேசிக்கொள்ளுகிறதுதானே, பொல்லாப்பென்னத்துக்கு; பிள்ளையை விட்டுவிடுங்களென்றுசொல்ல, என்தகப்பனார் இவர்கள் பேசுகிறவார்த்தையின் குறிப்பையும் மரியாதைத்தப்பாய் வார்த்தைபேசி நிற்கிறவர்களுடைய குறிப்பையும் பின்னும் ஒத்தை ஒத்தையாய் வருகிற ஆள்களுடைய குறிப்பையும் பார்த்து கலகத்துக்காரம்பந்தானென்று அறிந்துகொண்டு, கலகத்துக்கு இடங்கொடுத்தால் அவருக்குங்கேடு நமக்குங்கேடென்றுஎண்ணி, பொது மத்தியஸ்தருடைய வார்த்தையின்படியே நியாயத்தைக் கனம்பொருந்திய ஐயரவர்களிடத்தில் பேசிக்கொள்ளலாமென்று தீர்மானித்து, அந்தப்பிள்ளையை அனுப்பிவிட்டார்கள். அந்தப்பிள்ளை எனக்கு நேமிக்கப்பட்டதாய் எனக்குப் பாத்தியமானதாயும் இதுவரையுமிருக்க, ஷை விசாரணை உபதேசியார் இப்படிப்பட்டஎண்ணங்கொண்டிருக்கிறது நியாயமோவென்பதைத்தாங்கள் விசாரித்து அடியேனுக்கு நியாயங் கிடைக்கும்படிசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுகாரியங்களைக் குறித்து என்தகப்பனார்முதலானவர்கள் கனம்பொருந்திய சார்சென்றய்யரவர்களுக்குத்தெரியப்படுத்துவார்களென்பதைக்குறித்தும், கனம்பொருந்திய ஐயரவர்கள் நியாயமானபடி விசாரணைசெய்து தீர்ப்புச்செய்வார்களென்பதைக் குறித்து, எனக்கு நிச்சயமான நம்பிக்கை யுண்டென்பதற்கு சந்தேகமில்லை. அந்தப்பெண் எனக்கென்று நேமிக்கப்பட்டிருந்ததினாலும், நான் தங்களுக்குக் கீழிருக்கிறதினாலும், எனக்காக வேண்டிய காரியங்களைக்குறித்து தங்களுக்குத் தெரியப்படுத்துவது எனக்குக்கடமையாயும் தாங்களெனக்கேற்ற உதவிசெய்வது ஞாயமாயுமிருக்கிறபடியினாலே, தாங்களே தயவுசெய்து இந்தக்காரியத்தில் எனக்கு நியாயங்கிடைக்கும்படியாய் செய்விக்க மிகுந்த தாழ்மையுடனே கேட்டுக்கொள்ளுகிறேன். இதுகாரியம் இப்படி உண்டென்பது

மெய்மீ ௧-உ முனிசப்பிள்ளை எழுதினது: வேதத்தான் ஐயரிட்டத்தில் விசாரணைப்பிள்ளைக்குத்தன்மகளைக் கொடுப்பேன் என்றும் இனி மற்றவர்கள் வீட்டிற்போய்ச் சாப்பிட்டாவிட்டாலும் பெரிய காரியமில்லை என்றும் சொல்லுகிறான் என்றானாம்.

௯-உ நானும்என்மூத்தமகன் மதுரேந்திரம்பிள்ளையும் கனம் சார்சென்ற் ஐயரவர்களிடத்திற்போய் விசாரணைப்பிள்ளையவர்கள் வீட்டிற் பிள்ளைகள் எடுக்கவும் உதவிக்காகவும் விட்டிருந்த அன்னம்மையை விவாக முடிக்கப்போகிறாரென்று சொன்னோம். உடனேஎங்களுக்குஉத்தரவாக, அவரப்படிச் செய்வாரானால் அதுசுத்தஅநியாயமாகிலும் அநியாயத்துக்குத்தக்க பலனையவர்களடைவார்கள், வேறுவழக்குண்டானாற் சொல்லுங்களென்றார்கள், பெண்ணைப்பற்றி, யென்றார்கள் துக்கு, அவர்கள்மூர்கியவர்கள் அநியாயத்தின் கூலியைப் பெறுவார்களென்ற வார்த்தை யொன்றும் போதுமென்று வந்து விட்டோம் வீட்டுக்கு.

‡ ௲௮௱௫௰-ஹூ மெய்மீ ௮-உ, தமிழ் ௲௨௫-ளு சித்திரைமீ ௨௭-உ இளஞ்சனையில் மதுரேந்திரம்பிள்ளை முடி யெடுக்கப்பட்டது.

௨௰-உ நம்முடைய வீட்டிலிருந்து போகமாட்டேனென்ற அருளம்மாளைப் பலவந்தமாய்ப் பிள்ளையவர்கள் கூட்டிப்போனார்கள். தகப்பன் பிள்ளையைக்கொண்டுபோகிறபோது பேச்சென்னவென்று சற்றுத்தூரம் வண்டிப்பிறகாலே போய்த் திரும்பினேன். இப்படியவர்கள் நம்மையகற்றுகிறார்கள். கபடமாய்ஷெ பெண் கட்டிக்கொள்ள வென்றிருக்கிறார்கள்.

ஜூன்மீ ௩-உ சுவிசேஷபுரம் பாக்கியநாதஉபதேசியார் ஷெஅன்னம்மை புத்தியறிந்ததாய் எழுதினார்.

௫-உ காவனூதித்தன்புதூர் பாக்கியங் கலையாளன்மகன் இன்னாசிமுத்துப்பிள்ளைக்குத் தொட்டன்பட்டி ஞானப்பிரகாசம்பிள்ளை மகள் இன்னாசியம்மாளைக் கலியாண முடித்ததாம்.

‡ ௲௮௱௫௰-ஹூ செப்தெம்பர்மீ ௪-உ, தமிழ் ௲௨௬-ளு ஆவணிமீ ௨௰-உ புதன்கிழமை யிரவில், ௰௨-நாழிகைக்குமேல், காலாவது பெண்குழந்தை மதுரேந்திரம்பிள்ளைக்குப் பிறந்தது. சமாரியாபுரத்தில். பேர், எலிசபேத்து மரியம்மாள்.

அக்டோபர்மீ ௮-உ வந்தகாயிதத்தில் ஞானமரியாளை உபதேசிமார் கல்விச்சாலையிலும் ஏசுதாசனை உவாத்திமார் கல்விச்சாலையிலுஞ் சேர்த்திருக்கிறார்கள் என்பதே.

‡ "விசேடசெய்திகள் அடங்கியது, ௲௮௱௪௭-ஹூ முதல்" என்ற ஏட்டிலிருந்து இங்கே சேர்த்திருக்கிறது. J. D. S.



௰௧-உ மூன் மதுரேந்திரம்பிள்ளை நல்லமுத்துபதேசியாரிடத்தில் அடவு வைத்திருந்ததைதான் ௹ மூனேகாலேமாகாணி ப. ௭ கொடுத்துக்கொடியை வாங்கி வந்தேன்.

௰௪-உ காமனூதித்தன்புதூர் இன்னாசிமுத்துப்பிள்ளையும் இன்னாசியம்மாளும் மறுபடி வந்தார்கள். கூட ஆறுபேர் வந்தார்கள். ஐந்துநாளிருந்து சாப்பாடு தலைமுழுக்குப் பலகாரங்களுஞ்செய்து ௰௯-உ சுருள் ௹ கஇ-யும் மற்றுஞ் சாமான்களுங் கொடுத்து வரிசையாய் அனுப்பினோம்.

‡ ௲௮௱௫௰-ஹூ அக்டோபர்மீ ௰௭-உ தமிழ் ௲௨௬-ளு அற்பசிமீ ௯-உ வியாழக்கிழமையன்று பகல் ௰-மணியில் பாளையங்கோட்டைக்கடுத்த முருகன்குறிச்சிப் பெரியதேவாலயத்தில் வடக்குன்குளம் மதுரேந்திரம்பிள்ளை மகன் சமாரியாபுரம் உபதேசி சவரிராயபிள்ளை மகன் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் பாளையங்கோட்டைக்குள்ளிருக்கும் மாசில்லாமணியபிள்ளை மகள் வியாகம்மைக்கும் கலியாணம் முகிந்தது. ஷெ ஆண்டு அற்பசிமீ ௨-உ சாதி ஷெ ஹூ அக்டோபர்மீ ௰௬-உ வடக்குன்குளம் வியாகப்பபிள்ளை குமாரர் சுவிசேஷபுரம் விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்களுக்கும் நேமத்து ஞானப்பிரகாசம்பிள்ளை குமாரத்தி அன்னம்மைக்கும் ஷெ முருகன்குறிச்சிக் கோவிலில் கலியாணம் முடித்தது. கனம் சார்சென்றய்யரவர்கள். பெண்ணைக்கைப்பிடித்துக் கொடுத்தது மதுரேந்திரம்பிள்ளை.

௨௯-உ வலையும் பிள்ளையவர்கள் வீட்டிற் சாப்பிடுகிறதில்லை. நான் ஷெ பிள்ளையவர்கள் என்னைவருந்தினதினாலும் அவர்கள் விசாரணைக்குள் நானுபதேசியாயிருப்பதினாலும் இன்று சாப்பிட்டு வந்தேன்.

நவம்பர்மீ சின்னப்பண்டாரம் வீட்டார் கோவிலுக்கு ஓய்வுநாளிற் செபத்துக்கு வாராமல் ஞானவொளி மூக்கந்தன் பனையிற் பனைக்காய்வெட்டினதினாலும் விசாரிக்கக் கூப்பிட்டதுக்கு உடாசித்ததினாலும் ஷெ சின்னப்பண்டாரத்தின் வீட்டில் ஒரு கடாவைப் பிடித்துச் சபையார் அறுத்துப்போட்டதினாலுண்டான சங்கதி நாசமெல்லாமாயிற்று.

டிசம்பர்மீ ௯-உ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் தங்கள் குமாரன் யாக்கோவு சவரிராயனென்றவனைத் தத்தம்பள்ளி மதுரேந்திரம்பிள்ளை வசமாயனுப்பி வைத்து கொஞ்சம் பத்தியத்துக்கு அரிசியும் அக்தோணியும்கூட அனுப்பினார்கள். ஷெ டிசம்பர்மீ ௪-உ பட்டங் கொடுக்கிறவர்களுக்கு ஓலைகூறுகிற வழக்கத்துப்படி செய்ய சீனிவாசகம்பிள்ளைக்கு ஓலைகூறாமல் நிறுத்தினதாகவும் ௪-உ கேள்வி.

௧௲௮௱௫௰௧-ம் ௵ சனுவரியீ

௧-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய்க் கனம் ஏசுதாசன் ஐயரவர்கள் தானிருக்கிறவர்களுக்குச் சந்திப்புவைத்துக் கண்டபின் தருமசங்கமுங்கூடின பின்பு வீட்டுக்கு வந்தேன்.

௪-௳ விசாரணைப்பிள்ளை வீட்டுக்கு இரண்டு ஆள்த்தலையில் அரிசி காய் கறிகிழங்குபழம் கோலப்பானையொன்றுங் கொண்டுபோய்க்கொடுத்தும் வந்தேனிரவு சாப்பிட்டும் வந்தோம்.

௭-௳ பாளையங்கோட்டை சங்கத்துக்குப் புறப்பட்டுப்போய் மதுரேந்திரம்பிள்ளை வீட்டில் இருந்தோம். அப்போது ஷை என்மருமகள் மரியம்மாளுக்குப் பேதிகண்டு மருந்துகள் வேணது செய்தும் மறுநாள் ௮-௳ மிகுந்த வருத்தமாய்ச் சென்னாத்தில் மருந்துகளெல்லாஞ்செய்து தேசாந்திரி உபதேசியாராகிய மாசில்லாமணியாபிள்ளையைக் கொண்டும் பார்த்துத் தேவகிருபையினாலே மரணவாசலிலிருந்து திரும்பிற்று. சங்கத்துக்குக்கூட்டத்தில் நாங்கள் ஒருவரும் போகவில்லை. கனம் கண்காணியாரவர்கள்வந்திருக்கிறார்கள்.

௰-௳ யன்று தான் சுகப்பட்டாளென்று கண்டோம்-பின்பு சுவிசேஷபுரத்துக்கு வந்து ௰௬-௳ திடப்படுத்தல்யென்று ௰௧-௳ சமாரியாவுக்கு வந்தேன். ஷை சங்கிக்கப்பட்டத்தக்க கண்காணியாராகிய விசோப்பு ஐயரவர்கள் சுவிசேஷபுரத்தில் ௰௬-௳ திடப்படுத்தல் கொடுத்துப்போனார்கள்.

சமாரியாபுரத்திலிருக்கிற சவரிராயபிள்ளைக்குக் கருத்தருடைய ஆசீர்வாதம் உண்டாக வாழ்த்தி யெழுதுகிற உத்தரவு யென்னவென்றால்

பட்டங்கொடுக்கிறது பிப்பாவரியீ ௨-௳யிருக்கும். தான் சேட்டுக் கொண்டபடிக்கு அந்த முன்னுக்கு வந்து பார்த்துப்போட்டுப் போகலாம். ௧௲௮௱௫௰௧-௵ ஜெனுவரியீ ௨௨-௳ முருகன்குறிச்சி.

E. Sargent.

௩௧-௳ நான்புறப்பட்டு சுவிசேஷபுரம்வந்திருந்து ா-ஸ்ரீ பிள்ளையவர்களும் சற்குண உவாத்தியாரும் கன்னிகுளம் சகாயனுபதேசியாருமாக ஆள்வானேரியில் தங்கி பிப்பாவரியீ ௧-௳ மறுநாள் காலையிற் பாளையங்கோட்டையிற் சேர்ந்தோம். முருகன்குறிச்சித் தேவாலயத்திற் பட்டங் கொடுக்கிறதைப் பார்க்க கனம் சார்சென்றய்யரவர்களுத்தரவுப்படிக்கு. ஷை பட்டத்துக்குப் படித்தவர்களில் ஞானவுயிர்ப்பிள்ளைக்கும்க ல்லத்திக்கிணறு யிக்கேலுபதேசியாருக்கும் பட்டங்கொடுக்கிறது நின்று போயிற்றென இரவு சோதனை முடிந்து கேட்டோம்.



௨-௳ மற்ற ஐந்து பேருக்கும் பட்டங்கொடுத்து உதவிக்குருவானார்கள். அவர்களாரென்றால், சினிவாசகம்பிள்ளை, மதுரேந்திரம்பிள்ளை, முத்துசுவாமியாபிள்ளை, ஆபிரகாம் உபதேசியார், பரமானந்தம் உபதேசியார். இரவில் மதுரேந்திர ஐயர் வீட்டில்விருந்து, மாப்பிள்ளை விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்கள், ா-ஸ்ரீ முனிசு இராயப்பபிள்ளை யவர்கள், வீட்டம்மாளும், ஷை சற்குணஉவாத்தியாரும் அவர்மாமனாரும், சகாயனுபதேசியாரும், நாங்களும். ௩-௳ கனம் சார்சென்றய்யரவர்களைக் கண்டுகொள்ளப் போனேன். அவர்களென்னை உபசாரமாய்ப் பார்த்து உங்கள் குடும்பத்துக்கு பெரிய நன்மையுண்டாயிற்று, முன்னிலும் பத்துப்பங்கதிகமாகக்கருத்தருக்கூழியஞ்செய்யவும் கூடியமட்டும் லவுகிககாரியங்களிற் பிரவேசியாதபடிக்குப் பாருமென்றுத்தரவு கொடுத்தனுப்பினார்கள்.

[ "குடும்பத்துக்குப்பெரியநன்மையுண்டாயிற்று". மூத்த அன்னாட்சியவர்கள் எக்காலமும், இதற்கு முன்னும் பின்னும், ஐயாவுக்குக் கர்த்தருக்குள் எல்லாவற்றிலும் எல்லாருமாயிருந்தார்கள். குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் தாய்க்குத் தாயும் தகப்பனுக்குத் தகப்பனுமாயிருந்தார்கள். அவர்கள் அன்பும் அருமையும், உருக்கமும் இரக்கமும், அவர்களால் கர்த்தர் நமக்கருளிய நன்மையும் மேன்மையும், யாரால் சொல்லிமுடியும். அவர்கள் ஒருதனிக்காகிதத்தில் சுருக்கமா யெழுதிவைத்திருக்கிற தங்கள் சரித்திரத்தை இங்கேசேர்த்திருக்கிறது. அவர்கள் ௰௭-வயசுமுதல்ஐயாவுக்கெழுதின காகிதங்கள் இப்பொழுது இருக்கிறவைகளில் அவர்கள் பட்டம் பெற்றகாலம் வரையுள்ள காகிதங்களையும் பின்னாலே சேர்த்திருக்கிறேன். J. D. S. ]

நான் ௧௲௮௱௨௨ ௵ * பெப்புரவரியீ என் தகப்பனார் தாயார் ரோமான் மார்க்கத்தாராயிருந்த காலத்திலே வடக்கன்குளம் என்னுமூரிலே பிறந்து அங்கேயே ஞானஸ்நானம் பெற்றேன். நான் சிறுவனாய் ஐந்து வயதுள்ளவளாயிருக்கும்போது அவ்விடத்திலேயுள்ள உரோமான் மார்க்க உபாத்தியாரிடத்திலேபடிக்கும்படியாக பள்ளிக்கூடத்திற்குவைக்கப்பட்டேன். நான்பத்துவயதுள்ளவளாயிருக்குஞ் சமையத்திலே என்தகப்பனார் தாயார் என்சகோதரியை கிறிஸ்து மார்க்கத்திலுள்ள ஒரு உபதேசியாருக்குக் கலியாணஞ்செய்துகொடுக்கச் சம்மதித்துக் கலியாணஞ்செய்து கொடுத்ததினிமித்தம் உரோமான்குருக்கள் கோவிலுக்குப் புறம்பாக்கினார். இந்த சமையத்தில் தகப்பனார் கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். இதினாலே எங்கள் சொந்தக்குடு

* ௧௲௮௱௨௩-௵ என்றிருக்கவேண்டும். J. D. S.

ம்பமான இனத்தாரும் பகைத்தார்கள். ஊரிலே தங்களுக்குள்ளே நேரிடுங் கலியாணம் துக்கம் விருந்து முதலிய காரியங்களிலும் எங்களைச் சேர்த்துக் கொள்ளாமல் உரோமான் குருக்களுடைய சாபமும் பாப்புவானவருடைய சாபமும் வருமென்று புறக்கணித்திருந்தார்கள். இதினாலே அவர்களோடே ஊரிலும் குடியிருக்க மனமில்லாமல் போயிற்று. எனக்கும் படிக்கிறதற்கு இடமில்லாமல் நேரிட்டது. ஆனதால் தகப்பனாரும் புதூருக்கு என்னை என் சகோதரி வீட்டிற்குப்போயிருந்து படிக்கும்படியாக அனுப்பினார்கள். இந்த விதமாய் நான் நம்முடைய மிசியோன் பள்ளிக்கூடத்திலே படிக்கநேரிட்டது. தகப்பனாரோ பாளையங்கோட்டைக்குப்போய் கனம் இரேனியுஸ் ஐயரவர்களுக்குக் காரியத்தைத் தெரிவித்து அவர்களிடத்தில் உதவியிற்சேர்ந்துகொண்டார்கள். பிற்பாடு நானும் அங்கேபோய் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து தமிழ் படித்துக்கொண்டு வந்தேன். தகப்பனார் உபதேசியலுவலுக்கு அனுப்பப்பட்டிருந்த காலத்திலே எனக்கு சுரவியாதியுண்டாயிற்று. வியாதி சுகமானபின் பெலனுண்டாகும் வரையும் நான் படிப்புவிடப்பட்டிருந்தது. அந்த சமயத்தில் கனம் இரேனியுஸ் ஐயரவர்களும் மரித்துப்போனார்கள்.

இப்படியிருக்கையில் எங்கள் இனத்தாரில் ஒருவர் தன்னிடத்திற்கு என்னை வரும்படி கேட்டிருந்தார். எனக்குள்ள பெலவீனத்தினிமித்தம் அந்தப்படிக்குத் தகப்பனார் சிலகாலத்துக்கு சம்மதித்து என்னை அனுப்பினார்கள். நான் போனேன். நான் அங்கேயிருந்த சிலகாலத்துக்குள்ளே எனக்கு நல்ல சுகமும் பெலனுமிருக்கிறதென்றும், என்னை யழைத்துப்போனவரும் அவர் வீட்டாரும் என்னிடத்தில் அன்பாயிருக்கிறார்களென்றும், அவர்களும் என்னை விடமனமில்லாதிருக்கிறார்களென்றுங் கண்டு, நானும் அங்கேயேயிருக்கலாமென்று மனப்பிரியங் கொண்டிருந்தேன். என்தகப்பனார் திரும்ப என்னை அழைத்துக்கொள்ள வந்திருந்தபோது நான் விருப்பற்றிருந்தேனால் அப்படியே நான் அங்கேயிருந்தேனானால், உரோமான் மார்க்கத்தப்பறைக்குள்ளேயே அமிழ்ந்தி மோசமான நிலமையிலே யிருப்பேன். ஆனால் என்னை இரட்சிக்கச் சித்தமானவரும் என்னைத் தமதூழியத்துக்கென்றும் பிரித்தெடுத்தவருமான இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கருத்தருடைய சித்தம்வேறுவிதமாயிருந்தது. எப்படியென்றால்: கனம் இரேனியுஸ்ஐயரவர்கள் மரித்து கனம் சாப்பிட்டர் ஐயரவர்களுஞ் சர்ச்சுமிசியோனைச்சேர்ந்த பின்பு நடந்திருக்கும். ஒரு சமையத்தில் கனம் சாப்பிட்டர் ஐயரவர்கள் சபையைப் பார்க்கும்படியாக என் தகப்பனாரிருக்கிற கிராமத்துக்கு வந்திருந்தபோது, என்னை



முன்பள்ளிக்கூடத்தில் அவர்கள் நன்றாயறிந்தபடியினாலே, என்னைக்காணவில்லையென்று பார்த்து, என் தகப்பனாரிடத்தில் என்னைக்குறித்து அன்பாய் விசாரிக்க, மேற்சொல்லியவைகளைத் தகப்பனார்தெரிவிக்க, கர்த்தர் என்பேரில் வைத்தகிருபையினாலே, வெகுகண்டிப்பாயுத்தரவுகொடுத்து என்னையழைத்துத் தங்களிடத்திற்கொண்டுவந்து சேர்க்கும்படிக்குத் தகப்பனாரை யனுப்பினார்கள். தகப்பனார் நானிருக்கிற இடத்துக்குவந்து, ஐயரவர்கள் உன்னைக்கூட்டிக்கொண்டு வரும்படிக்கு என்னையனுப்பியிருக்கிறார்களென்று சொல்லி என்னை யழைத்துக்கொண்டு வந்து பாளையங்கோட்டையில் கனம் சாப்பிட்டர் ஐயரவர்களுக்கு முன்பாக விட்டார்கள். ஐயரவர்கள் என்னைக் கண்டவுடனே யிழந்துபோன பொருளைக்கண்டு பிடித்தாற்போல் மிகுந்த சந்தோஷப்பட்டு என்னை உதவிக்காரருடைய வகுப்பில் சேர்த்துக்கொண்டார்கள்.

நாற்பதாம் வருஷந்துவக்கமுதல் அங்கேஐயரவர்களிடத்திலிருந்து படித்தேன். இதற்குமுன் படித்தபடிப்பும் கேட்ட பிரசங்கமும் புத்தியும் என் மனதில் முயற்சிப்பட்டிருந்ததில்லை. ரோமான் மார்க்கத்துக்குங் கிறிஸ்து மார்க்கத்துக்குமுண்டாயிருக்கும் வித்தியாசம்: அதாவது ரோமான்மார்க்கத் தப்பரை யின்னதென்றும் கிறிஸ்துமார்க்க சத்தியமின்னதென்றுந் தெரியாது. மந்தாரமாயிருந்தது. ரோமான்மார்க்கத்தை வெறுக்கிற வெறுப்பு அத்தனையாய் மனதிலிருந்ததில்லை. பாவத்தைக்குறித்தும் பாவத்துக்கு வருந்தண்டனையைக் குறித்தும் மனதிற் பயமிருந்தாலும் பாவமன்னிப்புக்குஉரோமான் சமையத்தில்— ... ... ...

வரவர என்மனதில் கர்த்தருடைய வசனம் பலன் செய்தது. இந்தக் காலத்தில் மத்தேயுச் சுவிசேஷமும் எபிரேயர் நிருபமும் பாடங்கொடுத்துவந்தேன், காஞன்தேச விலாசமும். இந்தவகையிலும் மற்றவகையிலும் கனம் சாப்பிட்டர் ஐயரவர்கள் நன்றாய்ப் போதிப்பார்கள். திருச்சபைச்சரித்திரங்களையும் ரோமான் மார்க்கத்தப்பரைகளையும் பற்றிய சரித்திரங்களையும், அந்தந்தச் சமையத்துக்குத் தக்கதாய் வேண்டியபடி சொல்லுவார்கள். ஐயரவர்கள் சொல்லுகிறதுகளைக்குறித்து எனக்கு மலைவாயிருக்கிறதை என் தகப்பனாருக்குச்சொல்லுவேன். அவர்கள் எனக்கு நல்ல நிச்சயமுண்டாயிருக்கத்தக்கதாக உறுதியாய் எல்லாம் உண்மைதானென்று நம்பிக்கையோடே சொல்லுவார்கள். இந்தக்காலத்திலே என் தகப்பனார் திருநெல்வேலியிலே உபதேசியாராயிருந்தார்கள். இதினாலேதான் அடிக்கடி காணவும் பேசவும் எனக்குக்கருத்தர்நல்ல

[illegible] வாய்க்கச் செய்தயிருந்தார். இந்தவகையிலே போதகராலுடையும் போதனை என் தகப்பனாராலே என் மனதுக்கு நிச்சயப்படவுந்தக்கதாக கருத்தர் ஒரு [illegible] செய்திருந்தார். ஆனதால் எனக்குள்ளே கிறிஸ்துமார்க்க விசுவாசமும் வேதத்தின்பேரிற்பிரியமும், படிப்பின்பேரிலுள்ள ஆசையும்போதகர்பேரிலுள்ள அன்பும் நாளுக்குநாள் வரவரப்பெருகுகிறதாயிருந்தது. இக்காலத்திலே சனிக்கிழமைதோறும் அஞ்ஞானிகளுக்குப் போதிக்கும்படியாகப் போனேன் [illegible] கிறிஸ்துமார்க்க— ...

[illegible] மகாகனம் ஸ்பென்சர் கண்காணியாரவர்கள் வந்திருந்தகாலத்திலே நானும் திடப்படுத்தலுக்கென்று போதிக்கப்பட்டு திடப்படுத்தலடைந்தேன்.

இந்தக்காலத்திலே கனம் சாப்ட்டர் ஐயரவர்கள் என்னைப் புளியங்குடிக்கு உபதேசியனுவலைப் பார்க்கும்படியாக அனுப்பினார்கள். எனக்கு உபதேசியனுவலைச் செய்ய ஆசையிருந்தாலும், எனக்கு வயசு காணாதென்றும், அறிவும் போதாதென்றும், சபையாரை நடத்தவும் அவர்களுக்குப் போதிக்கவும் திராணி போதாதென்றும் எண்ணி, என்னிலும் அதிக வயசுசென்றவர்களை அனுப்பவேண்டுமென்றும் என்னை நிறுத்திவைக்க வேண்டுமென்றும் ஐயரவர்களிடத்தில் கேட்டேன். ஐயரவர்களோ எனக்கு அநேகவிதமான வார்த்தைகளாலே புத்தி சொல்லி, என்னைத் தைரியப்படுத்திக் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வாதமான வார்த்தைகளோடே என்னை ஆசீர்வதித்து, செபமண்ணி, கர்த்தர் உன்னோடிருப்பார், நீயவரை நம்பிப்போவென்று சொல்லியனுப்பினார்கள். அந்தப்படியே நான் கர்த்தருடைய கிருபையை முன்னிட்டுப் புறப்பட்டுப் புளியங்குடி சேர்ந்து சிலகாலம் கர்த்தருடைய வசனத்தை எனக்குள்ள திராணிக்குத்தக்கதாய்ப் போதித்தேன். ஆனால் அந்தச்சபையிலே சிலகுறையிருந்தது. காலைச்செபத்துக்குச் சனங்கள் வருகிறதில்லை. ஞாயிற்றில் ஆராதனைக்கு வருகிறதும் ஒழுங்கில்லை. [illegible] ஆராதனைக்கு வருகிறவர்களும் வேலைகளுக்குப் போ[illegible] வருகிறவர்களாயிருந்தார்கள். பாடம் படிக்கிறதற்கும் விசேஷமாய்ப் பெண்பிள்ளைகளில் அநேகருக்கு மனதில்லை. சிலர் ரோமான்மா[illegible] சபையிலே போய்வருகிறவர்களாயிருந்தார்கள். இவர்களுடைய காரியங்களைப்பற்றி அவர்களுக்குப் புத்திசொல்ல, இதுதான் [illegible] வழக்கமென்பதுபோல் சொல்லுவார்கள். விசாரணை [illegible] தெரியப்படுத்தினேன். அவர் எல்லாம் ஒழுங்குப்படுத்[illegible]என்றும், பொறுமையாயிருக்கவேண்டுமென்றும், எனக்கள்



பட்சமாய்ச் சொல்லுவார். அந்த ஊரில் விசாரணை உபதேசியாரும் பதிவாயிருக்கிறதென்று பேர்; ஆனால் அவர் அங்கே நிலையாயிருக்கிறதேயில்லை. அவருடைய சமுசாரம் பிள்ளைகளெல்லாரும் புன்னைவனத்திலே யிருப்பார்கள். ஐயரவர்கள்வரும்போது சமுசாரத்தோடேவந்திருப்பார். அவருடைய சொற்படி நான் இந்தக்காரியத்தில் நடக்கவேண்டியதாயுமிருக்கிறது. இதற்கு முன்னும் நான் ஒருசபையையும் பார்த்திராததினாலே எனக்கு இதுகாரியத்தில் மிகுந்த மலைவாயுமிருந்தது. சபைகளுடைய காரியமும் விசாரணை உபதேசியாருடையகாரியமும் எனக்கு மிகுந்த விசனத்தைக்கொடுத்துக்கொண்டேயிருந்தது. இது காரியத்தை ஐயரவர்களுக்குச் சொல்லாதபடிக்கு விசாரணை உபதேசியார் தாமே சொல்லுவேனென்று இப்படியிருக்கையில், ஐயரவர்கள் கிராமத்துக்கு வந்தார்கள். என்னிடத்தில் சுகசெய்தி விசாரித்துக்கொண்டு சபையின்காரியம் எப்படியிருக்கிறதென்று விசாரித்தார்கள். நான் அவர்களுடைய காரியத்தையும் விசாரணை உபதேசியார் அதைக்குறித்துச் சொல்லுகிற காரியத்தையும் தெரிவித்தேன். ஐயரவர்கள் செபத்துக்குச்சனங்களைவரச்செய்து பாடங்களையுங்கேட்டார்கள். அநேகருக்குப்பாடந்தெரியாது. சிலபெண்பிள்ளைகள் அஞ்ஞானப்பெண்பிள்ளைகள்போலவே யாதொரு கவனமும் இல்லாதவர்களாயிருந்தார்கள். விசாரணைஉபதேசியார்மனைவிக்கு கர்த்தருடைய செபமுதலாய் சரியானபடிசொல்லத்தெரியவில்லை. ஐயரவர்கள் கண்டிப்பாகப் புத்திசொல்லி உடனே கோவிலை அடைக்க உத்தரவுகொடுத்து என்னை நல்லூருக்குப்போகும்படியாக உத்தரவுகொடுத்தார்கள். அந்தப்படியே நான் புறப்பட்டு நல்லூருக்குப்போனேன். ஐயரவர்கள் கிராமங்களுக்குப்போய்விட்டு திரும்பிவந்தபின்பு என்னை நல்லூரிலே உதவி உபதேசியாய் இருக்கும்படி திட்டஞ்செய்தார்கள்.

அங்கேயிருக்கிறது மிகுந்தபிரியமும் ஆறுதலுமாயிருந்தது. அந்தபடிப்புக்கும் பத்திக்கும் மிகுந்த அனுகூலமாயிருந்தது. இந்தக்காலத்திலே எனக்கு இராப்போசனத்தைச்சேரவேண்டுமென்கிற விருப்பமுண்டாயிற்று. இந்த விருப்பமுண்டாயிருந்தும் நான் சேரலாமோ சேரக்கூடாதோ என்கிற ஐயம் என் மனதிலிருந்தது. ஐயரவர்களுக்கு என்விருப்பத்தைச்சொல்லவும் பயமிருந்தது. ஏனென்றால் ஒருவேளை ஐயரவர்கள் சேரக்கூடாதென்று சொல்லுவார்களோ. நான் அதற்குத் தகுந்தவனாயிருக்கமாட்டேன். அவர்கள் என்னிடத்தில் சிலகேள்விகளைக்கேட்டு மிகுந்த எழுப்புதலும் ஏற்ற சிந்தனையுமுண்டாயிருக்கத்தக்கதாகத் தனித்துப்புத்திசொல்லி செபம்பண்ணி இராப்

பிரயோசனத்துக்குச்சேரலாமென்று சொன்னார்கள். இந்தக்காலத்திலே இதற்குமுன் நான் பாவமென்று நினையாதிருந்த சிலதை நான் பாவமென்று உணருகிற உணர்வும் பரிசுத்தம் அடையவேண்டும் என்கிற பிரியமும் எனக்குள்ளுண்டாகியிருந்தது. கிறிஸ்துவின் திரு இரத்தப்புண்ணியத்தினாலேவரும் நீதியினாலேயன்றி வேறுவகையில் பாவமன்னிப்பும் பரிசுத்தமும் நித்தியசீவனும் கிடையாதென்கிற நிச்சயம் எனக்குண்டாயிருந்தது.

௪௨-ம் வருஷம் கனம் சாப்ட்டர் ஐயரவர்கள் சீமைக்குப்போக எத்தனமாயிருந்தகாலத்திலே கனம் மெல்லரய்யரவர்கள் சுவிசேஷபுரத்திலிருந்து நல்லூருக்கு சிலநாள் வந்திருந்துவிட்டுப்போனார்கள். அவர்களும் என்னை நன்றாயறிவார்கள். அவர்கள் கனம் சாப்ட்டர் ஐயரவர்களிடத்தில் எந்தமுகாந்திரத்தினாலேயோ என்னைக்கேட்டிருந்தார்களென்று விளங்கினது. இந்தக்காலத்திலே என் தகப்பனார் சுவிசேஷபுரஞ் சேகரத்திலிருந்தார்கள். கனம் சாப்ட்டர் ஐயரவர்கள் நல்லூரைவிட்டு புறப்படுகிற அன்று நான் ஐயரவர்களைக்காணப்போயிருந்தபோது ஷை ஐயரவர்கள் என்னைப்பார்த்து உன்னை கனம் மெல்லரய்யரவர்கள் கேட்டுக்கொண்டதினாலே அவர்களுக்கு வாக்குக்கொடுத்துவிட்டேன். நீ உடனே புறப்பட்டுப்போகலாம் என்று அனுப்பிவிட்டார்கள்.

அந்தப்படியே நான் புறப்பட்டுச் சுவிசேஷபுரஞ்சேர்ந்து கனம் மெல்லரய்யரவர்களைக்கண்டேன். அவர்கள் நான் போகிறதற்குமுன்னே எனக்கென்று ஒரு ஊரைக்குறித்திருந்தார்கள். அவர்கள் உத்தரவுப்படிக்கு மீனாட்சிநாதபுரம் அச்சம்பாடு என்னும் கிராமத்துக்குப்போயிருந்து அலுவல்பார்த்தேன். அந்த ஊர்ச்சனங்கள் புதிதாய்வந்தவர்களாயிருந்தார்கள், அவர்களுக்கு கர்த்தருடைய வசனத்தைப்போதித்துப் பாடம் படித்துக்கொடுத்துவந்ததில் சனங்கள் கூடியமட்டும் சாக்கிரதையும் ஆசையுமுள்ளவர்களாயிருந்தார்கள். அவ்விடத்திலெனக்கு சரீரசுகத்துக்கு ஒத்துவராதிருந்ததுமன்றி வியாதியும் நேரிட்டதினாலே அதைவிட்டு மாற்றப்பட்டு,

கிருபாபுரத்துக்குப்போனேன். அங்கே சிலகாலமிருக்கையில் ௰௫ வீட்டுக்கு அதிகமாய் இட்டமொழியில் மறவருஞ், சில சாணாருமாக புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்துக்கு ௫௰ வீட்டுக்காரர் வரையும் வந்ததையிட்டு கனம் சார்ஜென்று ஐயரவர்களாலே அவ்விடத்திற்கு மாற்றப்பட்டுப்போனேன். சாணார் நான்போனதின்பின்பு வந்தார்கள், ௨௰ வீட்டுக்கதிகம். அந்த ஊர்ச்சனங்கள் துவக்கத்திலே நல்ல சாக்கிரதையும் விருப்பமும் சந்தோஷமும்



உள்ளவர்களாயிருந்ததுமன்றி செபத்துக்குவருகிறதிலும்பாடம்படிக்கிறதிலும் வெகு சாக்கிரதையாயிருந்தார்கள்.

௪௯-ம் வருஷங்கடைசியில் குருப்பட்டத்துக் கல்விச்சாலைக்குப்படிக்கப் போகும்படியாக கனம் சார்ஜென்று ஐயரவர்களாலும் கனம் ஆப்ஸ் ஐயரவர்களாலும் கனம் தோமாஸ் ஐயரவர்களாலும் கனம் டென்று ஐயரவர்களாலும் கனம் பெற்றிற்று ஐயரவர்களாலும் சோதிக்கப்பட்டுச் சேர்க்கப்பட்டேன். கனம் பெற்றிற்றய்யரவர்கள் நவம்பர் ௴ முதல் ஜனுவரி ௴ வரை படித்துக் கொடுத்தார்கள். ஜனுவரி ௴ அவர்கள் சீமைக்குப்புறப்பட்டுப்போனதோடே விடுமுறைவிட்டு; ௫௰-ம் ௵ துவக்கமுதல் (பெப்புருவரி ௴ முதல்) கனம் சார்ஜென்று ஐயரவர்களாலே படிப்பிக்கப்பட்டு ௫௧-ம் வருஷம் பெப்புருவரி ௴ ௨௰ பாளையங்கோட்டைத் தேவாலயத்தில் கர்த்தருடைய கிருபையினாலே பட்டம்பெற்று ஆசீர்வாதபுரஞ் சேகரத்துக்கு அனுப்பப்பட்டு அந்தச்சேகரத்திலே கனம் சார்ஜென்று ஐயரவர்கள் கனம் தோமாஸ் ஐயரவர்கள் விசாரணைக்குள்ளிருந்து அந்த வருஷமுழுவதும் கர்த்தருடைய ஊழியத்தைச்செய்து

௫௨-ம் ௵ ஜனுவரி மாசத்திலே, சுரண்டை கனம் பேரன்புருக்கு ஐயரவர்கள் விசாரணைக்குக் கீழாக பனைவட்லி [வடதிருநெல்வேலி என்னப்பட்ட முழு]ச்சேகரத்துக்கனுப்பப்பட்டு ௫௫-ம் ௵ வரையும் அந்தச்சேகரத்திலேயிருந்து தேவப்பணிவிடையை நடப்பித்து
௫௫-ம் ௵ துவக்கத்தில் இந்தச் சுரண்டைச்சேகரத்துக்குவந்து கர்த்தருடைய இரக்கத்தினாலே நாளது வரையும் அவருடைய ஊழியத்தை அவர் எனக்குக்கொடுத்த திராணிக்குத்தக்கதாய் அவருடைய ஒத்தாசையை வேண்டிக்கொண்டுசெய்துவருகிறேன்.

இந்தக்காலங்களில் நான் கல்விச்சாலையிலிருந்தகாலம் எனக்கு மிகவும் பிரயோசனமுள்ளதாயிருந்தது. அது பொன்னானகாலமென்று புகழப்படத்தக்கது. அதிலெனக்கு நல்லபடிப்பு, வாசிப்பு, யோசிப்பு, தியானிப்பு, செபிப்பு முதலியதுகளுக்கு நல்ல சாவகாசங்கிடைத்திருந்தது. கனம் சார்ஜென்று ஐயரவர்கள் மிகுந்த அன்போடும் பிரயாசத்தோடும் இரவும் பகலும் எல்லாருக்கும் எங்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை உண்டாகத்தக்கதாகவும் கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாகத்தக்கதாகவும் பலவகையிலும் நன்றாய்ப்போதித்தார்கள். அநேகத்தை எழுதியும்வைத்தார்கள். ஓய்வுநாள் பிரசங்கத்திலும் எங்களுக்கொருபங்காயிருக்கும். மீதியானநேரமும் ... ...
பிரயோசனமாக்குவார்கள்.

அதை யின்னபடியென்று விபரஞ்சொல்ல என்னாலில்லை. மொத்தமாய்ச்சொன்னால், அவர்களாலே இரட்சிப்பின் சுவிசேஷப்பொருளும் உபதேசத்தெளிவும், சத்தியத்துக்குறிய விசுவாசத்தைரியம் நியாய வைராக்கியம், இதுமாத்திரமல்ல, தேவபயம் பிறர் சிநேகம் மனத்தாழ்மை உண்மை பொறுமை இச்சையடக்க முதலிய ஆவிக்குரிய நன்மைகளும் அதிகமதிகமாய்ப் பெருகிவளருகிறதற்கு ஏதுவாயின. இதற்காக நான் கர்த்தருக்கு நன்றியறிந்தவனாயிருந்து அவருக்குத்தோத்திரஞ்செலுத்துகிறதோடே, கனம் சார்ஜென்று ஐயாவர்களுக்கும் நன்றியறிதலைச்செலுத்தக் கடனாளியாயிருக்கிறேன். இந்தக்காலத்திலும் சிலபல சோதனைகளும் துன்பங்களும் நேரிட்டன. ஆனால் அந்தந்தச் சமயத்துக்கேற்ற போதனை விசாரணை முதலிய ஆறுதலுக்குரிய கிருபை எத்தனங்கள் உண்டாயிருந்தன.

---



+

மகாகனம்பொருந்திய சங்கிக்கப்படத்தக்க மக-ா-ா- மானிய ா-ஸ்ரீ ஐயா அவர்களுக்கு அடியேன் மதுரோந்திரம் எழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பமென்னவென்றால்

இப்பவும் நானுமிவடத்திலுள்ளவர்களுங் கர்த்தருடைய கிருபையினால் தங்களுடையவேண்டுதலினாலும் சுகமேயிருக்கிறோம். தாங்களுமப்படியே சுகஞ்செயலாய்போய்வந்த சமசாரத்துக்கு யெழுதியனுப்பவேண்டுமென்று மன்றாடுகிறேன். இது நிற்க, தாங்களவடத்திற்கு வந்துவிட்டுப்போனது முதல் அக்காளும் அத்தானும் ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தையில்லாமலுஞ் சண்டையுஞ் சல்லியமும் பண்ணிக்கொண்டிருந்ததாகவும் கேள்விப்பட்டேன். அதைக்குறித்து அத்தானும் யெனக்கொருகாகிதம் எழுதினார்கள். நானுமதற்கு யிசைவாக ஒரு காகிதமெழுதினேன். இந்தகாரியத்தைக்குறித்து அக்காளிடத்திலுங்கேட்கவும், அவள் சொல்லாவிட்டாலும் பக்கத்திலும் விசாரித்து உடையாத்தேவர் வீட்டிலும் ரெட்டியார் வீட்டிலும் பூலிடத்திலுந் திட்டமாக விசாரித்துக்கொள்ளவும். அக்காளிருவுயிராயிருக்கிறபடியினாலே தங்களுக்கு பலவிதயோசனை யுண்டாகும், யெப்படியிருந்தாலும் தாங்களந்தப்பாதை வந்ததினாலே யெல்லாவற்றையும் விசாரித்துக்கொண்டு தாங்களிவடத்திற்குவந்தால் எல்லா சமசாரமும் பேசிக்கொள்ளலாம். அப்போது எல்லாக்காரியங்களுந் தங்களுக்கு விளங்கும். எல்லாம் தாங்கள் கட்டளையிட்ட புத்திப்படி நடந்துகொள்கிறேன். அல்லாமலுஞ் சித்தியும் பிள்ளைகளுஞ் சுகமேயிருக்கிறார்களாந் தம்பியுஞ் சந்தோஷத்தோடேயிருக்கிறானென்று பயித்தியகாரராயப்பபிள்ளை நேத்துச் சொன்னார். தாங்கள் சீக்கிரமாய் வந்துவிட்டுப்போனால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். தாங்கள் கட்டளையிட்ட புத்தியின்படி நடந்துவருகிறேன். இப்படிக்கு, மதுரேந்திர-மிகுந்தவணக்கத்துடனே முழங்கால் படியிட்டு தோஸ்திரம். மற்றும் அக்கா அம்மைக்கும் அத்தானவர்களுக்கு மிகுந்தவணக்கத்துடனே தோஸ்திரம். யென்னைக்கேட்டவர்களுக்கும் தோஸ்திரம். அச்சங்குண்டு உபதேசியார் பெரியநாயகம்பிள்ளையினுடைய மாமியார் தெக்குவீட்டிலிருந்தவளிறந்துபோனாள். இன்றைக்கு ௰௬ நாளாச்சுது. எனக்குச்சிரங்குவந்திருக்கிறது. தங்களுடைய சரீரசவுக்கியத்தைக்குறித்தும் எழுதியனுப்பவும். இப்படிக்குத் தாழ்மையுள்ள மதுரேந்திரம்.

௲௮௱௪௰-ஞு நவம்பர் மீ ௩௰.

இவை: சுவிசேஷபுரத்தில் வந்திருக்கிற மிகவும் கனம் சங்கிக்கப்படத் தக்க கனம் அய்யா அவர்கள் சவரிராயபிள்ளையவர்களிரக்கமுள்ள சமுட்சமெத்துக்கு வருவது.

+

மகாகனம்பொருந்திய மக-ா-ா- மானிய ா-ஸ்ரீ சங்கிக்கப்படத்தக்க அய்யா அவர்கள் சமட்சமத்துக்கு அடியேன் மதுரோந்திரமிருந்த வணக்கத்துடனே தோஸ்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பமென்னவென்றால்

நானுமிவடத்திலுள்ளவர்களுஞ் சேமந் தாங்களுமவடத்திலுள்ள அக்காமுதலானவர்களுமப்படியே சேமமாயிருக்கிறசெய்திக்கு மென்மேலும் எழுதியனுப்பவேணுமென்று மன்றாடுகிறேன். மேலும் தாங்களெழுதியனுப்பின உத்தரவு வந்துசேர்ந்து வாசித்துப்பார்த்ததினாலே சகலசெய்தியுமறிந்தேன். அதிற்கண்ட ரூபாய் மூன்றுதான் கொடுத்திருக்கிறேன். இன்னம் இரண்டுகொடுக்கவேணுமென்று எழுதியிருந்தேன். இப்போது ஒரு ரூபாயிருக்கிறது. டிசம்பர் மாச படியிலும் ஒரு ரூபாய் மிஞ்சும். இவ்விரண்டு ரூபாயையுங்கொடுத்து அந்தக்கடனையடைக்கவேணும். பின்னும் கல்லத்திக்கிணறு விசாரணை உபதேசியாருடைய தமையன் வந்தானவனும் ரூபாய் கேட்டான். பின்னாலே ஆகட்டுமென்றுசொல்லியிருக்கிறேன். மழைகாலமாயிருப்பதினாலேபலசிலவிலுங்கடைவிறகு வாங்குகிறதிலும் ஒன்னரைரூபாய் செல்லுது. மற்ற காரியங்களைக்குறித்துஞ் சீட்டெப்போடுகிறதைக் குறித்தும் பேசினதுக்குப் பலதொந்தரவாவுவந்து கேரிட்டுக்கொண்டேயிருக்கிறது. எவ்விதமுங் கர்த்தருக்குச் சித்தமுண்டானால் வருஷப்பிறப்பு முகிந்தபின்சீட்டுப் போடுகிறதற்கு எத்தினம்பண்ணவேணும். அல்லாமலும் அக்காளுடைய காரியங்களைக் குறித்துந் திட்டமாயெழுதியனுப்பவும். இது சிர்க ஞானப்பின்னையும் அவருடைய மாமியாளும் வடக்கன்குளத்துக்கு பாளையங்கோட்டைப் பாதைவந்துபோனார்களென்று கோவிலுக்குப்போயிருந்த இந்த வீட்டு ஆத்தாள்சொன்னாள். அன்புள்ளவளானால் என்னைப்பாராமல்போவாளா. அவளுமப்படி அவளுடைய பிள்ளைகளுமப்படியேயிருக்கிது. அல்லாமலுஞ்சிரங்குக்கு மருந்துகொடுத்தனுப்பினால் நலமாயிருக்கும், இங்கேயிருக்கிற பண்டிதன் விளக்கமில்லை, அவனொருமருந்துகொடுத்தான். அது சாப்பிட்டபின்



அதிரமாயிருக்கிது. சின்னய்யாவுக்குமப்படித்தான். அல்லாமலும் பொட்டிவாங்கவேணுமென்று சொல்லியும் வாங்கவில்லை. யிருக்கிற வீட்டின் கிலமை தங்களுக்குத்தெரியவரும். ரூபாயிருந்தால் வாங்கலாம். இப்போது விபரித்து எழுதநேரமில்லை. பின்னாலே எழுதுவேன். எல்லாக்காரியங்களுக்கும் புத்தி கட்டளையிட்ட உத்தரவுபடி நடந்துகொள்கிறேன். வாத்தியார் பெண்சாதி அன்னம்மை இரண்டு மூன்று நாள் சவுக்கியமில்லாமல்கிடந்து இப்போது சவுக்கியமாயிருக்கிறாள். மற்ற யாவரும் சுகமேயிருக்கிறார்கள். வேறே விசேஷமில்லை. இப்படிக்கு மதுரோந்திர மிருந்த வணக்கத்துடனே தோஸ்திரம். அம்மை அக்காளுக்குமப்படியே தோஸ்திரம்.

௲௮௱௪௰-ஞு டிசம்பர் மீ ௨௰

‡ இவை. சுவிசேஷபுரம் விசாரணையைச் சேர்ந்த சத்தியநகரத்திலிருக்கும் மக-ா-ா- மானிய ா-ஸ்ரீ மகாகனம் சங்கிக்க-அய்யா அவர்கள் சமட்சமத்துக்கு வருவது. அனுப்பு குட்டத்துறை.

‡

மிகவும் கனம்பொருந்திய மக-ா-ா- மானிய ா-ஸ்ரீ சங்கிக்கப்படத்தக்க ஐயா அவர்களுக்கு அடியேன் மதுரோந்திர மிருந்தவணக்கத்துடனே தோஸ்திரஞ்செய்து யெழுதிக்கொள்ளும் தாழ்மையான விண்ணப்பமென்னவென்றால்.

நானவடத்திலிருந்து பிறப்பட்டுவந்து பாளையங்கோட்டையிலாறுமணிக்குவந்துசேர்ந்தேன். காலையில் ஐயரவர்களைக்கண்டேன். அவர்களுன்னை ஆத்திவழிக்கு அனுப்பியிருக்குது யென்றுசொன்னார்கள். நான்போகிறதற்கு இன்னம் படிக்கவேணும்; அல்லாமலுஞ் சவுக்கியமுமில்லையென்று சொன்னேன். அதற்கு கொஞ்சக்காலத்துக்குமாத்திரமிரு, பின்னாலேவந்து படிக்கலாமென்றார்கள். அப்படியானால் ஒரு உபதேசிக்குக்கீழ் உதவியாயிருந்தால் நல்லதுஎன்றுசொன்னேன். அதற்கு நானுமப்படித்தான் யெண்ணுகிறேனென்றார்கள். ஆகிலுமிப்போது போகச்சொல்லுகிறார்கள். எனக்கு அந்த வீக்கம் கொஞ்சமதிகமாயிருக்குது. மருந்துசாப்பிடுகிறதற்கும் என்னைமுழுகுகிறதற்குந் தொந்தரவாயிருக்கிது. ஐயரவர்களுடைய குணந்தெரியுமே. இதுசெய்தியை அத்தானவர்களுக்குஞ்சொல்லவும், அவர்களுக்கு மெழுதியிருக்கிறேன். நீங்களுஞ் சொல்லவேணும். விபரமா யெழுதுகிறதற்கு நேரமில்லை, நாம்பேசிக்கொண்டபடிக்கு பின்னாலே தம்பியை அனுப்பவும்;மிருந்த வணக்கத்துடனே தோஸ்திரம் அம்மைக்குமப்படியே.

௲௮௱௪௧-ஞு பிப்பிறவரி மீ ௨௰    இப்படிக்கு மதுரோந்திரம்.

இவை. சத்தியநகரத்திலிருக்கு மிகவும் கனம்பொருந்திய சங்கிக்கப்படத்தக்க கனம் ஐயா வவர்கள் சவரிராயபிள்ளையவர்களிடக்கமுள்ள சமுகத்துக்கு வருவது.

---

+

மகாகனம்பொருந்திய சங்கிக்கப்படத்தக்க மக-ா-ா- மானிய ா-ஸ்ரீ அய்யா அவர்களுக்கு அடியேன் மதுரேந்திர மிருந்தவணக்கத்துடனே தோஸ்திரஞ்செய்து வெழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம். அடியேனவடத்திலிருந்து பிறப்பட்டுவந்து மரிய சவரிமுத்தையும் கண்டுபேசிக்கொண்டு திருநெல்வேலியில் சட்டையுந்தைத்துக்கொண்டு சனிக்கிழமைபொழுதடைந்து ஐந்து நாளிகைக்கு ஆலங்குளம் வந்துசேர்ந்தோம். மறுநாள் காலமே கனம் ஐயரவர்களைகண்டுபேசிக்கொண்டு திங்கள்கிழமை முதல் உதவியிற்படித்துவருகிறேன். நானிருந்தவூருக்கு இன்னமுபதேசியனுப்பவுமில்லை. சமையல் சாப்பாடு கல்லூரிலேதான், அங்கேயில்லை. அல்லாமலுஞ் சம்பளம் வரவேண்டியதுதெரியுமே, அது யேசுதாசன்பிள்ளைவசமாய் கொடுத்திட்டார்கள். இப்போது இருந்தாலும் தாமிசமில்லாமல் வந்துசேர்ந்துபோம். அதற்குயேதுவில்லை, வடக்கன்குளத்திலிருந்து சின்ன அய்யாவந்தால் கொண்டு புத்தகத்தை வெழுதிக்கொண்டு கொடுக்கச்சொல்லவேணும். பண்ணிகுளத்திலிருந்து அண்ணாவி தேவசகாயம்பிள்ளை இன்றைக்குவந்தார். அவரிடத்திலெல்லாருஞ் சுகமேயிருக்கிறார்களாவென்றுகேட்டேன். அதற்கு யெல்லாருஞ்சுகமேயிருக்கிறார்களென்றுசொன்னார். வேறேவிசேஷமில்லை. ஆகையால் அடியேன் நடக்கவேண்டிய புத்திக்கு இன்னதென்று கட்டளையிட்டு உத்தரவாகவேண்டியது. ஆகையினாலேவேணும் விண்ணப்பம்.

இப்படிக்கு மதுரோந்திரம்

மிருந்தவணக்கத்துடனே தோஸ்திரம். அவடத்திலுண்டாகிய பெரியோர்களுக்குமென்னுடைய வந்தனத்தைச்சொல்லவும். ௲௮௱௪௧-ஆ செப்டம்பர் ௴ ௨௧-உ. நல்லூர். அந்த மருந்தைசெய்து அனுப்புகிறதற்கு யேதுவிருந்தால் அப்படிசெய்யலாம்.

---

+

மகாகனம்பொருந்திய சங்கிக்கப்படத்தக்க அய்யா அவர்களிடக்கமுள்ள சமட்சமத்துக்கு அடியேன் மதுரோந்திரம் மிருந்தவணக்கத்துடனே முழங்காற்படியிட்டு அநேகவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து வெழுதிக்கொள்ளுந் தாழ்மையானவிண்ணப்பம்.



அடியேனவ்விடத்திலிருந்து வந்தபின்பிரண்டு நாள் சுவிசேஷபுரத்துக்குப்போனேன். அப்பொழுது அக்காள் பலவிதமாய்ச்சொன்னாள். பிற்பாடு நானிருக்கிறவரைக்குமப்படித்தான் வருவார்கள், நானும் சாப்பாடுபோடத்தான்செய்வேனென்று சொன்னேனென்றாள். ஷை இரண்டாம் நாள்வருகிறபோது இன்னாசியம்மாளை சத்தியநகரத்திலிருந்து சோறுகொண்டுவரச்சொல்லி அங்கேதானே சாப்பிடுவென்று சொன்னான். கனம் பொ........ நான் போயிருக்கிறபொழுது ஒன்றும்சொல்லுகிறதில்லை. அவளிடத்தில்மாத்திரந்தொந்தரவுசெய்கிறது. இன்றைக்குக் காலமே சுவிசேஷமுத்து அழுதுபடிகொண்டுவந்தான். யென்ன சமாசாரமென்று கேட்கும்போது ஊரிலிருந்து அரிசிகொடுத்து சுவிசேஷபுரத்தில் சேர்க்கும்படிக்குச் சொன்னார்கள், அங்கே, யிங்கே கொண்டுபோய்க்கொடுவென்று, அனுப்பினார்கள்; ஆனதினாலே இங்கேவந்தேனென்று சொன்னான். கர்த்தர் நல்லவர், அவர்செய்வதெல்லாம் நன்மையாயிருக்குமென்று, சந்தோஷப்பட்டுக்கொண்டேன். இன்றைக்கு சாப்பாடு இருக்கிறது. நாளை நானங்கேவருவேன். கருத்தருக்குச் சித்தமெப்படியோ அப்படி. வேட்டிக்கு நான் சமட்சமத்தில் தெரியப்படுத்திக்கொண்ட சமாசாரத்துக்கு நானங்கேயிருந்துவருகிறபோது ஒரு ரூபா கொடுத்து வேட்டி சவடு உ, துண்டு க, நெய்யும்படி திட்டஞ்செய்திருக்கிறது. கட்டில் கூட்டினவனுக்கு கூ வ கொடுக்கவேணும். செல்லனைச் சிலவில் கூ வ...கொடுக்கவேண்டியதிருக்கிறது. யெல்லாமுகாதாவில் விபரமாய் தெரியப்படுத்திக்கொள்வேனென்று நம்பியிருக்கிறேன். அக்காள் பிள்ளை பெண்பிள்ளைக்கும் ஞானப்பிரகாசத்துக்கும் மண்ணன்வந்து சரிந்துயிருக்கிறது. ஆகையாலடியேன் நடக்கவேண்டிய புத்திக்கு இது புத்தியென்று திருபங்கட்டளையிட்டருள உத்தரவாகவேண்டியது. ஆகையினாலேவேணும் விண்ணப்பம் மிருந்தவணக்கத்துடனே தோத்திரம்...

௲௮௱௪௨-ஆ நவம்பர் ௴ ௪-உ காலையில். இப்படிக்குத் தங்களுடைய ஊழியனாகிய மதுரோந்திரம். அச்சம்பாடு மீனாட்சிபுரம்.

இவை: சத்தியநகரத்திலிருக்கும் மகாகனம்பொருந்திய சங்கிக்கப்படத்தக்க மக-ா-ா மானிய ா-ஸ்ரீ அய்யா அவர்களிடக்கமுள்ள சமட்சமத்துக்கு வருவது. அனுப்பு மீனாட்சிபுரம்.

---

+

மகாகனம்பொருந்திய சங்கிக்கப்படத்தக்க மக-ா-ா- மானிய ா-ஸ்ரீ அய்யா அவர்களிடக்கமுள்ளசமட்சமத்துக்கு அடியேன்மதுரோந்திரம்மிருந்த

வணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

அடியேன் முந்நாளுன் கவிசேஷபுரத்திற்குப்போயிருந்தேன். அநேகம் பேச்சுக்கள் நடந்தது. அந்தவிபரமிப்பொழுது எழுதுகிறதற்கு நேரமில்லை. இதுந்தவிர அண்ணாட்சி சொக்கலிங்கம்பிள்ளையவர்களுமன்றைக்குவந்திருந்தார்கள். அவர்களிடத்தில் தனித்து சிலமுகாந்தரங்களைச்சொன்னேன். அவர்களுஞ் சிலதைச்சொன்னார்கள். நானுமறியாததற்குமுன் நடந்தகாரியம், அல்லாமலும் நான் ஒன்றும்சொல்லக்கூடாது, அய்யா அவர்களிடத்தில் கேட்க வேணுமென்றுசொன்னேன். தங்களை வரவிக்கும்படிக்குச் சொன்னார்கள். இங்கேவாமாட்டார்களென்றுசொல்லி இட்டமொழிக்கு வரும்படிக்கு யெழுதியனுப்புகிறேனென்றுசொன்னேன். என்றைக்கு என்றுகேட்டதற்கு; திங்கள்கிழமைக்குயென்று சொல்லியிருக்கிறேன். தாங்கள் தயவுசெய்து இன்றைக்கு இட்டமொழிக்குவந்து அண்ணாட்சி சொக்கலிங்கம்பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்து சேரக்கேட்டுக்கொள்ளுகிறேன். அடியேனும்வந்துசேருகிறேன். தங்கள்முகதாவில், நடந்தவர்த்தமானங்களைச்சொல்வேனென்று நம்புகிறேன். நேத்தே ஆளனுப்பப்பார்த்தேன். கூடாதேபோச்சுது. தாங்கள் எவ்விதத்திலும் இட்டமொழியூர்வரையில்வந்துபோக மன்றாடுகிறேன். அவசரமாயெழுதினேன். இப்படிக்குத் தங்களூழியன் மதுரோந்திரம்.

௲அ௱சஉ-௵ ஜனவரி௴ கூ-உ

இவை. சத்தியநகரத்திலிருக்கு மகாகனம்பொருந்திய மக-ா-ா மானிய ா-ஸ்ரீ கனம் ஐயா அவர்கள் இரக்கமுள்ள சமட்சமத்துக்கு வருவது. அனுப்பு மீனாட்சிநாதபுரம் (அவசரம்)

---

இயேசுவே இரட்சியும்.

மகாகனம்பொருந்திய மக-ா-ா-ஸ்ரீ மிகவும் சங்கைபொருந்திய அய்யா அவர்களிரக்கம் நிறைந்தசீர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரோந்திரம் மிகுந்த ஒடுக்க வணக்கத்துடனே இஸ்தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுகிற மிகவும் தாழ்மையான விண்ணப்பம்.

அடியேனும் இவ்விடத்திலுள்ள மற்றயாவருங் கருத்தருடைய கிருபையினாலேயும் தங்களுடைய வேண்டுதலினாலேயுஞ் சேமம். அப்படியே தாங்களும் மற்றயாவருஞ் சேமமாயிருக்கிற செய்திக்கு எழுதியனுப்பக்கேட்டுக் கொள்ளுகிறேன். அடியேன் அவ்விடத்திலிருந்து அனுப்பிவிச்சுக்கொண்டு வந்ததுசரியே. அன்று பன்னிரண்டு மணிக்கு ஆள்வானேரிவந்துசேர்ந்து



அங்கே வந்திருந்த கனம்பொருந்திய பெற்றிற்றையராவர்களையுங்கண்டு மறுநாள்காலமே முருகன்குறிச்சிவந்துசேர்ந்தோம். நாங்கள் சமையல்பண்ணிச் சாப்பிடும்படிக்கு முன் முத்துசுவாமியாபிள்ளையிருந்த வீட்டைச்சுத்தஞ்செய்துகொடுத்திருக்கிறார்கள். அதிலே நாங்களிருவரும் ா-ஸ்ரீ பேதுருப்பிள்ளையவர்களுஞ் சமையல்பண்ணிச் சாப்பிடுகிறோம். ௵ ௴ உ-உ கமிட்டியாரவர்கள் எங்களை ஒப்புக்கொண்டெழுதிய உத்தரவு வந்துசேர்ந்தது. கூ-உ வியாழக்கிழமை முதல் கல்விச்சாலை ஆரம்பமாகி படித்துவருகிறோம். நாங்கள் படித்துவருகிறது வேதசரித்திரம், வேதசாஸ்திரம், இங்கிலீசு, இலக்கணம், பூமிசாஸ்திரம், கம்போசிஷன் முதலிய எட்டுவகையான பாடங்கள் படித்துவருகிறோம். நான்படிக்கிறவைகள் மனதிலேபதியவும் ஆத்துமாவுக்குஞ் சரீரத்திற்குப் பிரயோசனமுள்ளதாயிருக்கவும்வேண்டுமென்று செபம்பண்ணக்கேட்டுக்கொள்ளுகிறேன். அவனுக்கு ஞானோபதேச வினாவிடை முழுவதும் பாடமாயிருக்கும்படி படிப்பிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன். கருத்தருடைய இரக்கத்தினாலே இவ்விடத்திலும் விசேஷவியாதிகளில்லை. அல்லாமலும் எங்களுக்குப் படிப்பித்துக்கொடுக்கிறதிலே மிகுந்தமரியாதையாயுந் தயவாய்ப்படித்துக்கொடுத்துவருகிறார்கள். படிக்கிறவர்கள் வெள்ளாளர் ச, சாணார் உ, ஆ ௬. இன்னமுமந்த பரமானந்தம் உபதேசியார்வரவில்லை. மற்ற ஐந்துபேரும் படித்துவருகிறோம். வேறே விசேஷங்களில்லை. மரியசவரிமுத்துவந்தானென்கிற செய்திக்கும் ஆத்தாளிருக்கிறாளென்கிறசெய்திக்கும் எழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களில் ஒவ்வொருவருக்கும் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடுமடங்கிய புத்தகம் (க) வெள்ளைத்தாள் புத்தகம் (க) வேதசரித்திரம் (க) சங்கீதம் (க) செபபுத்தகம் (க) பென்கத்தி (க) இங்கிக்கூடு (க) காகிதம் பென்னிவைகளெல்லாங் கொடுத்திருக்கிறார்கள். (கட்டில் நாக்காலி மேசைபெட்டி முதலானவைகளைக்கொடுக்கவேண்டுமென்பதைக்குறித்து இயோசனையாயிருக்கிறார்கள். கருத்தருடைய சித்தம் எப்படியோ அப்படியாகும். ஆகையால் அடியேன் நடக்கவேண்டிய புத்திக்கு இது புத்தியென்று கிருபைகட்டளையிட உத்தரவாகவேண்டியது. அவ்விடத்திலுள்ள பெரியோர்கள் யாவருக்கும் மிகுந்ததாழ்மையுடனே தோத்திரம்.

௲அ௱சஉ-௵ தசம்பர்௴ ௰உ-உ மதுரோக்கிரம்.

---

கனம்பொருந்திய அய்யா அவர்கள் சீர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரோக்கிரம் மிகுந்ததாழ்மையுடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுகிற விண்ணப்பம்.

இந்தக்காகிதங்கொண்டுவருகிறவன் மாரிபமாய் கேற்று ஞானப்பிள்ளை மாமியார் ஒரு ஓலை எழுதி ா-ஸ்ரீ அத்தானவர்கள் பேராலேவந்தது. அதின் விபரங்களை வருகிறவன்சொல்லுவானே. இப்போது அத்தானவர்கள் ஒரு இயோசனை சொல்லுகிறார்கள். எப்படியென்றால் முன்முறியில்க்கண்டபணத்துக்கு வீட்டிலுள்ள சாமான்களையும் இப்போது மேற்கூரையையும் நான் பற்றிக்கொண்டபடியினாலே எனக்கு வீட்டுமனைத்தைப்பற்றி,சுற்றுநிலத்தைபற்றிய இயாதொரு சம்பந்தமில்லை, ஷை முறிஎன்னிடத்தில் இப்போது ஆசிரில்லாததினாலே அது அகப்படுங்காலத்தில் காதுவிட்டு நடுக்கிறிப்போடுவேனாகவும், அல்லது தங்கள்வசந் தந்துபோதவேணுமென்று, ஒருபற்றுச் சீட்டு வாங்கிக்கொண்டு தலைத்துப்போடலாமாவென்கிறார்கள். அதைக்குறித்துச் செய்யவேண்டிய தீர்மானத்தைக்குறித்து எது நலமோவென்று யோசித்து பதிலெழுதியனுப்பத்தக்கதாக உத்தரவாகவேண்டியதில் இதுவரையும்வந்து அப்படிச்செய்தால் உத்தமமாயிருக்குமென்று மன்றாடுகிறேன்.

அக்காளுடைய இயோசனையும் அப்படியேயிருக்கிறது. எதுக்குந் தாங்கள்வந்துபோனால் எவ்வகையிலே சரியோவென்று அத்தானவர்களும்நாமும் யோசித்து எழுதியனுப்பலாம், ஆகையால் நடக்கவேண்டியதற்கு இன்னபடியென்று உத்தரவாகவேண்டியது.

தங்களுடைய ஊழியன்

௲அ௱சஅ-௵ அக்டோபர்௴ ௰உ-௳ மதுரேந்திரம்.

---

விண்ணப்பம்.

ா-ஸ்ரீ இராயப்பபிள்ளையவர்கள் இரவில் கூ-மணிக்குவந்தார்கள். காலமே அவ்விடத்திற்குவருகிறதாயிருக்கும். அவருக்கு விசனமுண்டாகத்தக்கவிதமாயும் முறிவுண்டாகத்தக்கவிதமாயும் பேசாமலும் நாம் மேலாவில் தெரியப்படுத்தவேண்டுமென்றிருக்கிற யோசனையையும் அவர்வந்திருக்கிற இந்தச்சமையத்தில்சொல்லாமலுமிருப்பீர்களென்றுநம்புகிறேன். அவர் இன்னுசியம்மாளைக்கூட்டிப்போகவேண்டுமென்றாலும் அதற்கும் உம்முடைய மனம்போலாகட்டும், ஆனால் இப்படிப்பட்ட சமையமாயிருக்கிறதென்று மாத்திரஞ் சொல்லுவீர்களென்று நம்புகிறேன். இதுகாரியங்களைக்குறித்து தாங்கள்வரும்போது யோசித்துக்கொள்வோம். அத்தையுடைய மனசு நிலையில்லை. ஆருக்குக்கொடுக்க மனம்; இப்படிவந்திருக்கிறதே; என்னசொல்லுகிறீர்களென்று கேட்டால், நானொன்றுஞ்சொல்லமாட்டேன்; ஆரோன்திறமுள்ளவர்கள் செய்துகொள்ளட்டுமென்று சொல்லுகிறார்களாம், இதையும் வந்தவர்தான்சொன்னார். பின்னும் என்னிடத்தில் உங்கள் யோசனையென்ன



வெப்படியென்றுகேட்டார். நான் எழுதினகாகிதத்தில் எழுதியிருந்ததானை என்னுடைய யோசனையென்றுசொல்லிப்போட்டேன். இதின்பேரில்தெக்கு வீட்டுக்குப்போனார். இன்னம் (கனம்) ஐயாவவர்கள் சாவகாசம்வாய்க்கவில்லை.

௲அ௱ரு௰-௵ மார்ச்சு௴ உஎ-௳

---

கனம்பொருந்திய ஐயா அவர்கள் சமூகத்துக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்:

ஓலைவந்து சமாசாரமறிந்துகொண்டேன். அதற்குமுன்னமேதானே வீட்டிலுள்ள பெண்பிள்ளைகள் விசாரணை வாத்தியாரவர்களாகிய அத்தானவர்களுக்கும் முத்துக்குமாரசுவாமியாபிள்ளையவர்களுக்குந் தெரியப்படுத்தினதாயும் அதின்பேரில் இங்கேவந்திருக்கிறாளாவென்று ஆளனுப்பிக்கேட்டார்கள். அல்லாமலும்முத்துக்குமாரசுவாமியாபிள்ளை ஆள்ச்சேகரஞ்செய்து இழுத்துக்கொண்டுவந்துவிடவேண்டுமென்றுஞ் சொன்னாராம். இருந்தவர்கள் அப்படியல்ல, பிள்ளையவர்களுக்குத் தெரியப்படுத்திப்போடவேண்டியது,அதைக்குறித்து நாமொன்றுஞ்சொல்லக்கூடாதென்று தீர்மானித்து, அன்னம்மையைத் திசையன்விளைக்கு விடியற்காலங்கூட்டிக்கொண்டுபோய்விட்டார்களென்றெழுதியிருக்கிறார்களாம். சிலர் ஒருவேளை பிள்ளைவருகிற பாதைக்கு ஆள்ச்சேகரித்து இழுத்துக்கொண்டுவந்துவிடுவாரென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்களாம், எழுதியிருந்தபடிக்குஉபதேசியாருக்குத்தெரியப்படுத்துகிறேன். முத்துக்குமாரசுவாமியாபிள்ளைக்குத் தெரியப்படுத்துகிறதற்குமனமில்லை.

தங்களூழியன்

௲அ௱ரு௰-௵ எப்பிரில்௴ உ௰-௳ மதுரேந்திரம்.

---

மக-ா-ா-ஸ்ரீ மகாகனம்பொருந்திய ஐயா அவர்கள் சீர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்த தாழ்மையுடனே தோத்திரஞ்செய்தெழுதிக்கொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால். ஆண்டவருடைய இரக்கத்தினாலே இவ்விடத்திலுள்ள யாவரும் இதுவரையுஞ்சேமம். அப்படியே அவ்விடத்துச் சுகசெய்திகளைக்குறித்து மெழுதியனுப்பிவிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் எழுதியனுப்பின ஓலை போனதிங்கள்க்கிழமை வந்துசேர்ந்து சமாசாரமறிந்துகொண்டேன். நான் இவ்விடத்திற்குவந்ததின்பேரில் நடந்தகாரியங்களைக்குறித்துப் போனசனிக்கிழமைக்குமுந்தினசனிக்கிழமையில் விவரமாயெழுதியனுப்பியிருந்தேன். அது அதற்கடுத்த திங்கள்

கிழமையில்வந்துசேரவேண்டியது. அதற்குப்பதில்வராததினாலே அதுவந்து சேர்ந்ததுஞ் சேராததுந் தெரியவில்லை. இதுவரையுங் காத்திருந்தும் பதில் வராததினாலே அதைக்குறித்துச் சந்தேகமாயிருக்கிறது. அந்தக்காகிதத்தின் சுருக்கமென்னவென்றால்: அவர்கள் இப்போது இருபது ரூபாய்க்கு நகை போடுகிறதாயும் நாமும் இருபது ரூபாய்க்கு நகைபோடவேண்டுமென்றும், கலியாணம் இவ்விடத்தில்தான் செய்யவேண்டுஞ், செலவு உங்கள்பக்கந்தானென்றுஞ்சொல்லுகிறார்கள் என்பதே. ௱-ஸ்ரீ அத்தான் சீனிவாசகம்பிள்ளையவர்கள் உபாயமாய்த்தங்களைக் கடத்திக்கொண்டவிதமாயிருக்கிறார்களென்று தோன்றுகிறது. அவர்கள் சொல்லுகிறதென்னவென்றால்: அந்தப் பிள்ளையை முன்னே என்னிடத்தில் விட்டிருந்தால் இதற்குமுன்னமே ஆகவேண்டியதைச்செய்துபோட்டிருப்பேன்; அப்படிக்கு இடமில்லாததினாலேஇப்பொழுது இந்தச் சமையத்திலென்னசெய்கிறது, என்று கேட்கிற முகாந்திரங்களுக்கெல்லாம் பலவகையாய்ப் போக்குச்சொல்லிக்கொண்டு பாரந்தங்கள் மேல்ப்பொறுக்காதபடிக்கு கடத்தி; தம்பிவா; தங்கச்சி கையைப்பிடி, யென்பதுபோலிருக்கிறார்கள். பின்னும் அவர்கள், தங்களுடைய அபிப்பிராயத்தையறிவோமென்கிறதாய், அம்மானவர்களுக்கு எழுதும்,அதின்பேரில்ப் பார்ப்போமென்று சொல்லியிருக்கிறார்கள் நானும் அவர்களோடே கூடியமட்டுஞ் சொல்லத்தக்க நியாயங்களைச்சொல்லியிருக்கிறேன். எல்லாந் தாங்கள் எழுதியனுப்புகிறசெய்தியை அறிந்து அதைக்குறித்து முடிவுசெய்யவேண்டியதாயிருக்கிறது. சங்கன்குடியிருப்பு அக்காள் சொல்லுகிறது-பெண்வீட்டார் போடுகிறதெல்லாம் (௫௰) ரூபாய் நகை. நீங்கள் (௨௰) ரூபாய் நகைபோட்டால் ஆக (௭௰) ரூபாய் நகையாகுமென்கிறாள். அத்தானவர்கள் இருபது ரூபாய் நகைபோடுகிறதாகச்சொன்னது இப்பொழுதுசெய்துபோடுகிறதை மாத்திரம். முன்போட்டிருக்கிறதையுங்கூட்டி (௫௰) ரூபாய் நகையாகிறது. ஒருதரமாத்திரமல்ல நாங்களெல்லாருங்கூடிச்செய்கிறதேயன்றி வேறில்லை; இனிமேலும் ஏதாவது செய்யவேண்டுமென்றால் போதுவாயெல்லாருந்தான்செய்யவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறோமென்றாள். எனக்குத் தோன்றுகிறது வேறொன்றுமில்லை; இப்பொழுதிருக்கிறதற்குள்ளே சீக்கிரத்திலுதவத்தக்கதாக இதைவிடச்செம்மையுள்ளதாய்க் காணோமென்பதைக் குறித்துத்தான் யோசனையாயிருக்கிறேன். இதைக்குறித்து இன்னபடியென்று சீக்கிரத்திலெழுதியனுப்பக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

தம்பிமாரைக்குறித்துள்ள விசேஷம் (கனம்) ஐயரவர்கள் வந்ததின் பேரில் இருபேரைக்குறித்தும் பேசினதில், நான்சொன்னேனென்று நீதா



னே குறுக்குசான்துரையிடத்திற்குப்போய்ப்பேசிக்கொண்டுவா, அதின் பேரிற்சொல்லுகிறேனென்று சொல்லியிருந்தார்கள். அதற்குப்பின்பு மத்தியானத்தில் இளையவனைச் சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற் சேர்க்கக்கூடாதாவென்றார்கள். தங்களுக்குச் சித்தமானால்ச் சேர்த்துக்கொள்ளுங்களென்று சொன்னேன். அதின்பேரில் இளையவனை சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற் சேர்க்கும்படி திட்டஞ்செய்து ஞானசமரியானைமாத்திரங் குறுக்குசான்துரை பள்ளிக்கூடத்திற் சேர்க்கும்படி பேசவேண்டியது, அவனுக்காகக் கொடுக்கவேண்டிய சம்பளம் ரூ ௪-லும் நானேகொடுக்கிறேனென்று சொன்னதாகவுந் துரைக்குச் சொல்லென்று அனுப்பினார்கள். அந்தப்படியே திட்டஞ்செய்து ஞானசமரியானை இன்றுகாலமே குறுக்குசான்துரைபள்ளிக்கூடத்துக்குக்கூட்டிக்கொண்டுபோய் டி துரையையும் இரண்டாவது துரையையுங்கண்டுபேசிச் சேர்த்திருக்கிறது. ஏகநாசனை புதன்கிழமைமுதல் சாஸ்திரப்பள்ளிக்கூடத்துக்குப்போகத் திட்டஞ்செய்திருக்கிறது. மற்றப்பிள்ளைகளெல்லாருஞ்செவ்வாய்க்கிழமைவந்துசேருகிறார்கள். புதன்கிழமை படிப்புத்துவக்குவார்கள். ௱-ஸ்ரீ அத்தான் சீனிவாசகம்பிள்ளையவர்கள் சீனிவாசகத்தை சாஸ்திரப்பள்ளிக்கூடத்திற் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுஞ் சேர்த்துக்கொள்ளவில்லை. காரியங்களையெல்லாங் கவனித்துப்பார்க்கும்பொழுது கருத்தர் தமதுகிருபையினாலே (கனம்) ஐயரவர்களிடத்தில்த் தயவுகிடைக்கப்பண்ணினாரென்று தோன்றுகின்றது. எல்லாங் கருத்தர் நலமாகவேசெய்வாரென்று உறுதியாய் நம்பவேண்டியது.

௱-ஸ்ரீ பெரியநாயகம்பிள்ளையவர்களுக்கு வேட்டி தேவையாயிருக்கிறதினாலே நான் இனஞ்சுனையிலிருக்கிறபோது அனுப்பியிருந்தவேட்டித்துறையில் (௰அ) முழத்திலே ஒரு சேலைவாங்கியனுப்பக்கேட்டுக்கொள்ளுகிறேன். கிரயமுமின்னதென்று எழுதியனுப்பவேண்டியது. சீக்கிரத்திலே வாங்கிச் சற்குணவாத்தியாரிடத்திலாவது கொடுத்தால் சீக்கிரத்திலனுப்புவாரென்று நம்புகிறேன். மிகுந்த அவசரமாய்ச்சொல்லியிருக்கிறார்.

தங்களின்தாழ்மையுள்ள

௧௮௱௫௰-௵ அகஸ்டு௴ ௩-ௗ மதுரேந்திரம்.

---

மகாகனம்பொருந்திய ஐயா அவர்கள் சிர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந்தாழ்மையான விண்ணப்பம் என்னவென்றால்,

ஆண்டவருடைய இரக்கத்தினாலே இவ்விடத்திலுள்ளயாவருஞ்சேமம். அப்படியே அவ்விடத்துச் சுகசெய்திகளைக்குறித்து அடிக்கடி எழுதியனுப்பக்கேட்டுக்கொள்ளுகிறேன். முன்னும் இப்பொழுதும் எழுதியனுப்பின காகிதமும் ஓலைகளும்வந்துசேர்ந்து சமாசாரமறிந்துகொண்டு அதின் பேரிஸ்தீர்மானமாக (௫) காரியங்களை ஒரு காகிதத்துண்டிலே எழுதி அதில் எதின் படியாவது செய்யக்கூடுமோவென்று கேட்டேன். அந்தத்தருணத்தில் மாசில்லாமணிக்கு நீர்ப்போகாமல் வயிறும்வீங்கி மிகுந்த உபத்திரவமாயிருந்தது. எல்லாருக்கும் அதைக்குறித்துமலைவுண்டாகியிருந்ததினாலேநானுங்கொஞ்சம் பொறுத்திருக்கவேண்டியதாயிருந்தது. பத்துநாளுக்கு அதிகமாயிப்படிஉபத்திரவமுண்டாயிருந்தது, சற்றேசெலுகுவாயிருந்தசமையத்தில் மறுபடியுமென்னமறுமொழியென்றுகேட்க, இப்பொழுதுஉபத்திரவவேளையாயிருக்கிறதே என்ன சொல்லட்டுமென்றார்கள். பின்னும் இரண்டுமூன்று நாள்பொறுத்து இப்பொழுதும் ஒரு ஓலைவந்திருக்கிறது என்றுகேட்டதின்பேரில் பலவகையா யோசித்து ஓலைகூறிக் கலியாணஞ்செய்கிறதோ அதில்லாமற்செய்கிறதோவென்பதின் திட்டத்தையறிந்துகொள்வோமென்றுசொல்லி என்னை (கனம்) சார்சந்தையரவர்களிடத்திலறிவித்துக்கேட்கும்படி யனுப்பினார்கள். நான்போய்ப்பேசினதில் (கனம்) ஐயரவர்கள் ஓலைகூறுகிறதானாலுங்கூறாமற்செய்கிறதானாலும், மாப்பிள்ளை எந்தச்சேகரத்திலிருக்கிறாரோ அந்தச்சேகரத்துஐயர் பெண்வீட்டைச்சேர்ந்தஐயரவர்களுக்குஎழுதவேண்டியதுஒழுங்கு; அதின்பேரில் பெண்வீட்டைச்சேர்ந்த ஐயருடைய உத்தரவாகவேண்டும். ஆனதினாலே முதலாவது (கனம்) கால்வெல் ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்கள் எனக்கு எழுதவேண்டும். அவர்கள் எழுதினபடி நானும் உத்தரவு கொடுக்கவேண்டும். ஆனால், என்னாலேதடையில்லை, ஐயாவர்கள் சம்மதித்தெழுதுகிறபடி நானும் உத்தரவுகொடுக்கிறேனென்று சொல்லியிருக்கிறார்கள். இதினிடையில் நடந்திருக்கிறவிசேஷங்கள் மிகுதியாய் இருப்பதினாலே அவைகளை நிறுத்தி இதைமாத்திரஞ் சுருக்கமாயெழுதியிருக்கிறேன். கனம்பொருந்திய கால்வெல் ஐயரவர்களுடையசம்மதம்கிடைக்கும்படியாகச் சாக்கிரதைசெய்து அவர்களிடத்திலிருந்து கனம்பொருந்திய சார்சந்தையாவர்களுக்குக் காகிதஞ் சீக்கிரத்தில் வரும்படியாகத் திட்டஞ்செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதின்பேரிலேதான் மற்றக்காரியமுடியவேண்டியதாயிருக்கிறது. இவ்விடத்து ஐயரவர்களைப்பற்றித் தடையில்லையென்பது திட்டந்தான்.



இன்னாசியம்மாள் சுகமேயிருக்கிறாள். மற்றக்காரியங்களைக்குறித்து நாளைக்கு எழுதியனுப்புகிறேன். இப்பொழுது எழுதநேரமில்லை.

௲அ௱௫௰-௵ அகஸ்டு௴ ௰௩-உ

தங்களின்
மதுரேந்திரம்.

---

மகா-௱-௱-ஸ்ரீ மகாகனம்பொருந்திய ஐயா அவர்கள் சமட்சமத்துக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந் தாழ்மையானவிண்ணப்பம்.

இவ்விடத்திலுள்ள யாவருங் கருத்தருடைய இரக்கத்தினாலே சேமம். அப்படியே அவ்விடத்திலுள்ள எல்லாருடைய சுகசீர்களையுங்குறித்து எழுதியனுப்பத்தயவுசெய்யவேண்டியது. சிலநாளைக்குள் முன் (கனம்) ஐயரவர்களிடத்தில் தெரியப்படுத்தினதாகச்சொல்லிய விசேஷங்களைக்குறித்து எழுதிய காகிதம்வந்துசேர்ந்திருக்குமென்று நம்புகிறேன். அதில் (௫)காரியங்களைக்குறித்துஅவர்களிடத்திற்கேட்டேனென்றுயெழுதினேனே. அவையாவன:— (௧)வது, நகைபோடவேண்டுமென்றால் போடுகிறோம். ஆனால் வழக்கப்படிக்குக்கலியாணச்செலவில் பாதிகொடுக்கவேண்டும். (௨)வது, பாதிச்செலவுகொடுக்கிறதில்லையென்றால்க் கூட்டியனுப்பிவிடுங்களென்றும், (௩)வது, கூட்டியனுப்பக்கூடாதென்றால் நகைப்பேச்சைவிட்டுவிடவேண்டும், சகலசெலவும் செய்வோமென்றும். (௪)வது, அல்லது நகையோசெலவோ அதெல்லாம் நீங்களே பார்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் எங்களிடத்தில் கலியாணச்செலவுக்கென்று கட்டுக்குத்தகையாகத் தீர்த்துவாங்கிக்கொண்டு சகலத்தையும் நடப்பியுங்களென்றும். (௫) அல்லது நகைபோடுகிறோம். கலியாணத்தைக் கோவிலில்முடித்து வந்தவர்களுக்கு ஒருதரம் நானிருக்கிற வீட்டிற்சாப்பாடு செய்து மாப்பிள்ளையும் பெண்ணும் மற்றவர்களும் உடனே புறப்பட்டு ஊருக்குப் போகவேண்டுமென்றுமே. இந்தக்கேள்விகளைக்கேட்க இதிலெதை ஒப்புக்கொள்ளலாமென்பது ஒன்றும் அவர்களுக்குள் தீர்மானமுண்டாகாமலிருந்ததினாலும் இதிலேற்பட்டால் கையிலேபொறுக்குமென்கிற உள்ளெண்ணத்தினாலும் அந்தச்சமையத்தில் மாசில்லாமணிக்குஞ் சவுக்கியத்தப்பாயிருந்ததினாலே இப்போ யென்னசொல்லுகிறது என்று தாழம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். நானும் இவர்களெப்படிவருகிறார்களென்று பார்ப்போமென்று பேசாதிருந்தேன். சிலநாளுக்குள்ளாகத் தங்களுடைய ஓலையும்வந்தது. மாசில்லாமணிக்குஞ்சற்றேசெலுகுவாயிற்று. அதின்பேரில் என்னை

சொல்லுகிறீர்களென்று மறுபடிவிசாரிக்க, இப்போது அதற்குரிய எத்தனமில்லையே, தைமீ மானால் திட்டஞ்செய்யலாமென்று சொன்னார்கள். பல கோக்கங்களையும்பார்த்துக்கொண்டு,நல்லது எல்லாம் நாங்களேபார்த்துக்கொள்ளுகிறோம், நீங்கள்......னபடி செய்யக்கூடுமோவென்றதற்கு, யோசித்துச் சொல்லு..........சொல்லி ஒருநாள் பொறுக்கச்சொன்னார்கள். அந்தக்கெடுவுங்கழிக்க மறுபடியும் என்னசொல்லுகிறீர்களென்று கேட்டேன். இப்போ அவசரப்பட்டால் காரியமில்லை, இப்போது வேணுமானால் நிச்சயதாம்பூலஞ்செய்துகொள்ளுகிறது, தைமீ கலியாணஞ்செய்கிறது, அப்படித்தான் திட்டஞ்செய்யவேண்டியதாயிருக்கிறது என்றார்கள். அப்போது என்முகநாடிவேறுபட, மனதில்யெரிச்சலெழும்ப அதையுங்காட்டாமல் சற்றேபொறுத்து அப்படிப்பின்னாலேசெய்கிறதானால், கலியாணம்என்னவகையாய்நடக்க அதைக்குறித்து என்னவென்று ஒழுங்குசெய்வீர்களென்றுகேட்டேன். அவர்களுக்கும் என்குறிப்புத்தெரிந்தது; ஆனதால் அவர்கள் நகைபோட என்கிறபேச்சுப்பேசுகிறதில்லை. நாங்கள் செய்யவேண்டியதைச்செய்வோம். கலியாணச்செலவுநீங்கள்செய்துகொள்ளுகிறது என்றார்கள். உடனே காகிதத்தையெடுத்து மனதிற்கொண்ட படபடப்பான மனஸ்தாபத்தோடே எழுதுகிறபோது அவர்கள் என்னை மறுபடியுங்கூப்பிட்டு ஓலைகூறிக் கலியாணம் நடக்கிறதா, ஓலைகூறாமல்செய்கிறதா, அதுதான் ஒருதிட்டமில்லையே,ஆனதால் (கனம்)ஐயரவர்களிடத்தில் அறிவித்துக்கேட்டுக்கொண்டுவாருமென்றார்கள். நான் அவர்களையும் கூடவரக்கேட்டேன். நான் வரவேண்டியதில்லை, நீர் போனால்போதுமென்று சொன்னார்கள். அதின்பேரில் ஷை ஐயரவர்களிடத்திற்போய் அறிவித்து அதின்பேரிலுள்ளவைகளைக் குறித்து எழுதினேன்.

காலங்கடந்துபோகிறதினாலும், இலட்சம்வந்தாலும் இந்தக்காலந்திரும்பவாராததினாலும், இத்தக்கவலை தலையிலே பெரிய பாரமாயிருக்கிறதினாலும், ஆண்டவர் நமக்கமைத்ததுதான் கிடைக்குமென்கிற நம்பிக்கையினாலும், மிகவும்பிரியமுள்ள குமாரராகிய ர-ஸ்ரீ பெரியநாயகம்பிள்ளையவர்கள் அந்தப்பட்சமாகமாத்திரமல்லப்பொதுவாயும் உள்நோக்கமாயுஞ் சொன்ன பலகுறிப்பினாலும், இப்போதுதான் நடக்கவேண்டுமென்று கோரிக்கைசெய்ததினாலும், மனதில் ஒருவகையாய் முடிவுசெய்துகொண்டு இவ்விதமாய் அவர்கள் விருப்பத்தின் ஒப்புக்கொண்டு சம்மதித்து திட்டஞ்செய்திருக்கிறேன். நான் கொண்டுவந்த கூ என்னிடத்தில் பத்திரமாயிருக்கிறது. அவ்விடத்திலுமிருக்கிற கூ பத்திரமாயிருக்கவேண்டியது. இன்னமுங் குறைவுபடுகிறதற்கு சமாளித்துவாங்கவேண்டியதாயிருக்கிறது. எல்லாம் அவ்விடத்துத் தீர்



மானங்களையும் ஐயன்மார்களுடைய உத்தாரவையறிந்து நடக்கவேண்டியதாயிருக்கிறது. கருத்தருக்குச் சித்தமானால் நெய், இலை, காய், வடகம்தவிர மற்றதெல்லாம் இவ்விடத்தில்தான்வாங்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

பேரின்பம் வரவேண்டிய கூவை இன்னமும் அனுப்பவில்லை. தாங்கள் அனுப்பிவிச்ச வேட்டிவந்துசேர்ந்தது. அவ்விடத்து விசேஷங்களுக்குச் சீக்கிரத்தில் எழுதத் தயவுசெய்யவேண்டியது.

௲௮௱௫௰-௵ அகஸ்டுமீ ௨௯-௨ தங்களின் தாழ்மையான
மதுரேந்திரம்.

(இஃது சுவிசேஷபுரத்தில்-மிகவும் பிரியமுள்ள சற்குண உபாத்தியார் மேல்விலாசம் பார்த்து-சமாரியாவில் மக-ர-ர- சவரிராயபிள்ளையவர்கள் சமுகத்துக்குக்கொடுக்கத் தயவுசெய்யவேண்டியது- அவசரம்.)

---

மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சீர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்த வணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

இவ்விடத்திலுள்ள யாவருங் கருத்தருடைய இரக்கத்தினாலே சேமம் அப்படியே அவ்விடத்துச் சுகசெய்திகளைக்குறித்தும் அடிக்கடி யெழுதியனுப்பமன்றாடுகிறேன். தாங்கள் அனுப்பிவிச்ச காகிதம் வந்துசேர்ந்து சமாசாரமறிந்துகொண்டேன். சீக்கிரத்தில் (கனம்) கால்வெல் ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்தி அதைக்குறித்து எழுதியனுப்புகிறதுந்தவிர நடக்கவேண்டிய ஒழுங்குகளைக்குறித்தும் எழுதியனுப்பத் தயவுசெய்யவேண்டியது. இவ்விடத்து ஐயரவர்களிடத்தில் முன்பேசினதற்கு மிஞ்சிப்பேச எதுவில்லை.

மக-ர-ர-ஸ்ரீ பிள்ளையவர்கள் எனக்கொரு காகிதமெழுதியனுப்பியிருந்தார்கள். அதற்கு நானும் பதில்எழுதியனுப்பினேன். அதுதெரிந்திருக்குமே. அவர்களெழுதியனுப்பின காகிதத்தை இத்துடனே அனுப்பியிருக்கிறேன்.

மக-ர-ர-ஸ்ரீ அம்மானவர்கள் எழுதியனுப்பின காகிதத்தை அனுப்பிவிச்சீர்களே. அதுவந்துசேர்ந்து சமாசாரமறிந்துகொண்டேன். அதிற்காட்டியபடி அவர்களுடைய யோசனை அவர்கள்கொண்டிருந்த நோக்கத்துக்குச் சரிதான். மேலும் அவர்கள் சகலத்திலும் இந்தக்காரியத்தில் அனுகூலராயிருந்து தகப்பன் குறைதீர்க்கவேண்டியதும் அவர்களுக்கேற்ற கடமைதான். அவர்களுக்கும் நமக்குஞ்சரியென்று இப்பொழுது நாம் பாத்திபம்பாராட்டக்கூடுமா அவர்கள் தங்கள் கடமைப்படிக்கு தங்கள் குமாரத்திக்குரிய காரியத்தைக்குறித்து நமக்குத் தெரியப்படுத்தவேண்டிய முறைப்படிக்கு இந்தக்காரியத்தினால் முறையைக் கழித்துக்கொள்ளப்பார்க்கிறாராக்கும். அது அவர்

களுடைய சித்தம். அவர்களுக்கு இப்பொழுது எழுதநேரமில்லை. பழயபாடங்களைக்கேட்கிறதில் (கனம்) ஐயரவர்கள் வெகு சாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரத்தில் குத்தாலத்துக்குப்போவார்கள். அதின்பேரில் எழுதித் தங்களுக்குமனுப்பித்திருத்தல் செய்துபின்பு திட்டமாயெழுதியனுப்பயோசித்திருக்கிறேன்.

ஷை பிள்ளையவர்களைக்குறித்து—(கனம்) ஐயரவர்கள் ஒருநாள்பலபேச்சிலே விசேஷமாய்த் தம்பியுடைய கலியாணத்தைக்குறித்து அறிவித்ததில் என்னமோ ஒரு சங்கற்பத்தில்-இப்போது விசாரணைப்பிள்ளையவர்களுக்கும் உங்களுக்குஞ் சமாதானமாய்ப்போச்சுதாவென்றும் இப்பொழுது எப்படியிருக்கிறீர்களென்றுங் கேட்டார்கள். அதற்கு பொதுவாய் மற்றக்காரியங்களில் புறம்பாகச் சமாதானந்தான். மற்றப்படி இனி அவர்களுக்கும் எங்களுக்கும் உண்மையைப் பற்றியுள்ள நம்பிக்கைக்கு ஏதுவில்லை. அவர்களை நாங்கள் ஒரு காரியத்தில் நம்ப என்கிறதும் எங்களை அவர்கள் நம்ப என்கிறதும் அற்றுப்போயிற்றென்றேன். அது உள்ளதுதான் என்றார்கள். பின்னும் நான்வருகிறபோது அனுப்பிக்கொண்டும்வந்தேன் என்றதற்கு ஆச்சரியங்கொள்ளுகிற வகையாக அப்படியாவென்று சிரித்துக்கொண்டிருந்தார்கள். பின்பு அவர்கள் எழுதியனுப்பினதைக்குறித்துந் தெரியப்படுத்தி பிள்ளைகளைக்குறித்து அதற்குமுன்னும் பின்னும் பேசியிருக்கிறேன்.

ஞானியம்மாள் சுகமேயிருக்கிறாள். அவர்கள் புதுநிலம்வாங்கி வீடு கட்ட ஆயித்தமாயிருக்கிறார்கள். அந்த நிலத்தோடே சேர்ந்த மற்றநிலங்களை-ஸ்ரீ அத்தான் சீனிவாசகம்பிள்ளையவர்கள், சின்னய்யாஞான உயிர்ப்பிள்ளையவர்கள், முத்துசுவாமியாபிள்ளை இவர்கள் முதலானவர்கள்வாங்கத்தீர்மானித்து எத்தனஞ்செய்திருக்கிறார்கள். என்னையுங்கூட வாங்கச்சொல்லுகிறார்கள். வாங்கினால் நஷ்டமில்லை. வேண்டாமென்றால் ஒட்டிக்கு இரட்டியாய்விற்றுப்போடலாம். இவ்விடத்துவிலைக்கு நிலம்வெகுசகாயமாய்வந்து அகப்பட்டிருக்குது. வேறே எந்தவகையிலாவது பணங்கிடைக்குமானால் சமாளித்துப்பார்த்து வாங்கலாமென்கிற மனமிருக்கிறது. நாலுசனமும் ஒருமிக்கச் சேர்மானமாயிருக்கிறது. அதைக்குறித்து இன்னபடியென்று எழுதியனுப்பத்தயவுசெய்யவேண்டியது.

சேலைப்பணம்வந்துபோச்சுது. அதை யிருப்பு கூடயோடே சேர்த்துவைக்கவா அல்லது அனுப்பிவிடட்டுமோ.

இப்படிக்குத் தங்களின்
மதுரேந்திரம்.

௲அ௱௫௰-௵ அகஸ்டுமீ ௨௧-உ

---

மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சீர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

என்னவென்றால் ஆண்டவருடைய இரக்கத்தினாலே இவ்விடத்திலுள்ள யாவரும் இதுவரையுஞ்சேமம். அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களைக்குறித்தும் எழுதக்கேட்டுக்கொள்ளுகிறேன். முன்னும் பின்னுமாயெழுதியனுப்பின காகிதங்களும் ஓலையும்வந்துசேர்ந்து சமாசாரமறிந்தேன். கருத்தர் சுகத்துடனே பிரஷபகாலத்தை முடித்ததற்காக அவருக்குத்தோத்திரம்.

காகிதம்வந்த சமயத்தில் (கனம்) ஐயரவர்களிவ்விடத்திலில்லாததினாலே காகிதத்தை தபால்மூலமாய்க் கூலிகொடுத்து உடனே குற்றாலத்துக்கு அனுப்பினேன். அதற்குப் பதிலனுப்பாமல்வந்து உத்தரவுகொடுக்கலாமென்று நம்பியிருந்துவிட்டார்கள். அவர்களிடத்தில் உத்தரவுபெறாமலெழுதக்கூடாதென்று நானும் அதைக்குறித்து எப்படி எழுதலாமென்றிருந்துவிட்டேன். நம்பியிருந்தபடியே இந்தச்சனிக்கிழமை சாயந்திரம் ஷை ஐயரவர்கள்வந்துசேர்ந்தவுடனே ஓலை நாளைக்குக்கூறுகிறதென்று உத்தரவுகொடுத்தார்கள். அந்தப்படியே சீட்டெழுதிக்கொடுத்தேன். நேற்று முதலாவது அறிக்கைகூறியாயிற்று. அவ்விடத்தில்க்கூறியிருக்குமோவென்பது சந்தேகமாயிருக்கிறது. எப்படியிருந்தாலும் கூறவேண்டியதுதான். இவ்விடத்துப்பருவத்துக்கு ஓலைகூறித்தாமதப்பட்டிருந்தாலும் பெரியகாரியமில்லை. அவ்விடத்தில் ஓலைகூறவேண்டியதைக்குறித்து ஒருவேளை(கனம்) கால்வெல் ஐயரவர்களுக்கு தபால்மூலமாய்க் குற்றாலத்திலிருந்து (கனம்) சார்சன்றையரவர்கள் எழுதியிருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. எப்படியும் காரியம் நடக்கவேண்டியதுதான் நமக்குப்பிரதானம். நகைக்கு ரூ ௨௰-ம் கொடுத்தாயிற்று. சாப்பாட்டுவகையைக்குறித்தும்வரவேண்டியவர்களைக்குறித்தும் உத்தேசக்கணக்குப்பார்த்ததின் பேரில் சாப்பாடு முதலானவகையில் ஏறக்குறைய (௨௰) ரூ தொகைப்படுகிறது. திருமங்கலியஞ் சேலை வேட்டிகளுக்கு இன்னபடியென்று எழுதியனுப்பக்கேட்டுக்கொள்ளுகிறேன். சாப்பாடுவந்தவர்களுக்கு ஒருதரமும் வெத்திலை பாக்கு இரண்டுதரமுங் கொடுக்கிறதென்றும், கலியாணம் முடிந்த மறுநாள் மாப்பிள்ளையும் பெண்ணும் புறப்பட்டு ஊருக்குப்போகிறதென்றும், கலியாணத்துக்கு வருகிறவர்களுக்கு ஓலையனுப்புகிறதேயன்றிபாக்குமுதலானது அனுப்புகிறதில்லையென்றுந்தீர்மானித்திருக்கிறது. கலியாணத்தில் சாப்பாட்டைப்பற்றிப்போட்டிருக்கிற கணக்கு (௭௰) ரூ

த்துக்கென்று உத்தேசமாய்ப்போட்டிருக்கிறது. கலியாணத்துக்கு நாள்குறிப்பதற்கு இன்னமும் ஒரு ஓலைகூறினபின் தீர்மானிக்கவேண்டியது. திருமங்கலியத்துக்கென்று (௭) ரூவும் கைக்கட்டுகை (௭) ரூவும் ௱-ஸ்ரீ அத்தான் இராயப்பபிள்ளையவர்களிடத்தில் வாங்கியிருக்கிறேன். அந்த ரூவும் பத்திரமாயிருக்கிறது. நிலத்தையும் வாங்கிப்போட்டேன், பாதிப்பணம் ரூ ௱ செலுத்தியிருக்கிறேன். கலியாணத்துக்கு அப்பளம் இவ்விடத்தில்தானுகச் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். அதைக்குறித்து இவ்விடத்திலாகச் செய்யவேண்டியதின்னதென்றும் அவ்விடத்திலாகச் செய்யவேண்டியதின்னதென்றும் எழுதக்கேட்டுக்கொள்ளுகிறேன். கலியாணத்துக்கு நாலுநாளைக்குமுன்னே மாப்பிள்ளை வரவேணும், பார்க்கவேணும், இருக்கவேணுமென்கிற பிரியமுண்டாயிருக்கிறது. ஏனென்றால் கலியாணமுடிந்தவுடனே மறுநாள்போய்விடுவார்களே என்கிறார்கள்.

பிள்ளைகளுக்குச் சீலைகள் இந்தச்சந்தையில் வாங்கியனுப்புகிறேன். கன்கர்ணியாரவர்கள் சீக்கிரத்தில் வருவார்களென்கிறதினாலே படிப்பைக்குறித்துக்கவலையாயிருக்கவேண்டியதாயிருக்கிறது.

இப்போது பிறந்திருக்கிறபிள்ளைக்கு என்னபேரிடலாம். அந்தப்பிள்ளையானைப்போல என்னவண்ணமாயிருக்கிறது. மற்றப்பிள்ளைகளும் எப்படியிருக்கிறார்கள். ஐயாவர்கள், அம்மாள்பிள்ளைகள், இன்னாசியம்மாள், குசைமரியாள், ஏசுதாசன் யாவருஞ் சுகமேயிருக்கிறார்கள். இன்னாசியம்மாள் இன்றைப்பேதிக்குச் சாப்பிட்டு இங்கேயிருக்கிறாள். அம்மைக்கு என்னுடையதோத்திரஞ்சொல்ல எப்போதும் மன்றாடுகிறேன். செத்தியிடத்திலிருந்து ஒரு ஓலைவந்தது அதையும் அனுப்பியிருக்கிறேன். மற்றக்காரியங்களைக்குறித்து இனிமேல் அடிக்கடி எழுதுவேனென்று நம்புகிறேன்.

தங்களின் தாழ்மையுள்ள

௲௮௱௫௰-௵ செப்தெம்பர்மீ ௰௯-௳ மதுரேந்திரம்.

நம்முடைய அண்ணாட்சி மரியசிங்கம்பிள்ளையவர்கள் இந்தமார்க்கம்வடக்கன்குளத்துக்குப்போகவந்ததில் ஒருநாள் பகல்முழுவதும் விசாரணைப்பிள்ளையவர்கள் வீட்டிலிருந்து மறுநாள் விடியற்காலம்போய்விட்டார்கள். அவர்கள் என்னிடத்தில் வந்ததுமில்லை, நான் பார்த்ததுமில்லை. அவர்களோடேகூட நம்முடைய அம்மான் இன்னாசிமுத்துப்பிள்ளையவர்களும் கிள்ளாக்குளத்துச்சவரிமுத்துப்பிள்ளையும் வந்துவிட்டுப்போனார்கள். நம்முடைய அம்மான்



மாத்திரங்கொஞ்சநேரம்வந்திருந்து பேசிவிட்டுப்போனார்கள். அத்தைக்கு ரெம்பவும் சவுக்கியத்தப்பாயிருந்து சற்றே லெகுவாயிருக்கிறதாம். கருசக்காட்டிலிருந்து திருவிழாவுக்குப்போகிறமார்க்கத்தில் அக்காள் அருளம்மாளும் மூத்த அக்காள் மாப்பிள்ளையும் வந்துவிட்டுப்போனார்கள். அக்காள் அருளம்மாள் திரும்பிவந்ததில் அவள்பிள்ளைக்கு காச்சலும் மண்ணனும்வந்ததால் அதைவிட்டுவிட்டுப்போனாள்.

---

கடவுள் துணை.

+

மகாகனம்பொருந்தியஅய்யா அவர்கள்சீர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளுந்தாழ்மையான விண்ணப்பம்.

இவ்விடத்திலுள்ளயாவரும் ஆண்டவருடைய கிருபையினாலே சேமம். அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களைக்குறித்தும் அடிக்கடி எழுதக்கேட்டுக்கொள்ளுகிறேன். ஜூ'மீ ௨௧-௳ எழுதியனுப்பின காகிதம் வந்துசேர்ந்து சமாசாரமறிந்தேன். அதில்க் கண்டபடியே அக்டோபர் மீ ௰௭-௳ வியாழக்கிழமை கலியாணமென்று தீர்மானித்திருக்கிறது. (கனம்) ஐயாவர்களிடத்திலும் மூன்றாவது ஓலைகூறினபின் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. இவ்விடத்தில் இரண்டாவது ஓலையுங்கூறியாச்சுது. நாலுசித்தாடைக்குப்புகலென்ன? திருமங்கிலியத்தக்குமுன் இரண்டுபேர்தானே பணங்கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தது. அல்லாமலும் எழுதவேண்டியவர்களுக்கு எழுதினால் ஓலைகொண்டுபோக இவ்விடத்திலுள்ள வேளாளன் அதிகக்கூலிகேட்பானே. ஆள் அகப்படுமென்பது இன்னந்திட்டமில்லை. பணந்தான் குறைச்சலாயிருக்கிறது. பணத்தினாலேதான் காரியமெல்லாம்நடக்க வேண்டியதாயுமிருக்கிறது. மற்றக்காரியங்களைக்குறித்துப் பின்னெழுதியனுப்புவேன். அரிசி நெல் போட வைக்கப்பெட்டிகள் குறைவாயிருக்கிறது. நெல்வாங்கி அவித்து ஆளைவிட்டுக்குத்திப்போடயோசித்திருக்கிறது. எழுதியாகவேண்டிய காரியங்களைக் குறித்தெல்லாம் எழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். ௱-௱-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குஞ் சீக்கிரத்தில் விவாகம் நடக்குமென்று தோன்றுகிறது. பிள்ளைகளெல்லாருஞ்சுகமாயிருக்கிறார்கள்.

௲௮௱௫௰-௵ செப்தெம்பர்மீ ௨௯-௳ இப்படிக்குத்தங்களின் தாழ்மையுள்ள மதுரேந்திரம்.

மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சிரீபாதகமலங்களுக்கு அடியே
ன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்
கொள்ளுந் தாழ்மையானவிண்ணப்பம்.

இதுவரையும் இவ்விடத்திலுள்ள யாவருங் கருத்தருடைய இரக்கத்தி
னாலே சேமம். அப்படியே அவ்விடத்து சேமாதிசயங்களைக் குறித்து
மெழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். கயிலாசம் வசமனுப்பிவிச்ச
காகிதமும், மற்றச்சாமான்முதலானயாவும்வந்துசேர்ந்துசமாசாரமறிந்தேன்.
எழுதியிருந்தபடிக்கு ௯ வ-க்கு பலகாரம் வாங்கியனுப்பியிருக்கிறது. எவ்
விதமும்வண்டி அமத்திவிடுகிறேன். வடகம்போட்டதிருக்குமென்றுவெண்
ணியிருந்ததுமன்றி வடகம் அவ்விடத்திலிருந்துவருமென்றுமெழுதியிருந்த
தையிட்டு தாமதமாயிருக்கவேண்டியதிருந்தது. இவ்விடத்தில் நெய் மிகுந்
த குறைச்சலானதால் அவ்விடத்திலிருந்து (உ) பணத்து நெய் வாங்கிக்கொ
ண்டுவந்தால் உத்தமமாயிருக்கும். அரிசி குத்தியாயிற்று; மசாலைப்பொடிகள்
நாளைக்கு இடிக்கப்படும். சவளிகள் வாங்கியாச்சுது. திருமங்கிலியமும் நாளை
வரும். கருசக்காடு, புதுக்கோட்டை, திருவனந்தபுரம்இதற்கெல்லாம்எழுதிப்
போயிற்று. அம்மான் நல்லதம்பியாபிள்ளையவர்கள் எ-ஸ்ரீ விசாரணைப்பிள்
ளையவர்களுக்கு வருவேனென்று பதில்ச்சமாசாரமனுப்பினதாக முத்துசுவா
மியாபிள்ளைக்கு எழுதிவந்தது. கருசக்காட்டிலிருந்து அக்காள் மரியமுத்தும்
அவள்மாப்பிள்ளையுமாக போன புதன்கிழமையில் திசையன்விளைக்கு வந்து
விட்டுவரவேண்டுமென்று வந்துசேர்ந்தார்கள். கலியாணஞ் சமீபத்திருக்
கிறதினாலே இப்போது நீங்கள்போகிறதெங்கே வருகிறதெங்கே, ஊருக்குத்
தானே திரும்பப்போங்களென்று பெரியம்மை சொன்னாள். அதின்பேரில்
அக்காளிருந்துகொண்டு அவளைப்போய்விட்டுவரும்படி திட்டஞ்செய்ததில்
அவாள்மூலமாய்த் தெரியப்படுத்தவேண்டியவர்களுக்குத் தெரியப்படுத்தும்
படியாயுஞ்சொல்லி-தீத்தான்பட்டி சின்னய்யா தேவசகாயம்பிள்ளைக்கும், ப
ண்டிதப்பெரிய அய்யாவுக்கும் புதுக்கோட்டை அண்ணனுக்குமாக மூன்று
காகிதங்களை எழுதியனுப்பினேன், சித்திரையுங் கையோடேகூட்டிக்கொ
ண்டுவரும்படி சொல்லியிருக்கிறேன்.

தம்பியைச்சுவாமி எந்தப்படிநடத்தச் சித்தமாயிருக்கிறாரோ அந்தப்படி
நடக்குமானதால், பலவந்தமாய்ச்சொல்லப்படுகிற கட்டளைகளைக்குறித்து நிதா
னமின்றிக் கலங்கவேண்டாம். கருத்தருடைய ஆலோசனைக்கு மிஞ்சி ஒன்
றுமுண்டாவாது. நாம் தம்பிக்குக்கோரிக்கைசெய்திருக்கிறகாரியத்தில் ஆண்ட



வருடைய ஆசீர்வாதஞ் சம்பூரணமாயிருந்துயாதொரு விக்கினமின்றி நீடித்த
காலஞ் சிரஞ்சீவியாய் வாழ்ந்திருக்கவேணும். அப்படியே கருத்தரெல்லா
ரையும் ஆசீர்வதிக்கவேணும். இந்தநாட்களிலே என்னிருதயத்தில் பலவகை
யில்க்கணமான யெண்ணங்களுண்டாயிருக்கிறது; அதாவது ஆண்டவர்சகலத்
தை நலமாகச்செய்து நடத்தவேணும். ஒருவருஷத்துக்குள்ளாக என்னென்
ன மாறுதல்களெல்லாம் நடந்திருக்கிறது என்பதே. அல்லாமலும் இந்தமா
றுதல்கள் என்னகாரியத்திற்கென்று நடந்திருக்கிறதோ, எல்லாம் நலமாகச்
செய்யுங் கருத்தாவே என்பதும் என்மனதிலுண்டாகிறதியானமாயிருக்கிறது.

வண்டியிலே குழந்தைப்பிள்ளையை எண்ணமாய்க் கொண்டுவருகிறது.
பத்திரமாய்க்கொண்டுவருவீர்களென்று நம்புகிறேன். சேமத்துக்கு எழுதி
ன காகிதத்துக்கு நகலிருக்கிறது, வரும்போது காண்பிப்பேன்.

அனுப்பிவிச்ச பூசணிக்காயின் விவரம் கயிலாசஞ்சொல்வான். இவ்விட
த்தில் தேவையானது வாங்கலாம். அவ்விடத்தில் விலைக்குவாங்கத் தேவை
யில்லை. ஐந்தாறு அகப்பையும் செய்வித்துக்கொண்டுவரவேணும். இரண்டு
கலியாணமும் ஒன்றாய் நடக்கப்போகிறதும் ஒரு விநோதமாய்த்தானிருக்கி
றது. இப்படி நடக்கவேண்டுமென்று சுவாமிக்குச் சித்தமாயிருந்ததாக்கும்
அம்மைக்கும் என்னுடைய தோத்திரத்தைச் சொல்லவும்.

௲அ௱௰-ஷு அக்டோபர்மீ ௰௬-உ இப்படிக்குத் தங்களின்
மதுரேந்திரம்.

[இஃது சமாரியாபுரத்தில்-கனம்பொருந்திய அய்யா அவர்கள் சவரிரா
யபிள்ளையவர்கள் சமட்சமத்துக்கு வருவது.]

---

மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சிரீபாதகமலங்களுக்கு அடியே
ன் மதுரேந்திரம் மிகுந்த வணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்
கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

இவ்விடத்திலுள்ளயாவருங் கருத்தருடைய இரக்கத்தினாலே சேமம்.
அப்படியே அவ்விடத்துச் சேமங்களைக் குறித்தும்அடிக்கடி எழுதியனுப்ப
க்கேட்டுக்கொள்ளுகிறேன். எழுதியனுப்பிவிச்ச ஓலை இன்றுவந்து சேர்ந்
து சமாசாரமறிந்தேன். சுவாமி நம்மை எந்தப்படி நடத்துகிறாரோ அதற்
கெல்லாமுட்பட்டு நடக்கவேண்டியதுதான். (கனம்) இரேகிலான்றையரவ
ர்கள் வந்ததின்பேரில் ஒருநாள் எங்களைச்சோதித்தார்கள். அல்லாமலும் நம்
முடைய ஐயரவர்களும் அவர்களுமாகவிருந்து ஒவ்வொருவருடைய பேரிலு
ங்கூட்டுப்பேருஞ் சேர்த்தார்கள், மகாகனம்பொருந்திய கண்காணியாரவர்

கள்வருவதற்குமுன் எத்தனமாயிருக்கவேண்டிய பட்டத்துக்குரிய அதிகாரப்
பத்திரத்துக்காக ஒவ்வொருவருடைய பேராலுஞ்சென்னப்பட்டினத்துக்குக்
காகிதமெழுதும்படி திட்டஞ்செய்து மாணுக்கர் ஒவ்வொருவருந் தங்கள் பே
ராலே காகிதமெழுதியிருக்கிருர்கள். கருத்தர் இந்தவிதமாய் இதுவரையும் ந
டத்திவந்திருக்கிருர். இன்னமும் அப்படியே நடத்துவாரென்று நம்பவே
ண்டியதுமன்றி இந்தப்பெரியகாரியத்தில் கருத்தருடைய கிருபையினுலேயே
தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் உட்படவுந்தகுதியாய் அந்தவூழியத்தில்
பராபரனுக்கு மகிமையுந் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் நித்தியநன்மையு
முண்டாகத்தக்கவிதமாயிருக்கவுந்தக்கதாக எங்களெல்லாரைக்குறித்துஞ் செ
பம்பண்ணுவீர்களென்று நம்புகிறேன். மேலும் கருத்தர் எல்லாருக்குஞ் சுக
த்தைக்கொடுத்துச் சோதனைகளுக்குத் தப்புவித்து விசேஷமாய்ப் பரிசுத்த
ஆவியின் வரத்தையுங்கொடுத்துச் சகலத்திலுங் குறைவானவைகளை நீக்கி நி
றைவாக்குவாராக. மற்றப்புறம்பான காரியங்களைக் குறித்து இப்பொழுது
அதிகமாய்ப் பார்க்கநேரமில்லாததினுலே கணக்குக் காரியத்தைக் குறித்துச்
சீக்கிரத்தில் எழுதியனுப்பத் தாமதப்படுகிறேன். (கனம்) இரொகிலான்றைய
ரவர்கள் இன்று இராத்திரியிற்புறப்பட்டு மலையாளத்துக்குப்போகிருர்கள்
சனுவரிமீ அவர்களுட்வந்துசேருவார்கள். நம்முடைய ஐயர் அம்மாளுக்கு
நல்லசுகமில்லை. பிள்ளைகளெல்லாருஞ் சுகமேயிருக்கிருர்கள். எனக்கு வா
யிலே புண் உபத்திரவங்கொஞ்சமிருக்கிறது. இன்ஞசியம்மாளைச் சீக்கிரத்
தில் தகுந்த ஆள்ப்பார்த்து அனுப்பிவிடவேண்டியதாயிருக்கிறது. மரியவியா
குலத்துக்கு இன்று மூன்று நாள் நீர் சுரம்போலடித்துக்கொண்டிருந்தது.
இப்பொழுது சவுக்கியமாயிருக்கிருள். செபத்தியாயிக்குச்சிரங்கு உபத்திரவ
முண்டாயிருக்கிறது. வேறேவிசேஷமில்லை. இப்படிக்குத் தங்களின்

௲௮௱௫௰-ஹு அக்டோபர்மீ ௩௧-உ மதுரேந்திரஞ் சவரிராயன்.

---

மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சீர்பாதகமலங்களுக்கு அடி
யேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து எழுதிக்
கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

ஆண்டவருடைய கிருபையினுலே இவ்விடத்திலுள்ளயாவருஞ்சேமம்
அப்படியே அவ்விடத்திலுள்ளசேமாதிசயங்களைக்குறித்தும் அடிக்கடியெழு
தியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். தங்கச்சி இன்ஞசியம்மாளுஞ் சுகத்
தோடேவந்துசேர்ந்தாள். அனுப்பிவிச்சபதார்த்தமும் வந்துசேர்ந்தது. இவ்



விடத்திலிருந்து வேஷ்டிகளையும், அம்மைசேலையையும், இன்ஞசியம்மாள்
கொண்டுவந்த கொடையையுமனுப்பியிருக்கிறதுமன்றி, பேபியாகிய வியா
கம்மைக்குக்கொடுத்த புத்தகங்கள் மூன்றும் ஒரு சிறுபெட்டியுமனுப்பியிரு
க்கிறது. அவளுடைய தாயார் அவளுக்காக தன்கழுத்திலிட்டிருந்தவளையை
யுங் குழலையுங் கொடுக்கும்படியாய் நீங்கள் புறப்பட்டுப்போனபின்பு வந்து
சொன்னுள். நல்லது பார்த்துக்கொள்ளலாமென்றுசொன்னேன். அந்தப்படியி
ருக்கிறது. பின்பு அதைக்குறித்து ஒன்றுஞ்சொல்லவில்லை. வியாகம்மை அ
தைக்குறித்துக் கேட்டுவிடுவாளானுல் கொடுத்தனுப்புவார்களென்று நினைக்
கிறேன். இதற்குமுன் இரண்டு காகிதங்கள் தங்களுக்கும், ஒரு காகிதம் சற்கு
ணஉவாத்தியாருக்கும் எழுதியனுப்பினேன். அதற்குப்பதிலொன்றும்வரவில்
லை. தம்பியைத்திசையன்விளைக்குச்சமீபமாகவுள்ள ஊர்களிற்போகும்படியா
ய்க் கனம்பொருந்திய கால்வேல் ஐயரவர்களிடத்திற் கேட்கும்படியாய்ச் சொ
ல்லிப்பார்க்கவேண்டும். இவ்விடத்தில் மரியசுந்தரிக்கு வயிற்றளச்சல்போல்
சலம்விழுந்துகொண்டிருக்கிறது. மற்றப்பிள்ளைகள் சுகமேயிருக்கிருர்கள். செ
பத்தியாயி கடுகுமணியைப்போட்டுவிட்டாள். வியாகப்பனும் ஞானப்பிரகாச
முந் தங்கள் கடுக்கனை இரவலாகக்கொடுக்கிறதும் வாங்குகிறதுமாயிருக்கிற
து. இதைக்குறித்து நான் கடுக்கனையெங்கேயென்றுகேட்க சின்னய்யா கொ
டுக்கச்சொன்ஞர்களென்றும், அவர்கள் சின்னய்யாவிடத்தில் கேட்க அது சி
த்தியுடைய யோசனையென்றும் இப்படிப்பலவகையாயிருக்கிறது. இதைக்கு
றித்து ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளக்கூடுமானுல்த்
தெரியப்படுத்துங்கள். இனிமேல் இப்படி ஒருக்காலுஞ்செய்யக்கூடாதென்று
கண்டிப்பாகச்சொல்லியிருக்கிறேன். வேறே விசேஷமில்லை.

இப்படிக்குத் தங்களின் தாழ்மையுள்ள

௲௮௱௫௰-ஹு நவம்பர்மீ ௰௧-உ மதுரேந்திரஞ் சவரிராயன்.

---

மக-ா-ா-ஸ்ரீ மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள் சீர்பாதகமலங்களு
க்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்தவணக்கத்துடனே தோத்திரஞ்செய்து
எழுதிக்கொள்ளுந் தாழ்மையானவிண்ணப்பம்.

ஆண்டவருடைய கிருபையினுலே இதுவரையும் இவ்விடத்திலுள்ள
யாவருஞ்சேமம். அப்படியே அவ்விடத்திலுள்ள யாவருடைய சேமாதிசயங்
களுக்குமெழுதியனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன். முன்னெழுதியனுப்பின
ஓலையும் பின்னெழுதியனுப்பிய காகிதமும் வந்துசேர்ந்தது. அதற்குப் பதி

லெழுதுகிறதற்கு இவ்விடத்தில் ப......களைக் குறித்து விசாரணையும் பதில் நியாயமும் நடந்துகொண்டுவந்த.........எழுத ஏதுவில்லாமல் கடந்துகடந்துபோயிற்று. இப்படிப்பட்ட.........த்துக்கென்று கனம் ஐயன்மார்களும் இரண்டுவதலிக் கூட்டங்கூடியிருக்கிறார்கள். மற்றவர்களுக்கெல்லாம் முன்னமே ஓலைகூறியாச்சுது. நாளைக்கு ௱-ஸ்ரீ அத்தான் சீனிவாசகம்பிள்ளையவர்களுக்கு ஓலைகூறுகிறதற்குத் திட்டஞ்செய்திருக்கிறார்கள். இவ்விதமாய் எல்லாருக்கும் ஓலைகூறியாயிருக்கிறது. விசாரணையும் இத்தோடேசரி. நேற்று (கனம்) ஐயரவர்கள் (மகாகனம்) கண்காணியாரவர்கள் சீக்கிரமாய்வருகிறதாகச்சொன்னார்கள். இதின் விபரங்களெல்லாம் எழுதியனுப்பவேண்டுமென்றால் பெருகும், முகாதாவில்சொல்லலாமென்று நினைத்திருக்கிறேன். அல்லாமலும் இதற்குமுன் இவைகளின் சுருக்கத்தைச் சாடையாய்ப்பாரபலாக் கேள்வியினாலறிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன்.

மேலும் சிவனைக்கொடுத்து சுகத்தைக்காப்பாற்றுகிற கருத்தர்......இம்மட்டும்சாந்து வந்திருக்கிறார். அதுபோல இன்னமுங் காப்பாரென்று நம்பவேண்டியது. வருஷத்தின் கடைசியில் வந்திருக்கிறோம். புதுவருஷம் ஆரம்பமாகிறது. சென்றகாலங்களில் நடந்திருக்கிற மாறுதல்களைப் பார்க்கும்போது வருகிறகாலத்திலென்னமாறுதல் நடக்குமென்று தெரியவில்லை. கருத்தர் எல்லாம் நலமாகச் செய்வாராக. கிறிஸ்துபிறப்பின் பண்டிகையன்றைக்கு விடியற்காலம் (சஇ)மணிக்கு தமிழருக்கு ஆராதனை......இங்கிலீஷ்காரருக்கு (யஇ) மணிக்கு ஆராதனைநடந்தது. அன்றைக்கு அக்காளு......லானவர்களுக்கும் தங்கச்சிஅவள் மாப்பிள்ளைப்பிள்ளையவர்களுக்கும் சா...டுசெய்து அனுப்பினோம்...லை தேவையானவேளை சேரிட்டால்வருத்தந்தானேயென்று நினைத்து சீக்கிரத்திலனுப்பினேன். அவளுக்கு அதற்குப்பதிலாகக்கொஞ்சவிலைக்குள்ளே சீலைவாங்கியிருக்கிறேன். ௱-ஸ்ரீ அண்ணாவி முத்தையபிள்ளையவர்களுக்கு (ரு)தூயனுப்பினேன். மற்றக்காரியங்களெல்லாம் அந்தப்படியேயிருக்கிறது. வியாகம்மையினுடைய அய்யா அம்மை முதலான யாவருஞ் சுகமேயிருக்கிறார்கள். சின்னம்மணி, பெரியநாயகம்பிள்ளையவர்களும் இவ்விடத்தில்கூடத்தில்நிறைந்துகொண்டு வாசமாயிருக்கிறார்கள். மற்றப்பிள்ளைகளெல்லாருஞ் சுகமேயிருக்கிறார்கள். மரியசுந்தரிக்குமாத்திரஞ் செழிப்பில்லை. தூங்கினாப்போலே......பிடித்துக்கொண்டிருக்கிறாள். ஏசுதாசன் இப்பொழுது சுவுக்கியமாயிருக்கிறான். அம்மைக்கும் என்னுடைய தோத்திரத்தையும் தம்பிமார் வியாகம்மைமுதலானவர்களுக்கு என்னுடையவாழ்த்துதலையுஞ்சொல்லவேண்டுகிறேன். அக்காளுடையகைக்குழந்தையை அவ்விடத்துக்கு அனுப்பி



யிருக்கிறது நல்லகாரியந்தான். முன் அவனை அனுப்பாமலிருந்தவகைப்பாடுகள்போல இப்போது அனுப்பியிருக்......லைகளிராதிருப்பதாக. அப்படியிருந்தால் அனுப்பமாட்டார்களென்று நினைக்கிறேன். நடக்கவேண்டியமாறுதல்களெல்லாம் நடந்துதீர்ந்ததென்பதினாலே இப்போது இந்தமாறுதலுண்டாகி இப்படியனுப்பவந்திருக்கிறதென்று நிதானிக்கத்தக்கதாயிருக்கிறது. இப்படியெல்லாம் நடக்கவேண்டியது சுவாமிக்குச் சித்தமாயிருந்தது. நன்மைக்கென்றேயிருக்கும். ஆனால், ஒன்றுமாத்திரம் என்மனதிலுண்டாயிருக்கிறது. அதாவது நமக்கருமையான அக்காளுடைய புருஷனாகிய நம்முடைய அத்தானவர்கள் பேரில் முன்னிருந்தபடியே அன்பும் நம்புதலும் எந்தவகையிலுண்டாம்-எந்தவகையிலுண்டாக்கலாம் என்கிற வியாகுலமுஞ் சந்தேகமும் மிகுதியும் என்மனதிலுண்டாயிருக்கிறது. ஆண்டவர் சகலத்தையும் நேர்ப்படுத்துவாராக. அவருக்குச்சித்தமானால் சகலமும் நேராய்ச்சீர்ப்படும். ஆனால் அவர்களைப்பற்றித் தீமையான எண்ண மாத்திரம் இதுவரையும் நம்முடையமனதில் உண்டாகவில்லை. சுவாமி அவர்களையும் நம்மையுஞ் சகலத்திலும் நலம்பெற நடத்துவாராக.

இப்படிக்கு தங்களுழியன்
மதுரேந்திரம் சவரிராயன்.

௲அஎருய-ஷூ டிசம்பர்மீ உஅ-உ
முருகன்குறிச்சி

---

மகாகனம்பொருந்திய அய்யா அவர்கள்சிர்பாதகமலங்களுக்கு அடியேன் மதுரேந்திரம் மிகுந்த வணக்கத்துடனே தோத்திரஞ்செய்தெழுதிக்கொள்ளுந் தாழ்மையான விண்ணப்பம்.

இவ்விடத்திலுள்ள யாவரும் கருத்தருடைய கிருபையினாலே சேமம். அப்படியே அவ்விடத்திலுள்ள சேமாதிசயங்களைக்குறித்துஞ் சுருக்கமாயறிந்தேன். கருத்தர் இம்மட்டும் நம்மைக்கிருபையாய்க் காப்பாற்றினதற்காக அவருக்குத்தோத்திரம். இன்னாசியம்மாளுக்கு இரண்டு மூன்று நாளாக நல்ல சுகமில்லை. வாய்வு உபத்திரவங்கொஞ்சமுண்டாயிருக்கிறது. அனுப்பிவிச்சவைகள்வந்துசேர்ந்தது. துண்டுகளில் (கூ) குறைவாயிருந்தது.

உபதேசிமார்கள் (எஉ) வரவும் (அஉ) சங்கமாகவுந் திட்டஞ்செய்திருக்கிறது. (மகாகனம்)கண்காணியாரவர்கள் (யகஉ) இவ்விடத்திலிருக்கிறார்கள். (உடுஉ) குருப்பட்டங் கொடுக்கிறதாகவுஞ்செய்தியுண்டாயிருக்கிறது. (கனம்) பெற்றிற்றையரவர்கள் நாளைக்காலமே இவ்விடத்திலிருப்பார்கள். (கனம்) தாமுஸ் ஐயரவர்களும் அம்மாள் குழந்தைகளும் கனம் பெற்றிற்றம்மாள் குழந்தைகளுஞ் சனிக்கிழமை இங்கேயிருப்பார்கள். நீங்களுஞ் செவ்

வாய்க்கிழமை (எ-உ) வந்துசேருவீர்களென்று நம்புகிறேன். அம்மைக்கும் என்னுடைய தோத்திரத்தையும் மற்றெல்லாருக்கும் என் வாழ்த்துதலையும் சொல்ல.

தாழ்மையுள்ள ஊழியன்

௲அ௱ரு௰க-ஷு சனுவரிமீ உ-வ மதுரேந்திரஞ் சவரிராயன்.

---

மகா-ா-ா-ஸ்ரீ கனம்பொருந்திய ஐயா அவர்கள் சமுகத்துக்குத்தோத்திரஞ்செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

தேவகிருபையினாலே இவ்விடத்து யாவருஞ்சேமம். அவ்விடத்துச்சேமாதிசயங்களைக்குறித்தும் எழுதக்கேட்கிறேன். தாங்கள் எழுதியனுப்பின காகிதம்வந்துசேர்ந்து சமாசாரம் அறிந்தேன். எலிசப்பேத்து மரியம்மாளுக்கு இரண்டுதரம் வெறுந்தண்ணீரும் இன்று எண்ணெய்த்தண்ணீரும் விட்டிருக்கிறது. மரியம்மாளுக்கு இரண்டு நாளாய் அதிகமாய் வயிற்றுப்போக்கிருந்தது. ஆனதால் மாசில்லாமணியா பிள்ளைக்குச்சொல்லி அவளுக்கு லேசானவைத்தியமுள்ளதாய் ஒருமருந்துகொடுத்துவருகிறோம். ஷை மாசில்லாமணியாபிள்ளைக்கு வெள்ளைக்கவணியாயிருக்கவேண்டுமேயன்றி வேறுவிதமாயிருக்கவேண்டாமென்கிறார். மேலும் அவ்விடத்திலிருக்கிறதாகஎழுதி...யாக... தங்களுக்குப்பிடித்திருந்தால் சரிதான். ஆனாலும் துவக்கத்தில்தானே மூணு கூ கொடுத்தப்..... ஆளையறியுமுன் சம்பளம் நிர்மாணிக்கக்கூடாது. இப்போது கூ இரண்டரை தான் கொடுக்கப்படும். பின்னாலேயவர்கள்காரியத்தையறிந்து கூட்டலாமென்று நினைக்கிறேன். சவரிமுத்துப்பிள்ளையும் அவர்பெண்சாதியும் உதவமாட்டாது. அற்பக்களவுக்கும் எச்சித்தனத்துக்கும் அவரைவிட்டால் மனுஷன் இல்லை. திறமையும் இல்லை. சொன்னதையும் பேசாமல் கேட்கிறதுமில்லை. அவர்காரியமிப்படியிருக்கிறது. வேறே ஆட்தான் பார்க்கவேண்டியதாயிருக்கிறது. இந்த சமயத்திலிவ்விடத்தில் உபாத்தியார் முதலானவர்களால் உதவிக்குக்குறைச்சலில்லை. ஷை உபாத்தியார் ஞானவடிவுக்காக அந்த வண்ணானை அனுப்பும்படிவிரும்புகிறார். இப்போது கொடுக்கிறதில்லை. சில நாளைக்குப்பின்புதான் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனதால் அதை அனுப்பிவிடுங்கள். மற்றக்காரியங்களைக்குறித்துப் பின்னாலே எழுதியனுப்புவேன். இவ்விடத்து நாங்களெல்லாரும் தங்களெல்லாருக்கும் தோத்திரஞ்சொல்லுகிறோம்.

இப்படிக்குத் தங்கள் ஊழியன்

சனுவரிமீ உ௰௬-வ மது. சவரிராயன்.

முருகன்குறிச்சி

---



[௲அ௱ரு௰க-ஷு பிற்பரவரிமீ*] ச-வ குலசைமரியான், ஏசுதாசன், இருவரும் கல்விச்சாலையிலிருந்து விடுமுறையானதால்க் கூட்டிக்கொண்டு சுவிசேஷபுரத்துக்குவரும்போது இரவு-எ இ-மணி நேரமாயிருந்ததினால்ப் பிள்ளையவர்கள் வீட்டிலிருக்கலாமென்று நான்போக ஷை குலசைமரியான் தன் அக்காளில்லையென்றும் ஷை அத்தான் இரண்டாந்தாரங்கட்டுகிறதுக்கு அநேக துராதரஞ்செய்யவும் பண்ணினவீட்டிற்போகப்படாதென்ற எண்ணத்தினால் அந்த வீட்டுக்கு வரமாட்டேனென்று அழுதான். அதைப்பார்த்து மணவிளை நானும் இளையவனும் வீட்டின் முத்தத்தில்போனவர்கள் திரும்பியவனின்றயிடத்தில் வெளியேவந்தோம். வீட்டார்கள் ஒருவருமெங்களைக்காணவில்லை. ௰-மணிக்கு சமாரியாவுக்குவந்தோம்.

௰-வ ஷை பிள்ளையவர்கள் குமாரர் வியாகப்பன், ஞானப்பிரகாசம், பின்பு பெண்கொடுத்த மாமி சுவாமியடியாளையும் நமது வீட்டிற்கனுப்பினார்கள்.

௰க-வ யவர்களுமவர்கள்கூட ஷை குலசைமரியானும் ஏசுதாசனும் தாயுங்கூடப்போனார்கள் சுவிசேஷபுரத்துக்கு.

௰௩-வ கனம் இஸ்பிராற்று ஐயரவர்கள் புதிதாய் இந்தச் சேகரத்துக்கு வந்தவர்களைக்காணும்படி போனோம். இன்றையம்மாளும் மாப்பிள்ளையும், மதுரேந்திர ஐயருஞ் சமுசாரங் குழந்தைகளும், பெரிய தாயாரும், அவர் பட்டம்பெற்று முதலாவதாக நம்முடைய வீட்டுக்குவந்தார்கள்-௰ரு-வ.

௰அ-வ யவர்கள் ஆசீர்வாதபுரத்துக்குப் போயிருக்க உத்தரவுப்படிக்கு புறப்பட்டார்கள். சுவிசேஷபுரத்துக்குப்போய்ப் பிள்ளையவர்கள் வீட்டிலிருந்து விருந்துசாப்பிட்டுப் புறப்படும்போது பெரியகட்டில் மெத்தை தலையணை முதலிய சாமான்களுங்கொடுத்தனுப்பினார்கள்.

உஅ-வ உத்தரவுப்படி சுவிசேஷபுரத்துக்குப்போனேன். கனம் இஸ்பிராற்று ஐயரவர்கள்வந்து முதலாவது சம்பளம், எகிப்த்து தேசத்துச் சரித்திர புஸ்தகமுங்கொடுத்தார்கள்.

மார்ச்சுமீ ச-வ என் மகன் இன்றையம்மாளுக்கு மருந்து கொடுக்கச் சிலவு கூ கவ-வயித்தியஞ்செய்த நல்லசிவன்பிள்ளைக்கு இன்றும் கூ க-கொடுத்தேன்.

௰-வ சுவிசேஷபுரத்தில் கனம் இஸ்பிராற்று ஐயரவர்களிடத்தில் ஒரு வாரத்துக்கு உத்தரவு வாங்கிக்கொண்டு செட்டிமூலம்பட்டியில் என் அக்கா

* கூ௫-ம் பக்கம் ௰க-ம் வரியின் தொடர்ச்சி. J. D. S.

ஞானசமரியாயி மரித்ததுட்டிக்குப்போக நானும் என் சமுசாரமும் ஆசீர்வாதபுரத்தில் என் மகன் மதுரேந்திர ஐயர் வீட்டுக்குப்போனேம். அங்கே யெனதண்ணன் அச்சங்குளம் பண்டிதர் சவரிமுத்துசெட்டியார் வடக்கன்குளத்திலிருந்துவந்தார்கள். கொப்பன்பட்டி அக்கான் மாப்பிள்ளை மதுரேந்திரம்பிள்ளை மரித்தசெய்தி சொன்னதினால் ௰௧-உ கனம் இஸ்பீரத் ஐயாவர்களுக்குக் காயிதமெழுதியாள்வசம் அனுப்பி கூட ஒருவாரத்துக்கு கேட்டுக்கொண்டு, ௰௨-உ புறப்பட்டுச்சிரீவைகுண்டத்து ஆத்திற்போய்கட்டுச்சாதஞ்சாப்பிட்டுக்கொண்டு குருகுகோவிலிற்போய் வெயிலுக்கிருந்து, சாயுங்காலம் ஷை செட்டிமூலம்பட்டியில்போய் ஷை என்சகோதரி மக்கள் மூன்றுபேரிடத்திலுந் துட்டிகேட்டுக்கொண்டு, ௰௩-உ தெக்குத் நித்தான்பட்டித் தங்கச்சி அந்தோணிமுத்துவீட்டுக்குப்போய்பின்பு அச்சங்குளத்துக்குப்போய் ஷை பண்டிதாண்ணாட்சி வீட்டிலிருந்து அடுத்தவீட்டு அத்தான் மரியசிங்கஞ்செட்டியார் வீட்டுக்கும்போய் விசாரித்துக்கொண்டு, ௰௪-உ ஷை கொப்பன்பட்டிக்கும்போயவர்கள் வீட்டில் ஷை அத்தானுக்கு மோட்சவிளக்குமுடிந்தது. ௰௫-உ குருவின்நத்தத்தில்வந்து எங்கள் பெரியதகப்பனார்மக்கள்மருமக்கள் பிள்ளைகள் பேரன்மார்கள் எல்லாரையுங்கண்டு மரியசிங்கம்பிள்ளை வீட்டிலுந் தேவசகாயம்பிள்ளை வீட்டிலுஞ் சாப்பிட்டு இருந்து, என் கொழுந்தி தெய்வாயியையும் விசாரித்துக்கொண்டு ௰௬-உ செட்டிமூலம்பட்டிக்கு மோட்சவிளக்குக்கு வருகிறவர்கள்கூடப் பிறப்பட்டு ஷை அச்சங்குளம், நித்தான்பட்டியிலுமுள்ளவர்களையும் என்பெரியதாயார்அந்தோணிமுத்தம்மாளையுங் கண்டனுப்பிக்கொண்டு செட்டிமூலம்பட்டி வந்துசேர்ந்தோம். இரவு மோட்சவிளக்குச்சடங்குபண்ணினார்கள். அவர்கள் பாப்புமார்க்கம். நாங்கள் சுவிசேஷமார்க்க ஒழுங்குக்கு விரோதமில்லாதிருந்து ஷை என் மருமக்கள்மார்களுக்கு வழக்கப்படி சுருள்வைத்தார்கள். நானும் ஒரு ரூபாய் சுருள்வைத்துக் கொடுத்து அங்கிருந்து ௰௭-உ தலைமுழுக்காட்டும் நடந்தது. நாங்களுந் தலைமுழுகிக்கொண்டு இரவிற் கட்டுசாதமுங்கட்டிதந்து கூடவருகிறதுக்கு ஒரு ஆளுந்திட்டஞ்செய்தார்கள். ௰௮-உ ஆசீர்வாதபுரத்துக்குவந்து ஷை மதுரேந்திர ஐயர் வீட்டிலிருந்தோம். ௰௯-உ சுவிசேஷபுரத்துக்கு ஷை ஐயர் வண்டியில்வந்தோம். ௨௰-உ சமாரியாவுக்குவந்துசேர்ந்தோம்.

ஏப்பிரல்மீ ௯-உ விசாரணைப்பிள்ளையவர்கள் சமுசாரத்தைக் கனம் சார்சென்றய்யாவர்களும்மம்மாளும் இளஞ்சுனையிலிருக்கிறவர்களைக் காணப் போகச்சொல்லவேண்டுங் கூடப்போக ஆளில்லையென்றென்னிடத்திற்சொன்னதுக்கு;நானின்று என்வீட்டுக்குசமாரியாபுரத்துக்குகூட்டிப்போய்ப்பின்பு



என்சமுசாரத்தைக்கூடப்போகச்சொல்லி கண்டும் எங்கள்வீட்டுக்குவந்தபின்பு இவ்விடத்துக்குக் கூட்டிவருகிறேனென்றேன். அவர்கள் அப்படியெல்லாம் நாள்க்கடத்தப்படாதென்றார்கள். அதினால் நான் அவர்கள் மனவி நமதுவீட்டில்வருகிறதுக்குப் பிரியமில்லாமலிருக்கிறார்களென்று நான்வந்துவிட்டேன் சமாரியாவுக்கு.

௰-உ யவர்கள் மனவிக்குக் காவல்க்காரன் உடையாத்தேவன் பெண்சாதியையும் மகன் பூலுத்தேவனையுங்கூட வண்டியிலனுப்பினார்கள்; இளஞ்சுனைக்குப்போக;இந்தவழியாய்வந்து, நீங்கள் ஆராவது வருகிறீர்களாகூட என்றார்கள். அவளை நம்முடன் அனுப்பப்பிள்ளையவர்களுக்குப்பிரியமில்லாமல் மறத்தி மறவன் அவர்சமுசாரத்துக்குடந்தைபோல நினைத்தார்களே, அப்படியிருக்க நாமேன் போகவேண்டுமென்று போகவில்லை. ஷையார்கள் தானே இளஞ்சுனையில் ஐயாம்மாளையுங்கண்டு அங்கிருந்து ௰௧-உ இந்தப் பாதைக்குத்தானேவந்து நமது வீட்டிற்தாமதிக்காமல்ப்போய்விட்டார்கள்.

௨௫-உ ஆசீர்வாதபுரத்திலிருந்து ஷை ஐயர் முதலாவது சம்பளம்வந்ததில் ஐயாவுக்கு முதலாவதுகொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தினால் ௹ ௫-ன் காயிதமும் ஆள்வசமனுப்பிவந்தது. முருகன்குறிச்சியிற் படித்துக்கொண்டிருந்த வியாகப்பனைக் காணாமற்போனசெய்திவந்து தகப்பனாரும் நாங்களுந் துக்கப்பட்டிருந்தோம். திருவனந்தபுரம்வரையும் ஆள்க்களையனுப்பி விசாரிக்கவும் மற்றுமிடங்களிலும் விசாரித்துக்கூட்டிவரவும் ஷைபிள்ளையவர்கள் ஆள்க்களை அனுப்பியிருந்தார்கள். ௩௰-உ ஷை பிள்ளையாண்டானை யெத்திக்கூடக்கூட்டிப்போனவன் வேதஸ்பன்பிள்ளைமகன் சின்னத்தம்பி நாங்குன்நேரிவரையும்போன பின்பு மலைத்து ஷை வியாகப்பன் முருகன்குறிச்சியில் மறுநாள்வந்துவிட்டானென்ற செய்திவந்தது.

மெய்மீ ௬-உ அச்சங்குளத்திலிருந்து அண்ணன் சவரிமுத்துசெட்டியார் சமாரியாவுக்குவந்தாரிந்தஇடத்தில் சுவிசேஷமார்க்கத்தைச் சேர்ந்து பண்டிதத்தொழிற்செய்யலாமென்ற நோக்கமாய். ௰௧-உ சுவிசேஷபுரத்தில் பிள்ளையவர்கள் மனவிக்கு விஷபேதியென்று ஆள்வந்தது. உடனே யென் சமுசாரத்தையும் ஷை பண்டிதரையும் அனுப்பினேன். அந்தப்பேதி மந்தப்பேதியாயிருந்தது. பிள்ளையவர்கள் பயந்தான் உடனே நமக்காள்விட்டதென்று ௰௨-உ ஷையாய் வந்தவர்கள் என்சமுசாரமும் பண்டிதருஞ் சொன்னார்கள். இளஞ்சுனையிலிருந்து புறப்பட்ட அச்சுக்கூடத்து பென்சிற் துரை வழிதப்பி சமாரியாவிற் செபஞ்செய்துகொண்டிருக்கிறவேளை கோவிலுக்குவந்தவர் சுவிசேஷபுரத்துக்குப்போகவேண்டுமென்றும் என்னையும் ஆரொ

ன்றும் விசாரித்தபின்பு எமது வீட்டிற்குவந்து தாகத்துக்குச்சாப்பிட்டுச் சுருட்டும் பத்தவைத்துக்கொண்டுகூட ஆளில்லாததினால் நானவர்கூடப்பேசிக்கொண்டுபோய்ச் சுவிசேஷபுரத்தில் சனம் ஐயாவர்கள் பங்களாவிற் கொண்டுவிட்டுப்பின்னையவர்கள் வீட்டிற்படுத்திருந்து வீட்டுக்கு ௯௩-௳ உதையத்தில்வந்தேன்.

௰௮-௳ மதுரேந்திரஐயர் ௹ ௰௮ தம்பிமரியசவரிமுத்துவசமனுப்பினார்.

ஜுன்௴ ௧-௳ தமிழ் வைகாசி௴ ௨-௳ மணலிவிளை ஊரிலிருக்கும் தட்டான்மடத்து சுப்பிரமணிய ஆசாரியைக்கொண்டு யாக்கோவு சவரிராயனுக்குக் காதுகுத்தினோம். ௨௧-௳ ௸ அண்ணன் பண்டிதருக்குச் சிலவுக்கென்று ௹ ௧-கொடுத்தனுப்பினோம்.

---

சமாரியாவுக்கடுத்த ஊர்கள், ௮. கிறிஸ்தவர்கள், அஞ்ஞானிகள், மகமதுமார்க்கத்தார், பாப்புமார்க்கத்தார்களின் சனத்தொகையறியும்படி.

௲௮௱௫௰௧-௵ ஜுன்௴ ௫-௳

| | | |
|---|---|---|
| சமாரியாபுரம் | கிறிஸ்தவர்கள் வீடு-௨௨. | சனம்-௭௰. |
| | அஞ்ஞானிகள் வீடு-௯௧ | சனம்-௱௨௧ |
| | மகம்மதுமார்க்கமில்லை | பாப்புமார்க்கமில்லை |
| அவுணம்குடி | கிறிஸ்தவர்கள் வீடு-௪. | சனம்-௰௭. |
| | அஞ்ஞானிகள் வீடு-௨௩ | சனம்-௯௮ |
| | மகமதுமார்க்கம் வீடு-௨௰ | சனம்-௭௰ |
| | பாப்புமார்க்கமில்லை. | பள்ளி-௧ |
| சுப்பிரமணியபுரம் | கிறிஸ்தவர்கள் வீடு-௯ | சனம்-௩௩ |
| | அஞ்ஞானி வீடு-௫௯ | சனம்-௨௱௨௪ |
| | துலுக்கில்லை | பாப்புமார்க்கமில்லை. |
| மணலிவிளை | அஞ்ஞானி வீடு-௰௮ | சனம்-௯௯ |
| | கிறிஸ்து இல்லை பாப்பு இல்லை மகமது இல்லை | |
| கெடுவிளை | அஞ்ஞானி வீடு-௯. | சனம்-௰௮. |
| கட்டாலிவிளை | கிறிஸ்தவன் வீடு-௧. | சனம்-௨. |
| | அஞ்ஞானிகள் வீடு-௰௨. | சனம்-௪௰ |
| | மகமது இல்லை | பாப்பு இல்லை. |
| திசையன்விளை | கிறிஸ்து வீடு-௧. | சனம்-௧. |
| | அஞ்ஞானிகள் வீடு-௭௧. | சனம்-௨௱௯௯. |
| | மகமதுமார்க்கம் வீடு-௫௭. | சனம்-௨௱௩௰. |
| | பள்ளி-௧. | அஞ்ஞானக்கோவில்-௨. |
| அப்புவிளை | அஞ்ஞானி வீடு-௪௭. | சனம்-௱௩௰. |
| | ஆக ஊர்-௮. வீடு ௩௱௭௯. | சனம்-௲௱௯௰௧. |
| சமாரியா | அஞ்ஞானிகள் மறக்குடி வீடு-௪ | சனம்-௰௧ |
| | நாசுவன் வீடு-௧ சனம்-௭ சான்குடி வீடு-௨௪ | |



ஜுலாய்௴ ௪-௳ பாளையங்கோட்டைக்குப்போகப் புறப்பட்டு ஆசீர்வாதபுரத்துக்குப்போய் மதுரேந்திர ஐயர் வண்டியிலேறிக்கொண்டுபோய் இன்னாசியம்மாள் வீட்டில் இறங்கியிருந்தோம். ௨-௳ சங்கங்கூடினது.

௩-௳ யும் ௪-௳ யுமிருந்து ௫-௳ ௸ ஐயர்கூடவே ஆசீர்வாதபுரத்துக்கு வந்தோம். உடனே நான் திசையன்விளை சமாரியாபுரத்துக்கு சனிக்கிழமையானதினால் தாயமாடாமல்வந்தேன்.

௮-௳ சமாரியா உபாத்தியாயிய சந்தோஷத்துக்கு எலிசேபெத்து ஐயர் பிள்ளையாகவளர்த்தவளை விவாகஞ்செய்து உடனே சமாரியாவுக்குவந்தார்கள், சுவிசேஷபுரத்துக்குப்போயிருந்த நான் விசாரணைப்பிள்ளையவர்கள் வியாகப்பனையும் செபத்தியாயியையும் வெகுவாய்ப்பேசினதுக்கு மனம்பொறாமல் இரண்டுதரங் கண்ணீர்விட்டேன். ௸ பிள்ளைகளையுமென்வீட்டுக்குக் கூட்டிவந்தேன்.

௯-௳ ஏசுதாசனுமவன் பெரியதாயாரும் ஆசீர்வாதபுரத்திலிருந்துவந்தார்கள்.

௰௪-௳ வடக்குன்குளத்திலிருந்து என் தங்கச்சிவசமாயிருந்த என் தகப்பனார் பொன்னுநாகல்லையவன் மகன் தருமநாதன்வசமனுப்பினாள். அவன் வீட்டுக்குப்போறபோது அவனுக்கு சந்தோஷம் ௹ ௨-கொடுத்தனுப்பினோம்.

௨௨-௳ ௸ மதுரேந்திர ஐயர்வந்து எங்களைப்பார்த்து அவசரமாய் ௨௩-௳ போனார்.

௨௪-௳ வடக்குன்குளம் டாக்கிட்டர் தம்பி தேவசகாயம்பிள்ளை சமுசாரங்குழந்தைகளுந் தாயாரும் சொச்சிச்சித்தியும் தக்கிடி ஞானப்பிரகாசம்பிள்ளை பெண்சாதி தெய்வாயியும் வண்டியில்வந்தவர்களிருந்து

௨௫-௳ அ. ரத்தில்போனார்கள். உபரிக்குவந்தவர்கள் எங்களையும் பார்க்கவந்தார்கள்! சுவிசேஷபுரத்திலிருந்து கேமத்தாளும் வியாகப்பன் முதலான பிள்ளைகளும்வந்திருந்துபோனார்கள்.

௨௯-௳ பாளையங்கோட்டைக்குப்படிக்கப்போறபோது ஆசீர்வாதபுரத்துக்கு ஐயர்வரச்சொல்லிப்போயிருக்க கேமத்தாள்செய்த பழையசட்டத்தினால் வெள்க்கப்பட்டு அங்கேபோகாமல் பிள்ளைகளைத்திருமலாபுரத்துப் பாதைக்குப்போனார்களாம்.

ஆகஸ்து௴ ௭-௳ வடக்குன்குளம் டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் குமாரனுங் குமஸ்தாவும் மூன்றுபேரும் தவசிப்பிள்ளையுடன்வந்திருந்து ௯-௳ போனார்கள்.

௮-௳ வந்த அண்ணாட்சி பண்டிதரும் மகனும் ௰௨-௳ ஆசீர்வாதபுரத்துக்குப்போனார்கள்.

௰௩-௳ விசாரணைப்பிள்ளையவர்கள் பெண்சாதிக்குச் சூல்ப்பலகாரம் கட்டியரிசி கட்டிக்கொண்டு என்சமுசாரம் பிள்ளைகளையுங் கூட்டிப்போனாள். பின்பு செபத்தியாயியை அங்கேவிட்டு ௰௫-௳ வந்தாள்.

௰௬-௳ நேமத்திலிருந்து மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளையும் வடக்குவீட்டு அம்மானும் வந்தார்கள்.

௰௭-௳ மரியசவரிமுத்துக்கு கலியாணம் முடிந்திருந்ததினால் ௯-வ மொய்போலக்கொடுத்தார்கள். ஒரு சீலைக்குடை நல்லதாயிருந்ததை வாங்கிக்கொண்டு ஒரு காங்குத்துணிபோட்ட ஒருகுடையையுங்கொடுத்துப்போனார். ஷை மாமனாராகிய நல்லதம்பியாபிள்ளை தடிக்கம்புங்கொடுத்தாராம்.

௨௰-௳ நீலன்மகன் வெள்ளைக்கண்ணென்று பேர்வழங்கிய தருமக்கண்ணுக்கு வீடுகட்ட நமதுவீட்டுக்குக் கீழ்புறத்தில்க் கால்நாட்டிக்கொடுத்தேன்.

௨௫-௳ குருவின்நத்தம் பெரியய்யாமகன் சஞ்சீவிக்கு தமிழ் ஆவணிமீ ௰௫-௳ வெள்ளிக்கிழமை கலியாணமென்று மூத்ததம்பி மிக்கேல்ப்பிள்ளை ஓலையும் பாக்கும் ஆள்வசமனுப்பினார்.

செப்த்தெம்பர்மீ ௨-௳ வடக்குன்குளத்தில் சின்னய்யா கொச்சி ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள் மரியவியாகுலத்து கலியாணத்துக்குப்போக நானுமென்வீட்டாரும் புறப்பட்டு சுவிசேஷபுரத்துப்பாதைக்குப் போனோம். அப்போது பிள்ளையவர்கள் மனவிக்கு பேறுகாலவருத்தமிருந்ததினால் என் சமுசாரத்தை நிறுத்திவிட்டு என் பேத்தி செபத்தியாயியையும் கூட்டிப்போனோம். என் மருமகள் வியாகம்மையும் யோவான் தேவசகாயமுமாகச் சமுகரெங்கபுரத்தில் இரவு தங்கினோம் காவல்க்காரன் கூடவந்து ௩-௳ விடியற்காலம் புறப்பட்டுக் கலியாணவீட்டிற் போனோம். பின்பு பிள்ளையவர்களும் வந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்ததாகவும் கேட்டோம். இரவில் முன்பு சின்னய்யா வீட்டிலும் பின்பு அனாவீட்டண்ணாட்சி ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள்மகன் மிக்கேலுக்கும் விவாகம் நிறைவேறிற்று.

௪-௳ தம்பி பரஞ்சோதியாபிள்ளை யிளையமகளை விசாரணைப்பிள்ளை மகனுக்குக்கலியாணத்துக்கு சம்மதங்கேட்கப்போயிருந்தோ மெல்லாருக்குமுன்ஷையார்வாக்குக் கேட்டுறுதிபண்ணினோம். அந்தப்பெண்ணை இங்கேகூட்டிவிடுகிறதென்றும்பேச்சு.



௬-௳ விடியக்காலம் வண்டியில்வந்தோம்: வியாகம்மை கால்ப்பீலி சழன்றுவிழுந்துபோயிற்று. சாயந்திரம் சமாரியாவுக்கு வந்துசேர்ந்தோம்.

௰௨-௳ நேமத்தம்மாளவர்கள் சுவிசேஷபுரத்துக்கு வந்தார்கள்.

௰௪-௳ கயிலாசபுரத்து தம்பி தேவசகாயம்பிள்ளை மகன் புத்தியறிந்தவளுக்கு அரிசி கறிகொடுக்கும்படி யென்சமுசாரம்போனாள். அங்கிருந்து ௰௫-௳ வீட்டுக்குவந்தாள்.

௰௬-௳ பிள்ளையவர்கள் மனைவி வீடுகூடினாளாம். அதற்குஎன்சமுசாரம் போனாள் சுவிசேஷபுரத்துக்கு. பிள்ளையவர்களுக்குபுகையிலைச்சருட்டுக்குடிக்க வெள்ளிக்குழல்செய்து வடக்குன்குளம் மிக்கேல் ஆசாரிவந்தானும், கூட பரஞ்சோதியாபிள்ளை மகன் இன்னாசிமுத்தும் நல்லதம்பியாபிள்ளை மகன் வியாகப்பனும் ௰௬-௳ சமாரியாபுரத்துக்குவந்து சாப்பிட்டபின்புபோனார்கள். பின்பு நாசரேத்தூர் உபதேசியார் சவரிமுத்துப்பிள்ளை பெண்சாதியுங்கூட ஒரு ஆளும்வந்திருந்து கயிலாசபுரத்துக்குப்போனார்கள்.

௨௰-௳ குருவினத்தம் அண்ணாட்சிமகன் மரியசிங்கம்பிள்ளை செல்வமருதூரில்ப் புகையிலைக்கிடங்குபோட்டிருந்து வியாபாரம்நடக்கிறதை விசாரித்துக்கொள்ளவந்தவர் நமது வீட்டில்வந்து சுகசெய்திவிசாரித்துச் சாப்பிட்டபின் போனார்.

நானும் மரியசவரிமுத்தும் வழியனுப்பப்போகும்போது: தம்பி காபிரியேலுக்கு நான் கலியாணம் சிறப்பாய்ச்செய்வேன், நீங்கள் எப்படியும் வரவேண்டும், வராவிட்டால் நானுமினி யிங்கேவரமாட்டேனென்றார். எங்களுக்கு மிசியோன் சம்பளக்காரரானதால் கூடுமானால் உத்தரவுகிடைத்தால் வருவோம். நீர் அப்படிச்சொல்லப்படாதென்று சொல்லிவிட்டோம். என் சமுசாரமில்லை. வியாகம்மைதான் சாப்பாடுசெய்தது. ௨௨-௳ சுவிசேஷபுரத்திலிருந்துவந்தாள்.

௨௫-௳ வடக்குன்குளத்திலிருந்து விசாரணைப்பிள்ளைக்கு ஓலைவந்தது தம்பாபிள்ளை மரித்துப்போனதாக. எனக்கு ஓலையாவது ஆளாவது வரவில்லை. ௨௬-௳ டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் செபத்தியாம்பிள்ளையும் வந்துபோனார்கள்.

௨௮-௳ சுவிசேஷபுரத்துக்கு இராப்போசனத்துக்குப்போனோம். பிள்ளையவர்கள் மனைவி அன்னம்மை பெற்ற தலைப்பிள்ளைக்கு என்னையும் என் சமுசாரத்தையும் என் மகன் மதுரேந்திர ஐயனையும் ஞானத்தகப்பன் தாயாயிருக்கக்கேட்டுக்கொண்டதினால் இருந்து சாயுங்காலம் ௫-மணிக்குக் கனம் சேமுசுபிராட்டு ஐயரவர்கள் ஞானஸ்நானங்கொடுத்து மரியவியாகப்பனெ

ன்றும் பேரிடப்பட்டது. பின்பு சமாரியாபுரத்துக்குவந்துவிட்டோம். அன்று வடக்குன்குளத்தில் பெரிய வியாகப்பபிள்ளையவர்கள் மரித்ததாகபிள்ளையவர்களுக்கு ஓலைவந்தது.

அகஸ்டோபர்மீ ௩-உ நீத்தான்பட்டி மாப்பிள்ளை தருமநாதன்செட்டியார்வந்து சுவிசேஷபுரத்துக்கு ௪-உ சாயுங்காலம்போனார். ௫-உ வடக்குன்குளத்துக்கு ஷை வியாகப்பபிள்ளை, தம்பாபிள்ளை மரித்ததுட்டிக்குஎன் சமுசாரத்தைக் கயிலாசபுரத்தப்பாதைக்கனுப்பினேன். ஷை உபதேசியார் தேவசகாயம்பிள்ளை மனவியுங்கூடப்போனாளாம். இடையன்குடியில் வியாகம்மை முதலாவது இராப்போசனத்துக்குச்சேர்ந்தாள்.

௰-உ பாடத்துக்குப்போனேன். பின்பு என் சமுசாரம்வந்துசேர்ந்தாள். வியாகம்மை தாய் கயிலாசபுரத்துக்குவந்தவள் மகளைவந்துபார்த்துக்கொண்டுபோனாளாங் கூட மரிய சவரிமுத்து வழியனுப்பப்போனப்போல் போய்விட்டான்.

௰௩-உ சாயலாபுரத்தில் உபதேசிமார் சோதனைக்கு மரியசவரிமுத்தும் போனான்.

௰௪-உ வெண்பேத்தி செபத்தியாயிவந்தாள். ௰௭-உ விசாரணைப்பிள்ளை சமாரியாபுரம் மிசியோனுக்கானதால்த் தெருப்பத்தி ஒழுங்குசெய்து சுப்பிரமணிய ஆசாரியுஞ் சாலைமரமும்வைத்துப்போனார்கள்.

௨௧-உ முருகன்குறிச்சியிலிருந்து ஈசாக்கு உவாத்தியார் எழுதினது நம்முடையகுசைமரியாளை உபதேசிமார்கல்விச்சாலையிற்சேர்க்கயோசனையாம்.

நவம்பர்மீ ௰-உ கயிலாசபுரம் தேவசகாயம்பிள்ளை மகள் மூத்தவளை பாளையங்கோட்டை மாசில்லாமணியாபிள்ளை மகன் மதுரநாயகம்பிள்ளைக்கு இரண்டாந்தாரமாகக் கலியாணம். பெண்ணழைக்க வந்த மாசில்லாமணியாபிள்ளையவர்கள் சமுசாரங் குழந்தைகளுடன் நல்லதம்பி மதுரநாயகம்பிள்ளை மனவி பாக்கியமுமிங்குவந்து வியாகம்மையையுங்கூட்டிக்கொண்டு கயிலாசபுரத்துக்குப்போனார்கள்.

௰௨-உ நான் ஆசீர்வாதபுரத்துக்குப்போய் ௰௩-உ பாளையங்கோட்டைக்கு இசறேயம்மாளைப்பார்க்கப்போனேன். ஷை மதுரநாயகம்பிள்ளை கலியாணவிருந்துக்கும்போனேன். முன்னவர்தங்கச்சியென்மகனுக்குக்கலியாணத்தில் அவர்கள் மொய்முறையில்லையென்றதுபோல் நானுஞ்செய்யவில்லை.

நவம்பர்மீ ௰௮-உ குசைமரியான் கனம் சார்சென்றய்யரவர்கள் காயுதம் கனம் இஸ்பிராற்றய்யரவர்களுக்குத் தன்னைக்கல்விசாலையிற் சேர்க்கும்



படிக்கு சுயிதம்வாங்கவந்தான். ஷை காயுதத்துக்குப் பதில்வாங்கிக்கொண்டு ௨௧-உ புறப்பட்டு ஆசீர்வாதபுரத்திலிருக்கிற தமையனாரவர்கள் வீட்டுக்குப்போயிருந்து, ௨௩-உ பாளையங்கோட்டைக்குப்போய்ச் சேர்ந்தான். என் சமுசாரத்துக்கு வகுரிபோலத்தோன்றி எட்டுநாள்வரையும் உபத்திரவப்பட்டு கர்த்தர் கிருபையாற் சுகப்பட்டது. மரியசவரிமுத்துப்பிள்ளை செம்பபுரத்துக்கு ௯-உ போனவன் ௨௪-உக்குள்ளாக மலையாளத்தில் சேமம்வரையும் போய்வந்தான்.

டிசம்பர்மீ ௪-உ கல்லம்மான்புரங்கோவிலில் கனம் இஸ்பிராற்றய்யரவர்கள் ஞானஸ்நானம் சமாரியாபுரம்சபையில் சுடலைமுத்துப்பிள்ளை மகன் தருமவடிவுக்கும், பெரியவனுக்கும், பிள்ளைகளுக்கும் கொடுத்தார்கள்.

௭-உ சுவிசேஷபுரத்திலிருந்து பரவனையனுப்பிச் செபத்தியாயி புத்தியறிந்திருக்கிறாள் சாயந்திரமென்றுசொல்ல—௮-உ ஷையாளைவிட்டு அவன் பேத்தியாளை கூட்டிப்போனான். அதுபோய், ஷை பிள்ளைக்கு ௰௧-வயசு, ஷை பொய்யாய்ச்சொல்ல மூன்றுங்குடியாளால்வந்த குது. மறுநாள் ஷை பிள்ளையவர்கள் சேரமாதேவிக்குக்கோட்டுக்காரியமாய்ப்போனார்கள்.

௰௨-உ தேவத்துணையம்பிள்ளையை உதவி விசாரணையைவிட்டு தள்ளிப்போட்டார்கள்.

௰௪-உ கனம் ஆபிரகாம் ஐயர் சமாரியாவுக்குவந்தார்கள். சமதுவீட்டில் வளர்த்தகுரங்கு ஷை ஆராதனையில் கோவிலுக்கு வாராதபடிக்குக் கட்டிப்போட்டிருந்தது கழுத்துக்கயறு சுத்தி விழுந்ததினாலிறந்துபோயிற்று.

௨௪-உ மேத்திலிருந்து நல்லதம்பியாபிள்ளைமகளைத்தெய்வாயி கூட்டிவந்தாள். அவள் பிள்ளையவர்கள் வீட்டிலிருந்தாள். தத்தம்பண்ணி மதுசேக்கிரம்பிள்ளையும் அங்கிருக்கும்போது ஷை செபத்தியாயிபேரில் ஷை பிள்ளை பெண்சாதிபெற்ற ஆண்பிள்ளையைமிதித்துக்கொல்லப்பார்த்தாள், நாங்கண்டதினாலப் பிள்ளை பிழைத்ததென்று ஷை மதுசேக்கிரமும் ஷையார் மனைவி வண்ணம்மையுஞ் சொன்னதாகப் பிரஸ்தாபம்.

௲அ௱௫௰௨-ம் ௵ சனுவரி௴

௧-௳ சுவிசேஷபுரத்துக்கு உபதேசிமார்கள் யாவரும்போய்க் காலை ஆராதனை. பின்பு தருமச்சங்கம், ஆலயச்சங்கமும் முடித்து பின்பு பிள்ளையவர்கள் வீட்டில்வந்து முன்னமே அங்கேபோயிருந்த என்சமுசாரத்தையுங் கூட்டிக்கொண்டு சமாரியாவுக்குவந்தேன்.

௫-௳ மதுரேந்திர ஐயர் காயிதம் தம்மைப்பனைவடலிக்குப்போகசமட்டி உத்தரவுகேட்டெழுதினதுவந்தது. உடனே நான் பாளையங்கோட்டைக்கு சங்கத்துக்குப்போகவேண்டி ஆசீர்வாதபுரத்துக்குப்போனேன். அங்கிருந்து ஷை ஐயர்கூட இரவேவண்டியில்போனோம். ௬-௳ உதையத்திற்பாளையங்கோட்டையில் இன்னாசியம்மாள் வீட்டிற்சேர்ந்தோம். ௭-௳ சங்கமாயிற்று.

௮-௳ எனக்கொரு சட்டையும் ஒரு பூட்டும் ரூ ௧-க்கு வாங்கினேன். ௯-௳ ஷை இன்னாசியம்மாளும் ஞானசமரியான் ஏசுதாசனும் கல்விச்சாலைவிடுமுறைக்கும் ஷை ஐயருங்கூடப்புறப்பட்டு ஆசீர்வாதபுரத்துக்குவந்தோம்.

௰-௳ சமாரியாவுக்கு ஷை பிள்ளைகளைக்கூட்டிவந்தேன்.

௰௩-௳ ஷை ஐயர் சமுசாரங் குழந்தைகளுடன் சுவிசேஷபுரத்துக்குவந்திருந்து ௰௪-௳ சமாரியாபுரத்துக்குவந்தார்கள். ௰௭-௳ மதியத்துக்குமேல் ஆசீர்வாதபுரத்துக்குப்போனார்கள். வடக்கன்குளத்திலிருந்து என் தங்கச்சி இத்தேரியம்மாளுங் குழந்தைகளும் வந்தார்கள். ௰௮-௳ ஷை தங்கச்சிக்குக் கட்டுச் சாதங்கட்டிக்கொடுத்து கையில்த் துட்டு ௯-கொடுத்துவிட்டேன், வேறு ரூபாய்க்கு என்னிடத்திலப்போதில்லாததினால்.

௨௧-௳ அதிசயபுரஞ் சேகரத்துக்கு உதவி விசாரணையாக சத்தியநாத உபதேசியாரை நேமித்துப்போனார். ஷையாருக்கு சந்தோஷமாக கனம் மதுரேந்திர ஐயர் ஒரு தலைப்பாகனுப்பினார்.

௨௨-௳ சமாரியாவிற் பேதி துவங்கி நீலன் மகன் சோட்டையாகிய ஞானக்கண்ணு மரித்தான். ௨௩-௳ ஷையானுடைய மகள் ஒரு ஆண்பிள்ளையும் மரித்தது. ௨௪-௳ வடக்கன்குளம் பாஞ்சோதியாபிள்ளை ஓலைவந்தது. ௨௫-௳ மதுரேந்திர ஐயர் காயிதமும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை காயிதமும் வந்தது.

பெப்பரவரி௴ ௨-௳ ஞா தை௴ ௨௭-௳ மேலத் தீத்தான்பட்டியில் சாண்டை ஞானப்பிரகாசஞ்செட்டியார் மகனுக்குச் சின்னப்பன்செட்டியார் மகளை கலியாணமுடிக்கிறதாக பெண்வீட்டழைப்புச்சுருளும் பாக்கும்வந்தது.



௩-௳ மதுரேந்திர ஐயர் சமுசாரங் குழந்தைகளுடன் சமாரியாவுக்குவந்தார். கனம் முத்துசுவாமி ஐயர் இந்தச் சுவிசேஷபுரஞ்சேகரத்துக்குவந்து முதலாவது கிருமத்துக்கு சமாரியாவில்லவந்தார்.

௰-௳ தீத்தான்பட்டி மாப்பிள்ளை தருமநாதன்செட்டியார் அவர் சமுசாரங் குழந்தைகளும் தங்கச்சி இத்தேரியம்மாளும் ஆசீர்வாதபுரத்துக்கு வந்திருக்கிறதாகவும், ஷை இத்தேரியம்மாளுக்கு ரூ ௨௰-க்கு கண்டாங்கி ஐயர் கொடுத்ததாகவும் சொன்னார்.

௰௧-௳ வடக்கன்குளத்தில் மரியசிங்கம்பிள்ளையிடத்தில் ஒரு குதிரையிருக்கிற அதற்கு ஐயர்க்காக ஒருகாயிதம் எழுதினேன்.

௰௩-௳ சாயுங்காலம் மதுரேந்திர ஐயர் சமுசாரங் குழந்தைகளுடன் இன்னாசியம்மாளும் அவள் தாயும் ௪-௳ வந்த செபத்தியாயியுங்கூடச் சுவிசேஷபுரத்துக்குப்போய் அங்கிருந்து ஆசீர்வாதபுரத்துக்கனுப்பிவிட்டு நானுஞ் செபத்தியாயியும் சமாரியாவுக்குவந்தோம்.

௰௨-௳ பனைவடலி ஊர்வரையும் ஷை ஐயர்கூடப் போய்விட்டுவர உத்தரவுவாங்கி வண்டியும் அமர்த்தினேன். ௰௩-௳ ரூ ௧௫-௪-க்கு கண்டச்சிலவு முதலான சாமான்களுங்கொண்டு ஆசீர்வாதபுரத்துக்குப்போனேன். கனம் தோமாஸ் ஐயரவர்கள் வந்திருந்து ௨௯-ஞ் சங்கீதத்துப் புத்திசொல்லித் தாமுமித்தேசத்துக்குவரும்போது தம்முடைய சிநேகிதர்கள் ஷை சங்கீதத்தைவாசித்துச் செபம்பண்ணியனுப்பினார்கள். அப்படி நாமுங்களை அனுப்புகிறோமென்றுஞ் சொல்லியனுப்பிக்கொண்டுபோனார்கள்.

௰௭-௳ ௰-மணிக்கு முருகன்குறிச்சி போய்ச்சேர்ந்தோம். அங்கிருந்து ௨௰-௳ விடியக்காலம் புறப்பட்டு சாயுங்காலம். ௨-மணிக்கு நல்லூரில் கனம் பவுல் சாப்பிட்டர் ஐயரவர்கள் பங்களாவிற் சேர்ந்தோம். மதுரேந்திர ஐயரும் அம்மாளும் ஷை ஐயரவர்களிடத்திலும் மற்றயெங்களுக்கு அமுதபடிக்கட்டாய்ச்சந்துகளுங்கொடுத்து சாப்பாடுசெய்துஞ்சாப்பிட்டு பங்களாவில்த்தானே தங்கியிருந்தோம். மிக்கேல்ப்பிள்ளையவர்கள் வீடுகளுக்கும்போய்வந்தோம். உபசாரங்கள் சாடையாய்த்தானிருந்தது. ௨௧-௳ விடிந்து புறப்பட்டு பனைவடலி ஊருக்குப்போய்வந்த பாதையில்லாததினால் மெத்தசங்கடப்பட்டு இரவில் ௮-மணிக்குப்போய்ச்சேர்ந்தோம். உடனே சாமான்களை வண்டியிலிருந்திறக்கிப் பங்களாவில்வைத்தோம். அப்போதென்மதினியாருக்கும் எனக்கும் மனஸ்தாபம்வந்தது.

௨௨-௳ ஓய்வுநாளானதால் முதலாவது மதுரேந்திர ஐயர் ௧. கொரிந்தியர். ௰௩-அதி. ௰௩-வாக்கியத்தின்பேரிற் பிரசங்கஞ்செய்து செபம்.

உரு-உ நான்-ரு-பிரார்த்தினையை வாசித்துச் செபம்பண்ணினேன். உகூ-உ விடிந்து புறப்பட்டு சாயந்திரம் எ-மணியில் முருகன்குறிச்சியில்வந்து இன்றுசியம்மாள் வீட்டிலிருந்து உஎ-உ சாயுங்காலம் தவ்வால்க்காரன்கூட ஆசீர்வாதபுரத்தில் விசாரணை வேதநாயக முபதேசியார் வீட்டில்த் தங்கி உஅ-உ மத்தியானம் சவிசேஷபுரத்துக்குவந்தேன். அப்போதுபிள்ளையவர்கள் சாப்பிட எத்தனமாயிருந்தார்கள். கூடயிருந்து சாப்பிட்டு சாயந்திரஞ் சமாரியாவில்வந்தேன். அதற்குமுன் சபையான் மோசேயுஞ் சின்னக்கண்ணு மகளும் பள்ளிக்கூடத்துக்குள்ளிருந்ததாகக்கண்டு பிள்ளையவர்களிடத்தில் பிராது. அதினால் ஷை மோசே ஒழிந்துக்கொண்டானும்.

மார்ச்சுமீ௴ க-உ சம்பளத்துக்குப்போனேன், கூட என்சமுசாரமும் செபத்தியாயியும் வந்தார்கள் பிள்ளையவர்கள் வீட்டுக்கு. இராவில்ப்பேசிக்கொண்டிருக்கும்போது ஷையார் சமுசாரம் என் பெண்சாதி செபத்தியாயியைவிட்டுப்போகாதபடிக்கு அவளிங்கேயிருந்தால் என் குழந்தையைக் கொன்று போடுவாளென்றதுபோலச் சமுசயமாய்ப்பேசினதினால் இருவருக்குஞ் சண்டையாயிற்று. உ-உ காலமே ஷை செபத்தியாயியையும் அருளம்மாளையுங் கூட்டிப்போனேம். பிள்ளையவர்களுமவளுக்கு இசைந்திருந்து மக்களைத்தடை செய்யவில்லை.

ஙு-உ செவ்வல்ப்பட்டித் தம்பி குசையும் மனவியும் இலந்தைப்பட்டி அக்கான் சவரிமுத்தும் அவன் மருமகன் பாக்கியமும்வந்திருந்து கூட தேருர் பிள்ளை மகன் அருளப்பபிள்ளையும் விருந்துசாப்பிட்டு சு-உ போனார்கள். ஷை அக்காளுக்கும் மருமகளுக்குங் கட்டுச்சாதங்களுங் கட்டிக்கொடுத்துச் செலவுக்கு ரூ மாகாணி அ. கையில்க்கொடுத்தேன். சமாரியாக்கோவில் நகாராவை உத்தரவுப்படி சுப்பிரமணியபுரத்துக்கோவிலுக்குக் கொடுத்தேன். ஷையக்கான் மருமகன் பாக்கியம் மதுரேந்திர ஐயரிடத்தில் வேலைக்கிருக்கவருவேனென்றான்.

யஉ-உ தனதுக்கு ஒருவீடுகெட்ட தச்சன் கிலையுங் கதவுங்கூட்டிவிட்டான். பிச்சை காடான் செங்கல்கட்டினான்.

யஎ-உ பிச்சைகாடான் பேதியினால் இறந்துபோனான்.

உய-உ கேமத்திலிருந்து மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளை வந்தார்.

ஏப்பிரல்மீ௴ ரு-உ இன்றுசியம்மாள் வந்தாள்.

ஙு-உ மீன்குருபாதம் வாந்தியிலிறந்தான். அவன் தனக்குப் பிள்ளையில்லையென்று மூத்தகுடியாளிருக்கையில் மீறிக்கலியாணம் முடித்த இளையகுடியாள் எ-உ காலையில் ஆண்குழந்தை பெற்றாள். சாயந்திரம் அவனுமிறந்து



போனான். ஷையான் பிள்ளையைகாணுமற்போனான். ஷை குழந்தையை மூத்தகுடியாள் பரிபூரணம்வளர்க்கக் குருபாதமென்று ஞானஸ்நானமுங்கொடுத்துவைத்திருக்கிறாள்.

உகூ-உ அணைக்கரை உபதேசியார் தொம்மைப்பிள்ளையும் அவர்மதினியும் வந்தார்கள். வடக்குன்குளத்தில் தம்பாபிள்ளை மகள் புத்தியறிந்திருக்கிறதாகச்சொன்னார்கள்.

மெய்மீ௴ யங-உ கனம் முத்துசுவாமி ஐயர்க்கு எழுதினது அய்யாவுக்கு ரூ ய அனுப்புகிறேனென்று மதுரேந்திர ஐயர் யெழுதினதைச்சொல்லாமல் போதிக்குச் செலவுக்கு முட்டாயிருக்குமே என்று எனக்குக் கடன்போல ரூ ரு கொடுத்தார்கள்.

ஜுன்மீ௴ ஙு-உ விசாரணைப்பிள்ளையவர்கள் சின்னமரக்காருக்கு-ங-கோட்டை நெல்லனுப்பினார்கள். அது கடைவிலைக்கு பணம் முப்பத்தொன்னேகாலேமாகாணி யாயிற்று. பாளையங்கோட்டை மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் அனுப்பிய ரூ உ-ம் வந்தது.

எ-உ பனைவடலியிலிருந்து வேலைக்காரன் சந்தியநாதன்வசமனுப்பிய ரூ உ-ம் வந்தது.

அ-உ யிசக்கிமாடன் மருமகள் செபத்தாள் ஆசாவழியாய் நடந்த கெற்பமழித்தவள், விசாரணைப்பிள்ளையவர்கள் விசாரித்ததிற் சத்தியம்பண்ணினவள் செத்தாள்.

கூ-உ ய-ம் விசாரணைப்பிள்ளையவர்கள் சமுசாரங்குழந்தைகளுடன் இன்றுசியம்மாள் பிரவசமாகாமல் வெகுநாளாய் வேதனைப்படுகிறதைப் பார்க்கவென்றுவந்தாள். இடையன்குடியிலிருந்து அன்பாயி அம்மாளும் மகன் சாமுவேல்ப்பிள்ளையும் பாக்கியமென்ற மருத்துவச்சியும் வந்தார்கள்.

யச-உ இராவில்திருவனந்தபுரம்தம்பாபிள்ளை தமையனும்வடக்குன்குளம் ஞானப்பிள்ளையும் கொம்பாடி கணாயாளன் அந்தோனிமுத்துப் பிள்ளையும் சவரிமங்கலம் வயித்தியநாத அப்பாப்பிள்ளையும் வந்தார்கள்.

யரு-உ கனம் இஸ்பிராட் ஐயரவர்களுத்தரவுப்படிக்கு வைகுரிவைக்கச் சோதிகரத்துக்குப்போய்வந்தேன்.

யகூ-உ செல்வமருதூரில் கல்த்தொட்டியொன்று ரூ இ-க்கு வாங்கிவந்தேன்.

யஎ-உ பாடத்துக்குப்போகப்புறப்பட்டேன். இன்றுசியம்மாளுடைய வருத்தத்தினால் இரவுறக்கயில்லாதது கண்மிறட்டிவழியில் வடலிக்கருக்கறுத்தது காலில் காயம். அதினால் பிள்ளையவர்கள் வீட்டில்ப்போய் என்னை

போட்டிருந்து பாடத்துக்கு நான்சேரவில்லை.

உக-உ வாணியன் சுப்பிரமணியமூப்பன் சகோதரி தலைப்பிள்ளைப்பேறில்வருத்தப்பட்டு மரித்தாள்.

ஜுலாய்மீ க-உ மதுரேந்திர ஐயர் இங்குவந்தார். மூன்றுநாளிருந்து ச-உ இரவில்ப்போனார்.

கூ-உ பாளையங்கோட்டையில் சங்கம்: நான் போகவில்லை, இன்னாசியம்மாளுக்குப் பேறுகாலமாக வருத்தத்திலிருக்கிறதினால். கூ-உ விடிந்து-ரு நாழிகையில் குழந்தை செத்துப்பிறந்தது. கூ-வது ஆண்பிள்ளை.

யக-உ குசைமரியான்வந்தான் விடுமுறைக்கு. சாயுங்காலம் ஷை இன்னாசியம்மாள் மாப்பிள்ளையும் சுவிசேஷபுரத்திலிருந்து சேமத்தாளும் அவள் மகளும் பிள்ளைகளும் தத்தம்பள்ளியாளும் வந்தார்கள் பார்க்க. வந்தவர்கள் மறுநாள் யரு-உ செபத்தியாயியையும்யாக்கோவையும் கூட்டிப்போனார்கள். உஉ-உயில் யாக்கோவையனுப்பிவிட்டார்கள். உரு-உ வியாகப்பன் ஞானப்பிரகாசம் இரண்டுபேரும்வந்தார்கள். உரு-உ ஷையார் போனார்கள்.

உசா-உ சிதம்பரபுரத்துக்கு மரிய சவரிமுத்துப்பிள்ளை சமுசாரத்துடன் குசைமரியான் தருமநாதன் முதலானவர்களையுங் கூட்டிப்போனான்.

கூய-உ டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை வைசூரிவைக்கிற முறைப்படி வந்தார். இப்படியவர்வந்தகாலமெல்லாம்விருந்துதான்.

ஆகஸ்டுமீ உ-உ சுவிசேஷபுரத்தில் ஷை தத்தம்பள்ளி மதுரேந்திரத்துக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது, பிள்ளையவர்கள்க்குத்தான் சகல நாளுஞ் சிலவு அவர்களால்.

அ-உ ஏசுதாசன் பாளையங்கோட்டையில்வந்த கோட்டாத்துபதேசியார் ஞானப்பிரகாசம்பிள்ளையவர்கள் மனைவி மரித்ததாகயெழுதினான்.

உரு-உ பனைவடலியிலிருந்து கனம்மதுரேந்திரஐயர்சமுசாரங்குழந்தைகளும் செவ்வல்ப்பட்டி அருளம்மாள் மகள் வியாகம்மையுங்கூடவந்தார்கள். வடக்குன்குளம் தம்பி பரஞ்சோதியாபிள்ளை மகள் மூத்தவளுக்குக் கலியாணத்துக்கு ஓலையெழுதி மகனையும் அனுப்பினார். மாப்பிள்ளை தச்சிடி ஞானப்பிரகாசம்பிள்ளை மகன் இன்னாசிமுத்துப்பிள்ளை அழைப்புச்சுருளும்வந்தது. உசா-உ இணைத்தாங்கனை ஞானுப்பிள்ளையவர்கள் தாயார் மரிய வியாகம்மையம்மாள் துட்டி ஓலையும் ஆளும்வந்தது.

கூக-உ சுவிசேஷபுரத்துக்குப்போய் கூ-நாளுத்தரவுவாங்கி நானுமென்மகன் இன்னாசியம்மாளும் தேவசகாயம் தருமநாதசஞ்சீவியும் பிள்ளையவர்கள் மனைவி அன்னம்மையுங்கூட நம்பிகுறிச்சியில்த்தங்கி மறுநாள் வடக்குன்



குளத்தில் ஷை ஞானுப்பிள்ளை வீட்டிற்போய்த் துட்டிகேட்டு பின்பு தம்பி பரஞ்சோதியாபிள்ளை வீட்டுக் கலியாணத்துக்குப்போனோம்.

செப்தெம்பர்மீ கூ-உ வடக்குன்குளத்திலிருந்து சமாரியாவுக்கு வந்தோம், சுவிசேஷபுரத்துக்கு வந்தபின். ரு-உ பனைவடலிக்குப்போக மரியம்மாளும் பிள்ளைகளுஞ் சுவிசேஷபுரத்துக்குப்போனார்கள்.

அ-உ வடக்குன்குளத்து குசைமரியாம்பிள்ளை மகன் வியாகப்பனுக்குக் கலியாணத்துக்கு என்சமுசாரமும் யாக்கோவு சவரிராயனும் போனார்கள். சுவிசேஷபுரத்துப் பாதைக்குப்போகவில்லை. இணைத்தாங்கனை ஞானுப்பிள்ளை தாய்க்குமோட்சவிளக்குக்கு, பொய் கூ இ-யும் ஷைகுசைமரியாபிள்ளை மகனுக்கு கூ க-கொடுத்தது பொய்.

யரு-உ என் கொழுந்தி மரிய அருளாயியுஞ்சிலரும்வந்தார்கள். யஅ-உ தம்பி டாக்கிட்டர் மனைவி பாக்கியமுங் குழந்தைகளும் செருவைகாரன்பட்டி அத்தான் மகள் மரியமுத்தும் வந்தார்கள். இங்கிருந்து உய-உ சுவிசேஷபுரத்துக்குப்போனார்கள்.

உக-உ ஆசீர்வாதபுரம் விசாரணை வேதநாயகமுபதேசியார் புழுவை வியாதியினால் வருத்தப்படுகிறதைப்பார்த்து வாசடையபேரியில் வைசூரிவைக்கப்போனபாதையாய்போயிருந்து மறுநாள் உஉ-உ சமாரியாவுக்குவந்தேன்.

உச-உ இடையங்குடி அம்மாள் அன்பாயியும் மேரியென்ஹொரு பெண்பிள்ளையும் வந்துபோனார்கள்.

உகூ-உ ஆலங்கிணத்துக்குப்போய் வைசூரிவைத்து மிராசு முத்தய்ய முதலியார் வீட்டிற் சாப்பிட்டேன். சாயந்திரம் ஊருக்குவந்து செபம்.

அக்டோபர்மீ ரு-உ கனம் இஸ்பிராற்றய்யாவர்கள் திருமங்கலில் வைசூரிவைத்ததுக்கு படியென்று கூ க-கொடுத்தார்கள் எட்டுநாளுக்கு. வடக்குன்குளம் தம்பி பரஞ்சோதியாபிள்ளை மகள் புத்தியறிந்ததாக வண்ணான் வந்தான். சாப்பாடுஞ்செய்து கூ அரைக்கால்கொடுத்தனுப்பினோம்.

சா-உ என்கொழுந்தி தேவாயியும் தம்முமுதலியாரும்வந்தார்கள்.

அ-உ ஷையார்கள் கூட ஷை யென்கொழுந்தி மரியருளாயியும்போனாள், வடக்குன்குளத்துக்கு. ய-உ கன்னவராயபிள்ளை வந்துபோனார். கயிலாசபுரத்துத்தம்பி தேவசகாயப்பிள்ளையும் மரிய சவரிமுத்தும் வந்து இரவு சாப்பிட்டு கட்டுச்சாதமுங் கட்டிக்கொண்டு நாசரேத்தூருக்கு உபதேசிமார்கள் சோதனைக்குப்போனார்கள்.

யஉ-உ நல்லூருக்குப்போய் வைசூரியும்வைத்து ஷை ஊர் ஆரோக்கியம் உபதேசியாரிடத்திலிருந்து துலாம்டக்கொண்டு சந்தோஷவாங்கிவந்தேன்,

௰௫-உ நாசரேத்தூருக்குப்போனவர்கள் வந்தார்கள்.

௰அ-உ தெய்வாயி மூத்தமகளையுங் கூட்டிவந்தாள். ௰௯-உ ஆசீர்வாதபுரம் விசாரணை உபதேசியார் மரித்ததாகக்கேட்டோம்.

உ௧-உ சற்குணவாத்தியாரை விசாரணை வாத்தியாராக நியமித்தார்களாம். சிதம்பரபுரத்தில் உபதேசியார்சவரிமுத்துப்பிள்ளை கிழக்கே மாற்றிக்கொள்ளும்படி கேட்டதுக்குக்கோபமாய்ச்சொந்த அலுவல்பாருமென்றனுப்பிவிட்டார்கள்.

உஅ-உ நானுஞ் சமுசாரமுமாக ஆசீர்வாதபுரத்துக்கு விசாரணை உபதேசியார் அட்டிக்குப்போனோம். உ௯-உ வந்தோஞ் சவிசேஷபுரத்தில் பிள்ளையவர்கள் மகனுக்குப்பெண்கொடுக்கவும் மகளையவர் மகன் இன்னாசிமுத்துக்குக்கொள்ளவுமென்று பரஞ்சோதியாபிள்ளை பேசி உறுதிசொல்லிப்போனார்

உ௯-உ சூசைமரியான் காயிதம் பனைவடலியில் மதுரேந்திர ஐயருக்கு ௫-வது பெண்பிறந்ததாக வெழுதினான், ௩-உ வந்தது காயிதம்.

நவம்பர்மீ ௩-உ பிள்ளையவர்கள் இளையகுடி மகனுக்குச் சுகமில்லையென்றதை விசாரிக்க வென் சமுசாரம்போனாள். சத்தியநாதபிள்ளையை நயிட்டர்வேலைக்கு நேமித்து சுவாமியடியான் நயிட்டரைத்தள்ளிப்போட்டார்களாம். மதுரேந்திர ஐயரையும் மீன்துள்ளி ஊர் உபதேசியும் பின்னுஞ் சிலரையும் சேர்த்து ஷையூர்க் கிராமத்தார்கள் வேஷாப்பிராது கொடுத்து அதினால்துரையிடத்தில் விசாரணைக்குச் சேரமாதேவிக்கு மதுரேந்திர ஐயர்வந்திருக்கிறதாகவும் காயிதம்வந்தது.

௬-உ வருஷிருத்தின கணக்குமுடித்து கனம் ஐயரவர்களிடத்திற் கொடுத்து ஷை வேலையை நிறுத்திப்போட உத்தரவாயிற்று.

௰உ-உ மரிய சவரிமுத்துஞ் சமுசாரத்துடன் மாமனார் சவுக்கியதப்பாயிருக்கிறதை பார்க்கப் பாளையங்கோட்டைக்குப்போனான். சந்தோஷ உபர்த்திமைமாற்றி அமத்தனுக்குடிப் பாக்கியநாத உவாத்திவந்தது.

உ௰-உ ஷை வெள்ளொழுந்தி தெய்வாயி மகள்இன்னாசியம்மாள் தலைப்பிள்ளை பெண்குழந்தை சாயுங்காலம் ௫-மணிக்குப்பெற்றாள்.

டிசம்பர்மீ ௩-உ சமாரியாபுரங் கோவிலில்க் கனம் முத்துசுவாமி ஐயர் பெத்திலேகேம் ஊர் பெருபெத்தான் சேருவைகாரன் மகள்க்குக் கலியாணம் முடித்தார்கள். அந்தச்சேருவைகாரன் குதிரையில் மாப்பிள்ளைவந்ததினால் குஞ்சிமலைக்காரன் குடியிருப்புச் சாணர் தெருவழிபோகாமல்ச் செறுத்ததினால் அடிபிடி கலகமுண்டாய்ப்போனார்கள். இந்த ஊரில் ஒரு அஞ்ஞானி



வாலிபனுக்குக் கல்வெறியுண்டு, வனுகாயம். மற்றவர்கள் வீடுகளில் ஒழித்துக்கொண்டார்களாம். அந்த ஊரார் பெரும்பாதைச் சாலையைத்திருந்தினால் தடைபண்ணக்கூடாதென்று தீர்த்ததினால்ப்பின்பு ஷை தெருச்சாலை மரங்களைப்பிடுங்கி யெடுத்துப்போட்டார்கள்.

௰-உ குருபாதமுபதேசியார் மகன் புதிநப்புச் சத்தியநாத உபதேசியார் இரவில் ௰௫-நாழிகையில் மரித்து ௰௧-உ இடையங்குடியில் கொண்டுபோய் சாயுங்காலம் ௫-மணிக்குக் கனம் கார்வேல் ஐயரவர்கள் வந்து செபம்பண்ணி சமாதித்தோட்டத்தில் அடக்கம்பண்ணின பின்பு நான் வீட்டுக்குவந்தேன்.

௰௫-உ மரியசவரிமுத்துபோய் ௩௯-ம் நாள் பாளையங்கோட்டையிலிருந்து சமுசாரத்துடன்வந்தார்-ஷையாருக்கு வட்டிலும் ஒரு சந்தனக்கிண்ணியும் தாயார்கொடுத்தது. அத்தான் பெரியநாயகம்பிள்ளை ௲ ௧-கொடுத்ததாகவும் சொன்னார்கள். இவ்வளவு நாளும் முருகன்குறிச்சியில் தலைமகனாரவர்கள் வந்திருந்தவர்களிடத்தில்த்தான் சாப்பாடு. ஷைமாமனார் மாசில்லாமணியாபிள்ளை கடுக்கன் ஒருசோடு எ ௲ விலைக்குவாங்கிவந்தான். ௲ மதுரேந்திர ஐயர் எனக்கனுப்பினது.

௩௧-உ நானுமென்சமுசாரம், மரியசவரிமுத்தும், மனைவி, குழந்தை, யின்னாசியம்மாள், தெய்வாயி,யவள் மகள், குழந்தை, மற்றும் யாவரையும் இந்தவருஷம் முடிவுவரையும் விக்கினங்களில் இரட்சித்துக்காப்பாற்றின ஆண்டவர் கிருபையை நினைத்துப், பேசி, ஸ்தோத்திரஞ், செபம், செய்துமுடித்தோம், சமாரியாபுரத்தில்.

முதல் ஏடு முடிந்தது. J. D. S. 14—3—98.

## இ௲

## ௲௮௱௫௧வரு முதல் ௲௮௱௫௭வரு முடிய சவரிராயபிள்ளை உபதேசியின் ரிப்போரட்டுச் சுருக்கம்.

---

+

இயேசு முன்நிற்க.

*௲௮௱௫௧-வரு சனுவரி௴ முதல்தேதிமுதல் ௩௧-௳ வரையும், சமாரிபா உபதேசி சவரிராய பிள்ளை நிதசரி ரிப்போரட்டு.*

௧-௳ விடியக்காலஞ்செபம்பண்ணின பின்பு கனம் பிராட்டு ஐயரைக்காணும்படிபோனது நானுமென்மகளின்ஞானியம்மாளும் தேவசகாயன் தர்மராசஞ்சீவியும். என்சமுசாரத்துக்குச் சுகமில்லை. அவடத்தில்நரிந்திரசங்கமும் தேவாலய சங்கமுங்கூடினது. சாயந்திரம்வந்து செபம். பின்பு வீட்டில் மரியசவரிமுத்துமவன் சமுசாரமும்இடையன்குடிக்குப்போய்வந்திருந்தார்கள். எல்லாருஞ் செபம்.

௨-௳ ஷை மரியசவரிமுத்துமவன் மனவியும்ஷை இடையங்குடிக்கு ராப்போசனத்துக்குப்போனார்கள். ஒய்வுநாள் சாயந்திரம்கனம் சார்வலய்யரவர்கள் பொத்தைகாலம் விளையிலலுவல்பார்க்கும்படிக்குத்தரவுகொடுத்து ௬-௳ முதல் அலுவலுக்குப்போய்வருகிறான். மதியத்துக்குமேல் சுவிசேஷபுரத்தில்போய் கனம் ஐயரிடத்தில் உத்தரவுவாங்கிவந்தேன். இன்ஞானியம்மாளும் வந்தாள். இரவில் கொச்சி சின்னய்யாவும் மலையன் மகன் மிசேலும் வந்து இரவிற் சாப்பிட்டு ௪-௳ விடியக்காலம் தாளைக்குப்போனார்கள். சங்கத்துக்கு சாயுங்காலம் பாளையங்கோட்டைக்கு புறப்பட்டு சுவிசேஷபுரத்துக்குப்போய் மழையினாற்தடைப்பட்டு ௫-௳ ௰௨-மணிக்கு புறப்பட்டு பருத்திப்பாட்டிற்தங்கி, ௬-௳ காலை ௮-மணிக்குப்போய்ச்சேர்ந்தேன். அன்றிரவில் மேல்திசை ஐயன்மார்கள் சங்கங்கூடினார்கள். ௭-௳ கனம் சார்செண்றய்யரவர்களிடத்தில் ஞானமரியான் சௌக்கியத்தாழ்வைக்குறித்துத்தரவு வாங்கிக் கூட்டிக்கொண்டுவந்து இரவில் மதுரேந்திர ஐயர் வீட்டிற்தங்கினோம். அவர் பெரியதாயாருக்கு வாய்வுக்குத்துண்டாய் மருந்துகொடுத்து சுகமாயிற்று.

௮-௳ விடியக்காலம் பள்ளிக்கூ[illegible]டிற் படித்தபிள்ளைகள் வியாகப்பன் ஞானப்பிரகாசம் ஏசுதாசனும் முனிசப்பிள்ளையும்கூடப்புறப்பட்டுவந்தார்கள். திருமலாபுரத்திற்தங்கி ௯-௳ வீட்டுக்குவந்து சேர்ந்தோம்,

௰௨-௳ மதுரேந்திர ஐயர் காயிதமவர் பெரியதாயாருக்கு பேதியென்றும் எலிசப்பேத்துக்குஞ் சுகமில்லையென்றுமெழுதியும் சத்தியநாதனையனுப்பிவந்தான். குச்சுவீட்டு ஞானப்பிரகாசம் பிள்ளை மரித்ததாகவும் ஆள்வந்தது. உடனே புறப்பட்டு சுவிசேஷபுரத்துக்குப்போய் கனம் ஐயரிடத்திலுத்தரவுவாங்கி ௩-மணிக்கு மேல்ப் புறப்பட்டுப்போகையில் சோனுப்பேரிக்குப் போன உடனே சுவைக்கினுப்பிள்ளை தித்தான்பட்டி அக்காள்மகள்புராகாசியிறந்ததாகச்சொன்னார். அதற்கு வடக்கேபோகையில் ஷை மதுரேந்திரய்யர் எழுதினது, தமதுகுழந்தைக்குமிகுந்தவருத்தமென்றும் ஷை பெரியதாயாரிறந்துபோனதாகவும் என்று ஆள்வந்தது. அவனும் முன்வந்தவனும் நானும் இரவில் ௭ இ-மணிக்குப்போனோம். அதற்குமுன் ௫-மணிக்குமுன் அடக்கஞ்செய்து குழந்தை வருத்தத்தைப்பார்த்திருந்தார்கள். அந்தக்குழந்தை மிகவும் உபத்திரவம்பட்டு ௰௬-௳ மாத்திரம் பிழைத்ததென்ற நம்பிக்கையுண்டாயிற்று. ஆகிலும்பெரியமனுஷி இறந்த துக்கமிகுதியினால் ஆறுதலாயிருந்தும், தித்தான்பட்டித்தருமநாதபிள்ளைக்கும் வடக்குன்குளம் ஞானுப்பிள்ளைக்கும் சின்னய்யா கொச்சிப்பிள்ளைக்கும் டாக்குட்டர் சின்னய்யா மரியதாசுப்பிள்ளைக்குங் காயிதமெழுதியிருந்தது. சுவிசேஷபுரம்பிள்ளைக்கும் இசையன்விளை நம்முடைய வீட்டில் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் எழுதினேன். மற்ற அய்யமார் முதலானவர்களுக்கு ஐயர்போரால் எழுதினது. இவர்களில் ஒருவராகிலும் ௨௰-௳ வரையும்வரவில்லை.

௨௧-௳ காலையிற் சென்னற் சுருட்டிப்பார்த்து மத்தியானத்துக்குமேல் ௧-மணிக்குப் புறப்பட்டுவந்தேன். குதிரைக்காரனுங்கூட இரவிற் சோனுப்பேரியிற்தங்கி ஷை சுவைக்கினுப்பிள்ளையையும்கண்டுபேசிக்கொண்டு; ௨௨-௳ காலையிற் சுவிசேஷபுரத்துக்குவந்து கனம் முத்துசுவாமி ஐயர், விசாரணைப்பிள்ளையவர்களையும்கண்டுபேசி,சாயுங்காலம்-௬-மணிக்குவீடுவந்துசேர்ந்தோம். இரவிற் செபம்.

௨௩-௳ ஓய்வுநாள்- வியாகப்பனும் வந்தான். கடாயறுத்து அவனும் அவன் தம்பியும் இருந்தார்கள். ௨௪-௳ குதிரைக்காரன்வசம் காயிதமுமெழுதி மீனுங் கருப்புக்கட்டியும் அனுப்பினேன் ஷை மதுரேந்திர ஐயருக்கு.

௨௫-௳ ஷை பிள்ளைகளுக்குப் பிரளிமருந்துகொடுத்தோம். ௨௬-௳ ஷை வியாகப்பன் ஞானப்பிரகாசமும் போனார்கள். ௨௭-௳ பாடத்துக்குப்போனேன். பாடமில்லை. கனம் முத்துசுவாமி ஐயர் வீட்டிற் பலகாரஞ் சாப்பிட்டுவந்தேன். ௨௮-௳ பிள்ளையவர்கள் பாடங்கேள்க்கவந்தார்கள். கனம் இஸ்பிராற் ஐயரவர்களுத்தரவு நல்லம்மாள்புரத்துக்கு ஆயித்தத்துக்கு ௰-மணிக்



குள்ளாக வரவேண்டுமென்ற ஓலை ௰௨-மணிக்குவந்தது. போகவில்லை.

௩௰-௳ காலை கனம் முத்துசுவாமி ஐயரவர்கள் செபம். மத்தியானத்துக்குப்போய்விட்டார்கள். நான் ஆராதனைசெய்து சாயுங்காலம் இன்னாசியம்மாள் வசுதாசனிருவரையும் யானையுங்கோட்டைக்குப்போகும்படி சுவிசேஷபுரத்துக்கு அனுப்பினேன். ௩௧-௳ மகாழ்யினுலவர்களை சிறுத்துப்படிக்கு சுவிசேஷபுரத்துக்குப் போனேனவர்களும் வியாகப்பன் ஞானப்பிரகாசமுதலானவர்களும் புறப்பட்டுப்போய்விட்டார்களுநக்குவடக்கே போனதினால் நான்போயனுப்பிக்கொண்டுவந்துவிட்டேன். பிள்ளையவர்கள் தங்கள் மகள் கலியாணத்தைக் குறித்து மாப்பிள்ளையைக்குறித்தும் பேசினார்கள். பின்பு வீட்டுக்குவந்தபின் உத்தரவு சிறுதேசத்துக்கண்காணியாரவர்களைக்காணும்படிக்கு, உபதேசியார் சமுசாரத்துடன் ௧-௳ சாயுங்காலம் வரும்படியும், ௨-௳ காலையில் வாத்திமார் நடக்கத்துக்கபிள்ளைகளையும் சபையில் இரண்டுமூன்று பேர்கள் சுத்தவஸ்திரத்தோடு வரவும்வந்தது.

பிற்பாவரிமுள் ௧-௳ கம்பர் தர்னன் பள்ளிக்கூடங்களின் நிதியறியும்படி கலேக்கட்டரால்வந்த சட்டங்களின் பிரிதியனுப்பினார். சாயுங்காலம் கண்காணியாரை சந்திக்கவந்த உத்தரவுப்படி சமுசாரங் குழந்தைகள் குசைமரியானுங்கூடப்போனோம். ௨-௳ காலையில் ஷை சந்தித்து ஆராதனை, சத்தியநாத உப. பாட்டுப்பாடினார். சாயுங்காலம்ஷை கண்காணியாரவர்கள் போய்விட்டார்கள். உபதேசிமார் சம்பளத்துக்கிருக்கும்படி உத்தரவு. ௩-௳ சம்பளம்வாங்கி யிரவில்வந்தேன். ௪-௳ காலை செபம். சாயந்திரம் உத்தரவு ௫-௳ காலை கனம் ஐயரவர்களிடத்துக்கு வருகிறதாக வந்தது. காலை வராமல் நல்லம்மாள்புரத்துக்குவந்து ஆயித்தத்துக்குவரும்படி உத்தரவுவந்தபடிக்குப்போய்வந்தேன்.

௭-௳ மதுரேந்திர ஐயருக்கு காயிதம் எழுதினேன். ௮-௳ பாடத்துக்குப்போனேன். உடையாத்தேவர் இலுமிச்சம்பழம் நெல்லிக்காயும் ஷை ஐயர் காயிதமுங்கொண்டுவந்திருந்தது. இரவிற்தங்கி விடியக்காலம் ஷை ஐயர்வீட்டு வேலைக்கு மரியமுத்தென்ற பெண்பிள்ளையை அனுப்பி அவள்வசத்தில் ஒரு காயிதமுமெழுதியனுப்பினேன். துணையாளுக்கு சம்பளம் ௩-வ கொடுக்கும்படிக்குஞ்சொல்லி ௯-௳ விடியக்காலம் அனுப்பிவிட்டுவந்தேன். பின்பு வாத்திசம்பளம். நான் பகல் பள்ளிக்கூடவேலை. பட்ட வாதமடக்கியை ஆனைக்குட்டி மகனுக்கு சம்பளம்கொடுத்து வெட்டினேன். ௰-௳யும் ஷை வேலை.

௰௧-௳ மத்தியானம் வாத்தி வாத்திச்சியும் வந்தது.

௰௩-உ இரவில் டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் தித்தான்பட்டி அக்காள் மகனும் வந்தார்கள். ௰௪-உ மத்தியானம் ஷை டாக்கிட்டர்கூட பிள்ளையவர்கள் ஷை கூட ரெண்டாளும்வந்தது. சாயந்திரம்போனார்கள் வீட்டுக்கு. நான் பள்ளிக்கூடவேலை. ஈசாக்கு வாத்தியார் காயுதந் தவ்வால்காரன் கொண்டுவந்தான்.

௰௫-உ சயிலாசத்தையனுப்பினேன் வடக்குன்குளத்துக்கு டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையிடத்தில் ரூ ௨-கொடுத்துத் தயிலம்வாங்கிவர. பின்பு மருந்துசெய்தது. ௰௬-உ குசைமரியானுக்குப் பேதிக்கு மருந்து கொடுத்தது. ௰௭-உ முதல் ௨௪-உ வரையும் தயிலங்குடித்து மேலுக்கும்போடப்பட்டது: வேதனுந்தினது. ௨௬-உ யவன் உதவி ஒழுங்குக்குப்போகத் தடைப்பட்டமுகாந்தரத்துக்குப்பெரியநாயகம்பிள்ளைக்கு எழுதி கனம் ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

மார்ச்சுமீ ௧-உ காலைச்செபம். பின்பு வேதசிலைப்போக்கிஷ சங்கத்துக்கும் சம்பளத்துக்கும் உபதேசிவாத்தி வாத்திச்சி சபை மூப்பன்மார்களும் போனோம். ஷைசங்கங்கூடி இரவில் காணிக்கை ரூ ௬-எழுதினேன். கோக்காரன் தட்டு அமுர்தநாயகம் உபதேசி பிரசங்கம். ௨-உ உடம்படிக்கைவியாக்கியானம். சம்பளம். இரவில் லாசர் வாசிப்பு. கனம் ஐயர் பிரசங்கம். பிள்ளையவர்கள் வீட்டில் இடையங்குடித் தானியேல்பிள்ளையவர்கள் மனவி செபத்தியாயியை தன் மகனுக்குக்கேள்க்கவந்திருந்தாள். இரவிற் சாமத்துக்குமேல் நான் ஒருதரிசனங்கண்டேன்:—அதாவது என்போனார் என்மாமனார் மாமியார் இறந்தவர்கள் பின்னுஞ் சிலருங்காணம் அவித்ததைத்தின்க என் மனவிகொடுக்க, ஷை பெண்கேட்கவந்திருக்கையில் இப்படிக்கொடுக்கலாகாதென்ன, அவளதற்கென்னவென்க,யாவரும்சாப்பிட்டார். இதன்றியும்மதலையுங்கூட இருந்ததுபோலவுங்கண்டுவிழித்து, இதநினைவினால்வந்ததேவேறெந்தவிதமென்று யோசித்ததில் யாதொன்றும் இல்லையென்று யோசித்துக்கலக்கமாயிருந்தேன்.

௩-உ ஷை காரியத்தைப்பேசினான்· ஷையாளும் ஷை பிள்ளையும்; என் கலக்கத்தை மனதில்வைத்து ஷையாருக்குறுதிசொல்லாமல் ஷையானா திறுத்தினேன். பின்பு வீட்டுக்கு ஷையாளும் நானும்வந்தோம். இரவில்ச்செபம்.

௫-உ சர்தைக்குப்போய் செபத்தாளுக்குத் தருமப்பணத்தில் ரூ முக்காலே உணாக்காலுக்குச் சேலைவாங்கினேன். அவடத்தில் இடையங்குடியிலிருந்து தூரத்தப்பட்டவனாகிய மாத்தாண்டனானவழிக்காரனாகிய... அவன் தகாதவிதமாய் என்னையுஞ் சகாயமுபதேசியாரையும் பேசினான், சாட்சிவைத்து



வந்துவிட்டேன்.

௬-உ பெட்டிமுடைந்து தரும அரிசிபோடச் சபையாருக்குக் கொடுத்தோம்.

௭-உ காலைச்செபத்துக்குவராமல் வேலிவைத்த சுடலைமுத்து சுவங்குடியானுக்குப் புத்திசொல்ல சுவங்குடியான் வீணாய்ப்பேசினான். மத்தியான ஆராதனையிற் சிவுரை கோம்போகுதென்று சொல்ல ஏவினேன். முக்கந்தனுக்கு நீ சபையாருக்குப் பிரசங்கஞ்செய்யவேண்டுமென்றீரோ நீரிப்பொழுது சொல்லு சபையாருக்கென்றேன். சிரித்துப்போனான் பேசாமல். ௭-உ காலைச்செபத்துக்குப் பின்பு வெறுவெட்ட ஏண்டாள் கூட்டிப்போனேன். அதின் பின்பு-௰-மணிக்குவரும்படி உத்தரவு ௰௨-மணிக்குவந்தது தெரியாததினால் நான் ஆயித்தக்காரரைக் கூட்டிப்போகவில்லை.

௮-உ காலையிற் பிள்ளையவர்கள்வந்து மகனுக்குக் கலியாணத்துக்கு நகை முதலானதுசெய்ய வகைகேட்டுப்போனார். பின்பு காலைச்செபம். அதின்பின்பு தனதுவீட்டுக்கு செங்கல்கட்டுவேலைசெய்தது.

௯-உ முருங்கைமரத்தில் ஒன்று முறிந்துவிழுந்தது. முக்கந்தன்வடக்கு வேலிகோர்போடவேண்டிய குறையைத்திருத்திப்போட்டான்.

௰-உ பாடம் பிரசங்கம்பார்த்தேன். ௰௧-உ பாடத்துக்குப்போய்வந்தேன். ஈசாக்கு வாத்தியாருக்கும் மதுரேந்திர ஐயருக்குங் காயுதமனுப்பினேன். பாஞ்சோதியாபிள்ளைக்குக் காயுதம் அவர் மகனை கூட்டிவரும்படி எழுதியனுப்பினேன்,

௰௨-உ சுயம்புலிங்கம்வசம். பின்பு சின்னய்யா டாக்கிட்டர் மரியதாசப்பிள்ளையவர்கள் அம்மான் குசைமரியான்பிள்ளையவர்களுக்கு மரண அவஸ்தை என்றெழுதினகாயுதம்வந்தது. உடனேயவர்கள் குமாரத்தியை ரூ ௧- கொடுத்தனுப்பினேன் வந்த ஆள்கூடத்தானேசவசேஷபுரத்துப் பாதைக்கு. ௰௩-உ பகல் ஆராதனைக்குவந்தமுக்கந்தன், உங்கள் பெட்டகப்பெட்டியை வீட்டுக்குக்கொண்டுபோங்கள் இவடத்திலிருக்கக்கூடாதென்றான். கோவிலதிகாரம் உனக்கில்லையென்றேன். அதற்கவன், எங்களுக்கில்லாமல் ஆருக்கென்றான். குருக்களுக்குக் கோவில்மட்டு மதிகாரமென்றேன். ௰௪-உ ஷை அம்மான் குசைமரியாபிள்ளையவர்கள் மரித்துப்போவார்கள் என்று ஷை சுயம்புலிங்கம்வந்துசொன்னான். அதுபோலவே யன்று-௰௩-நாழிகைக்கு மேல் மரித்து சாயந்திரம் அடக்கம்பண்ணினார்களாம்.

௰௫-உ இரவில் ஈசாக்குவாத்தி காயுதம்வந்தது; அதில் மதுரேந்திர ஐயருக்கு கற்கண்டு வாங்கியனுப்பச்சொல்லியிருந்தபடிக்கு-௰௭-ரூ இட்டம்

புளிக்குப்போய் ௯ அரையே அரைக்காலுக்கு வாங்கிவந்து சாயந்திரம் ஆறுமணிக்குள்ளாக குசைமரியான்வசம் ஏற்பித்து சுவிசேஷபுரத்துக்குப் போகச்சொல்லி-௰௮-உ விடியக்காலம் நான் செம்புலிங்கத்தைக் கூடகூட்டி ஷை யூருக்குப்போய் குசைமரியானையும் ஷை சுயம்புலிங்கத்தையும் பாளையங்கோட்டைக்கனுப்பினேன். பின்பு முத்துசுவாமி ஐயரவர்களிடத்தில் உத்தரவுவாங்கி வீட்டுக்குவந்தேன். பாடமில்லை. பின்புவந்த காயுதத்தினால் வந்தசெய்தி, கனம் இஸ்பிராற்றய்யரவர்கள் மனவியாரவர்களிறந்துபோனதாகச்செய்தியறிவிக்கப்பட்டது. கனம் முத்துசுவாமி ஐயரவர்களும் விசாரணை உபதேசிமார் விசாரணை வாத்தியாரும் பாளையங்கோட்டைக்குப் போனதாகவும் கேள்வி.

௰௯-உ வீட்டுவேலைசெய்ய ஆள் ௩-விட்டு தீத்துமுதலான வேலைமுடித்தது. வடக்குன்குளத்துக்குப் போனவன் தகப்பனார் மரணதுக்கத்தோடு ஒருபறையனைகூட்டிவந்தான். ௰௮-உ இரவில் செட்டியக்குடிப் பெண்பிள்ளைகள் ௩-பேரும் ௰௯-உ வந்து துட்டிகேட்டார்கள். உ௧-உ தானியேல் பிள்ளைபெண்சாதிவந்து துட்டிகேட்டாள். இரண்டு காயுதம் நேமத்தம்மாள் மரணத்தைக்குறித்தும் மற்றுஞ்சுகசெய்திக்கும் மாப்பிள்ளை முனிசு இராயப்பபிள்ளையவர்களுக்கும் குசைமரியானுக்கும் எழுதியனுப்பினேன்.

உ௩-உ பெரியபுதன் வியாழன் வெள்ளி. உ௫-உ காலையிற் பாளையங்கோட்டைக்குப்போன விசாரணைப்பிள்ளையவர்கள் தங்கள் வீட்டுக்குவந்து எனக்கொரு ஓலையும் செபத்தியாயி கலியாணத்தைக்குறித்து எழுதினார்கள். ஷை மதுரேந்திர ஐயர் காயுதமும்வந்தது.

உ௬-உ குசைமரியான் காயுதமும்வந்தது. உ௪-உ பெரிய வியாழக்கிழமையன்று நமக்கு புதிதாய்க்கட்டின வீட்டில்ச் சாமான்கள் யாவும் வைத்தது. உ௫-உ மத்தியான ஆராதனை. உ௬-உ இல்லை.

உ௭-உ விடியக்காலம் ஆராதனைமுடிந்ததின்பின் விசாரணைப்பிள்ளையவர்கள்வந்து மத்தியான ஆராதனைசெய்து இடைச்சிவிளைக்குப்போனார்கள். பொழுதடைய நேமத்துமாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளை ஓலை மோட்சவிளக்குக்குவரும்படிவந்தது. உ௮-உ உதையத்தில் ஷை ஓலையையும் டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை ஓலையையும் பிள்ளையவர்களுக்கனுப்பி, பின்பு மறுபடியெழுதிக்கொடுத்து வாழைக்காயுங்கொடுத்து வந்தவனை மோட்சவிளக்குக்குச்சேர அனுப்பிவிட்டேன்.

உ௯-உ வழக்கப்படி வாத்தி பிள்ளைகளை பங்களாவுக்குச் சோதிப்புக்கு கூட்டிப்போனது.



௩௰-உ காலமே வியாகம்மைக்குப் பேறுகாலவருத்தமுண்டாய் மருத்துவச்சியும் கூட்டிவரப்பட்டது. ௩௧-உ நல்லதம்பியாபிள்ளையுந் தெய்வாயியும்தங்கள் தகப்பனார் மோட்சவிளக்குக்கழித்துவிட்டு சமாரியாபுரத்துக்கு வந்தார்கள். வியாகம்மைக்கு இன்னமுஞ்சுகமில்லையென்பதினாலும் குழந்தை பிறக்கவும் இல்லையென்பதினாலும் இருந்தார்கள். இரவில் ள-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைவந்தார்கள். இரவிற்சாப்பாடு அவர்கள் கட்டுச்சாதம்.

ஏப்பிரல்மீ ௧-உ இருந்து பகல் நம்முடைய வீட்டில் ஷையார் சாப்பிட்டு இரவில் வீட்டுக்குப்போய்விட்டார்கள். பாடத்துக்கு நான் போகாதமுகாந்திரம், வியாகம்மைக்கு வருத்தம்மிகுதியாயிருந்ததைக்குறித்துகனம் முத்துசுவாமி ஐயரவர்களுக்கெழுதியனுப்பினேன். அவடத்தில் கனம் இஸ்பிராற்று ஐயரவர்கள் வந்திருந்ததாகவும் கேள்வியாச்சுது.

உ-உ காலையில் விசாரணைப்பிள்ளை, சத்தியநாதபிள்ளை லயிட்டர், இருவர்சமுசாரமும் ஷை பிரவசகாலத்துச்செய்தியை விசாரிக்கவந்தார்கள். ஷையான் மிகுதியானவருத்தத்தைப்பார்த்து இருந்து இரவிற் சாமத்துக்குப்பின்பு ஞாயிறு விடியக்காலம் ௩-மணிக்குப்பெண்குழந்தை பிறந்தது. ௩-உ காலையிற் சாப்பிட்டுக்கொண்டு ஷை விசாரணைப்பிள்ளை, லயிட்டர், இருவர் சமுசாரமும்போய்விட்டார்கள். சாயுங்காலம் ஷை மாப்பிள்ளைநல்லதம்பியாபிள்ளையும் சுவிசேஷபுரத்துப் பாதைக்குப்போகப்புறப்பட்டுப்போனார்.

௪-உ நான்போய்க் கனம் முத்துசுவாமிஐயருக்கும் பிள்ளையவர்களுக்குங்குழந்தைபிறந்ததையும் ஷை நல்லதம்பியாபிள்ளையவர்களிடத்திற் சொல்லவேண்டியதையும் சொல்லிச்சாயுங்காலம்வந்துவிட்டேன்.

௫-உ இடையங்குடிக்குப்போய்ச் சாமுவேற்பிள்ளையும் அவர் தம்பிமாருஞ்சுகமில்லாததை விசாரித்து முதல்விசையாக அவர்கள் வீட்டிற் சாப்பிட்டு வந்தேன்.

௬-உ காலையில் ள-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள்வந்து ஷை குழந்தையும் தாயுஞ் சுகமாயிருக்கிறதை விசாரித்துப்போனார்கள். ஷை ௫-உ இடையங்குடித் தபாலில் மதுரேந்திர ஐயர், குசைமரியான், பெரியநாயகம்பிள்ளை, மூன்றுபேருக்கு மூன்று காயுதம்போட்டேன். ௬-உ காலைதானவடத்திலிருந்துபோகிறதாய்ச்சொன்னான்.

௭-உ அதிசயபுரத்துக்கு உபதேசிமார் வாத்திமார் வரும்படி உத்தரவுப்படிக்கு வி. சத்தியநாத உப. காயுதம்வந்தது. ௮-உ அதிசயபுரத்துக்கு

வாத்தி உபதேசிமார் யாவரும்போனோம். கனம் இஸ்ப்பிராற் ஐயரவர்கள் குழந்தைக்குச் சுகமில்லையென்று வரவில்லை, கனம் முத்துசுவாமி ஐயரவர்களும் விசாரணைப்பிள்ளையவர்களுஞ் சம்பளம்கொடுத்தார்கள்.

௯-௳ பாளையங்கோட்டைப் பெரியநாயகம்பிள்ளை காயிதம்வந்தது.

௰-௳ கனம் இஸ்ப்பிராற் ஐயரவர்களுக்கு கைப்பிள்ளைக்குமுந்தின ஆண்குழந்தை மரித்துப்போனதாகக்கேட்டேன்.

௰௨-௳ இரவிற் சுவிசேஷபுரத்திற்தங்கி ௰௩-௳ இடையங்குடியிருப்புக்கு கூட்டத்துக்குப்போகிறபாதையாய் மதுரேந்திர ஐயரும் பரமானந்த ஐயரும் வந்துபோனார்கள். தானியேல்ப்பிள்ளை மகனுக்குச் சுகமில்லாததை விசாரிக்க நம்முடைய வீட்டுக்காரிபோனாள். மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் அவடத்திற்தானே சுரமென்றுவந்தவன் அமூர்தநாயகம் இரவிற்தங்கி ௰௪-௳ காலையில் மரியசவரிமுத்துந் தாயும்வந்தது.

௰௫-௳ பாடத்துக்குப்போய்வந்தேன். இரவில் இளஞ்சுனையிலிருந்து கனம் மதுரேந்திர ஐயர் வந்தார்.

௰௭-௳ காலை கனம் முத்துசுவாமி ஐயர்வந்து காலைச்செபம். பின்பு நல்லம்மாள்புரத்துக்குப்போய் இரவிற் படுக்கைக்கு இவடத்துக்குவந்தது. வடக்குன்குளம் ஞானப்பிள்ளை பரஞ்சோதியாபிள்ளை வந்தார்கள். சின்னய்யா டாக்கிட்டர் மரியதாசுப்பிள்ளையவர்களுக்கு காயுதம் அனுப்பினேன் குதிரைக்கு.

௰௮-௳ காலையில் மதுரேந்திர ஐயர் முதலானவர்கள் யாவருஞ் சுவிசேஷபுரத்துக்குப்போகிறபோது நானுங்கூடப்போய் விசாரணைப்பிள்ளை வீட்டிற் சாப்பாடு நடந்து சாயந்திரம் அவர்களையனுப்பிவிட்டு ஷை குதிரைவந்ததையுங்கொண்டு வீட்டுக்குவந்தேன். காலை மாலை வாத்தி செபம். ௰௯-௳ ஷை குதிரைவிலைதிட்டம் அறிய ஷை சின்னய்யா மரியதாசுப்பிள்ளையவர்களுக்கு யெழுதியனுப்பினேன்.

௨௨-௳ பாடத்துக்குப்போனேன்.

௨௩-௳ சின்னய்யா டாக்கிட்டர் ஓலைவந்ததில் ஷை குதிரைவிலை ௯ ௰௬ என்றும் அதின்னமுங்குறையநடைபிடித்துத்தேறினால்மேல்ப்போகுமென்றுஞ்சொல்லியிருந்தது. இதினால்ஷையார்சொன்னபடிமறுபடியும்எழுதி அனுப்பிவிட்டேன் ஷை குதிரையை ௨௪-௳ விடியக்காலம். மரியசவரிமுத்துக்கு முதல் நாளே சுரம்விட்டது.

௨௬-௳ இளஞ்சுனைக்குப்பாடத்துக்கு ௨௯-௳ வரவேண்டுமென்று வந்தது. பின்பு ஷை உத்தரவை அச்சம்பாட்டுக்கனுப்பினேன்.



௨௭-௳ மரியசவரிமுத்துக்கு வெறுந்தண்ணீர்விட்டது.

௨௯-௳ இளஞ்சுனைக்குப்போனேன் பாடத்துக்கு.

மெய்மீ ௧-௳ இராப்போசனத்துக்கு சுவிசேஷபுரத்துக்குப் போனோம். இரவில் மதுரேந்திர ஐயருக்கும் ஈசாக்குவாத்தியாருக்கும் ஓலையெழுதி ௨-௳ சயம்புலிங்கத்துக்கு ௯ அணாக்கால் கொடுத்தனுப்பினேன்.

௩-௳ சம்பளத்துக்கு சுவிசேஷபுரத்துக்குப்போய் இரவுதங்கி ௪-௳ சம்பளம்வாங்கி வீட்டுக்குவந்தேன். மரியசவரிமுத்து ௩-௳ முதல் அலுவலுக்குப்போனானென்றார்கள்.

௫-௳ நல்லம்மாள்புரத்துக்கு ஆயித்தத்துக்குப்போனேன். மற்ற சபையார்வரவில்லை.

௬-௳ ஷை சயம்புலிங்கம் ஈசாக்குவாத்தியாரிடத்தில் பதில்வாங்கிவந்தான். அதோடே ஞானவடிவு காயுதமும் ஒன்றுவந்தது. பின்பு சந்தைக்குப்போய் ஈசாக்குவாத்தியாரெழுதினபடிக்கு ௯ இ-க்கு லேஞ்சிவாங்கிவந்தேன், ௫-௳ வந்த உத்தரவுக்கு விரோதமாக சில உபதேசிமார் சந்தைக்குவந்தார்கள்.

இது சுவிசேஷபுரஞ்சேகரம் உபதேசிமார் உவாத்திமார்களுக்குவரும் உத்தரவு. கிணைக்காரன் தட்டு, நந்தன்குளம், சமாரியாபுரம், அச்சம்பாடு, சோதிநகரம், பெத்திலேகேம், சமாதானபுரம், குமரன்விளை, நல்லம்மாள்புரம், இந்தயிடங்களிலுள்ள உபதேசிமார் உவாத்திமார்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதமுண்டாவதாகவும். இப்பவும் மேல்ப்படி யிடங்களிலுள்ள உவாத்திமார் உவாத்திச்சிகள் உத்தரவில்லாமல் பற்பல இடங்களுக்குஞ் சந்தைகளுக்கும் போகிறதாக கேள்வியாயிருக்கிறோம். இனிமேல்பட ஒருபோதுமப்படிப்போகக்கூடாது. அவர்களுக்கு ஷை உபதேசிமார்கள் உத்தரவுகொடுக்கவுங்கூடாது. மேலும் நாடோறும் பள்ளிக்கூடவேலை ஒழுங்காய் நடந்துவரும்படி திட்டமாய் பார்க்கவேண்டும். அப்படிப்பட்டவர்கள் ஒழுங்குத் தாழ்வாய்நடக்கிறதை உபதேசிமார்கள் சற்றலில்பதிந்து நம்மிடத்திற் காண்பிக்கவும். ௧௮௫௩ மெய்மீ ௪-௳. கனம் இஸ்பிராட் ஐயரவர்கள்.

௫௩ ஜூன்மீ ௨௪-௳ பொதுவான உத்தரவு: என்னவென்றால், சபையில் சேரும்படிவருகிறவர்களை உத்தரவில்லாமற் சேர்க்கப்படாது. மிசியோன்கிருமத்தில்வீடுகட்டவும் உத்தரவுவாங்கிச்செய்யவேண்டும். ஞானஸ்நானம்பெற்று மறுதலித்தவர்கள் சபையிற்சேரவேண்டுமானால் கோவிலுக்கு வெளியிலிருந்து பின்பு அறிக்கையிட்டுச் சேர்க்கவும்வேண்டுமென்பதே.

௭-௳ மரியசவரிமுத்து சம்பளம்வாங்கிவந்து உபரிக்கு அனுப்பியிருக்கிறதாகச்சொல்லி ௮-௳ விடியக்காலம்போனான்.

௯-௳ செபத்தியாயியை அனுப்பும்படிக்கு நேரிட்டது. அன்னம்மை, தாய்க்குச் சவுக்கியமில்லையென்று பார்க்கும்படிக்கு பாளையங்கோட்டைக்கு

௫-௳ போய்விட்டதினாலும் தெய்வாயி யவடத்தில் ௯-௳ போனவள் வீட்டிலிருக்கிறதினாலும் அனுப்பிவிட்டேன். இரவில் மரியசவரிமுத்துவந்தான். துரையிடத்தில் உத்தரவாங்கி. ௰-௳ போனான். வடக்குன்குளம் பாக்கியம் பிள்ளை ௰-௳ இறந்ததாக ஓலைவந்தது.

௰௫-௳ பாடத்துக்குப்போனேன். அவடத்தில் வாசிப்பில்லை. மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது. பின்பு வழியில் சந்தைக்குப்போய்வருகிற நற்குணத்தானுபதேசியைக் கண்டேன்.

௰௬-௳ காயுதங்கள் எழுதி மதுரேந்திர ஐயருக்கும் ஈசாக்கு வாத்தியார் ஞானவடிவுக்கும் அனுப்பினேன் ௰௭-௳ தபாலில். வடக்குன்குளம் ஊரணிக்கரை அந்தோனிமுத்துப் பிள்ளையும் தம்முபிள்ளை மகன் மரியதாசப் பிள்ளையும்வந்து மரியதாசு வெரகுவெட்டிக்கொடுத்தான். இரவில் நம்முடைய சாப்பாடு. அந்தோனிமுத்துப்பிள்ளை சுவிசேஷபுரத்துக்குப் போனார். இளஞ்சுனைக்குப் பாடத்துக்குவரும்படி உத்தரவுவந்தது.

௨௰-௳ இளஞ்சுனைக்குப் பாடத்துக்குப்போனேன். குஸைசமரியாபிள்ளைக்கும் ஒரு காயுதந் தபாலில்போட்டு கனம் பேரன்புரிக்கய்யரவர்களையும் நான்கண்டு சாயந்திரம் வீட்டுக்குவந்தேன். வாத்தியார் செபம். ௰௯, ௨௰, ௨௧-௳ வரையும், வளவுவாழைபோட்டது.

௨௪-௳ ஈசாக்குவாத்தியார் காயுதம்வந்தது. குஸைசமரியானுக்குச் சுரம் வந்தது இன்னமும் நல்லசுகமில்லையென்றும், முனிசுப்பிள்ளைக்கும் சுரமென்றும். பதில் ௨௬-௳ எழுதினேன். ஏசுதாசனும் ஒரு காயுதமும் எழுதினேன். பிள்ளையவர்கள் ஓலை தமக்குப்புறப்பாடும் அருளம்மாள் தெய்வாயி விசுவாசம் மூன்றுபேருக்குஞ் சுரமென்றும். ௨௭-௳ நான் சுவிசேஷபுரத்துக்குப் போய் ஷையாரை விசாரித்தும் ஷை காயுதங்களைத் தபாலிற்போட்டேன். மதுரேந்திர ஐயர் காயுதமும்வந்தது, ௨. இரவில் ஆராதனைக்கிருந்து ௨௮-௳ காலையிலும் ஷை வியாதிக்காரருக்கு மருந்துகொடுத்து வீட்டுக்குவந்தேன். ௩-தரம் வாத்தியார் செபம். பிள்ளையவர்களிடத்தில் ரூ ௧-கட்டன்கேட்டதற்கு: உங்கள் தரித்திரம் எந்த வருசம் எந்த மாசம் எந்தத்தெய்தியிற் றீரும் என்றதற்கு: எனக்குத்தரித்திரத்தைக் கொடாதிருந்தால் நான் துன்மார்க்கமாய் நடந்து கெட்டுப்போவேனென்றுசொல்லிப் பேசாமல்வந்துவிட்டேன். பின்புபோன அமுர்தநாயக முக்கந்தனிடத்தில் மூன்று மாடு திட்டஞ்செய்தனுப்பி ௯-கோட்டை நெல் நம்பிகுறிச்சியில் பிடித்துவந்து அம்மான் வீட்டிற் கொடுவென்று சொன்னதாகவந்து ஷையூர் முதலிக்கு எழுதின ஓலையையுங் காண்பித்தான். எங்களுக்குக் குறைச்சலில்லை, எங்களுக்கு நெல்த் தேவையில்லை, யென்றேன். பின்பு சங்கத்தரும அரிசிவாங்கினது.



௩௰-௳ குஸைசமரியானுக்கு ஒரு காயுதமெழுதினேன். ஆலமரம் விறகுக்குவெட்ட மதிப்பு ரூ இ தண்ணிக்குடியும்கூடக்கொடுக்கவென்று தீர்மானித்தது. ௨௮-௳ சுவிசேஷபுரத்துக்கு ஷை வியாதிக்காரருக்கு உதவிசெய்ய என்சமுசாரத்தையனுப்பி சுயம்புலிங்கம்வசம் திடப்படுத்தலடையவேண்டியவர்கள் பேரட்டவணையும் அனுப்பினேன். வடக்குன்குளம் சின்னய்யாவுக்கு ஒரு ஓலையும் எழுதி ஷையான் கையிற்கொடுத்துச் சுரமாத்திரை வாங்கிவரச்சொன்னேனவர்கள் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் எழுதினதுக்கு பதில் எழுதி ஷை மருந்து அனுப்பினார்கள், ௩௰-௳ வந்தது. ௩௧-௳ காலை சுவிசேஷபுரத்துக்குக் கொண்டுபோய்க்கொடுத்து ஷை வியாதிக்காரரை விசாரித்து வந்தேன்.

ஜுன்மீ ௨-௳ மதுரேந்திர ஐயருக்கும் குஸைசமரியானுக்குங் காயுதமெழுதினேன்.

௩-௳ சுவிசேஷபுரத்துக்கு பாடத்துக்குப்போய் தவாலில் குஸைசமரியான் காயுதம்வந்தது. இரவு சகாயமுபதேசியார் பிரசங்கம். ௪-௳ சம்பளம். ௫-௳ ராப்போசனம் சேர்ந்தவர்கள், ௪. மத்தியானம் ஆராதனையில்லை. இரவில்வந்து செபம். ௬-௳ வாத்திமார் சம்பளம். நான் பள்ளிக்கூடவேலை. ௭-௳ பள்ளிக்கூடவேலை, இரவிற் சுரம்வந்தது. ௮-௳ காலையிற் செபம்பண்ணினேன். பின்பு மரியசவரிமுத்துப்பிள்ளையைக்கொண்டு மதுரேந்திர ஐயருக்குக் காயுதமெழுதினேன். பின்பு பெரியநாயகம்பிள்ளை காயுதம் மரியசவரிமுத்துப்பிள்ளைக்குவந்தது அவர்குழந்தை கைப்பிள்ளை இறந்துபோனதாக. ௯-௳ பாடத்துக்குப்போக ஏதுவில்லையென்று ஆள் அனுப்பினேன். என்னுடைய சமுசாரம்வந்தாள். ௰-௳ மருந்துசாப்பிட்டேன்பேதிக்கு. ௰௧-௳ தாரத்தனுக்கு மருந்துசாப்பிட்டேன். குளிர் சவுக்கியமாயிருந்தது. தருமஅரிசி வாங்கப்போனேன், வாத்தியார் இல்லை. முக்கந்தன் இல்லை.

௰௨-௳ வரையும் வாத்திசெபம்.

௰௩-௳ என்சமுசாரஞ்சுவிசேஷபுரத்துக்குப்போனாள். காலை செபம்பண்ணினேன். குருவினத்தம் இலந்தைப்பட்டி இன்னாசிமுத்து செட்டியார் மகனும் சுரண்டைச்செட்டியாரும் வண்டிகொண்டுவந்தவர்கள் நம்முடைய வீட்டுக்குவந்துபோனார்கள். வன்னியன் சேருவைகாரன் செத்தவனை எடுத்துப் போறபோது சிலருக்குப் புத்திசொன்னேன்.

௰௪-௳ மதுரேந்திர ஐயருக்குக் காயுதமெழுதிப் பிள்ளையவர்களுக்கும் ஓலை எழுதியனுப்பினேன் சுவிசேஷபுரத்துக்கு.

உய-வ நான் சுவிசேஷபுரத்துக்குப் போனேன். அவ்விடத்திலிருந்து தெய்வாயி விசுவாசம் இரண்டுபேரும் பிள்ளையவர்கள் குழந்தைகள் இரண்டுங்கூட இரவில் வண்டியில்வந்தார்கள்.

உஉ-வ உத்தரவுவந்தது. உரு-வ சம்பளத்துக்குப்போனேன், ஆறுமாசக்கணக்கு முடித்து இரவில் ஐயரவர்கள் செபம். கனம் முத்துசுவாமி ஐயரவர்கள் குமாரனுக்குச் சுகமில்லையென்றதினால் வரவில்லை. உச-வ சம்பளம்போட்டார்கள்- வாத்திமாருக்கு உரு-வ சம்பளமாயிருந்தார்கள். நான் வீட்டுக்குவந்தேன். கனம் இஸ்பிராற்றய்யரவர்களிடத்தில் தேவசகாயத்தைச் சிமினேரி பள்ளிக்கூடத்திற்சேர்க்கும்படி கேட்டேன். யோசித்துச்சொல்லுகிறதாக உத்தரவுகொடுத்தார்கள்.

உகூ-வ சுவிசேஷபுரத்துக்குப்போய் அருளம்மாளை விசாரித்துவந்தேன் மதுரேந்திரய்யருக்கும் ஈசாக்குவாத்தியாருக்குங்காயுதம்தபாலிற்போட்டேன்.

## ௲௮௱௫௰௩ சூலாய்மீ முதல் சமாரியாபுரம் உப. சவரிராயபிள்ளை ரிப்போர்ட்டு.

க-வ பாடமில்லை. சந்தைக்குப்போய் வேட்டியும் தென்னம்பிள்ளைகன்னும் வாங்கிவந்தேன். உ-வ தென்னங்கன் நட்டேன். பிள்ளையவர்கள் மாலைச்செபம். ங-வ ஓய்வுநாள்.

ச-வ சாயுங்காலம் சங்கத்துக்குப்போகச் சமுசாரங் குழந்தைகளுடனே புறப்பட்டு சுவிசேஷபுரத்துக்குப்போய் இரவில்த்தானே புறப்பட்டு மீனாச்சிநாதபுரத்துக்குப்போயவ்விடத்தில் விசாரணை பாக்கியநாத உபதேசியார் சமுசாரங்களும் விசாரணை சற்குணவாத்தியார் சமுசாரங்களுடனே புறப்பட்டுத் திருமலாபுரத்திற் கொஞ்சநேரந்தூங்கிப்புறப்பட்டு. ரு-வ இரவில் கூ-மணிக்கு பாளையங்கோட்டைக்குப்போனோம். சா-வ சங்கம். எ-வ பள்ளிக்கூடசோதனைகள். அ-வ என்சமுசாரங்குழந்தைகளை பனைவடலி ஐயர் வீட்டுக்கனுப்பி ய-மணிக்குமேல் புறப்பட்டு வழியிற் சுகமில்லாமல் கீழமுலைக்கனைப்பட்டியிற் சகாயமுபதேசியாரும் நானுந்தாமதித்து கூ-வ மதியத்தில் சுவிசேஷபுரத்துக்குவந்து சாயந்திரம் கூ-மணிக்குள்ளாக வந்து மாலைச்செபம்.



ய-வ ராப்போசனத்துக்குச் சுவிசேஷபுரத்துக்குப்போனேன். சாயந்திரம் ச-மணிக்குமேல் சபையான் பாக்கியநாதன் மகனுக்கு ஞானத்தகப்பனாயிருந்து ஏசுவடியானென்ற ஞானஸ்தானங்கொடுத்து இரவில் கூ-மணிக்கு வீட்டுக்குவந்து மாலைச்செபம்.

யஉ-வ மதுரேந்திர ஐயருக்கும் ஈசாக்குவாத்தியாருக்கும் உ-காயுதமும் ஆசிர்வாதபுரம் விசாரணை உபதேசியார் மகன் தெய்வநாயகத்துக்கு ஒரு வோலையும் எழுதி வஞ்சிகுடியிருப்பு விசுவாச நாடான்வசம் ஏற்பிச்சு யரு-வ தபாலிற்போடச்சொல்லிவிட்டேன். நான்போய்வருமுன் அமுதபடி ரு, துட்டு-க, விறகு இவ்வளவென்றும் தெரியாதபடிக்கு வீட்டிற் குறைந்தது. சாயுங்காலம் கூ-மணிக்குமேல் மரியசவரிமுத்துவந்தான். அவனுக்கு ஷெ காரியத்தை தெரியப்படுத்தினேன்.

யரு-வ தலைமுழுகிக்கொண்டு சாயுங்காலம்போனான். யசா-வ சாயுங்காலம் நேமத்துக்காரியும் செபத்தியாயியும் வந்தார்கள். யரு-வ அவர்கள் வீட்டுக்குப்போனார்கள். இரவில் மரியசவரிமுத்துவந்தான். யசா-வ பாடத்துக்குப்போய்வந்து சாமுவேலுக்குப் பெண்ணுக்காகப்பிள்ளைவீட்டு[க்கு]காயுதம்போகிறதாகச்சொன்னான். யஎ-வ ஷெ பிள்ளையவர்கள்வந்து ஷெ பெண்ணுக்காக காயுதம்வந்ததாகச்சொல்லி ஷெ காயுதத்தையுந்தந்து: பதில் எழுதவேண்டாம், நீங்கள்போய் காயுதம் எழுதின ஞானமுத்து உபதேசியாரைக் கண்டு பேசிவாருங்கள் காலைக்கென்று சொல்லிவிட்டுப்போனார்கள். யஅ-வ இடையங்குடியிருப்புக்குப்போய் ஞானமுத்து உபதேசியாரைக்கண்டு ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு எழுதினகாயுதத்தைக்குறித்துப்பேசிப் பின்பு கலியாணக்காரியத்தைத் திட்டஞ்செய்ய வெள்ளிக்கிழமைக்குவருகிறதாகச் சொன்னார்கள துசெய்தியை ஷெ பிள்ளையவர்கள் சோதிநகரத்திலிருந்தார்களவர்களிடத்தில்வந்துசொல்லி வீட்டுக்குவந்தேன். அவர்களுஞ் சாயுங்காலம் வீட்டுக்குவந்து என்னையுங்கூட வரச்சொல்லிப்போய்விட்டார்கள். வடக்குன்குளத்திலிருந்து மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளையவர்கள் வந்துபோய்விட்டார்கள். அவர் சொன்னது: மரியசிங்கம்பிள்ளை மகனுக்கு மருந்துகொடுத்ததினால் மரணவஸ்தையாயிருக்கிறதாகவும் அப்படியின்னும் மூன்று பேரும் ஷெ மருந்தினால் உபத்திரவமுண்டாயிற்றென்றாராம்.

உஉ-வ ஷெ காரிய ஈத வடக்குன்குளம் தீத்தான்பட்டி [ஈசாக்குவாத்தியார் உய-வ சமுசாரத்தோடே பனைவடலிக்குப்போறதாய் எழுதினார்.] சவரிமுத்துப்பிள்ளைவந்து சொன்னதில் ஷெ மரியசிங்கம்பிள்ளை மகன்பிழைக்கிறதவருபமென்றும் மற்றவர்களுக்குச்சுகந்தானென்றார். சந்தையில்வேட்டி,

கருவாலியும் வாங்கினேன். சுவிசேஷபுரத்து ஞானப்பிரகாசம் வந்தான். அவனிடத்தில் இடையங்குடியிருப்பார் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமைக்கு வருவார்களாமென்று சொல்லியனுப்பினேன்.

உ௩-ௗ இரவில் பிள்ளையவர்கள் சமுசாரங்குழந்தைகளுடனே இளஞ்சுனைக்குப் புறப்பட்டு உ௪-ௗ பகல் சோதிரகாம் ஆராதனைக்கிருந்து சாயுங்காலம் அதிசயபுரத்திற்றங்கி உ௫-ௗ இளஞ்சுனைக்குப்போறதாகவந்து சொல்லிக்கொண்டு பெண்பேசவருகிறவர்கள் இளஞ்சுனைக்கு வருவார்களானால் நீங்களும்வரவேண்டுமென்று சொல்லிப்போனார்கள்.

உ௫-ௗ காலைச்செபம்பண்ணின பின்பு புறப்பட்டுப்போனேன். இளஞ்சுனை பங்களாவில் ஷை இடையங்குடியிலிருந்து ஷை தான்யேல்பிள்ளையவர்கள் மனவியும் அவள்கூட ௯-பேரும் வந்திருந்தார்கள். ஷை சுவிசேஷபுரம் பிள்ளையவர்கள்கூடச் சமுசாரங்குழந்தைகள் மாமியார் வேலைக்காரர் ௯-பேர் கணக்குச் சுடலைமுத்துப்பிள்ளை காவல் பூலுவன்தாய் மகன் வண்டிக்கு இடையன் குழந்தை எடுக்கிற இடைச்சி லயிட்டர் வேதக்கண்ணுவாத்தி பிச்சைமுத்துப்பிள்ளை சமுசாரம் வேலைக்காரி ஆகச்சனம் ஏறக்குறைய ௩௰-க்குமேல் பின்னுமவடத்தில் உபதேசி காவற்காரன் விறகுக்காரன்முதலான பின்னுஞ்சிலர்கூட்டம். இரவில் செபத்தியாயி கலியாணத்தைக்குறித்துடன்படிக்கை யுறுதியாகிற்று. ஆவணிமீ அல்லது அற்பசி மாசமென்று.

உ௬-ௗ ஷை இடையங்குடியிலிருந்து வந்தவர்கள் காலமேபோனார்கள். நானும் மற்றவர்களுஞ்சாயுங்காலம் புறப்பட்டோம். நான் வீட்டுக்கு செபத்துக்குமுன்வந்து செபம்பண்ணினேன்.

உ௭-ௗ சபையார் பாடஞ்சோதிக்கப் பிச்சைமுத்துப்பிள்ளையும் வேதக்கண்ணு வாத்தியும்வந்து இரவு செபமும் பண்ணினார், ஷை பிள்ளை.

உ௮-ௗ வியாகம்மைதிடப்படுத்தல் ஒழுங்குக்குப்போனாள். தெய்வாயியுங்கூடப்போனாள். இரவில் அத்தான் சின்னப்பபிள்ளை வந்தவர் சொன்னது, மரியசிங்கம்பிள்ளை மகன் மூத்தவன் மிகேலுக்குக் கிரிமிக்குத்தித்தான்பட்டியாள் கொடுத்தமருந்தினால் அனைச்சலுண்டாய் சடுதியில் உஉ-ௗ இறந்துபோனதாகச்சொன்னார்.

உ௯-ௗ பிள்ளையவர்கள்வந்து திடப்படுத்தலுக்கு ௮-பேர் தெரிந்துகொண்டார்கள். பின்பு ஊருக்குப்போனார்கள். பின்பு வடக்குன்குளஞ் சவரிமுத்துப்பிள்ளை வகுரிகுத்தவந்தவர் இரவில்வந்தார். சாப்பாடு நன்றாய் வாய்க்கவில்லையென்பதினால் விடியக்காலஞ் சொல்லாமற்போய்விட்டார்.



௩௰-ௗ கனம் ஐயரவர்கள் உத்தரவாக பிள்ளையவர்கள் உத்தரவும்ஆகஸ்டுமீ நற்போதகமும்வந்தது.

ஆகஸ்டுமீ உ-ௗ கிணாசல்கட்டிப்போட்டு செங்கல் எடுத்துவைத்துவருமுன் பிடிங்கியெறித்தாள் வியாகம்மை. கோவித்தேன். வீட்டிலிருந்த நல்லநிறபூனையைப்பிரியமாய்வளர்க்க, அதைத்தெய்வாயி ௧-ௗ குறவன்வசமாய்ப் பிடித்துக்கொடுத்தாளதற்கு அவளை பலவிதமாய்ப்பேசினேன். அப்படியிருக்கையில் இரவிற் சாப்பாடுபோடாமல் ஷை இரண்டுபேரும் உறங்கினார்கள். எழுப்பியும் எழுந்திராததினாற் சாப்பிடவில்லை. மறுநாள் ௩-ௗயும் பகல் சாப்பிட மாட்டேன் என்று சுவிசேஷபுரத்துக்குப்போய் செபத்தியாயி சுரமாயிருக்கிறதை விசாரித்துக்கொண்டு அவடத்தில் பகல்சாப்பிட்டுவந்தேன். சாயுங்காலம் மரியசவரிமுத்துவந்து ஷை சமாசாரம் அறிந்து ஷையார்களைக் கோவிக்கவும் இல்லை, என்னையும் ஏனப்படிப்பட்டினியாயிருப்பானேன் என்றுங்கேள்க்கவுமில்லை. தான் சாப்பிட்டுப் படுத்துக்கொண்டான். தெய்வாயியலட்டுக்காகக் கொஞ்சம் சாப்பிட்டேன். ஷையாள் இரவில்த் தனிமையாய் கூத்துப்பார்க்கப்போனாள். ஷையானும்போனதுபோலத் தோன்றிற்று. இதுவுமதுவும் மனசுக்கு விதனமுண்டாய் விடியக்காலம் ஷையாளை தன்னூருக்குப் பெண்சாதியைக்கூட்டிப்போகச்சொன்னேன். அவனவடத்தில் வீடுகட்டினபின்கூட்டிப்போவேனென்று, மற்றப்படியல்லவென்றதினாலவள்பாட்டிலிருக்கட்டும். நான் ஷையாளிடத்திற் சாப்பிடவும் மாட்டேன் என்றுசொல்லியிருக்கப்போய்விட்டான். ஷை தெய்வாயியையுமவள் பிள்ளையையும் என் வீட்டிலிருக்க வேண்டாமென்றுந் துரத்திவிட்டேன். நான் பகல்முழுதுஞ் சாப்பிடாமற் பிணா செங்கல்கட்டுவேலைசெய்தேன். சாயந்திரம் சற்குணவாத்தியார் உபசாரத்துக்கு முகமுறிக்கமாட்டாமல் ஷை வியாகம்மை சமையல்பண்ணச் சொல்லி இரவிற்சாப்பிட்டேன்.

௪-ௗ யும் பகல் அப்படியே இருந்து சாயந்திரம் சாப்பிட்டேன். மனவேதனை மிகுதியினாற் சாப்பிடப்பிரியமுமில்லை. ஷையாளிவடத்திலிருக்கப்பிரியமும் இல்லை. அப்படியிருக்க ஷை தெய்வாயி சுவிசேஷபுரத்துக்குப் போயிருந்து ஷை பிள்ளையவர்கள் தன்பெண்சாதியைக்கொண்டு வியாகம்மையிடத்திற்சொன்னதாக மிகவும் பரும்படியாய்ப்பேசினதாகக் கோபமாய்த்திரும்பவும் இவடத்துக்குவந்தாள். ஏழைக்கைம்பெண்ணானதினால் அவளை நாமாதரிக்கத்தான்வேண்டுமென்றுயிருந்தேன். புனிவடலி காயிதம்வந்தது.

௬-௳ ஷை காயுதத்துக்குப்பதில் ஒன்று ஈசாக்குவாத்தியாருக்கு ஒன்று எழுதினேன். பின்பு இடப்படுத்த ஆயித்தத்துக்கு சனத்தைகூட்டிப்போய் வந்துசேர்ந்தேன்.

௭-௳ காலைசெபம். பின்பு ராப்போசனத்துக்குப்போய்சாயுங்கால ஆராதனைக்கிருந்துவந்து மாலைசெபம். பெரியநாயகம்பிள்ளை காயுதம்ஒன்றுவந்தது கவணிவேட்டிக்கு.

௮-௳ மகாகனம் விசோப்பு ஐயரவர்கள்வந்தயிருக்கிறதாக ஆள்வந்து காலைச்செபத்துக்குமுன் சனங்களை கூட்டிப்போனேன். இடப்படுத்தலுக்கு ௮-பேர் சேர்ந்தது. சாயந்திரம் ஷை மகாகனம் வி. ஐயரவர்களை சந்தித்து, பின்புபிரசங்கம் ஷையார்செய்து புத்திசொன்னார்கள். கடசியாய்த்தமக்காகவும் செபம்பண்ணக்கேட்டுக்கொண்டு, ௪-வருஷத்திற் கர்த்தருக்குச்சித்தமானால் திருநெல்வேலியிற் கண்காணியார் நேமிக்கப்படுமென்றுஞ் சொன்னார்கள்.

௯-௳ மாசாந்திரக்கூட்டம். இரவு சம்பளம்வாங்கி, ௰-௳ விடியக்காலம் வீட்டுக்குவந்தேன். தெய்வாயிக்குப்பிள்ளையவர்கள் படிசிலவுக்கு ரூ. இ-கொடுத்தார்கள்.

௰௧-௳ காலமே தெய்வாயி வடக்குன்குளத்துக்குப்போகப் புறப்பட்டாள். நானும் ரூ. அரைக்கால் வழிச்சிலவுக்குக்கொடுத்தனுப்பினேன். ஊருக்கு மேல்புரத்தில் ஷையாள் பிள்ளையைவைத்துச் செருப்புப்போட்டுத் திருப்பி வந்துபோகுமுன் ஷையாள் செருப்புக் களவுபோய்விட்டது. துக்கப்பட்டுக் கொண்டுபோனாள். அப்படியிருக்க ராதாபுரத்தில் செல்மலிவென்று ஒரு பணத்து நெல்லும் தூக்கிற புல்லும் வாங்கியனுப்பிவிட்டாள்.

௰௨-௳ ராட்டுவாங்கச் சந்தைக்குப்போனேன். அகப்படவில்லை. ஈசாக்குவாத்தியார் மச்சினனைக்கண்டுபேசினேன்.

௰௩-௳ மரியசவரிமுத்து சம்பளம்வாங்கிவந்தான். சூசைமரியான் காயுதமும்வந்தது.

௰௪-௳ காலைச்செபத்துக்கு பின்பு ம-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் வந்து மதிய ஆராதனைசெய்தார்கள். அவர்கள் தனது ஆள்ச்சமையல். அமுதுபடி, கோழி, முக்கந்தன் மூலமாய்வந்தது; ஏனென்றால் நம்முடையவீட்டில் ஆட்களில்லை நான்மாத்திரமிருந்தேன். பின்பு வீட்டுக்குப்போனார்கள். பின்பு கட்டுச்சாதங்கட்டிக்கொண்டு இரவில் செபம்முடித்துப் புறப்பட்டேன், சுயம்புலிங்கத்தையும் கூட்டிக்கொண்டு பனைவடலியூருக்குப்போக. சுவிசேஷபுரத்துக்குப்போய்ப் பிள்ளையவர்களையும் சற்குண வாத்தியாரையும் அனுப்பிக்கொண்டு, கன்னிகுளத்துக்குப்போய் இரவு தங்கி இருந்து, ஷை ஊர் உப



தேசியார் விசாரணை நக்கேத்திரமுபதேசியாருக்கும் ஷை ஐயருக்குங்காயுதமுமெழுதிக்கொடுத்தனுப்பிக்கொண்டு ௰௫-௳ விடியக்காலம் புறப்பட்டு பாளையங்கோட்டைக்குப்போனேன். இரவிற் பிள்ளைகளெல்லாரையும் பார்த்துக்கொண்டுவிடியக்காலம் புறப்பட்டு ௰௬-௳ வழியில்போகையில். தபால்க்காரன்வசமாய் ஷை பனைவடலி ஐயர் காயுதம்வந்தது. சாயந்திரம் ௫-மணிக்குமேல்ப்போய்ச்சேர்ந்து குழந்தைகள் சமுசாரம் யாவரையுங்கண்டு கர்த்தருக்குத்தோத்திரஞ்செய்தேன். ௰௭-௳ யிருந்தேன். ௰௮-௳ அந்தச்சேகரத்து உபதேசிமார் வாத்திமார்யாவருஞ் சம்பளத்துக்குவந்தார்கள். என்னைமிகவும் கனமாயெண்ணி உபசாரஞ்செய்தார்களவடத்திலுள்ள யாவரும்.

௰௯-௳ சனம் பேரன்புருக்கையரவர்களும் வந்தார்கள். உபதேசிமார் விசாரணை; ௨௰-௳ யும் அப்படியே: சம்பளம். ௨௧-௳ ராப்போசனம். நானுஞ்சமுசாரத்துடனே ராப்போசனம் சேர்ந்தோம். ௨௨-௳ ஷை அய்யர்மார்களும் உபதேசிமார்களிற் சிலருமிருந்தோம். ௨௨-௳ பேரன்புருக்கையரும் கிராம விசாரணைக்குப்போனார்கள். மற்ற உபதேசிமார் முதலுனே போய் விட்டார்கள்.

௨௩-௳ விடிந்து ௬-மணிக்குப்புறப்பட்டு நான் சமுசாரத்துடனேகூடப் போயிருந்த தேவசகாயத்தைபவடத்திற்படிக்கும்படிக்கு நிறுத்திவிட்டு மற்றவர்கள் புறப்பட்டுவந்தோம், பாளையங்கோட்டைக்கு அடுத்த முருகன்குறிச்சியில் இரவில் ௮-மணிக்கு. கூடவந்தகண்தெரியான்செம்புலிங்கத்துக்குபனைவடலிச்சேகரம் விசாரணை உபதேசியாரு மற்ற உபதேசிமாரும் ரூ. ௫, ப. ௮-ங்கொடுத்தார்கள்.

௨௪-௳ பாளையங்கோட்டையிலிருக்கிற பெரிய மாசில்லாமணிப்பிள்ளை வீட்டுக்குப்போயவர்களை விசாரித்துக்கொண்டு இன்னாசியம்மாள் வீட்டுக்குப் போனோம். இரவிற்புறப்பட்டு முருகன்குறிச்சியிற் தங்கி ஷை ஊரில் ஈசாக்குவாத்தியார் மூலமாய் வண்டியமர்த்தியிருந்தது. ஷையார் வசத்திற் பணங்கொடுத்து தருமக்கண்ணு பெண்சாதிக்கும் பாக்கியநாதவாத்தியார் பெண்சாதிக்கும் மணலிவிளை தட்டாமடத்தாசாரி மகனுக்குங் கண்டாங்கிசள் வாங்கியிருந்தது. ஆனபெத்தனங்களெல்லாஞ்செய்து ௨௫-௳ விடியக்காலமே புறப்பட்டு இரவில் ௮-மணிக்கு மேல் சுவிசேஷபுரத்துக்குவந்து இரவில்தங்கி ௨௬-௳ விடியக்காலமே வீட்டுக்குவந்து காலைச்செபஞ்செய்து மற்ற அலுவலும்பார்த்தேன். அன்று வாசிப்புக்குப்போகவில்லை. என் சமுசாரத்துக்குக் கன்குத்தும் வீக்கமும் உண்டாய் மிகுந்தவேதனையோடே வந்ததினால் வேண்டியமருந்துகளுஞ்செய்தேன். மரியசவரிமுத்து சமுசாரம் உடபிக்குப்போ

னாதிருந்தது உதவியாயிருந்தும் எனக்குமனவேதனையாயிருந்தது.

உஎ-ௗ காலையில் சனம் முத்துசுவாமி ஐயர் ஆராதனை. ஸ்சமூசாரத்து க்குறைவாகியாயிற்று. உஅ-ௗயும் உக-ௗயும் ஊருக்குள்ச் சனங்களுக்கு பாடஞ்சொல்லிக்கொடுத்தேன் வெள்ளிப்புனாருறை சுவர்கட்டினேன்.

உக-ௗ பனைவடலி ஐயர் முருகன்குறிச்சி ஈசாக்குவாத்தியாரும் இரண்டு காயுதம் எழுதி ஆனந்தம்வசம் காயுதங்கொடுத்துச் சவிசேஷபுரத்தில் தபாலிற்போட அனுப்பினேன்.

செப்தெம்பர்மீ ச-ௗ வியாழக்கிழமையும் பாடஞ்சொல்லிக்கொடுத்தேன்.

உ-ௗ சந்தையில் ஈசாக்குவாத்தியார் சமுசாரம் ஞானவடிவுக்கு ஒருராட்டு வாங்கப்போனேன்.

௩-ௗ வடக்குன்குளத்தில் அத்தான் கிழக்குளத்துப்பிள்ளை மகன் ஞானப்பிரகாசம்பிள்ளைக்கும் நித்தான்பட்டி அக்காள் மகள் அந்தோனிமுத்துப் பிள்ளைக்கும் கலியாணத்துக்குச் சுருளும் பாக்கும் வந்தது ௫-ௗ கலியாணமென்று. மரியாம்பிள்ளை மகளுக்கும் கலியாண சுருளும்வந்தது. ஷெ ஞானப்பிரகாசம்பிள்ளை சுருளும் ஷெ மரியாம்பிள்ளை மகள் சுருளும் எடுத்துக்கொண்டு நித்தான்பட்டியாள் முன் என்மகள் இன்னுசியம்மாள் கலியாணச் சுருள் எடாததினுலவன் மகள் கலியாணச்சுருள் வேண்டாமென்றுங் கொடுத்துவிட்டேன். ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை விசாரணைப்பிள்ளையவர்களவர்கள் தம்பி மகனை ௰-விராகன் கைபோட்டுக் கலியாண தங்கள் மகளுக்கு கலியாணஞ் செய்கிறது: அல்லவென்றால் வடக்குன்குளத்திற்றானே கலியாணமுடித்துக் கொடுக்கும்படி சொல்லிவிடுகிறதென்றெழுதினார்கள். ஷெ காயுதங்கொண்டுவந்தது மதுரேந்திரம்பிள்ளைதான். அவரிடத்தில் நீர் உம்முடைய சகோதரியை வடக்குன்குளத்து மாப்பிள்ளைக்கே கலியாணம் முடித்துக்கொடுத்துவிடுகிறதே நலமென்றுசொல்லிவிட்டேன். வாத்தியாருக்குச் சுரம்.

௫-ௗ பள்ளிக்கூடவேலை.

௬-ௗ பாளையங்கோட்டையிலிருந்து ஈசாக்குவாத்தியார் அனுப்பின காயுதமும் குசைமரியான் காயுதமும் சிறுபிள்ளைகளுக்கு வாங்கின வேட்டியும் தலைப்பாகுங் காயுதம் ௰-வந்தது. அதற்குமுன் பனைவடலிக்கும் ஷெ வாத்தியாருக்கும் காயுதமெழுதினேன். வாத்தியாருக்கு இரண்டுபோது மருந்துங் கொடுத்தேன்.

எ-ௗ காலையிலந்த மருந்துவேண்டுவதில்லையென்றுஞ் சொல்லிப்போட்டார். சேதிகதத்தில் இருந்து வாத்தியார் ஓலைகொண்டுவந்தவனுக்கு விருது



ப்பெறுக்குளிகை ௧-கொடுத்தனுப்பினேன். முனைஞ்சி மாசில்லாமணியா பிள்ளை கலியாணத்துக்கு இனமுறைப்பாக்கு வைத்ததன்றி கலியாணம் முடிக்கிறதுக்கு உபதேசியார்கூட வரவேண்டுமென்றுவது அல்லது பெரிய மனுஷனுயிருக்கிறவனா கூடவாருமென்று கூப்பிடவா, அல்லது நான் கிடாட்சபுரத்திற்போய்க் கலியாணம் முடித்துவருவேனென்றுவது சொல்லாமற்போய்விட்டார்கள். அ-ௗ காலம்பெறவந்து மத்தியானம் வி. ஆபிரகாம்பிள்ளையும் ஷெ மாசில்லாமணியும்வந்து சாப்பிடக் கூப்பிட்டுப்போனார்கள். இரவிற் சாப்பிட்டு நூ இ-மொய் எழுதிவந்தோம். பள்ளிக்கூடவேலையும் கூட.

௯-ௗ முன் உத்தரவுப்படி பாடத்துக்குப்போனேன். ஐயர்வரவில்லை. உபதேசிமாரும்வரவில்லை. [ஷெ ௯-ௗ வளையும் தெய்வாயி வடக்குன்குளத்திலிருக்கிறாள். இலத்தூர் அக்காளும் என் தமையனார் மக்களுமங்கிருந்து வடக்கேபோனதாய்க்கேள்வி. இந்த ஆவணியிற் கலியாணம் அநேகம் நடந்தது அங்கே.] பனைவடலியிலிருந்து ஐயர் காயுதமும் தேவசகாயம் காயுதமும்வந்) ௯-ௗ வந்த காயுதம் ஷெ ஐயர் ஈசாக்குவாத்தியார் இருவர்கள் காயுதமும்பிள்ளையவர்கள் வீட்டிலிருந்தும் வாங்கிக்கொண்டுவந்தேன். படிப்பில்லை. வ ...யாருக்குச் சுகமில்லை.

௰-ௗ மரியசவரிமுத்துக்கு சம்பளம். அந்தச்சேகரத்தார் துரைபேரிற் கொடுத்த பிராதுமூலம் அவர்களை வேலைபார்க்காமல் நிறுத்தியிருக்கிறதாகக் கேள்வி. அணைக்கலாத்தொம்மைப்பிள்ளை வீட்டிற்கலியாணம் மூத்தமகனுக்கென்றார்கள். பாக்கு பரவன்வசம்வந்தது. வேண்டாமென்று அனுப்பிவிட்டோம். ஆனைக்குட்டி மகனுக்குக் கலியாணமுடித்து அரிசி கோழி கொடுத்தான்.

௰௧-ௗ வடக்குன்குளந்தளத்துவீட்டு தேவசகாயம்பிள்ளைவந்து அணைக்கலாக்குவந்தவர்களின்னாரென்றும் பேசிக்கொண்டிருந்துபோனான். மத்தியானம் ஆராதனை. வாத்தியார் வாத்திச்சிக்கும் சுகமில்லை. இரவிற் செபமுடித்துச் சுவிசேஷபுரத்துக்குப்போய் பனைவடலிக்கனுப்பவேண்டிய கருப்புக்கட்டி மீன் முதலான சாமான்களைப் பூனுவண்டிபோகிறபோது கொண்டுபோகும்படி திட்டஞ்செய்து வீட்டுக்குவந்தேன். வெள்ளைக்கண்ணும் கூடவந்தான்.

௰௨-ௗ காலைச்செபம்முடித்துச் சபையார்கள் முக்கந்தன்முதலானவர்கள் வீட்டிற் செபத்துக்குவாராதவர்களுக்கு பயமும்பயமுமாகப் புத்திசொல்லிப் பள்ளிப்பிள்ளைகளையும் கூட்டிவந்து படித்துக்கொடுத்தேன்.

௰௩-ௗ மாசில்லாமணியாபிள்ளை கலியாணமுடித்துக் கல்விச்சாலைக்கு

போகிறதினாற் கூடவந்து சாப்பிட்டு வழியனுப்பக் கேட்டுக்கொண்டதினாற் நம்முடைய, வீட்டார் யாவருஞ் சாப்பிட்டுச் செபம்பண்ணியனுப்பிவிட்டுவந்தேன். ஷ தகப்பனார் பேரில்வரவேண்டிய சங்கம் ரூ இ-யும் ஷ மகன் கொடுத்தார்; வாங்கியவர்களுக்கு மொய்க்குக்கொடுத்துவிட்டேன். மரியசவரிமுத்து இராவில்வந்து மறுபடியும் கனம் ஐயர் உபரிக்குத்தானே அனுவல் பார்க்க அனுப்பினதாகச் சொன்னான். வாத்தியாருக்குச் சரம்விடவில்லை; ஷ வாத்திச்சிக்குமப்படியே.

௰௪-௳ பூனுத்தேவனுக்கும் ஏகதாசனுக்கும் காயுதம் எழுதியனுப்பினேன். ௰௫-௳ கனம் ஐயர் உத்தரவு, ௰௬-௳ உபதேசிமார் மாசாந்திரக்கூட்டமாகவும், ௰௮-௳ ராப்போசனம், ௰௯-௳ வாத்தி வாத்திச்சிகள் மாசாந்திரக்கூட்டமாகவும் வரச்சொல்லிவந்தது. ௰௬-௳ மாசாந்திரக்கூட்டத்துக்குப்போனேன். இரவு கனம் ஐயர் பிரசங்கம்.

௰௭-௳ காலைசெபத்துக்குபின் கனம் முத்துசுவாமி ஐயர்வந்தார். அவ[illegible]டத்தில் தாணியேல்ப்பிள்ளை மகனவர் கொழுந்தியைக் கேள்க்கிறதைக்குறித்துப்பேசினேன். பின்பு பிள்ளையவர்களிடத்தில் ஷ காரியத்தையறிவி[illegible]ன். அவர்களும் திருச்செந்தூரிலிருந்து அப்போதுதான்வந்தது. பி[illegible]ய யாக்கியானம் பாடம். சாயுங்காலம் சம்பளம்வாங்கி இரவில் வீட்டுக்குவந்தேன். அவடத்தில் ஞானமரியாம்பிள்ளை மகனும் மருமகளும் வந்திருந்தார்கள் நதப்பெண்பிள்ளைக்குச்சுரம்.

௰௮-௳ ராப்போசனத்துக்குப்போனோம். சாயுங்காலம் வந்தோம் வீட்டுக்கு. இரவு செபம்.

௰௯-௳ பள்ளிக்கூடவேலை: வாத்தி வாத்திச்சிக்குச் சுகமில்லை. ௨௰-௳யும் ஷ வேலை. ௨௧-௳ காலையில் பனைவடலிக்காயுதம்வந்தது. அதற்குப்பதில் எழுதினேன். பள்ளிக்கூடவேலையுங்கூடத்தான். பின்பு சாயந்திரம் யாக்கோவு வாத்தியார்வசத்தில் கனம் இஸ்பிராத்றய்யரவர்கள் பள்ளிகூடத்துச்சட்டத்துக்குக் கண்டிப்பாய் நடக்க உத்தரவுவந்தது எனக்குமாத்திரமல்ல எல்லா உபதேசிமாருக்கும் ஒன்றொன்று விசாரணைக்காரருக்கும் அப்படியே.

௨௨-௳ பாடத்துக்குப்போனேன். சாக்குவாத்தியார் காயுதம் ஒன்று வந்தது. அவடத்தனுப்பியராட்டு, மீன், கருப்புக்கட்டிக்கும் நானெழுதினதுக்குப்பதில். சாயங்காலம் வீட்டுக்குவந்தேன்.

௨௩-௳ சற்குணவாத்தியார் வழிப்பாதையாயிவடத்துக்குவந்தவர் கனம் ஐயரிவடத்துக்குவருகிறது இன்றென்பதில்லையென்றார். இரவில் மரியசவரி



முத்துவந்தான். பகல் மணலிவிளை தட்டாமடத்தாசாரி சமுசாரம் ஷயான் குழந்தைக்கு மோதிரஞ்செய்துவந்துபோட்டாளாம். பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளை மூன்றுதரமலைந்துகூட்டி படித்துக்கொடுத்தது.

௨௪-௳யும் இரண்டுவேதலியும் அப்படிச்செய்தேன். விடியக்காலஞ்சின்னைய்யா டாக்குத்துரையவர்கள் பேனாய் சேருவைகாரன்பட்டி சவரிமுத்துசெட்டியார் மகன் அருணாசலத்துக்கு கடித்து வேதனைப்படுகிறதற்கு மருந்து செய்யும்படி பார்வைச் சுடலைமுத்துசெட்டியாருக்குச்சொல்ல எழுதிய ஓலை கொண்டுவந்தவனை அனுப்பினேன். மரியசவரிமுத்து பாடத்துக்குப்போய் பின்பிரவில்வந்திருந்து ௨௫-௳ விடியக்காலம்போனான். ஷயான் சமுசாரத்தையழைத்துப்போக மனமில்லை. காலைச்செபத்துக்குப்பின்பு விசாரணைப்பிள்ளையவர்கள்வந்து தேவாராதனைசெய்தபின்பு குடிகாரன் கருத்தக்கண்ணு பலவிடங்களில் பலவித களவு துன்மார்க்கங்கள் செய்கிறதாகவும் பிள்ளையவர்களுக்குப்பயந்து தலைமைகாரர் முதலானவர்கள் நிலமைக்காரர் யாவருமவனை அடக்கவில்லை என்றும் இசைக்கியோடன் மருமகளுடைய நகை பலபதார்த்தங்களை வித்துச்சிலதை எடுத்துக்கொண்டானென்றும் ஷ பிள்ளையவர்களிடத்தில்ச்சொல்ல, அவர்களந்த சங்கதிகளை விசாரிக்கும்போது அவன்தாயுங்கூட ஒத்தாசையாயிருக்கிறதினாலே இப்படி நடக்கயேதுவென்றும் வந்ததையிட்டு அவர்களெல்லாருஞ் சாமானை எடுத்துப்போகவேண்டியது, அல்லது வீடும்வேண்டுமானாற் காவற்காரருக்கு ரூ-௰: ஷ கிராமத்துக்கு ரூ-௰-ம் கொடுத்துப்பிடுங்கிப்போகவும் தீர்த்தார்கள். ஷயார்கள் ரூ கொடுக்கிறதில்லை, சாமானைமாத்திரம் எடுத்துக்கொண்டுபோகிறதென்று போய்விட்டாள். ஷ வீட்டில் ஷயான்மான் வெள்ளைகண்ணையிருக்கச்சொல்லி ஷயானிடத்தில் அந்தாட்சி வாங்கிக்கட்டிக்கொண்டார்கள். *

---

* கடவுள் துணை.

சமாரியாபுரத்திலிருக்கும் பலவேசமுத்து மூக்கந்தன் மகன் வெள்ளைக்கண்ணு யெழுதிக்குடுத்த உடன்படிக்கை. ௲௮௱௫௰௩ சவுட்டம்பர் மீ ௨௰௫-௳.

யென்னவென்றால் என்னுடையதமையன் கருத்தக்கண்ணு ஆகிறவன்சாருவ முதலானது குடிச்சுக்கொண்டு அடுத்த வீடுச்சனங்களோடே நிதசரி சண்டைபோட்டு கல்லல்செய்கிறபடியினாலே அவனை ஊரைவிட்டும் சபையைவிட்டும் அப்பாரப்படுத்தியிருந்தும் யிப்போது ஷயான் செய்துவந்திருக்கிற துற்மார்க்கங்களுக்கும் யென் தாய்கூடச் சேர்ந்து நடப்பிவிச்சுவருவதனாலே ஷயார்களை ஷ வீட்டைவிட்டு அப்பாரப்படுத்தியிருப்பதால் அந்த வீட்டில் நான் குடியிருக்கவேணுமென்று நான் கேட்டுக்கொண்டபடிக்கு உத்தரவு குடுத்திருப்பதால் நானும் யென்சமுசாரமும் ஷ வீட்டில் குடியிருந்து ஷ

௨௬-௳ வேதக்கண்ணு முத்தத்தில் கூடம்வைக்க எத்தனப்பட்டபோது அடுத்தவீட்டு அமுர்தநாயகம், குருபாதம், அவர்களைத் தடைசெய்கிறதாய்ச் சுயான் தாய்வந்தறிவித்தபோது நான்போய்ப்பார்த்து ஷை அமுர்தநாயகஞ்செய்கிறதநியாயமாய்க்கண்டது. அவர்களை விலக்கினதைக்கேளாமற் போனதால் வீட்டுக்குவந்துவிட்டேன். பின்பு அவர்களைத்தடைசெய்த அமுர்தநாயகமே ஷை யிடத்திற்கூடம்வைத்திருக்கிறான்.

௨௭-௳ நல்லம்மான்புரத்துக்கு ஆயித்தம் பள்ளிபிள்ளைகள் சோதனைக்கு ஷை ஆண்களையும் பள்ளிப்பிள்ளைகளையுங்கூட்டிப்போனேன். வேதநிலைச் சங்கத்துக்கு அரிசி சபையில் வாங்கும்படியுள்ள காரியங்களைக் குறித்துப் பேசும்படிமுக்கந்தன்முதலானவர்கள் வரும்படி உத்தரவுக்குகம்மூனுடையமுக்தன் அமுர்தநாயகம்வரவில்லைப்பேசினதில் ஷை அரிசிவகைக்குக்குறித்தகணக்குப்படி முக்தமார்வாங்கிச் செலுத்த அல்லது குறைவராமற் செய்யும்படி. தீர்மானிக்கப்பட்டதைக்குறித்து ஷை காரியத்தை யிரவில் முக்தனிடத்திற் சொல்ல, நான்போகிறதில்லையந்தப்பிள்ளை யரிசிவாங்க இவடத்திற்கொண்டு வரச்சொல்லுவேன், அப்படிக்கு குடாதவர்களை சபையைவிட்டுத் தள்ளிப் போடுகிறார்களென்றுசொல்லிப்போய்விட்டான்.

௨௮-௳ கோவிலுக்குவரவில்லை. இரவில் பனைவடலிக்கும் ஞானசமரியான், ஏசுதாசன், ஈசாக்குவாத்தியார் ஆ சுபெயர்களுக்கும் நாலுகாயுதமெழுதிமுடித்து ௨௯-௳ விடியக்காலம் ஷையாருக்குக்கொஞ்சம் கருப்புக்கட்டி கருவாடும் கண்தெரியான் சுயம்புலிங்கத்துக்கு ௫ அணாக்கால் கொடுத்தனுப்பினேன். ஷையான் வழியிற்போய்ப் பின்பு வீட்டில்வந்திருந்து சாயந்திரஞ் சுவிசேஷபுரத்துக்குப்போய்த் தங்கும்படிபோனதாகக்கேள்வி.

௩௰-௳ காலையில் செபம். பின்பு பாடத்துக்குப்போனேன். கல்விச்சாலைக்கேள்வி உத்தரவுகளை வாசித்துக்கேட்டார்கள். இரவு ஆராதனை.

அகஸ்டோபர்மீ ௧-௳ காலையில்சுவிசேஷபுரத்திலிருந்துவந்து செபம்.

---

வீட்டையும் பழுதுபார்த்துக்கொண்டுவருகிறதும் அல்லாமல் ஷை வீட்டுக்குள்ளகொடக்கூலியும் குடுத்து சங்கத்துட்செழுந்தந்து கோவிலுக்கு நாளும் யென்சமுசாரம் ஒழுங்காவருவோமாகவும். இப்படிச்செய்யாமல் யென் தமையனுவது யென் தாயாவது ஷை வீட்டில்வந்துபோயிருந்தால் யென்னையும் ஷை வீட்டைவிட்டு அப்பறப்படுத்திப்போடவும்.

| | | இந்த தற்குறி நேல் ஒப்பம் வெள்ளைக்கண்ணு.
இப்படி அறிவேன் தலைமை முத்துதேவநீ-௳.
அறிவேன் மாடகண்ணு முக்கந்தன்.
அறிவேன் அமுர்தநாயகம் முக்கந்தன்.



பின்பு பிள்ளைகளைப்படிக்க ஒழுங்குசெய்து மத்தியானம்பாடங்கேட்டுப்போகச்சொன்னேன். வாத்தியார் பள்ளிக்கூடவேலைபார்க்கவில்லை. மற்றக்காரியங்களுக்குத்திரிகிறார். ஞானசமரியான் காயுதம்வந்தது சுகசெய்தி. முக்கந்தன் கோவிற்கூட்டி இரண்டுபேரும் இல்லாததினால் அரிசிவாங்கவில்லை.

௨-௳ ஒய்வுநாள்காலைச் செபத்துக்கும்வரவில்லை. சாயுங்காலம் பிள்ளையவர்கள்வந்துபோனார்கள்.

௩-௳ வீட்டுக்கென்று வெட்டிய வனை சோறுவெட்டிகொண்டுவரும்படி செய்தேன். சுவிசேஷபுரத்துக்கு பள்ளிப்பிள்ளைகளைகூட்டிச் சோதனைக்கு வரும்படி உத்தரவுவந்தது.

௪-௳ காலையில் மதுரேந்திர ஐயருக்கும் ஞானசமரியானுக்குங் காயுதமெழுதி ஷை பிள்ளைகளையுங்கூட்டிச் சுவிசேஷபுரத்துக்குப்போனேன். தபாலிற் காயுதம் இரண்டும்போட்டுப் பனைவடலிக்காயுதம் இரண்டு வந்ததும் வாங்கி வந்தேன். பிள்ளையவர்களிடையங்குடிக்குப்போய்வந்துபோனார்கள்.

௫-௳ முருகன்குறிச்சியில் திரிமாசக்கூட்டத்துக்கு மதுரேந்திர ஐயர் வருவதினாலவருக்கு காலையில் காயுதம் எழுதினேன். பிள்ளையவர்கள் தங்கள் மகனுக்கு சங்கனசேரி ஞானசமரியாயிமகளைக்கலியாணத்துக்குப் பேசிக்கொள்ளவரச்சொல்லி ஓலைவந்தது. உடனேபோய் ஷை காரியத்தையும் பேசிக்கொண்டு ஷை ஐயருக்கு காயுதத்தை தபாலில் அனுப்பிவிட்டு ஓமத்திராவகமும் வாங்கி வீட்டுக்குவந்து செபம். ௬-௳ இரவில் மரியசவரிமுத்துவந்தான்.

௭-௳ பாடத்துக்குப் போய்வந்தேன். ஞானசமரியான் காயுதம் ௮-௳ வந்தது.

௯-௳ ஒய்வுநாள். முக்கந்தன் அரிசிப்பெட்டிவைத்து எல்லாருமிங்கே கொண்டுவந்துபோடுங்களென்றான். அவர்கள் வீட்டில்த்தவர மற்றவர்கள் ஒருவருங்கொண்டுவரவில்லை.

௰-௳ மாசாந்திரக் கூட்டத்துக்குப்போனேன். கனம் முத்துசுவாமி ஐயரவர்கள்வந்தார்களவர்களிப்பவும் தானியேல்பிள்ளை வந்தானவர்களுக்கிடங்கொடுத்துப்பேசவில்லை யென்றார்கள்.

௰௧-௳ சம்பளம். ௰௨-௳ காலையில்வந்து செபம். பின்பு பள்ளிக்கூடவேலையும் பார்த்தேன்.

௰௩-௳ காலைச்செபமுடிந்தபின் கனம் இஸ்ப்பிராற்று ஐயரவர்கள்கூட்டிவரச்சொன்னதாக ஆள்வந்தது. அப்படியே சுவிசேஷபுரத்துக்குப்போய் கனம் ஐயரவர்களைக்கண்டு பேசினதிலவர்கள் குழந்தைக்கு வருநிலைக்கவேண்டும், அதற்கு டாக்குட்டர் துரைக்கெழுதி மருந்துவந்தவுடனேவரவேண்டு

மென்றுமனுப்பிவிட்டார்கள். பின்பு பிள்ளையவர்களிடத்திலிருந்து பவுல் கலியாணத்துக்கு உத்தரவுவாங்கிக்கொடுக்கச்சொல்லி வீட்டுக்குவந்தேன்.

௰௫-உ பிள்ளையவர்கள் ஆராதனைசெய்து பின்பு அமுர்தநாயகமுதலானவர்கள் கடாய்ச்சவீதிச் செலவுபணத்துக்கு தகரால்சொன்னதிருல்ப்புதாருக்கனுப்பிவிட்டார்கள்.

௰௭-உ சாயங்காலம் உடங்குடிக்கு இடையங்குடிச் சேகர முபதேசிமார்கள் சோதனைக்குப்போகிறதாகவும் மரியசவரிமுத்தும் கயிலாசபுரம் தேவசகாயம்பிள்ளையும் வந்தார்கள். இரவில் மதுரேந்திரய்யர் ஈசாக்குவாத்தியார் ஞானசமரியான் தேவசகாயமிவர்களுக்கு நாலுகாயுதமுமெழுதிவைத்தேன்.

௰௮-உ காலையில் விசாரணைப்பிள்ளை மதுரேந்திரய்யர் ஞானசமரியான் தேவசகாயமிவர்கள் எழுதின காயிதம் மூன்றுங்கொண்டுவந்தார்கள். ஷை அய்யருக்கு இறசரித்திர புஸ்தகம்வேண்டுமென்றெழுதியிருந்தபடிக்குஉடங்குடிப்பாதையாய் பாளையங்கோட்டைக்குப்போற ஷை தேவசகாயம்பிள்ளையிடத்தில் ஷை புஸ்தகமும் ஷை நான் எழுதியகாயுதம் ௪-ம் அனுப்பிவிட்டேன்.

௰௮-உ, உ௰-உ பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்கு சட்டம் எழுதிப்போட்டேன்.

உக-உ உடங்குடிக்குப்போன மரியசவரிமுத்துவந்தான். உரு-உ காலையிற்போனுன் உபரிக்கு. உகூ-உ உத்தரவுவந்தது. உஎ-உ ஆயித்தத்துக்குச் சுவிசேஷபுரத்துக்குப்போய்வந்தேன். மழையில் நனைந்துசயம்புலிங்கம் தெய்வாயி யனுப்பினசாவலுங்கொண்டுவந்தான். ஞானசமரியான் காயுதம் ஒன்றுவந்தது. உஅ-உ பாடத்துக்குமழையினுல் நான்போகவில்லை. ஙυ-உ ராப்போசனத்துக்கு நானுமென்சமுசாரமும் மழையில் நனைந்துகொண்டு போனேம்.

ஙக உ. சனம் எசமானுத்தரவுப்படிபோய், க-பிள்ளைகளுக்கு வசூரிவார்ப்பித்து மதுரேந்திர ஐயர் தேவசகாயம் இருவர் காயுதங்களுக்கு கூலி கூலி கொடுத்து வாங்கிக்கொண்டும் வீட்டுக்குவந்தேன். உடனே ஷை ஐயருக்குப்பதில் எழுதி உடையாத்தேவர்வசமனுப்பினேன்.

உஎ-உ முதல் பள்ளிக்கூடவேலை வாத்தியார் பார்த்துவருகிறார்.

நவம்பர்மீ உ-உ உத்தரவு ரு-உ மாசாந்திரக் கூட்டத்துக்குவரும்படிக்குவந்தது. அந்தப்படிக்குப்போனேன். அவடத்தில் கேட்டதுசனம் சார்சென்றய்யரவர்கள் அம்மாள் நெடுநாளாயிருந்தவியாதியினு லிறந்துபோனதாகவும் ஷை க-உயிற் தானே டோனவூர் வாக்கில் ஐயரவர்களம்மாள் பிர



வசகாலத்துக்காக பாளையங்கோட்டைக்குவந்த உடனே மரித்ததாகவும், உ-உ இருவரையும் அடக்கம்பண்ணினதாகவும் இந்தத்துக்கமான செய்திவந்ததினுல் சனம் இஸ்பிராற்று ஐயரவர்கள் விசாரணைக்குவரவில்லை. முத்துசுவாமி ஐயர் சற்றனலேப்பார்வையிட்டு எபிரே. க. அதிகாரத்தின் வியாய்க்கானம் எழுதினேம். இரவில் சடையகேரி வேதக்கண்ணுபதேசி பிரசங்கம்.

ச-உ ஷை வியாய்க்கானம் எழுதி இரவில் ஆராதனைவாத்திமார்கள் கூட்டமும் ரு-உ சம்பளம். ஐயரவர்கள் உத்தரவுப்படிக்கு வடக்குன்குளத்து தம்பி தேவசகாயம்பிள்ளை வசூரிப்பாலனுப்பும்படி காயுதமெழுதினேன். பின்பு நலைமுழுகிவிட்டுவந்தேன். மரியசவரிமுத்து சம்பளம் வாங்கிவந்தான். இரவில் அமுர்தநாயகம்வேத கீலேஅரிசிவாங்கத்தான் போகப்படாது என்று கோவிற்கூட்டியை வாங்கச்சொல்லி மாசபுழுதம்வாங்கினதைக்கோவில் வைத்துக்கொண்டுங் கிரயத்தைக்கொடாதிருந்ததினுல் நான் கேட்டதற்குப் பெரும்பழியாய்ப் பேசினுன். சா-உ ஓய்வுநாள் விடியக்காலம் உபரிக்குப்போனுன்.

மதுரேந்திர ஐயர் ஈசாக்குவாத்தியார் இருவர் காயுதமும் வந்தது ஷை ரு-உயில்.

எ-உ பிள்ளையவர்களுத்தரவுப்படிக்கு அமுர்தநாயகத்துக்கு வேதக்கண்ணுக்கும் வீட்டுமனையைப்பற்றின வழக்குக்கு ஷை யிடத்தை மத்திசாள்கள்வந்துபார்த்து ஷை அமுர்தநாயகமாவது வேதக்கண்ணுவது ஷை யிடத்தில் யாதொன்றுங்கட்டாமல் மாமூலாயந்தவழியாய்த்தானே இருக்கும்படி தீர்த்தார்கள். அமுர்தநாயகம் சம்மதிக்கவில்லை. ஷை காரியத்தைக்குறித்து ௬-ஸ்ரீ பிள்ளையவாகளுத்தரவுகொடுத்துப்போனபிரகாரம் எழுதியனுப்பினேனவர்களுக்கு. அவர்களதற்குப்பதில் ஷை மத்திஸ்த்தர்சொன்னபடிக்கு மிஞ்சியொருவருஞ்செய்யாதபடிக்குத்திட்டஞ்செய்கிறதென்றுத்தரவுவந்தது. அதைஷையமுர்தநாயகத்துக்குச் சொல்ல, நீங்கள் மனதின்படி எழுதினதிருற் பதில்வந்ததிப்படியென்றும், நான் மனச்சாட்சியென்றுபோதித்தும் நான்தானேயதற்குவிரோதமாய்ச்செய்கிறேனென்றும் பலவிதமாய்ப்பேசினுன். அதின்பின்னவர்களுக்குள்ளேதானே சண்டையுண்டாயிற்று ஷை காரியத்தையிட்டு.

க-உ மதுரேந்திரய்யருக்கும் ஈசாக்குவாத்தியாருக்கும் ஞானசமரியானுக்குங் காயுதம்பதிலெழுதினேன். மரியசவரிமுத்து முதல்நாளேவந்து இன்று தன்சமுசாரத்தை கூட்டிக்கொண்டுபோறுன் உபரிக்கு. வடக்குன்குளத்திலிருந்து வசூரிமருந்து ஆள்வசம்வந்தது. ௰-உ பங்களாவுக்குப்போய் பள்

ளிப்பிள்ளைகளுக்குப்போட்டேன். ஷை பனைவடலிக்காயுதமூர் தபாலிற் போட்டேன். பின்பு வீட்டுக்குவந்தேன். பிள்ளையவர்களும்வந்து பாடங்கேட்டு, வராத சனங்களுக்குங் கண்டிப்புப்பண்ணிப்போய்விட்டார்கள்.

௰௧-௳ பாடத்துக்குப்போய்வந்தேன். போகுமுன் அமிர்தநாயகம் மகனுக்குச்சுகமில்லையென்றும்வந்து செபம்பண்ணவேண்டுமென்றுஞ் சொன்னான் செபம்பண்ணினேன். பின்பு பங்களாவுக்குப்போய்வந்தேன் பாடத்துக்கு. கனம் ஐயரவர்கள் கொழுந்தியாருக்கும் கனம் சின்ன ஆபிஸ் ஐயரவர்களுக்கும் அவர்கள் அம்மாளுக்குஞ் சுகமில்லையென்று கேள்வி. அதற்காக கனம் ஐயரவர்களும் ஷை கொழுந்தியாரும் பாளையங்கோட்டைக்குப்போனார்கள் என்றுங்கேள்வி.

௰௨-௳ இரவில் போத்திஎன்பவனை முருக்கப்பன் கோவிலில் அடித்து சண்டைபிடித்தவர்களை விலக்கிவிட்டேன்.

௰௩-௳ ஐய்வுநாள் வாத்தியார் மச்சினனுந்தங்கச்சியும் வந்திருந்தார்கள்.

௰௪-௳ இரவில் அமிர்தநாயகத்திடத்தில் மலையப்பன் இறைப்புச் சம்பளங்கேட்டதற்கு செருப்பாலடிப்பனென்றதினாற் சண்டையுண்டாயிற்று.

௰௫-௳ அந்தோனிவந்தடவு எடுக்கச் சுகங்குடியானுமவன் மகனும் ரொம்பப்பேசிக்கொடுக்கவும் இல்லை.

௰௭-௳ வருரிவைத்ததைப்பார்க்க சுவிசேஷபுரத்துக்குப்போனேன். மகேந்திர ஐயர் சாயுதம்வந்தது வாங்கிவந்தேன். பிள்ளையவர்களுக்கும் ஒன்றுவந்தது.

௰௮-௳ பாடத்துக்குப்போனேன். ஐயரில்லை, ஷை வருரி டு, பிள்ளைகளுக்குப்போட்டு வீட்டுக்குவந்தேன். சீலனையும் சிவணணைஞ்சபெருமாளையும் பிடித்துச்செபத்துக்குவரும்படி திட்டஞ்செய்தது. ௰௯-௳ உத்தரவுவந்தது ௨௧-௳ பாடத்துக்குவர. அந்தப்படி பாடத்துக்குப்போனேன். ஏசுதாசன் வந்தான். அவனைக்கூட்டிக்கொண்டு ௨௨-௳ காலையில்வந்தேன். வாத்தியார்செபம். பின்பு சிலருக்குப்பாடஞ்சொல்லிக்கொடுத்தேன்.

௨௪-௳ பவுலுக்கு உத்தரவுக்கு ஓலை கனம் ஐயருக்கெழுதினேன். ௨௫-௳ ஷையான் சண்டங்கோட்டையிற் கனம் ஐயரிடத்திற் கலியாணம் முடித்துவந்தான். கோவிற்செபம்பண்ணியனுப்பினேன். (குருவிண்த்தத்து மிக்கேல்ப்பிள்ளை ௩-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைக்கு எழுதின ஓலைக்குப்பதில்எழுதியனுப்பினேன்) பின்பு சுவிசேஷபுரத்திலுங் காரிதோட்டத்திலும்போய் வருரிவைத்து இரவுதங்கி, ௨௬-௳ காலையில்வந்து செபம்பண்ணினேன். அமிர்தநாயகம் விசாரணை வாத்தியாரிடத்தில் நான்வந்தநாள்முதற் சபையில் குரு



ந்துபோச்சென்றும் விளைபோடும்படி ஒருவீட்டுமனைமேட்டுக்கல் இரண்டுக்கு காணுமனையும் பிடுங்கி வேலைசெய்யசொல்லுகிறார். ஐய்வுநாள் பொதிமாட்டுகோரணாத்துக்க நான்செய்கிற பிரயத்தனத்துக்கு உதவிசெய்கிறாரில்லை என்றுஞ்சொன்னானும்.

௨௯-௳ நல்லம்மாள்புரம் ஆயித்தத்துக்குப்போனேன் சபையார்வரவில்லைப் போக்குச்சொன்னார்களதைக்குறித்துக் குருபாதம் ஒன்றுஞ் சனங்களைச் சொல்லாமலிருந்து நம்மோடேமாத்திரம் முதல்நாள் அடவைக்கொடு சபையாருக்கென்று சண்டைக்குவந்தான்.

௩௰-௳ பள்ளிக்கூடம் விசாரணைவாத்தியார் மூலமாயுத்தரவு பள்ளிக்கூடம் நீளமகலங்கட்டுச்சிலவு ஸ்தாபித்தவருஷமும் எழுதியனுப்ப அந்தப்படிக்கு டிசம்பர் ௧-௳ கணக்கு அனுப்பிவிட்டேன். மரியசவரிமுத்து வீட்டுக்கு ஏசுதாசன்போயவ்விடத்திலவன் மச்சினன் மூத்தவரும் பெண்சாதியும் முதல்நாளே வந்திருக்கிறதாகவும் சொன்னான்.

[௲௮௱௫௰௩ நவம்பர் ௩௰-௳ பொதுவான உத்தரவு. அந்தந்தவூரிலுள்ள பள்ளிக்கூடத்தின் நீளம் அகலம் இவ்வளவென்றும் கட்டுமானச்சிலவிவ்வளவென்றும் பள்ளிக்கூடந்தனிமையாயிராவிட்டால் இப்பொழுது படிக்கிற கோவிலின் நீளமகலம் கட்டுமானச்சில்லவையும் அந்தந்த வூரில்முதலாவது பள்ளிக்கூடம் ஸ்தாபித்தவருஷத்தையும் கூடியமட்டுந் திட்டமாய் விசாரித்து வெள்ளிக்கிழமைக்குள்ளாகத் திட்டமான கணக்கனுப்பும்படியாய் கனம் ஐயரவர்கள் கண்டிப்பான உத்தரவுகொடுத்திருக்கிறார்கள். ஆகையால் ஷை காரியத்திலசதியாயிராமல் உபதேசிமாரே பொறுப்பாய்ப்பார்த்துத் திட்டமாய்க் கணக்கனுப்பவும், கட்டுமானக்கிரயம் திட்டமாய் தெரியாவிட்டால் உத்தேசக்கணக்கு அனுப்பவும். உத்தரவுப்படிக்கு விசாரணை சற்குணவாத்தியார்.

சமாரியாபுரம் பள்ளிக்கூடம்.

நீளம் தச்சுக்கு முளம் ஆறே அரைக்கால். அகலம் ஷை ௫௩. கட்டுமானச் சிலவு ரூ ௭, ஸ்தாபித்தவருசம், ௰௨. சற்சமிசியோனைச்சேர்ந்தது.]

௨-௳ சுவிசேஷபுரங் காரிதோட்டமிரண்டு ஊருக்கும்போய் வருரிவைத்துவந்தேன். சூசைமரியான் விடுதலைவிட்டுவந்தான்.

௩-௳ வியாய்க்கானம் எழுதினேன். ௪-௳ மத்தியானம் ஷை சூசைமரிய ஞானப்பிரகாசம் பிரசங்கம்.

௫-௳ ஷையானும் ஏசுதாசனும் சுவிசேஷபுரத்துக்குப்போனார்கள். இரவில் மரியசவரிமுத்துவந்து விடியகாலம்போனான்.

௯-௳ சாயுங்காலம் சுவிசேஷபுரத்துக்குப்போனபிள்ளைகள் வந்தார்கள். ௱-ஸ்ரீ விசாரணைப் பிள்ளையவர்கள் பனைவடலிவளையும் போயிருந்தவர்கள் ௯-௳ வந்திருக்கிறார்களென்றுஞ் சொன்னார்கள். பின்பு வடக்குன்குளத்திலிருந்து என் மச்சினர் இன்னாசிமுத்துப்பிள்ளை காலில் பட்டைக்கல்விழுந்து கரண்டைக்குமேல் முறிவுமாயிருக்கிறதென்று ஷெயார் மகன் தருமநாதபிள்ளை ஓலைகொண்டுவந்தார். கருவலம்பட்டைத்தயிலம்போடவேண்டியதற்கு சவதரித்தனுப்பும்படிக்கும் எழுதியிருந்ததற்கு உடனே ஒரு ஆள் திட்டஞ்செய்து ரூ மாகாணி கொடுத்து ஷெ தருமநாதபிள்ளையிடத்திலுஞ் சிலவுக்கு ரூ காலே அரைக்கால். ௮-ங்கொடுத்து நம்பிகுறிச்சி முதலியாருக்கு ஷெபட்டை வெட்டிக்கொடுக்கவும் எழுதி ௭-௳ விடியக்காலமனுப்பினேன். மதுரேந்திர ஐயருக்கும் ஈசாக்கு வாத்தியாருக்குங் காயுதமெழுதினேன். ௯-௳ தபாலிற் போட்டேன். அன்று சம்பளம்.

௰-௳ கனம் சிக்கட்டேரி ஐயரவர்கள்வந்து சோதனை. ௰௧-௳ ராப்போசனம். ௰௨-௳ நல்லம்மாள்புரம் ஆயித்தத்துக்குப்போயவடத்தில் கனம் இஸ்பிராற்று ஐயரவர்களிடத்தில் வடக்குன்குளத்துக்குப்போய்வர உத்தரவு நாள் நாலுக்கு வாங்கி ௰௩-௳ வடக்குன்குளத்துக்குப்போனேன் மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளையைப்பார்க்க. அப்பொழுதவடத்தில் சின்னய்யா டாக்குத்தனாக்கு வியாதியினால் அவஸ்தையாயிருக்கிறசெய்திகேட்டு அவடத்துக்குப்போய் பார்க்கும்போது அறிவுதெரியாது இரவிலவர்கள் குமாரர் தேவசகாயம்பிள்ளை தென்காசித்தாலுகாச் சேகரத்திலிருந்து வந்தார்.

௰௬-௳ வெள்ளிக்கிழமை இரவில் ௰௨-நாழிகையில் மரணம் அதின்பின் மறுநாள் ௰௭-௳ அடக்கம்பண்ணினது.

௰௮-௳யும் இருந்து ஷெ மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளைக்கு கால் முறிவு ஊராததினால் மிகுந்தவேதனைப்படுகிறதினால் வேறுகண்ணாளிகொண்டுபார்க்கும்படி திட்டஞ்செய்து, ௰௯-௳ பிறப்பட்டுவந்தேன் இரவில்.

௨௰-௳ காலைசெபம்பண்ணினபின்பு சுவிசேஷபுரத்துக்குப்போனேன் ஐபிரே. நிருபத்தின்பேரிற் கேள்விசோதனை. ௨௧-௳ ஷெ சோதனை. இரவில்வீட்டுக்குவந்து வடக்குன்குளத்துக்கு ஓலை எழுதி ௨௨-௳ ஆள்வசம் அனுப்பி பின் ௨௩-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் ஷெ சோதனைக்கிருந்து சாயந்திரம் அனுப்பப்பட்டுவீட்டுக்குவந்தேன். ௨௪-௳ உத்தரவுவந்தது. ௨௫-௳ சம்பளத்துக்குப்போய்வந்தேன். பிள்ளையவர்கள் வடக்குன்குளத்துக்குப்போயிருந்தார்கள். ௨௮-௳ வந்து உடனே எனக்கு காயுதமெழுதினார்களதில்



மரியாம்பிள்ளை மகன் பூவாயிறந்ததாக. ௨௬-௳ ஷெ ஊருக்கு என் வீட்டுக்காரிபோனாள்.

௩௰-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் ௱-ஸ்ரீ பிள்ளையவர்களைக் கண்டுபேசிக்கொண்டு மதுரேந்திர ஐயருக்குத் தபாலிற் காயுதமும் அனுப்பினேன். ௨௯-௳ லாசருபதேசி கொடியடவுவைத்து ரூ ௯-வாங்கிப்போகும்போது ஷெ பிள்ளையவர்களிடத்திற் கொடுக்கச்சொல்லி ஷெயாரிடத்தில் ஒரு ரூ கொடுத்ததைக்கொடாமல் எடுத்துக்கொண்டானதையவர்கள் கேட்டு மிகவும் மனஸ்தாபப்பட்டார்களது மாப்பிள்ளை யின்னாசிமுத்துப்பிள்ளை சிலவுக்குக்கொடுக்கச்சொன்னது. பின்புவீட்டுக்குவந்தேன். ௩௧-௳ மழை கொந்தலாயிருந்தது. மழைபெய்யவில்லை.

## ௲௮௱௫௰௪-ம் வருஷம் சனவரி மீ ௧-௳ ஞாயிற்றுக்கிழமை.

௧-௳ மூன்றுவேளையும் செபம்.

௨-௳ காலைசெபமுடித்து கனம் ஐயரவர்களைக்காணப்போனோம். அவர்கள் தங்களம்மாளிறந்துபோனதை நினைத்துத்துக்கத்தினால் பேசாமலிருந்ததினால்க் கோவிலுக்குவந்தோம். பின்பு தரித்திரசங்கங்கூடிற்று. ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் தருமநாத சஞ்சீவிக்கும் யாக்கோவு சவரிராயனுக்கும் மரியவியாகப்பனுக்கும் ஆ ௫-பேருக்கும் கால்ச்சட்டை மேற்சட்டை தலைக்குல்லாவும் கொடுத்தார்கள். சாயுங்காலஞ் சாப்பிட்டு வீட்டுக்கு இரவில்வந்து செபம்பண்ணினேன். குருபாதத்துக்கு நாலாவது ஆண்டெழுந்தை யிறந்துபோயிற்று. அது ஞானஸ்தானமில்லாததினால் அவர்களே அடக்கஞ்செய்தார்கள்.

௩-௳ வடக்குன்குளத்துக்குசின்னய்யா வீட்டுக்கு ரூ அரைக்காலுக்கு இலையும்வாங்கி மிராசு பாக்கியம்பிள்ளை எழுதின ஓலைக்குப்பதிலும் எழுதியனுப்பினேன். சாயுங்காலம் குசைமரியாளும் மாசில்லாமணியும் அவர்கள்விடுதலைமுடிந்து கல்விச்சாலைக்குப் படிக்கப்போனார்கள். பனைவடலியிலிருந்து வந்தசெய்திக்காயுதம் சவரிராயனை பழனி நாய் கடித்ததாக எழுதிவந்தது. அதற்குப்பதில் ஷெ குசைமரியாள்வசம் அனுப்பினேன்.

௭-௳ வடக்குன்குளத்திலிருந்து என்சமுசாரம்வந்தாள். ௮-௳ ராப்

போசனத்துக்குப்போய்வந்தேன். இராவிற் கனம் இஸ்பிராற் ஐயரவர்கள் வந்து செபம். ௯-௳ இரவில் எனக்குச் சுரமுண்டாயிற்று.

௰௮-௳ சங்கத்துக்குப்போகவில்லை.

௨௨-௳ ஏசுதாசன் இன்னாசியம்மாள் ஷை மாப்பிள்ளையும் வந்தார்கள். ௨௭-௳ ஏசுதாசனுக்குச் சுரமுண்டாகி ௨௯-௳ வகுரிகண்டது.

௩௰-௳ வடக்குன்குளம் மணியாரப்பிள்ளை மகன் ஞானுப்பிள்ளை பாளையங்கோட்டையிற் பேதியினால் இறந்துபோனசெய்திகேட்டோம். ஷை பசுவின்றனை அந்தோனிமுத்துப்பிள்ளை ௨௮-௳ மரித்து ௨௯-௳யிலடக்கினதாகவும் செய்தி ௩௰-௳ கடைவீட்டு சவரிமுத்துப்பிள்ளைவந்து சொன்னார்.

பிப்பரவரிமீ ௮-௳ இன்னாசியம்மாளுக்குச் சுரமுண்டாயிற்று. ௰-௳யிலும் வந்தது குளிருஞ் சுரம் முறைகட்டிற்று. ௯-௳ வாத்தியும் வாத்திச்சியும் பெரும்படியாய்ப்பேசினார்கள். சாயந்திரங் கனம் முத்துசுவாமி ஐயர்வந்து செபம். பின்பும் சுரமுங்குளிருமுறைகூட்டி வந்ததோடே வகுரி ௰௨-௳ கண்டதோடே ௰௩-நாள்வரையும் ஷை சுரம்வந்துகொண்டிருக்க ஷை வகுரிமாய்ந்துபோனபின்பு சுரத்துக்குமருந்துகொடுத்து சுரம்விட்ட பின்பு ரண்டு எண்ணைத்தண்ணி விட்டபின்பு மார்ச்சுமீ ௩-௳ திருப்ப சுரமுங் குளிரும்வந்து ௭-௳ புடதிக்கும் வலதுகைக்கும் ஒன்றாய் இழுப்பும் வலிப்புமுண்டாய் மருந்து சன்னி சுரமுதலானதுக்கு வேண்டியதையெல்லாஞ்செய்து வாந்தியும் வலியுமுண்டாகிக்கொண்டேயிருந்து பிழைப்பாளென்கிற நம்பிக்கையற்றுப்போயிற்று, ஆகிலும் ௨௰-௳ வரையிற் குறையநம்பிக்கைவந்தது.

௨௩-௳ கனம் முத்துசுவாமி ஐயர்வந்து செபம்பண்ணினார்கள் இரவில் வாத்தியான் படிப்பிக்கிறதொழுங்கில்லை என்றும் பெண்பிள்ளைப்பிள்ளைகளுக்கு வாத்திச்சி ஒழுங்காய்ப்படிப்பித்துக்கொடுக்கிறதில்லையென்றும் ஷை பெண்பிள்ளைகளுக்குச் சீலைகொடாமலும் உடுத்துக்கொள்ளுகிறதையும் ஷையார் ஓய்வுநாளிற் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டுவருகிறதில்லையென்பதையும் அறிவித்தேன். மூக்கந்தனும் நல்லமுத்தும் ஷை நான்சொன்னதுக்கு சாட்சியாகவும் சொன்னார்கள்.

௰-௳ மரியசவரிமுத்து குழந்தைக்குஞ் சவுக்கியமில்லாததாய்க்கொண்டுவந்தான். அதற்கு வேர்கட்டியும் தாடைநோய்க்கு மருந்துபூசியும் சுகமாயிற்று.

௰௫-௳ வரையில் பின்னும் ௨௫-௳ வரையுமிருந்தது. ௰௨-௳ ஞாயிற்றுக்கிழமைவிடிந்து ௧ நாழிகைக்குள்ளாகச் செபத்தியாயியும் புத்தியமிந்தாள்.



அப்பொழுது[illegible]வந்திருந்து நல்லம்மாள் புரத்துக்குப்போய்வந்து வீட்டுக்குப்போயிரவில் ௩-படி உழுந்தும் ௮௰-படி நெல்லும் அனுப்பினார்கள். ௰௩-௳ ஷையார் சமுசாரமும் ஆலப்பன்பிள்ளை தாயும்வந்தார்கள். ௰௫-௳ ஷையார் போனார்கள்.

௨௩-௳ வாத்தி பாடத்துக்குப்போனதின் ௰-மணிக்கு மேல் வாத்திச்சி படித்துக்கொடுக்கவில்லை. ௨௪-௳ காலை ௭-பிள்ளைகள் வந்தது. ௰-மணிக்கு மேல் பிள்ளைகள் ௨ இருந்தது. வாத்தி, வாத்திச்சி ரண்டுபேரும் பள்ளிக்கூடத்திலில்லை. ஷை வாத்தி காரியத்துக்கு ஒரு காயிதமெழுதிசற்குணவாத்தியாருக்கு அனுப்பினேன். அவர் விசாரணைசெய்யவில்லை.

ஏப்பிரல்மீ ௰௩-௳ சம்பளம்.

௰௩-௳ இராப்போசனம். வாத்திமனத்தாபத்தைத் தீர்த்து சமாதானம் செய்யாமற்போனான். சாயந்திரம்பிள்ளையவர்களிடத்திற்போய்க் கலியாணக்காரியம் பேசிவந்தோம் நானுமென்சமுசாரமும்.

௨௨-௳ பனைவடலி ஐயருஞ் சற்குணவாத்தியாரும் வந்தார்கள். வாத்திகாரியத்தை விசாரித்து ஒழுங்குபண்ணவில்லை. ஏப்பிரல்மீ ௰௨-௳ மாசாந்திரக்கூட்டத்துக்குப்போய் இரவுதங்கி ௰௩-௳ சாயந்திரஞ் சம்பளம் வாங்கிவந்தேன். அதற்குமுன் ஏசுதாசன் பேதிக்கு சாப்பிட்டதின்பேரில் உபத்திரவப்பட்டான். ௰௩-௳ ராப்போசனம் நான்போகவில்லை. ௩-ஸ்ரீ பிள்ளையவர்கள் ஓலையனுப்பினார்கள் வரும்படி. அதினால் நானுஞ் சமுசாரமும்போய்க் கலியாணக்காரியத்தைக்குறித்துப் பேசிக்கொண்டு இரவில் வீட்டுக்குவந்தோம். அதற்குமுன் வாத்திசெபம். மதுரோந்திர ஐயர் காயிதம்வந்தது ௰௩-௳ ௨௨-௳ ஷை மதுரோந்திர ஐயர்வந்து ௨௩-௳ ஆராதனைசெய்து ௨௪-௳ இளங்கலையர்க்குமாய்ப்போனார்.

௨௫-௳ குணசமரியாளுக்குக் காயிதமெழுதி ௨௯-௳ ஏசுதாசன் குருகுறிச்சி பள்ளிக்கூடத்திற் படிக்கப்போகிறவன் வசம் அனுப்பினேன்.

௨௭-௳ பிள்ளையவர்கள்வந்து மாலைச்செபம்.

௨௮-௳ பகல்முழுதும் வாத்திவாத்திச்சி இருவரும் பள்ளிக்கூடவேலை பார்க்கவில்லை. நானடிக்கடி போய்ப்பார்த்தேன். சாயந்திரம் ஷை பிள்ளையவர்களும் வாத்தியெங்கேயென்று கேட்டார்கள். காணவில்லை இன்றைக்குளன்றேன். இருவருங்காலை செபத்துக்குவரவில்லை. ராத்திரி வாத்திமாத்திரம் வந்து செபத்துக்கு. ௨௯-௳ ஷை வாத்தி பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கவில்லை, தூங்கினார், வாத்திச்சி ௮- பிள்ளைகளை வைத்துக்கொண்டிருந்து பழம்பாடஞ்

னோமல் மத்தியானத்திலனுப்பிவிட்டு போனார்கள். வடக்குன்குளம் பரஞ்சோதியாபிள்ளைமகன் காயிதம் ஒன்றுவந்தது.

மெய்மீ ௨-௳ ஏசுதாசன் காயிதம்வந்தது அதில்சூசைமரியானுக்குக் கலியாணஞ் செய்வதே அகத்தியமென்று. ௨-௳ மதுரேந்திரஐயர் எழுதினதும் மாப்பிள்ளை இராயப்பபிள்ளை ௩-௳ யெழுதினதிலும் ஷெ சூசைமரியானுக்குக் கலியாணம் செய்யவேண்டுமென்பதை யிட்டே ௩-௳ வந்துசேர்ந்தது. மாசாந்திரக் கூட்டத்துக்குப்போனேன். சுவிசேஷபுரத்தில் கனம் இஸ்பிராற்று துரையவர்கள் வந்து முதலாவதுசம்பளம்.

௩-௳வில் சூசைமரியாம்பிள்ளை சமுசாரங் குழந்தைகளெல்லாரும் பிள்ளையவர்கள்வீட்டில் வந்திருந்தார்கள். சற்குணவாத்தியார், பாக்கியநாத வாத்திவாத்திச்சி இரண்டுபேர் பேரிலுங் குற்றமென்றும் அதைக்குறித்து என்னிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சொன்னார். ஷெயார் என்னிடத்திற் கேள்க்கவில்லை.

௪-௳ இரவில், துரையிடத்தில் நான்இரண்டுநாளைக்குத்தரவு வாங்கியிருக்கிறேன், பள்ளிக்கூடத்தைப் பார்த்துக்கொள்ளுங்களென்று, அனுப்பிக்கொண்டு ௰-௳ விடியக்காலம், இடாட்சபுரத்துக்குத்தன்சமுசாரத்தையும் கூட்டிப்போய்விட்டார். ௰௨-௳ உதயத்தில் வாத்திவந்தது. வாத்திச்சிவரவில்லை. பின்பு நான் பாடத்துக்குச் சுவிசேஷபுரத்துக்குப்போய் இரவு ஆராதனைமுடிந்து வீட்டுக்குவந்தேன். கலியாணத்துக்கு செவ்வாய்க்கிழமையே போக உத்தரவுவாங்கினேன்.

௰௪-௳ சேமத்து கல்லதம்பியாபிள்ளையும் அவர் மகனும்சொரூந்திகூடப்பிறந்தவரும் குருக்கள்மடம் அப்புப்பிள்ளையும் காவறைதித்தங்புதூர் சுவாமியாளன் பேரன் ஞானப்பிள்ளையும்வந்தார்கள். ௰௫-௳ சாயந்திரம்போனார்கள் சுவிசேஷபுரத்துப்பிள்ளை வீட்டுக்கலியாணத்துக்கு. ௰௬-௳ விடியக்காலம் என் சமுசாரங்குழந்தைகளை யனுப்பினேனவடத்துக்கு. சாயுங்காலம் நான்போனேன். ௰௭-௳ புதன்கிழமை ௯-மணிக்கு வியாகப்பபிள்ளைக்கும் அன்னம்மைக்கும் விவாகம் நிறைவேறினது. பவானிடலி ஐயர் உ குழந்தைகளையும் தேவசகாயத்தையும் கூட்டிவந்தார்.

௰௮-௳ போய்விட்டார். ௨௰-௳ விடியக்காலம் நானுஞ் சூசைமரியானும்வந்து காலைசெபஞ்செய்து பின்பு சுவிசேஷபுரத்துக்குப்போய் சாப்பிட்டு தேவசகாயத்தையும் கூட்டிவந்தேன். பின்பு மாலைசெபம்.

௨௧-௳ காலை செபஞ்செய்து ராப்போசனக்காரனைவரச்சொல்லிப்போனேன். இரவிற் தங்கினேன்.



௨௨-௳ காலையில் வியாகப்பபிள்ளை முதலானவர்களை பாளையங்கோட்டைக் கனுப்பிவிட்டு மத்தியானத்துக்குமேல் வீட்டுக்குவந்தேன். சமுசாரங்குழந்தைகளும்வந்தார்கள். கனம் ஜேமிஸ்பிராற்று துரையவர்கள் கிராமவிசாரணைக்கு முதலாவதாகவந்து மாலை செபஞ்செய்துடனேபோய்விட்டார்கள். மரியசவரிமுத்தும் உபரிக்குப்போய்விட்டான்.

௨௩-௳ பாடத்துக்குப்போனேன். அவடத்திலப் பிள்ளையவர்கள் குமாரனை பண்ணைவிளைக்கு வயித்தியனிடத்துக்குகொண்டுபோக என்னைக்கூடப்போகும்படிக்கு ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் துரையிடத்தில் உத்தரவுவாங்கியனுப்பினார்கள். இரவு சாத்தன்குளத்தில் சனம் முத்துசுவாமி ஐயர் வீட்டிற்தங்கி, வண்டியிற்புறப்பட்டு ௨௭-௳ பண்ணைவிளைக்குப்போய், ௨௮-௳ அங்கிருந்து ௨௯-௳ புறப்பட்டு சடையனேரித்திற்தங்கி ௩௰-௳ சாத்தன்குளத்துக்குவந்து ஷெ ஐயர் வீட்டிலச் சாப்பிட்டு சத்தியநகரத்து சபையார்களை விசாரித்துக்கொண்டு மத்தியானம் ஏசுவடியாள் அமுதுபடி கொடுத்து சமைத்து சாப்பிட்டு சாயுங்காலஞ் சுவிசேஷபுரம் வந்து ௩௧-௳ வீட்டுக்கு வந்தேன்.

ஜூன்மீ ௧-௳ உத்திரவுப்படி மாசாந்திரக்கூட்டத்தூர்கு ௨-௳ சம்பளம்வாங்கி யிரவில் வந்தேன். வாத்தி செபம். தேவசகாயத்துக்கு காதுக்குள் புறப்பட்டஇறைவன்செமிநேரிப்பள்ளிக்கூடத்துக்கு அனுப்பஉத்தரவுவந்தும் அனுப்பவில்லை. அதைக்குறித்து மதுரேந்திர ஐயருக்கும் சூசைமரியானுக்கும் எழுதினேன் ௩௧-௳ மெய்மீ மரியசவரிமுத்து சம்பளம் வாங்கிவந்தான்.

௭-௳ஆயனைக்குவெட்டினதில்விழுந்து இடுப்பில்வலியுண்டாயிருந்தது.

௮-௳ ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளை வந்து சங்கப்பண வசூல்செய்தார்கள், ஆயித்தக்காரனை பெத்லெகேம் ஊருக்கு கூட்டிவர உத்தரவு வந்தது சனங்கள் வரவேதவில்லை. நானும் போகவில்லை.

௯-௳ பாடத்துக்குப்போனேன். மதுரேந்திர ஐயர் காயுதமும் ஏசுதாசன் காயுதமும்வந்தது, தம்பி தேவசகாயத்தை சீக்கிரத்தில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்படி. அவர்களுக்கும் மாப்பிள்ளை இராயப்பபிள்ளைக்கும் ௰௨-௳காயுதமுமெழுதித் தேவசகாயத்தையும்கூட்டிச் சுவிசேஷபுரத்துக்குப்போய் துரையாளமத்தி இரவுதங்கி ௰௩-௳ விடியக்காலம் பாளையங்கோட்டைக்கனுப்பினேன். முதலாவது செமிநேரிப்பள்ளிக்கூடத்துக்குப்போகிறதினால் என்னையும் தாயையும் விட்டுப்போகிறதினால் அவனுக்குமெங்களுக்குமுண்டாகிய துக்கம் மிகுதியாகிலுங் கர்த்தனை நம்பியனுப்பினோம் அவனும் அப்படிபோனான். அவனுக்கு சாப்பிட ஏத்தனம் ஒரு குளிவிநு மனுப்பினோம்.

வலிசேஷபுரத்துப்பிள்ளையவர்கள் குமாரன் மரியு* வியாகப்பனுக்கு கால் கடுவாதி வாதத்துக்கு மருந்துகொடுத்து இரண்டு மூன்றுநாளன்று வீட்டுக்கு வந்தேன். எனக்கு இன்னமும் இடுப்பில் வலியுண்டாயிருக்கிறது. இதோடே செபம் பண்ணியும்வருகிறேன்.

---

பிரியமுள்ள குசைமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்குத்தேவகிருபையுண்டாவதாகவும். இவ்விடத்தில் யாவருஞ்சேமம். அப்படியே அவ்விடத்திலுண்டாகிய உங்கள் சேமத்தைக்குறித்தறிய விரும்புகிறோம். போனமாசம் கடைசி ஒருகாயிதம் அனுப்பினேன். அது வந்துசேர்ந்ததுஞ் சோதனைத் தெரியவில்லை. உன்காரியங்களையிட்டு எப்பொழுதுங் கவலையாயிருக்கிறோம். உன்னைக்கிராமத்துக்கு அனுப்பயோசனையாயிருக்கிறதாகவும் அடிக்கடி. கத்தாழ்வுண்டாகிறதினாலே மேல்ப்போக ஏதுவில்லையென்றும் படிக்கிறதுத்தான்நல்லதென்று ஈ-ஸ்ரீ ஐயாயவர்கள் என்னிடத்திற்சொன்னார்கள். அதினால் உனக்கு நீ சுகமாயிருந்து படிக்கிறது நல்லது. அல்லவென்றால் சான்றடைச்சேகரத்துக்குப் போனால் நல்லதென்றிருக்கிறேன். நீ வெழுதினதில் நான்சொல்லுகிறதினுலென்ன, உங்கள் மனதின்படியென்று எழுதினதினால் நான் அதிகவிலேபோடே உனக்குவேண்டிய காரியத்தைத யோசித்துப்பார்க்கிறோம். சாத்தான்குளத்துப்பிள்ளைமக்களையவர்கள் சகோதரிகள், அவர்கள் புருஷர்கள், பிள்ளையவர்கள் பெருக்கத்தைப்பார்த்து அவர்களுக்குள் அழுகையவும் மனதாயும் வெளிக்குப்பேச்சாயும் விளங்குகிறார்கள். மேலுமவர்களுடைய பெருமை சலாக்கியங்களை நாளடிக்கடி காண்கிறதினாலவர்கள் வழிகளை மிகவும் வெறுக்கிறேன். அதை ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களிடத்திலும் வெளிப்படுத்தி எங்களுக்கு ஆ ரூபாய்கொடுத்துப் பெண்ணுங் கொடுத்தாலுமந்தசம்பந்தமெங்களுக்குவேண்டாமென்றுஞ் சொன்னேன். தனக்கெளியது சம்பந்தம். பண்ணைவிளைக்குப்போனபோது அவ்விடத்துப் பிள்ளைகளைப் பார்த்தேன். ஷை ஈ-ஸ்ரீ ஞானவுயிர்ப்பிள்ளையவர்கள் குமாரத்தியும் சிறுபிராயமும் குணமுமுள்ளதுதான். கருப்பும் மக்குமாடியும். ஆகிலும் ஊசைமுதலானதுணை இலயில்லை. அதைக்குறித்து விசாரித்தபோது நமதிடத்தில் கொடுக்கப்பிரியந்தானகிலும் அதிக கைகேபோகிறதாகவும் அதிகச் செலவுசெய்கிறதாகவும் காணவில்லை. கலியாணச் செலவுக்குக்கொடுத்துத்தான் முடிக்கும்படி செய்வார்கள் போலவும் விளங்கிறது. ஆகிலும் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் மனது தாராளமுள்ளமனமும் அன்பும் உள்ளவர்கள்தான். அவர்கள் வீட்டாரிடத்தில் தாராளமில்லை. மேலும் பிள்ளையவர்கள் வியாதிப்பட்டவர்களாய்



மிகவும் வருத்தத்திலிருக்கிறார்கள். அவர்களுக்குப்பிரதானம் அந்தவீட்டுக்காரியம் மிகுந்த கிர்ப்பாக்கியம். அனுவிப்படிப்பட்ட நிலைமையுள்ள இடத்தில் எப்படியும் செய்வோமென்றாலும் அந்தச்சேகரத்தார் யாவரும் அவ்வடத்தில்த்தானிருக்கிறார்கள் ளதைக்காணும்பொழுது அவர்கள் நம்முடைய இனசனம்போலத் தோன்றுகிறதில்லை. உள்ளாகவும் அவர்கள் வேறு, நாமும் வேறு. ஒன்று நமக்கு உடந்தையாயிருக்கவேண்டும், அல்லது நமக்கு இசைந்ததாணவேண்டும், அல்லது ஊசைமுதலானவரிசைகளும் அதிகமாய்அகப்படுகிறதாயிருக்கவேண்டும். இப்படிப்பட்டதினைவினால் எனக்கு மிகுந்த கலக்கமிருக்கிறது. ஆகிலுமுன்னுடைய உறுதிப்பாடதினால் அப்படிச்செய்கிறதே யெங்களெல்லாருக்கும் பிரியமுஞ் சந்தோஷமுமாயிருக்கும். ஆனால், உறுதியாய், வெள்க்கப்படாமற், சிந்தனையைக்குருத்தருக்கொப்புவித்து யோசித்துத்தாராளமாயெழுது. அதின்படி தேவகிருபையையுன்னிட்டுச் செய்வோம். செபத்தியாயியை பாளையங்கோட்டையில் முத்தையபிள்ளை மகனுக்குக் கொடுக்கிறதானால் செங்குளத்தில் முத்தையபிள்ளை பேத்தி ஒருபெண் கல்வழுகுள்ளதாயும் அதின் தகப்பன்தாய் அன்புள்ள சார்தமுள்ளவர்களாயுமிருக்கிறதாயும் அந்தப்பெண்ணை உனக்குக்கொடுக்கப்பிரியமுள்ளவர்களாயும் இருக்கிறதாயும் உள்ளான யோசனையாய்ப் பேசினதாகவும் செய்தி. தேவசகாயம்பிள்ளை வீட்டிலும் நமதிடத்திச் சம்பந்தமாகிறதானால் ... யோசினைசெய்து போடயோசனையிருக்கிறதாகவும் செய்தி. அதுவானால் இந்தவிதலையில் நடக்கிறதாயிருக்கும். அவசரத்தில் யோசியாமற் பதப்படப்பார்க்கிறதானால் நம்மெல்லாருக்கும் மனதுக்குத் திருத்தியாயிருக்குமென்று நினைக்கத்தக்கது. எழுதவேண்டுமானால் முடியாது. முகதாவிற்பேசினால் அநேகம் யோசனைகளை விபரமாய்ப்பேசலாமானால் நீ முகதாவிற்பேசமாட்டாதவனாயிருக்கிறதினாற் சரிதத்தில் உன்யோசனைதன் யாவையும் தாராளமாய் எழுதினால் என்மனதுக்கு ஆறுதலிருக்கும்தகப்பனிடத்தில் பிள்ளை பேசாதிருந்தால் மற்றவர்களிடத்திலவனெப்படிக்காரியங்கொண்டுபோவானென்று நினைக்கத்தக்கதாயிருக்குமே. ஆனதால் கூச்சமில்லாமல் தாராளமாயெழுதி நம்பிக்கையுள்ள ஆள்வசத்திலனுப்பு. தம்பி கூடவருகிறவன் ஒருவேளை பிள்ளையவர்களுக்குச் சாமான்கள் வாங்கும்படி தாமதித்திருந்தாலவன்வசத்திலெழுது. அல்லவென்றால் மேற்சொல்லியபடியனுப்பு. எனக்குமிப்பொழுது எந்தக் காரியமும் நடக்கிறது நடக்கத்தான் வேண்டுமென்றிருக்கிறது. அதுவெல்லாந் தேவசித்தத்தின்படியாகுமென்று நிச்சயித்துச்செய்யவேண்டியதாயிருக்கிறது. இவ்விடத்தில் இப்பொழுது வியாகப்பனுக்குக்கால்விரலில் ஒரு புண்

மேஜூன் சுரம். பிள்ளைக்குக் கன்வலி. எனக்கு இடுப்பில் ஒரு வலியுண்டாயிருக்கிறது. இன்றுமியம்மாளுக்கு நல்லசுகமில்லை. அசலிலே செல்பனத்துக்கு ஆறுபடி. கருப்புக்கட்டி பதனீர் வாழைக்காய் மற்றயாவும் மிகுந்த குறைச்சலாயிருக்கிறது. வீட்டில்-வேலைக்கும் வருத்தந்தான். செபத்தாள் தான் புறச்சிலவுக்குத் தண்ணீரெடுக்கிறது. உன்தாய்க்கு மனமுஞ் சரீரமும் வேதனையடைந்திருள். மரியசவரிமுத்து அனாக்கொடி வந்தது. உன்னிடத்திலிருக்கிறகொடியடைப்பனக்கருகிறேனென்றுசொல்லுகிறதினால் அதைப்பத்திரமாய் வைத்துக்கொள்ளவும் அல்லதுவருகிற ஆள்வசம் அனுப்பிக்காயுதமும் அனுப்பவும்வேண்டியது. ௯-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுக்கு இவடத்து சுகசெய்தியறிவிக்கவும். மற்றத்தனது காரியங்களை யவர்களுக்குச்சொன்னால் வெளியாய் ஒன்றுமனதென்றும் ஒன்றுமனமில்லையென்றுஞ் சொல்லுவார்களப்படி வெளிக்குச்சொல்லப்படாது. தேவசித்தம். எப்படி யெப்படி மாறுதலுண்டாருமோ. ௸ காரியங்களையெல்லாம் விபாமாயுனக்காகவேண்டியதெல்லாம் உங்கள் தமையனுக்கும் எழுதியிருக்கிறேன். அவர் முன்னொருகாயுதத்தில் உன் இத்தப்படி உனக்குச்செய்கிறதென்றெழுதியிருக்கிறார். தம்பி தேவசகாயம் எசுதாசன் சவரிராயனிவர்களை அடிக்கடிபாராமரித்துச் செய்தியனுப்பவும். வியாகப்பபிள்ளை, ஞானப்பிரகாசம்பிள்ளை முதலானவர்கள் காரியங்களும் விசாரித்து எழுது. மற்றும் விசேஷங்களுக்கும் அடிக்கடி சுகசெய்திக்கும் எழுதவேண்டியது. பனைவடலிக்கும் எழுது. மற்றவர்கள் யாவருக்கும் நல்லபிள்ளையாய்ச் சிநேகிதமாய்ப் பேசியும்வரவேண்டியது. எல்லாக்காரியங்களிலும் படிப்பிலுஞ் சாக்கிரதையாயிருந்து வருவாய் என்று நம்புகிறேன். சுசாக்குவாத்தியாருக்கும் ஞானவடிவுக்குங் குழந்தைக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறேன். அப்படியே மற்ற யாவருக்கும்.

இப்படிக்கு

௲அ௱ருசஞூ ஜுன்-மீ ௨௨-உ சவரிராயன்.

---

[ஐயா எழுதின காகிதங்கள் ௸ தேதிக்கு முந்தினது யாதொன்றும் இப்பொழுதில்லை. மூத்த அண்ணாட்சி தங்களுக்கு வந்த காகிதங்களை எல்லாம் வெகு பத்திரமாய் வைத்திருப்பார்கள். அப்படியிருக்க ருஅ-ஞூத்துக்கு முந்தியுள்ள காகிதங்களில் ருசு-ம் ஞூத்தின் காகிதம் ஒன்றுமாத்திரந்தானிருக்கிறது. மற்றவைகளெவ்விதமாய்த்தவறிப்போய்விட்டதென்றுசொல்லமுடியவில்லை. அண்ணாட்சி மரியசவரிமுத்துப்பிள்ளையவர்களும் ஐயாவுடைய காகிதங்களை அப்படியே பத்திரமாய் வைத்திருப்பார்கள். அவர்கள் இலங்கைக்கு உபதேசியாய்ப்போனபோது இவடத்தில் யார் வீட்டிலேயோ காகிதங்கள் புஸ்தகங்கள் போட்டுவிட்டுப்போனதில் அநேகம் தவறிப்போய்



விட்டது. அண்ணாட்சி ஞா. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்கள் காகிதங்களைப்பத்திரம்பண்ணவில்லை. அவர்களுக்கு ஐயா எழுதின காகிதம் சிலது திரும்ப ஐயா வீட்டுக்கு வர நேரிட்டதினால் அல்லது சகோதரிடத்திற்கு வந்ததினால் அப்படிப்பட்டவைகள் மாத்திரமிருக்கிறது. அண்ணாட்சி எசுதாசபிள்ளையவர்களும் காகிதங்களை வைத்திருந்தார்கள். அப்படியிருந்தும் அநேகம் காகிதங்கள் தவறிப்போய்விட்டது. எனக்கு ஐயா எழுதின காகிதங்களையும் மற்றுங் காகிதங்களையும் ஒருலக்கோடாவில்வைத்து ஒட்டி நான் ௲ம் ஞூத்தவக்கத்தில் மதுரைக்குப் போகிறபோது முருகன்குறிச்சியில் அண்ணாட்சி எசுதாசபிள்ளையவர்கள் வீட்டில் வைத்துவிட்டுப்போனேன். அந்தலக்கோடா எப்படிப்போயிற்றென்று அப்புறம் தெரியாது. அந்தலக்கோடாவுக்குத் தப்பினகாகிதங்கள் இரண்டொன்றும் நான் மதுரைக்குப் போனதுமுதல் உள்ளகாகிதங்களுமிருக்கிறது. சாத்தான்குடி பெரியபிள்ளைக்கும் மரியவியாகுலத்துக்கும் ஐயா எழுதின காகிதங்களில், உக, ௸ பெரியபிள்ளைவசமிருக்கிறது. அதுகளை நான் இரவல்வாங்கி நகல் எழுதிவைத்திருக்கிறேன். அந்த உக காகிதம் தவிர மற்றக்காகிதங்களும் யாக்கோபுப்பிள்ளை முதலியவர்களுக்கு எழுதிய காகிதங்களில் சிலதும் நான் சேர்த்து வைத்திருக்கிறேன். ஆக எல்லாம் இப்போது உத்தேசம் ருசுௗ காகிதம் இருக்கிறது. அத்தான் முனிசுப்பிள்ளையவர்களுக்கு எழுதின காகிதங்கள் அநேகமுண்டு. அவர்கள் அவைகளை எறிந்துபோட்டார்கள்.

ஐயாவுக்கு காகிதத்தில் எழுதுகிறது மிகுந்த வருத்தமான வேலை. ருௗ வயதுவரையும் காகிதத்தில் எழுதினது அபூர்வம்; எல்லாம் ஓலை எழுத்துத்தான். சபையார் பேர் டாப்பு மாசக்கணக்கு, ஆறுமாசக்கணக்கு, காகிதத்தில் ஐயா எழுதவேண்டியதிருக்கும். அது சொற்ப வேலையாயிருந்தபோதிலும் மிகுந்த பிரயாசையும் நேரமும் பிடிக்கும். அந்தச் சபை டாப்புகள் இப்போதும் சிலதிருக்கிறது: மையினால் கோடுபோட்டு கோடுகளுக்கிடையில் எழுதுவார்கள். பிள்ளைகள் தூரமான இடங்களுக்குப் பிரிந்துபோக நேரிட்டதினால் காகிதத்தில் எழுதியனுப்பும்படி நேரிட்டது. ஓலையில் எழுதினால் ஓலைபோய்ச்சேரமாட்டாது. கொண்டுபோகிறவன் எறிந்துவிடலாம். காகிதத்துக்கு அதிகமரியாதையிருக்கும். வீட்டுவருத்தம், குடும்ப விசாரம், சபைவேலை, சபைத்தொல்லைகள், சபையாருக்கு, பிள்ளைகளுக்கு, பாடம் படித்துக்கொடுக்கவேண்டியது, பாடம் படித்து ஒப்புவிக்கவேண்டியது, பிரசங்கம் எழுதி ஒப்புவிக்கவேண்டியது, ஜர்னல் எழுதி ஒப்புவிக்கவேண்டியது, வியாதி, துன்பங்கள், மற்றும் கஷ்டங்கள், இரவும் பகலும் இவ்வளவென்று சொல்லமுடியாது. சிலகாகிதம் எழுத இரண்டு மூன்று நாள் இரண்டொருமணி நேரம்பிடிக்கும். தரையில் சம்மணம்போட்டுக்கொண்டு, அல்லது ஒருதாழ்ந்தநாற்காட்டியிலிருந்துகொண்டு காலைத்தரையில் ஊன்றி, முட்டில் காகிதத்தைவைத்து மெதுவாய் பொறுக்கெழுத்தாய் எழுதுவார்கள். பென் எப்போதாவது யாராவது தெரிந்தவர்கள் வந்தால் சீவிக்கொடுப்பார்கள், இராதென்றால் தாங்களும் தெரிந்தமட்டுக்கு சீவிக்கொள்வார்கள். பிள்ளைகளைக்கண்டுபேசுகிறதுபோலொத்த ஆவல் ஆசைஅன்பு அருமைதான் அவர்கள்காகிதம் எழுதிமுடிக்கச் சாத்தியப்பட்டது.

காகிதம் எழுதுகிற கஷ்டமாவது பெரிதல்ல என்கலாம். ஆனால் செ

ண்டுபோய்ச் சேர்ப்பிக்கச் செய்வதற்கும் பண்ணவேண்டிய பிரயத்தனம் அதிகம். கிழமைக்கு இரண்டு தடவை செவ்வாய்க்கிழமை விடியற்காலத்திலும் வெள்ளிக்கிழமை விடியற்காலத்திலும் ஐயருடைய தபால்காரன் ஐயருக்கு ரொட்டி வாங்கிவரவும் தபால் காகிதம் கொண்டுவரவும் பாளையங்கோட்டைக்குப் புறப்படுவான். ஐயா அவன் தயவைத் தேடிக்கொண்டு, காகிதத்தைக் கொடுத்தனுப்பவேண்டும். பாளையங்கோட்டையிலும் பிள்ளைகள் முதலியவர்கள் அப்படியே தபால்காரனை வசப்படுத்திக்கொண்டு காகிதங்களைக் கொடுக்கவும் பெற்றுக்கொள்ளவும் வேண்டியது. பனைவிளை, சாண்டைக்குப்போகவேண்டிய காகிதங்களை அச்சுக்கூடம் ரயிந்தர் குருராஜாவசம் ஒப்பிக்க அவர்தமது பள்ளி அடைக்கலமிருந்து வருகிற தபால்காரன்வசம் அனுப்புவிக்கவேண்டியது. ஷெப்பியோன் ரயிட்டர் குருராஜாதான் அந்தக்காலத்தில் ஜில்லா போஸ்ட் மாஸ்டர் என்றுசொல்லலாம். ஐயன்மார்கள் சுவிசேஷபுரத் தலத்தில் இல்லாத காலங்களில் காகிதங்கள் போக்கு வரத்து அதிகக்கஷ்டம். ஆபிஸ் ஐயரவர்கள் காலத்தில் சாத்தான்குளத்து மார்க்கமாய்க் காகிதங்கள்போகிறதுண்டு.

ஐயாவுடைய காகிதங்களை இந்தப்புஸ்தகத்தில் தேதிக்கிரமப்படி இடைக்கிடை அச்சிடுகிறேன். J. D. S. 19-4-98]

---

௰௨-௳யும் ௰௩-௳யும் உரோமர்நிருபவியாக்கியானம் எழுதப்படிவைச் சேர்த்தேன்.

௰௪-௳ பாடத்துக்குப்போனேன். ஆறு மாசக் கணக்குக்கொடுக்கும்படி கனம் இஸ்பிராற்றவர்கள் உத்தரவினால் இருந்து இரவில் ஆராதனை வாத்தியாருங்கூடத்தான்.

௰௭-௳ ஆறுமாச கணக்குமுடித்து சம்பளம் வாங்கிவந்தேன். முன்வந்த வாத்தி செபம். மரியசவரிமுத்துக்குச்சாண்டைச்சேகரத்துக்குப்போகக்கனம் கெநேற்றயரவர்களிடத்தில் கேட்டதற்குச்சந்தோஷமாய் உத்தரவுகொடுத்ததாகச் சொன்னான். அந்தப்படி காயிதமெழுதினேன் பனைவிளையாருக்கு.

௰௮-௳ ராப்போசனம். ஞானஞ்சமுசாரம், வாத்தி, வாத்திச்சி, மூக்கந்தன் குருபாதம், அமிர்தநாயகம், பரமாயி. ஆகச்சனம்-௭-பேர் போனோம். சாதிரம்வந்துசெபம்.

௰௯-௳ விசாரணை வாத்தியார் வந்து காலைச்செபம் பின்பு பள்ளிக்கூடச் சோதனையும் செய்தார்.

௨௰-௳ மரியசவரிமுத்து ஷெ தன் ஐயரிடத்தில் நற்சாட்சிக் காயிதமும் கனம் போன்புருக்கயருக்கு காயிதமும் வாங்கிச் சாமான்களுமெடுத்துவந்தான். வாத்தியார் அமத்தலன்னைக்குடிக்குப்போனார். ௨௧-௳ காலைச் செபத்துக்குப்பின்வந்தார். பின்பு விறகு சுமக்க ஆள்கூட்டிப் போயெடுத்து வந்தேன்.



௨௨-௳ மரியசவரிமுத்து பனைவிளையாருக்குப்போய்ச் சாண்டைக்குப்போகும்படியாய் சாயந்திரம் போய்விட்டான்.

௨௩-௳ பாடத்துக்குப்போனேன். கனம் ஐயர் துரை இல்லை. உரோ. வியாக்கியானம் எழுதிவந்தோம். இரவிற் செபம். பனைவிளை ஐயர் கடிதம்வந்தது. ௨௪-௳ வாத்தி பாடத்துக்குப்போனதினால் பள்ளிப்பிள்ளைகளைக் கூட்டிவந்து படித்துக்கொண்ட பாடங்களுங்கேட்டுமத்தியானத்துக்குமேல் அனுப்பினேன். வாத்திச்சி பிள்ளைகளைக்கூப்பிட்டுப் படித்துக்கொடுக்கவில்லை. ௨௫-௳ ஓய்வுநாள் காலைச்செபத்துக்குமுன் பிள்ளைகளை கூப்பிடவுமில்லை, செபத்துக்கு வாத்தி மாத்திரம் வந்தது. செபம் முடிந்தபின் ஷெ வாத்திக்குக் கண்டிப்பாய் புத்தி சொன்னேன். மத்தியான ஆராதனைக்குப் பிள்ளையவர்கள் வந்தார்கள். இரவில் ஷெ வாத்தி வாத்திச்சி வரவில்லை செபத்துக்கு. ௨௬-௳ விடியக்காலம் வாத்தி டோச்சபுரத்துக்கும் போனதினால் பிள்ளைகள் காலைப்படிப்பு. மதியத்துக்குமேல் படிப்பில்லை. இரவில் ஆறுமணிக்கு வாத்தியைக்கண்டது.

௨௭-௳ ஏசுதாசன் ஞானமரியானிருவருக்குங்காயிதமெழுதிவேதக்கண்ணுவசமனுப்பினேன். அதற்குபதில் ஞானமரியான் ௨௧-௳ எழுதினது ௩௰-௳ தபாலில் வந்தது. தேவசகாயத்துக்கு சுரமென்று மற்றவர்கள்சேமமென்றும், சங்கம் ௰௧-௳ என்றும்வந்தது.

௩௰-௳ பாடத்துக்குப்போய்வந்தேன். அவட்டத்தில் உரோமர்வியாக்கியானம் எழுதத்தான். ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்களுக்குக்காயிதம் வந்ததாகவும் அதில் ஸ்ரீ ஞானவுயிர்ப்பிள்ளையவர்கள் ௨௩-௳ வெள்ளிக்கிழமை மரித்துப்போனதாகவும் சொல்லித்தாங்கள் பண்ணைவிளைக்குப் போகவேண்டுமென்றுஞ்சொன்னார்கள்.

---

## ௲௮௱௫௪௵ ஜூலாய்மீ சவரிராயன் நிதசரிரிப்போரட்டு. சமாரியா.

௧-௳ வாத்தி பாடத்துக்குப்போயிருந்ததின் பின்பு வாத்திச்சி மத்தியானவரையும் படித்துக்கொடுத்தாள். பின்பு அடுத்தவீட்டு தருமக்கண்ணு பெண்சாதியோடே சண்டைபண்ணிக் கொண்டிருந்தாள். பின்பு வாத்தியாரிடத்திலவள் சொல்லி அவருஞ் சண்டை பிடித்தார். அதின்பேரில் ஷெயான் வந்து என்னிடத்திலந்தக்குத்தம் விசாரிக்கவேண்டும் என்றுனவன் எங்களை

பேசினதுக்கு நாங்கள் கேட்டிருக்கிறதுபோல நீயும் பொறுமையாயிருவென்று புத்திசொன்னேன். இரவில் சபையார்களிடத்திலுஞ் சொன்னான். அமூர்தநாயக முக்கந்தன், நான், மற்றவர்களும் புத்திசொல்லியும்கேளாமற் குத்தங்கேளாவிட்டால் வாழை பயிருகிறதில்லைப் பிள்ளையவர்களிடத்தில் போவேனென்றான்.

௨-ௗ ஓய்வுநாள். அன்று வாத்திச்சி சுருசுருப்பாய்ப் பெண்பிள்ளைகளைக் கூட்டிவந்து சிலையும் கொடுத்தாள்.

௩-ௗ ஷை தருமக்கண்ணு பிள்ளையவர்களிடத்திற் போனதாகவும் அவர்கள் பண்ணைவிளைக்குப் போனதாகவும் சொன்னான்.

௪-ௗ சூசைமரியான், ஏசுதாசன் இரண்டுபேருக்கும் காயிதமெழுதி வேதக்கண்ணு வசம் அனுப்பினேன். ௫-ௗ பின்பு மதியத்தில் சிலருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கப்போனேன். நாளைக்கு வாருங்கள் நெல்குத்தப் போகிறோமென்றுசொல்லிவிட்டார்கள். ௬-ௗ பாடஞ்சொல்லிக்கொடுத்தேன் சிலருக்கு.

௭-ௗ பாடத்துக்குப் போனேன். அவடத்தில் கனம் திரையவர்கள் வியாக்கியானம். இரவில் ஆராதனை. முடிந்தபின் இங்கிலீஸ் பள்ளிக்கூடத்து ஞானமுத்து வாத்தியார் பெண்சாதி இறந்துபோனாள். பின்பு ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்கள் மனைவி அன்னம்மை ௨-வது ஆண்பிள்ளைப் பெற்றாள். இரவு தங்கி ௮-ௗ காலையில் வந்து செபம். பின்பு கரண்டைக்குப்போன மரியசவரிமுத்துப்பிள்ளை வந்தான். அவனைப் பாவூர்ச்சேகரத்தில் உபதேசியாக நியமித்திருக்கிறதாகச் சொன்னான். அவர் மச்சினப்பிள்ளையும் வந்தார். சாயுங்காலம் இடையங்குடிக்குப்போய் வந்தார்கள், சமுசாரமும் மச்சினனும் கூடப்போன சிவராமபிள்ளையும் ௯-ௗ உபரிக்குப்போய்க் கயிலாசபுரத்துக்கும்போயவர் மச்சினன் சமுசாரத்தையும் கூட்டிவந்து இரவு செபம்பண்ணின பின்பு புறப்பட்டுச் சுவிசேஷபுரத்துக்குப்போனோம். ஷை மரியசவரிமுத்து சமுசாரங்குழந்தை மச்சினனவர் சமுசாரமுங்கூட. சுவிசேஷபுரத்து பிள்ளை குழந்தை பிறந்ததை விசாரித்துவர ஷையார் தாயும் வந்தாள்.

௰-ௗ சுவிசேஷபுரத்திலிருந்து பாளையங்கோட்டைக்குப்போய்ச் சேர்ந்தோம். மதுரேந்திரம் ஐயருமவடத்தில் வந்தார் சங்கத்துக்கு. ௰௧-ௗ அவடத்திலிருந்தோம். ௰௨-ௗ சங்கங்கூடிற்று. ௰௩-ௗ விடிந்து ௭-மணிக்குமேல் கோவிலில் ஐயன்மார் உபதேசிமார் எல்லாருங்கூடிச் செபம்பண்ணி பின்பு ரொக்லாண்டு அய்யர் முதலானவர்கள் சேகரத்துக்கு ஒரு உபதேசி சபையார் சம்பளம்வாங்கி மாசம் ஒருதர் வடசேர்மைச் சேகரத்துக்குப்போய்



த்தேசாந்திரிகளாய்ப்போதித்துவரவேண்டுமென்று தீர்மானித்துப்பேசிமுடிவுசெய்து செபம்பண்ணியனுப்பினார்கள்.

௰௧-ௗ முதல் ௰௩-ௗ இரவுவரை மூன்றுராத்திரியும் தஞ்சாவூர் வேதநாயக சாஸ்திரியார் மக்கள்வந்திருந்து கிறிஸ்துநாதர்பேரிற் பாடிச் சதிர்வைக்கிறதாகச்செய்தார்கள்.

௰௪-ௗ விடியக்காலத்தில் மரியசவரிமுத்துப்பிள்ளையும் சமுசாரங்குழந்தையுடனே புறப்பட்டு பனைவடலிக்குப்போனார். மதுரேந்திர ஐயரதுவரையும் யாதொருகாரியமு நமது வீட்டுக்காரியங்களை விசாரிக்கவுமில்லை சாயந்திரம் பண்ணைவிளைக்குப் போய்வரவேண்டுமென்றிருந்தார். நானும் சூசைமரியானும் புறப்பட்டுச் சுவிசேஷபுரத்துக்குவந்துசேர்ந்தோம். இரவு அவடத்திலிருந்து ௰௫-ௗ காலையில்வந்துசெபம்.

௰௬-ௗ ராப்போசனத்துக்குப் போய்வந்தேன். யோவானய்யரவர்கள் ராப்போசனம்பருமாரினது.

௰௭-ௗ காலையிற் ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்து பாடங்கேட்டுச் செபம். பின்பு வாத்தியானுக்குந் தருமக்கண்ணுக்கும் வாழைப்பயிர் விளை விபகாரம் பேசிகட்டியாய் ஷையான் வழவுபகுந்துகொடுத்துப்போய்விட்டார்களருக்கு.

௰௮-ௗ பாடத்துக்குப்போனேன். ஆராதனையில்லை. சாயந்திரம் வீட்டுக்குவந்தேன். ௰௯-ௗ வாத்திபாடம்.

௨௰-ௗ பள்ளிப்பிள்ளைகள் சருவசோதனைக்குப்போச்சுது.

௨௪-ௗ வியாகப்பபிள்ளை முதலானவர்களை கூட்டிவந்தான் சூசைமரியான் சாயந்திரம். ௨௫-ௗ சாயுங்காலம் ஷையானைவரச்சொல்லி ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்களனுப்பினார்கள். உடனேபோய்விட்டார்கள். சூசைமரியானுங்கூடத்தானே. தஞ்சாவூர் வேதநாயக சாஸ்திரியார் மக்கள்வந்தார்களென்றதினால் இரவுசெபமுடித்து நானும் வாத்தியும் தருமக்கண்ணுங் கருத்தக்கண்ணும்போனோம் ஷையார்கள் பாட்டுக்கேட்க. அவர்கள் பாடவில்லை. விடியக்காலம்வந்துசெபம். ௨௭-ௗ ஷையார்களிடையங்குடிக்குப்போகுகிற வழியாய் இவடத்துக்குவந்துபோனார்கள்.

௨௮-ௗ பாடத்துக்குப்போனேன். ௨௯-ௗ இடையங்குடிக்குப்போய் ஞானமுத்து உப. ௯ காலே அரைக்கால் தரவேண்டியதைக்கேட்டுவந்தேன்

௩௰-ௗ சாயுங்காலம் ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்தார்கள். உடனே மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுங் கூடப்புறப்பட்டுப்போனார்கள் பாளையங்கோட்டைக்குப்பயணமாக.

௩௰௧-ௗ ரிப்போர்ட்டு எழுதிமுடித்தேன்.

ஆகஸ்டுமீ ௧-வ மதுரோந்திரய்யருக்கும் மரியச
மெழுதினேன். சுவிசேஷபுரத்திலிருந்து வந்தசெய்தி பவரிமுத்துக்குங் காயுத
சைமரியான்பிள்ளை மகன் வியாகப்பன் முதல்நாள் இ ல் வடக்குன்குளம் கு
மாறன் பேதியெடுத்து இன்றுஆள்வந்ததென்று. உ- ங்கள்க்கிழமை மரண
சுவிசேஷபுரத்துப்பிள்ளை யிடத்திற் போய்க்கேட்டுவ டை நாளுஞ்சமுசாரமும்
௩-வ பாளையங்கோட்டை மாப்பிள்ளை ஆனைக்கு ந்தோம்.
கு வாங்கியனுப்பினதாகவும் ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் வ ரம்பான்கெல் ௩௰-க்
போகிறதாகவும், என்னைநம்பிகுறிச்சிவந்து சேரச்சொ டக்குன்குளத்துக்குப்
கள். அந்தப்படி சாயந்திரம்பிறப்பட்டு நம்பிகுறிச்சிக்கு வலி எழுதியனுப்பினார்
ரப்புரத்திற் போய்த்தங்கி ௪-வ காலையில் வடக்குன்கு ப்போய்கூடவே மது
டிகேட்டுக்கொண்டு சாயந்திரம் புறப்பட்டு சமுகரெங் ளத்திற்போய் தட்
௫-வ காலைசெபத்துக்குப்பின் சமாரியாவுக்குவந்துசேர் புரத்தில்வந்து தங்கி
௭-வ வாத்தியார் பள்ளிப்பிள்ளைகளைக்கொண்டு பார்த்தேன்.
சோதனைக்குச் சுவிசேஷபுரத்துக்குப்போய் சும்மாவந் விட்டுவேலை. ௮-வ
சாரணைப்பிள்ளையவர்கள் வந்தார்கள். அவர்கள் குமா கது. ௯-வ ௱-ஸ்ரீ வி
முருகன்குறிச்சியிலிருந்து கொழும்புக்குப் போய்விட்ட ரன் ஞானப்பிரகாசம்
தேடவும் ஆளனுப்பினதாகவும் சொன்னார்கள். தாகவும், அவனைத்
௰-வ பள்ளிக்கூடஞ்சோதிக்கப்போனதற்கு வா
யிருந்துகொண்டாள். ஷை வாத்திபிள்ளைகளிடத்திற் கே த்திச்சி கால் நீட்டி
டு பள்ளிக்கூடஞ் சோதிக்கவாவென்று சொன்னதன்றி ரவிகேட்டுக்கொண்
சொதிக்க இடங்கொடுக்கவா இடங்கொடுக்கவுமில்லை. , வரச்சொல்லவா
ப்போய் விசாரணை வாத்தியாரிடத்தில் ஷை வாத்தி வாத் ௩-வ பாடத்துக்கு
யறிவித்தேன். பின்பு வீட்டுக்குவந்தேன். ௰௨-வ வா திச்சி செய்திகளை
போனதினால், குசைமரிய ஞானப்பிரகாசத்தைக்கொண் த்தி பாடத்துக்குப்
ளுக்கு பழயபாடங்கேட்டு விளவிவிடச்சொன்னேன். டு பள்ளிப்பிள்ளைக

௰௩-வ ஓய்வுநாள்.

௰௪-வ காலைச்செபத்துக்குப்பின் கயிலாசபுரத் துட்
குப்போய், ஷையார் மகள் சின்ன சாமு அல்லு வியாகப் பதேசியார் வீட்டுக்
கைக்கூட்டிவந்தேன். மை என்ற பிள்ளை

௰௫-வ பள்ளிப்பிள்ளைக ளைச்சோதினைக்கு கூட்டிப்போ
ரும் வாத்திச்சியும். ௰௬ ஷை இரண்டுபேரும் போனார் வாத்தியா
போய்விட்டார்கள். ன்னான் பள்ளிப்பிள்ளைகளைப்படிப்பித் ாட்சபுரத்துக்குப்
தேன்.



௰௭-வ உத்தரவுப்படிக்கு மாசாந்திரக்கூட்டத்துக்குப்போனேன். மதுரோந்திர ஐயருக்கு காயுதம். வாத்தியார்வரவில்லை.

௰௮-வும் சுவிசேஷபுரம் சம்பளம் அன்றுதான் குசைமரியான் கல்விசாலைக்குப்போனான். ௰௯-வ உதையத்தில்வந்து செபம்.

௨௰-வ வாத்திச்சிவந்தாள். பின்பு விசாரணைப்பிள்ளையவர்கள் பாடங்கேட்டு, ஆராதனைசெய்தார்கள். சாயுங்காலம் நந்தன்குளத்துக்குப்போனார்கள். ௨௧-வ பள்ளிக்கூடஞ்சோதித்து ௨௨-வ சிலருக்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்தேன். ௨௩-வ பள்ளிப்பிள்ளைகள் சோதிப்புக்கு சுவிசேஷபுரத்துக்கு வாத்தி கூட்டிப்போனது. ௯மணிக்கு ஞானஸ்தானக்காரர் வரும்படி உத்தரவுவந்தது. ௨௪-வ ராப்போசனம்சேரவேண்டியவர்களும் வரும்படி. மதுரோந்திர ஐயருக்கு ஒரு காயுதமெழுதினேன்.

௨௪-வ ராப்போசனம் சேரத்தக்கவர்களை கூட்டி சுவிசேஷபுரத்துக்குப்போனேன். கனம் இஸ்பிராற்றய்யரவர்கள் சோதித்துச் சேர்த்தவர்கள் ௯-பேர். குசைமரியான் காயுதமும்வந்தது. பின்பு வீட்டுக்குவந்தோம்.

௨௫-வ பாடமில்லை.

௨௬-வ வாத்தி பாடத்துக்குப்போனவர் வரவில்லை. ௨௭-வ காலையில் வந்துசேர்ந்து பின்பு ராப்போசனத்துக்குப்போனோமவடத்தில் வடக்குன்குளம் கொச்சி சின்னய்யா மகள் மூத்தவளும் பின்னுஞ் சிலருஞ் செத்ததாகவும் பேதி வாந்தி நடக்கிறதாகவும் கேட்டோம். பின்பு வீட்டுக்குவந்தோம்.

௨௮-வ பள்ளிக்கூடஞ் சோதிக்கப்போனேன். பிள்ளைகளை வழலில் வேலைசெய்வித்துக்கொண்டிருந்தார். மத்தியானம் பனைக்காய் ஓலைவெட்டி. ஷை பிள்ளைகள் கஉ.

௨௯-வ காலையில் மதுரோந்திர ஐயர், மரியசவரிமுத்து, ஏசுதாசன் காயுதம்வந்தது. பின்பு பள்ளிக்கூடஞ்சோதிக்கப் போனேன். வாத்தியில்லைச் சோதிக்கிறதுக்கும் வாத்திச்சி நித்திரை. பிள்ளைகள் ௰௨. இருந்தது வந்துவிட்டேன். பின்பு பாடஞ்சொல்லிக்கொடுத்துவந்தேன். வடக்குன்குளம் மரிய இன்னாசிமுத்து காயுதம்வந்ததில், சின்னய்யா கொச்சிப்பிள்ளை மகள் மூத்தவள் மரியவியாகுலம் பரலோகப்பிராத்தியானாளென்றும், பின்னுஞ்சிலர் மரித்தது, இன்னமும் ஷை விஷவியாதி நடக்கிறதாகவும் கண்டிருந்தது. உடனே மரியசவரிமுத்து, குசை ஞானப்பிரகாசம், ஐயருக்கும் காயுதமெழுதினேன்.

௩௰-வ காலை செபத்துப்பின் சுவிசேஷபுரத்துக்குப்போய் ௱-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்களிடத்தில் ஷை தட்டிக்குப் போகிறதெப்பவென்று

கேட்டேன். சிலநாள்ப்பொறுத்துப்போகவேண்டுமென்றார்கள். ஷை காயுதங்களையும் அனுப்பும்படிகொடுத்து வீட்டுக்குவந்தேன். பின்பு சிலருக்குப்பாடஞ்சொல்லிக்கொடுத்தேன்.

௩௰-௳ பள்ளிக்கூடஞ்சோதிக்கலாமென்றிருந்தேன். இடையங்குடிக்குப்போய்வரப்போறேனென்று போய்விட்டார் வாத்தியார். ஷை ஊர் தானியேல்பிள்ளை மகனுக்குவந்த காயுதத்தைக்கொடுத்துவிட்டேன். பின்பு நிதசரி ரிப்போறட்டு பேர் டாப்புக்கோடுபோட்டெழுதி, வடக்குன்குளம் மரிய இன்னாசிமுத்து எனக்கெழுதினதுக்கு பதில் காயுதமுமெழுதி வியாய்க்கானமும் வாசித்தேன்.

செப்தெம்பர் ௴ ௧-௳ வழக்கப்படி பாடத்துக்குப்போய் சம்பளம். ஷை மரிய இன்னாசிமுத்துக்கு ஷை காயுதத்தைக் கொடுத்தனுப்ப ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்களிடத்திற்கொடுத்து வீட்டுக்குவந்தேன். குசைமரியானுடைய காயுதம்வந்தது. இரவு செபம்.

௨-௳ முத்துச்குமாருசுவாமியாபிள்ளையவர்கள் கிராமப்பணம் வாங்க வந்தார்களவர்களிடத்தில் மிசியோனுற் பணம் வாங்கிக்கட்டினவர்கள் வீடு பிரிந்துகிடக்கிறதையும் அது களவாய்ப்போகிறதையும் அறிவித்தேன்.

௩-௳ ஓய்வுநாளாராதனை செபங்களுமுடித்தேன்.

௪-௳ விடியக்காலமே வாத்தியார்போய்விட்டார் எங்கேயோ. பின்பு செபம். மனைவியினை தங்கச்சி பலகாரங் கொண்டுவந்தாள். பனைவடலி மேட்டீரண்டிலுமிருந்து காயுதம்வந்தது. ௫-௳ பதில் எழுதினேன். ௬-௳ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை காயுதம்வந்தது. பின்பு அவர்களுக்கும் குசைமரியாபிள்ளைக்குங் காயுதமெழுதி ஷை காயுதங்களெல்லாம் பாளையங்கோட்டை மதுரநாயகம்பிள்ளைவசமனுப்பினேன் பின்பு ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளை ஸ்ரீவைகுண்டத்தான் அனுப்பின காயுதம் எனக்கனுப்பினார்களதற்கு நானும் பதில் எழுதிவைத்தேன்.

௮-௳ பாடத்துக்குப்போனேன். மரியசவரிமுத்துப்பிள்ளை காயுதம்வந்தது. அதோடே செம்புலிங்கம் ரூ இ-யும் வந்தது, முநகன் குறிச்சியிலிருந்து: பிள்ளையவர்கள்குமாரன் வியாகப்பபிள்ளைக்கு சுகமில்லையென்று எழுதினான்.

௰௧-௳ மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது, உடனே பதில் எழுதினேன். எனக்குத்தலைவிரியாப்புண்டாயிருந்ததினால் பாடஞ்சொல்லப்போகவில்லை.



௰௨-௳ வியாகப்பபிள்ளையும் சமுசாரத்துடனே சுவிசேஷபுரத்துக்குச் சுகமில்லாமல்வந்ததுகேட்டு ௰௩-௳ போனேன். அதற்குமுன் இடையங்குடி தங்கச்சி வீட்டுக்குப்போய்வந்தேன். சாயுங்காலம் ஏசுதாசன்கூட ஒரு ஆள் செபத்தியாயி பாளையங்கோட்டைப் பொன்னம்மையுங்கூட வந்தார்களிவடத்துக்கு; மதுரேந்திர ஐயர் ரூ ௬ கொடுத்தனுப்பினார். ௰௩ ௳ ஷையாருக்கு மீன் கருப்புகட்டி கல்லக்காரமும் வாங்கி ௰௪-௳ விடியக்காலம் ஏசுதாசனும் ஷை கூடவந்தவனும்கூடக்கொண்டுபோனார்களவர்களை நன்னிகுளத்துக்கு வடக்கேகொண்டுவிட்டுத் திரும்பிச் சுவிசேஷபுரத்துச்குவந்தேனவடத்தில் பாளையங்கோட்டையில் கனம் இஸ்பிராற்று ஐயரவர்கள் மரித்த சமாசாரங்கேட்டேன். ௨௰-௳ அமிர்தநாயக முக்கந்தனு முத்துத்தேவரும் சுவிசேஷபுரத்துக்குப்போய் ஷை முக்கந்தன்விளையிற் களவாய் ஒருவன் பனையேறுகிறதைக்கண்டுபிடித்து ஷையானைக் கூட்டிவரும்போது சின்னப் பண்டாரம் மக்கள்வந்துமுக்கந்தனையடித்துப்போட்டான்கள். அதற்கு பிள்ளையவர்களிடத்துக்குப்போய்வந்தது.

௨௧-௳ வியாழக்கிழமையன்று பனைவடலி ஐயருக்குக் காயுதமெழுதினேன். ௨௨-௳ குசைமரியான் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் எழுதி ௨௨௳ சுவிசேஷபுரத்துக்குப்போய்த் தபாலிற்போட்டுவந்தேன் வீட்டுக்கு. ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் பாக்கியத்துக்குச் செல்லவேண்டிய ரூ ௩௰-ந் தந்து கொண்டுவந்தேன். ௨௩-௳ ஷை ரூ ௨இ-யனுப்பினார்கள். ௨௫-௳ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்து ஈ-ஸ்ரீ கனந்துரையவர்கள்வந்திருக்கிறார்கள் எல்லாரும்போய் கண்டுகொள்ளப் போ[வோ]மென்றாகள். இவடத்தில் நானும் அமிர்தநாயகமும்போனோம். கூடபங்களாவிற்படித்து ஓடிவந்த பிள்ளையையும் பிடித்துக் கொண்டுபோனார்கள். ஷை கனம் துரையைக்கண்டுவந்தோம். என்சமுசாரம் வியாகப்பபிள்ளையைப் பார்க்கவந்தாள். இளயவனுமப்போது வந்திருந்தான். அருளம்மாளையுமிவடத்துக்குக்கூட்டிவந்தோம். மதுரேந்திர ஐயர் குசைமரியானிருவர் காயுதமும்வந்தது. ௨௭-௳ ஞானப்பிரகாசம்பிள்ளைவந்துபோய்விட்டான். இரவில் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்து பாடங்கேட்டுச் செபம். ௨௮-௳ காலையிற்போய்விட்டார்கள்.

௨௯-௳ சம்பளத்துக்கு வாத்திமார்களும் உபதேசிமாரும்போய், இரவில் ஆராதனையில்லை. வி. சத்தியநாத உபதேசி பிரசங்கம். கனம் இஸ்பிராற்று துரையவர்கள் செபம்.

௩௰-௳ ஷை விசாரணை சத்தியநாத உபதேசியாரடவுக்குத்தரவேண்டிய ரூ ஆறேகாலே அரைக்காலும் தந்தார், வாங்கி வீட்டுக்குவந்தேன். வாத்தி

செபம் காலையில். சாயந்திரம் ஷெ யடவுக்கொடியைவந்து வாங்கிப்போனார். இரவிற் செபத்துக்கு வாத்தி வாத்திச்சிவரவில்லை. நானும் கோவிங் கூட்டியும் கைம்பெண் உ. குழ-உ.

அக்டோபர்மீ ௧-௳ காலைச்செபம்பண்ணி, ராப்போசனத்துக்குவரத்தக்கவர்களைக்கூட்டிப்போனேன். சுவிசேஷபுரத்துக்குப்போய்வந்தேன்.

௩-௳ பனைவடலிக்கும் மேட்ரேக்கும் கல்விச்சாலைக்கும் சிமிரேரிப் பள்ளிக்கூடத்துக்கும் ஆ[illegible]று காயுதமெழுதினேன்.

௪-௳ ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுக்கு ஒரு காயுதமெழுதினேன். ஆக ௫-காயுதமஞ்சம் தபாலிற்போம்படிக்குச் சுவிசேஷபுரத்துக்கு அனுப்பினேன். ஜெமத்துக்காரியும் செபத்தியாயியும்வந்து இன்னாசியம்மாளை பார்த்துப்போனார்களுடனே.

௫-௳ வாத்தி அமத்தவன்னாக்குடிக்குப்போய் ௬-௳ வந்தது. நான் பாடத்துக்குப்போனேன். கனம் துரையவர்கள் திரிசிக்கூட்டத்துக்குப் போய்வந்திருந்தார்கள். பாடமில்லை. உடனேவந்துவிட்டேன்.

௭-௳ ஞானசமரியான் காயுதம்வந்தது. பின்பு செம்புலிங்கம்வசம் ஞானதாசன் மரியசவரிமுத்துப்பிள்ளை இருவர் காயுதமும்வந்தது. ௯-௳ மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது. ஞானசமரியான் கனம் சார்சென்றய்யாவர்கள், கல்விச்சாலைக்காரருக்கு எழுதிய நிருபத்தின்நகல் எழுதி அனுப்பினான். இன்னாசியம்மாளுக்கு பேறுகாலவருத்தப்பட்டதினாற் செபம்பண்ணிகர்த்தர் காப்பாற்றுவாரென்று நம்பியிருந்தோம்.

௰-௳ பள்ளிப்பிள்ளைகள் பாடத்துக்குப்போய்வந்தது.

௰௧-௳யும் ஷெ இன்னாசியம்மாளுக்கு வருத்தந்தான். ௰௨-௳ காலையிற் சுவாமியடியாரும் செபத்தியாயியும்வந்தார்கள். சாயுங்காலம் ௬-மணிக்கு தமிழ் ஆநய-ரு புரட்டாசிமீ உ௮-௳ வியாழக்கிழமை பெண்குழந்தை பெற்றாள்.

௰௩-௳ காலைசெபம்பண்ணி சுவிசேஷபுரத்துக்குப் பாடத்துக்குப் போனேன். இரவு ஆராதனைக்கு இருந்தேன். ௰௪-௳ காலையில்வந்து செபம் பண்ணினேன். வாத்தியார் பாடத்துக்கு; படிப்பில்லை. மத்தியானம் கயிலாசபுரத்துபதேசியார் தேவசகாயம்பிள்ளை வந்து சாப்பிட்டு பின்பு போனார். ௰௫-௳ காலையில் இடையங்குடித் தங்கச்சி அன்பாயி பிள்ளை பிறந்ததைப் பார்த்துப்போகவந்தாள். சாயுங்காலம்போனாள். ௰௬-௳ சுவிசேஷபுரத்திலிருந்து ஆள்வந்ததினால் ஷெ சுவாமியடியாருஞ் செபத்தியாயியும் போனார்கள். ௰௭-௳ முனிசப்பிள்ளை காயுதம்வந்தது.



௰அ-௳ மதுரேந்திர ஐயர் காயுதம் ஒன்று வந்தது. ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை விசாரணைப்பிள்ளையவர்கள் எழுதினது: சற்குணவாத்தியாரிடத்தில் இட்டேருனி சுப்பிரமணியாசாரி சொன்னது, விசையநகரத்திலிருந்து ஒரு தச்சன் பனைவடலி ஊருக்குப்போனதாகவும், அவடத்தில் ஒரு ஐயர் பெண்சாதி குழந்தைகளுள்ளவனாம், மரித்துப்போனான், அடக்கம்பண்ணும்போது நான் கூடநின்றேன் என்றுஞ்சொன்னதாகவும், சொன்னதென்று சற்குணவாத்தியாரும் லயிட்டரும் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டில் ௰எ-௳ இரவில்சொல்லக் கேட்டுப்பிள்ளைகளும் மற்றவர்களுந் துக்கப்பட்டதாகவும் எழுதினார்கள். விசேஷமாய்ச்செபத்தியாயி அழுதழுதுக்கப்பட்டதும் மிகுதியென்றுவந்தவர்களெனக்குச்சொன்னார்கள். ஷெ ஐயர் ௰௫-௳ எழுதின காயுதம் ௰அ-௳ காலையில் வந்ததை வாசித்துப்பார்த்தபின், எல்லாருஞ் சுகமாயிருக்கிறோமென்றெழுதியிருக்கிறதைக்கண்டு, ஆறுதலையாயிருக்கிறார்களென்றுஞ் செய்தி வந்தது. சுவாமியடியாருந்திரும்பவந்தான், கூடத்தன்பேரனையும் பாளையங்கோட்டைப் பொன்னம்மையையுங்கூடக்கொண்டு. ௰௯-௳ காலையில் விசாரணை வாத்தியார்வந்து பள்ளிக்கூடச்சோதனை.

௨௰-௳ சுவிசேஷபுரத்துக்கு பாடத்துக்குப்போனேன். பாடத்து வேளையாகிய ௰௨-மணி நேரத்தில் கட்டிடு உத்தரவு கனம் திண்பிரர்ற்து துரை பாளையங்கோட்டைக்குக் கல்விசாலைக்கும், கனம் ஆப்பிசய்யர் சுவிசேஷபுரத்துக்கு டோனூருக்கும், தோமாசய்யர் சாத்தான்குளத்தை கூடவிசாரிக்கவும், பண்ணிருளத்தய்யர் நல்லூருக்கும், என்றும் பின்னும் பலபேருக்கு மாற்றுதலுத்தரவுவந்ததினாலுடனே போகச்சொல்லிவிட்டார்கள். வீட்டுக்குவந்தேன். ஞானசமரியான் காயுதங்களுக்கும் பதில் எழுதி தபாலிற்போட்டேன். ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை முனிசப்பிள்ளைக்கும் ஒரு கடிதங்கூட அனுப்பினேன்.

௨௧-௳ வாத்தி வாசிப்புக்குப்போனது. ௨௨-௳ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் சாயுங்காலம்வந்து மாலைசெபம்பண்ணிப்போனார்கள் பாட்டுமுத்[illegible].

௨௩-௳ மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது [illegible]சிக்கு. அருள்தாசங்க முக்கந்தன் அப்பியல்செய்யகோட்டுக்குப்போனான். நான் மதுரேந்திர ஐயர் மரிய சவரிமுத்துப்பிள்ளை, ஞானசமரியான் மூன்று பேருக்குங் காயுதம் எழுதினேன்.

௨௪-௳ பெண்பிள்ளைப்பிள்ளைகளை வாத்தி சுவிசேஷபுரத்துக்கு வஸ்திரங்கொடுக்கும்படி கூட்டிப்போனான். படிப்பில்லை, வாத்தியிருந்தாள்.

௨௬-௳ சம்பளம் எல்லாருக்குங் கொடுத்தார்கள். கனம் ஆபிசய்யரும் வந்திருந்தார். உடனே வீட்டுக்குவந்துவிட்டோம். கனம் ஐயரிடத்திற் கணக்கு ஒப்புவித்துத் துணி சாமான்கள் ஒதுக்கிக்கொண்டு இருந்தார்கள். கனம் முத்துசுவாமி ஐயர் கேட்டுக்கொண்டபடிக்கு ஷெயார் கொழுந்தி அன்னம்மை கொழும்பம்மாள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கனுப்பிவிட்டார்கள். ௨௭-௳ தருமமாகப்பணஞ்சேகரித்து கண்தெரியாச்செபத்தாயிக்கு ஓலைவாங்கிக்கொடுக்கும்படிக்கு சந்தைக்குப்போய் வாத்தியாருங்கூட இருந்து முக்காலே மாகாணி, பசா. ௯-க்கு வாங்கிக்கொடுத்தது. இன்றுசியம்மாள் குழந்தைக்குந் தொட்டிவேட்டியும் வாங்கிவந்தேன். சுவிசேஷபுரத்திலிருந்து வியாசப்பபிள்ளை பகல்வந்தவர், பிச்சைமுத்துப்பிள்ளைகூடப்போனார். இரவிற் சாப்பிடவரவில்லை. சாயுங்காலம் பிடித்தமழை இரவுவரையும் விடவில்லை. இரவு செபமுமில்லை. ஷெ வியாசப்பபிள்ளை இரவிற் சும்மாகிடந்து, ௨௮-௳ காலைசெபத்துக்குப் பின்புவந்து பழயதுசாப்பிட்டு சாயுங்காலம் ஊருக்குப்போய்விட்டான்.

௨௯-௳ சேமத்துக்காரியும்போய்விட்டாள், மரிய வியாகப்பனையுங் கூட்டிக்கொண்டு. சபையிற் சிலர் மீன்பிடிக்கவும் அநேகர் வெட்டவும்போனார்கள். ஆராதனைக்குமநேகர்வரவில்லை. ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் ரூ ௯-கொடுத்தனுப்பினார்கள். இரவிற் செபத்துக்கு ௫-பேர். ௩௰-௳ கோவிலுக்கும் என் வீட்டுக்கும் ஓலைவாங்கலாமென்று அழகிவிளை குமரன்விளை இடைச்சிவிளை சமாதானபுரம் அச்சம்பாடு முதலான இடங்களுக்குப்போய்வந்தேன். கிடைக்கவில்லை. குருபாத முக்கந்தன் கோவிலுக்குச் செல்லும் ஓலை நானே கொடுக்கிறேனென்று ஏற்றுக்கொண்டான். இரவிற் செபத்துக்கு வாத்தி வாத்திச்சிவரவில்லை. செபத்துக்குவந்தவர்கள் ௪. வாத்திச்சி விடிய பத்து நாழிகைக்குமுன் பஞ்சுநூற்றாள்.

௩௧-௳ ஷெ ஓலைவெட்டி மிதித்ததையும் எடுக்கும்படி ஆள்கூட்டிப்போய் எடுத்துவந்து, இரவிற் செபம் ௫-பேர்வந்தது. மாட்பிள்ளை முனிசுப்பிள்ளை காயுதம் ஒன்றுவந்தது.

நவம்பர் ௧-௳ காலைச்செபத்துக்குமுன்னதாக சின்னப்பபிள்ளை வந்தாரவரிடத்திலக் கிறிஸ்துவை விசுவாசித்துப்பற்றிக்கொண்டவர்கள் இரட்சிக்கப்படுவார்களன்றி மற்றப்பரிசுத்தவான்களால் இரட்சிப்புவராதென்று முடித்தேன். பின்பு வியாகப்பபிள்ளை வந்துபோய்விட்டான். இருவருஞ் சாப்பிட்டார்கள். பின்பு அமிர்தநாயகம் பாளையங்கோட்டையில் கனம் போன்புறுக்ஷையராவர்கள் அம்மாள் இறந்துபோனதாகச் சொன்னான்.



௨-௳ மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது. ௩-௳ முனிசுப்பிள்ளை காயுதம்வந்தது. நான்பாட்டுக்குப்போனேன். கனம் ஐயரில்லை. உடனேவந்துவிட்டேன். ௪-௳ வாத்தியார் பாடத்துக்குப்போனார். பாடமில்லை. ஐயரில்லை, வந்துவிட்டார். வாத்திச்சி படித்துக்கொடுக்கவில்லை.

௫-௳ காலைசெபத்துக்குப் பின்பு தலைவிரியாப்பதிகப்பட்டு, தேவாராதனை வாத்தி. இரவிலும் ௬-௳யிலும் ௭-௳யிலுமப்படியே.

௮-௳ காலைசெபஞ்செய்தேன். பின்பு வீடுபிரித்துக்கட்டச்சொல்லியான் விட்டுப்பிரித்து. ௯-௳ ஓலைகட்டி முடியவில்லை. மணியாரப்பிள்ளைவந்து மனைவரியும் எழுதினவர்களை கேட்டுப்போய்விட்டார்கள். ௭-௳ வந்த ஞானப்பிள்ளையும் அருளம்மாளும் கடைவீட்டு இன்றுசிமுத்துப்பிள்ளைக்கு ஓலையும் கொண்டுபோனார்கள், ௯ ௳.

௰-௳ காலைசெபத்துக்குப் பின்பு பாடத்துக்குப்போகவில்லை. மருந்து போட்டேன், ௰௨-௳ தலைமுழுகிக் குறையவிரியாப்புத் தாவிசை. ஆராதனையுஞ்செய்தேன். இரவில்மழை செபத்துக்கு ஒருவரும்வரக்கூடாததினால் செபமில்லை.

௰௪-௳ சாயத்திரங் குஞ்சிமரைக்கான்வந்ததாகவும், முக்கந்தன் பொன்னாதியவனிடத்தில் நான் கடன்வாங்கினதுண்டாவென்று கேட்டதாகவும், கலகம்வந்ததாகக் கூக்குரலுண்டாயிற்று. ௰௫-௳ பிள்ளையவர்களிடத்துக்கு ஷெ முக்கந்தன் மக்கள்போனதாகச்செய்தி. சாயத்திரங் கல்விசாலையிற் படிக்கிற மாசில்லாமணியாபிள்ளைவந்து பேசிக்கொண்டு ஏப்:௯, ௭, அதிகாரங்களின் வியாக்கியானம் ஏடும் பனைவடலிக்கும் குசைமரியானுக்குங்காயுதமும் வாங்கிக்கொண்டுபோனார்.

௰௬-௳ காலமே வடக்குன்குளத்துக்கு என்சமுசாரத்தையனுப்பினேன். மதுரேந்திர மகள் பரிபூரணத்துக்கு கலியாணமுடிக்க முதலாவது கனம் ஆபிஸ் ஐயரவர்களுக்குக் காயுதமெழுதிக்கொடுத்தேன்.

௰௭-௳ சந்தையன்று உபதேசி வாத்திகளநேகர் சந்தைக்குவந்தார்கள்.

௰௮-௳ இரவில் எனக்குப் பித்தவாய்வினாற் பேதி துவக்கிற்று. பகல் மதுரேந்திர ஐயர் குசைமரியான் ஏசுதாசன் மூவர் காயுதம் வந்தது. ௰௯-௳யும் எனக்குச் சுகமில்லை. காலைசெபஞ்செய்தேன். மத்தியானம் வாத்தியார் ஆராதனை. மாலையும் அவர்தான். ௨௰-௳யும் அப்படியே சுகமில்லை, வடக்குன்குளத்துக்குப்போன என்சமுசாரம்வந்தாள். கனம் ஆபிஸ் ஐயரவர்கள் ஷெ கலியாணத்துக்குத்தரவுகொடுத்ததாக வந்துசொன்னான்.

௨௧-௳ ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைக்கு எனக்கு சுகமில்லாததையும் அவர்

களுக்கு சுகமில்லாதிருந்தது சுகமானதும், வியாகப்பபிள்ளை முதலானவர்கள் படிக்கப்போனதையும் அறியும்படியும் ஷை உத்தரவுவந்தவிதத்தையுங் குறித்து விபரமறியும்படி எழுதினேன். பதில் எழுதவில்லை. ஷை மதுரேந்திரம் பெண்சாதியும் பிள்ளையவர்களுக்குப் பாக்குவைத்துவந்தாள். நமக்கும் பாக்குவைத்தார்கள். வாத்திதானிறுவனையுங் கோவிலிற்செபம். உஉ.௳ காலைச் செபத்துக்குப்(போய்) கோவிலிற் செபஞ்செய்தேன். அந்தான் ஞானப்பபிள்ளைவந்துபோனார். பின்பு பிள்ளையவர்களுக்கு காயுதமெழுதிக் கனம் ஆபிரகாமய்யர் ஷை கலியாணமுடிக்க எனக்கெழுதி உத்தரமனுப்பினேன். அவர்களென் காயுதத்திற்தானே உத்தரவெழுதிக் கையெழுத்துவாங்கவேண்டிய புஸ்தகத்தையுமனுப்பினார்கள். மாலைச்செபத்தில் கலியாணமுடித்தேன். ஓயாதமழை. உ௩.௳ ராத்திரி செபமில்லை.

உ௪.௳ காலைச்செபம். மாலைச்செபம்மழைவாத்திவாவில்லைச்செபத்துக்கு உ௫.௳ காலையிலுமிருந்த மழை செபமில்லை. உ௬.௳ ஆராதனையும்செய்து இரவிலுஞ்செபம்,

உ௭.௳ சுவிசேஷபுரத்துக்குப் பிள்ளைகளுக்கெழுதின காயுதங்களையும் கொண்டுபோய், பிள்ளையவர்களிடத்திற்கொடுத்து அவர்கள் சுகசெய்திகளையுமற்றவர்கள் செய்தியையும், விசாரித்துக்கொண்டு, நற்போதகமும், விசுவாசபிரசங்கத்தையும் வாங்கிவந்தேன்- குணசமரியானும் ஞானப்பிரகாசமும் மதுரேந்திர ஐயர் காயுதமும் வந்தது.

உ௮.௳ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களிடத்திலிருந்து, கருத்தக்கண்ணுக்கு வழக்குத்தீர்ப்புச்செய்த ஓலைவந்தது. பிள்ளையவர்களுத்தரவுப்படி முத்துக்கண்ணு செட்டியாருக்கனுப்பினேன்.

உ௯.௳ அமூர்தநாயகத்தின்பேரில் குஞ்சுமறைக்காள்பிராதுவந்ததினால் கூக்குறலுண்டாயிற்று. ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு ஓலை எழுதியனுப்பினேன். பின்பு குஞ்சுமறைக்காள் பேரிலமூர்தநாயக முக்கந்தன் செய்தபிராதுவந்தது. பின்பு பிள்ளையவர்களெனக்கெழுதிய ஓலைவந்தது.

௩௰-௳ குணசமரியானுக்குக் காயுதமெழுதி அதற்குள் மதுரேந்திரய்யர் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் எழுதிய காயுதங்களைவைத்து ஞானப்பிரகாசத்துக்கும், டிசம்பர்மீ க-௳ சற்குணவாத்தியார்வசம் அனுப்பினேன். பிள்ளையவர்கள் காலமேவந்து, அமூர்தநாயக முக்கந்தன்காரியத்தைக்குறித்துப்பேசிக்கொண்டுபோய்விட்டார்கள்.

௨-௳ கயிலாசபுரத்துக்கு ஷை உப: தேவசகாயம்பிள்ளை மகளை கூட்டிக்கொண்டுபோய்விட்டுவந்தேன்.





௫-௳ சுவிசேஷபுரத்துக்குப்போய் மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது. அதிலவனா பனைவடலியிலிருந்து சாண்டைக்குங் கனம் முத்துசுவாமி ஐயர் பனைவடலிக்கு மாத்துகிறதாகத் திட்டஞ்செய்திருக்கிறதாகவும் எழுதினார். பின்பு மரியஙியாகுலத்தைகூட்டிவந்தேன். பின்பு சுப்பிரமணிய நாடான், பிள்ளையவர்களுக்கு மதுரேந்திரம் பெண்சாதி வயல்விலத்தைகுறித்து எழுதிய ஓலையையும், ஷை பிள்ளையவர்கள் எனக்கனுப்பியந்த காரியத்தை விசாரிக்கும்படி எனக்குமெழுதினதுவந்தது.

௬-௳ ஷை காரியத்தைக்குறித்துப்பேசி சாயந்திரம் முடிவுசொல்லுகிறதென்று ஷை நாடானுக்குச்சொல்லிவிட்டேன். ௭-௳ காலையில் மாடக்கண்ணு முக்கந்தன் முதலானவர் தீர்த்தபடிக்கு இந்தப்பூவுக்குப்பயிரிட்டுக்கொண்டு, ஷை வயல்க்காரருக்கு விட்டுவிடுகிறதென்று ஷை நாடானுக்குச் சொல்லிவிட்டோம். இரவில் இன்னாசியம்மாளுக் கதிகமாய்ப் பேதியுண்டாய் விசபேதிமருந்துகள் கொடுத்தும் ௮-௳யுமப்படியேசெய்தும் சாயுங்காலங் குளிர்ச்சியுண்டாய் ஒத்தல்முதலான பிரயோகங்கள்செய்தும் சுகமாகாதிருந்தது. இட்டிஞரபுரத்துக்கு ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குச் சொல்லவும், ஓமத்திராவகம் வாங்கிவரும்படி ஷை பிள்ளைமகளையும் கோவிற்கூட்டியுமனுப்பினேன். பின்பு காமாஙித்தம்புரானுக்குவந்த தெய்வாயியும் மகளும்வந்தார்கள். ௯-௳ குறையவாசியாயிற்று.

௰-௳ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்தார்கள், மத்தியான ஆராதனைசெய்து ஷை அமூர்தநாயகம் கோட்டு சங்கிறசாட்சிக்காரர் முதலானவர்களையனுப்பிப் போய்விட்டார்கள்.

௰௧-௳ ஷை இன்னாசியம்மாளுக்குப்பேதி குளிர்ச்சிவாங்கிச்சுகமாயிற்று. ௰௨-௳ நேமத்துக்காரி வந்துபார்த்து, ௰௩-௳ விடியக்காலம் ஆனைக்கனைப்பாதைக்குத் தெய்வாயியும் ஷை நேமத்தாளும் போனார்கள்.

௰௫-௳ தவ்வாவிற்போடும்படி காயுதம் பிள்ளையவர்களிடத்துக்கு அனுப்பு.

௰௬-௳ தருமநாதனுக்கும் யாக்கோவுக்குஞ் சுரமும்பேதியுமிருந்து, ௰௭-௳ தருமநாதனுக்கு அதிகவருத்தமாயிருந்தது. ௰௮-௳ குறையசவிக்கியமாயிற்று. ஆறுமாசக்கணக்குக்கொண்டு சுவிசேஷபுரத்துக்குப்போய்க்கொடுத்து, ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களிடத்தில் பேசிக்கொண்டதில், கிறிஸ்தியான்பிள்ளை காயுதமனுப்பினதில் அவர் மகன் பெண்சாதியும் பிள்ளையும் இறந்துபோனதாயும் சவரிமங்கலம் அப்பாப்பிள்ளை பெண்சாதியும் ஆண்குழந்தையொன்றும்,

கொம்பாடியில் இலத்தூராளென்று ஒரு பெண்பிள்ளையும் இறந்ததாகவும் எழுதினார். ஞானப்பிரகாசம் சிரங்குக்கு மருந்து சாப்பிட வருகிறதாகவும், அருளம்மாளுக்கு கைகை யேலிடு, பாய்படம், தண்டொட்டி, அரிசித்தழுப்பனும் செய்துவந்ததையும் காண்பித்து, முனிசுப்பிள்ளை ரூ ௨. உங்களுக்குக் கொடுக்கச்சொல்லி யெழுதினதாகவும் சொன்னார்கள். விசாரணை வாத்தியார் ரூ ௧-கொடுத்துவிடுகிறேனென்றவர் கொடாத முகாந்திரத்தையும் விசாரித்தும் வீட்டுக்குவந்தேன். மதுரேந்திர ஐயர் காயுதமும் சூசைமரியான், ஏசுதாசன், காயுதமும்வந்திருந்தது. அமிர்தநாயக முக்கந்தன் ஒரு ஓலையும்வந்திருந்த தனக்குத் துலுக்கன் பனைச்சிலவினால் உபத்திரவம்வந்ததாயும் கிரிமேனுவுக்குபோகிறதாயிருக்குமென்று மதகாரியத்துக்குச் சிபாரிசுபண்ணும்படிக்குப் பிள்ளையவர்களிடத்துக்குத் தாயும் வேனுப்பிள்ளையும் போகவும், அவடத்திலிருந்து கனம் ஐயர் துரையவர்களிடத்துக்குக் காயுதம்வாங்கிப்போகும்படியும்சொல்லஎழுதினார்.அந்தப்படிக்கு முன்கூட்டியவர் தாயும்மச்சினனும் பாளையங்கோட்டைக்குப்போய்த் துரையவர்களுக்கு ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் காயுதத்தைக்கொடுத்து சிப்பாரிசுசெய்யவும், மேஸ்தரேட்டில்மனுக்கொடுக்கவும்போகச்சொல்லியனுப்பியிருந்தது. ௰௯-௳யில் ஒரு ஆள்மானச்சேவகன் சின்னப்பண்டாரமகன்பராது ஷை அமிர்தநாயகம் குருபாதம் பேரில்க்கொடுத்ததாகவும் அது தானுகாவுக்குவந்து ஷை புள்ளிகூட்டிவரும்படி வந்தான். ஷை வாதிகள் ஒழித்துக்கொண்டார்கள்.

௨௰-௳ திரவியமுத்து பாளையங்கோட்டைக்குப் போய்வந்து செய்தி சொன்னான்.

௨௧-௳ ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் தங்களுக்குக் கிறிஸ்தாம்பிள்ளை மகன் ராயப்பபிள்ளையவர்களுக்கு எழுதிய காயுதத்தையும் அனுப்பினார்களிவடத்துக்கு. ௨௨-௳ காலையில் ஞானப்பிரகாசம் மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களனுப்பிய காயுதமும் தக்காளிவத்தலுங்கொண்டுவந்தான். பின்புதருமநாதனுக்காகக் கடாய் ரூ இஸ்--க்கு வாங்கினோம். ௨௩-௳ ஷை ஞானப்பிரகாசம்போய்விட்டான். பின்பு ஈப்போசனத்துக்குவரும்படி உத்தரவுவந்ததாக ௨௪-௳ சாமிதாசபிள்ளைவந்து சொன்னார். கர்த்தர் பிறந்த உபவாசம். இரவிற் தேவாராதனைசெய்து விடிந்த ௨௫-௳ காலமே ஈப்போசனத்துக்கு சவிசேஷபுரத்துக்குப்போய் வந்தோம். ௨௬-௳ இரவில் மதுரேந்திர ஐயர் மரிய சவரிமுத்து காயுதம்வந்ததினாலுண்டான சமாசாரம் ா-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குமறிவித்தேன். அதாவது தென்காசியிற் தம்பி தேவசகாயம்பிள்ளைக்குவந்ததுன்பமகிமைமனஸ்தாபம். அவிலவர்க்கு சவரிராயன் என்ற ஆண்,





இன்னுசியம்மாளென்ற பெண் இரண்டு குழந்தைகளும் வயற்றுளைச்சலினால் ஒரே நாளில் மரித்ததுவுமேயாம்.

௨௭-௳ சம்பள உத்தரவுவந்தது. பின்பு பனைவடலி, மேட்டூர், முருகன்குறிச்சியிற் பிள்ளைகள் பாளையங்கோட்டை மாப்பிள்ளைக்கு ஆக ௫-காயுதமும் காரிகோவில் நாடான்வசத்திலனுப்பினேன். கருப்புகட்டி ௩-கொட்டை அனுப்பினோம்.

௨௮-௳ உத்தரவுப்படிக்கு சம்பளத்துக்குப்போனோம். கனம் ஆபிசய்யரவர்கள் விசாரித்து சம்பளம். விசாரணை சற்குணவாத்தியாரையும் பெத்தலேகேம் நல்லதம்பிவாத்தியையும், திருவடியென்ற தாசியையும் இடையன்மகள் கெற்பமான சங்கதியினிமித்தம் விசாரித்து அனுவலைவிட்டு தள்ளிவிட்டதாகக் கேட்டேன். இரவில் வீட்டுக்குவந்தேன்.

௨௯-௳ சூசைமரியான் காயுதம்வந்ததில் வடக்கன்குளம் தம்பி டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை பெண்சாதி பாக்கியம் தென்காசியிற்றானேமரித்ததாக எழுதியிருந்தது. உடனே ா-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு எழுதியனுப்பினேன். ா-ஸ்ரீ இராயப்பபிள்ளையவர்களுக்கு கிறிஸ்தான்பிள்ளை மகன் எழுதிய காயுதத்தை மேல்விலாசம்போட்டனுப்பிவிட்டேன்.

௩௰-௳ கோழி கூட்டிற்கு கதவும் திருவலக்குத்தியும் அடித்துப்போட்ட்டு தச்சனுக்குக்கூலி துட்டு ௬-கொடுத்தது. ௩௧-௳ நாடானிறந்தான். அவன் பேய்க்குநேந்து பிசாசாராதனைசெய்தும் பிழையாமற் செத்தானதினாற் செபஞ்செய்தடக்கப்போக மாட்டேனென்றேன். மற்றவர்கள் வேதமார்க்கத்தாரைஎடுக்கிற விதமாய்த்தானே எடுத்துப் புதைத்தார்கள். என்னுடைய கணக்குகள் பார்த்ததில் குறைவு ரூ ௨-டன் கண்டது. ஆதலால் தேவன் இந்த [illegible]த்தில் பணச்செலவன்றி எனக்குக்கொடுத்த சனத்துக்கும் எனக்குஞ் சுகங்கொடுத்து காப்பாற்றினதற்கு ஸ்தோத்திரம்.

---

## ௲௮௱௫௫ ஜனுவரி மீ ௧-௳ திங்கள்கிழமை

## சவரிராயன் ரிப்போர்ட்டு.

௧-௳ விடியக்காலம் வழக்கப்படி ஆராதனைசெய்தேன். விடிந்து கனம் ஸ்தேவான் ஆபிசய்யரவர்கள் முதலாவது சமாரியாவுக்குவந்து மதியத்தில் செபஞ்செய்து ௯-பெண்குழந்தைகளுக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்கள். பின்பு ா-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் காயுதம் ஒன்றுவந்தது.

௩-ட. பாக்கியநாத வாத்திசற்குணவாத்தியார் வீட்டுக்குப்போய்வந்ததில் சற்குணத்தானுபதேசியையும் ஆண்பிள்ளைகளுக்கு சமையற்காரியையும், பெண்பிள்ளைப்பிள்ளைகள் விசாரிப்புக்காரியையும் தள்ளுதல்செய்து, பெண்பிள்ளைகள் வாத்திமாணிக்கமுத்துபதேசியாரை பெத்துலேகேமூருக்குப்போய்ப் படித்துக்கொடுக்கவும், ஊழைக்காரன்தட்டு உப. சுவிசேஷபுரத்துக்கும் நேமித்ததாகச்சொன்னார். அமுர்தநாயக முக்கந்தன் ௨-ட இராவிற் சுவிசேஷபுரத்துக்குவந்து பிள்ளையவர்களிடத்திற்பேசிக்கொண்டு பாளையங்கோட்டைக்குத்தானேபோய்விட்டதாகக் கேள்வி.

௪-ட மதுரேந்திர ஐயர் தம்பி மரியசவரிமுத்துப்பிள்ளை இருவருக்கும் காயிதமெழுதினேன். ௫-ட மதுரேந்திர ஐயர் கடிதம்வந்ததில் தென்காசியிலிருந்து போனமீ ௯-ட தபாலிற் கடிதம்வந்ததில் ஷை மரிந் தம்பி தேவசகாயப்பிள்ளை மனைவி இறந்ததாயும் மரியசவரிமுத்து மேட்டேரிலிருந்து போனபின்னடக்கஞ்செய்ததாகவும் எழுதினார். உடனே ஷை காயிதந்துக்கும்பதில் ஷை காயிதத்திற்குறித்துச் சூசைமரியானுக்கும் ஒரு கடிதமெழுதி யதில்வைத்துச் சுவிசேஷபுரத்துக்கு அனுப்பிவிட்டேன் தபாலிற்போட. சாயந்திரம் குருபாதமுதலான ௮-பேரும் மேல்தட்டிலிருந்து விருதெலையாகிவந்தார்கள். ஷை குருபாத முக்கந்தன் வீட்டிற்போய் விசாரித்து கர்த்திருக்கு நன்றியறிதலாயிருக்கப் புத்திசொல்லிச் செபஞ்செய்துவந்தேன். இரவு செபத்துக்கு ௨-பெண்பிள்ளையும் ஒரு குழந்தையும்வந்தது.

௬-ட ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குத் தம்பி தேவசகாயம்பிள்ளை போனமா ௰௯-ட எழுதினதையனுப்பினார்கள்.

௰௨-ட மதுரேந்திர ஐயர் காயிதமும் சூசைமரியான் காயிதமும்வந்தது. அருளம்மாளைச் சுவிசேஷபுரத்துக்கு அனுப்பினேம். கிறிஸ்தியான்பிள்ளை மகன் வந்தார் உடனேபோய்விட்டார். இட்டப்புளி மிக்கேலம்மாள்வந்து போனாள். தைமாசப்பிறப்பு சந்தை.

௰௩-ட சுவிசேஷபுரத்துக்குப்போய்ப் பிள்ளையவர்களிடத்திற் சங்கத்துக்குப்போகிறதைக்குறித்துப் பேசிவந்தேன். ஷை அருளம்மாளை இடத்துக்கு ஷை பிள்ளையவர்கள் வரச்சொல்லியும் நான் கூப்பிட்டும்வரமாட்டேனென்று சொல்லிப்போட்டது.

௰௪-ட ஷையார் வீட்டிலிருந்து ஒரு பூசணிக்காயும் ௯-கிழங்கும் மெழுகும்வந்தது. கொண்டுவந்த பிச்சைக்குச் சாப்பாடுபோட்டு இரவுந்தங்கி ௰௫-ட போனான். வாத்தியும் வாத்திச்சியும் பேய்க்குளத்துக்குப் போய்



விட்டார்கள். பின்பு நான் சங்கத்துக்குப்போகப்புறப்பட்ட சமயத்திற் பள்ளாடுகுட்டிபோடமாட்டாமற்சாகிறதாயிருக்கிறதைக்கண்டு அறுத்ததினாற் தாமதப்பட்டு ௰௬-ட விடியக்காலம் புறப்பட்டு செம்புலிங்கத்தையுங்கூட்டிக்கொண்டு இராவில் எ.மணிக்கு முருகன்குறிச்சிபோய்ச் சேர்ந்தோம். அங்கே பனைவடலி ஐயருந் தம்பி மரியசவரிமுத்துப்பிள்ளையும் அவர்சமுசாரமுங் குழந்தையும் வந்திருந்தார்கள். இரவு எல்லாருக்குங் கூடத்தான் சாப்பாடு.

௰௭-ட காலையில் ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையும் வந்தார்கள். கூடத்தவசிப்பிள்ளை, வண்டிக்காரன் பூஜத்தேவனும் விசாரணை வாத்தியார் சத்தியநாதபிள்ளையும் ஆக எல்லாருக்கும், வியாகப்பபிள்ளையுஞ் சமுசாரமு மிருக்கிற வீட்டில்த்தான் சாப்பாடு. பின்பு சங்கம். இரவும்-௧.சங்கம்.

௰௮-ட-௧. சங்கம். ௰௯-ட காலையில் சீர்மைச் சிக்கட்டேரியாராகிய ஐயர் பிரசங்கம். பின்பு உபதேசிமார் வாத்திமார்போக உத்தரவு. நான் கனம் சாப்பிட்டர் ஐயரவர்களையுங் கண்டுவந்தேன். பாளையங்கோட்டைக்குள்ளிருக்கிற நம்முடையவர்கள் வீடுகளுக்கும்போய்வந்தேன். இராவிற் கட்டுச்சாதங்கட்டி விடியக்காலம் வியாகப்பன் சமுசாரத்தோடு பனைவடலிக்கும், மரியசவரிமுத்து சமுசாரத்தோடு மேட்டூருக்கும், ௨௰-ட காலையில் நானிவடத்துக்குப்புறப்பட்டோம். மதுரேந்திர ஐயர் இருந்து பின்னாலேபுறப்படவென்றார். எனக்கு ௲ ௰௪வ-கொடுத்தார். தலைப்பாகொன்று ௲ ஒன்னேகாலே மாகாணி-க்குவாங்கிக்கொடுத்தார். முனிசுப்பிள்ளை மாப்பிள்ளை யாதொன்றுந் தரவும் இல்லை நன்றாய்ப்பேசவும் இல்லை. இராவிற் சுவிசேஷபுரத்திற் தங்கி ௨௧-ட காலையில்வந்துசேர்ந்தேன். முதல்நாள்ச்சாயந்திரம் வாத்தி சமுசாரத்தோடேவந்திருந்ததினாற் காலைச்செபம்பண்ணினோம். மத்திய ஆராதனையும் சாயந்திர செபமும் நான்செய்தேன்.

௨௩-ட இட்டம்புளிக்கு மதுரேந்திரம்பிள்ளை சகோதரி வடக்குன்குளத்திலிறந்துபோன துட்டிகேள்க்கப்போனேன். பின்பு சுவிசேஷபுரத்துக்குவந்து சற்குணவாத்தியானையுங்கண்டு பேசிக்கொண்டு வீட்டுக்குவந்து செபம். மதுரேந்திர ஐயருக்கும் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் ஈசாக்கு வாத்தியாருக்கும் சூசைமரியானுக்கும் ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்களுக்கும், காயிதம் தபாலிற்போட்டுவிட்டேன்.

௨௪-ட இடையங்குடிக்குப்போய் அன்பாயியம்மாளையும் பிள்ளைகளை விசாரித்து கயிலாசபுரத்துபதேசியாருக்குங் காயிதமுங்கொடுத்து சத்தியநாத

உப பெண்சாதியிடத்திற் சிலவுக்கு ௲ கடனைக்கேட்டது தரவில்லை. வீட்டுக்குவந்தேன். ஞானசமரியாம்பிள்ளையும் மாசில்லாமணியாபிள்ளையும் விடுதலைக்குவந்தார்கள்.

௨௬-வ நாடான் மகனிடத்திற் கடனுக்கு வெள்ளைக்கண்ணு பொதி மாட்டைப்பிடித்தடிபிடிவந்து தவசிப்பெருமாளென்பவன் ஷ கடனை ஏற்றுக்கொடுக்கத் தீர்மானித்தோம். கோட்டுச்சேவகன்வந்து, அமிர்தநாயகம் வீட்டிற் இஸ்தரொட்டினதாகவும் பவுல்பேரிலும் அறிக்கைகொண்டுவந்ததாகவும் சொன்னான்.

௨௯-வ சுவிசேஷபுரத்துக்குப்போனேன். ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் பாளையங்கோட்டையிலிருந்து வந்திருந்தார்கள். கோட்டுக்குப்போன குருபாத முதலானவர்களும்வந்துவிட்டார்கள்.

௩௰-வ டோனாஹூநுக்கு சம்பளத்துக்கு யாவருக்கும் உத்தரவுப்படிபோனோம். அவடத்திற் சத்திரங்கட்டுவேலைக்கு சம்பளத்தில் ௲-க்கு மூன்றத்தொன்று கொடுக்கத் தீர்மானித்தார். இஸ்பிராற்றுதுரை வந்திருந்தார்கள்.

பிற்பரவரி ௧-வ டோனாஹூரிற் சம்பளம்வாங்கி ௨-வ வீட்டுக்குவந்தேன். மதுரேந்திரய்யர் கடிதம்வந்தது.

௬-வ ஒநகாயுதமும்வந்தது. மரியசவரிமுத்துக்கும் ஷ யாருக்கும் பதில் எழுதியனுப்பினேன். சுவிசேஷபுரத்துக்குப்போய்வந்தேன். நன்னிகுளத்துக்கும் இட்டம்புளிக்கும் போனேன்.

௭-வ மிளகுசெடி நட்டேன்.

௮-வ எடுப்புத்தண்ணீர் கொடுத்தது. இரண்டுபெற்ற மரியம்மாளுக்கு காதுகுத்தினார்கள். அன்னம்மை மகனுக்கு வேட்டி காச்சியனுப்பினேன்.

௯-வ ஞானப்பிரகாசம்வந்தான். இரவிற் சாமிதாசபிள்ளைமகனும் மகனும்வந்து இரவு சாப்பிட்டு ௰-வ காலமேபோனார்கள். பின்பு கிறிஸ்தியான் பிள்ளையும் மனைவி குழந்தை மூன்றுபேர்வந்தார்கள். ஞானசமரியானும் ஷ ஞானப்பிரகாசமுங் கயிலாசபுரத்துக்குப்போய்வந்தார்கள். ஷ கிறிஸ்தியான் பிள்ளை மகனுக்குச் செபத்தியாயியை கலியாணமுகித்துக்கொடுக்க உங்களிடத்தில் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் கேள்க்கச்சொன்னார்களென்றதற்கு நாங்கள்பெற்றவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளுகிறதன்றி எங்கள் மனமாகிறதாயவர்களனுப்பினது அவர்களுக்கு மனமில்லாத காரியமென்றோம். அதற்கவர் தங்களுத்தரவுப்படிதான் நடக்குமென்றார். அப்படியல்ல எனக்குச் சம்மதிதானவர்களுக்கு மனதானால் எப்போதுமுகிக்கிறதென்று தீர்மானித்துக்கொள்ளுங்



கள் பார்ப்போமென்று சொல்லிவிட்டேன். ஷயாரும் ஞானப்பிரகாசமும் போய்விட்டார்கள் சாயுங்காலம்.

௰௧-வ ஓய்வுநாளாராதனை செபங்களும் வழக்கப்படி.

௰௨-வ சுவிசேஷபுரத்துக்குப்போனேன். அவடத்தில் ஷ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களிடத்தில் மதுரேந்திர ஐயருக்குக் கவணிவிலைக்கு ௲ ௮-வாங்கிக்கொள்ள எழுதினதையறிவித்தேன். அப்படியே ௲ ௮-கொடுக்கிறேன், கவணிவாங்கியனுப்புங்களென்றதேதவிர, வேறு பெண் கேட்டுவந்தவர்கள் செய்தியாதொன்றுமவர்களென்னிடத்திற் பேசவுமில்லை அவர்கள் வீட்டாருமப்படியே. ஷ கேட்டுவந்தவர்களுமிருந்தார்களவர்களுமிப்படியப்படியென்கவுமில்லை. நான் ஞானப்பிரகாசத்திடத்திலுங்கள் ஐயாயுதமெழுதினதென்ன மதுரேந்திரய்யருக்கென்று கேட்டதின் ஷ பெண்கொடுக்க நான் சம்மதித்துக் கலியாணச்செலவும் நான்செய்வேனென்று சொல்லியிருக்கிறதாக எழுதினார்களென்றான். கல்லது இப்பொழுது நாமாய்ப்பேசவேண்டாமென்று வந்துவிட்டேன். லாசர் மாசில்லாமணியாபிள்ளை மகன் தெய்வநாயகம்பிள்ளையையும், வேதன்பன்பிள்ளையையும் கனம் ஆபிஸ் ஐயரவர்கள் தள்ளினதாகவுங்கேள்வி.

௰௫-வ சுவிசேஷபுரத்துக்கு ஞானசமரியான்போய்வந்தான்.

௰௬-வ வடக்குன்குளத்துச் சின்னையியும் அவள் மகளும் பிள்ளைகளும் வந்திருக்கிறதாகக்கேள்வி. ௰-மணிக்குமேல் பள்ளிக்கூடமில்லை. ௰௭-வ பள்ளிக்கூடமில்லை: வாத்திபோனவிடந்தெரியாது. ௰௮-வ காலையில்வந்து அமத்தனுக்குடிக்கு ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் இடத்தில் உத்தரவுவாங்கிப்போய் வந்ததாகவும் சொன்னார். காலைசெபத்துக்குப்பின்பு பிள்ளையவர்கள்வந்து சத்திரத்துக்குவரியும் சற்சுமிசியோன் உதவிச்சங்கத்துக்கு வரியும் எழுதி சபையார் ஒப்புக்கொண்டுபோனார்கள். கிறிஸ்தியான்பிள்ளையும் சமுசாரங்குழந்தையுடனே ௰௫-வ போனதாகச் சொன்னார்கள்.

௰௯-வ வாத்தியார்போனவிடந் தெரியாது: ௰-மணிக்குமேல் பள்ளிக்கூடப் படிப்பில்லை.

௨௰-வ கருத்தக்கண்ணு சுகங்குடியானும் சுப்பமுக்கந்தன் பெண்சாதிக்குக்கொடுக்கவேண்டிய கருப்புகட்டி பணத்தைமறித்த ஆறுமுகஞ் சுப்பயனிரண்டுபேணாயுங் கூட்டிவழக்குப்பேசி ஷயார் மறியலைவிட்டுவிடவும் ஷ பணத்தைக்கொடுத்துவிடவும் மற்ற வழக்கைப் பிள்ளையவர்களிடத்திற்பேசிக்கொள்ளவும் தீர்த்து ஷ பிள்ளையவர்களுக்கும் ஓலை எழுதியனுப்பினேன்.

௨௧-௳ காலையில் லெந்தென்னும் நாற்பதுநாள் துவக்கத்துக்கு வாசிக்க வேண்டியதை வாசித்துச் செபம் பண்ணினேம். சாயுங்காலம் இராசஃபிள்ளையவர்கள் ஓலைவந்தது. ௸ கருப்புக்கட்டிவிலைப்பணத்தை சுப்பமுக்கந்தன் பெண்சாதிக்குக் கொடுக்க தருமக்கண்ணு பட்டங்கட்டு ஒத்திப்பணங் கட்டி ௸ நாடாணிடத்திலிருந்த சூறியும் வாங்கிவந்தான்.

௨௨-௳ இரவில் ஞானப்பிரகாசமுந் தவசிப்பிள்ளையும்வந்து, ஏசுதாசன் காயுதம்வந்ததென்றமவர் வாசித்ததாகவும் சொன்னான்.

௨௩-௳ மரியசவரிமுத்துக்கு மதுரேந்திர ஐயருக்குங் காயுதமெழுதினேன். அனுப்பவில்லை. ௨௪-௳ மதுரேந்திரய்யர் காயுதம்வந்தது. ௨௫-௳ ௸ மதுரேந்திரய்யருக்கு எழுதிலப்பின்னு சிலகாரியமுமெழுதிமுடித்தேன். உடனே தபாலிற்போட்டேன். ஈசாக்குவாத்தி தலைப்பாகுக் காரியத்துக்கு எழுதினதுவந்தது. ௨௮-௳ ௸ மதுரேந்திர ஐயருக்கும் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் எழுதி சூசைமரியான் கல்விச்சாலைக்கு விடுதலைமுறைகழித்துப்போகிறவன்வசமனுப்பினேன். கூடசுவிசேஷபுரம்வரையும்போய் ௸ படிக்கப்போகிறவர்கள்கூட மார்சு௴ முதல்தெய்தி விடியக்காலமனுப்பினேன். கனம் ஆபிசு ஐயரவர்கள் வந்திருக்கிறதாகச்செய்தி கேட்டுவந்துவிட்டேன். காலைச்செபம் வாத்தி, பின்பு அத்தான்சின்னப்பபிள்ளையிடத்துக்குவந்துபேசிக்கொண்டு தாலைக்குப்போனார், சுவாமியாரிடத்துக்குப்போனார். ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் வண்டிமாடு வாங்கும்படிக்கும் அமுர்தநாயகத்து வியாச்சியத்துக்குமாக திருச்சந்தூருக்குப்போனதாகக்கேள்வி.

மார்சு௴ ௧-௳ மதியத்துக்குமேல் உத்தாவுவந்தது மார்சாந்திரக்கூட்டத்திக்கு. இரவில் வடக்குன்குளஞ் சின்னய்யாகொச்சிப்பிள்ளை மருமகன் மூத்தவர்பரஞ்சோதியபிள்ளை மருமகன் மூத்தவரும் முத்துக்கண்ணுசெட்டியார் வீட்டிற்புகையிலைவண்டிகொண்டுவந்திருக்கிறதறிந்து அவர்களிருவரும்பெண்சாதியைச் சாகக்கொடுத்தவர்களானதினாலும், நாங்களத்தத் தட்டிக்குப்போகாததினாலும் நான் ௸ செட்டியார் வீட்டிற்போய் ௸யாரிரண்டுபேரையும் வீட்டிற்கழைத்துவந்து நாங்களவடத்துக்குப்போகாதிருந்த முகாந்திரங்களைக்குறித்துப்பேசி யாறுதற்படுத்தி யவர்களைவிருந்திக்கொண்டோம்; ௨-௳ காலையிற் பதினீர்சாப்பிடச்சொல்லிபின்பு தவசு நாள் ஒருசந்தியானதாற் சாப்பாடுபண்ணிவைக்கும்படி வீட்டிற்திட்டஞ்செய்து உத்தாவுப்படி சுவிசேஷபுரத்திற்குப்போய் சம்பளம் வாங்கி யிரவில் வீட்டுக்குவந்தேன். அதற்குமுன் ௸ மாப்பிள்ளைமார் இரண்டுபேரும் என்சமுசாரமுங்கூடப்போய்விட்



டார்கள் வடக்குன்குளத்துக்கு. ௸ ௧-௳ வயித்தியன் ஞானப்பிரகாசம்பிள்ளையைத் தள்ளினார்கள். ௨-௳ தருமக்கண்ணு உபதேசிக்கு ௩-௴ சற்பயின்டு. லாசருபதேசிக்குமவன் மனைவிக்கும், ஒரு௴ சம்பளம் அபராதமும். ௩-௳ மணியாரப்பிள்ளைக்குத்தள்ளுதலும் சுவாமியடியான் லாசட்டருக்குசோதிக்கரம் வாத்தியலுவலும் நேமித்தார்களாம்.

௪-௳ ராப்போசனத்துக்குப்போனேம். மதிய ஆராதனை இல்லை. மாலை ௨-பேர் திருச்சந்தூருக்குப்போன ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் வண்டிக்குமாடிரண்டுவிலை ரூ ௫௫-க்கு வாங்கிக்கொண்டு ௫-௳ காலையில்வந்ததாகக்கேள்விப்பட்டோம்.

௭-௳ காலையிற்புறப்பட்ட சூசைமரியான் சுவிசேஷபுரத்திற்குவந்து கனம் ஆபிஸ் ஐயரவர்களிடத்தில்வந்து மகிழ்ச்சிபுரத்துக்குப் போகச்சொன்னதாகவும் இவடத்தில் சாயந்திரம்வந்துசேர்ந்தான்.

௮-௳ காலைச்செபத்துக்குப்பின்பு பார்பதி வீடு அக்கினிவாதையாய்ப்போயிற்று. அடுத்தவீடு தப்பிற்றுத் தேவகிருபையால். வடக்குன்குளத்துக்குத்தட்டிக்குப்போனவன்வரவில்லையென்று பிள்ளைகளும் நானுங் கவலையாயிருந்தோம். சாயந்திரம் நாலுமணிக்குவந்தான். கூடவந்தவனுக்கு சாப்பாடுங்கொடுத்து சம்பளத்துட்டு ௫இ. ௯-௳ ௸ புகழ்ச்சிபுரத்துக்குப்போனான். கூலியாள்-௧-க்கு துட்டு ௯.

௰-௳ மதுரேந்திர ஐயர் காயுதம்வந்தது. உடனேபதில் எழுதினேன்.

௰௧-௳ ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைவந்து செய்திகள்பேசி மதிய ஆராதனை. சாயந்திரம் ௸ புகழ்ச்சிபுரத்துக்குப்போன செய்திக்கு மலையப்பன்வசம் ஓலைவந்தது.

௰௨-௳ மதுரேந்திர ஐயர் ௧-௳ எழுதினதும் முனிசப்பிள்ளை ௫-௳ எழுதினதும் ஏசுதாசன் ௫-௳ எழுதினதும் சூசைமரியான் ௨-காயுதமும் மாசில்லாமணியாபிள்ளை ௨-௳ எழுதினதும்வந்து வாசித்து செய்தியறிந்தேன் எனக்கு மிகுதியாய்ப்பேதிகண்டதினால் ஆயாசமாயிருந்தது. ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்துபோனார்கள். ௰௩-௳ சூசைமரியானை விசாரித்துவரும்படி ஓலையும் எழுதியாளனுப்பினேன். வடக்குன்குளம் மாப்பிள்ளை இன்றுசிமுத்துப்பிள்ளை புகையிலைப்பணத்துக்கு முத்துக்கண்ணுசெட்டியாரிடத்துக்குவந்தாரவரிடத்தில் ௸ சூசைமரியானை விசாரித்துக்கொள்ளும்படி சொன்னேன். ௰௪-௳ போனார். பின்பு நான் பொட்டக்குளமுதற் சுவிசேஷபுரவரையும்

வண்டிக்குப்போய் விசாரித்துவந்தேன். சாயந்திரம் ஞானசமரிய ஞானப்பிரகாசம்பிள்ளையை விசாரிக்கப்போனவன் ஓலைகொண்டுவந்தான். சற்று ஆறுதலாயிற்று.

௰௫-௳ காலையில் என்சமுசாரங் குழந்தைகளும் செபத்தியாயியையும் சுரண்டைக்கு அனுப்பினேன். கூடச்சுவிசேஷபுரமட்டும்போய் இட்டம்புளிக்குப்போய் ரூ ௨ ஞானமுத்துவசமாய் வாங்கிவந்தேன்.

௰௬-௳ வாத்தி காலைச்செபத்துக்குப்பின்பு பள்ளிக்கூடமில்லை. சனிக்கிழமை ௰௭-௳ அமத்தனுக்குடி முதலான இடங்களுக்குப்போய்விட்டார். ௰௮-௳ காலைச்செபத்துக்குவந்தார்.

௰௯-௳ மத்தியானத்தில் மதுரேந்திர ஐயர் காயுதம்வந்ததில் தமக்கு ஆறுவது பெண்குழந்தை நாளதுமீ ௰௪-௳ பிறந்ததென்றெழுதியிருந்தது. அவர்தாயார்போய்ச்சேரவில்லை. மிக்கேலுபதேசியார் பெண்சாதி தெய்வாயிதானந்தப் பேறுகாலத்துக்குதவிசெய்ததாம்.

---

+

பிரியமுள்ள தம்பி ஞானசமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாக. இவடத்தில் யாவருங் கர்த்தருடைய இரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்து சேமாதிசயங்களையறியவிரும்புகிறேன். தான் மலையப்பன்வசமனுப்பிய ஓலைபார்த்ததினாற் சற்றேமனதுக்கு ஆறுதலாயிற்று. உங்கள் தாயார் ௰௫-௳ புறப்பட்டுச் சுவிசேஷபுரத்துக்குப்போய் நானு உம்முடையவும் வாத்தியாருடையவும் ஓலை இரண்டையும் அவடத்தில் ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் வசத்தில் ஏற்பித்துத்தபாலிற் போடச்சொன்னேன். பின்பு சாயுங்காலம் உங்கள்தாயாருஞ் செபத்தியாயி, தர்மாதசஞ்சீவி, யாக்கோவும், ஆக ௪-பேரும்புறப்பட்டுப்போனார்கள். ஷெயர்பாளையங்கோட்டைக்குப்போயவடத்திலிருந்து ௰௭-௳ மதியத்துக்குமேல் புறப்பட்டுப் போனதாகவும் செய்திவந்தது. அவடத்துச்குப்போய்ச்சேருமுன் சுரண்டையிலிருந்து ௰௫-௳ எழுதினதும் ௱-ஸ்ரீ முனிசுப்பிள்ளை எழுதினதும் ௰௯-௳ வந்ததில் உங்கள் அண்ணாவி மதுரேந்திர ஐயருக்குபெண்குழந்தை ௰௪-௳யிற் பிறந்து தாயும் பிள்ளையும்சேமமாயிருக்கிறதாயும் என்பதே. ஆண்டவர்தன்மனிஷருதவியின்றியிருந்தவர்களுக்கு உதவியாக மிக்கேல் உபதேசியார் பெண்சாதிதேவாயியைவரச்சொல்லியிருந்தபடிக்கு வரவும் அவளே உதவியாயிருக்கவும் விக்கினமின்றிரட்சித்தார். ௱-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் எழுதினகாகிதங்கள் உ-தான் போனபின்வந்ததுகளின் செய்தியென்னவென்றால் முதலா



வது எழுதினதில் மாப்பிள்ளை ஞானசமரியாம்பிள்ளைக்கு நாசரேத்து ஊரிலிருக்கிற பெண்ணைக்குறித்துப்பேசும்படி யேற்கனவே மனமில்லாதிருந்தீர்கள் இப்பொழுது அந்தப்பெண்ணை காட்டுரோட்டு வேலைபார்த்துவருகிற ஞானப்பிரகாசப்பிள்ளைக்குப்பேசி ரூ ௱ க்கு நகையும்போடும்படி தீர்மானித்து நகையுஞ்செய்கிறார்களென்று எழுதினார்கள். அதைக்கேட்டு, நாங்களவடத்துக்கு உங்கள் தாயார்போனாளே பேசிக்கொள்ளுவாளப்போதெரியுமென்று இருந்தோம். அதின்பின்பு ஷெயார் எழுதினது ௰௯-௳ வந்ததில் ஷெ பெண்ணைக்குறித்துப்பேசியிருந்த மாப்பிள்ளைக்கு வேறுபெண் நல்லூரில்த்திட்டமாய்ப்போனதினால்த்தாங்கள் ஞானசமரியாம்பிள்ளைக்குப்பேசினாற்கொடுப்பார்களென் றெழுதினார்கள். அதினாலிப்பொழுது அவர்களுக்கு நான் எழுதினது : ஷெ பெண்ணைக்கேள்க்கப்போகிறதற்குமுன் தாங்களவடத்திலிருக்கிற பெரியநாயகம்பிள்ளை, ஷெயார் ஐயா அச்சுக்கூடத்து மதுரநாயகம்பிள்ளை, முதலானவர்களிடத்தில் நாங்கள் கேள்க்கும்படி பிரியமாயிருக்கிறதையறிவித்து அவர்களுக்கும் மனமுண்டானால் எங்களுக்கு எழுதுங்களப்பொழுது நாங்களவர்களிடத்திலும் நாசரேத்து ஊரிலும்போய்ப்பேசிச் சீக்கிரத்திற் கலியாணஞ்செய்யலாமென்றும் அவசியமாய் கலியாணமுகிக்கவேண்டியதுயென்ற முகாந்திரங்களையு மெழுதியிருக்கிறது. உங்களண்ணாட்சிக்கும் எழுதியிருக்கிறது. உங்கள் தாயாருமவருக்கு அறிவிப்பாள். கனம் ஆபிஸ் ஐயரவர்கள் பாளையங்கோட்டைக்குப்போயிருக்கிறார்கள். டோனவூரிலிருந்து ௪, ௫-பேர் சுவிசேஷபுரத்திற்குவரச்சொல்லி இவடத்தில் அலுவல் கொடுக்கும்படிவந்திருக்கிறார்கள். ஐயரவர்கள்வரவில்லை. நீயும் உன் காரியங்களைக்குறித்து எழுதினால் ஒருவேளை சித்தமிரங்கி யிந்தச் சேகரத்துக்கு வரச்செய்வார்கள். இவடத்திற்கு நீவந்தால் எதுகாரியத்தையும் பேசிக்கொள்ளவும் சாப்பாடு தலைமுழுக்குக்கும் ஏதுவாயிருக்கிறதுமன்றி கலியாணத்துக்குஞ் சவிக்கியந்தான். ஆகையால் எழுதுகிறது நல்லதாயிருக்கும். வடக்குன்குளத்து மாப்பிள்ளை யிவடத்துச்குவந்தபோது விசாரித்து நல்லம்மாள்புரத்திலிருந்த வேதக்கண்ணுவாத்தியர் சுரத்தில் பேதிக்கு மருந்துகொடுத்ததினால் [illegible] த்து இறந்துபோனார். அந்தமனிதனுக்கு ஒருசையில்லாத [illegible] யோடே ஆ [illegible] குள் [illegible] ப்போயிற்று ஆண்டவர் அப்படியும் வல்லவராயிருக்கிறார், தருமக்கண்ணுக்கும்பாக்கியத்துக்கும் ந்தியும் ஆக உபத்திரவமாய் இருந்து மருந்துகொடுத்திருக்கிறது. கர்த்தர்

---

இந்தக்காகிதத்தில் பல இடங்கள் பூச்சியரித்துப்போயிருக்கிறது. J. D. S,

கருத்தைக்கொடுப்பாராக. சுவிசேஷபுரத்தில் உம்முடைய படிக்கப் போகவில்லை ஓங்கள் அத்தானவளை எழுத்து வாசிப்புக்களுக்கு முத லான பழக்கிவருகிறார்கள். சிரங்கு அப்படியேயிருக்கிறது. விளை தட்டாசாரிக்கு இப்பொழுது ஒரு ஆண்குழந்தை பிறந்திறந்துபோயிற்று. அவர் மகனுக்கு சித்திரைமீ கலியாணம். சுப்பிரமணியமுப்பனுக்கு இன்னமும் பத்தியந்திராமல் வீட்டில்தானிருக்கிறான். வேறுவிசேஷங்களில்லை வடக்குன்குளத்துக்கும் போய்வந்திரு. சண்டைவிளையிலிருக்கிற ஸ்ரீ விசாரணை பரமானந்தப்பிள்ளையவர்கள் சமுசாரம் வியாதிப்பட்டு கர்த்தர் காப்பாற்றின படியினால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஷை பிள்ளையவர் களுக்கு நான்கேட்டுக்கொள்ளுதலைச்சொல்லவும். ஷையார் வீட்டுக்குப்போய் வந்திருக்கவேண்டியது. ஸ்ரீ சமிதாசபிள்ளையவர்கள் வீட்டுக்கும்போய் விசாரித்தும்வரவும். இப்படி யாவரையும் சிநேகித்து நல்லபிள்ளையாயிருக்க வேண்டியது. நானும் இன்னாசியம்மாளும் தனித்திருக்கிறதுக்கு கிருபைபெற்றுள் சிரிப்பும் விளையாட்டுமே எங்களுக்கு ஆறுதல். உம்மை கர்த்த ராசீர்வதிப்பாராக.

ருஅு௱ருரு-ஞ௫ இப்படிக்கு
மார்ச்சுமீ உஉ-ட சவரிராயன்.

இவடத்திலிருந்துவருகிற ஆளுக்கு ஏதாவது உன்றால் குடுக்கக்கூடுமானால்கொடுத்தெழுதவும். சம்பளம் நான் கொடுக்கிறதினால் யாதொன்றுகொடுக்கவேண்டாஞ் செய்தது தருமாம்.

---

உஅ-ட உத்தரவுப்படி வாத்தியார்போனார் சம்பளத்துக்கு. உகூ-ட உபதேசிமாரும்போனோம். கணக்குமுடித்து இனிமேல் வரவுமென்றனுப்பினார்கள். ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு ஷை தூரத்துக்கு ஒருதயிலம்வைத்தார்கள் உகூ-ட அவர்களை விசாரிக்கப்போனேன். அவடத்தில் கொச்சி சின்னய்யா சிரிவைகுண்டம் தேவசகாயம், தக்கிடி ஞானப்பிரகாசம்பிள்ளை, மூன்றுபேர் காயுதம்வந்ததில் எனக்கு ஷை ஞானப்பிரகாசம்பிள்ளை எழுதினது பிள்ளையவர்களுக்கு காண்பித்தும் ஷை பிள்ளையவர்களுக்கு எழுதினது நானும் பார்த்துப்பேசிக்கொண்டுவந்தேன். மதுரேந்திர ஐயர் உகூ-ட எழுதிய காயுதம் உகூ-ட நான் வாங்கிவந்தேன். கனம் ஆபிஸ் ஐயரவர்கள் சமாரியாபுரங்கோவிலுக்கு நாற்காலி ஒன்றுகொடுத்தார்கள்.

௩ய-ட வெள்ளிக்கிழமை ஒமைமொருபாகஞ் செட்டியார் மகன் சுப்பு செட்டியார் மகன் ௬-வயசுப்பிள்ளை இறந்தது தட்டி கேட்கப்போனேன்.



ருரு-ஞ௫ எப்பிரல்மீ க-ட முதல் ரிப்போறட்டு.

க-ட காலையில் ஸ்ரீ விசாரணைப்பிள்ளை செபம், பின்புபோய்விட்டார்கள். மத்தியானம் ஆராதனைசெய்தேன். பின்பு கயிலாசம் கோவில்நாற்காலி எடுக்கப்போனான்.

உ-ட காலையில் அரைவீட்டண்ணன், சுவைக்கிணுப்பிள்ளை, மிக்கேல்ப் பிள்ளையும் மூன்றுபேரும் வந்துபோனார்கள். ஆனைக்குட்டி இவடத்தில் கோடைபோடப்படாதென்றுத்தரவுசொன்னோம். சாயுங்காலம் கரிப்பூலாங்குளம் அன்னம்மையும் அவள்மகளும்வந்துயிருந்து, ங-ட சாயந்திரத்துக்குப்போனார்கள். எனக்குத் தலைவிரியாப்புண்டாயிருந்ததினால் மாலைசெபம் வாத்தி.

ச-ட சம்பள உத்தரவுவந்தது வாத்திகாலைசெபஞ்செய்து சோதிகரத்துக்குப்போயிருக்கும்போது. எனக்குச் சுகயில்லையென்றிருந்தேன். இரவிற் செபமில்லை. ரு-ட காலைசெபம் பண்ணினேன். மாலையிலுஞ் செபம். கல்ல சுகமில்லை, சா-ட பெரியவெள்ளிக்கிழமை அதிசயபுரத்தில் ராப்போசனத்துக்கு வாத்தி உபதேசிமார் முதலானவர்கள்வர உத்தரவு. எனக்குச் சுகமில்லை. சபையாரும்போகவில்லை. வாத்திமாத்திரம்போனார். ஆராதனையும் காலைசெபமுஞ்செய்தேன். ஆயாசமும். நல்லசுகமுமில்லை. கோவிலுக்கு வராமற் சந்தைக்குப்போன ஞானமுத்து ஒருவனிடத்திற் சண்டைபோட்டு காது அறுந்ததாய்க்கேள்வி. அ-ட சபையார் ராப்போசனத்துக்குப்போனார்கள் சுவிசேஷபுரத்துக்கு க-பேர். கூ-ட நான் ராப்போசனத்துக்குப்போனேன். ஷை ஊருக்கு டோனாவூர்ச்சேரத்து உபதேசிமாரும்வந்தார்கள் சிலர். குலசமரிய ஞானப்பிரகாசம்பிள்ளையும் மகிழ்ச்சிபுரத்துக்குப்போன முதல்மீ சம்பளம் வாங்கும்படிவந்திருந்தான். ய-ட காலையில் நான்வந்துவிட்டேன்.

யச-ட காலையில் குலசமரியர்ன்வந்தான். யஉ-ட காலம்பர அவனுமவன்சாமான்கொண்டு செம்புலிங்கமும், வடக்குன்குளமக்காள் அன்னம்மையுமவள்மகள் ஞானப்பிரகாசியும் கூ-ட வந்தவர்களுமன்று கூடப்போனார்கள். யரு-ட வடக்குன்குளம் ஞானப்பிரகாசம்பிள்ளையும் அவர் தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளையும் சுவிசேஷபுரத்துக்கு பெண்காரியம்பேசும்படி சக்காய்பழமும் பற்பட்டமுந் தேங்காயுங்கொண்டு ஆள்ச்சுமையிலேத்திவந்தார்கள். சாப்பிட்டபின் இரவில் நானுங்கூட ஷை ஊருக்குப்போய் ஸ்ரீ விசாரணைபிள்ளையவர்களிடத்தில் ஷை காரியங்களைப்பேசிக்கொண்டு ஷையார் மகளை இவ

டத்துக்கு அனுப்பவும் அவர்வந்து உறுதி யுடன்படிக்கைசெய்தபின்பு ஷெயார் வேதத்திற்சேருகிறதென்று தீர்மானித்து, ௰௪-௳ மதியத்துக்கு மேற்போனார்கள். சின்னையா கோச்சிப்பிள்ளைவந்தார்களவர்களிடத்திற் குழந்தைகளிரண்டு இறந்த துட்டியும் கேட்டுச் சாயந்திரம் வீட்டுக்குவந்தேன். முந்தி இரவில் மழைபெய்தது.

௰௫-௳ செபம் ஆராதனையும்செய்தேன். இரவிலும் மழைபெய்தது. ௰௬-௳ மதுரேந்திர ஐயருக்குக்காயிதமெழுதினேன்: அவர் ௬-௳ எழுதினதுக்கும், ௯-௳ எழுதினதுக்கும் பதில். மாப்பிள்ளை இராயப்பபிள்ளைக்கும் ௰௭-௳ எழுதினேன் காசரேத்துவூர் பெண்காரியத்துக்கு. ௭-ஸ்ரீ பிள்ளையவர்கள் ௰௭-௳வந்து சத்திரவரிப்பணம் வசூல்செய்து, இரவில் சபையாருக்குள் சன்னடைக்காரிகளானவர்களுக்கு இனிமேல் சக்கிராந்துக்குத் தன்னீர்விடச்செய்கிறது அவாதமென்று தீர்த்துக்கோனைடபோடுகிறவன் அடிமுறைவரையும்போட்டுக்கொள்ளவும் அதின் பின்னிவடத்திற் போடக்கூடாதென்றும் போட்டால் ஊரைவிட்டுப்போகிறதென்றுந் தீர்ப்புச்செய்தார்கள். அமிர்தநாயகம், வாத்தியாரைப்படித்துக்கொடுக்கத் தெரியாதென்றும், பின்னும்பலவிதமாய்ப்பொதுவாயும் பேசினான் பிள்ளையவர்கள் முகதாவில். அதற்கு ஏங்களிசமாதும் மேலாவிவிசாரணையிருக்கிறதோவென்று நான்சொல்லியும் பிள்ளையவர்களொன்றும்பேசவில்லை. ௰௮-௳ காலமேபோய்விட்டார்கள்.

௰௯-௳ இடையன்குடிக்குப்போய்வந்தேன்.

௨௧-௳ வடக்கன்குளம் ஞானப்பிரகாசம்பிள்ளை மகன் இன்னாசிமுத்துப்பிள்ளை முன்பேசினபடி தகப்பனால் அனுப்பப்பட்டுவந்தார். ஞானசையும்வந்தான். ௨௪-௳ ஞானசை ஊருக்குப்போனான். ஷெ இன்னாசிமுத்துப்பிள்ளை இருந்தார். வேதத்தைக்குறித்தும், வேதஞ் சத்தியவேதமென்றும் அறிந்து பற்றிக்கொண்டாற் பின்வாங்கக்கூடாதென்றும் பேசினேன். அவரும் அப்படியேநிலைத்திருக்கும்படியே தீர்மானிக்கிறேனென்றார். இரவில் ௭-ஸ்ரீ பிள்ளையவர்கள் இடத்துக்கு கூட்டிப்போயவர்களிடத்திலுமிவர் வேதம்படித்துறுதியாயிருப்பேனென்கிறார் என்று சொல்லிவிட்டுவந்தேன்.

௨௫-௳ இரவிற் சுவிசேஷபுரத்துக்குப்போய் வி. சற்குணவாத்தியார் சாமான் ஒதுக்கிக்கொண்டுபோறவனைக் கண்டுவழியனுப்பிவந்தோம், வாத்தியுங்கூடத்தான்.

௨௬-௳ காலையிற் பிள்ளையவர்கள் வந்தார்கள். சுனம் ஐயரவர்கள் டோஹனூரில் சம்பளம் இன்றுகொடுக்கிறதென்றார்கள். நான் சமாதானபுரத்துக்



குப்போய்வந்தேன். ஷெ மதுரேந்திரய்யர் பாளையங்கோட்டையிலிருந்து எழுதிய கடிதம்வந்தது.

சமாரியா உப: சவரிராயன் ௲௮௱௫௰ மெய்ஞ் ௪-௳ முதல் ரிப்போர்ட்டு.

செவ்வாய்க்கிழமை சமாதானபுரத்துக்குப்போய்வந்தேன்.

௯-௳ அரைவீட்டண்ணனும் மூத்தமகளும் குழந்தைகளும் குருவிகுத்துத் தெய்வாயியும் அவள் மகளும் வந்தார்கள். ஷெயாரிருந்து ௬-௳ விடியக்காலம் முதலூருக்குப்போனார்கள். தெய்வாயியிருந்தாள். நான் சம்பனத்துக்குப்போனேன். மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை மகளைப் பார்க்க வந்தார். இரவில் ஷெயார் மகளும் நானுஞ் சுவிசேஷபுரத்திலிருந்து வந்தோம். ௫-௳ விடியக்காலம் ஷெயார் மகளுங்கூட வடக்கன்குளத்துக்குப் போனார்கள். பின்பு தெய்வாயியும் சுவிசேஷபுரத்துக்குப்போனாள். ௯-௳ ௭-ஸ்ரீ பிள்ளையவர்கள்வந்துசோதிகைநாத்துக்குப்போய்வந்து வீட்டுக்குப்போனார்கள்.

௭-௳ சாயுங்காலம் இருளபெற்ற மரியம்மாளுக்குக்காய்ச்சலும் இளைப்புமுண்டாயிற்று. ௮-௳ மருந்துகொடுத்தது. ௰-௳ மன்னன்போலிருந்தது. மத்தியானம் தங்கச்சி தித்தேரியம்மாளுக்கு சற்றே கடமாயிம்படி சுகமாயிருக்கிறதென்று ஷெயான் மகன் திருமகாதபிள்ளைவந்து சொல்லிப்போனார் சாயந்திரம். ௰௩-௳ சுவிசேஷபுரத்துப்பிள்ளை மாமியாருந் தமையன்மாரும் வந்தார்கள் குழந்தையைப்பார்க்க.

௰௨-௳ காண்டைக்குப்போன என் சமுசாரங் குழந்தைகள் வருவார்களென்று ௰-௳ வந்தகாயிதப்படி பார்த்திருந்தோம்வரவில்லை. ௰௩-௳ சாயுங்காலம்வந்துசேர்ந்தார்கள். என் சமுசாரத்துக்குக் கண்ணின் கீழ் பருவும் வண்டியிலிறங்கிறபொழுது முருகன்குறிச்சியில் விழுந்ததில் நெஞ்சக் கீழ் எலும்பில் வலியுமாக இருந்தது. வடக்குன்குளத்து ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு மகனையனுப்ப ஓலையும் சாதாபுரத்து வியாகப்பபிள்ளைக்கு அம்பிக்குமிரு சமைய சம்பந்தமென்னும்புஸ்தகத்துக்கும் எழுதினேன். வெள்ளிக்கிழமை ௰௮-௳ சுவிசேஷபுரம் பிள்ளையவர்களுத்தரவு சுவிசேஷபுரத்துக்கு நானும், பள்ளன்தட்டு சமாதானபுரத்துக்கு நம்முடைய ஊர் பாக்கியநாதவாத்தியும் உபதேசியாக மாத்தியிருக்கிறதாகவும்வந்தது. * உடனேபிள்ளையவர்களிடத்திற்போய் ஷெ ஊருக்குநான்வந்து உபதேசியாகிறதுக்கு மனதில்லை, வேறு ஊருக்கு அனுப்பினாற்போவேன், அல்லது இராசினாமாவெழுதிக்கொடுத்து வீட்டோடேயிருக்கிறதென்று சொன்னேனவர்கள் சம்மதிக்கவில்லை.

[சுவிசேஷபுரம்.]

+

சமாரியாபுரம் ஈ-ஸ்ரீ அம்மான் சவரிராயபிள்ளை யவர்களுக்கு சவரிமுத்துப்பிள்ளை விண்ணப்பம்.

தங்களை சுவிசேஷபுரத்துக்கு மாத்தியிருக்கிறபடியால் ஷெ யூர் அமுர்தநாயகம் உபதேசியார்வசமிருக்கிற கோவில் புத்தகம், சபைடாப்பு, சங்கங்கணக்கு, முதலான சகலத்தையும் ஒப்புக்கொண்டு அலுவல்பார்க்கும்படிக்கும் தங்களுக்குவதிலாய்வருகிற சமாதானபுரம் பாக்கியநாத உபதேசியார்வசம் தங்களிடத்திலிருக்கிற சகல கணக்கையும் ஒப்புக்கொடுக்கும்படிக்கும்,

ஷெ சமாரியாபுரம் பாக்கியநாத உபாத்தியார் ஷெ பாக்கியநாத உபதேசியார்வசம் தன்னிடத்திலிருக்கிற கணக்குகளை ஒப்புக்கொடுத்து ஷெ சமாதானபுரத்துக்கு உடனேபோய் ஷெயூர் சபைக்கடுத்த சகல கணக்குகளையும் ஒப்புக்கொண்டு அலுவல் ஷெ சமாதானபுரத்தில் பார்த்துவரும்படிக்கும் கனம் எசமானவர்கள் உத்தரவுகொடுத்திருக்கிறார்கள்.

௲௮௱௫௰௫-ம் ௵ மெய்மீ ௰௮-௳ சவரிமுத்து.

(இவை சமாரியாபுரம் ஈ-ஸ்ரீ அம்மான் சவரிராயபிள்ளை யவர்களுக்குக்கொடுப்பது.

---

௰௯-௳ கனம் ஆபீஸ் ஐயரவர்களுக்கு ஷெ ஊரில் நான் அலுவல்பாராதபடி வேறுவனுக்கு உத்தரவுகேட்டெழுதியனுப்பினேன்.

௨௰-௳ ஓய்வுநாள். ௨௧-௳ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுத்தரவு என்னைச் சுவிசேஷபுரத்துக்குவரும்படிவந்தது. உடனே புறப்பட்டுச் சுவிசேஷபுரத்துக்குவந்துசேர்ந்தேன். இரவில் சாமுவேல் வாத்தி செபம்.

௨௨-௳ காலையில் நான்செபம்பண்ணினேன். பின்பு கனம் ஆபீஸ் ஐயரவர்களிடத்திற்போய் சலாஞ்செய்தேன். போ, வென்ற உத்தரவு; வேறில்லைப்பேச்சு. பின்பு வடக்குன்குளம் மாப்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை தமது மகளையனுப்பாமல் காயுதமனுப்பினதுக்கு பதிலும், ஞானசமரியானுக்குப் புகழ்ச்சிபுரத்துக்கும் மதுரேந்திரஐயருக்கு சாண்டைக்கும் எழுதினேன் காயுதங்கள் ஆக ௯ மாசாலை அமுதபடி முதலான இலவெல்லாம் பிள்ளைகளுக்குக் கொடுக்கிற கணக்கும் இடங்கு சாவியும் ஒப்புக்கொண்டேன்.

௨௩-௳ செவ்வத்தது பிள்ளைகள் இல்வு அதை யளக்கொப்புக்கொண்டு வெயிலில் இரிந்திருல் தலைவிரியாப்புண்டானதினல் வாத்தி செபம்.



௨௪-௳ காலையுமப்படியே. பின்பு வீட்டுக்குப்போனேனவடத்தில் மிசியோன் வீட்டைவிடும்படி ஆயித்தஞ்செய்து என் தனதுக்குண்டான வீட்டுக்குச்செருவையுமடைத்து பக்கத்தில் ஒருதலைக் சாய்ப்புஞ் செய்தோம்.

௨௫-௳ ஷெ சாமாறெதிக்கித் தனதுவீட்டுக்குச் சேர்திருக்கும்படி நிர்மாணித்து இருநீலகண்டன் செட்டியாரிடத்தில் ஒரு வீட்டுச்சாமான் மரம் ௲ ௯இ-க்கு வாங்கினேன். சந்தையிற் பள்ளிக்கூட சாமான்களை வாங்கி, இரவில் சுசேஷபுரத்துக்குவந்தேன். பின்பு செபம்.

௨௬-௳ மதுரேந்திர ஐயர் ௰௭-௳யிலும், ௨௯-௳யிலும் எழுதிய காயுதமும், சற்குணவாத்தியாருக்கு எழுதியதும்வந்தது. பின்பு ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் காயுதம்வந்ததில் சகோத்தரியிலிருக்கிற பெண்ணுக்கு (ஜி) ௲ கைகபோடுகிறதென்றும் பெண் மாமனார் மதுரநாயகம் பிள்ளைசொல்லியிருக்கிறதாகவும் அவருக்கோவிலிடத்திற் சம்பந்தஞ்செய்ய பிரியமும் பிலையாசமுமென்றெழுதினர்கள்.

௨௭-௳ ஓய்வுநாள்க்காலையில் முதலாம்பாடம், ௨-பாடம் வாசித்து செபம். ஞானமுத்து உவாத்தியாருக்கு ஓலை ௨-வது கூறிற்று. மதியத்தில் வித்தாளியா வாசித்து யோவா. ௰௪, ௰௫, ௰௬ வாக்கியத்தின்பேரில் பிரசங்கம் பண்ணி செபம். சாயந்திரம் ௫-மணிக்கு மாலைச்செப ஒழுங்கின்படி ௨-ம் பாடம் வாசித்துச் சுருக்கமாய் ௧-கொரி. ௰௫...... புத்திசொல்லிச்செபம்.

௨௮-௳ காலைச்செபத்துக்குப்பின்பு, பள்ளிக்கூடக்கணக்கு முதலானது பார்த்து ௰௨-மணிக்குமேக்[illegible]போயவடத்திலாகவேண்டியதையும் பார்த்துச் சிலபுஸ்தகமுதலானவைகளை எடுத்துக்கொண்டு, விடியக்காலம் ௫-மணிக்குவந்து, ௨௯-௳ வீடு சுத்தஞ்செய்தது. கூலியாள் ௨-க்கு ௲. மாகாணி சகாயமுபதேசியாரும் நானுங்கூடச்செய்தோம். சாயந்திரம் ஞானமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு காயுதமெழுதினேன்.

௩௰-௳ காலை வித்தாளியார் வாசித்துச்செபம். பின்பு சிலபுஸ்தகங்களுங்கொண்டுவந்து, வீட்டில் வாசம்பண்ணினேன். பின்பு மதுரேந்திர ஐயருக்கும் மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுக்கும் இரண்டு காயுதமெழுதினேன்.

௩௧-௳ ஞானசமரியானுக்கு காயுதமனுப்பினேன். சாயந்திரம் நிசையன்விளைக்குப்போனேன், சிலபுஸ்தகங்களுமெடுத்துக்கொண்டு வியாதியாயிருந்தவர்களையும் விசாரித்துவரும்படிக்கு.

௲௮௱௫௰௫-ம் ஜூன்மீ ௧-௳ முதல் ௩௰-௳ வரை சவிசேஷபுரம் ஐ.ப. சவரிராயபிள்ளை ரிப்போறட்டு.

௧-௳ சமாரியாவிலிருந்து சிலபுஸ்தகங்களும் ஆள்வசத்திலனுப்பி, பெண்பள்ளிக்கூடத்துக்குமசாலை முதலான இலவுகளும் வாங்கிக்கொடுத்து சாயந்திரம்வந்து செபம். ஞானசமரியாளிடத்திலிருந்து ஓலைவந்தது.

௨-௳ சாத்தான்குளம் இங்கிலீஷ்பள்ளிக்கூடத்து தாவீது வாத்தியாருக்கு ஓலை எழுதி விற்றுவாங்கியனுப்பும்படி யாளனுப்பினேன்.

௩-௳ ஏசுதாசனுக்கும், மதுரேந்திரய்யருக்கும், ௨-காயிதமெழுதினேன்.

௫-௳ விடியற்காலம் செம்புலிங்கம் வசம் கருப்புகட்டி ௬-ம் இ௺ காயிதமும் ௭-ஸ்ரீ பிள்ளையவர்கள் குருசாமிக்கு ஒருஓலை வாழைப்பழமு மனுப்பினேம் பனையங்கோட்டைக்கு. பின்பு மத்தியானத்துக்குமுன் சமாரியாவுக்குப்போய்வந்தேன்: ஸ்மிட்டர்செபம்.

௬-௳ சற்குணவாத்தியாருக்கு மதுரேந்திரய்யர் எழுதிய காயிதத்தை யனுப்பும்படி மாசில்லாமணி யிடத்திற்கொடுத்துவிட்டேன்.

௭-௳ இரவிற் சமாரியாவுக்குப்போயாகவேண்டிய காரியங்களைப்பேசியும்செய்தும் ௮-௳ காலையில் சாண்டைக்காயிதம் ஏசுதாசன் காயிதமும் செம்புலிங்கன்கொண்டுவந்தான். பின்பு சந்தையிற் பாக்கியத்தைச் சாமான் வாங்கிவரும்படிசெய்து சவிசேஷபுரத்துக்குவந்தேன்.* காலமே ஐயரவர்கள்வந்திருந்தார்கள். பின்பு ௭-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் கடிதமும் வந்தது. ௰-௳ ஞாயிற்றுக்காலை வாராதவனுக்கு ஸ்மிட்டர் சீவாமியடியான் பென்சன் இகோவிலுக்குவாராதவனுக்கு இ௺ ஸ்மிட்டருக்கு ௧-மீ அனுவலில்லை. அப்படியே மணி ஆபிரகாமுக்கும், பிள்ளைகள் சமையல்காரனுக்கும்தீர்ப்புச்செய்தார்கள். ௰௧-௳ சமையல்க்காரனுக்கு மன்னித்தலவலிவைத்தார்கள். விடியக்காலம் நம்முடைய வீட்டிற் சாமான்களெடுத்துவந்தோம் ௫-ஆள் கணக்கெரண்டு. சாயுங்காலம் என்சமுசாரமும் குழந்தைகளும்வந்தார்கள்.

௰௨-௳ மணியாபிரகாமும் முந்தினவேலையில் வைத்தார்கள். மதுரேந்திர ஐயருக்கு இ௺ காரியங்களையும் தனது காரியங்களையும் எழுதினேன்.

௰௪-௳ சம்பளமுறை ஈசாக்குவாத்தி காயிதம் சாண்டை ஐயரவர்கள் நன்னைவிளைக்கு ஞானவுயிர்ப்பிள்ளை மகன் சாமுவேல்பிள்ளை கலியாணத்துக்குப்போயிருக்கிறார்கள்; ௰௪-௳ இரவிலங்கிருந்து ௰௫-௳ காலையிற் சவிசேஷபுரத்துக்குவருவார்களென்றெழுதிவந்தது. அதற்குமுன் ஞானசமரியாள்வந்திருந்து, சனம் ஆபிஸ் ஐயரவர்கள் நேசரியாளைச்சந்திப்போறதாகச் சேட்-



டதினால் ௰௫-௳ காலமேபோய்விட்டாள், இ௺ ஐயர்வந்தார். பின்பு நான் திசையன்விளைக்குப்போய் இன்னுசியம்மாளையும் செபத்தியாயியையுங் கூட்டிவந்தேன்.

௰௭-௳ விடியக்காலம் இ௺ ஐயர் ஆசீர்பாதபுரத்துக்கு ஆராதனைசெய்யவென்றுபோய்விட்டார்.

௰௮-௳ யவர்தாய் சமாரியாவுக்குப்போனவிடத்தில் சனம் ஆபிஸ் ஐயரவர்கள்வந்திருந்தார்களாம். மேட்டியையும் குதிரைக்காரனையும் குதிரையையும் நம்முடையதனதுவீட்டை இ௺ யூர் உபதேசியாக்கியவர்தன் காண்பித்துக்கொடுத்து அவ்விடத்திற் குதிரைகட்டவும் முன்சாயப்பில் சமையல் செய்யவுஞ் சொன்னோம். குருபாதமுக்கந்தன் நமக்குச் சமையல்செய்கிற அடுப்பில் சமைக்கச்சொல்லியதிற் சமையல்செய்தானுங் குதிரைக்காரன். மேட்டி என்னிடத்திற்சொல்லி மன்னிப்புக்கேட்டான்.

௰௯-௳ ௨௰-௳ மத்தியானம் ஆண்பிள்ளைப்பள்ளிக்கூடத்து உவாத்தி பிள்ளைகள் ஸ்மிட்டன் இவர்கள் டோனவூருக்குப்போனார்கள். சனம் ஐயரவர்கள் சாயந்திரம்போனார்கள்.

௨௧-௳ நான் சமாரியாவுக்குப்போய்ச் சாமான்களும் ஏதுக்கிக்கொண்டு கடன்காரர் கொடுக்கல் வாங்கல் கணக்குந்தீர்த்துக்கொண்டு மற்று இலவுகளும்வாங்கி, வண்டியிற் சாமான்களுங்கொண்டு சவிசேஷபுரத்துக்கு இரவில் ௰-மணிக்குமேல்வந்து சாப்பிட்டோம் பிள்ளையவர்கள் வீட்டில். ௨௨-௳ காலையில் உபதேசிமாருக்காக கட்டின வீட்டிற் சமையல்செய்து குடியிருப்பாக்கினோம். செபத்தியாயியும் விசுவாசமும் இன்னுசியம்மாளுங்கூடத்தான். யாக்கோவு அவர்கள் வீட்டிற்சேர்ந்தான்.

௨௩-௳ முனிசுப்பிள்ளை மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் காயிதம் வந்ததில் மதுரேந்திர ஐயர் பாளையங்கோட்டைக்குப்போய் சத்தாம்புளி மதுரநாயகம்பிள்ளை இடத்திற் பேசினதிற், ஞானசமரியாப்பிள்ளைக்கு ஆவணிமீ கலியாணம், பெண்வீட்டாரும் மாப்பிள்ளைவீட்டாருமாகத்தானே கலியாணத்தை நிறைவேற்றுகிறதென்று தீர்மானித்திருக்கிறது: அதற்குவேண்டியதைச் செய்யுங்களென்பதே.

௨௪-௳ பதில் எழுதியனுப்பினதோடே, மதுரேந்திர ஐயருக்கும் ஏசுதாசனுக்கும் ௨ கடிதமுமெழுதி, ௨௭-௳ அனுப்பினேம்.

௨௯-௳ சமாரியாவுக்குப்போய் ஆசாரியிடத்தில் பிள்ளைக்கு சங்கிலியும் காப்புமுண்டாக்கிவரும்படி வெள்ளிகொடுத்துவந்தேன்.

௲அ௱௫௰௫ ௵ ஜுலாய்௴ முதல் சுவிசேஷ நிதசரி ரிப்போர்ட்டு.

௩-௳ சங்கத்துக்குப்போகும்படிக்குப் புறப்பட்டு பாளையங்கோட்டைக்குப்போய்ச்சேர்ந்தேன். அவ்விடத்தில் மதுரோந்திரய்யர், மரியசவரிமுத்துப்பிள்ளை, ஞானசமரியானும் வந்தார்கள். பின்பு சத்திரங்கட்டியிருந்ததைப் பிரஸ்திட்டைசெய்தார்கள்; கனம் சார்சென்றய்யரவர்கள் புத்திசொல்லிச் செபம்பண்ணினார்கள். இராவில் வியாகப்பபிள்ளை வீட்டிற்சாப்பிட்டோம்.

௪-௳ சங்கம். கைம்பெண் சங்கத்தில் ஒரு சட்டங்கட்டும்படி பேசினார்கள்: அது கைம்பெண் கலியாணஞ்செய்து பின்னுஞ் சங்கத்துக்குச் சேர்ந்திருக்கும்போது, பின்னுங் கைம்பெண்ணானால் முந்தின திட்டப்பணமும் பின்தின திட்டப்பணமுங்கொடுக்கிறதென்பதே. பெரியநாயகம்பிள்ளை வீட்டிற் காசரோத்துப் பெரியநாயகம்பிள்ளை, மதுரநாயகம்பிள்ளை, அச்சுக்கூடத்து மதுரநாயகம்பிள்ளையும் பின்னுஞ்சிலபேரையும்வைத்துப் பெண்பேசினேன் ஞானசமரியாம்பிள்ளைக்கு, திட்டமாயிற்று.

௫-௳ மதுரோந்திர ஐயரிருந்ததினுலமிருந்தேன். ௸-இராவில் மரியசவரிமுத்து மச்சினம்பிள்ளை மதுரநாயகம்பிள்ளை வீட்டிற் சாப்பிட்டு கட்டுச்சாதமுங்கட்டி விடியக்காலம் ௩-௳ புறப்பட்டுச் சுவிசேஷபுரத்துக்குவந்து சேர்ந்தேன்.

௭-௳ ஞானசமரியான் தன் கிராமத்துக்குப் புறப்பட்டுப்போனான். ஸ்ரீவைகுண்டத்து தேவசகாயங்கூடப்போனான்.

௮-௳ மதிய ஆராதனைக்குப்பின்பு எனக்குக் காய்ச்சல்வந்தது.

௰௧-௳ புதன்கிழமைமாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் வந்தார்கள்.

௰௫-௳ காலையிலும் மத்தியானத்திலும் ஆராதனைக்குப்போய்ச்செய்தேன். பின்னுஞ் சுகமில்லை. ம-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குக் காய்ச்சல் மிகுதியாயிருந்து வருத்தமாயிருந்ததினாலவர்களுஞ் செபம்பண்ண வேதுவில்லாதிருந்தது. அவர்களுக்கு பலமருந்துகள் யோசித்து, ௨௧-௳ அமுக்கிராச் சூரணஞ்செய்து, ௨௨-௳ கொடுத்தோம். எனக்குஞ் சுகமாயிருந்து மூன்று நேரமும் ஆராதனைசெய்தேன். ௨௪-௳ காலையிற் ௰-மணிக்குமேற் சகாயஉபதேசியார் வந்திருக்கும்போது, வியாகப்பன் ஞானப்பிரகாசமுங் கூறுத்தவமாய்ப் பேசிக்கொண்டிருந்ததைவிட்டுக் கோவித்துக் கடிந்துகொண்டேன். அதின் முன்னும் பின்னுமான நாள்களில் காலாந்துலாவிற் கூத்துப்பார்க்கப் போனார்களென்று கேள்விப்பட்டோமப்பொழுது தகப்பனுருக்கும் வியாதி, வியாகப்பன்பெண்சாதிக்குங் கையில் கொழுப்பு உருக்கினெரெய்பட்ட புண் வேதனையும், எனக்கு நல்ல சவுக்கியமில்லை. பின்னும்பலவித விசாரமிருந்து



அதை என்னால புத்தியீனம். ௸ கூத்துப்பார்க்க ஊரார்எல்லாருஞ் சிலர் தவிரப்போனார்கள். அவர்களுக்குக் கண்டிப்பாய்ப் புத்திசொல்லி, ௸ பின்ளையவர்கள் மக்கள்செய்த காரியத்துக்கு கண்டிப்பான புத்திசொல்லிப் பின்னு முருகன்குறிச்சிக்கு கனம் சார்சென்றய்யரவர்களுக்கும் ம-ஸ்ரீ குருசாந்தனாயவர்களுக்கும் எழுதியனுப்பினார்கள்.

௩௧-௳ ஞானசமரியான் காயுதம்வந்ததில் ௰௨-௳ நாள் கோவிலிற் படுத்திருந்தபோது இராவிலேதோ ஒரு பூச்சிகடித்து விஷந்தோன்றினதினால், மருந்து சாப்பிட்டுப்பத்தியம் ௰௫ நாள்வரையும்: பின்பு சுகமாயிருக்கிறேனென்றுவந்தது. அப்பொழுதவனுக்குத்தானுய்வந்த ஞானப்பிரகாசி தானுதவிசெய்து இருந்தாளாம். ௨௨-௳ குருவிரத்தத்திலிருந்து நெய்வாயிவரிருந்தவனிருக்கிறான்.

---

௲அ௱௫௰௫ ௵ ஆகஸ்டு௴ ௨-௳ ம-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களும், வியாகப்பபிள்ளை, ஞானப்பிரகாசம்பிள்ளையும் மதியத்துக்குமேல்போனார்கள் பாளையங்கோட்டைக்கு.

௪-௳ சம்பள உத்தரவுவந்தது.

௬-௳ சாயந்திரம் புறப்பட்டு பறப்பாடியிற் தங்கி, ௭-௳ டோணூருக்குப்போய்க் கனம் ஐயரவர்களிடத்தில் பாடமுங்கேள்விகள் யாவுக்குமொப்புவித்தோம். உபதேசிமார்சம்பளங்களைக்கு இவ்விடத்திலிருந்து முடித்தனுப்பாததினால் ௯-௳ கொடுத்துடனேபோகச்சொன்னார்கள். அந்தப்படி உடனே சகாயஉபதேசியாரும் நானும் புகழ்ச்சிபுரத்திற் ஞானசமரியாம் பிள்ளையைப்பார்க்கப்போய்ச் சேர்ந்தோமவனவடத்திலிருந்து வடக்குன்குளத்துக்குப்போயிருந்தான். ௮-௳ காலமேவந்தான். பின்பு சமைத்து, சாப்பிட்டு இராவில் சுவிசேஷபுரம்வந்துசேர்ந்தோம். ௭-௳ சிமியோனிப்பள்ளிக்கூடத்திலிருந்து தேவசகாயம்வந்திருந்தான்.

௰-௳ வரை ம-ஸ்ரீ பிள்ளையவர்கள் ௸ மருந்து சாப்பிட்டார்களதில் காய்ச்சல் நின்றது. தொண்டைக்கட்டும், தலைநீர், காசிகளியிருக்கிறது.

௰௧-௳ வடக்குன்குளத்துக்குப்போகிற நெய்வாயி ஆசைப்பள்ளியாளிவர்கள்கூட என் சமுசாரம் புகழ்ச்சிபுரத்துக்கு ஞானசமரியானைப்பார்க்கப்போனாள்.

௰௪-௳ தேவசகாயம் சமாதியாவுக்குப்போய்வந்தான்.

௧௫-வ கனம் ஐயரவர்களிவடத்துக்குவந்தார்கள். தமிழ் ஆவணிமீப் பிறப்பு வடக்குன்குளத்துத்திருநாள்முடிவு.

௧௬-வ சமாரியாவுக்குப்போய்ச் சாமான்வாங்கிவெள்ளைக்கண்ணிடத்தில் ௲ சலிக்கு நெல் வாங்கிக்கொண்டுவந்தேன்.

௧௭-வ உபதேசிமார்சம்பளம். இரவில் ஆராதனை ராப்போசனம். பெண்பள்ளிப்பிள்ளைகள்க்கு விடுதலை-நாள் ௧௫.

௨௧-வ வியாகப்பபிள்ளை சமுசாரமுமவர் சகோதரி அருளம்மாளும்போனார்கள் பாளையங்கோட்டைக்கு. வழியில் செபத்தியாயி கொர்திக்காய் விழுந்துபோயிற்று. இரவில் ஏசுதாசனுங் குதிரைக்காரனும் வந்தார்கள். அதற்குமுன் வடக்குன்குளத்திலிருந்து ஆண்டிபட்டித் தேவசகாயம்பிள்ளை அருளம்மாள் மகளை கலியாணமுடித்தபின் முதலாவது வந்திருந்தான். முனிசுப்பிள்ளை கடிதம் ஒன்றும் மதுரேந்திர ஐயர் கடிதமும் குதிரை வாங்கும்படி ௲ ௰௪ வந்தது.

௨௨-வ ஷை குதிரை வாங்கும்படி நாலாந்துலாச்சிவணைஞ்சபெருமாள்த்தேவனை நீர்மானித்து ஷை ௲ ௰௪ம் செலவுக்கு ௲ ௧ங் கொடுத்தனுப்பினேம். புகழ்ச்சிபுரத்திலிருந்து ஞானசமரியான் ஓலைவந்தது இலவரவன்தாயாருக்கு முகத்திலிருந்த வியாதியை அவடத்திலிருக்கிற வயித்தியன் மருந்துசெய்யும்படிக்கு அவர் தாயின்னம் ஒருவாரமிருக்கவேண்டுமென்றுவந்ததந்த ஊர் சபையுப்பன்.

௨௩-வ இரவில் ஷை வியாகப்பபிள்ளை சகோதரியும் வண்டிக்காரனும் வந்தார்கள். ஈ-ஸ்ரீ முனிசுப்பிள்ளை மாப்பிள்ளை கடிதமும் ஈசாக்கு வாத்தியார் கடிதமும்வந்தது. மைகூட்டிவைத்தேன்; . செலவு ௲ மாகாணி. செபத்தியாயிக்குத் தயிலம்பூசிவைத்தேன் முழுகும்படி.

௨௪-வ புகழ்ச்சிபுரத்துக்கு காயிதமெழுதி ஷை வந்த மனிதனையனுப்பினேன். பின்பு சந்தைக்குப்போய் ௲ இ அக்கு புதுராட்டு ௨.வாங்கினேது. ஏசுதாசன் கூட்டப்பட்டித்து பர்வியோசர்த்தின் சொழும்பில்போய் வயிட்டராயிருக்கிறவன் ஷைபாளைப் பார்க்கவந்தான். இராவில் செ: புலிங்கமும் வந்தான். சமாரியாவிலிருந்து வந்தசெபத்தாள் நாளிருந்து இன்றூருக்குப்போனாள்.

௨௫-வ இரவில் கனம் ஐயரவர்கள் வந்தார்கள் கிராமத்துக்குப்போய்
௨௬-வ காலை மத்தியானமும் வீர்களாராதனை.

௨௭-வ காலையிற் குதிரை விசாரிக்கப்போனவர்கள் அகப்படாமல் வந்தார்கள். பின்பு சபையிற் குழந்தைகளுக்கு மத்தியானம் ஞானஸ்நா—



கொடுத்தது. இரவில் மதுரேந்திர ஐயருக்கும் ஈசாக்கு வாத்தியாருக்குங் காயிதமெழுதி ௨௮-வ விடியக்காலம் சுரண்டைக் குதிரைக்காரனையனுப்பினேன். பின்பு சபையாரில்த் திடப்படுத்தலடைந்தவர்களை விசாரித்துக் கணக்குப்பண்ணினேன். பள்ளிப்பிள்ளைகளில் மூன்றுபேரைக் கிராமங்களில் வாத்தியாக அனுப்பப்பட்டது.

௨௯-வ சாயந்திரம் கனம் ஐயரவர்கள் டோனாவூருக்குப்போனார்கள்.

௩௰-வ சமாரியாவில் நம்முடைய வீட்டுக்குள்வைத்திருந்த பலகைப்பு எடுத்துவரும்படி ஆளனுப்பினேன். வந்ததுகூட வெள்ளைக்கண்ணுடைய தருமக்கண்ணு. பாளையங்கோட்டைக்குப்படிக்கப்போகிற ஏசுதாசன் யோவான் தேவசகாயம் இரண்டுபேருக்குந் துணையாள் வேதநாயகத்தைத் திட்டஞ்செய்து, ௩௧-வ வெள்ளிக்கிழமை விடியக்காலம் சுரண்டை ஐயருக்கு வாப்புக்கருப்புக்கட்டியும் அனுப்பினேம். பிள்ளைகள் கூடப்போனார்கள் பின்பு சந்தைக்கும்போய்வந்தேன். வாத்தி செபம். பின்பு ஈ-ஸ்ரீ விசாகவணைப்பிள்ளை இந்த ஊரிற் சிலரும் வடக்கூரிலி லெருவனுங்கூடி சனம் ஐயரிடத்தில் த்தமதுபேரில் பராதுசொல்லும்படிசெய்திருக்கிறார்களென்றார்கள்.

---

௲௮௱௫௰௫ செப்தெம்பர்மீ சுவிசேஷபுரம் உபதேசி சவரிராயன் ரிப்போர்ட்டு.

௧-வ பள்ளிப்பிள்ளைகள் விடுதலைமுடிந்துவந்தது.

௩-வ விடியக்காலம் புறப்பட்டுப் புகழ்ச்சிபுரத்துக்குப்போய் அவடத்திலிருந்து பூசாந்தப்பருவுக்கு மருந்துசெய்த ஆண்டி வயித்தியனிடத்தில் பேசி சம்சாரத்துக்குவேண்டிய காரசிலையுஞ்செய்து பத்தியபாகங்களுங்கேட்டுக்கொண்டு ௫-வ கூட்டிக்கொண்டுவந்துசேர்ந்தேன். வடக்குன்குளத்திலிருந்து சொத்துவாவப்பிள்ளை பெண்சாதியுமவர்கள் நெல்மக்களையாரும் பிள்ளையவர்களுக்கு மதினிமாரானவர்களிடத்திலிருந்துங்கள் மருமகளுக்குமவர்களுக்குமுண்டான வழக்குத் தீர்மானஞ்செய்துகொள்ளும்படிக்கு வந்திருந்தார்கள். ௬-வ புறப்பட்டுப்போய்விட்டார்கள். [௫-வ தெய்வாயி சேர்த்துக்கொள்ளாமல் [illegible] வந்தான்]. [illegible] மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்களுக்கும் ஏசுதாசனுக்கு காயிதமெழுதினேன்.

௭-வ விடியக்காலம் புறப்பட்டு நாசரேத்தூருக்குப்போய்விட்டதில் ஜப்பாருப்பிள்ளையாகிய பெரியநாயகம்பிள்ளையிடத்தில் ஞானசமரியானுக்குக் கலியாணமுடிக்கவேண்டிய காரியம் இடறிற்றுப்பற்றி குறித்துத் திட்டஞ்செய்

யும்படி பேசினேன். அவர் தமது சிறியதகப்பனாரிடத்திலும் மச்சினப்பிள்ளையிடத்திலுங் கேட்டபின் சொல்லுகிறதென்று சொல்லிவிட்டார்.

௰௩-௳ விடியக்காலம் புறப்பட்டு வீடுவந்துசேர்ந்தேன். கூடவேதநாயகம்வந்தான். மூக்குப்பூமிகுடியிருப்பில் ஒரு சலையான் பிள்ளைக்கு கடுக்கன் காணா காப்புபோட்டிருந்தது, ஆறு வயசுப்பிள்ளையை அடித்துவீட்டுச் சாணத்தி தாயுமகளுமாகக்கூடி ஷெ பிள்ளையை எய்த்துகூட்டி மாலையிரவில் குழந்தைக்கு இட்டிருந்த பதார்த்தத்தை கழற்றிக்கொண்டு குரவளையில்மிதித்துமயங்கினபிள்ளையைத் திரும்பக் கிணத்திற்போடக் கொண்டுபோகிறபோது, தெளிச்சைவந்து கழுத்தைக்கட்டிக்கொண்டு கிணத்திற்போடாதே விட்டுவிடு, அப்பச்சியிடத்திற் கூட தாச்சொல்லுகிறேன், பணியாரந்தாரேனென்று கெஞ்சியழுதம் கழுத்தைக்கட்டினகையை விடுவித்துப்போட்டு விட்டாளாம் என்றுகேள்வி.

௰௪-௳ சமாரியாவுக்குப்போய்வந்தேன். ௰௫-௳ நாசரேத்துருப்பெண்காரியத்துக்காக பெரியநாயகம்பிள்ளை தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுதி ௰௬-௳ ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை யிராயப்பபிள்ளையவர்கள் கடிதம்வந்ததில் ஷெ பெண்வீட்டிற் கலியாணமுடிக்கிறதுக்கு கூட ௭௰-கொடுத்தாலன்றி வேறுபெண் பார்த்துக்கொள்ளுங்களென்று பெண்வீட்டார் சொல்லுகிறார்களென்றுவந்தது. அதற்குப்பதில் எழுதினேன் ௰௭-௳ மதுரேந்திர ஐயருக்குமாக ௩-கடிதமெழுதிப்பின்பு டோனாவூருக்கு சம்பளத்துக்கு விசாரணைப்பிள்ளை உபதேசிமார் வாத்திமார் சட்டம்பிள்ளையடங்கலும்போனேம்.

௰௮-௳ ௰௯-௳ இருந்து ௨௰-௳சம்பளம். சாயந்திரம்புறப்பட்டு ௨௧-௳ காலையில் வந்தோம் வீட்டுக்கு. டோனாவூர்ச் சேகரம் உபதேசிமார் வாத்திமாருங்கூடவந்துபோனார்கள். ஞானசமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு ஷெ கலியாணக்காரியங்களையறிவித்தேன்.

௨௨-௳யும் மதுரேந்திர ஐயர் கடிதம்வந்ததுக்குப் பதிலும் ஈசாக்கு வாத்தியாருக்குமாக ௨-கடிதமும் ௨௩-௳ ஏசுதாசன் ஞானப்பிரகாசம் முனிசுப்பிள்ளைக்குமாக ௩-ம் எழுதினேன். பின்பு ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் கடிதம்வந்ததுக்குப் பதில் ௨௫-௳ எழுதி பின்பு பெண்காரியத்துக்கு பெரியநாயகம்பிள்ளை தகப்பனாருக்குமாக, ௨-கடிதமுமெழுதியாக வெல்லாவற்றையும் ௨௯-௳ வண்டி ஞானமுத்துவசத்தில் அனுப்பினேன். ௰-௳ முதல் இதுவரையும் யாவருக்குஞ் சுகத்தாழ்வுதான். பிள்ளைகள் ௩-க்கு மண்ணன். இஞ்ஞாசியம்மாளுக்கு சன்னேறவு. அவள் தாய்க்கு கண்ணிழ் பருவினால்வந்த



புண் பத்தியம். கடைசியில் எனக்குத் தலைவிரிசர்ப்பும். சாயந்திர மதுரேந்திரஐயர் காயிதம்வந்தது. ௨௭-௳ பிள்ளையவர்களுக்குக் காண்பித்தேன்.

௨௮-௳ சுனம் ஐயரவர்கள் வந்தார்கள்.

௩௰-௳ ஈ-ஸ்ரீ மாப்பிள்ளைப்பிள்ளையவர்கள் கடிதம்வந்ததில், மதுரேந்திர ஐயர் முருகன்குறிச்சிக்குவந்ததாயும், நாசரேத்தூர் பெண்காரியத்தில் மாறுபாடுவந்ததாயும் இருக்கிறதைக்குறித்துக் கேட்டதற்கு சந்நருக்குச் சித்தம் நம்மைவிட்டகன்றுபோகும்படியிருக்கிறதாக்குமென்றுமதைப் பேசவேண்டியதில்லையென்றதாயுமெழுதினார்கள். காலை மதியம் ஐயரவர்களாராதனை. மாலை நான் ஆராதனைசெய்தேன். சத்தம்பன்னியாளுமவன் மக்கள் ௩ பேருமாக பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்திருந்தார்கள்.

---

௲௮௱௫௰௫ (ஞூ) அகஸ்டோபர்மீ சவரிராயன் ரிப்போர்ட்டு.

௮-௳ கிராமமுனிசு மாசில்லாமணியைத் தோட்டவேலை பங்களாவேலை முதலானயாவும்பார்த்துவந்ததைவிட்டகற்றினார். ஷெ பங்களாசாவி முதலானதையும் ஷெ வேலைகளுக்கு ஆள்களைக்கொண்டு பார்க்கும்படி எனக்கு ௯-௳ உத்தரவுசெய்து,சுனம் ஐயரவர்கள் திசியீ கூட்டத்துக்கு பண்ணைவிளைக்குப்போனார்கள். ஈ.ஸ்ரீ பிள்ளையவர்களிடத்திலிப்படிப்பட்ட அலுவல் பார்க்கிறதினால் ஒருவேளை நம்மையுந்தள்ளுதற்கேதுவாமென்பதினாற் கூடாதென்றுசொல்லச், சம்பளம்வாங்கினால் எசமான்சொன்னதெல்லாஞ்செய்யவேண்டுமென்றார்கள்.

௰-௳ ஒருபிடன்றுறந்து சுத்தம்பண்ணப்போனவிடத்தில் ஒருபெட்டிக்குள் ஒருசருநாகமென்ற பாம்பிருந்தது. ஷெ பெட்டியைத்தூக்கி வெளியேபோட அதிலிருந்த ஒரு கிளாசும், பிங்கான்கிளாசுமுடைந்துபோயிற்று. ஞானசமரியானுக்கு பத்தாந்தெய்தி காயிதமனுப்பினதினால் ௰௧-௳ வந்தவன் இன்று சவிக்கியத்தப்பானதினாற்போகவில்லை.

௰௪-௳ அருளம்மாளையுங்கூட்டிக்கொண்டு புகழ்ச்சிபுரத்துக்குப்போனேன். ஷெயாள் சேமத்துப்பெண்ணுக்குப்பிரியமில்லாததுபோற் பேசினான். அது பிள்ளையவர்களுக்குமவர்கள் மனைவிக்குஞ் சடைவுபோலத்தோன்றிற்று.

௰௭-௳ டோனாவூர் வேதமாணிக்கவுபதேசியாருக்கு எழுதி, சுனம் ஐயரவர்களிடத்தில் பள்ளிக்கூடச் செலவுக்குச்செல் அல்லது கூட அனுப்பும்படி வாங்கிவர ஆளனுப்பினேன்.

௰௮-௳ ஷெ உபதேசியார் ஐயரிடத்திலறிவித்ததற்கு, செல்லுமிக்கை,

116



பணம் ஆசிரில்லை, வந்தகூலிக்காரனுக்கும் பள்ளிக்கூடத்திற் கணக்கிற் சப்பளங்கொடுக்கவேண்டியதென்றதாக ஓலைவந்தது.

உக-உ என்வீட்டில் மத்தியானச்செபத்துக்குப் பூட்டிப்போட்டுப்போக ௰கூ-உ கனைத்த துறவுகோல் நானும் எடுத்தவன் ஒரு திறவுகோல்கொண்டு வீட்டைத்திறந்து உள் நாலுங்கிபோட்டு, பிறவாசலைத்திறந்து சட்டியிற்சோறுபோட்டு விரகித்தின்றுபோய்விட்டான். கொப்பு மூடிதம் ஒன்றுமாத்திரம் எடுத்துப்போனான். திறவுகோலும் பூட்டியிருந்தது. வேறொன்று எடுக்கவில்லை. ஙா-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் கடிதம் உ-பூட்டு உ-ம் மதுரோந்திரய்யர் கடிதம் உ- முருகன்குறிச்சி மதுரநாயகம்பிள்ளையவர்கள் கடிதம் க-ம் அனுப்பினார்கள். இரவிற் பிள்ளையவர்களிடத்திற் களவுகாரியத்தையறிவித்தேன்.

உச-உ ஙா-ஸ்ரீ மாப்பிள்ளைப்பிள்ளைக்கு எழுதினது; பணகுடியில் இங்கிலீசுப் பள்ளிக்கூடத்துக்கு அவர்கள் தமையனாரவர்களைவரும்படிக்கு டெழுதினேனென்றநேரத்திலவர்கள் உரு-உ எழுதிய கடிதம்வந்ததற்கும் முன்வந்த கடிதத்துக்கும் பதில் எழுதினேன். உரு-உ வண்டிவசமனுப்பு.

உசு-உ சமாரியாவுககுப்போனேன். சபையைச்சேர்ந்த புலைமாடி மகன் சுவிசேஷமுத்துக்கு வியாதி கடினமானதாயும், அவன்தாய் பேய்க்கு நேர்ந்ததாயுங்கேள்வியானேன். அவடத்தில்த் தவ்வால்காரன் மூலமாய் மதுரோந்திர ஐயர் கடிதம் ஒன்றுவந்ததை வாங்கிவந்தேன்.

உஅ-உ பாளையங்கோட்டை மாப்பிள்ளை இலுமிச்சம்பழம் ௫ அனுப்பினார்கள். அவர்களுக்கெழுதிய கடிதம்வண்டிமறந்துபோய் இன்றுபோகிறது

உகூ-உ குணசமரியான் கடிதம்வந்தது. சாப்பாட்டுக்குவருத்தமென்றும் அருளம்மாள்போகவேண்டுமென்றிருளென்றும், சம்பளம்வந்தபின் வருவானென்றும் எழுதினான்.

---

ஙு அாருரு-வருப நவம்பர்மீ உ-உ சமாரியாவுக்குப்போய்வந்தேன்.

ங-உ ஙா-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளைவந்தது.

ரு-உ சாயந்திரம் கனம் ஆபிஸ் ஐயரவர்கள் வந்தார்கள். அ-உ கனம் சார்சென்றய்யரவர்கள் வந்தார்கள். உபதேசிமார் வர்த்தமானம் கேட்பதற்கு சிலரும்வந்து சந்தேகமிப்போனதில் சங்கங்கூடினார்கள். சாளிக்கைப்பெட்டியிற்போட்டதில்லாமல் உதவி சங்கத்திற்கு மிஷனிப்போலகொடுக்கிறவர்கள் இன்னதென்றெழுதும்படிசெய்தார்கள். நான் ஙூ இன்கேன் மாகாணி போட்டதாக எழுதினேன். இரவிற் சிலசோதியர்கள் வேடிக்கை விச்சையும்,



சேனதேசம், ஆப்பிரிக்காக்கண்டத்துக் காப்பிரிகளையும், புருசியாத்தேசத்து சனிமைடைடக்கிற இடங்கள் முதலானவைகளை விநோதவித்தையாய்க் காட்டினார்கள்.

க-உ விடியக்காலம்போய்விட்டார்கள். பின்பு உபதேசிமார் மாசாந்திர விசாரணை, சம்பளம். ௰க-உ இரவில் ராப்போசனம். ௰உ-உ ஷெ ஐயரவர்கள் சென்னபட்டிணத்துக்குப்போய்வரும்படி பயணஞ்செய்தார்கள். சாயுங்காலம்புறப்பட்டுப் பாளையங்கோட்டைக்குப்போனார்கள்.

௰ங-உ கடிதமெழுதி ௰ச-உ குணசமரியானுக்கனுப்பினேன் அனுப்பிய ஆள் ௰ரு-உ வரவில்லை, யதற்குமுன் பாளையங்கோட்டைக்கு இன்றுசியம்மாள்போகவும் அவள் தாயார்கூடக் கொண்டுபோய்விட்டு கரணையில் எங்கள் மூத்தமருமகள் சுரமாய்க்கிடக்கிறவளுக்குதவிசெய்யவும் இளையமருமகன் பேறுகாலத்துக்குதவிசெய்யவும் வேண்டுமென் றெத்தனித்திருந்ததில், வண்டி வாடகைக்குக் கிடைக்கவில்லை. ஙா-ஸ்ரீ பிள்ளையவர்கள் மேற்கண்ட பாவருக்குமுதவியாகத் தங்கள்வண்டியும் தவசிப்பிள்ளையும்போக உத்தாரங்கொடுத்து, ௰௬-உ சாயுங்காலம் புறப்பட்டுப்போனார்கள்.

௰சு-உ குணசமரியான் கடிதமும் போனகூலிக்காரிகூட அருளம்மாளும் வந்தது. நான் சந்தைக்குப்போய்வந்தேன்.

௰எ-உ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுக்குக்கடிதமனுப்பினேன்.

௰அ-உ மத்தியானம் விசாரணைப்பிள்ளையவர்கள் பிரசங்கம், ஆராதனை. யவர்களுக்கு நல்லசுகமில்லை.

௰கூ-உ அவர்களுக்குச் செய்யவேண்டிய தாதுசபத்திரிச் சூரணம் செய்தோம். இட்டம்புளி பலவேசு வயித்தியனுங்கூடத்தான். பின்பு சமாரியாவுக்குப்போய் பள்ளிப்பிள்ளைகளுக்கு நெல்வாங்கிவந்தேன்.

உ0-உ மதுரோந்திர ஐயருக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்களுக்கும் [illegible] கடிதத்துக்கு ஓலை எழுதினேன். உ௧-உ ஞானமுத்துவசம் அனுப்பு. பின்பு பாளையங்கோட்டைக்குப்போன தவசிப்பிள்ளையும் வண்டியும்வந்தது. ஙா-ஸ்ரீ மாப்பிள்ளை கடிதம்வந்தது. அதில் இன்றுசியம்மாளும் பிள்ளையும் அவடத்திற் சுகமாயிருக்கிறதாயும் அவள் தாயார் கரணைக்குத் தேவசகாயம் சவரிராயனுங்கூட்டி வண்டியமர்த்தி ௰அ-உ சனிக்கிழமையன்றேபோய் விட்டதாகவும்வந்தது.

உஉ-உ சமாரியாவுக்குப்போய்வந்தேன்.

உங-உ சந்தைக்குப்போனேன். திருவட்டிக்கருப்புக்கட்டி ஙூ ௩இ-க்கு

வாங்கி சமைகூலி ரூ மாகாணி கொடுத்துவந்தேன்.

உச-ௗ மதுரோந்திர ஐயர் கடிதமும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதமும்வந்தது. மரியம்மாள் சுகமாயிருக்கிறாள்; இன்றுசியம்மாளும் பிள்ளையும் சுகமாயிருக்கிறார்களாமென்பது.

உரு-ௗ பிள்ளையவர்கள் மருந்துசாப்பிட்டார்கள். உசா-ௗ குலசமரியாளுக்கு ஒரு கடிதமுமெழுதி ரூ-கருப்புக்கட்டியும் உஎ-ௗ அனுப்பு.

உஎ-ௗ மதுரோந்திர ஐயருக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்குங் காயுதமெழுதினேன். அன்னம்மையும் உடையாத்தேவர் பெண்சாதியும் பிள்ளை மகன் சாமுவேல் கண்ணமாத்துக்கு இடையன்குடிக்குக் கொண்டுபோய் வந்தார்கள். பரிக்கப்பற்றுமறவன் உக-ௗ இரவிலகப்பட்டவனை திற்பேன நட்டுச்செய்தனுப்பினார்கள்.

உஅ-ௗ குலசமரியாம்பிள்ளை இடத்துக்குப்போன அருளும் ஓலையும் வந்தது. அவனுக்கனுப்பிய கருப்புக்கட்டியிற்பாதி வழியிற் கள்ளர் பறித்துக்கொண்டார்களாம்.

உகூ-ௗ ஏசுதாசனுக்கும் சுரண்டை ஐயருக்கும் கடிதமெழுதினேன்.
௩௰-ௗ திசையன்விளைக்குப்போய்வந்தேன்.

---

ருரு-ஸு டிசம்பர்மீ க-ௗ மதுரோந்திர ஐயர் காயுதம்வந்ததில், மரியசவரிமுத்துப்பிள்ளைக்கு நவம்பர்மீ உகூ-ௗ திங்கள்கிழமை விடிய ௫-நாழிகையிருக்குமளவில் ஒரு பெண்குழந்தை பிறந்ததாயும் யாவருஞ் சேமமாயிருக்கிறதாயுமெழுதியிருந்தது.

உ-ௗ ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்கள் கிராமத்துக்குப்போகவில்லைச் சுகத்தாழ்ச்சி. நானே மூன்றுநேரமும் ஆராதனைசெய்தேன்.

ங-ௗ ஸ்ரீ-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுக்கும் மதுரோந்திர ஐயருக்குங் காயுதமெழுதி சமாரியா செம்புலிங்கன் ச-ௗ கொண்டுபோனான். சாயந்திரம் கனம் யோவான் ஐயரவர்கள்வந்து மாலைச்செபம். ரு-ௗ காலையிலும். மத்தியானம் ராப்போசனங்கொடுத்து சாயந்திரம்போய்விட்டார்கள். செலவுக்குப்பணம்கொடுக்கவில்லை. பின்பு செலவு ௫௰-நட்டுவந்தது. ராப்போசன காணிக்கை வரவு ரூ அணாயே அரைக்கால்-ச. ச-ௗ சாயந்திரம் வடக்குன்குளம் அண்ணன் நல்லதம்பியாபிள்ளை மகன் வியாகப்பன், பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்து ஷெயார் சமுசாரங் குழந்தைகளைப்பார்த்து நம்முடைய வீட்டுக்கு வராதேபோனான் அனேக்கனாக்கு.



எ-ௗ மதுரோந்திர ஐயர் கடிதமும் ஏசுதாசன் கடிதம் மாப்பிள்ளை இராயப்பபிள்ளை கடிதமும்வந்தது. இராவில் மதுரோந்திர ஐயருக்கு கடிதம் எழுத முன்னவர்கள் மாமனூர் நல்லதம்பியாபிள்ளைவந்தார்களதையும் எழுதினேன்.

௰-ௗ டாக்டர் தேவசகாயம்பிள்ளையும் பரணிக்கரை அந்தோனி முத்துப்பிள்ளையும் வந்தார்கள்.

௰க-ௗ ஷெயார்களில் அந்தோனிமுத்துப்பிள்ளைதவிர மற்றயாவருக்கும் இரவிலும் ௰உ-ௗ காலையிலுஞ் சாப்பாடு செய்வித்தேன். இரவில் மதுரோந்திர ஐயருக்கும் ஏசுதாசனுக்குங் கடிதம் எழுதினேன்.

௰ங-ௗ கருப்புக்கட்டி ஒருவட்டிவித்துக் கணக்குபார்க்க ரூ வ லாபம். சாயந்திரம் ஏசுதாசன்வந்தான். ஷெ தேவசகாயம்பிள்ளையும் மற்றவரும் போய்விட்டார்கள்.

௰ச-ௗ ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்கள்குமாரன் சாமுவேல்கண்பூவுக்கு மருந்து செய்ய முருகன்குறிச்சிக்கு கனம்சார்சென்றய்யரவர்களிடத்துக்கு ஷெ பிள்ளையும் தாயும் பிள்ளையெடுக்கிறபிள்ளையும் கூடஅனுப்பினார்கள். மதுரோந்திர ஐயருக்குங் காயுமனுப்பினேன். பின்புசமாரியாவுக்குப்போய்வந்தேன்.

௰ரு-ௗ மதுரோந்திரஐயர் காயுதம்வந்தது.

௰சா-ௗ ஓய்வுநாள்வழக்கப்படி மூன்றுகாலமுஞ்செபம். பிள்ளையவர்களுக்குச் சுகமில்லாமல் வீட்டில் இருந்தார்கள்.

௰எ-ௗ இரவில் கனம் இஸ்பிராற்றுத் துரையவர்கள் வருகிறதாகவும் ஆறு மாசக்கணக்கு முடித்துச்சங்கங்கள் கணக்குகள் தீர்த்துவைக்கும்படியாயும், உபதேசிமார் வாத்திமார் ௰கூ-ௗ புதன்கிழமை வந்திருக்கும்படியாயும் வந்தது. உடனே ஷெ காரியத்துக்கு கிராமங்களுக்கு உத்தரவு அனுப்பினார்கள். ௰அ-ௗ ஆறுமாசக்கணக்கு முடித்தோம்.

௰கூ-ௗ விடிந்து ஷெ துரையவர்கள் வந்தார்கள். அவர்கள்சாமானிவட்டத்திலிருந்ததை ஒழுங்குப்படுத்தி யனுப்பச்செய்தார்கள். இராவிற்செபமும் பண்ணினார்கள். உ௰-ௗ சம்பளம் காலைச் செபம் பண்ணினார்கள் செபத்துக்குவராதவர்களை யெழுதிக்கொடுத்தகை ஷெ துரை என்னிடத்தில் வைத்து வைத்து கனம் ஐயர்வந்தபோது கொடுக்க உத்தரவு கொடுத்தார்கள். எனக்கு ஒருலாந்தலுங்கொடுத்தார்கள். மீதியானசாமானு மெடுத்தனுப்பி சாயந்திரம் புறப்பட்டுபோய்விட்டார்கள்.

உக-ௗ சமாரியாவுக்குப்போய்வந்தேன். உஉ-ௗ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதம்வந்ததில் கிருபைபெற்ற மரியம்மாளுக்கு இப்பஞ் சுக

மூண்டாய் மற்றக்கைமருந்திற் சுகப்படாமல் வயித்தியன்மருந்து சொல்கி றதாக வெழுதினார்கள். ஞானப்பிரகாசம் சுரண்டையிலிருந்து உங்களுக்கு ம தூ வந்திருக்கிறதாக வெழுதினான்.

உகூ-ௗ காலையில் ஷை ஞானப்பிரகாசம்பிள்ளையும் வியாகப்பபிள்ளையும் வந்தார்களவர்கள் சொன்னது; முந்தநாள் இரவில் மிகுந்தவருத்தமாயிருந் தகுழந்தைக்கு நேற்றுசற்றுலெகுவாயிருக்கிறது என்றார்கள். கர்த்தர் இரட் சிப்பாரென்று நம்பியிருக்கிறேன். ஙா-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு நல்லசுகமில் லை நானே வழக்கப்படி மூன்றுவேளையும் ஆராதனை. மதுரோந்திர ஐயர் கடி தம்வந்தது. உசு-ௗ வீடு நித்தியும் பல அலுவலுமாயிருந்தேன். மதியத்துக் குமேல்ப்படி வியாகப்பபிள்ளையும் ஷை தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளையும் பாளை யங்கோட்டைக்குப்போனார்கள். உரு-ௗ இரவில் ஙா-ஸ்ரீ மாப்பிள்ளை இரா யப்பபிள்ளையவர்கள் எழுதியனுப்பிய கடிதம்வந்ததில், ஷை கிருபைபெற்ற மரியம்மாளுக்குக் குறைய வாசியாயிருக்கிறதாகவும்வந்தது.

உஎ-ௗ பிள்ளையவர்கள் சமுசாரங்குழந்தைகளும் வந்தது. அவர்கள் சொன்னதிலுஞ் சற்றே சுகமாயிருக்கிறது முற்றிலும் பிழைக்கவேண்டுமென் றார்கள். நான் மதுரோந்திர ஐயருக்கும் ஷை மாப்பிள்ளை இராயப்பபிள்ளைக் குங் கடிதமெழுதியனுப்பினேன்.

உஅ-ௗ பிள்ளையவர்கள் பற்றுவழிக்கணக்குத் தீர்த்தோம். பின்பு ஏசு தாசனைச் சமாரியாவுக்கனுப்பினேன். சந்தைச் சிலவும்வாங்கிவந்தான்.

உக-ௗ ௩௰-ௗயும் வழக்கப்படி செபம் ஆராதனை. சாயந்திரம் மது ரோந்திர ஐயர் காயுதமும் முனிசுப்பிள்ளை காயுதமும்வந்தது.

௩௧-ௗ சமாரியாவுக்குப்போய்வந்தேன். ஙா-ஸ்ரீ பிள்ளையவர்களுமவடத் துக்குப்போயிருந்தார்கள். நான் வீட்டில் வருஷத்தின்முடிவில் நன்றியறி தலாயும் தோத்திரஞ் செபம்செய்து, இரவிற்பாட்டுகளும் படித்துக்கொண்டி ருந்தோம். ஏசுதாசன், செபத்தியாயி, தருமநாதன், யாக்கோவு, ஷை ஏசுதா சன்சிநேகிதப்பள்ளிக்கூடத்துத்தோழன் யோசேப்புமாக; எல்லாருஞ்சந்தோ சமாகிலும், என்சமுசாரமில்லாததுவும் தேவசகாயத்துக்கு சுரண்டையிற் சுக மென்றும் கிருபைபெற்றாள் என்ற குழந்தைக்கு மிகுந்தவருத்தப்பட்டுப் பி ழைத்திருக்கிறதென்றுங் கடிதம்வந்தது மனதுக்கு நிறைவான சந்தோசமில் லை. ஆகிலுந் தேவ இரக்கத்தினாலிந்த வருஷத்தில் அநேக துன்பத்திலும் விக்கினமின்றி என் சனத்தையும் என்னையுங் காப்பாற்றினாரென்று செபமும் தோத்திரமானபாட்டுக்களும் படித்துத்துதித்திருந்தோம்.

---



## ௲அ௱ருசு-ம்௵ சனுவரி௴ முதல் சுவிசேஷபுரம் உப: சவரிராயன் நிதசரி ரிப்போரட்டு.

க-ௗ விடியக்காலம் வீட்டில் விளக்குவைத்து ஷை பிள்ளைகள் யாவரும் ஞானப்பாட்டுப்படி சங்கீதம் முதலாம்பாட்டம் இரண்டாம்பாடமெல்லாம் ஒ முங்குப்படி வாசித்து செபம்பண்ணினோம். பின்பு விடிந்து காலை மத்தியா னமுஞ் செபம்பண்ணினோம். சாயந்திரம்விசாசனைப்பிள்ளையவர்கள் சமாரியா புரத்திலிருந்து வீட்டுக்குவந்தார்கள். மாலைச்செபம்பண்ணிவந்தபின்பு ஷை பிள்ளையவர்கள் வீட்டில் நமது வீட்டார் யாவரும் மலையாளத்து மாப்பிள்ளை யும் குழந்தைகளுக்கும் அவர்கள் வீட்டில்விருந்துக்குப்போனோம் ஷை...

உ-ௗ நல்லதம்பியாபிள்ளையிடத்திற் பெண்காரியங்களைக்குறித்துப் பே சினோம். ௩-ௗ ஷையார் மகளை தமிழ் தைமீ அவடத்துக்கு ஆள்விட்டு கூட்டிவரும்படி சொல்லிப்புறப்பட்டு ஊருக்குப்போனார். ௬ உ-கொடுத் தேன் சிலவுக்கு. ஏசுதாசனுமவர் சிநேகிதன் யோசேப்புங் கலந்தபனை புசழ் ச்சிபுரத்துக்கு குசைமரியானைப்பார்க்கப்போனார்கள். இரவில் மதுரோந்திர ஐயருக்குக் காயுதமெழுதினேன்.

ரு-ௗ மதுரோந்திர ஐயர் கடிதம்வந்ததில் சுரண்டையில் யோவான் தே வசகாயத்துக்குச் சுரத்தில் தோஷம்பிறந்து மரணவஸ்தையாயிருந்ததும், இத் தவருஷத்தில் கர்த்தர் கிருபையாய் அவனுக்கும் நமக்குஞ் சுகமருளினதும் பெரிதென்று காட்டியிருந்தது.

சு-ௗ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதம் ஒன்றுவந்ததில், ஷை காரிய மும் கிருபைபெற்ற மரியம்மாளுக்குத் தலைக்கு தண்ணீர்விட்டுச் சுகமாயிருக் கிறது எழுதியிருந்தது. எ-ௗ ஷை ஐயருக்கும் முனிசுப்பிள்ளைக்குங் கடித மெழுதினேன்.

அ-ௗ காலையில் ஷை ஏசுதாசனுங் கூடப்போன யோசேப்பும் அவர் கள் சித்தி தெய்வாயியும் மகள் இன்னாசியம்மாளுமவள் பிள்ளைகளுமாக வந் தார்கள். புகழ்ச்சிபுரத்திலும் ஷையார்கள் ௬ நாளிருந்துவரும்போது கு சைமரியான் அனுப்பிய சாமுவேலும் வந்தான்.

---

+

பிரியமுள்ள தம்பி குசைமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்குக் கர்த்தரு டைய கிருபையுண்டாக வாழ்த்துகிறேன்.

இவடத்தில்த்தேவ இரக்கத்தினாலே சேமமப்படியே அவடத்துச்

ருக்கவும், விசாரணைப்பிள்ளையவர்கள்போய் கணக்குகள்கொடுத்துப் பணம் வாங்கிவரவுமென்று ஷெயார்கள்போனார்கள். இரவில் ௰௨-மணிக்கு மேல் ஷெ ஐயரவர்களுமம்மாளவர்களும் வந்தார்கள்.

௩௰-ௗ பகல் இருந்த மதியத்திற் செபம் பங்களாவிற்செய்தார்கள். சாயந்திரம் ௫ - மணிக்கு இடையங்குடிக்குப்போனார்கள்.

பிப்பரவரி௴ ௧-ௗ குடைச்சீலை தைத்துப்போட்டது. ஷெ மதுரோந்திர ஐயரும் ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளை கடிதமும்வந்தது. சமாரியாபுரத்துக்குப்போய்வந்தேன்.

௨-ௗ டோனாவூருக்குப்போன உபதேசிமாரிற் சிலர்வந்தார்கள். இரவிற் பிள்ளையவர்கள்வந்து உத்தரவு, பள்ளிப்பிள்ளைகளும் வாத்திச்சியும் அவடத்துக்குப்போகவும்; பனையேருமற் போட்டுவிடுகிறது; அல்லது சம்பளப் பனையேறிபோட்டு ஒய்வுநாள் ஏருமற்செய்கிறது என்றுத்தரவாயிருக்கிறதென்றார்கள்.

௪-ௗ ஷெ பள்ளிப்பிள்ளைகளும் வாத்திச்சியும் டோனாவூருக்குப் போனார்கள். கனம் ஐயரவர்களிடத்திலுத்தரவு வாங்கிச்சாண்டைக்குப்போகும்படிக்கு எழுதியனுப்பினேன். அதற்கு உத்தரவில்லை என்றுவந்ததின்பேரில் மதுரோந்திர ஐயருக்கு எழுதியவர்தாயாராகூட்டிவர வேதநாயகத்தையனுப்பினேன். ௮-ௗ விடியக்காலம் முனிசுப்பிள்ளைக்குங்கடிதமுமனுப்பினேன். பின்பு சந்தைக்குப்போய்வந்தேன்.

௰௨-ௗ பிள்ளையவர்கள் முசல்நெய் மருந்துசாப்பிட்டார்கள்.

௰௩-ௗ சமாரியாவுக்குப்போய் செபத்தியாயிக்கு மருந்துவாங்கிவந்தோம். கடையில் வயித்தியனும் நானும்.

௰௪-ௗ இரவிற் கனம் சார்சென்றய்யருமம்மாளும் வந்தார்கள். ஞானசமரியானுக்கு ஒரு கடிதம் எழுதினேன். ௰௫-ௗ அனுப்பு. கனம் ஷெ ஐயரவர்கள் காலைச்செபஞ்செய்து சாயந்திரம்போய்விட்டார்கள். புலமாடி விளையை பிள்ளையவர்கள்பேருக்கு எழுதிக்கொடுத்தார்கள்.

௰௬-ௗ ஷெ செபத்தியாயிக்கு மருந்துசெய்தோம்.

௰௭-ௗ காலைச்செபத்துக்குப் பின்பு முன் சுரண்டைக்குப்போயிருந்த என் சமுசாரமும் ஷெ மதுரோந்திர ஐயர் கடிதமும் மரியசவரிமுத்துப்பிள்ளை கடிதமும்வந்தது. உ௰௧ ரூ-யும் ஷெ அரிசி ரூ ஒன்னே காலே அணைக்காணும்வந்தது வண்டிவாடகையும். சாயந்திரம் ஞானசமரிய ஞானப்பிரகாசம் பிள்ளை கடிதமும்வந்தது.



௰௮-ௗ டோனாவூருக்குப்போன பள்ளிப்பிள்ளைகள்வந்தது விடுதலைக்குப்போகும்படி ஷெ பிள்ளைகள் சாப்பாட்டுக்கு அரிசி கறி சாப்பாட்டுக்குக் கொடுத்துகூடவந்த சபையாருக்குங் கொடுத்தனுப்பினேன்.

௰௯-ௗ ஞானசமரியானுக்கு ஒரு கடிதம் அனுப்பு. சமாரியாபுரம் தருமக்கண்ணும் பாக்கியமும் கிழங்கு வாழைக்காய் கம்பப்புல்லுங்கொண்டுவந்தார்கள். இரவுதங்கி மறுநாள்போனார்கள். ௰௯-ௗ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் தேவசகாயம்பிள்ளைக்கு எழுதின கடிதம்-௧ அதில் செபத்தியாயியை பற்றி கேள்க்கிற மாப்பிள்ளைக்குவேண்டிய மனம் இப்படியென்று எழுதினதுக்குநல்லெழுதினேன். ஞானசமரியானுக்கு அணாச்சட்டை இரண்டு அனுப்பினேன்.

௨௰-ௗ வடக்குன்குளத்து தம்பி தேவசகாயம்பிள்ளைவந்தார். வருநீருத்தவந்தவர் பிள்ளையவர்கள் வீட்டிற்சாப்பிட்டு ௨௧-ௗ காலமே சுப்பிரமணியபுரத்திலும் புதூரிலும்போய் வருநீவைத்துஊருக்குப்போனார். ஷெயார் கூடப்போய் வருநீவைத்தபின்புவந்தேன். சாயந்திரம் என்தங்கச்சி சித்தேரியம்மாளும் மகன் தருமநாதபிள்ளையும் சின்ன பெண்பிள்ளையும்வந்தார்கள். அவர்கள் மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளைக்கு மதுரையில் அலுவலாய்ப் போகிறதாகவும் ஷெயார்கள் கூடப்போகிறதினால் அனுப்பும்படிக்குவந்தார்கள்.

௨௨-ௗ சமாரியாவுக்குப்போய்வந்தேன்.

௨௩-ௗ மதுரோந்திர ஐயருக்கு கடிதமெழுதினேன். இரவில் அனுப்பு.

௨௫-ௗ ஷெ ஐயர் காயிதம் ஏகதாசன் காயிதமும்வந்தது. ஷெ யென் தங்கச்சிபோய்விட்டாள். மதுரைக்குப்போற படிச்செலவுக்கென்று அவள் மகனிடத்தில் ரூ-௧ கொடுத்தேன், ஒருவருக்குஞ்சொல்லாமல். பின்பு ஐயர் சாமான்கள்வந்தது.

௨௭-ௗ சாயந்திரம் தம்பிதேவசகாயம்பிள்ளைவந்தார். பின்புபிள்ளையவர்களிடத்திலவர்கள் மகன் ஞானப்பிரகாசத்துக்கு பெண்சித்தனாயவர்களுக்குக் காயுதங்கொடுக்கச்சொன்னதினால் ஷெ பிள்ளைக்கும் எனக்கும் பேச்சுண்டாயிற்று. ஷெ பிள்ளைகளுக்கு இளக்காரமுண்டாக நாங்களிருக்கிறதுபோலப்பேசினார்கள். நானுமவர்வளர்த்தவளர்ப்பு அப்படியாக வேதவாயிற்றென்றும் பேசினதிலவர்களுக்கும் எனக்குமனஸ்தாபமுண்டாயிற்று. ௨௮-ௗ ஷெ தம்பி தேவசகாயம்பிள்ளை நம்முடைய வீட்டிற் சாப்பிட்டார். ஞானப்பிரகாசம்பிள்ளைபோனார் பாளையங்கோட்டைக்கு. ௨௯-ௗ தம்பி தேவசகாயம் பிள்ளைபோனார், கனம் ஐயர் அம்மாளும் சாப்பிட்டுத்தனாயும்வந்தார்கள்.

மார்ச்சுமீ ௨-ௗ சூசைமரியான்வந்தான் கூடமூப்பனும். ௩-ௗ வீ. ஆபிரகாம்பிள்ளை, பரமானந்தம்பிள்ளை, முத்துசுவாமியாபிள்ளையும் வந்தார்கள். இரவில் பிச்சைமுத்துப்பிள்ளை செபம். கனம் கன்காணியாரவர்கள் வந்தார்கள் கூடஜெக்கட்டேரியாரவர்களும். ௪-ௗ காலை பிச்சைமுத்துப்பிள்ளை செபம். ௰ - மணிக்கு மேல் இடப்படுத்தல். சாயந்திரம் ௫ - மணிக்கு மேல்போய்விட்டார்கள் மலையாளத்துக்கு.

௫-ௗ சூசைமரியானுக்கு சாத்தாங்குளம் விசாரணைப்பிள்ளை மகள் அன்னம்மையை விவாகஞ்செய்ய ஆபிரகாம்பிள்ளையிடத்திற்கேட்டு ஷை பெண் சிறியதகப்பனுருக்கும் ஷை தமையனுக்குங் கடிதமெழுதினேன். ௬-ௗ சூசைமரியான் புகழ்ச்சிபுரத்துக்குப்போனான். முருகன்குறிச்சியில் வியாகப்பனுக்கு வெடிமருந்து கண்ணிற்பட்டு வருத்தப்பட்டிருக்கிறதாக ஷை தம்பி ஞானப்பிரகாசங் கடிதம்வந்தது.

௭-ௗ சந்தைக்குப்போய்வந்தேன் இரவில்.

௮-ௗ மூனஞ்சிசெட்டியார் பெண்சாதிவந்து ஷை அன்னம்மையை தமையனும் அக்காளுமவள் மகனுக்கு உத்தரமாகக்கொடுக்கமனதாயிருக்கிறதாயும் ஆபிரகாம்பிள்ளை மனமில்லை என்பதுபோலச்சொன்னாள்.

௯-ௗ காலைச்செபத்துக்குப்பின்பு கனம் ஐயரவர்கள்: சுரண்டைக்குப் போக உத்தரவுகேட்டாயே, இப்போ மாணிக்கத்தை ஷை வேலைபார்ப்பான் ௰ - நாள் ௰௫ - நாளைக்குப்போய்வரலாமென்றார்கள்.

௰-ௗ ஷை உத்தரவுப்படி மாணிக்கவயிட்டசிட்டத்தில் பங்களாச் சில கணக்கு ஒப்புவித்து மற்றுண்டான கணக்குகளும் ஆகவேண்டிய காரியங்களும் பார்த்துக்கொண்டு பிள்ளையவர்களிடத்திலும் அனுப்பிக்கொண்டு ௰௧-ௗ காலையிற் புறப்பட்டுப் புகழ்ச்சிபுரத்துக்குப் போனேன். சூசைமரியான் பேய்ப்பூலங்குளத்துக்குப்போயிருந்தான். இரவில்வந்தான். வடக்குன்குளத்துக்கு இங்கிலீசு வாத்தியாகிய தெய்வநாயகம்பிள்ளைக்கு பெண்காரியத்துக்காயுதமெழுதி ௰௨-ௗ அனுப்பினேன் அவர் பதில்வந்தது. ஞானப்பிள்ளை பெண்சாதி இன்னாசியம்மாள் பணகுடிச் சந்தைக்குவந்தாள். சூசைமரியானுக்கு அதுவனும் உண்டாக்கிக்கொடுத்து தன்மகளையும் கொடுப்போமென்றாள். அதற்கு நான் அப்படி நாங்களவடத்துக்குவரமாட்டோம், நீங்கள் வந்தாலப்படிச்செய்வோமென்றோம். பின்பு புகழ்ச்சிபுரத்திலிருந்து டோனாவூருக்கு இரவில் ௭½ - மணிக்குப்போய் விசாரணைப்பிள்ளை வீட்டில் சாப்பிட்டப்பின்பு அவர்கள் கொழுந்தியை சூசைமரியானுக்குப்பேசித்தரும்படிக்கும் மனந்தான். மறுநாள் ௰௩-ௗ பாளையங்கோட்டைக்குப்போய் இன்னாசி



யம்மாளையும்பிள்ளையையும் சுகமாயிருக்கிறதையும் வியாகப்பபிள்ளைக்கு கண்ணில் வெடிப்பட்டபுண்ணு சுகமாயிருந்ததையும் கண்டேன்.

௰௪-ௗ முருகன்குறிச்சித் தெய்வநாயகம்பிள்ளையிடத்திலும் ஷை பெண் காரியம்பேசியவர்களும் சம்மதந்தான். ஈசாக்குவாத்தியார் வியாகப்பபிள்ளை சமுசாரங்குழந்தையும்கண்டேன். ௰௫-ௗ விடியக்காலம் புறப்பட்டு நல்லூருக்குப்போய் தேவசகாயஞ் சவரிராயன் இரண்டு பிள்ளைகளைப்பார்த்து மற்றவர்களையும்கண்டுபேசிப் புறப்பட்டு வீரகேரளம்புதூரில்தங்கி ௰௬-ௗ ஒய்வுநாள் காலை சுரண்டைக்குப்போய்ச்சேர்ந்து யாவரையும் பார்த்தேன். ஒய்வுநாள் ஆராதனைக்கு ஐயர் அம்மாள்குழந்தைகள்கூடப்போனேன் இரண்டுதரமும். இரவில் வீட்டிற்செபம்.

௰௭-ௗ ஐயர் கிராமங்களுக்குப்போனார். பாவூரிலிருந்துவந்தசாமுவேல் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கு வசூரிவந்திருக்கிறதாகச்சொன்னான்.

௰௮-ௗ பாவூருக்குப்போயிருந்து பார்த்து ௰௯-ௗ சாயந்திரம்வந்தேன். ௨௰-ௗ தலைக்குத் தண்ணீர்விட்டார்களாம். சாயந்திரம் சுரண்டை ஞானப்பிரகாசஞ்செட்டியார் வீட்டிற்குப்போய்வந்தேன். பின்பு ஐயர்வந்தார்.

௨௧-ௗ பெரியவெள்ளிக்கிழமைச் செபம் ௩ - நேரமும்.

௨௩-ௗ உயிரோடெழுந்த நாள் விடியக்காலம் ஆராதனைசெய்தார் ஐயர்; மத்தியானமும். நாங்கள் யாவரும்போனோம் செபத்துக்கு.

௨௪-ௗ விடியக்காலம் பனைவடலிக்குப்போய் ஷை கனம் முத்துசுவாமி ஐயர் அம்மாள் குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு ஷை ஐயர் கொழுந்தி அன்னம்மையைச் சூசைமரியானுக்குப்பேசிக்கொண்டதற்குத்தங்களுக்குச்சம்மதந்தான் ஆபிரகாம்பிள்ளையும் அவர்கள் மனவியும் சம்மதப்படிக்கு நடத்த வேண்டியதென்றார்கள்.

௨௫-ௗ சுரண்டைக்குவந்தேன். ஞானப்பிரகாசமும் முருகன்குறிச்சி பள்ளிக்கூடத்தில்ச்சேர்த்து கனம் ருசேஷ் ஐயரவர்கள் கல்விச்சாலையிற் சேர்த்துக்கொண்டதாகவந்தான். இன்றுவரை எனக்கு உத்தரவு நாள் சரி.

௨௬-ௗ விடியக்காலம்புறப்பட்டு நல்லூருக்குவந்தேன். அவடத்திலிருந்த என்மகன் தேவசகாயத்துக்கும் வசூரிவந்துமுகக்கட்டிறங்கியிருந்ததையும் என்பேரன் சவரிராயனையும் பார்த்துக்கொண்டு முருகன்குறிச்சிக்கு சாயந்திரம் ௭½ - மணிக்குமேல் வந்தேன். ஈசாக்குவாத்தியார் மச்சினனுக்கு ௭ - வருஷம் மண்சுமைத்தீர்ப்பும் தூத்துக்குடியிலவர் சகலன் பேதியிலிறந்துபோனசெய்தியும் விசாரித்து ஞானவடிவுக்கும் வாத்தியாருக்கும் ஆறுத

லாய்ப் பேசிக்கொண்டு ௫ - மணிக்கு முருகன்குறிச்சியைவிட்டு பாளையங்கோட்டைக்குள்வந்தேன். இன்றுசியம்மாள் தவறிவிழுந்து வலதுகை சந்துடைந்து வீக்கமும் விதனமுமுண்டாயிருந்ததும் வடக்குன்குளத்திலிருந்துவென் தங்கச்சி ஞானத்தேரியம்மாள் அவள் மாப்பிள்ளையும் குழந்தைகளும் மதுரைக்குப் போகவந்தவர்களையுங் கண்டுகொண்டு ஷையாளை விடியக்காலம் ௨௮-ட அனுப்பிக்கொண்டு ௯ - மணிக்குப்புறப்பட்டு சாயந்திரம் ௭௰ - மணிக்குள்ளாக சுவிசேஷபுரத்துக்குவந்துசேர்ந்தேன். ஷேமத்துமாப்பிள்ளை ஓலை ௧ - எனக்கும் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு...கடிதமும்வந்தது. அதில்ஷேமத்தில் தமது மகள் ஞானப்பூ மாசிமீ ௮-ட திங்கள்கிழமை புத்தியறிந்திருக்கிறதாகவும், ஷை பெண்ணைக்கூட்டிக்கொண்டுபோகவும் அல்லவென்றால் எழுதியனுப்பவும்வேண்டுமென்பதே.

௩௰-ட இரவில் ஷை கடிதங்களுக்குப்பதிலனுப்பவேண்டியதைக்குறித்துப் பிள்ளையவர்களும் நானும் பேசினதில் ஷை பெண்ணுக்குப் புகலில்லையென்றும் அப்படியானால் கூட்டிவிட்டால் என் மகனிளையவனுக்கு கட்டிக்கொள்ளுகிறதென்றும் தீர்மானித்தோம்.

௩௧-ட ஷை காரியங்களைக்குறித்து நல்லதம்பியாபிள்ளைக்கும் மதுரேந்திர ஐயருக்கும் ஆக ௨ - கடிதமெழுதினேன்.

---

௲௮௱௫௰௬-ஆ ஏப்பிரல்மீ ௧-ட செவ்வாய். ௧-ட டோனாவூர் விசாரணை ஆபிரகாம்பிள்ளைக்கு பெண்காரியத்துக்காக எழுதினேன். ஷேமத்துக்கும்மதுரேந்திரஐயருக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்கும் ஏசுதாசனுக்கும் ஆ. ச. பாளையங்கோட்டைக்குப்போகிற ஆசீர்வாதம்வசங்கொடுத்தனுப்பினேம். ௨-ட டோனாவூருக்கு ஞானக்கண்ணுபோனான். ௬ வ - சம்பளம் ௩-ட பதில்வந்தது. ஆனியின் சங்கத்திலப் பெண்கொடுக்கிறது அல்லது இல்லையென்பது இரண்டிலொன்று சொல்லக்கூடுமென்று எழுதினார் ஆபிரகாம்பிள்ளை. இதையறிந்து நமது துரிதமென்ன அவர்கள் கடத்துதலென்ன சரிப்படாதென்று மதுரேந்திர ஐயருக்கு காயிதமெழுதியனுப்பி வேறுபார்க்க வேண்டுமென்று யோசித்தேன்.

௪-ட சமாரியாவுக்குப்போய் வெள்ளைக்கண்ணு காயத்தினாலுண்டான புண்பார்த்து, பின்பு புலமூசெட்டியாரிடத்தில் சிலவு வாங்கிச் சீட்டுக்கு ௬ ௰௯-ம் நமக்கு மொத்தமாய்த்தரச்சொன்னேன் பாக்கியநாதவாத்திக்கு.

௫-ட மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் கடிதமும், விசுவாசப்பிரமாணவிளக்கம், செபபொஸ்தகம், பொருளடக்கம் என்னும் புஸ்தகமும், ஏசுதா



சன் கடிதமும்வந்தது. ௬-ட கடிதமெழுதினதையும் வேதநாயகம்வசம் அனுப்பினேம் கருசல் ஓடைக்கனாக்கு. ௬-ட ஓய்வுநாள் மூன்றுகாலமும் ஆராதனை பிரசங்கம்செய்தது. இரவில் ௮ - மணிக்கு கனம் ஆபிலையாவர்கள்வந்து உப்பு முதலான சிலசாமான் எடுத்துப் பல்லாக்கில்வைத்துக்கொண்டு உடனே ௯ - மணிக்குள்ளாகப்போனார்கள். பாளையங்கோட்டைக்கு குதிரையும்போகிறது. குதிரைக்காரன்வசம் மதுரேந்திர ஐயருக்கு ஆபிரகாம்பிள்ளையவர்கள் கடிதத்திற்கண்ட செய்திக்கு எழுதிய கடிதமனுப்பினேன். ௭-ட குசைமரியாளிடத்திலிருந்து பதில்வந்தது.

௮-ட ஆபிரகாம்பிள்ளைக்கு கடிதாசி எழுதி ௯-ட டோனாவூருக்கு கூலியாள்வசம் அனுப்பு.

+

நகல்

தாங்களனுப்பிய கடிதம் வந்தது. அதில்நான் முன்னு முங்களிடத்தில் வந்தபோது என்னமெல்லாம் பேசினது கலியாண காரியத்தில் (௰௨) காளிருக்கிறது பண்டிகைக்கு. அதுவனாயில் என்பேரப்பிள்ளை தெய்வநாயகம்பிள்ளையும் தாங்களும் ஷை காரியங்களைக் குறித்து யோசித்துச்சொல்லவும், அதற்குள்ளாக சுரண்டை முதலான இடங்களுக்குப் போய்வருவேனென்றும், போய் அவ்விடத்திலும் பேசவேண்டியவர்களிடத்தில் ஷை காரியங்களையும் அதற்குள்ள ஆட்சேபனைகளையும் அறிவித்து அவரவர்கள் மனதையும் அறிந்துவந்ததையும், தங்களுக்கு உண்மையாயறிவிக்கத்தாங்கள் ஈ-ஸ்ரீ அம்மான் தெய்வநாயகம்பிள்ளையும் கனம் முத்துசுவாமி அய்யரவர்களுக்குமெழுதவில்லை யென்றது யேன். தங்களிடத்தில் ஷை பெண்ணிருக்கிறதல்லாமலும் தாங்களே சுமைதலையாய் விசாரித்து வருகிறதினாலும் பெண்பேச யாவரு முங்களிடத்தில் யாவரும் வருகிறதன்றி வேறில்லையே. நாங்களு முங்களிடத்தில் பெண்கேட்கிறதே முறையென்றே கேட்டோம். அதற்குத்தாங்கள் நானவர்களை விசாரித்து நடத்துகிறதாயிலும் ஷை பூச்சிக்காட்டுப்பிள்ளைக்கும் வடக்குன்குளத்திலிருக்கிற மாப்பிள்ளை தெய்வநாயகம் பிள்ளைக்கும் எழுதுங்களென்றபடி யெழுதினேன். அவர்களுமெனக்குத் தங்கள்மனதையும் அறிவித்துச் சம்மதித்தார்கள். ஆகிலுமுங்களிடத்தில் கேட்கிற மாப்பிள்ளைக்குச் சம்மதியானால் நீங்கள்தானே உங்களுக்குக் கேட்கத் தக்கவர்களிடத்தில் கேட்கவும் அவர்கள் உங்களுக்கு உத்தரவு சொல்லவும் வேண்டியதாயிருக்கஉங்கள் அம்மானும் உங்கள்சகலர் கனம் முத்துசுவாமிஐயரவர்களும் எழுதவில்லை யென்றும் மாப்பிள்ளை தெய்வநாயகம்பிள்ளை வந்திரு

ந்தும் பேசி முடிவு செய்யவும் காலம்போதா திருந்ததென்றும் அவனைத் தானே சம்மந்த காரியத்துக்குப் பொறுப்பாக்கி யிருக்கிறதென்றும் அவருக்கு எதைத் தெரிந்து கொள்ளலாமென்ற மலைவுண்டாயிருக்கிற தென்றும் எழுதினீர்கள். இதைக்குறித்து நான் எழுதவேண்டுமானால் வியாக்கியானம் பெருகும். முகாதாவில்ப்பேசினால் அதற்குத்தக்கஉத்தரவுசொல்லுவேன். ஆனால் எனக்கு அவ்விடத்துக்குவர உத்தரவு கிடையாதென்பது தாங்களறிந்த காரியம். ஆகையால்த் தங்களிடத்தில் முன்பேசினதுபோலவே இப்பொழுதுங்கேள்க்கிறேன். அந்தப்பெண்ணை என்மகனுக்குக்கொடுக்கவேணுமென்கிற மனமிருந்தால் ஆமென்றுசொல்லுங்கள். இல்லையானால் வேறிடம்பாருங்களென்று எழுதுங்கள். இப்பொழுது இந்தமாப்பிள்ளை பெண்ணென்று தீர்மானித்துக்கொண்டாலும் நகைவகை செலவு முதலான பொருள்கள் ஒத்துவராததினால் சுலாயிமீ வரைதான் நடக்குமென்றீர்கள். அப்படி இது மாப்பிள்ளை இதுபெண்ணென்று இருந்தாலுமே சு-மீ செல்லுமானால் அதின்பின் இரண்டிலொன்று சொல்லக்கூடுமென்றால் அப்பொழுது இந்தமாப்பிள்ளைக்கில்லை அந்தமாப்பிள்ளைக்கென்றால் நாங்கள் அப்பொழுது வேறிடந்தேடவும் அவர்களுமுங்களைப்போல எல்லாருங்கூடிவருகிற சனுவரிமீ சங்கத்தில்இரண்டிலொன்றுசொல்லுவோமென்பார்களாக்கும். அதின்பின்னுங்காத்திருந்து தீர்மானம் அறிந்து பின்பு நாலு-மீ நகைவகை முதலான செலவுக்குப்பணஉதவி அதின்பின்கலியாணஞ்செய்ய இப்படியாக உங்கள் உபதேசி ஞானப்பிரகாசமபிள்ளைக்கு (ருஎ)ம்-ஹுப ஆகஸ்ட்டுமீ நடக்குமாக்கும்...... க்குப்போக்குச்சொல்லுவீர்களென்று... ஒருவரும் நினைக்கவில்லை. தாங்கள் சகலத்தையும் நிதானமாயும் காரியமாயும் நடப்பிக்கிறவர்களென்றே நம்பி: பண்டிகைமுடிந்தபின் பெண்ணுண்டு இல்லையென்பதைத் திட்டமாயறிவிப்பார்கள், திரிமீ கமிட்டிக்குவருகிறபோது இவ்விடம்வரையும்வந்து ஷை காரியங்களுக்கு ஆகவேண்டியதைத்திட்டஞ்செய்கிறதென்று என்மகன் மூத்தவருஞ்சொல்லியிருக்கிறார். இருந்த நாளெல்லாமிருந்து இப்பொழுதுமுடுக்கிறீர்களென்றால் இதுமுன்னிந்தப்பெண்தான் நமமைவிட்டுப்போகாதென்று நம்பியிருந்தா அல்லது இப்போதாகிலும அடுத்தமாப்பிள்ளை கேட்கிறதைவிட்டு நமக்குத்தான் உறுதியென்று இருக்கிறதாகநிச்சிலாகட்டெங்க அல்லது மாப்பிள்ளைக்கு இப்போதான் பெண்விசாரிக்கிறோமா அல்லது பெண் இப்போதான் பிராயப்பக்குவமாகவேண்டுமோ அப்படி காரியங்கள் யாதொன்றுமில்லாதிருக்க பதத்தில் பார்க்கவேண்டியதாகவும அதினால்த்தான் அதிசீக்கிரத்தில் ஷை காரியத்தை ஆகப்பண்ண விரும்புகிறோம். ஷை பெண்ணுக்கு



ஒருவரோ பொறுப்புக்காரரில்லாததினால் ஜுன்மீ கடைசியில்த்தான் இரண்டிலொன்றுசொல்லக்கூடுமென்றீர்கள். அதற்குமுன்னமே அப்படிச்சொல்லுவீர்களானால் இதுவரையில் வேறிடம்பார்ப்போம் அல்லது நீங்களுத்தரவு சொல்லுகிறதில் அப்படித்தானென்றிருக்க இடமுண்டு. அந்த யோசனை முன்சொல்லாமல் இப்பொழுது தாங்கள் சொல்லுகிறதைப்பார்த்து என்னமோ தங்களுக்குள் கலப்பான யோசனையுண்டாயிருக்கிறதுபோலத் தோன்றுகிறது. நானெழுதிய கடிதம் போத்தி தெய்வநாயகம்பிள்ளைக்கு அனுப்புகிறதாயும் அவர் எனக்குப்பதிலெழுதவாரென்றமிருக்கிறதினாலிதுவரையும் பார்த்தேன். வடக்குன்குளத்திலிருந்து ஆளிவ்விடத்துக்குவந்தது. அப்படிப்பட்டசெய்திபாவது ஓலையாவது காணோம். மேலுமாப்பிள்ளைக்கும் சுலாயிமீ வரையில் கலியாணம்முடிவிக்கவேண்டியதால் அவருக்கும் ஒரு பெண் பேசவேண்டியதாயிருக்கிறது, இதெல்லாஞ் ஜுன்மீ வரையிற் சரிக்கட்டி வருமென்றதின்பொருள் எனக்கு வி ... ... ... ... ... ... ... ... சொல்லுகிறபடி... ... ... ஜுன்மீ வரை பொறுத்திருக்கிறதற்கு எங்களுக்கு உறுதியான நம்பிக்கையென்ன. முன்காட்டியிருக்கிறபடி தாங்களுறுதியாய் வாக்குக்கொடுத்தால்த்தான் சுலாயிமீ அல்லது ஆகஸ்ட்டுமீ வரையாகிலும் காத்திருப்போம். அது...மென்பதுஞ்சரி. தம்பிஞானப்பிரகாசம்பிள்ளை கரிசலில் ஈ-ஸ்ரீ பரமானந்தம்பிள்ளையவர்கள் வீட்டில் சாப்பிடுகிறதுமிகுந்த சந்தோஷம். ஆகிலும் ஷை தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு நானும் கடிதமெழுதியனுப்பினேன். அவன் பதிலெழுதினதில் நம்முடைய கடிதம்வந்ததின் சுருக்கப்பொருளறிந்தவுடனே ஷையார் மனைவி கிருபைபெற்றாருக்கும் அவர் சகோதரன் களக்காட்டி உபாத்தியாருக்கும் முகனுடி வேறுபட்டுப்போச்சுதென்றதினால் ஈ-ஸ்ரீ பரமானந்தம்பிள்ளையவர்கள் மனம்போல அவர்கள் மனைவிக்கு இராது என்பதாகமிகவுங் கலங்குகிறோம். அதெல்லாம் தேவசித்தமிப்படியாக என்பிள்ளைகள் வீட்டுக்குவீடுதிரிந்து அவர்கள் கைபார்த்திருக்கவாமென்றிருக்கிறோம். ஷை பெண்காரியத்தைக்குறித்து தாங்களெழுதினதெல்லாம் நிதானந்தானென்று நானும் ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையும் ஒப்புக்கொண்டோம். ஆகிலும் அவசரக்காரனுக்குப் புத்திமட்டை யென்றதுபோல நானெழுதுகிறதாகவாகிலும் நினைத்து நான் வேறிடத்துக்குத் திரும்பாதபடி தாங்களிதுகாரியத்துக்கு உறுதியானவாக்குக்கொடுக்கவேண்டியது அல்லது தேவசித்தத்தின்படியாவதென்று உத்தரவுவந்ததின்பின் வேறு யோசனைக்கு இடமாகப்பண்ணுங்கள். ஆனால் ஒரு பெண்ணுக்கு அநேக மாப்பிள்ளையும் ஒரு மாப்பிள்ளைக்கு அநேகம் பெண்ணும்பேசுவார்கள். ஆ

டையில் கர்த்தரின் சித்தத்தின்படி சேமித்ததுதான் நடக்குமென்பது நிச்சயம்.

இப்படிக்கு

௲அ௱௫௰௬-ம்ௐ }
எப்பிரல் ௴ ௮-உ } சவரிராயன்.

---

௰௩-உ கனங்கிளார்க் ஐயரவர்களுங் கனம் மதுரோந்திர ஐயரும் வந்தார்கள். சாயந்திரம் கிளார்க் ஐயரவர்கள் போய்விட்டார்களிளஞ்சுனைக்கு. க உ இரவிற் சண்டைபண்ணின ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்களும், ஐயருக்குஞ் சாப்பாடு ஒன்றித்து செய்தோம். டோனவூருக்குப்போன கூலிக்காரனை வடக்குன்குளத்துக்கும் ஷை கடிதத்தை அனுப்பின ஆபிரகாம்பிள்ளை சம்பளங் கொடுக்கவில்லை.

௰௨-உ சாயந்திரம் வடக்குன்குளத்து தம்பி தேவசகாயம்பிள்ளைக்குக் கடிதம் நானும் மதுரோந்திர ஐயரும் காயிதமெழுதி ஷை தம்பி வரும்படிக்கு அனுப்பினேனும் நீத்தான்பட்டி சவரிமுத்துப்பிள்ளை வசமாய்.

௧௪-உ இளஞ்சுனைக்கு மதுரோந்திர ஐயர் வந்ததில் ௮-நாளுக்கு இருக்கும்படி போனார். ௧௮-உ திசையன்விளைக்குப் போய் இரண்டு ரூக்கு ஒரு கடாய் வாங்கிவந்தேன். ௰௯-உ இரவில் ஷை ஐயரவடத்திலிருந்து ௯-ம் நாள் வந்துவிட்டார். ௨௰-உ ஓய்வுநாள் மூன்று வேளையும் தேவாராதனைக்கு வந்தார். நானும் வாத்தியும் செபம். ஆபிஸ் ஐயரவர்கள் உத்தரவில்லாமலவர் பிரசங்கம் செய்யப்படாதாம். இரவு ஸ்ரீ-ஸ்ரீ விசாரணைப் பிள்ளை வீட்டிற் சாப்பாடு. ௨௧-உ ஷை கடாயறுக்கப்பட்டது. ஷை பிள்ளை வீட்டுக்கு ஒரு பங்கும் நமக்கு ௨-பங்காக. ௨௨-உ ஐயர் நன்னிருளஞ்சகாயமுபதேசியார் வீட்டுக்குப் போய் வரப்போனார்.

௨௩-உ சாமுவேல் வாத்தியார் கடிதம் வந்தது.

௨௪-உ கனம் சாப்பிட்டர் துரையவர்கள் வந்து காலைச் செபம்பண்ணினார்கள். இரவிலும் செபம். இரண்டாம் பாடம் நான் வாசித்துப் புத்தி சொன்னேன்.

௨௫-உ காலையி லவர்களும் மதுரோந்திர ஐயருஞ் சுப்பிரமணியபுரத்துக்குப் போய் வந்தார்கள். பின்பு சந்தைக்குப் போய் பள்ளிக்கூடசாமான் வாங்கிவந்தேன். ஷை துரையவர்கள் இளஞ்சுனைக்குப்போய் விட்டார்கள்.

௨௬-உ அலமார் முதலான சாமான்கள் டோனவூருக்கு மூன்று வண்டியில் அனுப்பினோம். என் தங்கச்சி மகன் அருமைநாதபிள்ளை மதுரைக்குப்



போயிருந்தவர் நம்முடைய வீட்டிற்கு வந்து, நம்முடைய கிறிஸ்து மார்க்கத்திற் சேரும்படி வந்தார். அப்படிப் பட்ட விருப்பத்தை யறிந்து மதுரோந்திர ஐயர் தாஞ்சேர்த்துக்கொள்ளும்படி சந்தோஷமா யேர்த்துக்கொண்டார்கள். ௨௭-உ தேவாராதனைக்கு வந்துமிருந்தார்கள். நான் மூன்றுதரஞ் செபம் பிரசங்கமும். பிள்ளையவர்கள் கிராமவிசாரணைக்குப் போய்விட்டார்கள். ௨௮-உ வடக்குன்குளத்திலிருந்து என் சிறிய தாயாரும் தம்பி தேவசகாயம்பிள்ளையும் அவர் சமுசாரங் குழந்தையும் வண்டியடிக்கிறதுக்கு ஆண்டிபட்டித் தேவசகாயமும் வந்தார்கள். சாயுங்காலம் செரிவைகுண்டம் தேவசகாயங்காயிதம் மதுரோந்திர ஐயருக்கும் விசாரணை ஸ்ரீ மாப்பிள்ளை பிள்ளைக்கும் அனுப்பினேன்.

௨௯-உ இரவில் சாமான் ஒதுக்கி ௩௰-உ விடியக்காலம் ௩-மணிக்குப் புறப்பட்டுப்போனார் பாளையங்கோட்டைக்கு. ஷை ௨௮-உ இரவில் பங்களா சன்னலே உடைத்துக்கள்ளர் உள்ளேபோய் கிலவைகளை யெடுத்துக்கொண்டு, கச்சேரி மங்களாப்பூட்டைக் கழற்றி உள்ளேபோய் அவடத்திற் சாமுவேல் வாத்தியார் பெட்டகப்பூட்டைத் தகர்த்து அதிலிருந்த ஈமானிற் சிலதை எடுத்துப் போய்விட்டான். ௨௯-உ காலைச் செபத்துக்குப் பின்பு நான் போய்ப்பார்த்து ஸ்ரீ-ஸ்ரீ விசாரணைப் பிள்ளைக்குச் சொல்லி ஷை காவற்காரர் முதலானவர்கள் வந்து பார்த்து, கனம் ஆபீஸ் ஐயரவர்களுக்கும் எழுதினார்கள். இளஞ்சுனையிற் துரையவர்களுக்கும் சாமுவேல் வாத்தியாருக்கும் எழுதியனுப்பினோம்.

---

௫௬-ௐ மேய் ௴ ௧-உ வியாழன். ௧-உ கனம் சாப்பட்டர் துரையவர்களுத்தரவுவந்து தெப்பக்குளத்தை திறப்பவும்வண்டியனுப்பவும்.

௨-உ விடியக்காலம் என் சிறிய தாயாருங் கூடவந்த ஷை யாரும் ஊருக்குப் போனார்கள்.

௩-உ கனம் துரையவர்கள் வந்தார்கள்.

௪-உ சம்பளமுறை. டோனவூரிலிருந்து தெய்வநாயகம்பிள்ளை தமது தங்கச்சியை குசைமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு கலியாணமுடித்துக் கொள்ளும்படிக்கு எழுதிய கடிதம் வந்தது. அதற்கு பதில் எழுதும்படி யோசித்து ௰-உ கனம் துரையவர்களிடத்தில் உத்தரவு கேட்டு நானும் ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்களும் போக வேண்டுமென்றதற்கு அவர்களுத்தரவு கொடாததினால் ஸ்ரீ-ஸ்ரீ பிள்ளையவர்கள் தாமே ஒரு காயித மெழுதினார்கள். கூலியாள் வசமனுப்பினோம்.

௰௨-௳ பதில்வந்தது இவ்விடத்திற் கலியாணமுடிக்கவும் குன்மாச சங்கம முடிந்தபின்னென்றும் வந்தது. இதுகாரியங்களை மதுரோந்திர ஐயருக்கும் ஏசுதாசன் ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களுக்கு எழுதி ௰௩-௳ அனுப்பினேன். பின்பு குசைமரியஞானப்பிரகாசம்பிள்ளைக்கும் ஒரு கடிதமெழுதினேன்.

௰௩-௳ திசையன்விளைக்குப்போனேன். அவ்விடத்தில் சமாரியாவிற்சேர்ந்த சனத்தில் ௫ - ம் அஞ்ஞானிகளில் ௩ - ம் ஆக ௮ - செத்தார்கள் விசபேதியில். சாயந்திரம் சுவிசேஷபுரத்துக்குவந்தேன். பின்பு கேமத்து தங்கச்சி அமுதாயி தன்பிள்ளையைக்கூட்டிக்கொண்டு கூட ஆள் ௩-ந் துணைக்குக்கூட்டிவந்தாள். ஞானப்பிள்ளைக்கும் தேவசகாயம்பிள்ளைக்கும் காயுதம் அனுப்பினேன், குசைமரியானுக்கு கலியாணம் நிச்சயமாயிற்று, ஆனிமீ நடக்குமென்றும். குசைமரியானுக்குங் காயுதமெழுதினேன்.

௰௪-௳ காயுதம்வந்ததில் மதுரோந்திர ஐயருக்குச் சுகமில்லை. உத்தரவு வாங்கிவரவேண்டுமென்றுமிருந்தது. அந்தப்படிக்கு கனம் ஐயரவர்களுக்கு வி. பிள்ளை கடிதமும் வாங்கிக்கொண்டு நானுமென்சமுசாரமுமாக மதியத்துக்குமேல் புறப்பட்டுப்போனோம். வழியிற் புசல்காற்றடித்தது. முனைஞ்சிக்குப்போய்த்தங்கி ௰௫-௳ பாளையங்கோட்டைக்குப்போய் விசாரித்துக்கொண்டுடனே சேதபற்பன் நல்லூர்மடத்திற் தங்கி ௰௮-௳ உதையத்தில் நல்லூருக்குப்போய் மரியசவரிமுத்துப்பிள்ளை முதலானவர்களையுங்கண்டு, அவருக்குக் கண்வியாதியினால் மிகுந்தவருத்தமாயிருந்தது சற்றே சுகம். பின்பு தேவாராதனைக்குப்போனோம். மதுரோந்திர ஐயருக்கு முன்னிருந்த வருத்தத்திற்கு இப்பொழுது வாசியாகி தண்ணீர்விட்டதாகவும், கேட்டதற்குத் தோத்திரஞ்செய்து மாலை ஆராதனையுஞ்செய்து ௰௯-௳ விடியற்காலம்புறப்பட்டு பத்துமணிக்குள்ளாகச் சுரண்டைக்கும்போனோம். அவ்விடத்துக்கு நீத்தான்பட்டி ஞானப்பிரகாசம்செட்டியாரும் அவர் தம்பிமாரும் இளையதம்பி பெண்சாதி மரியமுத்தும் சுரண்டை ஞானப்பிரகாசஞ்செட்டியார் செத்தபதினாறுக்கு வந்தவர்களில், மரியமுத்தும் ஷை ஞானப்பிரகாசம்செட்டியாரும் ஐயர் பங்களாவுக்குவந்தார்களவர்களையுங் கண்டுபேசிக்கொண்டோம் மறுநாள்சொல்லாமற்போய்விட்டார்களாம். ஷை ஐயருக்கு ௨௩-௳ வரை தயிலமும்*செந்தூரமும்மருந்துகொடுத்துச் சுகமாயிருக்கிறதைபற்றி மருந்து நிறுத்தி ௨௫-௳ தண்ணீர்விடுகிறதென்றும் நிச்சயித்து ௨௪-௳ விடியக்காலம்புறப்பட்டுநல்லூருக்குவந்து ௨௬-௳ பாளையங்கோட்டைக்குவந்து ௨௭-௳யும் இருந்து, அவ்விடத்துக்குப்பிள்ளையவர்கள் ஒருகாயுதமனுப்பினார்கள். ௨௮-௳ விடியக்காலம்



புறப்பட்டு சுவிசேஷபுரம்வந்துசேர்ந்து ௩௧-௳ வண்டிக்காரனுக்கு வாடகையுங்கொடுத்து காயுதமுமெழுதியனுப்பினேன். ஐயரவர்கள் சமுத்திரயாத்திரைக்குப்போனதினால், பதிலாக இவ்விடத்தில் ராப்போசனம் சம்பளம் முதலான விசாரணைக்கு கனம் யோவான் ஐயரவர்கள்வந்தார்கள். வடக்கன்குளத்திலிருந்து பிள்ளையவர்கள் அக்காள் வந்தாள்சின்னாயி.

---

ஜூன்மீ ரிப்போர்ட். ௧-௳ ராப்போசனம். ஞானஸ்நானம்.

௨-௳ சம்பளக்கூட்டம். ௩-௳ சம்பளம். ஞானஸ்நானம் அசனூர்ப்பிள்ளைகளுக்குக் கொடுத்துப்போய்விட்டார்கள் ஷை கனம் ஐயரவர்கள். ௫-௳ மாணிக்க லயிட்டர் மேசையை வீட்டுக்குக்கொண்டுவந்தேன். விஷேஷம். டோனாவூர் உபதேசியாரும் ஷை விசாரணைப்பிள்ளையும் அவர்கள் மகன் கடிதமும்வந்தது விசாரணைப்பிள்ளைக்கும் எனக்கும். செம்புலிங்கம் வசம் குசைமரியானுக்கு கடிதமெழுதியனுப்பினேன். ஷை ஏசுதாசனுக்குமவர்களய்யாவுக்கு கடிதமெழுதினேன்.

௬-௳ கனம் ஆபிஸ் ஐயரவர்கள் வீட்டம்மாள் வந்தார்கள். இரவிற் றுரையும் அம்மாளும் டோனாவூருக்குப்போனார்கள். வேதமாணிக்க உபதேசி வசம் கடிதமனுப்பினேன் விசாரணை ஆபிரகாம்பிள்ளையவர்களுக்குக் கலியாணத்துக்கு ஓலைகூறும்படி உத்தரவு வாங்க.

௮-௳ மாணிக்க லயிட்டருக்கு மேசைக்காரியத்துக்கு எழுதினேன். நான் சுரண்டையிலிருந்துவந்தபின் இன்றுதான் மதுரோந்திர ஐயர் கடிதம் வந்தது.

௯-௳ ஆபிரகாம்பிள்ளை காயுதம் ஓலை கூறும்படிக்கு கனம் சார்சென்ற் ஐயரவர்களுக்கு காயுதமெழுதும்படி வந்தது.

+

மிகவும் சங்கிக்கப்படத்தக்க போதக பிதாவாகிய கனம் பொருந்திய சார்சென்றய்யரவர்கள் சமச்சமுகத்துக்கு அடியேன் சுவிசேஷபுரம் உப்தேசி சவரிராயன் மிகுந்த ஒடுக்க வணக்கத்துடனே சலாஞ்செய்து எழுதுந் தாழ்மையான விண்ணப்பம்.

டோனாவூர்ச்சேகரம் ஒடைக்கரை யென்னும் ஊரில் உபதேசி வேலை பார்க்கிற என் மகன் ஞானப்பிரகாசத்துக்கு விவாகம் நிறைவேற்றும்படிக்கு ஷை டோனாவூரில் விசாரணை ஆபிரகாம்பிள்ளையவர்கள் சமுசாரத்தின் சகோதரியும் சாத்தன்குளத்தில் விசாரணையாயிருந்து மரித்துப்போன வாசர் மா

சில்லாமணியாபிள்ளை மகளுமாகிய அன்னம்மையைப்பேசியொழுங்குசெய்து ௸ விசாரணை ஆபிரகாம்பிள்ளை வீட்டில் ௸ பெண் இருக்கிறது, மாப்பிள்ளையும் அந்தச் சேகரத்தில் தானே இருக்கிறது, ஆனதால் ௸ கலியாணத்து ஓலை கூறும்படிக்குத் தாங்கள் தயவுசெய்து உத்தரவு கொடுக்கும்படிக்கு மன்றாடுகிறேன். அநேக சலாம்.

இப்படிக்கு சுவிசேஷபுரம்
உப. சவரிராயன்.

---

௰-௳ மதுரேந்திர ஐயருக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்கும் ௸ காரியங்களையும் எழுதினேன். ௰௧-௳யில் அனுப்பினேன். பின்பு கனம் துரை டோனாவூரிலிருந்து வந்தார்கள். சாயந்திரம் பனையிலிருந்துவிழுந்த ஆபிரகாம் மரித்தான். துரையவர்களுங்கூடவந்தடக்கஞ்செய்யப்பட்டது. இரவிற்செபத்துக்குவரவில்லை.

௰௨-௳, ௰௩-௳யும் கனம் துரையவர்கள் செபம் பிரசங்கம். ௰௪-௳ அதிசயபுரத்துக்குப்போனார்கள்.

௰௫-௳ மூன்றுதரம் ஆராதனையும் பிரசங்கமுஞ்செய்தேன். ௰௬-௳ உதையத்தில் யோவானய்யரவர்கள் செபம். பின்பு துரையவர்கள் வந்தார்கள். சாயந்திரம்போய்விட்டார்கள்.

௰௭-௳ திசையன்விளைக்குப்போய் சாமான்களை எடுத்துவந்தேன்.

௰௮-௳ டோனாவூரிலிருந்து தெய்வநாயகம்பிள்ளையும் அவர் சின்னையாவும் வந்தார்கள் அரசூருக்குப்போக. பிள்ளையவர்கள் வீட்டிற் சாப்பாடு. ௰௯-௳ இரவும் பகலுமாக மரங்கள் முதலான யாவையும் எடுத்து வந்துவிட்டேன்.

௨௰-௳ துரையவர்கள் வந்தார்கள். சந்தைச்சிலவுகள் வாங்கிவந்தது. இரவில் வாத்திச்சி பாக்கியம் மரித்தாள்.

௨௧-௳ காலைச்செபம் துரையவர்கள். பின்பு ௸ வாத்திச்சி யடக்கம் பண்ணத்துரையும் பள்ளிப்பிள்ளைகள் வாத்திமாருங் கூடவந்தார்கள். நான் செபம்பண்ணினேன். அடக்கஞ்செய்தோம். சாயந்திரம் ௸ அரசூருக்குப்போன தெய்வநாயகம்பிள்ளை வந்தார். டோனாவூர்க் காயிதமும் வந்தது. பின்பு சாப்பிடாமற் போய்விட்டார்.

௨௨-௳ ஓய்வுநாள் காலைச் செபந்துரை. மத்தியானம் என்பிரசங்கம். மாலை செபம் பிரசங்கமும் நான்.

௨௩-௳ ஜனேஞ் சார்சென்றய்யரவர்கள் வந்தார்கள். மதியத்தில் உப



தேசிமாருக்கு ௬௨. சங்: வாசித்துப்புத்திசொல்லி செபம். ஜுசைமரியானுக்கு இவடத்திற் கலியாண முகிக்க உத்தரவுகொடுத்து, நேத்து அவடத்தில் ஓலையும் கூறியிருக்கிற தென்றார்கள். சாயந்திரம் ௫½-மணிக்கு பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டார்கள். மதுரேந்திர ஐயருக்கு நானும் சகாயமுபதேசியாரும் கடித மெழுதினது அனுப்பவில்லை. அதோடே ௨௬-௳யும் ௨௭-௳யும் எழுதியனுப்பினேன். ஆபிரகாம் பிள்ளைக்கும் எழுதினேன். அனுப்பு. ௸யார் மச்சினர் ஓலை ஒன்றுவந்தது அவர்களாள் வசமதில்: ௰௬-௳ கலியாணமுகிக்க; பாக்கு அவரவர் பாட்டுக்கு அவரவர்கள் வைத்துக்கொள்ளவென்று. சாமுவேலவாதுதி குழந்தை ஒன்று இறந்தது காலை ௰- மணிக்கு. அன்பின்நகரத்திலிருந்தவர் மாமனார் வரும்வரை தாமதித்து பெட்டிசெய்து சாயந்திரம் ௫-மணிக்குச் சிறப்பாய் அடக்கஞ்செய்தது. துரையவர்களுங்கூடப் பிள்ளையவர்களும் வந்தார்கள்.

---

* கர்த்தர் தமதாவியைத்தந்தருளுவாராக்.

இவடத்தில் யாவருந்தேவ கிருபையினாலே சேமம். அப்படியே அவடத்துச்சேமாதிசயங்களையும் அறிய விரும்புகிறோம். தங்களுக்குமற்றும் பிள்ளைகள்க்கு நல்லசுகமுண்டாயிருக்கிறதையறியமட்டுமெனதுக்கு ஆறுதலில்லை. ஆகிலுங் கர்த்தர் காப்பாராக. ௰௨-௳ எழுதியகடிதம் ௰௫-௳ அனுப்பினதிற் சகலசமாசாரங்களுந்தெரியும், அத்தோடே உங்களத்தானவர்களும் செபத்தியாயிக்கடுத்த காரியங்களுக்கு எழுதினார்கள். மேலுமந்தப்பிள்ளைக்கு நமது புதுசம்பந்தச்சேகரம் விருப்பமாகத்தோணவில்லை. தமது மனம் வடக்குநோக்கிறதுபோலத்தான்தோன்றுகிறது. நம்முடைய மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளையும் தமது மகளை யிவடத்துக்கு அனுப்ப அவர் சமுசாரமுங்கூட ஒரு பெண்பிள்ளையும் அவடத்திலிருந்து ஒரு ஆண்பிள்ளையும் ராமபுரத்திலிருந்து நெளிச்சா மகன் இன்னொ சிமுத்துப்பிள்ளையுங்கூட்டிவந்து ஞு ௰௪-௳ வந்திருக்கிறார்கள். சீக்கிரம் போகவேண்டுமோமந்த பெண்தவிர மற்றவர்கள். உங்கள் மாமனாருக்கு மெத்தவும் சுகமில்லாமல்வீட்டில்தானேமருந்துசாப்பிட்டுக்கொண்டிருக்கிறாராம்.

* மூத்த அண்ணாட்சிக்கு ஐயா எழுதிய காகிதங்கள் இருக்கிறவைகளில் இதுதான் முதலாவது, இதுவும் முடித்தனுப்பவில்லைப்போலும். மூத்த அண்ணாட்சி குருவாயிருந்ததினால் மற்றப்பிள்ளைகளுக்கு எழுதுகிறதுபோல ஆசீர்வாதஞ்செய்து முகவுரை எழுதாமல் இவ்வித முகவுரை எழுதிவந்தார்கள்.

J. D. S.

மேல்ப்படியார் நெருப்பாகம் வெளியிற்சொல்லவேண்டாம். அதினலேத்தானிருக்குமட்டும் பொன்பூட்டியும்போட்டுக்கூட்டிவந்து விட்டுவிட்டாலவர்கள் பார்த்துக்கொள்வார்களென்றும். ஷெ பெண்ணுக்குமிவடத்துநோக்கமன்றி யவடத்திற்சிலருக்கு மனமில்லைப்போலவுந்தோன்றுகிறதாம். அவர்காரியம் அதிகாரவடத்திலிருந்துபிழைக்கும்படியானதேகமுமில்லை நிலைநிற்கவுமாட்டாது போலும். ஷெயவடத்திலிருக்கிற பிள்ளைகளையும் இவடத்துக்குத்தான் விட்டுவிடுகிறதுபோது மேல்படியவர்மெண்சாதி நோக்கமும் சொல்லுமிருக்கிறது. இப்பொழுது இவடத்துக்குவந்தாலவருக்கு உடனே சேவனமாகும்வழியுண்டா அதுவனாயும் சாப்பாட்டுக்கு கையில்வேண்டுமே என்றும் ஷெயாள் சொல்லித்தன் துன்பத்தைப்பற்றிகண்ணீர்விட்டழுகிறாள். இப்படியிருக்கிறதாலவர்களைப்பற்றிய விசாரமுநமக்கு அதற்கு வழிபார்க்கவும்வேண்டியதாயிருக்கிறது. ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் காரியமும் ஷெ விசாரந்தான். சீக்கிரத்திலவர்கள் பிள்ளைகளுங் கடரபார்க்கவேண்டியது நமக்குமவர்களுக்கும் பிரதானமாயிருக்கவேண்டியது. உங்கள் மனவிருப்பத்தின்படிசெய்து உங்களுக்கேஒப்புக்கொடுக்கத்தான் மனம் அவர்களுக்கு. வடக்குன்குளத்து பெரிய அண்ணாவி மகன் சவரிமுத்துப்பிள்ளை சமுசாரங் குழந்தைகளை யழைத்துவந்து ஷெ மூத்தமகன் பள்ளிக்கூடமும் படித்துக்கொடுத்துக்கொண்டு அவர்கள் மார்க்கத்தையும் பற்றிக்கொண்டாலும். நம்முடைய மாப்பிள்ளை தருமநாத பிள்ளை யிருக்கிறகுணமுஞ்சுகமும் அறியவிரும்புகிறேன். அவர் தகப்பனுந்தாயாரும் சீக்கிரத்திலிவடம்வந்துசேர்வார்கள். ஷெ தருமநாதபிள்ளை நம்மிடத்தில்வந்த செய்தியவடத்துக்குப் போம்பொழுது தள்ளிப்போடுவார்கள் அலுவலைவிட்டுவென்றும் நினைக்கிறேன். அவர்களுக்கும் ஆகவேண்டியதைத் திட்டமாக்கவேண்டும்.

---

௫௬. ஜுலாய்மீ ௧-௳ பாளையங்கோட்டை சங்கத்துக்குப்போனோம், விசாரணைப்பிள்ளையுங்கூட ராத்திரி ௯-மணியிற் சேர்ந்தோம். ௨-௳ சங்கம் ௩-௳ ஷெ ஊர் முருகன்குறிச்சியிலும் பாக்குவைத்தோம். ஏசுதாசன், தேவசகாயம் விடுதலைக்கு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். ௪-௳ சாயந்திரம் புறப்பட்டு ௫-௳ காலை வந்து சேர்ந்தோம் பிள்ளையவர்கள் கூடத்தான். திருமங்கிலியம் செய்து வந்தது மணவிவிளையிலிருந்து. ௬ காலே முக்காலே அரைக்கால். ௰௩-மஞ்சாடி தங்கம். இராவில் கனம் ஐயர்மார் ௩-பேர்வந்தார்கள்.

௬-௳ ஓய்வுநாள்; ஷெ முதலாவது பெண் ஐயர்; மதியம் ரயிலாண்ட் ஐயர்; சாயந்திரம் மெடோசய்யர் பிரசங்கம்.



௭-௳ நன்னிகுளம்வரையும் பந்தல்கால்முதலான சாமான்கள் விசாரித்து வரப்போனேன்.

௮-௳ கனம் டிப் ஐயரவர்களும் சாப்பிட்டர் துரையவர்களும் வந்தார்கள். ஞானசமரியானுக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்கும் கடிதமெழுதி வேதநாயகம் வசமனுப்பினேன். ௯-௳ இரவில் ஞானசமரியான் கடிதம் வந்தது. சாண்டையிலிருந்து மதினியும் பிள்ளைகளையுங் கண்டதாயும், ௰௪-௳ வருவார்களென்றும் எழுதினான்.

௰௨-௳ இரவில் மதுரேந்திர ஐயருந் தம்பியும் சமுசாரத்துடன் வந்துசேர்ந்தார்கள். ௰௩-௳ பெண்ணழைக்கப்போனார்கள். ௰௫-௳ இரவில் வந்தார்கள் பெண்ணழைத்து. முத்துசுவாமி ஐயர் முதலானவர்களும் வந்தார்கள்.

௰௬-௳ ௰ - மணிக்குக் கலியாணமுடித்தது கனம் எபிரி ஐயரவர்கள். கனம் சாப்பிட்டர் துரை பிராத்தனைக்கு சங்கீதப்பெட்டியில் வாசித்தார்கள். மத்தியானம் சாப்பாடானபின் ஞானசமரிய ஞானப்பிரகாசம் கையிற்போட்டிருந்த தங்கவட்டம் ஒத்தை கலைந்துபோயிற்று. ௰௭-௳யிலும் விருந்து கருள் முதலான அலுவல். ௰௮-௳ மதுரேந்திர ஐயர் போய்விட்டார். ௰௯-௳ பேட்டைக்கு மறுவீடுபோனார்கள். ௨௰-௳ வந்தார்கள்.

௨௧-௳ மதுரேந்திர ஐயர் கடிதம்வந்ததில் ௰௮-௳ இரவில் பாளையங்கோட்டையில் புலியக்குறிச்சிப்பிள்ளை யென்று வழங்கிய மாசில்லாமணியாபிள்ளையவர்கள்மரித்து ௰௯-௳ தாமேசெபம்பண்ணி அடக்கஞ்செய்ததாகவும் எழுதினார். ஏசுதாசனும் ஞானப்பிரகாசமும் படிக்கும்படி உத்தரவுப்படிக்கு முருகன்குறிச்சிக்குப்போனார்கள்.

௨௪-௳ அருணம்மாள் புத்திரியதித்தாள்.

௨௫-௳ மரியசவரிமுத்துப்பிள்ளைபோனார், [குழந்தைகள் நாதுபேருக்கும் காதுகுத்தினது.] பின்பு நான்சமாரியாவுக்கு தேவசகாயமுஞ் சவரிராயனுங்கூடவந்தார்கள் சலைதக்குப்போனோம்.

௨௬-௳ செபத்தியாயிக்கு வாய்வுவத்திரவமும் ஞானசமரிய ஞானப்பிரகாசம் பெண்சாதிக்கு வயத்துவலியுமாக உபத்திரவ மிகுதியாயிருந்தார்கள்.

௨௭-௳ ராப்போசனம்.

௨௮-௳ம் ௨௯-௳யும் மாசாந்திரக்கூட்டம். ஞானசமரியான் சமுசாரத்தோடு கருசல் ஊருக்குப்போனார். ஷெயார்கூட மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளையும் செண்டுப்பிள்ளை மகனும் போனார்கள். வண்டி ௱-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் வாடகையில்லாமலனுப்பினார்கள். ௩௰-௳ விடியக்காலம்

யோவான் தேவசகாயமும் ஷை சவரிராயனுங்கூட வேதநாயகத்தையுங்கூட்டியனுப்பினோம் நல்லூருக்கு. பின்பு வழக்கப்படி புதன்கிழமையானதாற் செபத்துக்கு பங்களாவுக்குப்போனேன். பின்பு உதவி சாலையிலிருந்துவந்த ஞானயுதத்தை உதவியாக நியமித்துமாலைச் செபமவனும் காலைச்செபம் நானுமாகச் செபமும் மற்றுங்காரியங்களையும் பார்த்துக்கொள்ளும்படி உத்தரவில் ஷையான் தற்காலத்துக்கென்றுஞ் சொன்னார்கள்.

௩௧-௳ டோனாவூர் விசாரணை ஆபிரகாம்பிள்ளைக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்குமாக இரண்டு காயுதமும் எழுதியனுப்பினேன். ஞானசமரியாளைக்கொண்டுவிட்டு மாப்பிள்ளை நல்லதம்பியாபிள்ளையும் வண்டியும்வந்தது.

---

௲௮௱௫௰௬ ஆகஸ்துமீ ௧-௳ திசையன்விளை சுப்பிரமணியமுப்பன்வந்து சாப்பிட்டு மொய் ௯ க எழுதச்சொல்லிப்போனான்.

௨-௳ காலைசெபத்துக்குப்பின்பு நல்லதம்பியாபிள்ளை தன் மகள் மாதாவடியாளை ஊருக்குவாவென்றும் மற்றவர்களிடத்திற்போறேனென்று சொல்லென்றதைக்கேட்டு அப்படிப்பேசினதென்ன இதினால்தானே உடம்படிக்கை எழுதித்தரவேண்டுமென்றேன்; அப்படி விடுகிறதில்லையென்று சொல்லி விசாரணைப்பிள்ளையிடத்திலும் நான்போய் ஷை காரியத்தைச்சொல்ல பின்னாலே நல்லதம்பியாபிள்ளையும்வந்து பிள்ளையவர்கள் ஷையார் சமுசாரந் தாயுங்கேள்(க்க) ஷையான் என்பிள்ளைகள்க்கு வேட்டி துணிகளையுங்கொடுத்த எனக்கும் மற்றுமுள்ள யாவருக்கும்வேண்டிய பணங்காசு முதல் சிலவிட்டதினும் புளியங்கொட்டை முதலாய்ச்சுமந்துகொடுத்து மண்டையுடைபொட்டலாய்ப் போனதாய்க்காண்பித்தும் எனக்கும் முப்பத்திரண்டுதரங் கடுக்கனும் போட்டதாயும் இப்பொழுதுபோட்டிருக்கிறதும் என்னுடையதென்றும்நான் நன்றியற்றவனென்றும் பிள்ளைகளுமப்படிப்பட்டவர்களாய்த்தான் பழவேட்டி முதலாய்க்கேட்டதற்கு கொடுக்கவில்லையென்றும் பேசப்பேச நானும் பயல்பரட்டை என் மகிமையும் உன் மகிமையும் நான்செய்ததும் நீசெய்ததும் வடக்குன்குளத்தூரில்ப்பேசினாற்தெரியும். நீயென் இழப்பத்தையும் செய்ததையும் பிள்ளையவர்களுக்கும் அவர்கள் மாமிக்குந்தெரியாதென்றுமாய(ம்) பேசவந்தாயென்று மிகவும் பேசிவைத்துவிட்டு வந்தேன். பின்பு தலைமுழுகவும் சாப்பிடவுங் கூப்பிட்டதற்கும் வரவில்லை. நமது வீட்டிலிருந்த மூத்த மகளையும் உடுத்திருந்த கண்டாங்கியையும் இவடத்திற் போட்டுவிட்டு ஷை பிள்ளையவர்கள் வீட்டுக்குப்போய்விட்டது. தகப்பன் ஏவுதலோ மற்ற பெண்பிள்ளைகள் ஏவுதலோ தெரியாது. சாயந்திரமுங் கூப்பிட்டும் வரவில்



லை. இதுவெல்லாம் பிள்ளையவர்களுக் கறிவித்தும் முகதாவிற் பேசினதும் அதற்குமுடிவில்லை.

௩-௳ ஷை நல்லதம்பியாபிள்ளையும்கொழுந்தியும் அணைக்கரைக்குப் போனதாயும் மகள் ஞானப்பூகோவிலுக்குப்போக வேண்டாமென்றுசொன்னதாயுங் கேள்வி.

௪-௳ கனம் சாப்பட்டர்துரை வடக்கே கோவில்ப்பட்டிவரை தகப்பனருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டார்கள் சாயந்திரம். மேட்டிவசம் இஞ்ஞசியம்மாளிரவலை அனுப்பினோம். இரவில் ஷை நல்லதம்பி மகளை நானாவது மனவியாவது வந்து கூப்பிடச்சொல்லி திருநெல்வேலிச் சவுளிக்கடைப்பிள்ளையை யனுப்பினார்கள். நாங்களவளைப் போகச்சொன்னால் கூட்டிவரவேண்டும், அப்படியில்லையானால் நாங்கள் கூப்பிட ஞாயமில்லை, அவர்கள் தானனுப்பவேண்டியது இவடத்துக்கென்று சொல்லிவிட்டேன். ௫-௳ காலையிலும் வியாகம்மையைவிட்டுக்கூட்டிவரச்சொன்னேன் அதற்குமவள் வரவில்லை. ௬-௳ இரவிற் சகாயமுபதேசியாரிடத்திலும் நமதுமேல்க்குறை சொல்லிப்பேசினார்களாம்.

௭-௳ இஞ்ஞசியம்மாள் அனுப்பிய நகைகள் போய்ச்சேர்ந்ததுக்கும் ஷை தண்டொட்டிமேலிடு அனுப்பியிருக்கிறதற்கும் கடிதம் மாப்பிள்ளையனுப்பினார்கள். முனிசுபிள்ளை ௫-௳யும் ஒரு காயுதமுமத்தோடு மநுவேந்திர ஐயர் கடிதமுமனுப்பினார்கள்.

௮-௳ சமாரியாவுக்குப்போய் சந்தைச்சிலவு வாங்கிவந்தேன்.

௯-௳ காலை கனம் எபிரிஜயாவர்கள் டோனாவூர் சம்பளம் போடப்போனவர்கள் வந்தார்கள். மத்தியானத்தில் தலைவிரியாப்புண்டாயிற்று. மநுவேந்திர ஐயருக்கு கடிதம் அனுப்பு.

௰-௳ ௰௧-௳யும் ௰௨-௳ நான் கோவிலுக்குப்போகவில்லை காலையிற் கனம் ஐயரவர்கள் செபம். இரவிலு நான் போகவில்லைக் கோவிலுக்கு.

௰௩-௳ காலைசெபஞ்செய்தேன். பின்பு பங்களாவிற் செபத்துக்குப் போகுமுன் முடிந்துபோயிற்று.

௰௫-௳ உதையத்தில் சுரண்டைக் காயுதம் வந்ததில், கோட்டாத்து சவரிராயபிள்ளை பெண்சாதி யிறந்துபோனதாகவும் எழுதியிருந்தது. பின்னும் முனிசுப்பிள்ளை கடிதம் பிள்ளையவர்களுக்கு எழுதினது, நானவர்களுக்கு ௯ ஒன்றுங்கொடாமல் மாறுபாடு செய்ததுபோலும் பிள்ளைக்குத்தமதுத்தரவில்லாமல் குறவனிடத்திற் கொடுத்து காதிலிருந்த கடுப்பனை அறுத்து

னும் பெரியகுத்தமென்றும் சுவலாதியாயுமெழுதினார்கள். பின்பு சமாரியாவுக்குப்போய் வந்தேன் இரவில். ஷை முனிசிப்பிள்ளை தலையனூர் மாசில்லாமணியாபிள்ளைக்கு அவர்கள் தம்பியின நியாயங்களைக்குறித்து அறியும்படிக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

௰௬-ௗ ஷை முனிசிப்பிள்ளைக்கும் சாண்டை ஐயருக்கும் இரண்டு கடிதமுமெழுதினேன்.

௰௭-ௗ உதையத்தில் ஆசீர்வாதம்பிள்ளையும் சேமத்தான் அண்ணனும் பிள்ளைகளும் வந்தார்கள். இரவில் வேதநாயகம்வசமாய் ஷை சாண்டை ஐயருக்கும் மாசில்லாமணியாபிள்ளைக்கும் முனிசப்பிள்ளைக்கும் கடிதமனுப்பினேன். ௰அ-ௗ சாயுங்காலம் ஷை ஆசீர்வாதம்பிள்ளை சந்தோஷபுரத்துக்குப் போனார். சாயந்திரம் ஞானத்தாங்கனை அந்தோணிமுத்துப்பிள்ளை வந்தார்.

௰௯-ௗ சாண்டைக்கனுப்பும்படி கருப்புக்கட்டி இடை உ௰-யும் பலம் ௰௫-ம் கொடுத்தார்கள் விசாரணைப்பிள்ளையவர்கள்.

உ௰-ௗ கனம் சாப்ட்டர் ஐயர் அம்மாள் குழந்தைகள் கனம் சாப்பிட்டர் துரையும் வந்துசேர்ந்து ஷை துரை கோவிலிற்செபம். ௰௧-மணிக்குப் போய்க்கண்டுகொண்டோம். பின்பு வேதநாயகத்துக்கு அலுவல்கொடுத்திருக்கிறார்கள் என்றும் பாளையங்கோட்டைக்குச்சாமான் வாங்கப்போகிறேன் என்று சொன்னான். அவனிடத்தில் ஏசுதாசனுக்கு ௪ கருப்புக்கட்டி யனுப்பினோம். சாயுங்காலம் ௫௰ - மணிக்கு கனம் எப்பிரைமயரவர்கள் சிவகாசிக்குப்போகப் புறப்பட்டார்கள்.

உ௧-ௗ காலையிற் கனம் சாப்ட்டர் ஐயரவர்கள் காலைச்செபம். பின்பு ௰௧-மணிக்கு சபையாரும் சமுடைய வீட்டுக்காரி மேலவீட்டாரும் போய் கண்டார்கள்.

உஉ-ௗ சந்தைக்குப்போய் வந்தேன். ஏசுதாசனுக்குக் காயுதமெழுதி ஏரியடியானிடத்திற் கொடுத்தேன். ஞானத்தாங்கனை அந்தோணிமுத்துப் பிள்ளை காலமேபோனார். கனம் ஐயரவர்கள் உத்தரவு இரண்டு பெண்ணுக்கு உத்தரவுஓலை கூறும்படியெழுதினார்கள். உ௩-ௗ காலையிற் செபத்தில் ஓலைகூறினேன். மத்தியானம் கனம் ஐயரவர்கள் பிரசங்கம். டிப்ஐயரவர்கள் செபம். உ௫-ௗ எனக்குச் சுகமில்லாதிருந்தது. உ௬-ௗயும். உ௭ௗ காலை செபத்துக்குப் போனேன். உதவிக்காரன் செபம். பின்பு ஏச்வடியான் வாத்திதங்கச்சிக்கும் அமுர்தநாயகம்மகன் ஏசவடியானுக்கும் ஓலைகூற உத்தரவுவந்தது. இரவிற் கனம் ஐயரவர்கள்செபம். உஅ-ௗ உதவிக்காரன்



சாமானெடுக்கப்போனான். பாளையங்கோட்டைக்குப் போனதினாலே நானே செபம்,

உ௯-ௗ காலைச்செபத்துக்குப் பின்பு கனம் ஐயரவர்கள் அமுர்தநாயகமுபதேசி மகளுக்குக் கலியாணமுகித்தார்கள் சாட்சிக்கையெழுத்துப் போட்டேன். சாண்டையிலிருந்து மதுரேந்திர ஐயர் குதிரைக்காரன்வசம் ௹ உக அனுப்பிவந்தது. ஏசுதாசனுக்குக்காயுதம் ஒன்றும் டோனாவூர் விசாரணை ஆபிரகாம்பிள்ளைக்கு காயுதமுமனுப்பினேன். இரவில் கனம் ஐயருக்கும் யோவான் தேவசகாயத்துக்குங் காயுதமெழுதி ஷை குதிரைக்காரன்வசம் மரிய சவரிமுத்துப்பிள்ளை வேட்டி ௧, அரைசட்டை ௧, சவரிராயன் குல்லா ௧, ஆ ௩-ம் ௩௰-ௗ யனுப்பு. ஷை யானுக்குப் படிச்சிலவுக்கு ௹ மாகாணியும் கட்டுசோதமுங் கொடுத்தோம்.

௩௧-ௗ ஓய்வுநாள் காலைச்செபத்தில் ௪-குழந்தைக்கு ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது. உ - ஆண்பிள்ளைகள்க்கு ஞானத்தகப்பனாக ஏற்றுக்கொண்டேன். கனம் சாப்பிட்டர் ஐயரவர்கள் ஷை ஞானஸ்நானத்துக்கு குழந்தைகள் ஞானத்தகப்பன் தாய் துரிதத்தில் ஆசிராய்வரவில்லை யென்று வெகுவாய்க் கோவித்தார்கள். சாயந்திர ஆராதனைக்குத் துரை தமிழிற் பிரசங்கம். பிள்ளையவர்கள் சமாரியாவுக்குப்போய்ச் செபஞ்செய்துவந்தார்கள்.

---

௲அ௱௫௰௬-௵ ஆகஸ்டுமீ சவரிராயன் நிதரிப்போரட்டு.

௧-ௗ காலையில் கூடிவந்தசனம் புரு. ௧உ, இஸ்திரிகள் ௧அ, குழந்தைகள் ௩௬, ஆ சனம் ௬௬. வித்தாணியா செபம்வாசித்து கனம் துரையவர்கள் செபம். மாலையிற் கூடிவந்த புருஷர் ௩௰, இஸ். ௰௪, குழ. ௩௩, ஆ அ௬-க்கு, எபி. ௪ அதி. வாசித்து ௧௬, ௧௪ வாக்கியத்தை விஸ்தரித்து புத்தி சொல்லிஞானயுத உபதேசியார் செபம். உ-ௗ காலை புருசர்-௰, இஸ்-உ௬, குழ-௪உ, ஆ எஅ-க்கு யோவான்சுவிசேஷம் உக-ம் அதி, வாசித்து

---

செப்தெம்பர்மீ ௧-ௗ சமாரியாவுக்குப் போய்வந்தேன். இன்னுசியம்மாள்பிள்ளைக்கும் மதுரேந்திர ஐயர் குழந்தை மரியசுந்தரிக்குஞ் சுகமில்லை. செல்க்கிடையாததினால், திசையன்விளைக்குப்போய்க் கிடையாமல் பொட்டக்குளத்துக்குப்போய் வாங்கிவந்தார்கள். இஞ்சியும் கிடைக்கவில்லை. உ-ௗ ஷை கிருபைபெற்றாளுக்குத் தோசிப்புகொண்டு இருக்கிறதென்று இரவில்செந்தூரம் இஞ்சிசாற்றிற்கொடுத்தேன். ௩-ௗ இட்டம்புளிவயித்தியனுக்

கு ஆள்விட்டுக் காலே ஒருகசாயம் இரவிற் பலரால்ப் பயங்கரமாய்ச் சொல்லக்கேட்டு செந்தூரத்தில் கொஞ்சங்கொடுத்தேன். ௪-௳யில் ஷை வயித்தியர்கள்கூடியோசித்து இட்டமுளி வயித்தியன் கைமருந்துகொடுத்தோம். ஏசுதாசன் காயுதம் ஒன்றுவந்தது. ஞானமரியான் இடையங்குளம் விசாரணை உவாத்தி மாசில்லாமணியாபிள்ளை மகள் கலியாணத்துக்கு இருக்கிறதாகவும் கேள்வி. மற்ற உபதேசிமார்கள் வந்தார்கள். சம்பளங்கொடுத்து இனிமேல் டோனாவூரில் டீப்ஐயரவர்களவடத்தில் இருக்கிறதினாலவர் விசாரணைதான் என்று சொல்லிவிட்டார்கள். இந்தச்சேகரத்து உபதேசிமார்களுக்கு ஒரு மாசத்துக்கொரு சற்ணல் எழுதும்படி தீர்மானித்துக் காயுதமுங்கொடுத்து ஞானப்போதிப்பும் வேதவசனக்கொத்தும் பாடம்படிக்கும்படியேற்படுத்தினார்கள் சபைதோறும்.

௫-௳ சாயந்திரம் ஆபிரகாம்பிள்ளை போகிறபோது விறகுக்கு என்று ௯ கொடுத்தனுப்பினேன். அவர் தவசிப்பிள்ளை இரவிலிவடத்துக்குவந்து அவர்கள்போனதினாலவன் ௯-௳ போனான். ஷை பிள்ளைவந்திருந்த மூன்றுநாளும் நமதிடத்திற்தான் சாப்பாடு. சுண்டைவிளை முத்துசுவாமியாபிள்ளை ௫ - வேளைச்சாப்பாடு. கிருபைபெற்ற மரியம்மாளுக்கு வியாதி, தோஷம் பிறந்து செந்தூரத்தில் கொடுத்தும் திசையன்விளை முத்துகண்ணுசெட்டியார் தயிலமுங்கொடுத்துப் பின்னுங் கண்ரேத்தில் மருந்துசெய்தோம். மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையும் வந்தார்களவளுக்குவருத்தமென்று கேள்விப்பட்டு. ௭-௳ ஓய்வுநாளில் ஒரு ரூபாய் காணிக்கையும் போட்டார்கள் கோவிலில். இரவிற் சற்றே சுகம்போலக்கண்டது.

௮-௳ பேப்பி வியாகம்மையின் இளையமாமனும் ஞானமரியானும் தஞ்சாவூர் உபதேசியார் சவளக்காரப்பிள்ளை ஒருவன், இவ்வளவுபேரும் கனம் சாப்பிட்டர் ஐயரவர்கள் உத்தரவுப்படிக்கு அவர்களைக்காணவந்தார்கள். ஷை செங்குளத்துப்பிள்ளை இரவிற் சாப்பிட்டு ௯-௳ போய்விட்டார். சாயந்திரம் அவருக்கு மூத்தவர் இடையங்குளம் உவாத்தியும் ஷை உபதேசியாரும்வந்து ஐயனைக்கண்டுகொண்டு ௰-௳ போனார்கள். ஷை ஞானமரியான் தனக்கு ஒரு அம்மியுங்கொண்டுபோனான் கருசனுக்கு.

௰௧-௳ சறவணை மகளுக்கும் ஞானக்கண்ணு மகளுக்கும் கலியாணம் முகிக்கும்படி பிள்ளையவர்களுக்கு உத்தரவுகொடுத்து கனம் ஐயரவர்கள் இடையன்குடிக்குப்போய்விட்டார்கள். ஷை கலியாணம் முடித்தார்கள் பிள்ளையவர்கள். நேமத்துக்குப்போகிற மனிதன்கூட தெய்வாயியும் ௮-௳ வந்தவள் புறப்பட்டு வடக்குன்குளத்துக்குப் போகப்புறப்பட்டாளவளிடத்தில்



பிள்ளையவர்கள், நீங்கள் கிழவீட்டாரிடத்தில் ஞானப்பூவைப்பற்றிக் கலியாணச்செய்தியை விசாரித்துவந்து சொல்லுங்களென்றதாயும் அவள்வந்து ஷையாள் தமைக்கையாளிடத்தில் கேள்க்க அவள் ஷை பெண்ணிடத்தில் கேட்டுக்கொண்டு இவடத்தில் இருக்கமனதிருந்தால் இருக்கட்டும் போகமனதிருந்தால் போகட்டும், அவளிடத்தில்க் கேட்டுக்கொள்ளவேண்டியது தானென்றதாயும், அவள்சொல்ல ஷை பிள்ளையவர்களுமவர்கள் வீட்டில் ஷை பெண்ணிடத்தில் கேள்க்கவும் அவளிவடத்திலிருக்க மனதில்லை என்றதாயும், அதைக்குறித்து மாமனார் நல்லதம்பியாபிள்ளைக்கு இவடத்திலுங்கள் தமைக்கையார் வகையராப் பேர்களுக்கு ஞானப்பூவை கலியாணஞ்செய்யப் பிரியமில்லை, ஷை பெண்ணுக்குமிவடத்திற் பிரியமுமனமுமில்லையென்று எழுதின கடிதத்தை, எனக்குக் காண்பித்தார்கள். நான் அவர்கள் நோக்கம் போலாகட்டும் ஷை பிள்ளைபேரில் குற்றமிருக்கிறதையும் அதைத் தட்டிவிலக்காத மாமியும் பெண்சாதியும் சொன்னதை உண்மையென்று நினைத்து நமதிடத்திற் குற்றமாக யெண்ணிப் பேசினதாகவும், தெய்வாயியிடத்திற் பேசினதாகவும் கேட்டிருந்ததினால் மாறுத்தரவுசொல்லாமலவர்கள் மனதுபோலப்போகட்டும் என்றிருந்துவிட்டேன். ௰௨-௳ ஷை காயிதம்வடக்குன்பாகத்தாளிடத்திற்கொடுத்தனுப்பினார்கள் நேமத்துக்கு. தெய்வாயியும் மகளும் ௪ - நாளிவடத்திலிருந்து ௫ - ம் நாள்ப்போனார்கள் வடக்குன்குளத்துக்கு.

௰௩-௳ மதுரேந்திர ஐயரும் மரியசவரிமுத்தும் முனிசுப்பிள்ளையும் எழுதிய கடிதமும்வந்தது. மரியசுந்தரிக்கு இன்னமுங்குணமில்லை. ௰௪-௳ ஓய்வுநாள். ௰௫-௳ சமாரியாவுக்கு கருப்புக்கட்டி நெல் முதலானது வாங்க ஆள் கூட்டிப்போனேன் அவடத்தில் யாதொன்றும் ஒத்துவராதேபோச்சுது கூட இல்லாததினாலும் நெல்கிடையாததினாலும். கனம் ஐயருந்துரையும் கிராமவழிக்குப்போயிருந்தார்கள் உத்தரவு கேள்க்கவில்லை.

௰௬-௳ மரியசவரிமுத்து குழந்தை இளையதுக்கு காலில் ஒரு வியாதியுண்டாயிற்று. அதினால் மருந்துக்கு என் சமுசாரத்தையனுப்பினேன் ஷையூருக்கும் மணவிளைக்கும். ௰௭-௳, ௰௮-௳ ஷை குழந்தைகளுக்குத் தண்ணீர்விட்டுசுகமாய்.

௰௯-௳ கனம் ஐயரவர்களிடத்தில் உத்தரவுபெற்றுச் சுரண்டைக்குப் போக சந்தைச்சிலவுவாங்கி சுப்பிரமணிய மூப்பனிடத்திலுஞ் சிலவுக்கு ௯ ௨ வாங்கிவந்து ௨௰-௳ விடிய ௰௨-மணிக்குமேற் புறப்பட்டுத் திருமலாபுரம் விடிய குழந்தைகளும் பெண்பிள்ளைகளும் போய்ச்சேர்ந்து, மரியசுந்தரிக்கு

அன்னப்பால்வைத்துக்கொடுத்து. மதியத்துக்கு மேல் ௸ பிள்ளைக்கு சுரந் துவக்கிற்று. பின்பு பருத்திப்பாட்டிற்றங்கினோம். சுவிசேஷபுரத்திற் கனம் சார்சென்றய்யர் ௰௯-வ வந்திருந்தார். ௨௧-வ ௭ - மணிக்குமேல் முருகன் குறிச்சிக்குப்போய்ச்சேர்ந்து, நான்மாத்திரம் ஆராதனைக்குப் போனேன். அவடத்திலிருந்தபிள்ளைமார் யாவருஞ்சேமம். தனதுசிலவுகூ அணாயே அணாக்கால் சிலவுசெய்து சாதமுங்கட்டிக்கொண்டு, ௨௨-வ நல்லூருக்கு ௭ - மணியிரவிற்சேர்ந்து, ௨௩-வ சாண்டைப்பிள்ளைகளை கூட்டிக்கொண்டு சாயுங்காலம் ௨ - மணிக்குப்போய்ச் சேர்ந்தோம். ௨௪-வ மதுரேந்திர ஐயர் ஊத்துமலைக்குப்போனார். ௨௫-வ காலை ௮-மணிக்குமேற் புறப்பட்டு நல்லூருக்கு வந்துயிருந்து ௨௬-வ ௰·மணிக்குப்புறப்பட்டு சாயந்திரம் ௭·மணிக்குவந்து பிள்ளைகள் யாவரையும் கண்டுபேசிவிச்சுக்கொண்டு, ௨௭-வ சுவிசேஷபுரம் வந்துசேர்ந்தேன். ௬இ-மணிக்கு கனம் ஐயர் துரை யாவரையும் இரவிற் கண்டுகொண்டேன்.

௨௮-வ ஓய்வுநாள். ௨௯-வ சங்கவரி எழுதினோம், ௩௰-வ காலை செபம்.

---

## ௲௮௱௫௰௬ஆ அக்ஸ்டோபர்மீ ரிப்போட்டு.

௧-வ காலைச்செபம். ௪-வ வண்டிக்காரன்வசத்தில் முனிசுப்பிள்ளையவர்கள் எழுதினதில் நான்கொடுத்துவந்த ௲ இ-யும் அனுப்பியிருக்கிறதென்று. வந்தவண்டிக்காரன் கட்டுக ௲ இ தந்துவந்தவுடனே கொடுக்க வேண்டுமென்றார்களென்றான். ௬-வ பந்தல்கப்பு, காவெல்லாம் பிரித்துப் போட்டோம். ௭-வ ஒருரொட்டியும் காயிதமும் ௱-ஸ்ரீ முனிசுப்பிள்ளையனுப்பினார்கள். குசைஞானப்பிரகாசங்கடிதம் கருசலிலிருந்து வந்தது,

௰-வ மதுரேந்திர ஐயருக்கும் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் இரண்டு கடிதம் எழுதியனுப்பினேன். ௰௧-வ ஏசுதாசன் காயிதம்வந்தது.

௰௩-வ முனிசுப்பிள்ளை கடிதம் ௨ - வந்தது. ௰௧-வ சாயந்திரம் கனம் ஐயரவர்களும் துரையும் கிராமங்களுக்குப்போனார்கள். ௰-வ மோசே உபதேசியார் கிராமத்தில் பணஞ்செல்லாதவகையிக்காகப்பிள்ளையவர்களிடத்திற் பேசிக்கொள்ளவந்தவர் கனம் ஐயரிடத்திலுத்தரவு கேட்டுக்கொண்டு பிள்ளை வீட்டிற்போகாததுக்கு ௲ ௨ அவராதம் போட்டெழுதினார்கள் உத்தரவு. பின்பு துரையவர்களும் கிருமங்கள்விசாரணைக்குப்போனார்கள். உதவி. உப. காச்சல். ௰௪-வ ஆராதனைசெபம் சாமுவேல்வாத்தியார். சாயுங்காலம் நான்.



௰௫-வ வியாகப்பபிள்ளை வக்தாரவர்கள் ஐயரவர்களைப்பார்க்க.

௰௯-வ கனம் ஐயருந்துரையும் செபம் பிரசங்கம். சாயந்திரம் ௸ வியாகப்பபிள்ளை போனார் பாளையங்கோட்டைக்கு.

௨௰-வ கனம் ஐயர் அம்மான் துரைமார்யாவரும் மெஞ்ஞானபுரத்துக்குப்போனார்கள்.

௨௨-வ ௸ வியாகப்பபிள்ளை வெடி துரைக்கு இரவலாக அனுப்பினார்.

௨௩-வ கு. ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு காயிதமெழுதி ௸யாருக்குக் கொஞ்சம் கருவாடும் இரண்டு கோழிக்குஞ்சியும் வேதநாயகம்வசம் ௨௪-வ அனுப்பு. பின்பு கனம் ஞானமுத்து ஐயர் வந்தார். கனம் சாப்பிட்டய்யர் துரை அம்மான் கிடாட்சபுரத்துக்கும் செவிளைக்கும்போய்வந்தார்களிரவில்.

௨௫-வ ௸ வந்த ஜூர் அதிசயபுரத்துக்கு என்று கமட்டி உத்தரவாக வந்ததாயும் கனம் ௸ ஐயர் தாம்விசாரிப்போமென்று கமட்டிக்கெழுதினதாகவும் செய்தியினால் ௸ ஐயர் உடனேபோய்விட்டார்கிடாட்சபுரத்துக்கு

௨௬-வ ஓய்வுநாள் மாலைச்செபம் முடிந்தபின் ௸ வேதநாயகம் கரிசலிலிருந்துவந்தான்- அவடத்திலிருந்த முத்தம்மைஎன்ற பிள்ளையும் ௲ ௬இயும் வந்ததுகூட. முனிசுப் பிள்ளை காயிதமும் அமுதுபடியும் வந்தது பாளையங்கோட்டையிலிருந்து. ௱.ஸ்ரீ பிள்ளையவர்கள் வெள்ளைக்காரர் மருந்து சாப்பிட்டார்கள்.

௨௭-வ கனம் ஐயரவர்களிடத்தில் வைகுரிமருந்து எடுத்துவரும்படி உத்தரவுகேட்டு, ௨௮-வ சமாதானபுரத்துக்குப்போய், வாக்ஷெநேட்டர்மருந்தெடுத்துப்போனதில் கொஞ்சமெடுத்து, ௸ மனிதனை, வருகிறவாரத்தில் ஒரு பிள்ளை யனுப்பச்சொல்லிவிட்டுத் திசையன்விளைக்கு வந்து முத்துக் கண்ணுசெட்டியார் மகனுக்கு வகுரிகுத்த விருப்பமாய்ச் சொன்னவர்கள், அமவாசியென்று இனிமேலாகட்டென்றதினால் கொண்டுவந்து. ஞாயிறு உப. பாளையங்கோட்டைக்குப்போனதினால் நான் செபம். ஐயரவர்கள் சுப்பிரமணியபுரத்துக்குப்போய அவடத்து உப. ௯ - நாள் நிதரிப்போட்டு எழுதாததால் ௰௪ - நாள் சம்பளம்பிடித்தம் சற்பயின்டு செய்தார்கள். ௱-ஸ்ரீ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதமும் ஒரு கோப்பையும் வந்தது. ௨௯-வ முனுசுப்பிள்ளை கடிதம் வந்தது.

௩௰-வ சுப்பிரமணியபுரத்துக்குப்போய் காலைச்செபம்பண்ணிவந்தேன்.

௩௧-வ சம்பளக்கூடுதல் இரவில் என் பிரசங்கம்.

---

நவம்பர்மீ க-ட காலை லாசர் உபதேசி யிரவில் சமாதானபுரம் பாக்கியநாத உவாத்தியார் பிரசங்கம். துரை செபம் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதம் ஒன்று வந்தது இ-ரொட்டியுங்கூட. பகல் பேதுரு கிருபம் வியாய்க்கானம் எழுதத்தொடங்கினோம், விசாரணைப்பிள்ளையையும் என்னையும் சீமோனுபதேசி அச்சம்பாடு உபதேசியும் வயசுசென்றவர்களானதால் பிரசங்கம் எழுத கட்டாயமில்லையென்றார்கள், சாயந்திரஞ் சம்பளம். பிள்ளையவர்கள் முதல்பிடியாக ௲ ௬௪-க்குச் சீட்டுகூட்டஞ்செய்து, டிசம்பர்மீ சீட்டு ௲ எனக்கு என்ற சீட்டும் எடுத்தது. மீ க-க்கு ௲ ௪. நான் கொடுக்கவேண்டும்.

௫௬-௵ உ-ட ஓய்வுநாள். காலை மதியம் கனம் ஐயர் பிரசங்கம் துரைசெபம் இரவிற் நற்கருணைபருமாறப்பட்டது. காணிக்கைத்தட்டு உ. பிரசங்கவாக்கியங்கொடுக்கப்பட்டது. க-சங்கீதத்தின்பேரில். ஞ. ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு கடிதம் எழுதியனுப்பினேன். ௩-ட வேதன்பன்பிள்ளை மகன் மூத்துசுவாமிவசம் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்குக் காயுதம் அனுப்பு.

௪-ட செபம்பண்ணி சமாதானபுரத்துக்குப்போகும்படி உத்தரவு வாங்கிப்போய், வகுரிபாலெடுத்து சமாரியாபுரத்துக்கு வந்தபோது, உபதேசியாகில்லைச் சபையான் தருமக்கண்ணு குழந்தை ௫-வயசுப்பிள்ளை மண்சுவர் விழுந்திறந்து போயிற்று. செபம்பண்ணி யடக்கம்பண்ணி பின்பு வந்து பிள்ளைக்கும் ஐயருக்கும் அறிவித்தேன்.

௫.ட மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் கடிதமும் ரொட்டியனையும் வந்தது. மதுரேந்திர ஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளை, முனுசுப்பிள்ளை யிவர்களுக்குக் கடிதம் ௩-எழுதிமுடித்தேன். பெண்பிள்ளைகளுக்குப் பாடம் படித்துக்கொடுக்கிற நூவீசாளுக்கு பாடம்படிக்கிறவர்களுக்கு சொல்லிவிட்டேன். இரவில் பாப்புமார்க்கத்து ரோமியென்று பொம்மைசெய்து பங்களாமுன் தீக்கொழுத்தினார்கள்.

எ-ட நந்தங்குளம் சீமோன் உவாத்தியார் மகளை ஆனைகுடியிருப்பு வேதக்கண்ணுக்குக் கலியாணம் முடித்தது சுவிசேஷபுரங்கோவிலில் கனம் சாப்பட்டர் ஐயரவர்கள். நான் சாட்சிக் கையெழுத்துப்போட்டேன்.

அ-ட ஷை ஐயர் அம்மாள் முதலானவர்களைக்காண மெஞ்ஞானபுரம் விசாரணை மிக்கேல்பிள்ளையவர்கள் மருமகன் நல்லூர்ச் சேகரம் பாலூர் விசாரணை மிக்கேல்ப்பிள்ளை சமுசாரங் குழந்தைகளுடன் வந்தார்கள். ஷை யாருக்கு அரிசி கறி கோழி முதலானபடி கொடுத்தார்கள். பின்பு நம்முடைய வீட்டில் வந்தார்கள், ௯-ட காலை பிள்ளையவர்கள் வீட்டிலும், சாயந்திரம்



நம்முடைய வீட்டிலுஞ் சாப்பிட்டு ௰-ட விடியக்காலம் போனார்கள் மெஞ்ஞானபுரத்துக்கு. பாளையங்கோட்டைப் பிள்ளைக்கும் நல்லூர் சுரண்டைக்கும் ௩-கடிதமனுப்பினேன். ௰௨-ட ஷை மாப்பிள்ளை காயுதமும் சுரண்டைக்காயுதமும்வந்தது.

௰௪-ட ஏசுதாசன் ஞானப்பிரகாசமிருவரும் தங்கள் இராசேஷ் ஐயரவர்கள் கூடவந்தார்கள். ஷை ஐயர் இடையங்குடிக்குப் போனார்கள். எனக்கு ௲ காலேமாசாணி ௬. ப. வுக்கு லேஞ்சிவாங்கினது.

௰௫-ட மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதம் வந்தது.

௰௬-ட ஓய்வுநாள்.

௰எ-ட மதுரோந்திர ஐயருக்கும் மரிய சவரிமுத்துக்கும் முனிசுப்பிள்ளைக்குங் காயுதமெழுதினேன் ஷை ஐயருக்கு கலியாணச்சிலவுக்கு விபரக்கணக்கும் ஷை தம்பிக்கு சுருக்கக்கணக்கும்.

௰அ-ட ஷை ஏசுதாசன் ஞானப்பிரகாசம் இரண்டுபேரும் மூநகன்குறிச்சிக்குப்போனார்கள். வேதநாயகம் வசம் ஷை காயுதங்களையும் அனுப்பினேன். பின்பு வகுரிவைத்தேன். ௰௯-ட சமாரியாபுரத்துக்குப் போய் வகுரிவைத்தேன். திசையன்விளை செட்டியக்குடியிலும் ௰௫ பிள்ளைகள் மேல் வகுரிவைத்தேன்.

௨௨-ட காலையில் வியாகப்பபிள்ளை ஐயாவைப்பார்க்க வந்தார். சுரண்டை காயுதமும் முனிசுப்பிள்ளை காயுதமும் வந்தது. இரவில் ௩-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு ஒயின் சாப்பிடும்படி திட்டஞ்செய்யப்பட்டது.

௨௩-ட கனம் ஐயர் துரையில்லை- காலையும் மாலையும் செபம்பண்ணினேன். மதியப்பிரசங்கம் ஞானயுதமுபதேசி, சாயுங்காலம் வியாகப்பபிள்ளை போய்விட்டார். மாலைப்பிரசங்கம் நான். ஷை மதுரோந்திர ஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்கு காயுதமனுப்பினேன் கலியாணக்கணக்குங் கூட.

௨அ-ட மாசாந்திரக்கூட்டம். உபதேசிமார் வாத்திமார்க்கு உ.மீ சம்பளம்போடப்பட்டது, என் சம்பளம், சீட்டுக்கு, சபை சங்கத்துக்கும், எடுத்துக்கொண்டதினால் பாக்கியநாத வாத்தி சீட்டுக்குப் பிள்ளையவர்களிடத்தில் ௲ ௩ கடன்வாங்கிக்கொடுத்தேன். சாப்பாட்டுச் சிலவுக்கு ௲ ௬ மதுரோந்திரயபிள்ளையிடத்திலுஞ் சகாயனுபதேசியிடத்திலும் வாங்கினேன்.

௩௧-ட இரவில் ராப்போசனம். பவுல் ஐயர் பகற் பிரசங்கம். உதவியாக இராப்போசனம் பருமாறினார்கள். ௩௨-ட இரவில் ராப்போசனம்.

டிசம்பர்மீ க-ட வெல்லாரும்போனார்கள்.

+

கர்த்தர் தமதாவியைத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவனுக்கத்தினாலே சேமம் அப்படியே அவ்விடத்துச்சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறேன். தாமனுப்பிய கடிதம் வந்து சமாசாரமறிந்தேன். அதின்பின் னிதுவரையும் காயிதம்வரவில்லை யென்பதினால் தம்பியுடைய கண்ணைப்பற்றிய கவலைகள் சொல்லமுடியாது. அவருக்கு சுகமாயிருந்தால் நல்லது அல்லவென்றால் தாங்கள் யோசித்துக் கொண்டு திருநெல்வேலி ஆசுப்பத்திரிக்குவந்துசுகப்படுத்தவேண்டுமென்று முன்னெழுதியிருந்தேன். இப்பொழுது அப்படியே சொல்லுகிறேன். மேலுங் கடல்வாடையில் அதிக காலமிருந்தவர் மலைவெக்கை பிடியாததினாலப் படிவந்ததென்றும் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் அபிப்பிராயமாய்ச் சொல்லுகிறார்கள். அப்படியாய்நாமும் நினைக்கவேண்டியிருக்கிறது. ஷை யோசனைப்படி கொஞ்சநாளைக்கு உத்தரவு வாங்கிக்கடல்வாடைக்குவந்து மருந்துஞ்செய்து சுகமானால் நலமென்று விரும்புகிறேன். உங்கள் யோசனைப்படி யாவதாகவும் வேண்டியது. ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு இப்பொழுது இளைப்புமிருமலும் சற்றதிகமாயிருக்கிறது. கனம் ஐயரவர்களுக்கு தலைநோவுண்டாயிருந்ததாம். இரண்டு நாளாயிருந்து சுகமாயிற்று. அம்மாளும் துரையும் மற்றவர்களும் சேமம். கிருபைபெற்ற மரியம்மாளுக்கு காதிலிருந்து சத்திரம் விட்டுப் புண்ணாறிச் சுகமாயிருக்கிறது. காங்கையான மருந்தும் பத்தியம் காத்ததினால் வாய்ப்புண்ணாகி மீனாவது சோறாவது சாப்பிடாது அன்னப்பால்தான் சாப்பிட்டுப் பெலவீனமாயிருக்கிறது. வேறுவிசேஷமில்லை. அம்பி ரூசைமரியாளுடைய செய்தி இப்பொழுது தெரியவில்லை. சுகமாயிருக்கிறது கேள்வி. அவன் பெஞ்சாதிக்கு மாசந்தோறும் வயிற்றுவலியுண்டாயிருக்கிறதாம். ஏசுதாசனும் ஞானப்பிரகாசமும் வந்துபோயிருக்கிறார்கள். அவ்விடத்திற்கு ஒரு வேலையாள் பெண்பிள்ளை செவ்வ மதுரிலிருந்து வருகிறேனென்று சொல்லுகிறதாக ரூசை ஞானப்பிரகாசம்பிள்ளை சின்னமாமியாள் என்னிடத்திற் சொன்னாள். ஷை ஆளை விசாரித்துப்பார்த்து யோசித்துப் பிள்ளையாண்டன்மார்களுக்கு முருகன்குறிச்சியில் வைக்கலாமாவென்று நினைத்தேன். ஆனாற் சிலவதிகப்படுமென்றும் நினைக்கிறேன். அதன்றி வியாகப்பிள்ளை யென்னிடத்திற் சொன்னது: தமது மச்சினன் சவரிராயனை தமதிடத்திலும், முனிசுப்பிள்ளை மச்சினன் தேவசகாயமவர்களிடத்திலுஞ் சேர்த்துக்கொண்டு சாப்பாடு முதலானது விசாரித்துவரும்படி யோசனை





யென்றார். அந்தக்காரியம் அவ்விடத்து நோக்கந்தெரியாமற் சொல்லுகிறார். ஷையவர் தான் சொன்னபடி நடப்பித்தாலும் முனிசுப்பிள்ளைக்குக் கூடாத காரியம். அப்படியானால் என்யோசனை தேவசகாயத்தை வாத்திமார் கல்விச்சாலையிலும், சவரிராயனை வியாகப்பபிள்ளை இடத்திலுஞ் சேர்த்தால் நலமென்றும் நினைத்தேன். எல்லாக்காரியங்களையும் தம்பியும், தாமும் அம்மாளும் யோசித்து தங்கள் மனதுப்படிசெய்கிறது எனக்குப்பிரியமாயிருக்கும். இந்த மாசமும், நவம்பர்மீ மாக இரண்டு சம்பளமும் ஒன்றாய்ப்போட்டதினாற் சீட்டுப்பணம்வந்தது, நமக்கும் முன் கடன் தீர்ந்தது. இனிமேற் பதின்மூன்றமீ வரையும் திட்டப்பணம் செலுத்திவர கர்த்தர் கிருபை செய்வாராக. நாங்கள் யாவரும் உங்களனைவருக்கும் வாழ்த்துதலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம்.

௲௮௱௫௰௬ }
டிசம்பர்மீ ௨௨ }

இப்படிக்கு
சவரிராயன்.

[இவை சுறண்டை ஊரிலிருக்குங் கனம் மதுரேந்திர ஐயரவர்களுக்கொடுப்பது.]

---

௫-உ பாளையங்கோட்டை மதுரநாயகம்பிள்ளை பெஞ்சாதி சாவித்தாயிறந்ததாகக் காயிதம்வந்தது. சத்தியநாதபிள்ளை மகனும் வந்தார். மதுரேந்திர ஐயர் காயிதம்வந்தது. ஷை ஐயருக்கும் ஷை தம்பிக்கும் முனிசுப்பிள்ளைக்குமாக மூன்று காயிதம் நானும் வண்டிவசம் அனுப்பினேன்.

௰-உ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள், மகளுக்குப் பலகாரமும் இரண்டு போகணியும் வாங்கியனுப்பினார்கள்.

௰௬-உ மரியசவரிமுத்துப்பிள்ளை கடிதம்வந்ததில் தனக்குக் [illegible]வியாதியினாலுஞ் சுகமில்லை, மேரி அன்னம்மாளுக்கு இர[illegible]ம் எழுதினார். மாப்பிள்ளை முனிசுப்பிள்[illegible] எழுதிய கடிதத்தில், வியாகப்பபிள்ளை வீட்டிற் கறிநன்றாய்ச்செய்யாமலிருப்பதினால் ஒத்துக்கொள்ளாமற் பெரியநாயகம்பிள்ளை வீட்டிற் சாப்பிடத்தாம் போயிருக்கிறதன்றி மனத்தாபத்தால்ப்போகவில்லை யென்றும் எழுதினார்கள். ௰-உ பள்ளிக்கூடச் சருவசோதனைசெய்து சந்தோஷஞ்செய்து எழுத்தாணி புஸ்தகம் தட்டுக்கொடுத்து, வாத்திமார்களும் பிள்ளைகளுஞ் சாப்பிடக்கிடாய்க் கறியும் சாப்பாடுஞ்செய்தார்கள்.

௰௧-ட கனம் ஐயரவர்களுக்குச் சுரமுண்டாய்ப் பன்னிரண்டாந் தேதி வருத்தத்தினால் பாளையங்கோட்டைக்குப்போக எத்தனித்ததுக்குப் போகிகள் வாராததினாற் தடைப்பட்டு, ௰௩-ட சற்று லகுவாகி, ௰௪-டயும் அதிசவாசியாய் சிறுபிள்ளைகள் உ-க்கு ஞானஸ்தானங்கொடுத்தார்கள். காலைதுணை செபம். மதியம் ஞானயுத உப. பிரசங்கம். சாயந்திரம் விசா. சாமுவேல் உவாத்தியார் பிரசங்கம், செபம். பிள்ளையவர்கள் மீனாட்சிநாதபுரஞ் சேகரத்தை விசாரிக்கும்படி சில கிராமங்களுக்குப்போய் வந்தார்கள்.

---

+

பிரியமான தம்பி சு. ஞானப்பிரகாசம்பிள்ளைக்குக் கர்த்தருடைய கிருபை யுண்டாக வாழ்த்துகிறேன்.

இவடத்தில் யாவருந் தேவ இரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களை யறியவிரும்புகிறோம்.

நானவடத்துக்கு சம்பை வாங்கியனுப்பவேண்டுமல்லது ஒரு ஆளுக்கு சம்பளங்கொடுத்தும் உபகாரமில்லையென்று காயுதமனுப்பவில்லை. இதுவரையும் ஷ மீன்பாடு அவுருவந்தான். அதினால் மலிவான வேளையில் வாங்கியனுப்பப்பார்க்கிறோம். இன்று மாணிக்கமுத்து றயிட்டர் வீட்டுக்கு ஒருமனிதன்வந்தவன் வேறு விசேஷமில்லை. கருசவிற் சுகமாயிருக்கிறது போலச்சொன்னான். ஆகிலும்பிரியமுள்ள நல்லமுத்து உபதேசியார் எழுதின காயுதங்கொண்டுவந்தவனானதால் விசேஷசெய்தியுண்டானால் அவருந்தெரியப்படுத்துவாரென்று சற்றே உங்களைபற்றி ஆறுதலாயிருக்கிறோம். அதுவரையும் உங்களைப்பற்றி கவலை மிகுதி. ஆகிலுமுங்களண்ணாவி மரியசூவரிமுத்துப்பிள்ளைக்கு கண்கூச்சமுஞ் சிகப்பும் எழுத்து வாசிக்க மங்கலுமிருக்கிறது இன்னமுஞ் சுகமாகவில்லை யென்பதே அதிக கவலையாயிருக்கிறது. தம்பி தேவசகாயமுஞ் சவரிராயனும் ஈ-ஸ்ரீ குருசாந்தையவர்கள் பள்ளிக்கூடத்தில்ப்படிக்கவந்தார்கள் ௲-டயில். வியாகப்பபிள்ளை வீட்டிற் சாப்பாடு. முனிசுப்பிள்ளையவடத்திற் சாப்பிட்டவர்கள் தங்கள் மாமியார் வீட்டுக்குப் போய் சாப்பிடுகிறார்களாம். இது நிற்க, பாளையங்கோட்டையில் மாப்பிள்ளை மதுரநாயகம்பிள்ளைக்கு இரண்டாந்தாரம் கயிலாசபுரத்து உப. தேவசகாயம்பிள்ளை மகளை விவாகஞ்செய்திருந்த சாமித்தாய்க்கு உ-ட இரவில்விஷபேதிகண்டு ௲-ட புதன்கிழமை யிறந்துபோனதாகச்செய்தி வந்தது. மற்றவர்கள் யாவருமிதுவரையும் காப்பாற்றப்பட்டிருக்கிறார்கள். இதுநிற்க; தாம்



மருந்துசெய்து அன்னம்மாளுக்குக் கொடுக்கவேண்டுமென்றதுக்கு பத்தியத்துக்கு ஆளில்லையென்றெழுதினீர். இவடத்தில்பிள்ளைகளுக்கும் இன்னாசியம்மாளுக்குமவள் பிள்ளைக்கும் வேறு ஆர் உங்கள் தாயாரையன்றி. அதினாலவடத்துக்கு உங்கள் தாயார்வர யேதுவில்லை. அவடத்தில்த் தமக்குமவளுக்கும் பிடிபடாததையும் வியாதியையும் அடிக்கடி கனம் ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்திவிசாரணைப்பிள்ளை முதலானவர்களுக்கும் தெரியப்படுத்திப்பின்பு உத்தரவு வாங்கிக்கொள்ளலாம். பின்னிவடத்துக்கு அல்லது சரண்டைக்கு அல்லது பாளையங்கோட்டைக்குப் போகலாம் அதுவு அக்கிடமுண்டென்று நம்பிவரும்படி பார்க்கவேண்டியது. அப்படியே நீர்தானுத்தரவின்பேரில் வரவேண்டுமென்று கனம் மதுரேந்திர ஐயருமெனக் கெழுதினார்கள். அதுவுமன்றி அன்னம்மாள் இவடத்துக்கு வந்து மருந்து சாப்பிட மனதிருந்தால் மாசக்கடைசியில் இவடத்துக்குவரும்படி உத்தரவு வாங்கிக்கொண்டுவந்துமருந்து சாப்பிடலாம். நாலுகாரியத்தையும் யோசித்துக்கொள். புரச்குமாசம் இன்னாசியம்மாளுக்குப் பேறுகாலம். நமது கலியாணச்செலவு முதலானதைக் கணக்குப்பார்த்து மூன்றுபங்காச்கிப் பிரித்ததில் உம்முடைய பங்குக்கு ரூ ௬௭ இ. உமதுவரவு ௫௰-ஹு மார்ச்சுமீ முதல் ௫௬-ஹு அகஸ்டோபர்மீ வரையும் ரூ இருபத்தி ஆறே முக்காலே மாகாணி, ௰க. நீச்செவரவேண்டியது ரூ பத்தரைவேமாகாணி, க. ஷ சிலவுக்கு முன்வாங்கிச் சிலவிட்டவகைக்கு மாசம் ஒன்றுக்கு ரூ ௬ சீட்டுக்கூட்டி ௰௯ சீட்டுசுரு ரூ இந்த டிசம்பர்மீத்தில் நமக்குவந்ததைக்கொடுத்துத் தீர்ந்தது. அதற்குமுன் கூடிய சீட்டிற் மீ ரூ -௪இ. ஆ ரூ -௫இ மாசந்தோறு நாஞ் செலுத்திவர வேண்டும். இப்படியாக மூன்றுமீ செலுத்திவருகிறேன். வீட்டுச் சிலவுக்கு நீங்கள் மூன்றுபேரும் மாசாமாசங்கொடுக்கிறதை நம்பி யிந்தக்கடன் தீர்ந்தது. ஆகையால்த் தமதுபேரில் வரவேண்டியதற்கு மீ ரூ உ வீதங்கொடுத்தனுப்பவேண்டியது. தங்கள் சிலவும் வருத்தமாய்த்தானிருக்குமாகிலும் உள்ளதைக்கொண்டு சமாளித்துக் கடன்படாமல் முந்தின கடனைத் தீர்க்கவேண்டுமென்று உறுதியாய்ச் செய்யவேண்டியது. நானுமுங்களண்ணாவிமாருமது வேதீர்மானமென்று நிச்சயித்திருக்கிறோம். இத்துடன் சுருக்க கணக்கனுப்பியும் இருக்கிறது. உங்களண்ணாவிமாருக்கும் முன்னமே யனுப்பியிருக்கிறேன். இன்னம் உ-மீ-சின்னச்சீட்டுக்கு ௲ ரூ மாத்திரஞ்செலுத்தவேண்டும் மார்ச்சுமீ நமக்கு ரூ எஇ-வரும். அதின்பின் பெரியசீட்டுக்கு மீ ரூ-௯ ௫௮-ஹு சனுவரிமீ வரையும் செலுத்திமுடிக்கவேண்டுமதற்கு கர்த்தர் கிருபைசெய்வாராக. இதுவரை மூன்று மீமுஞ் சிலவுக்குப்படுகிற கஷ்டமிகு

தியாயிருக்குமென்பது தமக்கேதெரியும். தம்பி ஏசுதாசனும் நவம்பர்௴ இவடத்துக்குவந்து மூன்றுநாள் இருந்துபோனான். உமக்குக் காயிதமெழுதினதாயும் பதில்வரவில்லையென்றுஞ் சொன்னான். இவடத்திலிருந்து முன்னொருகடிதம் வேதன்பன்பிள்ளையவர்கள் குமாரன் முத்துசுவாமி வசத்திலனுப்பினது அவடம்வரவில்லையென்று வேதநாயகஞ்சொன்னான். டோனூருக்கும் ஒரு கடிதமனுப்பினேன், ௱-ஸ்ரீ விசாரணைப் பிள்ளையவர்களுக்குச்சுகசெய்தியறியப்பதில் அவர்களிதுவரையும் அனுப்பினார்களில்லைச்சுகமேயிருக்கிறதைப் பக்கவழியாய் விசாரித்துக் கொள்ளுகிறேன். ௱-ஸ்ரீ மாப்பிள்ளை விசாரணைப்பிள்ளையவர்களும் ஷை வீட்டார் யாவருஞ் செபத்தியாயி முதலானவர்களுஞ் சேமம். வியாகப்பபிள்ளையும் ஒருவதவிவந்து விசாரித்துப்போனார் போன௴ கடைசியில். வேறு விசேஷமில்லை. இன்றைக்கு கனம் சாப்பட்டர் ஐயரவர்களுக்கு சுரமாய்ப் பாளையங்கோட்டைக்குப்போக எத்தனமாயிருக்கிறார்கள். நாங்களுங்களிருவருக்கும் வாழ்த்துதலும் செபத்தியாயி தோத்திரமுஞ்சொல்லுகிறோம். கர்த்தர் எல்லாரையு ம் காப்பாராக.

௲௮௱௫௰௬ டிசம்பர் ௰௨-௳ இரவில் அவசரத்தில் எழுதினது.

இப்படிக்கு
சவரிராயன்.

௰௩-௳ ஆறு மாசக்கணக்கு முடித்துக்கொடுத்தேன்.

௰௫-௳ நீத்தான்பட்டி அண்ணன்மகள் வந்தாள். குசைமரியானுக்குக் காயிதமெழுதினேன்.

௰௬-௳ வேதநாயகத்தை யனுப்பினேன் கருசனுக்கு, சம்பளம் கூ வ ஷை யினனுப்பு கூ வ ஆக இ க்கு வரவு கூ ௯.

௰௭-௳ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை தங்கள் மக்களுக்குத் தொட்டில் வேட்டிக்கு கூ இ கொடுத்தனுப்பினார்கள். மதுரேந்திர ஐயர் மரிய சவரிமுத்துப்பிள்ளை ஷை மாப்பிள்ளைக்கும் ௩ கடிதம், ௰௮-௳ சமாரியா முதலான இடங்களுக்குப்போய் வருசிவைத்து வந்தபின் இரவில் முடித்தனுப்பினேன்.

௰௯-௳ வண்டிவசத்திலனுப்பினேன்.

௨௰-௳ காலையில் கயிலாசபுரம் உப. தேவசகாயம்பிள்ளை தமது மகன் துட்டிக்கு பாளையங்கோட்டைக்குப் போய்வந்தார் மகனுங்கூட. இவ்விடத்திற் சாப்பாடுசெய்தனுப்பினோம். பின்பு பாளையங்கோட்டை மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதம்வந்ததுடன், கிருபைபெற்றுள் குல்லாவனுப்பினார்கள். சாயந்திரங் கனம் ஐயரவர்களுத்தரவு சனுவரி௴ முதற்கிட்டத்தி



லிருக்கிற கிராமங்களில் வாரத்தில் இரண்டுவேதலி போய் மாலை செபஞ் செய்யும்படிக்கு உத்தரவு முகதாவில்.

௨௧-௳ ஒய்வுநாள். பிள்ளையவர்கள் கிராமத்துக்குப்போய் சாயந்திரம் வந்து, இரவில் கனம் ஐயரிடத்திலபோனபோது, உதவிஞானயுதத்தை மாற்றி ௸ சருபதேசி யிவடத்துக்கும் அவர திசயபுரத்துக்கும், அதிசயபுரத்து பாக்கியவாத்திச்சி இவடத்துபாலகர் பள்ளிக்கூடத்துக்கும் ஏசுவடியான் வாத்தியாரும் பெண்சாதி சாராளும் போடிங் பள்ளிக்கூடத்துக்கு வாத்தியும் வாத்திச்சியுமாகவும் உள்ளூர் ஆண்பள்ளிக்கூடத்துக்கு வேதநாயகத்தைவாத்தியாகவும்நேமித்து ௨௨-௳ உத்தரவு எழுதும்படி சொல்லியனுப்பினார்களாம்.

௨௩-௳ ஷையார்கள் அவரவர் வேலையிற் போனார்கள். மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் முனிசுப்பிள்ளைக்கும் காயிதம் முச்சந்தி யீசாக்கு வசமனுப்பினேன்.

௨௪-௳ ஷை மாப்பிள்ளை காயிதமும் ஏசுதாசன் காயிதமும் சுரண்டை ஐயர் காயிதமும்வந்தது. காலமே வருசிவைக்கும்படிபோய் இரவிற் சாப்பிட்டேன்.

௨௫-௳ காலை மத்தியானம் ஆராதனை. கனம் ஐயர் அம்மாளிருவரும் வரவில்லைக்கோவிலுக்கு. மதியம் வி. சாமுவேல்வாத்தியார் பிரசங்கம். செபம் இரண்டுதரமும்.

௨௬-௳ இரவில் கனம் ஐயர் செபம்.

௨௭-௳ வண்டி ஞானமுத்துவசம் குசைமரியான் முகூர்த்தவேட்டி வெளுக்கும்படிக்கு முருகன்குறிச்சிக்கு வியாகப்பபிள்ளைக்கு அனுப்பினேன். சாயந்திரம் ௸சருபதேசி இவடம்வந்து சேர்ந்தது.

௨௯-௳ நெல்வாங்க கூ க-க்கு அநேகரிடத்தில் கேட்டுங்கிடைக்கவில்லை.

௩௰-௳ திசையன்விளை சுப்பிரமணிய மூப்பனிடத்திற்போய் உ - பனத்துநெல்வாங்கியனுப்பினேன்.

௩௧-௳ மதுரேந்திர ஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளை மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை வியாகப்பபிள்ளை ௪-பேருக்கும் ௪ கடிதமனுப்பினேன். கர்த்தரிந்த வருஷத்தை சந்தோஷமாய் முடிக்கக்கிருபை செய்ததற்காக ஸ்தோத்திரம்.

+

## ௲௮௱௫௰௭-௵ சனுவரி௴

௧-௳ காலைபாராதனை செய்தது கனம் ஜபரவர்கள். பிரசங்கம் கனம் சாப்பிட்டர் துரை. நான் பிரார்த்தனை வாசித்தேன். பின்பு சந்திப்பு. மதியம் தரித்திரர் சங்கம், சந்ஈயிகியோன் உதவி சங்கமுங்கூட்டினோம். சாயந்திரம் ஐந்தரைமணிக்கு வழக்கப்படி செபம் லாசருபதேசி. பப்பால், வர்தசனங்கள் யாவரும் இருந்துவாணவேடிக்கை பங்களாமுன் பார்த்துமுடிந்தது.

௨-௳ வழக்கமாசாந்திரக்கூட்டம் சாயந்திரம் ராப்போசனம். அதற்குமுன் அன்னம்மைக்கு உபகாரமாய் அம்மாளவர்கள் என்சமுசாரத்தை ராப்போசனத்துக்கு வரவேண்டாமென்றார்கள். ஞாயம் விசாரியாமற் சொன்னதினால் நானுஞ்சேரவில்லை. மதுரேந்திரஐயரும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையும் எழுதியகடிதமும் வந்தது.

௫-௳ நெல்வாங்க அழகப்பபுரத்துக்குப் போய்வந்தோம், நானும் மரியம்மாளென்ற பாக்கியமும். பின்பு சங்கத்துக்குப்போக யெத்தனஞ்செய்து ௬-௳ விடியக்காலம் புறப்பட்டு சாயந்திரம் ௬-மணிக்கு முருகன்குறிச்சிக்குப்போய் மதுரேந்திர ஐயர் முத்துசுவாமிஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளையும் நானும் பாளையங்கோட்டைக்குள் மதுரநாயகம்பிள்ளை மனைவியிறந்ததுட்டி கேட்டுவந்தோம்.

௭-௳ சங்கம். ௮-௳ அவடத்திலிருந்து சாயந்திரம் மதுரேந்திரஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளையும் ரூ ௫௯ தந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

௯-௳ சாயந்திரம் வியாகப்பபிள்ளையும் அவர்சமுசாரங்குழந்தை மேல்படியார் யாமனோர் சத்தியநாதபிள்ளையும் சமுசாரத்துடன் தேவசகாயம், சவரிராயன் முதலானயாவரும் புறப்பட்டுத்திருமலாபுரத்திற்தங்கி, ௰-௳ காலை இவடம் வந்துசேர்ந்தோம். தித்தான்பட்டி அண்ணன்மகள் தன்னூருக்குப் போனாள்.

௰௧-௳ காலை ஆராதனை மாலையாராதனையும் செய்தேன். மதியம் செபம் பிரசங்கம் விசாரணை சாமுவேல்வாத்தியார்.

௰௨-௳ திசையன்விளைக்குப்போய்க் கடைக்காரர் முதலானவர்களுக்குச்செல்லவேண்டிய ரூகளைக் கொடுத்து முத்துக்கண்ணுசெட்டியார் வீட்டிற் சாப்பிட்டுவந்தேன். இரவில் ஞானமுத்துவாத்திசெபம். தமிழ் தை௴ பிறப்பு திங்கள் கிழமை, ௰௪-௳ விடிய, ௰௫-௳.

௰௬-௳ சத்தியநாதபிள்ளையும் சுந்தரியும் புறப்பட்டார்கள் சிவகாசிக்கு.





அவர்கள் வசத்தில் மதுரநாயகம்பிள்ளை கைக்குழந்தையைத் தாயைப்பெற்ற பேத்தியாளிடத்திற் கொடுத்தால் பால்கொடுத்து வளக்கிறதாகச் செய்தி எழுதினதையும் அனுப்பினேன். ஞானப்பிரகாசம் வந்தான். ௰௯-௳ சாயந்திரம் வியாகப்பபிள்ளையும் சமுசாரங் குழந்தைகள் சவரிராயன், தேவசகாயமும் முருகன்குறிச்சிக்குப் புறப்பட்டார்கள். யாக்கோவும்படிக்கப் புறப்பட்டான்.

௨௰-௳ சகாயனுபதேசியார் ஓலைவந்ததுக்குக்கடன் ரூ ௧ அனுப்பினேன்.

௨௧-௳ இரவில் ௨௨-௳ விடிய ௰ - நாழிகையிலின்னாசியம்மாளுக்குப் பெண்குழந்தை பிறந்தது. ௨௨-௳ திசையன்விளைக்குப் போய்வந்தேன்.

௨௩-௳ முனிசுப்பிள்ளையவர்களுச்கு குழந்தைபிறந்ததற்கு எழுதியனுப்பினேன். அவர்கள் காயுதமும் கிருபைபெற்றாளுக்கு பலகாரமும் வந்தது. ௨௰-௳ ஏசுதாசன் காயுதம்வந்ததில், கருசலுபதேசி ஞானசமரியாம்பிள்ளையைக் கல்விடைக்குறிச்சிக்கு மாற்றி யவடத்துக்கு ௰௮-௳ செபம்பண்ணப் போயிருக்கிறதாகச் செய்திவந்தது. கனம் சாப்பிட்டய்யரவர்களுத்தாவு, பிள்ளையவர்கள் குமாரன் ஞானப்பிரகாசம்பிள்ளை ௨௨-௳ மாதவன்குளத்து சபையாருக்குச் செபம்பண்ணிக்கொடுக்க. இன்னாசியம்மாள் ௫-வது பெண்குழந்தைபெற்றாள்.

௨௬-௳ பரமாயியைத்துரத்தினது.

௨௭-௳ ஞானசமரியான் காயிதம்வந்தது.

௨௯-௳ பதில் அனுப்பும்போது மீன்வாங்கியனுப்பினேன். ௩௰-௳ சந்தைக்குப்போய்வந்தேன். வேதநாயகத்துக்கு வேட்டிகடனாக ரூ ௧௰-க்குவாங்கிக்கொடுத்தேன். ௩௧-௳ எனக்கும் தருமநாதனுச்கும் வேட்டிவாங்கினோம்.

---

௲௮௱௫௰௭-௵ பிப்பரவரி௴ ௧-௳ ஓய்வுநாள் காலைதுரைசெபம். மதியம்பிள்ளையவர்கள் பிரசங்கம். மாலை என் செபம். மதுரேந்திரஐயர் கடிதம் ௧, முனிசுப்பிள்ளை கடிதம் ஒன்றுவந்தது.

௫-௳ நேமத்து நல்லதம்பியாபிள்ளை சமுசாரம் விசாரணைப்பிள்ளைவீட்டிற் தங்கள் மக்களைக்கூட்டிப்போக வந்ததாகக்கேள்வி. ௭-௳ பாளையங்கோட்டை மதுரநாயகம்பிள்ளை கடிதம் ௧ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை ௧ மதுரேந்திரஐயர் ௧ மூன்றுவந்தது. ௯-௳ இரவில் நந்தன்குளத்தில் போய்ச் சபையாருக்கு செபம்பண்ணிவந்தேன். ௰௨-௳ காலையில் நேமத்து நல்லதம்பியாபிள்ளையினுடைய சமுசாரங் குழந்தைகளைக் கூட்டிப்போனாளாம்.

௰௧-௳ கனம் ஐயரம்மாள் யாவரும் இளஞ்சுனைக்குப் போகப்புறப்பட்டார்கள்.

௰௨-௳ சிரிவைகுண்டம் தேவசகாயம் ா-ஸ்ரீ பிள்ளையவர்களுக்குக் காயிதமெழுதி யதற்குள் கனம் சாப்பட்டய்யரவர்களுக்கு ஒருகாயிதமென்பேரிற் கடன்வரவேண்டுமென்றும் ஷை கடனை வாங்கிக்கொடுக்கவும் வேண்டுமென்று எழுதிவைத்தனுப்பினேன். அதைப் பிள்ளையவர்கள் பார்வையிட்டு, என்னையும் பார்க்கும்படியனுப்பினார்கள். ஷை காயிதத்தை ௰௩-௳ கனம் சாப்பிட்டய்யருக் கனுப்பினார்கள். ஷை காரியத்தை யறியும்படி மதுரேந்திரஐயருக்கு ... ... ... ... ... சந்தைக்குப்போய் அவடத்தில் சமாரியாமுக்கந்தன்தருமக்கண்ணுக்கு மச்சினன் ஒருவனிறந்துபோன ... ... ... ... ... சொல்லிவந்தேன்.

௰௬-௳ வியாகப்பபிள்ளை காயிதம் பிள்ளையவர்களுக்கு வந்ததில், தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளை இராசினமாக் கொடுக்கப்போகிறதாகவும், இராசநாயகம்பிள்ளையைத்துரை விருந்துக்கழைத்ததற்குப்போக்குச்சொல்லுகிறதுமித்தம் கணக்கையொப்பிவித்து அலுவல்பார்க்கவேண்டாமென்றதாகவும். ௰௭-௳ வந்த காயிதத்தில், இராசேஷய்யரவர்கள் ஷை தம்பியை இந்த ஆறுமாசம் வரையும் படிக்கும்படிசொல்லி நிறுத்திப் படித்துவருகிறதாகவும், ஷை வியாகப்பபிள்ளையையும், ஷை இராசநாயகம்பிள்ளையையும் பெருமாங்கிஷஞ் சாப்பிடாவிட்டாற் கமிட்டிக்கு எழுதித்தள்ளிப்போடுவோமென்று துரை சொன்னதாகவும் எழுதினார்.

௰௮-௳ இளஞ்சுனைக்கு சம்பளத்துக்குப்போனார்கள் எல்லாரும். நான் இவடத்திற் செபம் பண்ணுவதற்கிருந்தேன். அவடத்துக்குப்போன உபதேசியார் முதலானவர்கள் ௨௪-௳ வந்தார்கள்.

---

நகல்

இவ்விடத்தில் யாவருஞ்சேமம். அப்படியே அவ்விடத்தில் யாவருடைய சேமாதிசயங்களைக்குறித்து தாங்களெழுதிய மூன்று கடிதங்கள் வந்ததினலறிந்தோமிதுவரையுமிவ்விடத்துத்தொந்தரவினால் மதுரேந்திரஐயருக்குக் காயிதமெழுதினபின்பு தங்களுக்கு யெழுதத் துவக்குமுன் இளஞ்சுனையிலிருந்துவருகிற தவ்வால்க்காரன் அவசரப்படுகிறதினால் அந்தக்காயிதத்தை அனுப்பிவிடுகிறேன். இப்படியாய்த் தங்களுக்கு விபரமாயெழுதக்கூடாதிருந்ததன்றி வேறில்லை. எல்லாருஞ் சுகந்தானென்று நானெழுதியது சரிதான்.



நீங்கள் சாப்பாட்டுக் காரியத்தில் வருத்தப்பட்டுஞ் சுகயீனமாயிருக்கிறது மெய்தான். ஆனால் இன்னாசியம்மாள் கண்வெளிச்சத்தில் இன்னமும் வரக்கூடாத கூச்சமும் தூரத்திலிருக்கிற ஆள் முகமும் காலுக்குள் கிடக்கிற பதார்த்தங்களுந் தெரியாதிருக்கிறது. அதற்கு இன்னமும் இரண்டுபடி யெண்ணையிற் சில பச்சிலைச்சாறும் மருந்தும்சேர்த்துத் தயிலம்வைத்து முழுகவரவேண்டும். அதினால் சுகப்பட்டது உடனே யவ்விடத்துக்குவந்தாளென்று வைப்போம். அதின்பின் அவ்விடத்தில் காலை மாலை சமயல் நிக்காந்தல் புகைப்பட்டால் உடனே ஷை கண்ணுக்கு உபத்திரவம்வந்தால் என்னசெய்வீர்கள். முன் அப்படித்தானேயிவ்விடத்திலிருந்து சுகமாச்சு அவ்விடத்துக்குவந்தபின் சமயத்துக்கு தலைமுழுச்குஞ் சாப்பாடுங் கிடையாமலும் பிள்ளைக்கும் அவளுக்குஞ் சுகமில்லாததினால் மருந்துச்செலவும் வயித்தியன் செலவும் வந்துநேரிட்டதில். கடனுகிப்போனேனென்று சொல்லியுவத்திரவப்பட்டு அழுகையும் கண்ணீருமாய்க் கடைசியில் உள்க்கட்டு அடகுவைத்து கடனைத்தீர்ப்போமென்றும்; அதுவுந்தலையப்;பின்னும் கண்ணீர்குடித்து,பொருள்போனதுமல்லாமல் கண்ணுங்கூடக்கெட்டு வண்ணாத்தி மாத்து வாங்கியுடுத்தி யுடுக்கச் சீலையுமற்று இருவருமுபத்திரவப்பட்டீர்களே. முன் அ-க்குள்ளாக இவ்வளவும்நேரிட்டது. அதின்பின் இதுவரையும், மாசம் எட்டாகியும் கடன் தீராதபடிக்குந்தனிப்பட்ட ஒருஆள்வைத்து சமயல்செய்யவுந்தேகத்தை பேணிக்கொள்ளவுமிடமில்லாமல் தங்கள் சரீரத்தையுங் கெடுக்கிறதே. இப்படியிருக்க நானும் சமுசாரமுங் குழந்தைகளு மொன்றாயிருந்தால் செலவு லேசாயும் சரீரசுகமாயுமிருக்கலாமென்று எண்ணங்கொண்டெழுதினீர்கள். அதைப்பார்க்கும்போது ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியெல்லாம் நான் எழுதுகிறதினால் இன்னாசியம்மாளையும் பிள்ளைகளையும் அவ்விடத்துக்கனுப்ப மனமில்லாமலிருக்கிறதென்றெண்ணவேண்டாம். தாங்கள் பெண்சாதி பிள்ளைகளைப் பேணிப்பார்ப்பீர்களானால் எங்களுக்கு என் விருதாத்தொல்லையுமுபத்திரவப்படுத்தலும் பணச்செலவும். எங்கள் பேரில் குறைசொல்லவேண்டுவதில்லை. தங்களுக்கு, ஷை காரியங்களெல்லாம் பெரிதல்ல நானே பெண்சாதியும் பிள்ளையும் பேணும்படி கடமையுள்ளவனென்கிற பெலனுண்டானால் தாங்கள் உத்தரவு வாங்கிக்கொண்டுவந்து இப்பொழுதே கூட்டிக்கொண்டுபோய் பேணிப்பார்க்கவேண்டியது. பின்பு அவ்விடத்தில் எப்படிப்பட்ட துன்பங்கள் நேரிட்டாலுமெங்களைக் குறைசொல்லவும் ஆவலாதிகளிவ்

விடத்திலுள்ளவர்களுக்கு எழுதவுங்கூடாது. நாங்கள் அவ்விடத்துக்கு வந்து உங்களுக்கு உதவிசெய்யத் திராணியில்லை. அப்படியேவந்தாலும் உங்களாற் செலவுந்தாங்கவுங்கூடாது. இதற்குத் திருஷ்டாந்தரங்களுமுண்டு. வீணாய் நமக்குள் காயிதச்சண்டை நடக்கிறதென்றுசொல்லாதபடிக்குப் பாருங்கள், எப்படியும் உங்கள் சமுசாரம் உங்கள் மேல்விழுந்தபாரம் நீங்கள் தாங்கவேண்டியது. அப்படியே பெண்பிள்ளைகள் தங்கள் தங்கள் சமுசாரங்களுக்கு அவர்களைப்பற்றிய சனங்களால்சரீர உதவியையாவது பணத்தினுதவியாவது இல்லாதிருந்தும் அவர்கள் தங்கள் தங்கள் காலத்தைக் கடத்துகிறார்களென்பதுதங்களுக்குத்தெரிந்தகாரியம். ஆனால் உங்களைப்போலொத்த மனமும் அவர்களுக்கில்லை. மாமி மாமனுமில்லை. அதினால் அவர்கள் பிறர் உதவியில்லாமலிருந்தும் தங்கள் கடமையைச் செலுத்துகிறார்கள். உங்களுக்கு அப்படியிருக்குமானால் இந்த நாள்வரை (௰) வருஷகாலமாயிருக்கிறதில் ஐந்து பிள்ளைப்பேறும் வியாதி உபத்திரவங்களும் பிள்ளைகளைப்பற்றிய செலவுகளிலுஞ் சரியானகாலத்துச்சாப்பாடு தலைக்கெண்ணை வஸ்திரங்களிலுமுண்டாகிற செலவிருந்தால் அல்லது தாங்கள் சரியாய்செலவிட்டிருப்பீர்களானால் இதுவரையில் எத்தேசத்தில் போயிருப்பீர்களென்பது தெரியாது. ஆகிலுங் கர்த்தர் அப்படிவாராமல் காப்பாற்றி.......நன்றியறிதலோடேயவருக்குத் தோத்திரஞ்செய்யக் கடனாளிகளாயிருக்கிறோம். இதுவரையும் எங்களுக்கு ஒரு பிள்ளையை வீணாயிழக்கலாமாவென்றுந்தாங்கள் முந்தின கடன்தீர்த்துக் கடனில்லாமல் சீவனஞ்செய்துவரும்படி புத்திவருமென்றும் இவ்வளவு காலம்பார்த்தோம். அப்படியும் ஆகவில்லை. இப்பொழுது வீணாய்க் கடன்படுகிறவர்களுக்கு நான்செய்யுமுபகாரம் வீணாய்ப்போயிருக்கிறது, என்று நினைத்திருக்கிறேன். ஆகையால் தாங்கள் நீங்கள் சமுசாரங்குழந்தைகளைக் கூட்டிப்போனால் தாங்கள் பிள்ளைகளிரண்டு பண்ணுகிற உபத்திரவங்களைத் தாங்களுமடைந்து தாங்கள்செலவுக்கு முட்டுப்பட்டு இருக்கும் பொழுது தெரியும் எல்லாவருத்தமும்பட்டால் அப்படியாகிலும் புத்திவாராதாவென்று யோசித்தேனிதுவரையும் வராதபுத்தி இனிமேல்வருமென்றும் நம்பிக்கையில்லை. ஆனால் தேவசித்தம் என்பிள்ளைக்கு வர்த்தகன்மை யவ்வளவுதானிருக்கும் என்று அப்படியானால் அவர்கள் பிள்ளைகள் இரண்டும்வருத்தப்பட்டுச் சாகிறதானால் நம்முடைய ஒருபிள்ளையுங்கூடச் செத்தாலும் வசையில்லை. எப்படியானாலும் அவர்கள் மனதில் தட்டுப்பாவெட்டுமென்று துணிந்திருக்கிறேன். சுகமே யனுபவித்துப் போகவேண்டியது. அதற்குமுன் (சபடி)நெல்லிக்காயும் ஒருதட்டுக்கொடுத்துக் கொஞ்சம் கொடுப்பையும் பிடுங்கி அவசிய



மாயனுப்பவும். முந்தினதைலம்வைத்து முழுகவேண்டும், கண்சுகப்பட. அது சுகப்படாவிட்டால் ௫ பெண்ணைகளெல்லாம் வீணாய்ப் போம். இதுகிற்க: முன்னனுப்பிய ரூ ௰௨-ம் ௫ நகைக்கு ௫ செல்லவேண்டியதையுஞ்செலுத்தி இந்த மாசம் வாங்கவேண்டும், இல்லையானால் வருகிற மாசம் வட்டியும் கொடுக்கவேண்டியதாய்வரும். ௫ ரூபாயிவ்விடத்திற் கொடுத்த மனுஷனுக்கு வட்டி ௧ மாசமாயிற்று. இப்படி இங்கும் அங்கும் வட்டி கொடாதபடிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள். ௫ நகைவாங்கினால் அருணாசலம் அல்லது அருளானந்தமிடத்தில் கொடுக்கப்படாது, வண்டி ஞானமுத்து அல்லது முச்சந்தி ராசாக்கு என்பவர்களிடத்திற் கொடுத்தனுப்பலாம். காகிதமெழுதி அனுப்பவேண்டியது.

௲அ௱௫௰௭-ம் ௵
பெப்ருவரி௴ ௨௰௬௳ } சுவிசேஷபுரம்.

[அத்தான் முனிசு இராயப்பபிள்ளையவர்களுக்கு ஐயா எழுதின காகிதமிதுக்கு நகல்வைத்திருக்கிறார்கள்- பெண்சாதி மாம்ச பதார்த்தங்களை காலை மாலை ருசியாய்ச்சமைத்து புருஷனுக்குப்படைக்கவேண்டும், அவளோ காற்றை வெயிலைப்புசித்துப்பிழைக்கவேண்டும். அப்படிக்கில்லாதவள் இருந்தாலுஞ்சரி செத்தாலுஞ்சரி என்பதுதான் அத்தானுடைய நடபடி. மற்றக் காரியங்களிலெல்லாம் அத்தானுடைய குணம் தங்கக்குணந்தான், J. D. S.]

௨௭-௳ பகவாங்கினது.

௨௮-௳ மாப்பிள்ளை முனிசப்பிள்ளையவர்கள் காயிதமும் குருவினைத் தத்துத்தெய்வாயி அடவுவைத்த நகையும் வந்துசேர்ந்தது.

௫௭-௵ மார்ச்சு௴ ௧௳ ஞாயிறு. சாயங்காலம் குமாரபுரத்து பறையர் புதிதாய்வந்தவர்களுக்குச் செபஞ் செய்யப்போனேன்.

௨-௳ ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு ஒருரூ சல்பயின்றென்றுவந்தான். ராசேஷ் ஐயர் பேரில் விபசாரஞ் சங்கதியுண்டாக்கியது விசாரணைசெய்ததிலவர்பேரிற் சொன்னது ருசுவில்லையென்று கேள்வி.

௩-௳ சந்தைக்குப்போய்வந்து செபம் இரவு குமாரபுரத்தில் செய்துவந்தேன். மதுரேந்திர ஐயர் காயிதம்வந்தது. ௰௧-௳ மீனாட்சிநாதபுரத்து வாத்திவசத்திற் சீட்டுப்பணம் வாங்கப்போய்வந்தேன். பன் ஆடு குட்டி போட்டது. ௰௩-௳ சீட்டுக்கு வரவேண்டிய ரூ ௩.ம் வாங்கிவரப்போய்வந்து ௰௫-௳ காலைச்செபம் நான். மதியமும் சாயந்திரமும் லாசருபதேசி செபம். நான் குமாரபுரத்துக்குப்போனேன் ௰௬-௳.

௨௫-ட விசாரணை உவாத்தியாரும் நானுங் குமாரபுரத்துக்குப்போய் வந்தோம். ௨௬-ட காலை கனம் ஐயரவர்கள்வந்தார்கள். ௨௭-ட மாசாந்திரக் கூட்டம். ௨௮-ட சமபளம். சகாயன் உபதேசியாருக்கு காயுதம் எழுதியவர் மருமகன் தெய்வநாயகத்திடத்துக்கு அனுப்பினேன்.

௨௯-ட இராப்போசனம். நான் சேரவில்லை.

௩௰-ட மாணிக்கமுத்து றயிட்டருக்கு வியாதியதிகப்பட்டு மரணவஸ்தையாயிருந்தது. இரவிற் கனம் ஐயரவர்கள் செபம்பண்ணி சபையார் முதலானவர்களுக்குப் புத்திசொல்லி, ௩௧-ட போனார்களிளஞ்சுனைக்குப் போனார்கள். ஷை றயிட்டருக்குச் சுகம்போலக்கண்டதினால் பார்க்கவந்தவர்களுற முறையார்கள் தங்கள் ஊருக்கு எடுத்துக்கொண்டுபோனார்கள்.

௫௭-௵ எப்பிரல்மீ ௧-ட சூசைமரியஞானப்பிரகாசம் பிள்ளை கல்லிடைக்குறிச்சியிலிருந்து எழுதிய காயுதம்வந்தது.

௨-ட திசையன்விளைக்குப்போய் ஷியானுக்கு வேட்டி விசாரித்ததிற் கிடைக்கவில்லை. தருமக்கண்ணு முக்கந்தன் இடத்தில் வாழைக்காய், பழம் வாங்கிவந்தேன். நல்லதம்பி முக்கந்தன் ஒரு குலைவாழைக்காய் கொடுத்தனுப்பினான். இரவில் ஷை ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு காயுதமெழுதினேன். வேட்டி உடைமாத்துக்கு என்வேட்டியையும் அனுப்பினேன்.

---

பிரியமுள்ள தம்பி சூசைமரிய ஞானப்பிரகாசப்பிள்ளைக்குக் கர்த்தருடைய கிருபையுண்டாவதாக வாழ்த்தி எழுதுகிறது என்னவெனில்,

இவடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம் அப்படியே அவடத்துச் சேமத்துக்குத் தாம் எழுதியதையறிந்து சந்தோஷமானோம். அப்படியே மென்மேலுமறிய விரும்புகிறோம். தன்னுள்ளத்திலுள்ளதைத்தாராளமாயெழுதாவிட்டால்த் தூரத்திலிருக்கிற எங்களுக்கென்னதெரியும். இது வரையுமவடத்துச் சிலவு வரவு எப்படியென்றுதெரியாமற் சிலை வாங்கும்படி சொன்னதும் கனம் ஐயரவர்களிடத்தில் எதுகாரியத்தைக்குறித்துப்பேசயோசித்திருந்ததும் இனிமேலெப்படி எழுதயோசனை யென்பதும் கர்த்தர் சுகத்தைக்கொடுத்தால் அதிசீக்கிரமாய்க்காணலாமென்று நம்புகிறது எவ்விதயோசனையென்றுந்தெரியவில்லை. ஷை ஞானவடிவு சொல்லுகிறதில்தாஞ் சாப்பாட்டுக்கு நெல்வாங்கிறதிலும் நல்லநெல் விசாரித்து தகுதியானவர்களிடத்தில் வாங்காமல் உப்புக்காரனிடத்திற் சாவிநெல் வாங்கிறதும் குற்ற ஆளில்லாமலுந் தண்ணீர் தூரத்திலிருந்து எடுக்கிறது அன்னம்மாளுக்கு ஏலாத சமைய



காலத்தில் வருத்தப்பட்டுஇருக்கிறது. மற்றும் அவளுக்குத் தேவையான கறி பதார்த்தங்கள் சவதரித்துக்கொடாமலும் அவள்க்குமனவேதனையுண்டாகச்செய்கிறதாகத் தோன்றுகிறது. நெல்குத்த ஆள்த்தேவையில்லை. அவளை வருத்தப்படுத்தியும் சாவிநெல் அரிசிகுறைவாய்க்காணும். அவடத்தில் நல்ல அரிசி விற்கிற இடத்தில் விலையரிசிவாங்கித் திட்டிச்சொள்ளுகிறது தற்காலத்துக்கு பின்பு வேலையாள் அகப்படுங்காலத்தில் நெல்வாங்கிச்குற்றலாம். அவளும் நீருந்தலைமுழுக்கு நல்லசாப்பாடுங் குறைவில்லாமற் சாப்பிட்டாலல்லவோ கூடியமட்டுங் காரியஞ்சேமமாய் நடக்கும். மற்றப்புறம்பானதும் வீணானதுவுமான சிலவைச்சுருக்கி ஷை சாப்பாடு தலைமுழுக்கு யேலும் காலத்துக்குத்தக்க பதார்த்தங்களும் வாங்கியனுபவித்தும் வரவேண்டும். நாம்முன் கலியாணமுகிந்த பின்நடத்தவேண்டியதெல்லாந் திட்டமாய் நடத்தத்தெரியுமென்றது மறந்து போயிற்றோ. எங்களோடே வந்திருந்தீர்களானால் கவலையுமக்கும் அன்னம்மாளுக்குந் தேவையில்லை. அப்படிக்கும் வாராமல் எங்கள்யோசனைகளைத் தவிர்த்து எசமானுத்தரவுப்படி நடந்தீர் அது நல்லதுதான். அதுபோல மற்றுங்காரியங்களிலும் இருவருக்குங் குறைவின்றி நடத்தவேண்டும் அப்படிக் கில்லாமலிருக்கிறதினால் மிகவும் துக்கப்படுகிறோம். பிள்ளைகள் நல்லாகிறது சந்தோஷம். எங்களுக்கு உங்கள் செய்கையினாற் கவலைதான் பெரிது. ஷை அன்னம்மாளுக்கு இப்பொழுது எத்தனை மாசமாகிறது. பிரவசகாலத்துக்கு இன்னம் எத்தனை காலம் அல்லது மாசமிருக்குமென்பதுந் தெரியவுமில்லை. கேள்வியில் இது மாசமேழு என்றுதோன்றுகிறது. இது முன்னவளுக்குத்தேவையான பதார்த்தங்கள் தேவையான சாப்பாடு கறிபதார்த்தங்கள் கொடுத்துவரவேண்டும். இந்த மாசமுதலாயவள் வெந்தயம் வெள்வெங்காயம் போட்டுப் பால்விட்டுக் கஞ்சிவைத்து மூன்று நாள்த் தொடுத்துச் சாப்பிடவேண்டும். இதினிடையிற் தலைமுழுக்குந் தப்பாமல் முழுகவேண்டும். இப்படிப்பட்ட பாகங்கள் பெரிய மனுஷர் இருந்துசெய்யவேண்டியது. அதற்கே தாயில்லையாகிலும்மாமிசெய்யவேண்டியதுக்கு தூரமானீர்கள். அவளைப்பற்றிய பெரிய அக்காள் சிறிய தாயார் இருக்கிறவர்களாவது அதிற் கவலைப்படுகிறதாகத் தோன்றவில்லை. யவர்களுக்கு நம்மைக்குறைசொல்வது தெரியும். லாப நஷ்டம் நமக்கு ஆதலாலிந்தக் காரியத்தில் நாமவர்களைக் குறைசொல்லுகிறது நமக்குவழக்கமில்லை. ஆசையால்த்தான் ஒரு ஆள்வைத்துச் சமையல்செய்து சாப்பிட்டுக்கொள்ளுகிறது, அவளை யிவடத்துக்கு அனுப்பிவிடுகிறது. அதற்கவள்க்கு மனமில்லையென்றால்

வர்கள் சகோதரிமார் வீட்டுக்கு அனுப்பிவிடுகிறது. அதற்கும் மனமில்லையா னாற் தகுந்த ஆள் சவதரித்து அவடத்திற்தானே யிருந்துகொள்ளுகிறது. இப்படியாகவேண்டியதற்குத் தங்கள் மனந்தெரியாமல் எழுதியிருக்கிறேன். தனக்குச்சாமார்த்தியமில்லையென்பது எங்களுக்குத்தெரிந்தகாரியமாகையால் மிகவும் விசாரப்படுகிறோம். ஷெ அன்னம்மாளுக்கும் ஷெ காரியங்கள் ஒன்றுமிப்பொழுது தோன்றாது. பின்னாலே தெரியும். இவடத்தில்ச்சிலவு குறைவில்லை. யாகிலுஞ் செய்யவேண்டியதை ஒழுங்காய்ச் செய்கிறதினால் நமக்கு எப்போதும் வழக்கமான வருத்தந்தான். தமக்கு வேட்டி வாங்கிறதுக்குத் திசையன்விளைக்குப்போனேன் நல்லவேட்டியகப்படவில்லை இப்போது மக்குவேட்டி அவசரத்துக்குத்தக்கதாய் என்வேட்டியனுப்பினேன். இனிமேல் வேட்டிவாங்கியனுப்புவேன் அப்போதிந்தவேட்டியை அனுப்பவேண்டியது. ஷெ ஞானவடிவு கெட்டிக்காரியாகிலும் நமது அருமையும் அன்புந் தெரியாது. தனக்குப்பிடுங்கத்தக்க உபாயமன்றி வேறொன்றுமில்லை. அவடத்திற் சாப்பாடு இவடத்திலுஞ் சாப்பாடு கட்டுச்சாதம் வெற்றிலை பாக்குபுகையிலை இதுவெல்லாங் கணக்கில்லைப்போலுந் தனக்குக் கொடுக்கவேண்டுவது மாத்திரம் பேர்பெறக்கொடுக்கவிருப்பமாயிருக்கிறதாகத்தோன்றுகிறது. நேற்றுமதியம்வந்தவள் சும்மாயிருந்தும் இராவில்கால்வலிக்கென்றதற்கு நல்லெண்ணை காலிற் தடவி வெந்நீர்வைத்துக் கொடுத்தும் உபசாரஞ் செய்தாளுங்கள் தாயார். அப்படியிருந்தும் மேல்வீட்டில் வடக்குண்பாகத்துக்காரி யிடத்தில்போயிருந்து அவடத்திலவளைக்குறித்துப் புகழ்ச்சிபேசுகிறாள். இதை மனதில்வைத்து அவளிடத்தில் உபாயமாய் விசாரித்தாலவள் குணத்தையறிவீர். இப்பொழுதிவடத்திலவளுக்குக் கொடுக்கப்பணமில்லை. தாமெதாவது கொடுத்து இவ்வளவென்றெழுதினாலினிமேல் வரும்போது ௱ - வ நான் கொடுக்கிறேன். மேலவீட்டில் அன்னம்மைக்கு இது எழு ௴. இது முன்னுமிப்பொழுதுமவடத்தில்நடந்துகிறபாகங்கள்சொல்லக்கூடாதுஷெதாயிருக்கிறதினால்நடக்கிறது. நாமுமெவ்விதமிவடத்திலிருப்பாளானால் நமதன்னம்மாளுக்குசெய்யத்தான் விருப்பம். உங்கள் அத்தானுக்கு நல்ல சுகமில்லை. நம்முடைய வீட்டார் அவடத்துக்கும் அயடத்தாரிவடத்துக்கும் போக்குவரத்தில்லை. நான்மாத்திரமுங்கள் அத்தானிடத்திற்போய்ப்பேசிக்கொள்ளுகிறது. உங்கள் காயுதங்கள் முனிசுப்பிள்ளை காயிதமுதலானது அவர்களுக்குக் கொடுக்கிறது அவர்களுந் தங்களுக்குவருகிறதை எனக்குக்கொடுத்தும் மற்றுமவர்கள். பிள்ளைகளையிட்ட காரியங்களும்பேசுவோம். இது நிற்க, நமக்கெந்தக் காரியமும்



மனதில் ஆறுதலாய்த்தோன்றுகிறதில்லை. உம்முடையசகலன் ஆபிரகாம்பிள்ளையவர்கள் போன௴ ஒரு கடிதமனுப்பினார்கள். அதில் கனம் முத்துசுவாமி ஐயரவர்களம்மாளுக்குப் பேறுகாலத்துதவிக்கு உங்கள் சின்னமாமியாளாயவடத்துக்கு அனுப்பவேண்டியதற்கு நான் செல்வமருதூருக்குப்போய்ச்சொல்லியனுப்பும்படிக்கு எழுதியிருந்தது. அந்தப்படிக்குப்போன ௴ ௨௰-வ போய்ப்பேசினதில் ௨௪-உ போவேனென்றாள். போனதும் போகாததுந்தெரியவில்லை. அவள் சொன்னது அன்னம்மாள் டோனாவூருக்குப் பேறுகாலத்துக்கு வருவாள் நானும் உதவிக்குப் போவேனென்றாள். அது நிற்க, ஷெ தாயாகிய அம்மாள் கொழுந்தன் ஒருவர் ஆழ்வார்திருநெல்வேலியிலிருக்கிறதாயும் அவருக்கு இரண்டாந்தாரத்துக்கு ஒரு பெண்பிள்ளை பிறந்து பெரிய பிள்ளையாயிருந்தும் பின்பு பிள்ளையில்லையாம். அவர் பெண்சாதியின் சம்மதப்படிக்கு மூன்றாந்தாரம் செண்டுப்பிள்ளை மகளைப்பேசி ௬௰, ௱௰ ௱ நகையும் கலியாணச் சிலவுங்கொடுத்து அரசூரில் ஷெயார் வீட்டில் இன்று கலியாணமென்றும் அவளைவந்து ஷெ பிள்ளை கூப்பிட்டதாயும் அவள் போகவில்லையென்பதாயும் சொன்னாள். ௵ ௨௰-௨ வெள்ளிக்கிழமை கலியாண முகிந்தசெய்தி ' கனம் ஐயரவர்களறிந்து ௨௭-௨ என்னிடத்தில் உம்முடைய உறை முறையானல்லவாவென்றுகேட்டார்கள். இப்பொழுதவர்கள் தமையனார் மகளை என் மகனுக்குக் கலியாணமுகித்ததினாற் கிளைதானென்றுஞ் சொன்னேன். இப்படியிருப்பதால் ஷெயார்களைக்குறித்து நம்பிக்கையும் அற்றுப்போகிறது. அன்னம்மாள் பயறுவாங்கச்சொன்னது நீர்கோவித்ததாய்க்கேட்டதினால் சேருக்கு ஒரு படி சிறுபயறு வாழைக்காய் இரண்டு சீப்பு விளைந்தது. அ ழமாகப்பானைக்குள்வைத்துச் சாப்பிடவும் ஷெ ௬, உ சீப்பு கறிக்கும் அனுப்பியிருக்கிறது.

ஞானவடிவுக்கும் ௬ - காய் கொடுத்திருக்கிறது. வெற்றிலை பாக்குக்கு துட்டு இ - கொடுத்திருக்கிறது. சுரண்டை, நல்லூர் அன்னாட்சிமார் காயிதம்வந்ததில் யாவருஞ்சேமம். முருகன்குறிச்சியிலுள்ள பிள்ளைகளும் ஈ-ஸ்ரீ முனிசுப்பிள்ளையும் சேமம். அடிக்கடி காயுதம்வருகிறது. இப்பொழுது குருசாந்துணையவர்கள் பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்கு மூன்று வாரம் விடுதலை தேவசகாயம் சவரிராயனும் சுரண்டைக்குப்போய்விட்டார்களாம். வியாகப்பபிள்ளையும் சமுசாரத்துடனிவடத்துக்குவருகிறார்களாம். நீர் உபத்திரவம்பிள்ளை ... ... ... ... ... நாதனுக்கு ௱ இ கொடுக்கவேண்டியதென்ன. அவன் சாப்பிட்டதுபோதாதா. இப்படியே கண்டவர்களெல்லாருக்கும் வீண்சிலாக்கியத்தினாற் கடக்காரனாய்ச் சிறுமைக்கிடமாகாதிருங்கள். கருத்தருங்களைக்

காப்பாராக. நாஞ௸ங்கள் தாயாரும் இன்னாசியம்மாளும் வாழ்த்துதலும் செபத்தியாயி தோத்திரமுஞ் சொல்லுகிறோம்.

௲௮௱௫௰௭-௵ எப்பிரல்௴ ௨-௳ வியாழக்கிழமை இரவிலெழுதினேன். இப்படிக்கு சவரிராயன்.

---

௩-௳ காலையில் நல்லூரிலிருந்து மரியசவரிமுத்துப்பிள்ளை காயுதம் வந்தது. ௫-௳ வியாகப்பபிள்ளை சமுசாரத்துடன் வந்தார், கூட அவர்தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளையும் இராசிகமக்கொடுத்து வந்தார். முனுசுப்பிள்ளை மாப்பிள்ளைக்கு சுகமில்லையென்று வரவில்லையென்று காயுதம்வந்தது. தேவசகாயம் சவரிராயனிருவரும் சுரண்டைக்குப்போய்விட்டதாயும், கனம் இராசேஷ் ஐயரவர்களை பந்தருக்குப்போகும்படிக் குத்தரவுவந்ததாயும் ஷை ஐயர் கூட ஏசுதாசனும் ஞானப்பிரகாசமும் கூடப்போக மனதாயிருக்கிறதாயும் கேள்வி. ௰-௳ பெரியவெள்ளி. துரையவர்கள்வந்து சாயுங்காலம் போய்விட்டார் இளஞ்சுனைக்கு.

௰௧-௳ பண்ணைவிளையிலிருந்து ஞானவுயிர்பிள்ளை மகள் கலியாணத்துக்குப் பிள்ளையவர்கள் வீட்டுக்குப் பாக்குவைத்ததாகவும் கேள்விப்பட்டேன்.

௰௨-௳ உயிர்த்தெழுந்த பண்டிகை. லாசருபதேசியார் குமாரபுரத்துக்குப்போய்வந்தார் காலையில்.

௰௩-௳ மதுரேந்திரஐயர் வருகிறதாக காயுதம்வந்தது. ௰௫-௳ சாயந்திரம் வந்தார். ௰௬-௳ இளஞ்சுனைக்குப்போனார். ௰௭-௳ சந்தைக்குப்போய் வந்தேன். இரவில் ௰ மணிக்கு வந்தார். ௰௮-௳ யிருந்து ௰௯-௳ காலை ஆராதனை மதிய ஆராதனை பிரசங்கமுஞ் செபமுஞ்செய்தார். வடக்கன்குளத்துக்குப்போன வியாகப்பன் ஷை ஐயருக்கு டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளை காயுதம்வந்தது. ஷை ௰௬-௳ இராசேஷ் ஐயரவர்கள் வந்துபோனார்கள். ஏசுதாசன் காயுதம்வந்ததுக்கு ஷை ஐயர் சொன்னதும் மதுரேந்திரஐயர் சொன்னதும் நானும் அப்படியே ஷை ஏசுதாசன் அவனிருக்கிற பள்ளிக்கூடத்தில்தானே படித்துக்கொண்டிருக்கும்படிக்கு யெழுதினேன். அவன் மறுபடியும் ௨௰-௳ தனக்குவரும்படி உத்தரவுதரவேண்டும் இவடத்தில் மூன்றுமாசமல்ல மூன்றுநாளாகிலு மிருக்கக்கூடாதென்று யெழுதினான். சாயுங்காலம் மதுரேந்திர ஐயர்போய்விட்டார். இந்தவதலிதான் விசாரணைப் பிள்ளை வீட்டிற் சாப்பிடவில்லை,



௨௧-௳ வியாகப்பபிள்ளை தன் சமுசாரத்துடனிளஞ்சுனைக்கு போனான். இரவிற் குமாரபுரத்துக்குப் போய்வந்தேன்.

௨௭-௳ முனிசுப்பிள்ளை காயுதத்தினால் வந்தசெய்தி, புதுசாய்க்குளப்பட்டு சபையைச்சேர்ந்தவர்களுக்கு ௨௬-௳ முத்தய்யபிள்ளைக்கு எட்வார்ட் முத்தய்யபிள்ளை யென்றும், தனுக்கோடிக்கு உல்லியம் எட்வார்ட் தனுக்கோடியென்றும், மனகாவலப்பெருமாளுக்கு உல்லியம் எட்வார்ட்டு என்றும் பேர்கொடுத்து ஞானஸ்தானமும் பெற்றார்கள் கனம் சார்சென்றய்யரவர்களிடத்தில் என்றும், கனம் ராசேஸ் ஐயரவர்கள் ௨௯-௳ வடக்கே போகப்புறப்பட்டார்கள்.

௲௮௱௫௰௭-௵ மெய்௴ ௧-௳ சம்பளத்துக்கு யாவரும் போனார்கள் உபதேசிமார் இளஞ்சுனைக்கு. எனக்குச்சுகமில்லை இருமல். ௨-௳ காலைச்செபத்துக்கும்.........

சவரிமுத்துப்பிள்ளை மகன் மிகேல் இறந்ததாகச் சக்கிலியன் ஓலைகொண்டுவந்தான். உடனே சாப்பாடுகொடுத்து ரூ மாகாணியுங் கொடுத்தனுப்பினேன். சாயந்திரம் ௬-மணிக்கு ஷை அண்ணன் மருமகன் சூசைமரியான் பிள்ளையுங்கூட ஒரு ஆளும்வந்தது. அவர்களுக்குஞ் சாப்பாடுங்கொடுத்து விடியக்காலம் வடக்குன்குளத்துக்குப் போனார்கள். முதலாந்தெய்தி சாயந்திரம் வந்தமாப்பிள்ளை முனிசுப்பிள்ளை ௯-௳ சாயந்திரம் புறப்பட்டுப் போனார்கள். ௫-௳ மதுரேந்திர ஐயருக்குக் காயுதமனுப்பினேன். தெய்வநாயகம்பிள்ளை முருகன்குறிச்சியில் முன்னிருந்தவீட்டை ரூ ௪௰-க்கு விலைக்கு வாங்கவேண்டியதற்காக எழுதினேன். ௫-௳ சூசைமரியானுக்குக் காயுதமெழுதி டோனாவூருக்கு அனுப்பினேன் சம்பளத்துக்கு வந்திருப்பானென்பதினால்.

௭-௳ கனம் சாப்பிட்டர் ஐயரவர்களிடத்தில் கல்லிடைக்குறிச்சிக்குப் போய்வர உத்தரவுக்கு எழுதியனுப்பினேன். ௮-௳ உத்தரவும் வந்தது. ௯-௳ மதியத்துக்குமேல் புறப்பட்டு நானுமென்சமுசாரமும் களுவூருக்குப் போய்ச்சேர்ந்தோம். அவடத்திலிருந்த பாக்கியநாத உபதேசியார் நன்றாய் உபசாரஞ்செய்தார். ௰-௳ ஓய்வுநாளானதாலிருந்து காலைமத்தியான ஆராதனைக்குமிருந்து சாயுங்காலம் பாளையங்குளத்திற்றங்கிச் சேர்மாதேவிப் பாதைவழியாய் ௰௧-௳ சாயந்திரங் கல்லிடைக்குறிச்சி சேர்ந்தோம். ௰௨-௳ மதியத்துக்கு மேலவடம்விட்டுப் புறப்பட்டோம். சூசைமரியானும் மகன்

மனைவியும் மிருந்து துக்கத்தோடே வழிவிட்டனுப்பினார்கள். சாயுங்காலம் ஓடைக்கரையென்ற ஊருக்குவந்து லயிட்டர் மாணிக்கமுத்துபதேசியார் வீட்டுக்குப்போயவர் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்துக்கொண்டோம். அவ்விடத்திலிருந்து கல்லமுத்துபதேசியார் உபசாரஞ்செய்து பதினீர் வாங்கித்தந்து ௰௫-௳ விடியக்காலங்கூடவந்தனுப்பினார். இராவிற் மீனாட்சிநாதபுரத்தில்வந்தோம். சபையான் ஆனந்தம் உபசாரஞ்செய்து பதினியும் தந்தான். ௰௬-௳ விடியக்காலம் மூன்று மணிக்கு சவிசேஷபுரத்துக்குவந்து நித்திரைசெய்து இளைப்பாறினேம். சாயந்திரம் ஐயர் துரை முதலானவர்களையும்கண்டுகொண்டேன். இராவிற் செபஞ்செய்தேன். ௰௭-௳ ஓய்வுநாள்.

உ௰-௳ ஞானயுதத்துக்கும் பரிபூரணத்துக்குங் கலியாணம் முடித்தது கனம் ஐயர். சாயுங்காலம் குமாரபுரத்துக்குப்போய் சபையாருக்கு படித்துக் கொடுத்து செபம். உ௧-௳ பகல் ௰௧-மணிக்கு பரலோகத்துக்கெழுந்த பண்டிகை ஆராதனை செய்தோம். முனிசப்பிள்ளை காயிதமும்வந்தது.

உ௩-௳ மதுரேந்திர ஐயருக்கும் ஷை முனிசப்பிள்ளைக்கும் உ. காயிதமனுப்பினேன். பின்பு சாயுங்காலம் மதுரேந்திர அய்யர் ௰௯-௳ எழுதிய காயிதம்வந்தது.

உ௪-௳ சாயந்திரங் குமாரபுரத்துக்குப்போனேன். அங்கே விசாரணை பாக்கியநாத உபதேசியார் வந்திருந்து பாடஞ்சொல்லிக்கொடுத்து செபம். பின்புவந்தேன்.

உ௬-௳ மதுரேந்திர ஐயருக்கும் முனிசப்பிள்ளைக்கும் உ௭-௳ ஏசுதாசனுக்கும் தேவசகாயஞ் சவரிராயனுக்கும் எழுதினேன். பின்பு குமாரபுரத்துக்குப்போனேன்.

உ௮-௳ மணலிவிளை ஆசாரிமச்சினனுக்குக் கலியாணமென்று பாக்கு வந்தது. லாசருபதேசியார் ஆறுமுன் கணக்கு எழுதிக்கொடுக்க வென்றிருந்தார். உ௯-௳ திசையன்விளைக்குப் போனேன். பள்ளத்தட்டில்க்குடியிருக்கும் ஆபிரகாம்வாத்தி மரித்த செய்திகேட்டேன். நல்லசிநேகிதன்.

௩௧-௳ காலை யாராதனைக்குப்பின் கனம் ஐயர் தூரத்திலிருந்து என் சமுசாரந் தூரத்திலிருந்ததுக்கு, சாதிவேற்றுமையாவென்று விசாரித்தார், அப்படியில்லை பிந்திவந்ததினுலப்படி யிருக்கலாமென்றேன். குமாரபுரத்துக் குப்போய் வந்தேன்.

௫௭-௵ ஜூன்௴ ௧-௳யிற் கோவிலுக்கு ஒழுங்கில்லாத ௫ பேருக்கு ௬- ௨ அபராதம்விதித்துச் செலுத்தினேம்.



உ-௳ மதுரேந்திர ஐயருக்கு மரியசவரிமுத்துக்குங் காயிதமெழுதினேன். சாயுங்காலம் செட்டிமூலம்பட்டி வியாகப்பபிள்ளை வீட்டிலிருந்த ஞானப்பிரகாசத்தை யவர் தகப்பனார் இன்னாசிமுத்துப்பிள்ளை மாப்பிள்ளைபோய் கூட்டிவந்தார். ௪-௳ போனார்கள் வடக்கன்குளத்துக்கு.

௫-௳ மதுரேந்திர ஐயருக்கும் மரியசவரிமுத்துப்பிள்ளைக்கும் உ-௳ எழுதியதை யனுப்பினேன்.

௰-௳ கனம் சாப்பிட்டஐயரவர்கள் உத்தரவுப்படி பள்ளிப்பிள்ளைகளுக்கு அமுதுபடி வாங்க ஏறலுக்குப்போகப்புறப்பட்டு நசரேத்தூரு அப்பாவுப்பிள்ளை வீட்டுக்குப்போயவர்கள் சுகசெய்தியை விசாரித்துக்கொண்டு கடைசன்குடையூரில்தங்கி மறுநாள் ௰௧-௳ ஏறலில்தங்கி ௰௨-௳ புறப்பட்டு நசரேத்தூரில் அப்பாவுப்பிள்ளை வீட்டிற் காலை சாப்பாடுசாப்பிட்டு பின்பு சாத்தான்குளத்தில் வந்துதங்கி, ௰௩-௳ காலை ௭-மணிக்கு வந்துசேர்ந்தேன். மதுரேந்திரஐயரும் ஏசுதாசனும் இடையன்குடி ஞானப்பிரகாசம்பிள்ளையும் எழுதிய காயிதங்கள் வந்திருந்ததைப்பார்த்தேன்.

௰௬-௳ முருகன்குறிச்சியிலிருந்த வியாகப்பபிள்ளையின் தலைச்சன்குழந்தை மரியஞானசுந்தரமென்ற பெண்பிள்ளை ௰௪-௳ இறந்ததாகவும் ஆள்வந்தது. இராவில் பிள்ளையவர்கள் மாமியாரையும் இளையகுமாரத்தியையும் பயணப்படுத்தினார்கள். நமது வீட்டில்கூட்டடக்கத் திராணியில்லாததினால் போகவில்லை யவர்கள் ௰௭-௳ போனார்கள். நானிடையன்குடிக்கு அன்பாயியம்மாளைப்போய் விசாரித்து, அந்தத்திசைகளிற் கூலிவண்டிவிசாரித்துக் கிடைக்கவில்லை. ௰௮-௳ பாளையங்கோட்டை வண்டிவந்ததைத் திட்டஞ்செய்து ௰௯-௳ என் சமுசாரமு மிளையகுமாரன் தருமராதசஞ்சீவியையும் அனுப்பினேன் முருகன்குறிச்சிக்கு ஷை பிள்ளையவர்கள்மாமி சேமத்தாளும் ஷை இளையகுமாரத்தியும் வந்துசேர்ந்தார்கள். வியாகப்பபிள்ளை வீட்டிற் கிலவுக்கு முட்டானதால் வந்ததாகவும் சொன்னார்களாம்.

உ௫-௳ மதுரேந்திர ஐயருக்கும் ஏசுதாசனுக்கும் காயிதமனுப்பினேன். முனிசப்பிள்ளை மாம்பழம் அனுப்பினார்கள் ...... வந்தேன்.

உ௯-௳ பிள்ளையவர்கள்கூடப் புறப்பட்டு சங்கத்துக்கு ௩௰-௳ காலை ௮-மணிக்கு முருகன்குறிச்சியிற் சேர்ந்தோம். வியாகப்பபிள்ளை வீட்டிற் பகற்சாப்பாடு. பின்பு மதுரேந்திர ஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளை ஞானசமரியான் என்சமுசாரங்குழந்தைகளுடனே விசாரணை உபாத்தியார் ஞானப்பிரகாசம்பிள்ளை வீட்டிற் சமையல்செய்து சாப்பிட்டோம்.

சுலாய்மீ ௪-௳ சங்கம். ௨-௳ விடியக்காலம் மதுரேந்திர ஐயர்போனார் சாண்டைக்கு. கல்விடைக்குறிச்சிக்கு ரூ. ஞானப்பிரகாசம்பிள்ளை போனான். ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களும் நானுமென் சமுசாரங் குழந்தைகளுடனே புறப்பட்டோஞ் சாயந்திரம் ௯-மணிக்கு. கல்லூர் தம்பி மரியசவரிமுத்துப் பிள்ளைக்கு கண்வியாதிக்கு டாக்கிட்டரிடத்திற் பார்க்கும்படி யிருக்கிறார். ௯-௳ காலை ௮ - மணிக்கு சுவிசேஷபுரத்துக்கு வந்தோம்.

௪-௳ சற்சுமிசியோன் உதவி சங்கங்கூடினோம். ரெக்கிவாண்டய்யரவர்கள் மாத்திரம் வந்திருந்தார்கள்.

௫-௳ காலை செபத்துக்குப்போய்வந்தபின் எனக்கு சுரம்வந்தது. ௯-௳ செபத்தியாயி தேவசகாயம் இருவருக்கும், ௭-௳ கிருபைபெற்றானுக்குஞ் சுரம். ஷை எசுதாசனும் இடையங்குடி ஞானப்பிரகாசமும் விடுமுறைக்கு வந்தார்கள். ௰௯-௳ மதுரேந்திர ஐயருக்கும் முனிசுப்பிள்ளைக்குங் காயுதமனுப்பினேன். ௰௫-௳ ஷை முனிசுப்பிள்ளைக்குங் காயுதம் ஒன்றனுப்பினேன்,

௰௭-௳ சந்தைக்குப்போய்வந்தேன். அச்சங்குளம் அண்ணன் சவரிமுத்துப்பிள்ளைவந்தார்கள். ௨௪-௳ புறப்பட்டுப்போனார்கள் வடக்கே. இதுவரை ௯ - வேளைச்சாப்பாடு-பிள்ளையவர்கள் வீட்டிற் சாப்பிட்டது, மற்றநாள் நம்முடைய வீட்டிற் சாப்பிட்டு கட்டுச்சாதமுங் கட்டிக்கொண்டுபோனார்கள். வெத்திலை பாக்குக்கு துட்டு - ரூ கொடுத்தேன். வேறுதுட்டில்லை என்னிடத்தில். மதியத்தில்த் தெய்வாயி குருவினத்தத்திலிருந்துவந்தாள்.

௨௯-௳ சாண்டைக் காயுதம்வந்ததில், மதுரேந்திர ஐயருக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாக வெழுதினார். ௨௭-௳ ஷை தெய்வாயி வடக்குன்குளத்துக்குப்போனாள். அவடத்திலிருந்து ௨௧-௳ தூ ௨ - ம் ஓலையுமனுப்பினதில், தன் மகளுக்கு மருமகனுக்கு சீலை இல்லையென்று ஒரு கண்டாங்கியும் ஒரு வெள்ளைச்சேலையும் வாங்கியனுப்பும்படிக்கு.

ஆகஸ்டுமீ சனிக்கிழமை உபதேசிமார் சாயுங்காலம் மாசாக்கிரக்கூட்டத்துக்குவந்தது. ௨-௳ இராப்போசனம்.

௯-௳ சம்பளங்கொடுத்து கனம் சாப்பிட்டரவர்கள் பல்வலி உபத்திரவத்தினால்ப் பாளையங்கோட்டைக்குப்போனார்கள். ௯-௳ காலைவந்தார்கள் சுகமாய். முனிசுப்பிள்ளை காயுதமும் தெய்வாயி மகள்க்கு கண்டாங்கியும் வந்தது. ௭-௳ சந்தைக்குப்போய் ஷை வெள்ளைச்சேலை க. வாங்கிவந்தேன் இரவில். குசைமரியான் காயுதம் ஒன்றுவந்தது, அதில்த்தான் கல்விடைக்குறிச்சியிலிருந்து பெரும்பத்து ஊருக்கு மாத்திவந்திருக்கிறதாகவும், திலவு





க்கு ௯ தூ அனுப்பியிருக்கிறதாகவும் எழுதியிருந்தது. ௮-௳ பதிலனுப்பிவிட்டேன். பின்பு மதுரேந்திர ஐயர் காயிதம்வந்தது.

௰-௳ மினுக்கபிள்ளைவந்திருந்தார். ௰௪-௳ ஷையாண்வசம் தெய்வாயிக்கு இரண்டு சேலையுமனுப்பினேன். ௰௨-௳ குசைமரியான் காயுதமும் ஆபிரகாம்பிள்ளை காயுதமும்வந்தது. அதில் குசைமரியான் பெண்சாதி மிகுந்தவருத்தப்பட்டு கர்த்தர் கிருபையாய் ஒரு ஆண்குழந்தை பிறந்ததாக எழுதினார்கள். ௰௨-௳ இரவில் ௮ - மணிக்கு மேல் பற்பநாதன்செட்டியார் வீடும் மணியம் முத்துக்குமாருசுவாமியாபிள்ளை வீடுந் தீப்பற்றியெரிந்தது. உபதேசி வீடும் விசாரணைப்பிள்ளை வீடும் ஆச்சரியவிதமாய் கர்த்தர் காப்பாற்றினார். ௰௯-௳ ஆபிரகாம்பிள்ளைக்குப் பதிலனுப்பினேன்.

௰௪-௳ சந்தைக்குப்போனேன். ஞானமுத்து உப. மருமகனிளையவன் பண்ணைவிளை வாந்தியினாலிறந்ததாகச் செய்தி.

௰௫-௳ விடியக்காலம் எசுதாசனும் யோவான் தேவசகாயமும் விடுமுறைக்குவந்தவர்களை யனுப்பினேன். பின்பு ௰௯-௳ வந்த தெய்வசகாயம் பிள்ளையும் டோனாவூருக்குப்போனார்.

௰௭-௳ மதுரேந்திர ஐயர் கடிதத்திலவர் மேலுஞ் சபையார் விசாரணைக்காரர் மேலும் ஒரு பிராமணனும் மறவருங்கூடிப் பாது செய்திருக்கிறதாகவந்தது.

௯௧-௳ ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளை மகனுக்கு ஞானத்தசப்பனாகவும் ஞானத்தாயாகவும் நாங்கள் இரண்டுபேரும் உல்லியஞ் சாப்பட்டுத்துரையவர்களும் ஞானத்தகப்பன். ஷையார் மனைவி பிள்ளைகளும் மலையாளத்துக்குப்போகிறார்கள். தெய்வாயியும் நல்லதம்பியாபிள்ளை மகனும் ஷை பிள்ளை வீட்டானை நேமத்துக் கலியாணத்துக்கழைக்க வந்தது. ௨௫-௳ இத்தோடு கலியாணவீட்டுச் செலவுக்கு கண்டாங்கிகளும் வேட்டி யுறுமாலும் வாங்கியனுப்பினார்கள்.

செப்தெம்பர்மீ ௪-௳ சமாரியாவுக்குப்போய் முக்கந்தன் இடத்தில் ஓலைக்குத் திட்டஞ்செய்துவந்தேன். காட்டு ரோட்டு விசாரிப்பு ஞானப்பிரகாசம்பிள்ளைவந்திருந்தார் விசாரணைப்பிள்ளை வீட்டில். ௫-௳ போனார்.

௪-௳ காலையில் ஈ-ஸ்ரீ முனிசுப்பிள்ளையும் தேவசகாயமும் விடுதலைக்கு வந்தார்கள்.

௭-௳ காலை குசைமரியான் காயுதம்வந்தது. ஆகஸ்டுமீ சம்பளக்கூட்டம். ௮-௳ சம்பளம் வாங்கினோம், ஆகஸ்டு செப்தெம்பர்மீ ௨-க்கும்.

௧-௳ கனம் ஐயரிடத்தில் உத்தரவுவாங்கி, ௰-௳ சாயந்திரம் புறப்பட்

டேன் சமுசாரத்துடன் டோனாவூருக்குப்போக. இரவிற் தெற்கு விசையநாராயணத்திற் தங்கி, ௰௧-உ பெரும்பத்துக்குப்போய், சாயந்திரம் ௭-மணிக்குமேல் டோனாவூருக்குப்போனோம். அவடத்தில் அன்னம்மைக்கு சுரமுண்டாயிருந்ததினால் ௰௨-உ கூட்டிவர ஏதில்லாமலிருந்தோம். கனஞ் சார்ஜென்றய்யரவர்களவடத்துக்கு ௰௩-உ ஓய்வுநாளில்வந்து ஆராதனை இராப்போசனமுங்கொடுத்தார்கள்.

௰௪-உ சாயந்திரம் புறப்பட்டு நானும் தேவசகாயமுங்கூடவந்து ஷ௸ விசையநாருயணத்திற்கு இராத்திரி ௮-மணிக்குமேல்வந்து, ௰௫-உ சுவிசேஷபுரத்தில்வந்தேன், தேவசகாயமுங் கூலிக்காரனுங்கூடத்தானே. கனம் ஐயர் துரையும் சின்னம்மாளும் பாளையங்கோட்டைக்குப்போனார்களாம். ஷ௸யம்மாளுக்குமன்னனும்.

௰௭-உ ஞானக்கண்ணுமகன் விசுவாசம் பனையிலிருந்து விழுந்தான். அவனுக்காகச் செபம்பண்ணப்போனேன்.

௰௮-உ மதியம்வரை காத்திருந்து சர்ச்சைக்குப்போனேன். லாசருபதேசியாருஞ் சர்ச்சைக்குவந்துவிட்டபின், ஷ௸ விசுவாசம் இறந்துபோனான். அடக்கஞ்செய்தது ஏசுவடியான் வாத்தி சாயந்திரம்வந்து செபம்.

௨௧-உ விடிய ௯-மணிக்கு ரா-ஸ்ரீ முனிசுப்பிள்ளையும் யோவான் தேவசகாயமும் விடுமுறைகழித்துப்போனார்கள் பாளையங்கோட்டைக்கு.

௨௨-உ கல்லம்மாள்புரத்தில் ஓலைக்குப்போய்வந்தேன். ௨௩-உ கனம் ஐயருந் துரையும் வந்தார்கள். அம்மாளுங்கூடப்போனவர்களும் பட்டணத்திலிருந்து தாங்கன்பாடிக்கு வந்திருக்கிறதாகவும் ஷ௸யிடத்திலிருந்து ஞானப்பிரகாசம்பிள்ளை கடிதம் கனம் ஐயரவர்களுக்கு வந்ததாகவும்செய்தி ௨௨-உ சுரண்டையிலெழுதியது, ௨௫-உ வந்ததில், கனம் போன்புருக்கையர் ௰௫-உ பாளையங்கோட்டையில்வந்து சேர்ந்ததாயும், ௰௮-உ மதுரேந்திர ஐயர்வந்து கண்டதாகவும், ௨௯-உ ரா-ஸ்ரீ முனிசுப்பிள்ளையவர்கள் கடிதத்தில், பள்ளிகூடத்து விடுமுறை முடிந்த ௨௨-உ முதலிதுவனாயும் வியாகப்பிள்ளை வடக்கே மாமனூர் வீட்டுக்குப்போனவர் வரவுமில்லைச் செய்தியும் எழுதவும் இல்லையென்பதினாற் துரைகோபமாயிருக்கிறதாகவும்செய்தி.

௨௭-உ மீனாட்சிநாதபுரத்துக்குப்போய் மதிய ஆராதனை செய்துவந்தேன். ௨௮-உ கனம்-சாப்டர் துரைக்கும் சுரண்டை ஐயருக்கும் முனிசுப்பிள்ளைக்குமாக ௯-கடிதமெழுதினேன். தம்பி தேவசகாயம்பிள்ளை மகன் குருநாதனை பள்ளிக்கூடத்திற் படிக்கப்போகிறவன்வசத்திலனுப்பினேன்.





௩௰-உ சாமுவேல் குழந்தை இறந்துபோயிற்று. நான் செபம்பண்ணி யடக்கஞ்செய்தேன். அதற்கு அவஸ்தையில் ஞானஸ்தானங்கொடுக்கக் கேட்டான். உத்தரவில்லையென்றேன் கனம் ஐயர் பாளையங்கோட்டைக்குப் போயிருந்தார்கள்.

௫௭-ம் ௵ அக்டோபர் ௴ ௧-உ வியாழக்கிழமை லாசருபதேசிக்கு சவிக்கியமில்லையென்றதினால் நான் கிராமத்துக்குப்போகவில்லை.

௨-உ மாலை ஏசுவடியான் உபாத்தி செபம். திங்கள் கிழமை. ௫-உ முதலூருக்குப்போனதினால் நான் கிராமத்துக்குப்போகவில்லை.

---

+

பிரியமுள்ள தம்பி ரு. ஞானப்பிரகாசம்பிள்ளைக்குக் கர்த்தருடைய கிருபையுண்டாகவும்.

இவடத்தில்யாவருந் தேவயிரக்கத்தினாலே யாவருஞ்சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையு மறியவிரும்புகிறேன். தாமும் தம்பி ரா-ஸ்ரீ ஆபிரகாம்பிள்ளையவர்கள் தமக்கெழுதியதுவும்வந்து செய்தியும் அறிந்தோம். தம்பிக்கு எலிகடி விசத்துக்குக் கொடுத்தமருந்தும் வந்தது. ஷ௸யார் காயிதத்திற்கண்டிருந்தபடிக்கு அவடத்தில் வண்டிவருமானாற் தாமதஞ் செய்யாமல்ச்சுகமாயிருந்தாலுமில்லாதிருந்தாலும்வண்டியில்வைத்தனுப்பவும். அப்படிக்கு கூடாதென்றால் உங்கள் தாயாரையனுப்பிவிடவும். ஏனென்றால் சுரண்டையிலிருந்து வந்தகடிதத்தில் உங்களண்ணாச்சியவர்கள் நாளது ௴ ௭-உ மெஞ்ஞானபுரத்துக்கு திரிமாசக்கூட்டத்துக்கு வருகிறதாயும் இவடத்துக்கும் வந்துபோகிறதாயும் கண்டிருப்பதினால் ஷ௸ அன்னம்மாளும் பிள்ளையும் தாமும்வந்தால் மிகுந்த சந்தோஷம். ஷ௸ உங்களை விவாகத்திலிவடத்திற்கண்டதுக்கு இப்பொழுதுமிவ்விடத்திற்காண்கிறது அவருக்கும் எங்களுக்குஞ் சந்தோஷமும் மற்றுங்காரியங்களையுங் கலந்துகொள்ளவும் ஏதுவாயிருக்குமே. மேலுமுங்கள் தாயாரிவடத்திலில்லாதிருந்தா லவருக்கும் எங்களுக்குந் திருத்தியாயிராது. மேலுமவடத்துக் காரியங்களிதுவரையும்விபரந்தெரியாது. நான் வரும்போதே உங்கள்தாயாருக்கு அவடத்திலிருக்கப் பிரியமில்லை யப்படியிருக்க இதுவரை யவடத்திலிருந்ததும் போதும். இவடத்தில் இன்னுசியம்மாளுக்குமருந்துசெய்து பத்தியங்களும் நடந்துவருகிறது. பிள்ளைகளும் தருமநாதனும் செய்கிற தொந்தரவும் செபத்தியாயி தனிமையாய் ஷ௸ பாடுகளும் வேலையுங் கடினமாயிருப்பதினால் ஒரு வேலையவள் அனுப்பினால் சற்றுப்படுத்துக்கொண்டா லிவடத்தில் உதவி

யாயிருக்கிறதார். தமக்கும் உத்தரவு முன்னுத்தரவிருக்கிறதுடன் இப்போ கனம் போன்புருக் ஐயரவர்களிடத்திலும் கேட்டுக்கொள்ளுகிறது நல்லது ஆகையால்தாமும் கூடவேவரவேண்டியது கோவிற்கூட்டியும்வண்டிக்கூட வந்தால் காவந்தாயும் பத்திரமாயும்வந்து சேருவார்களென்றுமிருக்கிறது. கர்த்தர் எல்லாரை இவ்விடத்திலிருந்து வண்டியனுப்பக் கூடியமட்டும் பார்த்துமகப்படவில்லை. வாடகைகூடக்கேட்டாலுங்கொடுத்துவர்துசேரவேண்டியது. கர்த்தருங்களோடிருப்பாராக.

௲௮௱௫௰௭ அக்டோபர்மீ ௫-௳ காலை } இப்படிக்கு சவரிராயன்.

இதை ஈ-ஸ்ரீ ஆபிரகாம்பிள்ளைக்குங் காண்பிக்கவும். இந்தகாயிதம் விசையநகரத்துக்குவந்து திரும்பிற்று. வண்டிக்காரப்பிள்ளைக்கு துட்டு கஇ க்கு அமுதபடி வாங்கிக்கொடுத்தது வரப்பார்த்துக்கொள்ளவும்.

கர்த்தருடைய கிருபையினாலே சுகத்துடன் எல்லாருஞ் சுகமாகவந்து சேர்ந்தார்கள். முற்றிலுங் காப்பாராக. இப்படிக்கு

௮-௳ காலை. சவரிராயன்.

[இது பெரும்பத்திலிருக்கும் தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளைக்குக் கொடுப்பது.]

---

புதன்கிழமை ௭-௳ டோனாவூரிலிருந்து என் சமுசாரமும் மருமகளும் பிள்ளையும்வந்தது.

௮-௳ காலை செபத்துக்குப்பின்பு மதுரேந்திர ஐயர்வந்தார். சாயந்திரங் கிராமத்துக்குப்போகவில்லை. மெஞ்ஞானபுரத்தில் திரிமாசக் கூட்டத்தில் கனம் போன்புருக் ஐயரும் மதுரேந்திர ஐயருஞ் சாண்டைச் சேகரத்தில்த்தானிருக்கிறதென்று பேசினார்களாம். ௯-௳ சந்தைக்குப்போய்வந்தேன். பின்பு ஷை ஐயர் சாண்டைக்குப்புறப்பட்டுப்போனார். இரவில் பட்டணத்துக்குப்போன என் பேரன் ஞானப்பிரகாசம்பிள்ளைவந்து சேர்ந்தார். சனிக்கிழமை ௰-௳ கோட்டையத்திலிருந்து சாப்பட்டர் துரைவந்தார்போய்க் கண்டோம். ௰௧-௳ சாயந்திரம் பாளையங்கோட்டைக்குப்போய்விட்டார்.

௰௨-௳ காலை குசைமரியான் வந்தான் பெரும்பத்திலிருந்து. நான் மழையினாற் கிராமத்துக்குப்போகவில்லை,

௰௩-௳ பள்ளையாட்டுக்குட்டியை யறுத்து; அதின்தலை யிட்டமுனிச் சுப்பிரமணியனுக்கு மதிப்பாதிக்குக்கொடுத்துவிட்டேன்.

---



+

அன்புள்ள குமாரனுகிய யோவான் தேவசகாயத்துக்கு கர்த்தருடைய கிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருஞ் சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களுக்கு நீ யெழுதிய காயிதம் ஞாயிறு ௨-௳ வந்து அறிந்தேன். அப்படியே இனிமேலுமறியவிரும்புகிறேன். ஞானப்பிரகாசம்பிள்ளையும்வந்து சேர்ந்தார். அவரிடத்தில் யேதோ அவசரத்திற்கு ஒன்றரை துட்டுக் கேட்டதாகவும் அவரிடத்தில் ஒருதுட்டுமாத்திரம் இருந்து கொடுத்ததாகவும் சொன்னார். உனக்கு யேதாவது அவசரமுள்ளதை எனக்கு எழுது. உங்களண்ணாட்சி யேசுதாசபிள்ளையிடத்திற் கேட்டுக்கொள் அல்லது உங்கள் அத்தானுக்குச் சொல்லி யிவடத்துக்கு எழுதச்சொல். சவரிராயனுக்குசுகமாயிருக்கிறதையும் அவன்பள்ளிக்கூடத்துக்குப்போகிறதையும்எழுது. நீங்களிருவரும் விவேகமுள்ளபிள்ளைகளென்று நான் கேள்க்கிறதினால் சந்தோஷமாகிறதுபோல உங்கள் உவாத்திமாரிடத்திற் சுருசுருப்பாய்ப்பாடங்களும் படிப்புந்தாழ்மையும் அன்புமுள்ள பிள்ளைகளென்றும் படிப்பில் அதிகமாய்த்தேறுகிறதாயிருக்கிறதாயுங் கேட்டால் எத்தனை சந்தோஷமிருக்கும். ஆனதாற் கர்த்தர் சுகத்தைக்கொடுத்திருந்தால் நீங்களிருவரும் வருகிற விடுமுறைக்குள்ளாக அதிகமாயிருக்கும்படி படித்துவருவீர்களென்றும் நம்புகிறேன். சவரிராயனுக்கும் அன்பாய் புத்தி சொல்லி இருவருமன்பாய் நடந்துகொள்ளவும். ஈ.ஸ்ரீ ஞானப்பிரகாசம்பிள்ளையவர்களுக்கும் அவர்கள் வீட்டாருக்கு நான் வாழ்த்துதல்சொல்லுகிறேன். நீயனுப்பிய ஓய்வர்ப்பெட்டியும் வந்தது. உங்களண்ணாட்சி மரியசவரிமுத்துப்பிள்ளையையும் அடிக்கடி கண்டுகொண்டவர் சுகத்தையும் விசாரித்துக் கொள். கர்த்தர் எல்லாரையுங் காப்பாராக.

௲௮௱௫௰௭ அக்டோபர்மீ ௰௯-௳ } இப்படிக்கு சவரிராயன்.

[இவை: முருகன்குறிச்சியில் மக-ஈ-ஈ-ஸ்ரீ குருசாந் துரையவர்கள் பள்ளிக்கூடத்திற் படிக்கிற பிரியமுள்ள யோவான் தேவசகாயத்துக்குக்கொடுப்பது.]

---

௰௪-௳ இரவில் கனம் சாப்பட்டர் ஐயர் பட்டணத்துக்குப்போன அம்மாள் முதலான யாவரும்வந்துசேர்ந்தார்கள். ௰௫-௳ காலை ௰ - மணிக்குப் போய்க் கண்டோம். இரவில் கிராமத்துக்கு நான் போகவில்லை. குசைமரியான் தருவைக்குப்போய் சாமிதாசபிள்ளை மகன் ௫௪-௫௰ கொண்டுபோன

அரைக்கொடியை வாங்கிவந்தான். ௰௮-௳ விடியக்காலம் பெரும்பத்துக்கு ப்போனான். ௰௯-௳ மழையினால் கிராமத்துக்குப்போகவில்லை.

௨௰-௳ வடக்குன்குளத்திலிருந்து சின்ன ஐயா கொச்சிப்பிள்ளை மகன் நல்லதம்பிக்குக் கலியாணப்பாக்குவந்தது. ஞானப்பிரகாசம்பிள்ளை வசமாய் வரவு: சுரண்டையிலிருந்த மதுரேந்திர ஐயரால் கவணி வேட்டி ௨. முனிசுப்பிள்ளை மகள் கொந்திக்காகக் கொடுத்த ரூ-௧. இரவில் பிள்ளையவர்கள் எனக்குறித்துத்தம்முடைய பிள்ளைகளுக்குச்சிப்பாரிசென்றும்தங்கள் வீட்டை இரண்டு பங்காக்கவென்றுமே யிருக்கிறீர்களென்றார்கள். அதன்றி எனக்குத்தண்டனை வந்திருக்கிறது உங்களுக்குத் தண்டனைவரவில்லை வருமென்றுஞ்சொன்னார்கள்.

௨௧-௳ பள்ளிப்பிள்ளைகள் சருவசோதனை. ௨௨-௳ சம்பளம். இரவில் லாசருபதேசிக்குக் குழந்தை பிறந்தது. ௨௩-௳ சந்தைக்குப்போய்வந்தேன். வேதநாயகம் தகப்பனிறந்து அடக்கம்பண்ணினோம். ௨௪-௳ பெரியகண்ணு நல்லதம்பி குழந்தையொன்றிறந்தது. ௨௫-௳ வீடு ஓலைபிரித்துக் கட்டினதினாற் கிராமத்துக்குப்போகவில்லை. ௩௰-௳யும் ஓலைகட்டு. சந்தைக்குப்போய்வந்தேன். ௩௧-௳ தென்புரத்தில் ஒரு கெடிங்காப்புனைகட்டினது. இரவிற் சின்னையப்பன் செட்டியார் சுரண்டையிலிருந்துவந்துபரிக்குப்போனார்.

நவம்பர் ௴ ௧-௳ பெரியபொர்ப்பத்தில் மதியம்பிரசங்கஞ்செய்து இராப்போசனமும் நடந்தது.

௨-௳ பெரும்பனைக்குப்போய்ச் செபம்பண்ணிவந்தேன்.

௪-௳ வசுதாசன் ரூ. களு தவ்வால்காரன் ஞானயுதம்வசமனுப்பிவந்தது.

௯-௳ மதுரேந்திர ஐயர் எழுதினதும் வசுதாசன் கடிதம் இரண்டும்வந்தது. சுகசெய்தி. முனிசுப்பிள்ளை கடிதத்தில் கடனின்னமும் விராகன் எட் இருக்கிறதாகவும் அது தீரும்வரை தமது சமுசாரம் வரக்கூடாதென்று தியிருந்தது. ௰௯-௳ குசைமரியான் காயுதம்வர்த்தில் அகஸ்டோபர்மீ பளம் டோனாவூரில் வயித்தியனுக்கும் மருத்துவச்சி வண்ணான் பால்செ த்தக்குஞ் சரியாய்ப்போச்சென்றும் வந்தது.

௰௪-௳ முனிசுப்பிள்ளை கடிதத்தில் திருநெல்வேலியில் பி குளத்துப்பிள்ளை பெண்சாதிஇயல்பாய் வயசுகாலத்தில் மரித்ததட்டி வேதபோதம்பிள்ளைக்கு மூன்றாந்தாரம் கலியாணமுடித்தவளின்தா வியாதியினால் இறந்துபோனதாக எழுதியிருந்தது. ௰௪-௳ கனம் அம்மாளும் மிசியம்மான்மார் பால்தனாயவர்களும் பாளையங்கோட்டைக்குப் போ



னார்கள். ௰௫-௳ சாயந்திரம் கனம் ஐய்ரந்துரையும் கழுதுருக்குப்போய் ௰௬-௳ மவடத்திலிருந்து பாளையங்கோட்டைக்குப் போனார்கள்.

௰௭-௳ மதுரேந்திர ஐயருக்கும் முனிசுப்பிள்ளைக்கும் கடிதமெழுதி வைத்தேன். ௰௮-௳ வசுதாசனுக்கும் ஒன்றெழுதி ௰௯-௳ செம்புலிங்கம் வசமனுப்பினேன்.

௨௰-௳ சமாரியாவுக்குப்போய் நெல்லுக்குத் திட்டஞ்செய்து சந்தைச் சிலவும் வாங்கிவந்தேன். அவடத்து சடலையாண்டிபெருமாள் பெண்சாதியும் [..]ளும் செம்புலிங்கம் மகனும் வாந்தியினாலிறந்த செய்தியும், இடையங்[..]டியில் சத்தியநாதஉபதேசி கொழுந்திமகன் கலியாணமுடிந்து பத்தாமாசம் [..]ந்தியிலிறந்ததாகவும் கேட்டேன். அவனுக்குக் கலியாணமுடித்தபிள்ளை [..]ள்ளன்தட்டு ஆபிரகாம் வாத்திமகள்.

௨௧-௳ வாசிப்பு. என்கையெழுத்து கனம் சாப்டர்ஐயரவர்கள் பார்த்து நல்லதென்று சந்தோஷப்பட்டார்கள்.

௨௨-௳ மதுரேந்திர ஐயர் ௰௧-௳ எழுதிய கடிதம்வந்தது சுகசெய்தி. முனிசுப்பிள்ளையும் வசுதாசனுமெழுதினதில் மரியசவரிமுத்துப்பிள்ளை நல்லூர் போய்ச்சேர்ந்ததுமவரை வேறுஊருக்கு மாத்திப்போட யோசனையாயிருக்கிறதாயும், முருகன்குறிச்சி உபதேசிமார் கல்விச்சாலையில் ஒருமாணாக்கன் வாந்தியிலிறந்ததாகவும் வந்தது.

௨௫-௳ ஷை ஐயரும் முனிசுப்பிள்ளையும் அனுப்பியகடிதத்தில் ஷை ஐயர் கைக்குழந்தைக்கு சவுக்கியமில்லையென்று. இடையங்குடி ஞானப்பிரகாசம்பிள்ளை காயுதமுமவர் தமையனார் சாமுவேல்ப்பிள்ளை பட்டணத்திலிருந்தெழுதிய கடிதத்தையும் இடையங்குடிக்கனுப்பும்படிக்கு வந்தது. ௨௭-௳ ஷை காயுதத்தையும்கொண்டு இடையங்குடிக்குப்போய்த் தங்கச்சி அன்பாயியை விசாரித்து வந்தேன். அவடத்தில் வேதமாணிக்கவாத்தி மகள் பாக்கியத்துக்குப்பேதி இரவில்மரித்து மறுநாள் ௨௮-௳ மரித்ததாகக் கேட்டேன். ௩௰-௳ மதுரேந்திர ஐயர், மரியசவரிமுத்து, முனிசுப்பிள்ளை, [..]சன், முனிசுப்பிள்ளை இடையங்குடி ஞானப்பிரகாசம்பிள்ளை, ஆக ௫ [..]ருங் காயுதமெழுதிவைத்து சாயந்திரம் நந்தன்குளத்துக்குப்போய்ச் [..]ய்து தங்கினேனவடத்தில்.

[..]ஜெருஸ டிசம்பர் ௴ ௧-௳ காலை மணவிளையாசாரியிடத்திலிருந்து [..]டொட்டி முதலான பொன்வெள்ளிநகைவாங்கிவரும்போது நமது [..]காலைத் [..]னாயவர்களால் விட்டுப்பிடித்துக் கொன்றதாகக் கேட்

டேன், அதுவும் நமக்குவந்த லாபந்தான். பின்பு அருணாசலத்திடத்தில் ஷெ காயுதங்கள் ஐந்துமனுப்பினேன். பின் புஸ்தகம் ஓலைகள் வாசித்திருந்து, மாலைசெபத்துக்குப்போனேன். ௩.௳ கன்னிகுளத்துக்குப் போனேன் செபத்துக்கு.

௪.௳ சமாரியாவுக்குப் போனேன். அவடத்தில் சோதிநகரத்துக்கு கலக்கட்டர் லெவிஞ்சிதுரையவர்கள் வந்து சுத்திப்பார்த்துத் தீர்ப்புச்செய்த தாகக்கேட்டேன். குசைமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு முந்தினவாரத் திற் பேதிவாந்திகண்டு வருத்தப்பட்டதாகவும், அதை கனம் ஐயரவர்களுக் கெழுதித் தெரியப்படுத்தி ௰ நாளுத்தரவு வாங்கிவந்தான்.

௫.௳ நல்லம்மாள்புரத்துக்கோவில் ஷெ கோவிலுக்கு இரண்டாவது பிரத்திட்டை செய்யப்போனார்கள் கனம் ஐயர் துரைமுதலானவர்களுங்கூட.

௬.௳ ஓய்வுநாள் ராப்போசனம். ௭.௳ சம்பளக்கூட்டம். ௮.௳ சம்பளம்.

௯.௳ சுரண்டை காயிதத்தில் மதுரேந்திர ஐயருக்கு ௭.வது ஆண்குழந்தை பிறந்தது மரித்துப்போயிற்றென்பதற்கு. தெய்வாயி விசுவாசமும் வந்தார்கள். ௰.௳ பண்டாரபுரத்துக்குப்போய்ச் செபம்பண்ணிவந்தேன்.

௰௧.௳ சமாரியாபுரத்துக்குப் போய்வந்தேன்.

௰௩.௳ காலையில் ஈ.ஸ்ரீ பிள்ளையவர்கள் வண்டி மாடொன்று விசந் தீண்டிச்செத்தது.

௰௪.௳ இடையங்குடியிலிருக்கும் பாக்கியத்தின் வீட்டில் சரு கூ நகையும் வெள்ளி வெங்கலமாக களவுபோனதாகக் கேட்டுப் பிள்ளையவர்கள் போனார்கள். நான் ஸ்நானசருபதேசியில்லாததால்க் கிராமத்துக்குப் போகவில்லை.

௰௫.௳ குசைமரியானுமவன் சமுசாரங் குழந்தையும் ஷெ தெய்வாயியும் பெரும்பத்துக்குப்போனார்கள். கனம் சாப்பட்டம்மாளும் மகளுக்குச் சுவிக்கியமில்லையென்று கூட்டிப்போனார்கள் பாளையங்கோட்டைக்கு.

௰௭.௳ கிளாக்காரன்தட்டுக்கு செபம்பண்ணி யிரவில் வீட்டுக்குவந்தேன். ௰௮.௳ சங்கைக்குப்போய்வந்தேன். ௰௯.௳ உபதேசிமார் வாசிப்பு.

௨௰.௳ திசையன்விளைக்குப் போய் உமையொருபாகஞ்செட்டியார் வீட்டில் அடவுவைத்து கூ ச ம் வாங்கிக்கொண்டு,நர்தன் குளத்துக்குப் போய்ச் செபம்பண்ணி இரவில் ௯ - மணிக்கு வீட்டுக்குவந்தேன்.

௨௧.௳ கனம் சாப்டர் துரையவர்கள் என்னிடத்தில்த் தருமநாதசஞ் சீவியைச் செமினேரிப்பள்ளிக்கூடத்திற் சேர்த்துக்கொள்ள மனதாயிருக்கிறேன்; உமக்கு மனமானாற்சொல்லு வென்றார்கள். அதற்கு நான் சொன்



னது, அவனுக்குச் சுவிக்கியத்தப்பு அடிக்கடி வருவதினால் என் வீட்டிற்ச் சாப்பிட்டுக்கொண்டு அவடத்திற் படிக்கலானால் மனந்தானென்றேன். அப்படிக்கு உத்தரவு சொல்லியிருக்கிறார்கள்.

௨௪-௳ சுப்பிரமணியபுரத்துக்குப் போய் செபம்பண்ணிவந்தேன்.

௨௫-௳ பிற.பண்டிகை ௮ - மணிக்கு ஆராதனை. இரவில் கொழும்பிலிருந்துவந்தய்யர் பிரசங்கம். ௨௭-௳ ஐயருக்கு சுகமில்லை. துரை இரண்டுவேளை பிரசங்கம். ௨௮-௳ மதுரேந்திரஐயர்க்கும் மரியசவரிமுத்துப்பிள்ளைக்குங்கடிதமெழுதினேன். அருணாசலமேஸ்திரி சகோதரன் இறந்ததாக காயிதம்வந்தது. இரவில் புனாரிற் செபம்பண்ணிவந்தேன்.

௨௯-௳ ஏசுதாசனுக்கும் முனிசுப்பிள்ளைக்குங் கடிதமெழுதினேன். அருணாசலமேஸ்திரியார் தம்பி யிறந்துபோனதின் சடங்குசெய்து திட்டிசழிக்கும்படிக்கு சமுசாரத்துடன் புறப்பட்டுப் போகிறதுக்கு நமதிடத்தில் வீட்டைப்பார்க்கும்படி ஒப்புவித்தார். பின்பு போய்விட்டார். இரவிலவர் வீட்டிற் படுத்துக்கொண்டேன்.

௩௰-௳ சாயலாபுரம் ஐயர் அம்மாளிருவரும் வந்திருந்து இரவில் ஷெ ஐயரவர்கள் செபம். ௩௧-௳ காலை சாமுவேல்வாத்தியார் செபம்.

௩௰-௳ நற்குணத்தானுபதேசி கலியாணம். தஞ்சநகரத்துக்குப் போனவாசர் உபதேசிவரவில்லை. ௩௧-௳ மாலை துரைசெபம்.

இந்த ௫௭ வருஷத்தில் கர்த்தர் நமது சனத்தை ஆத்துமாவிலும் சரீரத்திலும் கேரிடும் பொல்லாப்பின்னின்று காப்பாற்றினார். ஆகிலும் இரண்டு மாஇல்லாக்குழந்தைகளைத் தமதிடத்தில்ச் சேர்த்துக்கொண்டார், அதற்கும் மற்று நன்மைகளைத்தந்ததுக்குந் தோத்திரஞ்செய்யக்கடவோமாக. கர்த்தர் காப்பாற்றி இந்த வருஷத்தைமுடித்த நான் நன்றியறிதலாய்த் தோத்திரஞ் செய்கிறேன்.

---

[இரண்டாவது ஏடு முடிந்தது. J. D. S. 6-6-98.]

+

* இது

## ௲அ௱௫அ-ம் வருஷம் முதல் ௲அ௱௬௪-வருஷம் முடிய சுவிசேஷபுரம் உபதேசி சவரிராயபிள்ளையின் ரிப்போட்டுச் சுருக்கம்.

## ௲அ௱௫அ-வருஷம் சுவிசேஷபுரம் உப: சவரிராயன் ரிப்போட்டு.

சனுவரிமீ ௧-௳ காலைச்செபம். வழக்கப்படி ௰ மணிக்குமேல் கனம் ஐயரவர்கள் துரைமுதலானவர்களையுங் கண்டபின்பு, ௰௨ மணிக்கு தரித்திர சங்கம் சற்குமிசியோனுதவிச் சங்கம் உண்டியற்கலசங்களும் உடைத்து வருமானம் பார்த்ததில் ரூ ௱௬ சிலவானம். இரவிலும் வழக்கப்படி உபதேசியார் செபம்.

௨-௳ காலையில் முனிசுப்பிள்ளை கடிதம்வந்ததில் வடக்குன்குளத்திலிருந்தவர்களுக்கு ஒரு கடிதம் இன்னாசிமுத்துப்பிள்ளை யென்பவரெழுதினதில் ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைமக்களில் தனக்குப்பெண்கொடுத்தால் நமதுமார்க்கத் திலுறுதியாயிருப்பேனென்பதாய். மதுரேந்திர ஐயர் போனமீ ௨௯-௳ எழுதியதும் யோவான் தேவசகாயம் எழுதினகடிதமும் ஏசுதாசன் ரூ கஇ ம் வந்தது.

௪-௳ குலசைமரியான் மச்சினன் ஆசீர்வாதம்பிள்ளைக்கு பித்தக்கோட்டி ...யுண்டானதாயும் சந்தோஷபுரத்துக்கு வந்துயிருக்கிறதைப் பார்க்கத்தானுந்தன் சமுசாரமும் வந்திருக்கிறதாக கடிதம் அனுப்பினான். ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் நன்னிகுளத்துக்குப் போயிருந்தவர்களிடத்தில் நான்போய் புதிய குடும்பனுக்கு ஓலைவாங்கிவந்து ௫-௳ ஷெ குடும்பனுக்கு ஆள்வசமனுப்பினேன். சாயந்திரம் ஞானப்பிரகாசம்பிள்ளை வடக்குன்குளத்துக்குப் போனார். ௬-௳ மூன்றுராசாக்கள் திருநாள். சுறண்டைக்கும் ஏசுதாசனுக்கும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளைக்குங் கடிதமனுப்பினேன், வியாகப்பபிள்ளை வீட்டுக்குப்போகிற மலையாளத்தான் வசம். பின்புமதுரேந்திரஐயர் கடிதம்வந்தது.

௭-௳ குலசைமரியானும் ஒரு ஆளுஞ் சந்தோஷபுரத்திலிருந்து வந்து சாயுங்காலஞ் சடையனேரிக்குப்போய் வயித்தியனை கூட்டிப்போகப் போனார்

* மூன்றும் எட்டின் மேல் ஏடு. J. D. S.

கள். ஞசாவூர் தேவசகாயம்பிள்ளைமகன் அருளப்பன் நாகர்கோவில் ஐயரவர்களிடத்தில் சேர்ந்து படித்து வருகிறவன் வந்து ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களிடத்தில் கண்டுகொள்ள வந்ததாகச் சொன்னான்.

௮-௳ சந்தைக்குப்போய் வந்தேன்.

௯-௳ பாடம். சாயந்திரம் ஐயருந்துரையும் கிராமம் விசாரித்து சங்கத்துக்குப்போகப் புறப்பட்டார்கள். ௰-௳ ஷெ அம்மாளும் பிள்ளைகளுஞ் சாயந்திரம்போனார்கள். மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை வடக்கன்குளத்திலிருந்து வந்தார். ௰௧-௳ ஷெ அருளப்பன் நாகர்கோவிலுக்குப் போனான். ௰௨-௳ ஷெ மாப்பிள்ளை வடக்கன்குளத்துக்குப் போனார். நான் பாளையங்கோட்டைக்குப்போனேன். மதுரேந்திர ஐயரும் மரிய சவரிமுத்துப்பிள்ளையும் வந்திருந்தார்கள். ௰௩-௳ சங்கம். ௰௫-௳ சாயந்திரம் மதுரேந்திர ஐயர் சுரண்டைக்கு கனம் பேரன்புருக் ஐயரவர்கள்கூடப்பயணம். ஷெ ஐயரவர்கள் முன்குறித்தபடி தேசாந்திரியாகவும் வேறய்யரவடத்துக்கு வருகிறதாகவும் தீர்மானித்தது. மதுரேந்திர ஐயருக்குப்பழகிய அன்புள்ளவர்கள் போறதயிருந்த மனஸ்தாபம். மரியசவரிமுத்துப்பிள்ளைக்குக் கண்வியாதியின்னமுங் கொஞ்சமிருக்கிறது. நான் புறப்பட்டுத் தருமநாதபிள்ளையைக் கூட்டிக்கொண்டு பருத்திப்பாட்டில்வந்து தங்கி, ௰௬-௳ சந்தோஷபுரத்தில் பாக்கியம்பிள்ளை வீட்டில் வந்து ஷெயார்மச்சினன் ஆசீர்வாதம்பிள்ளையின் சுகஞ்சற்று லேசாயிருப்பதைப் பார்த்துக்கொண்டு வீட்டுக்குவந்தோம்.

௰௭-௳ ஓய்வுநாள். ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் மகனும் மாமியும் சண்டையிட்டிருந்ததை யிரவில் ஷெ பிள்ளை தரியாபத்துப் பண்ணிமகனைத் துவஷணித்தும் ஷெ யாளுக்கு அனுகூலமாயும் பேசினதாகச்செய்தி. ௰௮-௳ முதல் புறம்பாய்ச் சமைத்து சாப்பிட்டான்.

௰௯-௳ சுரண்டைஐயருக்குக் கடிதமெழுதினேன்.

௨௰-௳ இன்னாசியம்மாளும் விசுவாசமும் தருமநாதபிள்ளையும் பெரும்பத்துக்குப்போய் அவடத்தில் விசுவாசத்தை வேலைக்குநிறுத்தி பின் வடக்கன்குளத்துக்குப்போய் வரப்போகிறார்கள். இடையன்குடி ஞானப்பிரகாசம்பிள்ளை உதவிச்சாலைவிடுதலைக்கு கேத்துவர்தவரிங்கிருந்து இன்றுபோனார் இடையன்குடிக்கு. உபாத்திமார் சாலையிலும் விடுதலை. யேசுதாசனுக்குஅவன் சுறண்டைக்குப்போய் வரும்படி போகிறதாகத் தேவசகாயங் காயிதம்வந்தது.

௨௧-௳ சாயந்திரம் நன்னிகுளத்துக்குப்போய் உபதேசியாருக்குச் சுக



மில்லாததை விசாரித்துக்கொண்டு செபம்பண்ணி வெள்ளைக்கண்ணைத் துணைக்குக்கூட்டி வந்தேன். ௨௨-௳ சந்தைக்குப் போய் வந்தேன்.

௨௩-௳ உபதேசிமார் வாசிப்புக் கூட்டம்.

௨௪-௳ காலையிற் சனங்களிற். ௨௫-௳ குழந்தைகளுக்குப் பவுல் ஐயரால் ஞானஸ்நானம். மதியம் ஷெ ஐயர் பிரசங்கம். பின்பு ராப்போசனம். ஷெ ஞானப்பிரகாசம்பிள்ளை தங்கள் தகப்பனாரவர்கள் வீட்டுக்குவரும்படி உத்தரவுப்படி போய்ச் சாப்பிட்டார் ௨௬-௳யில்.

௨௪-௳ காலை ஈ-ஸ்ரீ தாவீதுப்பிள்ளையவர்களும் வந்தார்கள். ௨௫-௳ சாயுங்காலம் போய்விட்டார்கள். பின்பு தம்பி டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளைவந்து வகுரிகுத்தினார். இரவிலவருங்கூடவந்த ஞானப்பிரகாசமும் நமது வீட்டில் தங்கி ௨௬-௳ ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டிற் பகல் சாப்பிட்டு ஊருக்குப் போய்விட்டார்கள். கனம் சார்சென்றய்யரவர்களும் அம்மாளவர்களும் வந்தார்கள். ௨௭-௳ இளஞ்சுனைக்குப்போனார்கள். ஞானப்பிரகாசம்பிள்ளை வசத்தில் தேவசகாயத்துக்கும் நல்லூர் சவரிமுத்துப்பிள்ளைக்கும்முனிசுப்பிள்ளைக்குங் கடிதமனுப்பினேன். அவர்கசனுவில்க்குப்பணம் வாங்கப்போனார் பாளையங்கோட்டைக்கு. ௨௮-௳ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதத்தில் தேவசகாயம் சவரிராயன் இருவருக்குஞ்சாப்பாடுசெய்துவந்த விசாரணை உவாத்தியார் பெண்சாதிக்கு மனமில்லையென்றும் வந்ததுமல்லாமல் ஷெ யாள் ஒரு ஊருக்குப்போய் வரவேண்டுமென்று மந்நாள்வரையும் வேறவிடமத்தவென்றும் ஷெ உவாத்தியார் ஞானப்பிரகாசம்பிள்ளை சொல்லுகிறதாகவும் அதைச்சுரண்டைக்குத் தெரியப்படுத்திச் செய்யவேண்டுமென்று மெழுதினார்கள். ௨௯-௳ யதுக்குப்பதில் பிள்ளைகளிடத்துக்கு வரவும் எழுதி மதுரேந்திர ஐயருக்குமப்படி எழுதவும் எழுதியனுப்பினேன், ௩௰-௳ யில். ௩௧-௳ அவர்களிரண்டுபேர் கடிதமும் அப்படியேபிள்ளைகள் சுரண்டைக்குப்போகிறதாக எழுதிவந்தது. பண்ணைவிளை டக்கர் ஐயரவர்கள் வந்து மத்தியானம் பிரசங்கம் பண்ணினார்கள்.

பிப்பரவரியீ௳ ௧-௳ வடக்கன்குளத்திலிருந்து சவரிமுத்துப்பிள்ளை வருகிலைக்க வந்தவரவடத்தில்ப்போயிருக்கிற இன்னாசியம்மாள் குழந்தைக்குச் சுகமில்லையென்று வந்துசொன்னதுமன்றி தருமநாதபிள்ளை ஓலையும்வந்தது.

௨-௳ ஷெ தருமநாதபிள்ளையும் வந்தப்படியே சொன்னார்.

௩-௳ ஷெ தருமநாதபிள்ளை நல்லூருக்கு விடுமுறையாச்சுதென்று புறப்பட்டுப்போனார். அவர்வசத்திற் சவரிமுத்துப்பிள்ளைக்கு கடிதமனுப்பினேன் திலவுக்கு முட்டாயிருக்கிறதென்று. சாயந்திரம் இடையன்குடி ஞானப்பிரகா

சம்பிள்ளைவந்தவர் தமையனார் சுகத்துடன் வருகிறாரென்றார்.

௫-ஆ கனம் ஐயரவர்கள் இளஞ்சுனைக்குப் போனார்கள்;

௮-ஆ டோனாவூரிலிருந்து ஓலைவந்ததில் ஆபிரகாம்பிள்ளை மச்சினர் ஆசீர்வாதம்பிள்ளைக்கு பித்தசன்னி அதிகரித்து; ௭-ஆ இரவில் மரித்துப்போனதாக பிள்ளையவர்களுக்கு மெனக்கு ஓலை எழுதி ஆள்வந்தது.

௯-ஆ காலையிற் கனம் சாப்ட்டர் ஐயருக்கு உத்தரவுக்குகடிதம் அனுப்பினேன். இரவில் மாறுத்தரவு மூன்றுநாளுத்தரவு வந்ததுடன் கனம் டிப்பு ஐயர்வர்களுக்குங் கடிதங்கொடுத்தனுப்பினார்கள்: பிள்ளையவர்களும் இளஞ்சுனைக்குப் போனார்கள் அமூர்தாயகம் வழக்குக்கு.

---

✝

கர்த்தர் தமதாசீர்வாதத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம். அப்படியவடத்துச் சேமாதிசயங்களையு மறியவிரும்புகிறோம். தமது கடிதம் வாரந்தோறும்வருகிறது நின்றுபோனதேதோவென்று மிகவும் கலக்கமுடையவர்களாயிருக்கிறோம். வடக்குன்குளத்துக்கு தங்கட்சி யின்னாசியம்மாள் போயிருந்து அவள் கைகுழந்தைக்கு ௬-நாள்வரை வாந்தியும் பேதியுங்கண்டு பலமருந்து தம்பி தேவசகாயம்பிள்ளையும் தாயாரவர்களும் பிரயாசப்பட்டுத் தேவ இரக்கத்தினாற்சுகமாகி ௩ அ-ஆ வந்து சேர்ந்தார்கள். உங்கள் சித்தியும் கூடவந்தாள். அவடத்துச் செய்திகளதிக விசேஷங்கள். அவடத்திலிந்தவருஷம் சிறுகுழந்தைகளாயிறந்தது ௰ - மேலிருக்கும். அதில் கிழாகுளத்து மாப்பிள்ளைக்கும் ஒரு ஆண்குழந்தையொன்று இறந்துபோனதா மற்றதுகள் எழுதினால் விரிவாகும். அதுநிற்க அண்ணாட்சி நல்லதம்பியாபிள்ளை மகன் சவரிமுத்துப்பிள்ளை ௯ மாப்பிள்ளை பெண்சாதிக்கு இளையவளைவிவாகம்பண்ணி ௩-குழந்தைகளிருக்கிறதாம். அவன் பேட்டைக்குப்போய் வரும்போது பாளையங்கோட்டையில் பேதியினாலிறந்துபோனான். இதவும் டோனாவூரில் தம்பி ஞானசமரியான் மச்சினர் ஆசீர்வாதம்பிள்ளை முந்தின பித்தசன்னிதானே கடினமாகியிறந்துபோனார். எ-ஆ ஞாயறுயிரவில் அ-ஆ ஓலைவந்தது. உடனே கனம் ஐயரிடத்தில் உத்தரவுக்குளழுதிவந்ததினால் நாளைத்தினம் நானுமுங்கள் தாயாரும் சித்தியும் மேலவீட்டு சேமத்தாருமாகப் போகவெத்தனித்திருக்கிறோம்; உங்களத்தானவர்களுக்கு அதிக இருமலில்லை. அதுவலிற் குறைவுமில்லை: இன்று இளஞ்சுனைக்குப்போயிருக்கிறார்கள். வியாகப்பபிள்ளைக்குச் சரம்விட்டிருக்கிறது; எண்ணை முழுக்காயிருக்கிறது.





தம்பி யேசுதாசனிவடம்வரா வருவானென்றிருந்தவன்வரவில்லை. விசேமுறையும் முடிவாகிறது. தம்பி சவரிமுத்துப்பிள்ளையும்மற்றவர்களுமிப்பொழுது பிறந்த குழந்தையும் சுகமேயிருக்கிறதையும் அறியவிரும்புகிறோம். தங்கட்சி ஞானதேரியம்மாள் மகன்வசத்தில் ஒருகடிதமனுப்பியிருந்ததுவந்திருக்கும். இவை எழுதுஞ் சமையத்தில் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் கடிதம் தம்பி சவரிமுத்துப்பிள்ளை கைகுழந்தைக்கு முந்தின பெண்பிள்ளை வசூரியினால் இறந்ததாகவந்தது. அதுவும் துக்கப்படத்தக்கதாயிற்று. எல்லாந்தேவசித்தத்தினால்வந்ததினால் நாங்கிலேசப்படுகிறதுக்கு இடமில்லை. மாப்பிள்ளை யின்னாசிமுத்துப்பிள்ளை யவடத்திற் கோவில் வேலை துவக்கினதறிந்து வேலைக்குவரும்படி சொல்லிவிட்டார். அவர்கள் எல்லாருந்தேவசித்தத்தினால் நம்முடைய மார்க்கத்தைச்சேருவார்களென்றுநம்புகிறேன்.

வடக்குன்குளம் பெரியண்ணாவி சவரிமுத்துபிள்ளை மகன் வியாகப்பபிள்ளை வடக்குன்குளத்து இங்கிலீசு உவாத்தியும் நம்மிடஞ்சேர மனதாய்ச் சொல்லிவிடுகிறார். கனம் கால்வேல் ஐயரவர்களுங்கூடச்சாமுவேல்ப்பிள்ளையும்பாளையங்கோட்டையிலிருந்து நாளைத்தினம் இவடத்துக்குவருகிறதாகச் செய்தி. இதுவுமன்றி நமதுகாரியங்களில்கர்த்தர் இரங்கியநேக உபகாரஞ்செய்து காப்பாற்றிவருகிறாரதுக்குத்தோத்திரஞ்செலுத்தக்கடனாளிகளாயிருக்கிறோம். மேலும் நமது குழந்தைகளிரண்டு இப்பொழுதுபோனார்களென்பதில் பராபரன் தமது சபையில் நமது சனத்தைப்பெருகப்பண்ணுவார். நாம்விக்கிரக ஆராதனையை விட்டுவிட்டதினால் இதுமுன்னநேகர் நமது பெந்துக்கள் வசைசொன்னார்களதுக்கு நாம் அஞ்சவில்லை. இவடத்தில் வரவிரும்பினவர்கள் வரத்தடைப்பட்டார்கள். இனி, நான் பெரும்பாவியாகிலும், என் வித்தைத் தமது சபையாகப்பெருகச்செய்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறதில் இப்பொழுது ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மரித்தது எனக்கதிகக்கவலையாயிருக்கிறதன்றி மற்றப்படி உலகத்தில்ப்பிறந்ததெல்லாம் மரிக்கிறது வழக்கந்தான். ஆகிலுமிக்காலத்துச் செய்திகள் கேள்விப்படப்பட நெஞ்சுக்குத் தேறுதல்தான். அப்படியே தாங்களும் மரியம்மாளும் நல்லாத்தம்பியும் தேறிக்கொண்டு மற்றவர்களுக்கு நல்மாதிரி காண்பிக்கவேண்டுமென்று மிகவும் விரும்புகிறேன். ஆனாலும் நாங்களவடம்வரையும் வந்து உங்களைக்கண்டு ஆறுதல்ப்படுத்தவும் ஆறுதலடையவும் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோமது க்குமிக்காலம் ஒத்துவாராததாயுமிருக்கிறதினால் கர்த்தர் தாமே நம்மெல்லாரையுங் காப்பாற்றி யாறுதல்செய்வாராக. உங்களெல்லாருக்கும் நாங்கள் தோத்

திரமும் வாழ்த்தலுஞ்சொல்லுகிறோம். இட்டம்புளி சுப்பிரமணிய அவடத்தில் உங்களெல்லாரை விசாரித்துக்கொண்டு ஷை யிடத்தில் வில்லேலை ஆவக்கிறதானால்த்தானுமவடத்துக்குவர விரும்புகிறதாகவும் டார். வேறுவிசேஷமில்லை. கர்த்தர் எல்லாரையும் இரட்சிக்கவேண்

௲அரு௰அ-௵ இப்படிக்கு
பிற்பரவரி௴ ௰-௳ சவரிராயன்

---

௰௧-௳ டோனாவூருக்கு ஆசிர்வாதம்பிள்ளை தட்டிகேள்க்க நானு சமுசாரமும் என்கொழுந்தி தெய்வாயியும் பிள்ளையவர்கள் வீட்டுக்கு தானுமாகப்போனோம். பெரும்பத்தில் குசைமரியானிருந்தானவனிடம் கேட்டுக்கொண்டு சாயந்திரம் டோனாவூருக்குச்சேர்ந்து ௰௨-௳ யிருந்து ௰௫-௳ புறப்பட்டுப் பெரும்பத்தில்வந்து கட்டுச்சாதமுங்கட்டிபா டியில்வந்து தங்கி ௰௪-௳ ஓய்வுநாள்காலைச்செபத்துக்குமுன்வந்தோய் வாயி மாத்திரம் வடக்குன்குளத்துக்குப்போனாள். ஏசுதாசன் சுப யிலிருந்து ௰௧-௳ வந்தான்.

௰௨-௳ கனம் கார்வேல் ஐயரவர்களும் ௱-ஸ்ரீ தானியேல்ப்பிள்ளை சாமுவேல்ப்பிள்ளையும் பட்டணத்திலிருந்து வந்தடனே இடையங்கு ப்போனதாகவும் கேட்டோம்.

௰௬-௳ நன்னிகுள்த்து சகாயனுபதேசியானை விசாரித்துக்கொண்டு டொட்டி அடவுக்கு ௲ ௪ - வாங்கிவந்தேன்.

௰௮-௳ திசையன்விளைக்குப்போய் மாதவன்குளத்தாருக்கு வந்து விலிற்செபஞ்செய்து பின்வீட்டுக்குவந்தேன்.

௰௯-௳ முதல் வெள்ளிக்கிழமை ஒருசந்தி. ௨௰-௳ விடியக்கா ஏசுதாசன் பாளையங்கோட்டை உவாத்திமார் கல்விச்சாலைக்கு விடுமுறை ந்து படிக்கப்போனான். நல்லதம்பியுங்கூடப் புதுசாய்ப்போனவனைத்தி வும் ௨௧-௳யனுப்பி கனம் சாப்பிட்டர் ஐயரவர்களிடத்தில் உதவிச் சா உத்தரவுவாங்கிவரச்சொன்னதாகவந்தான்.

௨௨-ஞ் பண்டாரபுரத்துக்குப்போய்செபஞ்செய்துவந்தேன்.

---

✝

பிரியமுள்ள தம்பி ஞானஞானப்பிரகாசம்பிள்ளைக்கு தேவகி யுண்டாவதாகவும்.

இவடத்தில்......யாவருஞ் சேமம்.



படியே யுமறிய........அறிய விருப்பமுள்ளவர்க ளாயிருக்கிறோம். நாங்கள் உம்மைவிட்டு வரும்போது...........ப்பற்றிய கவலையெங்களுக்கு மிகு........களுக்கவையும் உண்டாக்கிறதாயிருக்கிறது. கனம் முத்துசுவாமி ஐயரவர்களும் அம்மாள் பிள்ளைகளும் வெள்ளிக்கிழமை பாளையங்கோட்டையில் வந்திருந்ததாகச் செய்தி யதினால் நாங்கள் டோனா வூரிலிருந்து வந்த அன்று வந்திருப்பார்கள். நாங்களவர்களைக்கண்டுகொள் ளக்கூடாதேபோனது மனஸ்தாபந்தான். என்னசெய்யலாம். நாங்கள் பற ப்பாடியிற் தங்கி மறுநாள் காலையாரதனைக்குவந்துசேர்ந்தோம். அதின்பின் பு தருமதாதன் செபந்தியாயி சின்னப்பிள்ளைகள் நாலுபேருக்கும் நீர்க்காய்ச் சல் இருமல் முதலான வருத்தப்பட்டுச் சுகமாயிற்று. தம்பியேசுதாசன் ௰௩.௳ இவடத்துக்குவந்து அவனுக்கும் ஷை சுரமுந் தலைவலியுமுண்டாய் ௰௯-௳ தலைக்குத் தண்ணீர்விட்டு ௨௰-௳ பாளையங்கோட்டைக்குப்போய்ச் சேர்ந்தான். கல்லூர் தம்பிக்கு கைக்குழந்தை யாண்பிள்ளைக்கு வகுரியென் று கேள்வி. மற்ற யாவருஞ் சேமம். சுரண்டையிலும் யாவருஞ்சேமம் என்று கடிதமும்வந்தது. தேவசகாயங் சாயுதம் வந்தநிலவனுச்குக் கன்னக் கட்டுண்டாயிருக்கிறதாம். வேறுவிசேஷமில்லை. கர்த்தர் எல்லாரையு மிக் காலத்திற் காத்து யிரட்சித்தருளுவாராக. தமது சுகமும் அன்னம்மாளுங் குழந்தையுமு...........தையும் டோனாவூரில் யாவருடையவும் தெய்வா... யவர்கள்...........ஐயரவர்கள் யாவருடையவும் சு........ங்காரியங்களையும் விபரமாயெழுதிச் சீக்கிர........பவும் செய்வீரென்று வழிபார்த்திருப்போம்

எழுதவேன். பட்டணத்திலிருந்து சாமுவேல்
ஷை ௰௩ - இவடத்துக்குவர விட்டு மற்றவர்களை
சொல்லிப்போனார் வேறு விசேஷமில்லை.

௲அரு௰அ-௵ இப்படிக்கு
பிற்பிரவரி௴ ௨௯-௳ சவரிராயன்.

கர்த்தர் உங்களை .... மனச்சந்தோஷங்......கொடுத்துத் திடப்படு த்தும்படி மன்றாடுகிறோம். ஆண்டவரிடத்தில் நம்பிக்கையுள்ளவர்களாய் ஆறுதலாயிருப்பீர்களாக. நாங்கள் எல்லாருமுங்களுக்கு வாழ்த்தலும் செப த்தியாய் தோத்திரமுஞ் சொல்லுகிறோம்.

இப்படிக்கு சவரிராயன்.

[இவை பெரும்பத்து உபதேசி... ...ள்ள தம்பி ஞ...... ஞா னப்பிரகாசம்பிள்ளைக்கு கொடுப்பது.]

[இந்தக் காகிதம் பூச்சியரித்துப்போயிருப்பதினால் சிலவார்த்தைகளும் வரிகளும் தெரியவில்லை. J. D. S.]

---

௨௬-௳ பெரியண்ணாவி பேரன் வியாசப்பபிள்ளை வடக்குன்றுளத்திலிருந்து வந்தார் கூட லூசை ஆசாரி மகன் ஞானப்பிரகாசமும். ௨௭-௳ நம்முடைய வீட்டிற் சாப்பிட்டு கட்டு சாதமுங்கட்டி ௨௮-௳ விடியற்காலம் போனார்கள். பின்பு சண்டைவிளைப்பிள்ளை முத்துப்பிள்ளை பெண்சாதி ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டிற்குவந்தவள் தன் சகோதரி கிருபை பெற்றூரைவடத்திலிருக்கும்போது சின்னக்கண்ணு சாடான் மகன் புகள்பெற்றாடாளென்பவனை வைத்திருந்தாளென்றமனைக் குறித்து பேட்டுவாய்குளம் முத்துசாமியாபிள்ளை மெய்ன் பின் லூசைமரியாளிடத்திற் சொன்னதாகவும் அதைக்குறித்து டோறனூரில் ஆசிர்வாதம்பிள்ளை தட்டிக்கும்போனபோது சண்டையிட்டதாகவும் சொன்னாளாம் ஷை பிள்ளையவர்கள் வீட்டில்.

௫௮ ௵ மாற்சு மீ ௪-௳ காரிகோவிலுக்குப்போய்த்தேவசகாயம்பிள்ளை வீட்டுக்குப்போயவர்தமையனார் மகன் பிள்ளையைக் கொண்டதாவீதுப்பிள்ளை மரித்தது தட்டிகேள்க்கப்போனதில்வர்களுக்குத் தெரியாது. ஷை காரியங்களைக்குறித்துப்பேசிக்கொண்டு சாப்பிட்டு சாயங்காலம் இடையன்குடிக்குவந்து அவடத்திற் பட்டிணத்திலிருந்தவர்தவர் சனம் ஐயாவர்கள்கூட நாசரேத்தூருக்குப் போய்விட்டாரவர்கள் வீட்டில் தங்கி யிரவு சாப்பிட்டு ௫-௳ சமாரியாவுக்குவந்து வீட்டுக்குவந்தேன். மரியசவரிமுத்துப்பிள்ளை கடிதம்வந்ததில் நமது வீட்டுச் சிலவைப்பற்றி விசாரந்தான் என்று மாத்திரமெழுதினார். ரூபாய் கொடுத்தனுப்பவில்லை.

௬-௳ ஐயாவர்கள் வந்தார்கள். ௭-௳ காலை மதியஞ் செபஞ்செய்து சாயந்திரம் இளஞ்சகனைக்குப்போய்விட்டார்கள்.

௮-௳ லூசைமரிய ஞானப்பிரகாசங் கடிதம்வந்தது சந்தோஷபுரத்திலுடைத்துப்பார்த்து மறுபடி முத்திரையொட்டி. உடனே பதில் எழுதித் தயிலமுங் கறிக்கு மீனும் வாங்கி ௯-௳ விடியக்காலமனுப்பினோம்.

௰-௳ சாயுங்காலம் பெரும்பத்துக்குப்போன கூலியாள்வசத்தில் சாயுதமுமவடத்திலிருந்த விசுவாசத்தையுமனுப்பினார்.

௰௧-௳ அச்சங்குளம் அண்ணன் சவரிமுத்துப்பிள்ளை வடக்குன்குளத்திலிருந்துவந்து மதியம் ஒருசந்தி சாப்பிட்டு சாயந்திரம் காலாந்துவுக்குப் போய் வருமெருக்கெடுத்து, ௰௨-௳ தெல்சாப்பிட்டுக்கட்டுசாதமுங் கட்டிக்



கொண்டு மேயத்துக்குமேல் வடக்கே போனார்கள். ௰-௳ சம்பளத்துக்குப் போனவர்கள் ௰௩-௳ சாயந்திரம் வந்தார்கள். ஷை அண்ணனுடைய மெலிவு குறைகண்டு மிகவும் உருக்கமாயிருந்தும் என்னகக்ருன் ௰ - ரூபாயாவதிருந்தாற் கொடுப்பேனதற்கிடமில்லாமலே யிருந்தேன்.

௰௪-௳ காலையில் டோறனூர் சனம் டிப் ஐயாவர்களிளஞ்சகனையிலிருந்துவந்து இரவு செபம்பண்ணினார்கள் பின்புபோய்விட்டார்கள் டோறனூருக்கு. பின் சனம் பிச்குபோட்டய்யாவர்கள் வந்திருந்தார்கள். மழை பெய்ததினாற் காலையிற்போகவில்லை.

---

எனைதன்பும் பிரியமுமுள்ள தம்பி கு. ஞானப்பிரகாசம்பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில்யாவருந் தேவஇரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களுக்கும் நீயெழுதிய கடிதத்தினாலே அன்னம்மாளும் குழந்தையுமற்றவர்களுஞ் சேமமாயிருக்கிற விஷயத்தையறிந்தோம். அப்படியே மென்மேலுமறிய விரும்புகிறேன். ஷை கடிதத்தில் எழுதிய மற்றக்காரியங்களெல்லாஞ் சரியான காரியங்கள் நானுகிலுமதிற் கண்டிருக்கிறபடிக்கு ஷை சிலவுகாரியங்களைச் சுருக்கித் நாமுந் தமது பெண்சாதிகுழந்தையை நன்றாய்ப் பத்திரமாய்ப் பார்க்கவேண்டியது. மேலும் செல் வீட்டிலிருப்பதினால் தோணும்படி வந்தவர்களுக்கும் போனவர்களுக்குஞ் சிலவுசெய்து கடனுந்தீரவில்லையென்று சொல்லாமல், அன்னம்மாள் கூட ஏ - ம் முதலாவது அவள்வசத்திற் கொடுத்துப் பின்பவள் மனதின்படிக்கு யேதாவது செய்துபோட்டுக் கொள்ளவும். நாமிது முன்னெங்களுக்குக் கொடுத்ததுவும் நாங்களவடத்தில் வந்தால் சிலவானதுக்கும் இனிமேல் எங்களைப்பற்றினவர்கள் வந்ததினாலுண்டான சிலவுக்கும்விபரமாய்க்கணக்குவைத்துக்கொண்டும் இவடத்திலிருந்து யேதாவது அவடத்துக்கு வருகிறதுக்கும் அப்படியேமற்றுமுண்டாகிற காரியங்களுக்கும் புறம்பான கணக்குமிருக்கவேண்டும். அப்படியிராமற்போனால் ஒருவேளை இவடத்துக்குத்தாம் ரூபாய்களைச் சேர்த்துக் கொடுத்துவிடுகிறது போலவும் எங்களாலுங்களுக்குக் கடனுண்டாகிறதுபோலவும் முதலாவது அன்னம்மாளும் இரண்டாவதலனைப் பற்றினவர்களுஞ் சொல்லியும்மைத் தெம்மாடிப்பட்டங் கூறுவார்கள். நீர் காலஞ்சென்ன் தம்பிமாருடன் பிறந்தவரானதால் உம்மால்த்தான் சகலசிலவு கேடிட்டதாக ஒருவர் சொல்லாமற் கணக்குப் போலிருக்க வேண்டும். மேலும்

உம்முடைய சகலன்மார்களுக் கொத்தபடிக்குச் சகலமும் பெண்சாதிக்கு மவர்களைப் பற்றினவர்களுக்குஞ் செய்யவேண்டியதைச்செய்யாவிட்டால் நமதிடத்தில் வந்தவனுக்கு மடுத்தவர்களுக்கும் நமதிடத்திற் சம்பந்தம்பண்ணினது தகாதகாரியமென்றும் மனஸ்தாபத்துக்கிடமாகும். அப்படி வராமல்த் தாமும்பார்த்துக்கொள்ளவும். இன்னமுமதிகம் உமக்கெழுத மனதில்லை. மூகதாவில் தமக்கும் அன்னம்மாளுஞ் சொல்லத்தக்கதுண்டு. ஷை காரியங்களையெல்லாம் நீங்களிருவருஞ் செய்துவந்தீர்களென்று அறிந்தால்த் தான் என்மனதுக்குத்திருத்தியாமல்லவென்றால் மனஸ்தாபமாமென்றும் நம்புங்கள். ஷை குழந்தையையும் மற்றுங்காரியங்களையும் திட்டமாய்ப் பராமரித்து நடத்தாமலும் தங்கள் சரீரத்துக்குப் பேணுதலுமில்லாமலுமிருந்து வீணான செலவுசெய்துங்கணக்குஒப்புவியாமலுமிருந்துங்கடன்வந்ததுவென்றால் ஒருவருத்தரவாதியில்லை. ஷை யுங்களுக்கு வியாதி துன்பங்களுக்கு இடங்கொடுப்பீர்களானால் பின்பு அந்தச்சேகர........ சபையிருக்கச் சம்மதிக்கவும் அவடத்தில்வந்துதவிசெய்யவுங் கூடாதென்பதும் எங்கள் தீர்மானமென்றுமறிவிக்கிறேன். காணிவடத்திற் செலவுக்கு முட்டாயிருந்தும் உமக்கு முட்டுப்பாடுண்டாக்காமலிருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறது உங்கள் மனதுக்குத் தோன்றவில்லையென்றும் எனக்குள் நினைவுண்டாயிருக்கிறது. இது நிற்க, விசுவாசத்தை யவடத்துக்கு அனுப்ப எனக்கு மனதில்லாதிருந்துங் கூட்டிப்போனீர்கள். அவளிவடத்திலிருந்தாலுமல்லது அவள் தாயிடத்திற் போனாலும் அதைப்பற்றியுங்களுக்குக் கவலையில்லையே, நீங்கள் திட்டமாயிருக்கவேண்டியது. பாளையங்கோட்டையிலிருக்கிற வெடிக்குண்டானதை வாங்கியனுப்பத்தம்பிக்கு எழுதுகிறேன். சுரண்டையிலிருந்துவந்த காயிதத்தில் அவர்கள் யாவருஞ் சேமம். நல்லூர்த்தம்பி சவரிமுத்துப்பிள்ளையும் சமுசாரங்குழந்தைகளுஞ்சேமந்தான். அவருக்கு விசாரணை உபதேசியாராக நியமித்துப் பாவூர்ச்சேகரம் புலவனூரிற் சமுசாரத்துடன் ஜூ௴ ௫-உ போயிருக்கிறார்களாம். அவரிதுவரையும் போக்குச்சொன்னதன்றி துட்டு யனுப்பவில்லை. ஷையண்ணாச்சியும் அவர்களுமப்படியே. தேவசகாயமுஞ் சவரிராயனுஞ் சுரண்டையிற்தான். முத்துமரியமலியாகுலமும் மரியசுந்தரியும் சுரண்டையில்த்தானவர்கள் கையினாலடிக்கடி எனக்கு எழுதுகிறார்கள். கர்த்தரவர்களையும் நம்மையுங் காப்பாராக. ஏசுதாசபிள்ளை சுகந்தானவருக்கு ரூ ௨-ம் வருகிறது இந்த மாசமுதல் ஸ்கேமல் துரையவர்களுக்கு முனிசுவாகவும் படித்துக்கொடுக்கிறதாகவும் ௬-மணி முதல் ௰௨-மணிவரை படிக்கிறதாகவும் அதற்குஞ் சம்பளமாகவல்ல, ஏதாவதுபகாரமாகவருமென்றதுபோலவும் எழுதினார். ௭ - ஸ்ரீ பிள்ளையவர்கள்



சுகந்தான். கலியாணங்களுக்கு நெல் முதலானது எத்தனம் செய்கிறார்கள். மாப்பிள்ளைமார்தான் திட்டமில்லை. யாராவது நெருங்கிவந்தால்த் தடையில்லாதிருக்கத்தான். வடக்கன்குளத்திலிருந்து சவரிமுத்துப்பிள்ளை மகனவடத்துப்பிள்ளைகள்க்கு இங்கிலீசுபடிந்துக்கொடுக்கிறவர் பேர் வியாகப்பபிள்ளைதான். அமெரிக்கா மிசியோனிற் படித்துவந்தவர். இவடத்துக்குவந்து ௭ - ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டிலும் நம்முடையவீட்டிலும் மூன்றுநாளிருந்து போனார். ஆளும் யோக்கியன்தான் குணமுமப்படித்தோன்றுகிறது. கூடவந்த மனுஷன் பெண்ணேர்க்கமாய்ப்பேசினான். 'நாங்கள் ஒன்றுஞ்சொல்லவில்லை. மாப்பிள்ளை தெய்வநாயகம்பிள்ளையவர்கள் வடக்கே போகும் போதுள்ள நோக்கமென்ன. கனம் முத்துசுவாமி ஐயரவர்களும் பாக்கியமும் உங்களிடத்தில்ப் பட்சமாய்ப்பேசினதும் பிள்ளையைப் பார்த்ததுவும் அப்பாலவர்களெண்ணங்களுமென்னவென்பதையும் அறியவிரும்புகிறேன். இந்த மாசத்திற் பாளையங்கோட்டையிற் ஒரு பாப்பானும் ஒரு மறவனுஞ் சர்ச் மிசியோனிற் கிறிஸ்தவர்களானார்கள். இது நிற்க. முனைஞ்சிப்பட்டியாளைப்பற்றியதில்த் தாமெழுதினது இவடத்துக்கல்ல டோனாவூர்ச் சேகரத்துக்கெழுதவேண்டியது. ஏனென்றால் உன்னையும் உன் பெண்சாதியையும் நருமவடிவு பேசி... யேகினாள் அப்போது மற்றவர்கள் பேசாமலுறவாயிரு... ......பெண்சாதிமாத்திரம் வெதிரியானாள். இவடத்திலும் பிள்ளையவர்கள் பெண்சாதியிடத்தில் ஷையாளும்மையும் அன்னம்மையையும் பேசினால் அந்த வீட்டுக்காரிக்கென்ன, ஷை பிள்ளையவர்களுக்குத்தானென்ன, நமக்குமந்த வீட்டில்த்தானென்ன அதிகாரம். மேலுஞ் சிவசமயத்தில் முனைஞ்சிச் சேகரஞ் சாத்தாங்குளம் சேகரமெல்லாம் ஒன்றாயிருக்கும். நம்மை ... ... குறைவுஞ் சொல்வார்கள். இது நிற்க, தாமவடத்தில்ச் சிறுபயறு வாங்கி வைக்கிறதென்று சொன்னதும் மறந்துபோயிற்றாக்கும். 'வந்த ஆளுக்கு முதலாய் சம்பளம்கொடாமல் செலவுக்குமாத்திரமானுப்பினீர். இது நிற்க. கர்த்தருக்குச் சித்தமானால் ஒருநாள்வழி யிவடத்துக்குவந்து மறுநாள்ப் போக உத்தரவு வாங்கிவரவும். அல்லது ஷை காரியங்களுக்கு விபரமாயெழுதி இவடத்துக்குவருகிற ஆள்ப்பார்த்திருந்தனுப்பவும் துட்டுச்செலவுக்கிடமில்லாமல். இவடத்தில் நானுமுங்கள் தாயார் முதலானவர்களு முங்களுக்குவாழ்த்துதலுந்தோத்திரமும் சின்னப்பிள்ளைக்குமுத்தமும் எப்போதுஞ்செய்கிறோம்.

௲௮௱௫௰௮ இப்படிக்கு
மார்சு௴ ௰௯-உ சவரிராயன்.

[இவை டோனாவூர்ச்சேகரம் பெரும்பத்து ஊரி.....உபதேச..... பிரியமுள்ள தம்பி கு. ஞானப்பிரகாசம்பிள்ளைக்குக்கொடுப்பது.]

௰௭-உ கனம் சாப்பட்ட ஐயருமம்மாளும்வந்து உடனே யிளஞ்சுனைக்குப்போய் விட்டார்கள். ஷை பிச்சுப்போட்டய்யரும்சாயந்திரம் போனார்கள். இரவிலெனக்குத்துரையவர்கள் உத்தரவுப்படி ஞானப்பிரகாசம்பிள்ளைசடிதம் வந்தது. ௰௮-உ இளஞ்சுனைக்குப்போனேன். அவடத்திற் கனம்ஐயருந் துரையும் என்னை ஆள்வார்திருநெல்வேலிக்குப்போயமுதுபடிவாங்கிவரச்சொல்லி ரூ ௯௧- கொடுத்து வண்டியும் கொண்டுபோக உத்தரவுகொடுத்தார்கள். அம்மாள் நீ காலைக்குப்போய் அரிசி திட்டஞ்செய் நாளைக்கழித்து வண்டியனுப்புவோமென்றார்கள். என்றால் ௨௰-க் காதவழி நடந்து போகவும் தனிமையாய் ரூ-யும் கொண்டு அவடத்தில் எப்படி அரிசி கொள்வேனென்று ஐயருக்குச் சொல்ல அதுள்ளதென்று ரூ ௯௧- வாங்கிக்கொண்டு என்னை அனுப்பி விட்டார்கள்.

௰௯-உ காலையிற் செபஞ்செய்தேன். ஏசுதாசன் காயிதம் வந்தது. கோட்டைக்குள் வெங்குமுதலியார் பேரனும் ஒருவெள்ளாளனும் வேதத்தில் வந்ததாகவும் ஒருசிப்பாய் பெண்சாதி நான்று கொண்டதாயும் எழுதினான். ௨௰-உ லாசருபதேசியார் பாடத்துக்குப்போனார். காலை மாலைசெபம்.

௨௧-உ ஓய்வுநாள்.

௨௨-உ காலைச்செபம் பண்ணினேன். பின்பு திஸ்சயன்விளைக்குப்போய்ப் பலசரக்கும் எண்ணெயும் வாங்கிக்கொண்டு கோச்சுக்காரன் தட்டில் வந்து மாலைச்செபம் பண்ணினபின் வீட்டுக்கு வந்தேன். இளஞ்சுனையிலிருந்து துரையவர்கள் வந்திருந்தார்கள். ஷை யார் ௨௩-உ மாலைச்செபம்பண்ணினார்கள். ௨௪ உ இளஞ்சுனைக்குப் போய்விட்டார்கள்.

௨௫ உ தெய்வாயி தன் மூத்த மகளையும் பிள்ளைகளையுங் கூட்டிப் பெரும்பத்துக்கு வந்து ௩ நாளிருந்து இவடம் வந்தார்கள். சிலவுக்கு மிகுந்த முட்டாயிருக்கையில் வந்தது மனஸ்தாபம். பிள்ளையவர்கள் வீட்டில் மூன்று நாள் சாப்பிட்டார்கள். ௩௰-உ கட்டுச்சாதமுங் கட்டிக்கொடுத்து ரூபாயனா கையிற்கொடுத்து அனுப்பினோம்.

௩௧-உ மரியசவரிமுத்துபிள்ளை, மதுரேந்திர ஐயர், ஏசுதாசன், தேவசகாயம், சவரிராயன், முதலானவர்கள் சுகமேயிருக்கிற செய்திக்குக்கடிதமனுப்பினார்கள். நான் கன்னிகுளத்துக்குப்போய்வந்தேன் சாயந்திரம்.

௲௮௱௫௰௮ ஏப்பிரல்மீ ௧-உ கனம் சாப்பட்டர் ஐயரவர்கள் வருகிறதாகச் செய்திவந்தது. ௨-உ பாடுபட்ட திருநாள் பெரிய வெள்ளிக்கிழமை காலையில்வந்து மதியம் ஆராதனை துரை செபம் ஐயர் பிரசங்கம்.



௩-உ கனம் பேரன்புருச்சு ஐயரவர்கள் வாந்தி பேதியினால் மரித்ததாகச்செய்திவந்தது. மிகவும் அன்புள்ளபோதகசிறந்தது மிகுந்த துக்கமாயிருந்தோம். மதியத்தில் பெரியவர்களும் பிள்ளைகளுமாக ௨௰ - சனத்துக்கு ஞானஸ்நானம். கனம் டேப்பய்யரவர்களுந் துரையுங்கூடயிருந்தார்கள். இரவில் துரையவர்கள் ஷை பேரன்புருச்சு ஐயரவர்கள் மரணத்தைச் சபைக்கறிவித்து ஏசா வாக்கியத்தின் பேரில்ப்புத்திசொல்லி யவர்கள் பிள்ளைகள் இரண்டுபேர் அவரினத்தார் முதலானயாவருக்கும் வடசேகரத்திற் சுவிசேஷ பிரபலமுண்டாகவும் செபம்பண்ணினார். ௪-உ காலை ஆராதனை கனம் பிரசங்கம். மதியம் ராப்போசனம் துரை பிரசங்கம். பின்பு ஆரோக்கிய உபதேசியார் மகன் தாவீது உவாத்தி வடசேகரத்துக்குப் போதிக்க அனுப்பப்பட்டு பாளையங்கோட்டையிற் பேதியினாலிறந்ததாகச் செய்திவந்தது. பின்பு பொத்தை சுவாமியடியான் மருமகளன்னம்மை பேரில் ஆவலாதியாயிருக்கிறதை விசாரித்து அவளுக்கும் புத்திசொல்லி யனுப்பினார்கள். ஐயருந் துரையும் ௫-உ விடியக்காலம் இளஞ்சுனைக்குப்போனார்கள். லாசர் உபதேசியார் உத்தரவுப்படி முதலூர் கலியாணத்துக்குப்போனார்.

---

+

பிரியமுள்ள தேவசகாயத்துக்கு தேவ கிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருஞ் சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களுக் கடிக்கடி எழுதவும். மார்சுமீ ௨௯-உ தானும் பிரியமுள்ள சவரிராயன் முத்துமரியவியாகுலம் மரியசுந்தரியும் ஆக ௪ கடிதங்களும் வந்ததுபார்த்து சந்தோஷமானோம். அதற்குப்பதில் எழுதச்சமையம் பார்த்திருந்தேன். அதுக்குப்பின்பு நமதன்புள்ள யெசமானும் போதகருமாகிய கனம் பேரன்புருச்சையரவர்கள் நமதிடத்தைவிட்டு கர்த்தரிடத்துக்குப்போனது சந்தோஷமானாலும் நமது மனதுக்கு மிகுந்ததுக்கத்தைக்கொடுக்கிறதினால் இப்போதெழுதாமல் இன்னொரு வதலி எழுத நினைக்கிறேன். நீங்களன்பாயெனக்கெழுதினதுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். தானும் மற்றப்பிள்ளைகளும் வாசித்துக்கொள்ளவும். நானுமுங்கள் தாயார் அக்காள் செபத்தியாயியும் உங்களுக்கு முத்திசெய்கிறோம்.

௲௮௱௫௰௮
ஏப்பிரல்மீ ௫-உ

இப்படிக்கு
சவரிராயன்.

[இவை சரண்டையிற் தேவசகாய பிள்ளைக்குக் கொடுப்பது.]

௭-௳ விசாரணைபிள்ளையவர்கள் உடப்பிறந்தாளுமகளும் பிள்ளைகளும் வந்தார்கள். சஞ்சீவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாகச் சொன்னார்கள்.

௯-௳ விடுமுறைக்கு ள-ள-ஸ்ரீ முனிசுப்பிள்ளை வந்தார்கள். ஒரு கருப்புத்தாளாச்சேலையும் கொண்டுவந்தார்கள்.

௰௨-௳ வடக்குன்குளம் சவரிமுத்துப்பிள்ளையவர்மகன் வியாகப்பபிள்ளையைக்கூட்டிக்கொண்டுவந்தார். கூடத்தெய்வானையும் வந்தாள். ஷை வியாகப்பபிள்ளையை நிறுத்தி ஷையார்கள் போனார்கள் ௰௩-௳.

௰௩-௳ திரியேக் கமட்டிக்கு இளஞ்சுனைக்கு வந்த மதுரேந்திர ஐயர் ௰௪-௳ காலையில்வந்தார். கூடத்தவசிப்பிள்ளையும் குதிரைக்காரனும் வந்தார்கள். வாசர்உபதேசி பேரில் கைம்பெண்சாதி அன்னம்மை பாரதினால் சமாரியாபுரத்துக்குமாற்றப்பட்டது. பாக்கியநாதன் குழந்தைமரித்தது அடக்கம் பண்ணினார்.

௰௭-௳ மதுரேந்திர ஐயர் புறப்பட்டு ஆசீர்வாதபுரத்துப்பாதைக்குப்போனார். ஷை வாசர் உபதேசி ௨௨-௳ தன் கொழுந்திவசமாய் சபையின் டாப்பும் சற்னாலும் என்னிடத்துக்கனுப்பிவிட்டு ஷை சமாரியாவுக்கு ௨௩-௳ போனார். செபஞான உபதேசியார் வந்து காலைசெபம்பண்ணினார். வடக்குன்குளம் கல்லதம்பியாபிள்ளை மகன் சூசைமரியான் தங்களுக்குக் கடன் தரவேண்டுமென்றதுபோல ஓலை எழுதினான் தத்தம் பள்ளியான் வசம் அதற்குப்பதில் ௨௯-௳ எழுதினேன்.

௨௭-௳ இராத்திரியில் ள-ள-ஸ்ரீ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை பாளையங்கோட்டைக்குப்போனார்.

௨௮-௳ சனம் அம்மாளும் மிசியம்மாளுக்குச் சுகமில்லையென்று டாக்டரிடத்துக்குப்போனார்கள்.

---

+

பிரியமுள்ள தம்பி சூசைஞானப்பிரகாசம்பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையுமறிய விரும்புகிறோம். இதுமுன்னொரு காயிதமாவது அனுப்புவீரென்றுங் காத்திருந்தோம். நேற்றயத்தினம் கழுகூர் பாக்கியநாத உபதேசியாரிவடத்தில் வந்துங்களைக்கண்டதாயுஞ் சுகமேயிருக்கிறதாயும் கேட்டதினும் குழந்தையைப்பற்றிய விசாரஞ் சற்றுறுதலாயிற்று. அவளைக்காணவிருக்கிற ஆசைதாளிரவும் பகலுமிருக்கிறது. அநிமித்தமேயுங்களையிந்தச் சேகரத்துக்குவரவிரும்புகிறோம். அதுமக்கு மனமில்லையென்றே எழுதவில்லை. தாங்களித்திசையைவிட ஏதுவைக்காணோம். நானடிக்கடி கடிதமனுப்பவேண்டுமோனால் அவடத்துக்கு மீன் வாங்கியனுப்பவேண்டுமென்றுமனம். இவடத்தில் வெகுநாளாய்க் கிடையாது. ள - ஸ்ரீ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் வந்திருந்தார்கள். ௨௰ - நாள் கத்தரிக்காய் கோதான் கறி. வேளாவேளை முரலப்புடும் தட்டுக்கு ௰, ௰௨. உங்களண்ணாச்சி ௰௩-௳ இளஞ்சுனைக்குவந்து ௰௪-௳ இங்கேவந்து ௰௭-௳ போனார் உங்களிடமும் டோனாவூருக்கும் வரவேணுமென்றும் விருப்பமிருக்கிறது. நான் தீவிரமாய்ப்போகும். ஊரில்ப் பலதொந்தரவிருக்கிறதினால் போகக்கூடாதென்றார். அவடத்திலும் புலவனூரிலுமுள்ள யாவருஞ் சேமமாயிருக்கிறார்கள். வியாகப்பபிள்ளையும் வந்துபோனார். அவருக்கு ௰௫-௳யில் ஒரு பெண்குழந்தை பிறந்தது. ஆசீர்வாதபுரத்தில் அவர் மாமனார் வீட்டில்த்தானிருக்கிறது. மாப்பிள்ளை தெய்வநாயகம்பிள்ளையவர்கள் அலுவலின் காரியந்தெரியவில்லை. அவர்களுக்குக் கலியாணத்தைக்குறித்துப் பேச்சுண்டா. உங்களின் விருப்பமென்ன. இவடத்தில் வடக்குன்குளத்திலிருந்து இங்கிலீசு உவாத்தியாயிருந்த வியாகப்பபிள்ளை தனக்குப் பாட்புமார்க்கத்தைச் சோமனமில்லையென்று இவடத்துக்கு வந்திருக்கிறார். சபையிற்சேர்த்து குருசாந்துரையவர்கள் பள்ளிக்கூடத்துக்குப்போகும்படி யோசனையாயிருக்கிறது. இளஞ்சுனையிலிருந்து இன்னமும் ஞானப்பிரகாசம்பிள்ளை வரவில்லை. சுகமேயிருக்கிறார். ஏசுதாசன் பள்ளிக்கூடத்து உவாத்தியும் அதிலிருக்கிறதனாக்கு முனிசுவுமாக வேலைபார்த்துவருகிறான். தம்பி தேவசகாயஞ் சவரிராயனிருவரும் சுறண்டைப் பள்ளிக்கூடத்து வாத்தியாரிடத்தில் பழய பாடம்மறந்துவிடாமல் தற்காலத்துக்குப் படிக்கிறார்களாம். கனம் சார்சென்ற் ஐயரவர்கள் வந்த பின்புதானவர்களை முருகன்குறிச்சிக்கு அனுப்புவார்கள். தமக்குமனதிருந்தால் உத்தரவு வாங்கி யிவடத்துக்கு வந்துபோனால் எல்லாக்காரியங்களும் விபரமாய் அறியலாம். டோனாவூரில் ள - ஸ்ரீ விசாரணைபிள்ளையவர்கள் யாவருடைய சுகசெய்திகளுமறிய வாஞ்சையாயிருக்கிறோம். இவடத்தில் ள - ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டிலும் யாவருஞ் சேமம். ஷையார் உடப்பிறந்தாள் அவள் மகன் மகள்பிள்ளைகள் யாவரும் இந்த மீ ௧-௳க்கு முன்னாலே வந்திருக்கிறார்கள். வாசருபதேசியைத் திசையன்விளைக்கு மாத்தியதிலிருந்த செபஞான உபதேசி யிவடத்துக்கு மாத்தியிருக்கிறது. பெரும்பனை யுபதேசியாயிருந்த ஞானமுத்தைத்தள்ளிப்போட்டார். ஷையார்

பெண்சாதி அன்னம்மாள் பாடம்படித்தவள். அவர் கல்விச்சாலையிற் 
கனம் பேரன்புருக் ஐ
மரித்தது வெகுவாய் மனஸ்தாபம். கனம் முத்துசுவாமி ஐயரவர்கள் சமுசாரங்குழந்தைகள் சாரண்டையில் இந்தமீ ௨௮-௳க்குள்ளாகவிருந்துக்குவந்து போ முங்களண்ணாட்சி சொல்லியிருந்தா அவரி வடத்திலிருந்துபோனபின் கடிதம் வரவில்லை. வந்தால் தெரியும் அதுசெய்தி. நாங்கள் யாவருமுங்களுக்கு வாழ்த்தலுந் தோத்திரமும் சின்ன ஐயாவுக்கு முத்தமுஞ்செய்கிறோம். கர்த்தர் எல்லாரையுங் காப்பாராக.

௲௮௱௫௰௮-௵ ஏப்பிரல்௴ ௨௰-௳ இப்படிக்கு
இரவில் எழுதினேன். சவரிராயன்.

---

௲௮௱௫௰௮-௵ மெய்௴ ௧-௳ தந்தர்பள்ளி மதுரேந்திரப்பிள்ளை உபாத்திவேலை யிராசினாமாக்கொடுத்து மலையாளத்துக்குப்போகும்படி பிள்ளையவர்கள் வீட்டுக்குச்சமுசாரங்குழந்தைகளும் சகோதரனுமாகவந்தார்கள். விசாரணைப்பிள்ளை வீட்டுக்குவந்தார்கள். ௩-௳ எனக்கொரு பாதகுறட்டுக் கட்டைகொடுத்தார். பின்பு ஷையார்களுக்கும் விசாரணைப்பிள்ளைக்குந் தாயாதிப்பிரிசல் தீரவேண்டியதைக்குறித்துப்பேசியிரவில் முடிவுசெய்து ௪-௳ ஷையார்களுக்கு விசுத்தியுடம்படிக்கை யெழுதிக்கொடுத்தார். வடக்குன்குளம் வீட்மனையிற் பாதிக்குக் கிரையம் ௹ ௨௫-க்கு விலை இரண்டிற்பாதி மதுரேந்திரம் பிள்ளைக்கும் பாதி விசாரணை சவரிமுத்துப்பிள்ளைக்குமாக உடம்படிக்கையும் மனையிற் பாதிக்குக் கிரையமுறியும். ஷை ௹ ௨௫-க்கு விசாரணைப் பிள்ளைகடன் சீட்டுமாக எழுதிய முறிகளுக்கும் நானுங் கையெழுத்து வைத்தேன். சாயுங்காலம் ஷை மதுரேந்திரம்பிள்ளை சேகரம் புறப்பட்டார்கள். இட்டப்புளியிலிருக்கும்போது களவுபோனதுக்கு ௹ - ௨௫ ஷையான் மகனுக்குக் கொடுத்தது ௹ ௪-ம் ௸ ௹ ௨௭-ங் கொடுத்தனுப்பினார்கள் பிள்ளையவர்கள். பின்பு ஷையார் உடப்பிறந்தாள் மகள் சேகரங்களையும் போகக்கண்டிப்புச்சொன்னார்களென்றுங் கேள்வி.

௯-௳ சாயுங்காலம் இளஞ்சுனையிலிருந்த கனம் ஐயருந்துரையும் மற்றயாவரும் வந்து சேர்ந்தார்கள்.

௰-௳ வடக்குன்குளத்து மரியான்பிள்ளைமகன் வந்தார் ஷை வியாகப்பபிள்ளையைப் பார்க்கவென்று. ௰௧-௳ போனார்.

௰௫-௳ இரவிற் சனங்கள் செபத்துக்குவரவில்லையென்றென்னை கனம் ஐயர் கோவித்து ௰௬-௳ இராப்போசனமென்றுத்தரவிருக்க இரவிற்தானே



சுகத்தாழ்வாய்ப் பாளையங்கோட்டைக்குப்போனார்கள் துரையுங்கூட.

௰௭-௳ சம்பளம் இரண்டுமீ ஒன்றாய்ப்பிள்ளையவர்கள் கொடுத்தார்கள். மலையாளத்திலிருந்து வடக்குன்பாகத்துக்காரன் தன் சமுசாரங் குழந்தையுடனே வந்தார்கள்.

௰௯-௳ சின்னாயியும் மகளும் பிள்ளைகளும் வடக்குன்குளத்துக்குப்போனார்கள். செலவுக்கு ௹ ௩ கொடுத்தனுப்பினதாகக்கேள்வி. பின்பு ஷை சாரண்டையிலிருந்து மாப்பிள்ளை தருமநாதபிள்ளை வந்தார். நல்லூர்பள்ளிக்கூடத்தில் இந்தமீ ௪-௳ முதல் விடுதலையென்றும் மூன்றுமீத்துக்கு ஒருமீ விடுதலையென்றுத்தரவாம்.

௨௰-௳ சாயுங்காலம் ௱-ஸ்ரீ துரை வந்து கனம் ஐயரவர்களுக்கு நல்ல சுகமில்லையென்றும் ஷை சகோதரிக்கு சுகமாயிருக்கிறதென்றுமறிவித்தார்.

௨௧-௳ பிள்ளையவர்கள் பூச்சிக்காட்டுத்தேவருக்குச் சுகமில்லையென்றதைவிசாரிக்கப்போனார்கள்.

௨௨-௳ சனிக்கிழமைப்பாடத்துக்குவந்தவர்களிற் சகாயஉபதேசியார் தமது வறுமையிலிருந்த உபத்திரவமின்னபடியென்பதை எனக்கும்விசாரணைப்பிள்ளையவர்களுக்கும் பேசினதிலவர்களும் நானும் ஆறுதல்சொல்லியனுப்பினோம்.

௨௫-௳ அணைக்கரையிலிருந்துவந்த செய்தி வடக்குன்குளம் சின்னய்யா டாக்கிட்டர் மரியதாசுப்பிள்ளை சகோதரன் ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு பித்தபாண்டு வியாதிவந்து மரணம் அடைந்ததாகக்கேட்டோம். அவர் என் சிநேகிதன். ஒருதாரத்தாள்க்கள். படிப்பிற்கெட்டியாள். அந்தவூர்ப்பிள்ளைகளுக்குப்படித்துக்கொடுத்து வாத்தியார் என்ற பேர்பெத்திருந்தவர் மரித்தது எங்களுக்கு மிகவும் துக்கத்தைக்கொடுத்தது. பின்பு மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்கள் கடிதத்தில் பாளையங்கோட்டையிலிருக்கும் கிஸ்டினபிள்ளை சாயலாபுரத்தில் முனிசுவாய்வேலைபார்த்துவந்தவர் பட்டிணத்திற்போய் ஆறுமீத்தில் ஞானஸ்நானம் பெற்றுவந்ததாயும், தாயும் மனைவியும் பிள்ளையும் அவரைப்பறையராய்ப்போனீரென்று மிகவும் துக்கித்து இருக்கிறதாகவும் அவர் வெகுநாள்க் கிறிஸ்தவன்போல உறுதியாய் கிறிஸ்துவை பிரஸ்தாபம்பண்ணுகிறதாகவும் கேள்வி.

௨௬-௳ ஆழ்வாய் சவரிமுத்துப்பிள்ளைபெண்சாதி தனக்கு வாய்வுக்குத்துவருத்தமென்று மகனுக்கு ஆள்விட்டதினால் ஷை மகன் வியாகப்பபிள்ளையும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் போகும்படிக்கு ௱-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்க

னுத்தரவுகொடுத்து, ௨௭-௳ விடியக்காலம் வடக்குன்குளத்துக்குப் போனார்கள். பின்பு முனிசுப்பிள்ளை கடிதம் பிள்ளையவர்களுக்குவந்ததில் ஷை வியாகப்பபிள்ளை குருசாந்துவை பள்ளிக்கூடத்திற்படிக்கவந்தால் சாப்பாட்டுக்கிடம் ஒருபக்கமும் இல்லையென்பதினாலவர்கள் குமாரன் வியாகப்பபிள்ளையிடத்திற் பேசினபோது அவர் தமதுகூடப்பிறந்தவர்களைப்பற்றிய சம்பந்தம் தமக்கில்லையென்பதாய்ப்பேசினார் என்றெழுதின கடிதத்தை நானும்பார்த்தேன்.

௫௮-௵ ஜுன்௴ ௫-௳ முருகன்குறிச்சியில் வியாகப்பபிள்ளை குழந்தைக்கு வியாதியினால் வருத்தமாயிருக்கிறதென்றும் ஷையாரிருந்த வீட்டைவிலைக்குவாங்கவேண்டுமானால் ௲ யனுப்பவேண்டுமென்றும் மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை கடிதம்வந்ததின்பேரில் ௱ - ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் ஷை வீட்டை முன் வாங்கின விலைக்கு எடுத்துக்கொள்ளவும் உத்தரவுகொடுத்து நானு மேற்றுக்கொண்டு ஷை ௲ ௯௰௫ - ம் கடப்பாய் ஒத்திப்போடவும் தீர்மானித்தேன். ஷை வியாகப்பபிள்ளைக்குக் குடியிருக்க முருகன்குறிச்சியில் விராகன் ௬-க்கு ஒரு வீடொத்திக்குவாங்கும்படி ௬-௳ ஷை ஐயரவர்கள் ௲ ௨௪-ம் அனுப்பினார்கள். ஷை முனிசுப்பிள்ளைக்கு காயிதமெழுதி ஷை பழயவீட்டை ஒப்புக்கொண்டு கண்பார்க்கச்சொல்லித் திட்டஞ்செய்தோம்.

௭-௳ பெரும்பத்து தம்பி சூசைமரிய ஞானப்பிரகாசம்பிள்ளை காயிதம் வந்ததில் ஷையார் மகனுக்கு ஞானஸ்நானங்கொடுத்து சவரிராயன் ஏசுதாசனென்றும் பேரிட்டு ஞானத்தகப்பன் ஆபிரகாம்பிள்ளை பாக்கியம்பிள்ளை ஞானத்தாய் தருமவடிவுமாம். கனம் முத்துசுவாமி ஐயரவர்களந்தப்பிள்ளைக்கு வெள்ளிசங்கிலியும் ஷை குழந்தையின் மாமனார் தெய்வநாயகம்பிள்ளை அணாக்கொடியும்செய்துபோட்டதாகவும் எழுதினார்.

௯-௳ முனிசுப்பிள்ளையவர்கள் வியாகப்பபிள்ளைகுழந்தைமரித்ததாகவும் ஷையார்கள் சேனாபதிப்பிள்ளை வீட்டில்இருக்கிறதாகவும் எழுதினார்கள். பின்பு என் தங்கச்சி இத்தேரியம்மாளும் மாப்பிள்ளையும் குழந்தையும் வந்தார்கள். என் கொழுந்தி தெய்வாயியும்வந்து ஷை வடக்குன்குளத்தில் குருவின்நத்தத்துக் கவுரியேல்பிள்ளை இறந்துபோனதாகவும் ஷை தெய்வாயி இனைறு முறியும்கொடாமல் ஷை புள்ளி வைக்கவும் ஒட்டுகிறார்களில்லை மரியசிங்கம்பிள்ளை முதலானவர்கள் என்றுங்கேட்டோம். ௰௨-௳ ஷை தெய்வாயி மகள் விசுவாசத்தையுங் கூட்டிப்போனாள்.

௰௪-௳ ஷை தங்கச்சி இத்தேரியம்மாளும் மாப்பிள்ளையும் குழந்தையும் போனார்கள். ௨௧-௳ குருவின்நத்தம் தம்பி மிக்கேல்பிள்ளை மகன் மரியஇன்னாசிமுத்துக்கு கலியாணத்துக்கு வரும்படி ஓலைவந்தது.



௨௫-௳ பெரும்பத்திலிருந்து என்மருமகள் குழந்தைக்குச்சவுக்கியமில்லையென்றுகொண்டுவந்தாள். ௨௬-௳ கூடவந்தவன்போனான்.

௨௮-௳ உதவிசங்கம் கனம் பென் ஐயரும் துரையுமிருந்தார்கள்.

௫௮-௵ சுலாய்௴ ௭-௳ பாளையங்கோட்டையில் கைம்பெண் சங்கம், புஸ்தகங்களின் சங்கம், தமிழ் தருமசங்கம். ஐயர்மார் யாவருந்தவறாமல் வந்தார்கள். சுரண்டை மதுரேந்திர ஐயர் புலவனூரார் தம்பிமரியசவரிமுத்துப்பிள்ளை பெரும்பத்து சூசைமரிய ஞானப்பிரகாசம்பிள்ளையும் நானும் ஓரிடத்தில் சமையல் சாப்பாடு. ஏசுதாசபிள்ளை பள்ளிக்கூடத்தில் நான்படுத்தது. வடக்குன்குளத்து வியாகப்பபிள்ளையும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வியாகப்பபிள்ளை வீட்டில்.

௮-௳ கனம் சாப்ட்டர் ஐயரவர்களுத்தரவுப்படியவடத்திற்தங்கினேன். சாமந்திர மதுரேந்திர ஐயரும் ஷை ஞானப்பிரகாசம்பிள்ளையும் சுரண்டைக்கு போனார்கள். நானு மற்றப்பிள்ளைகளும் பிரிந்து இரவுதங்கி ௯-௳ விடியச்சகாய உபதேசியார் கூடப்புறப்பட்டு இரவில் வீட்டுக்கு வந்தேன்.

௰௫-௳ ஏசுதாசனும் தருமநாதபிள்ளையும் உதவிச்சாலையிலிருந்து விடுமுறைக்கு வந்தார்கள்.

௰௮-௳ ராப்போசனம் கனம் ஆபிரகாம் ஐயரவர்கள்வந்து பருமாரிசாயந்திரம் போய்விட்டார்கள். ௨௪-௳ கனம் ஐயர் அம்மாள் துரையாவரும்வந்தார்கள்.

௨௫-௳ சுரண்டைக்குப்போயிருந்த ஞானப்பிரகாசம்பிள்ளையும் முருகன்குறிச்சியிலிருந்த வியாகப்பபிள்ளை வந்தார்கள்.

---

+

பிரியமுள்ள தம்பி சூ. ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு கர்த்தருடைய கிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச்சேமாதிசயங்களையுமறிய விரும்புகிறேன். நேற்றைத்தினம் அனுப்பியகாயிதமும் கோழிக்குஞ்சு இரண்டும் மற்றதும்வந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன். அதற்குமுன்னவடத்திலிருந்து ஆள்க்கள் மூலமாய்வந்தசெய்தியில் தாமிவடத்துக்கு வந்துபோக உத்தரவுகேட்டதாகவும் அதற்குத்தரவு கிடைக்கவில்லையென்றும் உம்முடைய சமுசாரத்தைச் சீக்கிரமனுப்பவேண்டுமென்றுவந்தது. அதற்குமுன்னமேசின்னவனுக்கு வயற்றுவெடுத்தும் வர

ந்தியுமுண்டானதிற்சுரமுங்கூட இருந்த தோஷமும்போலத்தோன்றினது. மருந்தாகள்செய்து சுகமாகும்படி கர்த்தர்கிருபைசெய்ததினல்த்தலைமுழுகாட்டினபின்னனுப்பவும் தமக்கு சம்பள நாள்ச்சமீபத்தில்த்தான் அனுப்பவேண்டுமெதுமுன்னனுப்பினற்சிலவுவருத்தமுண்டாமென்றுபார்த்திருந்தது. அப்பொழுதுமது கடிதமும் ஆளும்வந்தது. உடனேயனுப்பாதிருந்தது ஷெ குழந்தைக்குத் தலைமுழுகிமருந்துங்கொடுத்து அனுப்பும்படிநிறுத்திருேம். சரண்டைக்குப்போன ஞானப்பிரகாசம்பிள்ளை உகூ-உ வந்துசேர்ந்தார். அவடத்தில் யாவருஞ்சேமமாயிருக்கிறார்களென்றும் தமக்கு கூ-மூளத்தில் ஒரு வெள்ளை லேஞ்சி கூ உ-க்கு வாங்கித்தந்ததாகவும் கொழுந்திமார்கள் மிகவுஞ்சந்தோஷமாய்த் தமதிடத்தில் விளையாடுகிறதுமாயிருந்தார்களென்றுஞ் சொன்னார். புலவனூருக்குப்போகவில்லையாம். ஷெ தம்பி மரியசவரிமுத்துப்பிள்ளை இந்த சங்கத்தில் தமதுமனவிருப்பத்தின்படி கூ உ௫ கொடுத்தாராதுஇதுவரையிற்சிலவுசரியினிமேல்கஸ்ட்டந்தான். உமக்குக்கொடுக்கவேதுவில்லை..தமக்குச் சுகமில்லாததுக்குஞ் சுகத்துக்கும் ஏதுவானதுக்குமானதை எங்களால் ஒன்றுமில்லை. கர்த்தர் கிருபைசெய்து சுகத்தையும் பலத்தையுங் கொடுப்பாரென்று நமபிமன்றாடத்தக்கதுமாத்திரங் கூடியது. கர்த்தருமப்படியே செய்வாராகத்தான் கூடியமட்டுஞ் சுகப்படுத்தப்பிரயாசப்படும்படி பார்த்துக்கொள்ளும். நாங்கள் கிட்டயிருந்தால்ப்பாகமாய்ப்பார்த்து ஏதாவதுசெய்யலாமதற்கு இடம்பெறுதிருக்கிறது இதைக்குறித்துக் கலமாயிருக்கிறது. கைக்குழந்தையுமடிக்கடி வியாதிக்காரனுகயிருக்கிறதினுலுமப்படித்தானிருக்கிறது. என்னதீர்மானம் என்னுற்சொல்லக்கர்த்தர் காட்டியவழியிற்செல்ல அவர் சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்போமாக. வடக்குன்குளத்து வியாகப்பபிள்ளையும் இவடத்துக்கு ஷெ தெய்தியில்வந்தாரவர்க்கும் இவடத்தில்த்தான் கனம் ஐயராவுவல்கொடுக்க யோசிக்கிறதாகத் தோன்றுகிறது. மாப்பிள்ளை தெய்வநாயகம்பிள்ளையவர்கள் கடிதத்தையுடனே கூலியாள்வசம் அரசுருக்கனுப்பி யுத்தரவுவந்தது இத்துடன்வருகிறது கூலி தூட்டு ௬ கொடுக்கவேண்டும். ஷெ மாப்பிள்ளை என்னசெய்ய யோசனையாயிருக்கிறார்கள். தாமுமவர்களும் ஈ-ஸ்ரீ ஆபிரகாம் பிள்ளையவர்களுங் கூடவந்தீர்களேயப்பொழுதேதாவது அவர்களைப்பற்றிப் பேசினதுண்டா. டோனூருக்கு ஒருஇங்கிலீசு உவாத்தியார்வேண்டுமென்று கனம் குருசாந்துவையிடத்திற் கேட்டதாகக்கேள்வியப்படியானுல் ஷெ மாப்பிள்ளை

* நோக்கமில்லையா. நம்முடைய தம்பிமார்கள் படிப்பைப்பற்றி தீர்மானமுஞ் சொல்லவில்லை. ஈ-ஸ்ரீ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் வீடு



ஒத்தி திருப்பியிருக்கிறது. சீக்கிரத்திலுங்கள் மகள் வரும்படி செய்யலாமென்றார்கள். வரும்பொழுது நானவர்களிடத்தில் எல்லாம் பின்னுலெழுதி அனுப்புங்களென்றுவந்தேன். இதுவரையும் கடிதம்வரவில்லை. ஈ-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு இப்பொழுது தூரத்தல் நின்றிருக்கிறது கர்த்தரவர்களை முற்றிலுங் காப்பாற்றவேண்டும். கருப்புக்கட்டி யிவடத்தில் கிடைக்கிறதவுருவம். ஷெ கருப்புக்கட்டிக்குக் கொடுத்த கூ வ கிழவீட்டிற் கொடுத்திதுவரையவள்தர யேதுவில்லை. திசையன்விளைக்குப் போய்க் கருப்புக்கட்டி வாங்கிப் பின்னுலேயனுப்பலாம். தமதுகண்ணூர்குயேதாவதுசெய்து பார்க்க அவடத்தில் கனம் ஐயரவர்களிடத்தில் உத்தரவுவாங்கிப்பாளையங்கோட்டைக்குப்போய் டாக்கிட்ட துரையவர்களிடத்தில்க் காண்பித்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். அப்பொழுதவர் மருந்துசெய்தால் கர்த்தர் கிருபைசெய்வார். நாங்களுமக்கு வாழ்த்தலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம்.

௲அ௱௫௰அ-௵ இப்படிக்கு
சுலாய்௴ உகூ-உ சவரிராயன்.

---

௨:எ-உ பெரும்பத்துக்கு என் மருமகள் அன்னம்மையும் குழந்தையும் கூட யேசுதாசனுந் தருமநாதபிள்ளையும் போனார்கள்.

ஆகஸ்டுமீ உ-உ ஷெ யேசுதாசபிள்ளை பெரும்பத்திலிருந்து வந்தான்.

எ-உ தருமநாதபிள்ளை வடக்குன்குளத்திலிருந்துவந்தார்.

---

+

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவ இரக்கத்தினுலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். தாங்கள் உகூ-உ எழுதிய கடிதமின்றுவந்து சேர்ந்தது. ஷெ காயிதத்துக்கு முன்னுன் இரண்டு கடிதமனுப்பினது வந்திருப்பதினுலிவடத்துச் சமாசாரந்தெரிந்திருக்கும். இப்பொழுது டோனூரில் தெய்வநாயகம்பிள்ளை நமது தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளையிடத்திற்பேசினதாகவெழுதினுன். ஷெ தம்பியதில் முன்தமக்குப் பெண்பேசினகாலத்தில்ப் பலவிதமாயப்போ நடந்ததினுற் தாமிதப்பட்டது. இப்போதவசரத்திற் கலியாணம்செய்யலாமதற்கு மற்றுண்டானவர்கள் சமையம்பார்க்கிறதில்லையானுல் வீடுகட்டுமுன்னும் அலுவல் இல்லாதிருக்கிற இப்போது கலியாணத்துக்கு சம்மதிப்பார்கள். அப்படியாவது அல்லது அவர்கள்வாக்குச்சொன்னுல் ஷெ வீடுங்கட்டி அலுவலும்வந்தபின் பெண்கொடுக்கிறதென்றும் உறுதியானுலுமப்படியே செய்கிறேனென்றுஞ்சொல்லியிரு

கிறதாக எனக்கெழுதினார். அதற்குப்பதிலனுப்ப ௩-ஸ்ரீ பிள்ளையவர்களிடத்தில் யோசித்ததில் வீடில்லாததினாலும் அலுவலில்லாததினாலுமிப்போ பெண்கொடுக்கத்தடையில்லையென்றும் இரண்டுகலியாணமும் ஒன்றித்துச்செய்யத்தான் மனம்போலவும் யோசனை. அதினால் நான் ஷை தம்பிக்கு எழுதினது: அவருக்கு மனமானால் அவராவது வேறுளாராவதுவந்து பேசியொழுங்குசெய்துகொண்டு போகலாமென்றும் ஷையாருக்கு எப்போது மனமோ அப்போது நடப்பிக்கலாமென்றெழுதியிருக்கிறேன். ஷை தம்பி தங்களிடத்திலுங் கேள்கவேண்டுமென்றவர் சொன்னதாக வெழுதியிருந்தது தங்கள் மனமென்மனம்போலிருக்குமென்றுநாள்க்கடந்துபோகுமுன்நான் எழுதிவிட்டேன். இன்னமுங்காயிதம்போய்ப்பதில்வருமுன் தாங்களும் ஷை காரியங்களுக்கின்னபடியென்றுத்தரவாகவேண்டியது. ஷை தம்பியும் சமுசாரங் குழந்தையும் சேமம். அப்படியே தம்பி யேசுதாசபிள்ளையும் சொன்னவடத்திலிருந்துவந்து. ஷை யேசுதாசனுக்குச்சிரங்கும் இருமலுஞ் சூமோகவும் பிலவீனமுண்டாயிருந்ததினாலிந்தவதலி யிவ்விடத்திலிருக்கத்தான் மனதாயிருக்கிறோம். கனம் ஐயர் அம்மாள் துரை மிசியம்மாள் யாவருஞ்சேமம். நமது பிள்ளைக்கு நாம் யோசனைசெய்ததில் ஒன்றுந்தீர்மானஞ்செய்ய யேதுவில்லாமல்த்தாங்கள் முடித்தது தெரியுமே. நான் யோசிக்கிறது எவ்வித மானவருத்தத்திலும் பிள்ளைகளுக்கு படிப்புக்குவேண்டியதை செய்யவேண்டுமென்பதே. அதற்குத் தாங்கள் உத்தரவு வேறுயோசனையே வருகிறதினால் நானுங் கவலையாயிருக்கிறேன். ௩-ஸ்ரீ முனிசுப்பிள்ளை இரண்டு கடிதமெனக்கனுப்பினதில் உங்கள் மகளையனுப்ப மனமிருந்தால் வண்டிவைத்தனுப்புகிறது இந்தக்காலம் பஞ்சகாலமாயும் நாளுக்குநாள் அதிகமாகிறதினாலும் பசியினாற் சாகாமற் கர்த்தர் காப்பாரென்று நம்புங்களென்று எழுதியிருக்கிறதினாலும், நமதுபிள்ளைகளவடத்தில் சாப்பிட்டுச்சிலநாள் படித்துவரச்செய்ய தங்களுக்கு மனதில்லாததினாலும் இன்னுஞ்சியம்மாளுக்குப்போகவும் எனக்கு அனுப்பவும் மனமில்லை. நல்லகாலத்திலே அவர் விசாரணையும் சிலவுக்குப் பண்ணினரெருக்கமுந் தெரிந்தகாரியமப்படியிருக்க அவரிந்தக்காலத்தில்தாயும் பிள்ளையும் அவரிடத்தில் எப்படிப்போசிக்கப்படுவார்களென்பது கவனிப்பு.

௩-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்களுக்குமப்படியே யோசனை ஷையவர்கள் நன்றாலிவேர்க் சீக்கிரத்திலச்சவதரித்தனுப்பலாமென்றுசொன்னார்கள். மற்றுங்காரியங்களைப் பின்னாலே எழுதுவேன். நாங்கள் யாவரும் உங்களுக்கு வாழ்த்தலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம். வடக்கன்குளத்து வியா



கப்பபிள்ளைக்கு அலுவல் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் விடுமுறை தீர்ந்த உடனேயாகுமது திட்டந்தான். கர்த்தர் எல்லாரையும் காப்பாராக.

௲௮௱௫௰௮ }
ஆகஸ்டு௴ ௭-உ }

இப்படிக்கு
சவரிராயன்.

---

௧௫-உ சுவிசேஷபுரத்தில் கனம் சாப்டர் ஐயரவர்கள் ஞானஸ்நானங் கொடுத்தது பூலு என்று பேர்வழங்கிய சுவாமிதாசத்தேவன் மகன் ஞானக்கண்ணுக்கு. நான் ஞானத்தகப்பன் என் சமுசாரம் ஞானத்தாய். ஷை தெய்நியின் நந்தன்குளம் மாத்தாண்டத்தேவனென்று பேர்வழங்கிய பெரும்பனை உலாத்தி பாக்கியநாத உவாத்தியார் தலைச்சுழந்தைக்கும் ஞானஸ்நானம், பேர் மரியாள். நான் ஞானத்தகப்பன் என்சமுசாரம் ஞானத்தாயாகவும் இருந்தோம். ௧௬-உ ஏசுதாசனுந் தருமகாதபிள்ளையும் விடுமுறைகழித்துப் பாளையங்கோட்டைக்குப்போனார்கள்.

---

+

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத் தரக்கடவர்.

இவடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச்சமாசாரங்களுக்கு ஜூ௴ ௯-உ எழுதிய கடிதம் ௧௮-உ வந்துசெய்தியும் அறிந்தோம். இனிமேலுமறிய விரும்புகிறோம். இதுமுன் நானவடத்துக்கு ௭-உ அனுப்பியகடிதமவடத்துக்குவந்ததினால் இவடத்துச் செய்திகளறிந்திருப்பீர்கள். ஞானப்பிரகாசம்பிள்ளை வசமாயனுப்பியதுவும் அதற்குப்பின்னனுப்பிய கடிதங்களும் வந்துசேர்ந்தது. ஏசுதாசனுந் தருமகாதபிள்ளையும் பாளையங்கோட்டைக்குப்போய்ச் சேர்ந்தார்கள் ௧௯-உ விடியற்கிழமை சுகத்துடன். நம்முடையபிள்ளைகள் படிப்பு காரியங்கள், படிப்புக்காரியம் ஆண்டவர் சித்தத்தின்படியாகக்கடவது அன்றி நமது எண்ணங்கள் ஒன்றும் வாய்க்கிறதில்லை. வடக்கன்குளம் வியாகப்பபிள்ளையை ௧௬-உ முதல் கணக்கில் சேர்த்து அரை ௴ சம்பளமுங் கொடுத்துவிட்டார்கள். இஸ்பிராற்று ஐயரவர்கள் கொழும்புக்கு வந்துசேர்ந்துயிருக்கிறதாகவும் செய்தி ஆனாற் சீக்கிரத்தில் பாளையங்கோட்டைக்கு வந்திருப்பார்களாம். அவர்களிடத்திலும் வந்துஞ் சிலநாளுக்குப்பின்புதான் பேசலாமென்று..... புலவனார்த்தம்பியும் சுகசெய்திக்கு ஒரு கடிதமனுப்பினார்...அதில்ச் சகாயனுபதேசியார் கனம் ஐயரவர்களிடத்திற் கடிதம் கனம் சினார்க் ஐயரவர்களுக்குக்கடிதம்வாங்கி வந்தாலுடனே யலுவல்கொடுக்கிறதாக உத்தரவு கொடுத்தி

ருக்கிறதாக எழுதினார் ஷை உபதேசியாருக்கு
மேல்க் கடனுண்டு. அதற்குப்போக்குமில்லை. யதற்கு ஈ ஸ்ரீ பிள்ளையவர்கள்
கொண்டாலும் அப்பால் சனம் ஐயரவர்கள் ஷை ஸினார்க்கய்ய
ரவர்களுக்கு கடிதங்கொடாமல் இராசிநாமாக் கொடுத்துப்போகச்சொல்லுகி
றதினால் அப்படிய வடத்துக்குப்போனால் ஷை ஐயரவர்கள் உடனே அலு
வல் கொடுப்பார்களோ வென்னமோவென்று கவலையாயிருக்கிறார். ஈ - ஸ்ரீ
முனிசுப்பிள்ளை கவலையற்றவராய்த் தன்காலத்தைக் கழித்துக்கொண்டிருக்
கிறதிலும் ஓயாமல் நமக்குப் பலவிதமாய்ப் பெண்சாதி பிள்ளை வேணு
மென்பது போலும் நெருபாகச் சிலவுக்குக் காணாதுபோலவும் பல அலப்பு
தலாய் எழுதிக்கொண்டிருக்கிறார். நமது வீட்டுச்சிலவு யெப்போதும் போல
நடந்துவருகிறது. அதைப்பற்றி யவடத்தில் விசாரமிருக்க வேண்டாம்.
கர்த்தருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறோமென்று தாமெழுதிய
படியே ஆவதாக. பஞ்சத்தின் கொரேத்தைப்பற்றிப் யோசவேண்டாம். அ
வடத்திலெப்படியோ அப்படியே இவடத்திலுமிருக்கிறது. நன்றாவிவேர்
வரும்படிக்குச் சொல்லியிருக்கிறது. மழையில்லாக் காலமானதால்த் தாமித
மாயிருக்கிறது. மாப்பிள்ளை தெய்வநாயகம் பிள்ளையும் சூசைமரியானும்
பேசிக்கொண்டதில் நம்முடைய பிள்ளைகளைத்தான் விரும்புகிறதாயும் கலி
யாணம் சீக்கிரத்தில் நடப்பிக்கவும் முருகன்குறிச்சியில்த் தான் வீடு நிற
மாய்க் கட்டவேண்டுமென்று மதற்குச் சிலவு மதிப்படுமென்றும் பின்னும்
வீடுகட்டாமலுஞ் சீவனமில்லாமலுமிருந்தால் ஷை பெண்கொடுக்கச்சம்மதிப்
பார்களாவென்றும் இன்னபடி இன்னவிடத்தில் வீடுகட்டுகிறது ஷை கலி
யாணக்காரிய மின்னபடியென்றும் சனம் மதுரேந்திர ஐயரவர்களும் ஈ
ஸ்ரீ பிள்ளையவர்களும் உத்தரவு கொடுத்தபடி செய்கிறதென்றுமவர் சொன்
னதாகவும் ஷை தம்பியும் அவன் மனவியும் செபத்தியாயியை அவர் விரும்பு
கிறதுபோலவும் சாடைகாண்பித்துப்பேசினார். அதில் தம்பியின் யோசனை
தானென்று தோன்றுகிறது எப்படியென்றால் எங்களிடத்தில் இரண்டு பே
ருமிதற்குமுன் பேசினார்கள் அதற்கு பதில் நாங்கள் சொல்லியுமிருந்தும் இப்
பொழுதுமதைப்பற்றியே ஷை தெய்வநாயகம்பிள்ளை நோக்கம்போல எழுதி
னான். இதுவுமல்லாமல் முன்னமே யொருகேள்வி மற்றவர்களுக்குள் ளிளை
யவளைத்தான் கலியாணமுகிக்க மனதென்று மிருந்தது. அப்படியிருக்கத்
தம்பியுமவன் மனவியும் யோசித்து மூத்தவளையே முன்கேட்டதென்று
மதைத்தான் நடப்பிக்கவேண்டுமென் றெழுதினான் போன மீ அதற்குப்
பதில் நான் எழுதினது கலியாணம் சீக்கிரத்தில் நடக்க ஷை யாருக்கு மன





இருந்தால் அலுவலில்லாதிருந்தாலும், வீடு கட்டாதிருந்தாலு
ந்தடையில்லை, ஷை யாராவது அவளைப்ப வர்களாவது இவ
டத்துக்கு வந்துபேசினாலதின் விபரங்களை பிக்கவேண்டிய
வகையும் இடமுங்குறித்துப் பேசித்தீர் ன்னலாமென்றும்
ஷை மூத்ததிளையதென்பதை லை யென்றுமதினதின்
மனநோக்க பேசவேண்டியதும் முன் தங்களுக்கு எழுதிய
படி பிள்ளையவர்கள் தீர்மானம் வியாகப்பபிள்ளைக்கு மூத்ததும் இளையவளுக்
கு வேறிடமுமென்றபடி தான் நடப்பிக்கிறது தேவாசீர்வாதமாயுமிரு
யின்னுமவர்களிலாராவது வந்து பேசும்
நோக்கம்போலப் பார்த்துக்கொள்ளுகிறது என்று எழுதித்தம்பிக்கு
யாள்வசமனுப்பியிருக்கிறேன். ௰-உ பதிலின்னமுமவரிடத்தில் நான் போ
யப்பேசித் திட்டஞ்செய்தெழுதுவேனென்று பெரும்பத்திலிருந்து வந்தது.
பின்பு யின்னமும் ஷை பதில்வரவில்லை. ஈ - ஸ்ரீ பிள்ளையவர்களும் என்
னிடத்திலின்று சூசைமரியாம்பிள்ளை காயிதத்துக்குப்பதில் எழுதினீர்களா
அதின் பதில் ஒன்றுஞ் செய்திவரவில்லையா வென்றும் சுரண்டைக்கு எழு
தினீர்களாவென்றும் ஷை காரியங்களை இந்தக் கொடிதான காலத்தில் எப்
படி நடத்துகிறதென்றுங் கேட்டார்கள். அதற்கு நான் ஷை காரியங்கள் அடு
த்து வந்து பேசினாலப்பொழுது டோனாவூரில் நடத்த மாப்பிள்ளைக்குப் பி
ரியமிருக்கமாட்டாதென்றது போலவும் சிலவு சுருக்கமாய்த்தானே நடத்து
கிறதுபோலவும் சொல்ல அவர்களுமதுபோல நோக்கமாய்ப் பேசினார்கள். ஏ
சுதாசனிடத்திலுமப்படித்தான் ஆராவது சொல்லட்டுமென்ற நோக்கமாய்ப்
பேசினதாகவும் அவனுமப்படியே சொன்னதாகவும் சொல்லியிருந்தான்.

முருகன்குறிச்சியில் வியாகப்பபிள்ளைக்கு முன்போல குளிர் சுரம்
உண்டாயிருக்கிறதாகவும் அந்த இடம் புடியாதென்று மிவடத்தில்த் தானே
அலுவலுக்கிடம் பண்ணினால் நலமென்றும் இளையவன் ஞானப்பிரகாசம்
பிள்ளையவரைப்பார்த்து வந்து சொன்னதின்பேரில் ஈ - ஸ்ரீ பிள்ளையவர்கள்
யோசித்து அந்த அலுவலையும் இடத்தையும் விடப்படாதென்றும் இரண்டு
மீ உத்தரவு கேட்டு உத்தரவு கொடாவிட்டால்ப்பதிலாளாக வியாகப்பபிள்
ளையனுப்பிச் சுகப்பட்ட பின்னிவடத்திலவனிருக்கட்டுமென்று ஷை பதில்
வைத்த வியாகப்பபிள்ளையவட்த்தில் அலுவலுக்காகுமென்றுந் துரையவர்கள்
ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளலாமென்றும் நினைத்தபடி சனம்
சாப்டர் ஐயரவர்களிடத்தில் பேசியவர்களைக்கொண்டு ஈ-ஸ்ரீ குருசாக் துரை

யவர்களுக்கு எழுதும்படி கேட்டதிலவர்கள் அப்படியல்ல கோவிரண்டு மா
சத்துக்கு உத்தரவு வேண்டுமென் சுகத்துக்கு என்று மெழுதியிருக்கிறது.
பதில்வரவில்லை.

மற்றுங்காரியங்களெல்லாம்பின்னால்வந்ததுக்கு தங்களுக்கெழுதுவேன்.
நாங்கள் யாவரும் தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்த்துதலுந் தோத்திரமுஞ்
சொல்லுகிறோம். பிள்ளைகள் இருமலுண்டானது குத்திருமலென்று நினைக்
கிறோமதற்குத் தலைமுழுக்காட்டவும் குழுணிமருந்துங் கொடுக்கலாம். நமது
வாகடப்படி மருந்து கடுக்காய், மஞ்சள், சுக்கு, வில்லைவேர், இந்த நாலுஞ்ச
மனாய்ப்பொடிசெய்து இளவென்னீரில்ச்குடுக்கவும். மிளகுகளஞ்சி சுநற்சீர
கம் களஞ்சி சு ஏலம் களஞ்சிக இவ்வளவும் இளவருப்பாய் வறுத்துப்பொ
டிசெய்து நறுநெய்யில் வெருகடித்தூள் குழைத்துக்கொடுக்கவும். ஷை வி
யாதி சுகமாம். ஷை யிருமலின் குணம் வாந்திபண்ணுங் கண்சிவந்தபோம்.
ஒருநேரம்விட வெகுநேரஞ்செல்லுமதற்கு மருந்துசெய்து பாகமாய் நடத்தி
னலகுவாகுமாகிலும் மூன்று மாசமிருக்கிறது முண்டு. ஆகிலும் நடுப்புறை
யில்வருத்தமிருக்கும். பயப்படவேண்டாம். கர்த்தர்காப்பாராகவும். வே
ணும்சுபம்.

௲அ௱ருஅ-௵ இப்படிக்கு

ஆகஸ்டு௴ ௨௬-உ சவரிராயன்.

இது எழுதினபின்பு வியாதிசுகமாயிருக்கிறதென்றும் விடுதலை நாளில்
வருவேனென்றும் வியாகப்பபிள்ளையெழுதிவந்தது.

[இவை சுரண்டையிலிருக்குங் கனம் மகுரோந்திர ஐயரவர்களுக்கு
கொடுப்பது.]

---

உஅ-உ வடக்குன்குளத்துக்குப்போன தெய்வாயி மகள் விசுவாச
ஒரு ஓலைவாங்கிவந்தாள். கூட பார்பரம்மாள் தங்கள்பேரன் வியாகப்பபி
ள்ளையைப்பார்க்கவென்றுவந்தாள்.

---

+

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத் தந்து நடத்தக்கடவது.

இவடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம். அப்படியே
அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். தாங்கள் டே
ணமாசம் உகூ-உ எழுதியது உஅ-உ யிலும் வந்தது. அதற்கு முன் உக-
யிலும் ஒன்றும்வந்தது. செய்தியும் அறிந்தோம். கனம்முத்துசுவாமி ஐய
வர்கள் முதலான யாவரும்வந்தது சந்தோஷம். இப்பொழுது போய்





வார்களென்றுமிருக்கிறோம். தெய்வநாயகம்பிள்ளையைப் பற்றிய் காரியங்
கள் நமது தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளை மூலமாய்த் தெரிந்ததுவும் அதற்குப்
பதில் எழுதினதும் நானெழுதியிருந்தேனே யதற்குப்பதில் தாங்களுமெழுதி
னீர்கள். இப்படியிருக்க ஷை தம்பியின்னமும் ஷை தெய்வநாயகம்பிள்ளை தீர்
மானமறிந்து எழுதவில்லையதற்கு எதிர்பார்த்திருந்தோம். அப்படியிருக்க ஷை
தெய்வநாயகம்பிள்ளை முருகன்குறிச்சிக்குவந்திருக்கிறதாகவும் அவரிடத்தில்
ஒருநாள் நமது தம்பி ஏசுதாசபிள்ளையவரிடத்தில் ஷை காரியங்களைக் கு
றித்துப் பேசிக்கொண்டதில் அவர் தமக்கு அனுவலானபின் கலியாண முடி
க்கவும் நமக்கு மூத்தபிள்ளை இளையபிள்ளை யென்றதில்லையென்றுமில்லை மூத்
தவனுக்கு முன்னமே நடத்தவேண்டியது. அதற்கு யேதுவில்லையே இன்ன
முஞ் சிலகாலஞ்சென்று தான் நடத்தவேண்டியிருப்பதினால் மூத்தவள்க்கு
இப்போது அவர்கள் நடப்பிக்கட்டும். நாங்களுங் கலியாணத்துக்கு வரும்
போது பேசிக்கொண்டு யிளையவளை முடித்துக்கொள்ளலாமென்று சொன்ன
தாகவெழுதினான். அதினால் ஈ - ஸ்ரீ பிள்ளையவர்கள் ஷை காரியத்தில்
யோசனையாயிருந்திப்போது செபத்தியாயியை வியாகப்பபிள்ளைக்கு விவாக
ஞ்செய்கிறது முந்திப்பின்னாலே மற்றதுக்குச் செய்விக்கிறதென்றும் ஷை இர
ண்டு கலியாணம் ஒன்றித்து நடந்தாற் சிலவுயேராளமாய்ச் செய்யலாமிப்
போதே பஞ்சகாலமாயிருப்பதாற் சுருக்கமாய்ச் சிலவுசெய்யலாமாவென்று
ர்கள், நானுமப்படித்தான் யென்றேன். ஆனால் இன்னமாசத்திலென்று தீர்
மானஞ் செய்யாமலிருந்து ஷை பெண்ணுக்குக் குறைப்பட்ட நகைகளுக்குச்
சாயிதாபண்ணியிருக்கிறார்கள் தட்டான் மூலமாய். அது அடக்கம்பொன்
னும் வெள்ளியும் ஏறக்குறைய கூ ஈடு வரையாயிருக்கிறது. இப்படிக்காரிய
ங்களிருந்தாலும் ஷை இரண்டும் ஒன்றித்துநடக்கும்படிக்கு ஷை தெய்வநாய
கம்பிள்ளைசேகரத்தார் நெருங்கிவராததினால் ஷை பிள்ளையவர்களுக்கு மனஸ்
தாபந்தான். அதின்விபரஞ்சொன்னால் பெருகும். அதுவும் ஷை தெய்வ
நாயகம்பிள்ளை ஏசுதாசன்வசமாய்ச்சொன்ன செய்தியினால் விளங்கிற்று. அது
கனம் முத்துசுவாமி ஐயரவர்கள் மனநோவரக் காத்திருக்கிறதாம். இதை
ஷை ஐயரவர்களுக்கு அறிவிக்கவேண்டாம். ஷை யார்களினியாகிலும் மனர
ம்மியமாய்த்துரிதத்தில் நடத்த விரும்புவார்களாகில் அப்படி நடக்குமென்று
நினைக்கிறேன். எப்படியானாலுந் தேவகிருபையின்படியாவதாக. நமது பிள்
ளைகள் படிப்புக்காரியங்களுக்கு பஞ்சகாலமே தடையாயிற்றென்று தீர்மானி
த்தேன். முருகன்குறிச்சி வியாகப்பபிள்ளை தமது தம்பிமூலமாயெழுதித்த
துக்கு பதிலினால்க் கெட்டுப்போகாமல் தமது தகப்பனாரவர்களை ஒரு கோட்

டை நெல் அனுப்பக்கேட்டுக்கொண்டார். அனுப்பவில்லை இவடத்திலுஞ் செ
லவு அதிகம் வரவுங்கொஞ்சந்தான் அதினால் நெல்லனுப்ப யேதுகாணோம்.
உங்கள் சிறியதாயார் மகளின்னாசியம்மாள் ஒரு ஆண்குழந்தை பெற்றாளாஞ்
செலவுக்கும் வருத்தமானதாலும் விசுவாசத்தை கூட்டிப்போய்ச் சுவாமியாரி
டத்திற் சொல்லியும் அவர் நியாயம் விசாரியாமல்க் கூலிக்குக்குத்தியாகிலுஞ்
சாப்பிடு, பிள்ளையை பதிதரிடத்தில் விடாதேயென்றுசொல்லியுமவள் தன்
பிள்ளைக்குப் போக்கில்லாமற் சாகிறதாவென்று இவடத்துக்கு அனுப்பியிருக்
கிறாள். நமது காரியம் அவள் அறிந்தாலும் பின்னுமிப்படி யனுப்பினதினாற்
பேசாமல் பொறுமையாயிருக்கிறோம். இவடத்துக்காரியம் நமக்குந் தெரிந்த
காரியந்தான். இன்னாசியம்மாள் மாப்பிள்ளைகாரியமுந் தெரிந்தகாரியந்தானே
அவர்கள் முன்சொல்லியிருக்கிறதாயும் நம்முடையபிள்ளைகள் படிப்பினாலும்
அனுப்ப யோசித்தெழுதினதன்றி ஷெயார் அதின் மூன்று கடிதமெழுதின
தினாலும் ஷெ இன்னாசியம்மாள் கூலிக்குவேலைசெய்தாயிலும் பிழைப்பேனே
தவிரப்போகிறதில்லையென்றதினாலும் அதுகாரியமப்படியேநிறுத்தப்பட்டது
இவடத்தில் மழையும் காத்துமில்லை. இன்றுதான் காத்துண்டாயிருக்கிறது
விசையநாருயணத்திற் குளம் மீன் பிடித்தாயிற்று. அநேகம் பயிர் பாடு, மற்
றது சாவியாய் விளைச்சல். நாஞ்சிநாட்டு நெல் வரத்தில்லையானாலிவடத்திற்
நெல்க்கிடைக்கிறதவுருவம். ஷெ நெல் பணம் க - க்கு படி சஇ பொட்டல்
க்குளத்திற்போய் வாங்கவேண்டும் இப்படியே இருக்கிறது. மற்றுங்காரியங்க
ளெல்லாம் பின்னாலே தெரியப்படுத்துவேன். வேறுவிசேஷமில்லை. கர்த்த
ரெல்லாரையும் காப்பாற்றுவாராக. நாங்கள் யாவருமுங்களுக்குத் தோத்தி
ரமும் வாழ்த்தலுஞ் சொல்லுகிறோம்.

| | |
|---|---|
| கஅ௫அ-ஆ௵ செப்தெம்பர்௴ கூ-உ } | இப்படிக்கு சவரிராயன். |

அ-உ சுரண்டையிலிருந்து தேவசகாயமும் முத்துமரியவியாகுலமும்
மரியசுந்தரியும் சுகசெய்திக்குக்காயுதம் எழுதினது வந்தது. ம-உ ஐயரிடத்
திலுத்தரவுவாங்கித்திசையன்விளைக்குப்போய்முத்துக்கண்ணுசெட்டியார் மூல
மாய்த்தட்டான்மடத்தாசாரியிடத்தில் செபத்தியாயிக்கு நகைசெய்துவரும்ப
டி கூ ௱ கொடுத்துவந்தேன். மரு-உ ஷெ நகைக்கு ரு - பவுன் வாங்கிய
ருந்தைக் கூட்டப்போயிருந்துருக்கி மாத்து மச்சம்வாங்கிக்கொண்டு ந
தன்குளத்துக்குப்போய் செபம்பண்ணி வீட்டுக்குவந்தேன்.

மச-உ சர்வசோதனை பள்ளிபிள்ளைகளுக்கு. அப்போது சனம் பே



வான் ஐயர், பவுல் ஐயர், ஆபிரகாம் ஐயர், குட்டய்யர், செல்லர் ஐயர், கார்
வேலம்மாள், சாமுவேல்பிள்ளையும் வந்திருந்தார்கள். ஷெ பவுல் ஐயரும் ஆபி
ரகாம் ஐயரும் ௱ - ஸ்ரீ விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்கள் குமாரத்தி அ
ருளம்மாளை ஷெ சாமுவேல்பிள்ளைக்குக் கலியாணமுகிக்கிறதுக்குக் கேட்ட
தாக ஷெ பிள்ளையவர்கள் என்னிடத்தில் சொல்லி யோசித்ததில்: உங்கள்
மனமெப்படியோ அப்படியென்றேன். தங்களுக்குச் சம்மதம்போலச் சொன்
னதினால் நானும் உங்கள் சித்தப்படியாகட்டுமென்றேன். உங்களிடத்தில்
யோசனைகேள்க்கிறதுக்கு அப்படிச்சொல்லுகிறது சரியாவென்று பழயவிசார
ணை உவாத்தியார் முத்துசுவாமியாபிள்ளை சொன்னதினால், முன்னேயவர்பே
சின பெண்ணையும்விட்டு, இராயப்பபிள்ளை மதினி மகளைப்பேசிஉறுதிபண்ணி
னார்கள்: இப்பொழுதிளையபிள்ளையைநம்மிடத்திற்கேள்க்கிறார்கள்: மேலுமதை
நாம் தெய்வநாயகம்பிள்ளைக்குக் கொடுக்கவுங் கொள்ளவும் மதுரேந்திர ஐயர்
குருசமரியான் யேசுதாசன் முதலானவர்களும் பேசி, முத்துசுவாமி ஐயாவர்க
ள் அவர்கள் சமுசார முதலானவர்களுஞ் சந்தோசமாய்ச் சொல்லி, ஷெ மூத்தி
ன பெண்ணுக்குக் கலியாணம் மூந்தி நடக்கவும் அப்போது இளைய பிள்ளை
க்குத் திட்டஞ்செய்ய ஷெயார் வருகிறதென்றும் பேசியிருக்க; இப்பொழுது
கேள்க்கிறவர்களுக்குமவர்கள் கொடுக்க மனமிருந்தாலவர்கள் மனதின்படி
நானும் ஒப்புக்கொள்ளுகிறது நியாயமென்றதின் பின்பு, ஷெ காரியத்தினால்
யோசித்து, ஆபிரகாம் ஐயரிடத்தில்ப்போய் ஷெ தெய்வநாயகம்பிள்ளைக்கு
வாக்குச்சொல்லியிருக்கிறதென்றும், பின்னும் மதுரேந்திர ஐயர்முதலானமாம
ன்மாருக்கெழுதிகேட்டுச்சொல்லுகிறதென்றுஞ் சொல்லச்சொன்னார்களப்படி
நான்போய்ச்சொல்ல; அவர்களும், அது நல்லது, பெரியகாரியமானதால் யோ
சனையோடேதான்சொல்லவேணுமென்றார்கள்.

---

+

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத்தந்து நடத்தக்கடவது.

இவடத்தில்யாவருந்தேவயிரக்கத்தினாலேசேமம். அப்படியே அவடத்துச்சே
மாசிசயங்களையுமறியவிரும்புகிறோம். இதற்குமுன் எ-உயில் ஒருகடிதமனுப்
பினேன். தாங்கள் எ-உயிலும் பிள்ளைகள் கூ-உயிலுமெழுதிய கடிதங்களு
மதற்கு முன் தாங்களெழுதின காயிதங்களுந் தவராமல் வந்தது. நான
னுப்பிய காயிதந்தானவடத்துக்குவராமற் போயிற்றென்றுந் தோன்றுகிறது.
இப்பொழுது இவடத்திற் பள்ளிப்பிள்ளைகள் சோதினை நேற்றைத்தினம்
நடந்ததின்பேரில் இடையன்குடி கார்வல் அம்மாளுஞ் சாமுவேல்ப்பிள்ளை

யும்வந்தவர்கள்கூட ஒரு விசாரணை உவாத்தியும் மேட்டியும்வந்தார்களவர்கள் ஷை அம்மனிதர்கள் கனம் ஆபிரகாம் ஐயர் பவுல் ஐயர் இருவர் மூலமாய் ஷை சாமுவேல்பிள்ளைக்கு ா-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் மகளிளையவளை விவாகத்துக்குக் கேள்க்கச்சொன்னதாகவும், ஷை ஐயன்மார்கள் ஷை பிள்ளையவர்களிடத்திற் கேட்டதின்பேரிலவர்கள் என்னைவரவழைத்துத்தனித்து யோசித்ததில் தங்கள்மனம்போல வென்றேன். அதற்கு பழயவிசாரணை உவாத்தியார் முத்துசுவாமியாபிள்ளையும்கூட நின்று உங்களிடத்தில் ஆலோசிக்கிறதிலப்படித்தங்கள் மனமென்றுசொல்லப்படாதென்றார்கள். அதினால் ஷை சாமுவேல்பிள்ளை முதலானவர்கள் காரியம் முன்பின்னுள்ளதுகளையும் தெய்வநாயகம்பிள்ளைக்கு ஷை பெண்கொடுக்கிறதென்றும் கொள்ளுகிறதென்றும் அவரும் நம்முடைய பிள்ளைகள் மதுரோந்திர ஐயர் ரு. ஞானப்பிரகாசம்பிள்ளை ஏசுதாசபிள்ளை முதலானவர்களுஞ் சம்மதப்பட்டு, கனம் முத்துசுவாமி ஐயர் முதலானவர்களுக்குந்தெரியப்படுத்தியவர்களுஞ்சம்மதமுள்ளவர்களாயியும், முந்தியபிள்ளைக்கு கலியாணம் முந்தி நடப்பிக்கவும் அந்த கலியாணத்தில் நாங்கள் பிந்தினபிள்ளைக்கு நிச்சயதாம்பூலஞ் செய்கிறதென்றும் ஷை தெய்வநாயகம்பிள்ளை ஏசுதாசன் மூலமாய்ப்பேசிக் கடிதமும் இரண்டு மூன்றுவந்திருக்கவும் ஷை முந்தின கலியாணம் துரிதத்தில் நடத்துகிறதென்றுமாயிருக்கும்போது இந்தப்பேச்சுவந்ததினால், நான் உங்கள் மனதுப்படி செய்ய நான் சம்மதிப்பது மாத்திரம் நியாயம் உங்கள் மனமென்னவென்றேன். அதற்கு பிள்ளையவர்கள் எனக்கெதுவுஞ் சரியென்றார்கள். அப்படியானால் நானுமுங்கள் மனம்போலத்தான் என்றதினால் ஷை செய்திகளை யோசித்து ஷை மாப்பிள்ளைக்குத் தீர்மானஞ்செய்திருக்கிறது. அப்படியிருப்பதாலிப்பொழுது இடையங்குடி மாப்பிள்ளைக்குத் திட்டஞ்சொல்லப்படாதென்று சொல்லுகிறது என்றார்கள். பின்னும் ஷையார்களிருவரும் ஷை தெய்வநாயகம்பிள்ளையின் பேச்சு நமக்குள் நடந்ததுதானே இன்னமுறுதிதானெப்படியென்றும், பின்னும் ஷை மதுரோந்திர ஐயர் முதலான மாமன்மார்களிடத்திலுமெழுதிக்கேட்டுக்கொண்டுசொல்லுகிறதென்றார், ஷை ஐயன்மார்களிடத்திற்சொல்லுகிறதென்றும்பேசி, ஷை காரியத்தை என்னைப்போய் ஷை ஐயன்மார்களுக்கறிவிக்கச்சொன்னதின்பேரில் ஷை ஆபிரகாம் ஐயருக்கறிவித்தேனவர்களும்ஷை காரியம் யோசித்துச்செய்யவேண்டியதுதானென்றும்சொன்னார்கள். அதப்படியிருக்கிறது. இனிமேல் அவசியத்தில்த் தெய்வநாயகம்பிள்ளை மனுசர்வந்து தீர்மானித்துக்கொள்ளவேண்டும். இல்லையானால் ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் மருளவிழுகிறதாய்த் தோன்றுகிறது. ஆனால்த்தங்கள் தீர்மானத்



தை எனக்குத் தெரியப்படுத்தவேண்டும். இவடத்திற்கு ா-ஸ்ரீ முனிசுப்பிள்ளையவர்கள்வந்து சமுசாரத்தை யழைத்துப்போகிறதுபோலச் சொல்லிக்கொண்டார்கள். இன்று அவர்களுக்குள்ளே பேசிக்கொண்டதுபோலச் செபத்தியாயிக்கு கலியாணம் சீக்கிரத்தில் நடக்கிறதுபோலவும் கலியாணம் முகிந்துவருகிறதென்று சொன்னதுபோலவும் சொல்லித்தாயின்றே பிறப்படுகிறதாகவும் சொல்லியிருக்கிறார்கள். இவடத்தில் முன்னிருந்ததற்கு இப்போது அகவிலை பணம் க-க்கு க படி கூடவிற்கிறது. கருப்புக்கட்டியும் அப்படியே சகாயமிருக்கிறது. மழையில்லை இன்னமும். மற்றுங்காரியங்களை பின்னாலே எழுதுவேன். மூனஞ்சிப்பட்டிச் செட்டியார் தமது அண்டவாயுவினாலேயே ௲ மீ ௰௬-௳ மரித்து வேதக்காரராலச்சமாரியாவில் அடக்கம் பண்ணப்பட்டது. பெண்சாதியும் சின்னப்பிள்ளைகளுந்தானுதவினது. வேறு ஒருவருமில்லை. நமக்கும் பிள்ளையவர்களுக்கும் ஓலைவரவில்லை. அதினால் நாங்கள் போகவும் இல்லை. ஷை பிள்ளையவர்களுமப்படியே இருக்கிறார்கள்.

ஞானசமரியாளும் பிள்ளையும் சமுசாரமும் மற்றயாவருஞ் சேமம். கர்த்தர் யாவரையும் காப்பாற்றுவாராக. நாங்கள் யாவருமுங்கள் அனைவருக்குந் தோத்திரமும் வாழ்த்தலுஞ் சொல்லுகிறோம்.

௲அ௱ரு௰அ-௵
செப்தெம்பர்௴ ௰௬-௳

இப்படிக்கு
சவரிராயன்.

---

௰௬-௳ புனூருக்குச்செபஞ்செய்ய புறப்பட்டபோது ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் மூனஞ்சி சுடலைமுத்துப்பிள்ளையிறந்ததாக ௰௫-௳ கோவிற்கூட்டி ஓலை கொண்டுவந்திருந்தது. அதையுங்கேட்டுவரவேண்டியதென்றார்கள். அதற்கு ௰எ-௳ என் சமுசாரத்தையும் அவர்கள் மாமியாள் சுவாமியடியாளையு மனுப்பினேன். ஷை பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்திருந்த பார்பர் அம்மாளும் செபத்தியாம்பிள்ளைகூட வடக்குன்குளத்துக்குப்போனார்கள். உக-நாளிருந்தார்கள். பாளையங்கோட்டை மாப்பிள்ளை இராயப்பபிள்ளையவர்களும் ௰௬-௳ வந்தவர்கள் ௰எ-௳யில்போனார்கள். இருந்த நாலுநாளும் பெண்பிள்ளைகளிடத்தில் இன்னாசியம்மாளை கூட்டிப்போகவேண்டியதற் கடுத்தவைகளைப்பேசிக்கொண்டு என்னிடத்திலுமவளைக் கூட்டிப்போக வேண்டுமே யென்றார்கள். சுகமே கூட்டிப்போகவேண்டியதென்றேன். பின்னுமவர்கள் செபத்தியாயி முதலான பிள்ளைகள் கலியாணம் கிட்டியிருக்கிறதினாலவள் இருந்து பின்வருவேனென்கிறாள்யென்றுஞ் சொல்லிப்போனார்கள். ஷை கலியாணக் காரியத்துக்கும் இன்னாசியம்மாள் செய்திக்கும் மதுரோந்திர ஐயர் முதலானவர்களுக்குக் கடிதமெழுதியவர்கள் வசமாயனுப்பினேன்.

௰௧-௳ வடக்குன்குளம் பெரியண்ணாவி மகன் சவரிமுத்துப்பிள்ளை வந்தாரவர் மகன் வியாகப்பபிள்ளைக்குக் கலியாணக்காரியம் பேச. ௨௰-௳ ஷை வியாகப்பபிள்ளையைப் பெண்போடூங் பள்ளிக்கூடவேலை நேமித்துக் கனம் ஐயரும் அம்மாளும் ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் குமாரத்தியைக் கலியாணமுடித்துக்கொடுக்கவும் பேசினார்களாமவர்களும்வந்து அப்படித்துரிதத்திற் சுருக்கச் செலவாய் முடிக்கிறதென்றும் பேசினார்கள். அப்படியாகவென்றேன். ஷை சவரிமுத்துப்பிள்ளை கண்டாங்கி வேட்டி திருமங்கிலியத்துக்கு ௯-ரூ கொடுத்துவிடுகிறேனென்றும் துரிதத்தில் கலியாணத்தை நடப்பிக்கவும் வேணும் என்றும் ௨௧-௳ போனார். பின்பு சாமுவேல்பிள்ளை ௱-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைக்கு காயிதமெழுதித் தங்களிளைய மகளைக்குறித்துண்டாயிருக்கிற விருப்பத்தைக் காட்டித்தான் கேட்டுக்கொண்டதாகவந்தது. என்னிடத்தில் ஷை விசாரணைப்பிள்ளை கேட்டதற்குத்தங்கள் மனமே எனக்குச் சந்தோஷமென்றேன் அவர்கள்தானே தங்கள் மச்சினமார்களுக்குக்கேள்க்கத் தேவையில்லையென்றுமவர்கள் வீட்டில் மாப்பிள்ளை பெண்ணில்லையானதால் ஒரு கடிதம் கடைசியாக வெழுதுகிறதுவந்தாலும் வராவிட்டாலும் சரியென்றுசொல்லிக் கொண்டார்கள். நான் பேசாமல்வந்துவிட்டேன்.

௨௪-௳ ஷை சாமுவேல்ப்பிள்ளைக்கு ௱-ஸ்ரீ விசாரணைபிள்ளை பெண்குடுக்கமனப்பூரணமாயிருக்கிறதென்று கனம் ஐயர்மாருக்கெழுதுகிறதுபோல் சங்கிக்கப்படத்தக்க துரையவர்களென்றும் எழுதியபடிக்கு மேல்விலாசமும் போட்டு என்னிடத்திலுங் காண்பித்தனுப்பினார்கள். ஷை வடக்குன்குளம் சவரிமுத்துப்பிள்ளை ௯-க்கு இடமில்லாமல் ஓலையனுப்பினார்.

---

†

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத் தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவ யிரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச்சேமாதிசயங்களையுமறியவிரும்புகிறோம். தாங்கள் இருபதாந்தெய்தி எழுதிய கடிதம்வந்துசேர்ந்தது. இதுமுன் தங்களுக் கெழுதியகடிதத்தினால் தெய்வநாயகம்பிள்ளை காரியமும் இப்பொழுது சாமுவேல்ப்பிள்ளைக்கு இளையவளைக்குறித்த காரியமும் விபரமாயெழுதினேன். அதின் பின்பு தங்களிடத்துக்குத் தம்பிமார்களுக்கும் ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் கடிதமெழுதவும் கேள்க்கவுமில்லை. என்னிடத்திலும் வேறொன்றும் பேசாதிருந்து பின்பு சாமுவேல்ப்பிள்ளை ௨௧-௳ யிலவர்களிடத்தில் தங்கள் இளைய குமாரத்தியைக் குறித்துதான் தங்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறதுபோல எழுதியதை





யென்னிடத்திற்காண்பித்துஎன்னசொல்லுகிறீர்கள் பதிலென்றார்கள். தங்கள் மனமே எனக்கு சந்தோஷமென்றேன். உங்கள் யோசனை சொல்லுங்களென்றதற்கு: என்யோசனையெல்லாந் தாங்களறிந்தும் பின்னும் உங்கள் மனம்போலாவதாக; முன் மாமன்மாரிடத்திற் கேட்டு உத்தரவு சொல்லுகிறதென்றதெல்லாமிருக்க இப்பொழுது உங்கள் மனம் அந்தப்படியில்லையாகையால் தங்களெண்ணம்போலத்தான் என்றேன். அவர்களுக்கெல்லாங் கடைசியாக ஒரு கடிதமனுப்புகிறது, வந்தாலும் வராவிட்டாலுஞ் சரியென்றுசொல்லியிருந்தார்கள். ௨௫-௳ ஒரு கடிதமவருக்குப்பதில் தமக்காக என்னிளையகுமாரத்தியைக்குறித்து கனம் தார்வல் அம்மாளும் கனம் சாப்டர் அம்மாளுக் கெழுதிக் கேட்டுக்கொண்டதினாலும் நானுமக்கு விவாகமுடித்துக்கொடுக்க மனபூரணமாயிருக்கிறதென்றெழுதிய கடிதத்தை என்னிடத்திற் காண்பித்தனுப்பினார்கள். இதுமுன் தம்பி யேசுதாசன் எனக்கெழுதினதில் அநேக கேள்வியும் விடையுமாக அநேக நியாயங்கள் சொல்லி எழுதினதையும் ஷை பிள்ளையவர்களுந் தங்கள் குமாரன் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வாசித்து யோசித்திருந்தும் அவர்கள் தங்கள் நோக்கப்படி நிறைவேற்றினார்கள். இவடத்தில் வேறுவிசேஷமில்லை. மழையுமில்லை. அகவிலையும் பழையபடி கிழிறங்கிப்போயிற்று. ஷை கலியாணம் இரண்டும் இவடத்திலென்றும் அல்லது ஷை இடையங்குடியில் ஒன்றென்பதுந் தெரியாது. என் மனதின்யோசனை, நாமெல்லாரும் பணம் ஒன்றுதவிர மற்றொன்றிலும் குறைவில்லாதிருக்கச் சற்றுகிலும் மதியாமற்போனதென்ன, நமக்குப்பொருள் உலகப்பிரகாரமாயில்லை என்பதினால்த்தான் ஷை பிள்ளையவர்களுமவர்கள் குமாரருங் குமாரத்தியும் எண்ணிப்போட்டார்களென்பதே யென்மனஸ்தாபம். இதுவும் ஒருவிதத்தில் நமக்கு நன்மையும் புத்தியுமாயிருக்கும். ஆகிலும் பழமொழி பணமில்லாதவன் பிணம் என்பது நிச்சயம். ஆனால் நமக்குப் புத்தியுண்டானால் ஒருபோது ஏய்ப்புக்குள்ளகப்படமாட்டோம். இத்துடன் மூன்று வதலி நம்மை இகழ்ந்தது. ஆனால் நமதிரக்கமுள்ள கர்த்தர் நம்மைப்புறம்பான மனிதருக்கு முன்பாகவும் தமதூழியக்காரரென்பதிலுங் குறைவில்லாமல் நடத்துகிறதே நமது பெரிய பாக்கியம். அதுவே நமது முடிவுபரியந்தமுங்கொடுத்து ரட்சிக்கும்படி மன்றாடுதலோடு நன்றியறிந்தவர்களாய்த் தோத்திரிப்போமாக. இவடத்தில் நானும் மற்றயாவருந் தங்களுக்கும் அம்மாளுக்கும் பிள்ளைகள் யாவருக்கும் வாழ்த்துதலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம். நமதாண்டவர் எப்பொழுதுமாசீர்வதிப்பாராக.

௲௮௱௫௮ இப்படிக்கு
செப்தெம்பர்மீ ௨௯-௳ சவரிராயன்.

அகஸ்டோபர்மீ ௨-ஆ ஷை இடையன்குடியிலிருந்து ௪ - பேரிலிங்கந்து ஷை காரியத்தையுறுதிப்படுத்திக்கொள்ளவந்தார்கள். இவடத்திலிருக்கவும் அவடத்திற்போகவும். அப்படியானால் வழக்கம்போலப்பாதிச்செலவுகேட்டோமதற்குத் திராணியில்லை யென்றார்கள். அப்படியானாற் கூட்டிப்போயவடத்தில் முடித்துக்கொள்ளுங்களென்றோம். அதவர்களுக்குச் சம்மதமில்லை. எல்லாம்போய் ஷை சாமுவேல்ப்பிள்ளையிடத்தில் யோசித்துவருகிறதென்று ௫-ஆ போய்விட்டார்கள்.

௰௧-ஆ ஷையார்களில் பிட்சையர்ண்டியாபிள்ளை ௯ - ௱ - கொண்டுவந்து பிள்ளையவர்களிடத்திற்கொடுத்துப்போனார். ஏசுதாசன் கடிதம்வந்ததில் ஷை தன்னை சுவிசேஷபுரஞ்சேகரத்துக்கனுப்புகிறதாயிருக்கிறதென்பதே.

---

✝

கர்த்தர் தமதுபரிசுத்த ஆவியின் வரப்பிரசாதந்தந்து நடத்துவாராக.

இவடத்தில்யாவருந் தேவஇரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச்சேமாதிசயங்களுக்குத்தாங்களெழுதியகடிதம் ௫-ஆவந்து அறிந்தோமப்படியே மென்மேலுமறிய விரும்புகிறோம். திரிமீ க்கூடுதேனுக்குப்பண்ணை விளைக்குக் கனம் ஐயரவர்கள் போய்வந்தார்கள். தாங்களவடத்துக்கு வந்துயிவடத்துக்குவருகிறதாயிருக்குமென்றும் நினைத்திருந்தோம். வராததினால்க் கலியாணத்தின்போது வருவீர்களாக்குமென்று நினைத்திருக்கிறோங் கர்த்தருடைய கிருபையினாலே ஷை கலியாணம் இரண்டு ஒன்றித்து நடக்கிறது நிச்சயம். இன்னமும் ஓலைகூறவில்லை. மற்றெல்லாஞ் சிறப்பாய் நடத்துகிறதாகச்செய்யப்படுகிறது. ஷை சாமுவேல்ப்பிள்ளையினுடைய ஆள்க்கள் ௱ - ஸ்ரீ விசாரணைப்பிள்ளையிடத்தில்க் கலியாணக்காரியங்களைத்திட்டப்படுத்தும்படிக்கு ௪-ஆ இராவில்வந்து பேசிக்கொண்டதில் இவடத்திற்கலியாணம் பண்ணியவடத்துக்குக் கூட்டிப்போகிறதென்றும் அவடத்தில் ஷை காரியஞ்செய்ய ஏதுவில்லை யென்றார்களவர்களிவடத்துச் செலவு பாதிகொடுக்கத் திராணியில்லை யென்றுஞ்சொன்னதுக்கு அப்படியானாலவடத்திற் கூட்டிப்போய் நடத்திக்கொள்ளவென்றதின்பேரில் ஷையார் ஷை சாமுவேல்ப்பிள்ளையிடத்திற்போய் யோசித்துவருகிறதென்று போனார்களிதுவரையும் மாறுத்தரவு காணோம். ஆகிலும் ௱ - ஸ்ரீ பிள்ளையவர்கள் சும்மாவாகிலுமவருக்குக் கொடுக்கவே தீர்மானந்தான். நானவர்கள் எப்படியெப்படிச் சொல்வார்களோ அப்படிச்செய்துவருகிறதன்றி நானாக ஒன்றுசொல்வதுஞ் செய்வது இல்லை.



தம்பி ஞானசவுரியாம்பிள்ளை ௯-ஆ எழுதினது. ஷை அருளம்மாளுக்கு ஷை சாமுவேல்ப்பிள்ளைக்குத் திட்டஞ்செய்து ஓலைகூறியிருக்கிறதாகவும் கனம் முத்துசுவாமி ஐயரவர்களுக்குத் தெரிந்தும் பிச்சமுத்துப்பிள்ளையும் ஆபிரகாம்பிள்ளை தெய்வநாயகம்பிள்ளைக்குஞ் செய்திவந்ததாக ஷை ஆபிரகாம்பிள்ளை தம்பிக்கு எழுதி அப்படியே சாமுவேல்ப்பிள்ளைக்கு நடக்கட்டும் நாமதைத்தடுக்கும்படி யோசிக்கவேண்டியதில்லை யதற்கு நாம் பேசவும் வேண்டாமென்றும் எழுதினதினாலவர்கள் அந்தரங்கத்தின் யோசனை முடித்துக்கொண்டார்கள் என்று தம்பி ஞா. ஞானப்பிரகாசமும் எழுதிவிட்டு ஷை தெய்வநாயகம்பிள்ளையும் ஷையார்கள்சேகரத்தார்களும் நம்மிடத்திற்பேசுகிறது ஒன்றுமவர்களிருதயத்தில் ஒன்றுமாகவைத்திருந்தது நிறைவாய் வெளிப்பட்டதென்று மெழுதியிருக்கிறான். ஷை ஞானப்பிரகாசம்பிள்ளைக்குமவர் சமுசாரத்துக்கும் இருந்த விருப்பமிகுதியதற்கவர்கள் மாப்பிள்ளை மற்றவர்கள்விருப்பமாய்ச்செய்யவில்லையென்றவர்களுக்குள்ளெரிச்சல். ஷை தம்பியும் சமுசாரங் குழந்தையும் சேமம். அப்படியே ஏசுதாசனுஞ் சேமம். ஆகிலுமவன் காரியங்களைப்பற்றித் தங்களுக்கெழுதியிருக்கிறதின் விபரந் தெரியாது. நமது சின்னப்பிள்ளையாண்டமார் படிப்புக்காரியம் ஆறின கஞ்சி பழங்கஞ்சியென்ற பழமொழிபோலாயிற்று. மற்றுங்காரியங்கள் யாவுந் திட்டமறிந்தபின்பெழுதலாமென்று எண்ணி யெண்ணி யிதுவரையும் கடிதமெழுதகிறதுக்கு தாமிதப்பட்டதன்றி வேறில்லை. செபத்தியாயிக்கு ஷை காரியங்களையிட்டு மாமன்மார்கள் மனஸ்தாபபட்டுக்கொண்டு கலியாணத்துக்கு வராதிருப்பார்களோவென்று எப்போதுந் துக்கப்பட்டுப் புலம்புகிறாள். எவ்விதமுமவர்கள் வராதிருந்தாலிவ்விடத்தில் எவ்வளவு சிறப்பாயும் வெத்தளை சனங்கூடினாலும் நமக்கு நிறைவுஞ் சந்தோஷமுமில்லையென்று இவடத்திற்பேச்சுமாயிருக்கிறோம்.

நாங்கள் யாவருந் தங்களுக்கும் அம்மாளுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்த்துதலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம். இன்னாசியம்மாள் மாப்பிள்ளையவர்கள் காரியந் தங்களுக்குத் தெரிந்த காரியமாகிலும் நாம் தங்களுக்குப் பயந்து எழுதுகிறவளல்லவே. உள்ளகாரியத்தை சுருக்கமா யெழுதியனுப்பினேன். கர்த்தர் எல்லாரையும் காப்பார்.

௲௮௱௫௰௮ம் வருஷம் — இப்படிக்கு

அகஸ்டோபர்மீ ௰௧-ஆ — சவரிராயன்.

---

௰௪-௳ சுரண்டைகனம் பிக்போறட்டு ஐயரவர்கள்ஷெ சாமுவேல்ப்பிள்ளையவர்கள் சேகரத்தில் பெண்டீர்மானஞ்செய்து பின்பு அவடத்திற் பெண்பேசியிருக்கிறதினால் ஓலைகூறத்தடைசெய்கிறதாககனம் சார்வேல் ஐயரவர்களுக்கு காயிதமெழுதினதினாலந்தவாரம் ஓலைகூறாமல் நிறுத்திமாறுத்தரவு எழுதியனுப்பினார்கள். பின்பு மதுரோந்திர ஐயருமப்படிக்கேள்வியென்றெழுதிய கடிதமும்வந்தது.

---

+

கர்த்தர் தமதாவியைத்தந்து நடத்தக்கடவாராக.

இவடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச்சேமாதிசயங்களையமறிய விரும்புகிறேன். தங்கள் கடிதம் ௫-௳யும் ௰௪-௳ யும் வந்தது. நானும் ௰௧-௳யில் ஒன்று அனுப்பினேன். அதில்ச் செபத்தியாயி அருணம்மாளிருவருடைய கலியாண விபரமெழுதியிருந்தேன். அதின்பின்புள்ள செய்திகளை யிப்போதெழுதுகிறேன். என்னவென்றால்: ஷெ ௰௧-௳யில்ப் பிச்சையாண்டியாபிள்ளை கலியாணச் சிலவுக்கு ஏன்று கூா கொண்டுவந்து கொடுத்துப்போனாரவர்களுக்குள் ளென்னபேசுவார்களோ தெரியாது. அதுக்குமுன்னாக கனம் முத்துசுவாமி ஐயரவர்கள் கடிதமும் மச்சினருக்குத் தங்கள் குமாரத்திகளில் ஒருபெண் குடுங்கள் மனதிருந்தால் உத்தரவுவரவேண்டுமென்றந்தக் கடிதத்தையும் எனக்குக் கொடுத்தார்கள். அவர்கள் ஒரு முகமாய்த்திரும்பினதினால் ௪-ஆமாய்த்தான் தீர்மானம்பண்ணுகிறார்களோவென்றார்கள். வேறொன்றுஞ் சொல்லவில்லை. தங்களுக்கு அவர்கள் காயிதமனுப்பாததினால் நம்முடைய காயிதமவர்களுக்குக் காண்பிக்கவில்லை. கனம் பிக்ப்போட் ஐயரவர்கள் சாமுவேல்பிள்ளை கலியாண ஓலையைத் தடுக்கும்படிக்கு கனம் கார்வல் ஐயரவர்களுக்கும் கனம் சாப்டர் ஐயரவர்களுக்கும் கடிதமனுப்பினதாயும் கனம் சாப்டர் ஐயரவர்கள் பிள்ளையவர்களுக்கு ௰௪-௳ சொன்னதாயும் அதற்குடனே ஞானப்பிரகாசம்பிள்ளையைக்கொண்டு சாமுவேல்பிள்ளைக்கெழுதி கனம் கார்வல் ஐயரவர்களிடத்திற் பேசவேண்டியதைப்பேசி நாளை ௰௫-௳ ஷெ கனம் ஐயரவர்கள் சுவிசேஷபுரத்துக்குவரும்போது கனம் ஐயரவர்களிவடத்திற் பேசும்படிசெய்யவேண்டுமென்றெழுதியிருக்கிறதாகவும் என்னிடத்திற்சேர ஷெ தடைக்கெழுதினது மதுரோந்திர ஐயருக்குச் சொல்லாமலாவெழுதினார்கள் என்றுங்கேட்டார்கள். நானவர்களுக்குச் சொல்லப்படாது அவர் சகோதரி மகளைக்கேட்டிருப்பதால் என்று யோவான் வாத்தியாரவர்தாயார் முதலானவர்கள் கனம் பிக்ப்



போட் ஐயரவர்களுக்குச் சொல்லியிருக்குமாச்சும் அவரறிந்திருந்தால் நேத்துவந்த கடிதத்தில் ஷெ தாமெனக்கெழுதுகிறதாயிருக்குமே அந்த காயிதத்தில் எழுதவில்லையே பாருங்கள் அவர் காயிதத்தைத் தருகிறேனென்றதுக்கு வேண்டாம் தெரியாதாக்குமென்று போய்விட்டார்கள். ஷெ ௰௫-௳ கனம் கார்வல் ஐயரவர்களிவடத்துக்குவந்து பேசிக்கொண்டதின்பேரில் கனம் பிக்ப்போட்டைய்யரவர்களுக்கு கடிதமனுப்பினதாகவும் வருகிறவாரத்திற்ப் பதில்வந்தபின்புதான் ஓலைகூறுகிறதாயிருக்குமென்றும் அதற்கு முந்திச் செபத்தியாயிக்காக ஓலைகூறினால் ஷெ காரியங்கள் பப்பளிக்கையாகுமென்று நிறுத்தியிருக்கிறதாயும் சொன்னார்கள். மற்றவேலைகள் சாமான்கள் அமுதுபடி முதலானயாவுந் திட்டஞ்செய்தாயிற்று. ஓலை-கூ முடிந்தபின் கலியாணம் அப்போதான் இத்தினந் தெய்தியென்று குறிக்கப்படும். அப்போதுதான் தங்களுக்குக் கடிதமெழுதுவார்கள்போலத் தோன்றுகிறது. அமுதுபடி கோட்டை-அ-மதற்கடுத்த சாமான்களும் நகைகள் உரூ௰ கூயிற்செய்தாகிறது. ஷெ செபத்தியாயிக்குப் பட்டும் மாப்பிள்ளைக்கு வேட்டி தலைப்பாகு முதலானதுகள் கூ ௬௰-ங் கொடுத்தாயிற்று. திருமங்கிலியத்துக்கு கூ இன்னங்கொடுக்கவில்லை. ஷெ ஆல்வாய்பிள்ளையாகிய சவரிமுத்துப்பிள்ளை இப்போது பண உதவவில்லைப்பின்னாலே கொடுத்துவிடுகிறேன் ௰-வீ-ன் என்று சொன்னதாகவும் பிள்ளையவர்கள் சொன்னார்கள். கனம் சாப்பட்டர் துரை என்னிடத்தில் மதுரோந்திர ஐயர் கலியாணத்துக்கு வருவாரா வென்றுகேட்டார்கள். இன்னதெய்தி கலியாணம் என்றெழுதினால் வாரது தெரியும் என்றேன். தம்பி யேசுதாசனை இவடத்துக்கு அனுப்புகிறதாய்ப்பேச்சாயிருக்கிறது. கனம் ஐயரவர்களுஞ் சொன்னார்கள். அவனுக்கவடத்திற் போனமீ முதற் சம்பளமில்லையாம். இவடத்திலிதுவரையும் சபையார் சங்கத்துக்கு என்னிடத்திற் பிடிக்கிறதேயன்றி சபையாரிடத்தில் வசூலாகவில்லை. மற்றுங்காரியங்களைப் பின்னாலே எழுதுவேன். சகாயனுபதேசியாருக்காகத் தம்பி சவரிமுத்துப்பிள்ளை கனம் கிளாற்க் ஐயாவர்களிடத்திற் பேசி நல்ல உத்தரவு வாங்கியெனக்கெழுதினார். ஷெ உபதேசியாருக்குண்டாயிருக்கிற கடன்காரருக்குப்போக்கும் எற்றுக்கொள்ள மனுசாளுமில்லாததினாற் தடைப்பட்டிருக்கிறார். அவர்படுங்கஸ்டம் சொல்லமுடியாது. பலவிதத்தினாலுங் கர்த்தரவருக்குத் துணைச்செய்யவேண்டியதன்றி வேறில்லை.

இப்போதும் முனிசப்பிள்ளை மாப்பிள்ளையவர்களெழுதினதிலவர்களுக்கு வீட்டுக்கடன் தீர்க்க வி-ன் ௪ கடன் தருவாரில்லையென்றுங் கலியாணத்துக்கு வந்தால் கூ ௫ வேணுமதற்கு புகலில்லையென்றும் ஷெயார் சாப்பர

ட்டுக்கு ஈ - ஸ்ரீ பெரியநாயகம்பிள்ளை வீட்டில் ஒத்துக்கொள்ளாமல்கோட்டைக்குள் தங்கள் வீட்டில்வந்து வருத்தப்படுகிறதாயும் அந்த வருத்தப்படுதல் தங்கள் மகளுக்கு சந்தோஷமாயிருக்குமென்றும் எழுதியிருக்கிறார்கள். இப்படியே இவடத்தில் எனக்குண்டாகிற மனவேதனை சகிக்கப்படாதிருக்கிறது.

கர்த்தர் தமதிரக்கங்களினாலே நம்மை காப்பாராக. நாங்கள் யாவருமுங்களுக்கும் மரியம்மாள் முதலான யாவருக்குந் தோத்திரமும் வாழ்த்துதலுஞ்சொல்லுகிறோம்.

௲௮௱௫௰௮-௵ இப்படிக்கு
அகஸ்டோபர்௴ ௰௮-௳ சவரிராயன்.

---

௨௰-௳ செய்வாயி தன்மூத்தமகளையும் அவள்பிள்ளைகளையுங் கூட்டிவந்தான் பிள்ளைவீட்டுக்கலியாணம் வலாயிருந்து போகவென்று.

௨௫-௳யும் ௨௮-௳ மதுரேந்திர ஐயரெழுதிய இரண்டு கடிதமும்௩௰-௳யில் வந்ததில் ஷை பிக்போறட்டய்யரவர்களிடத்தில் யோவான்பிள்ளை சாமுவேல்பிள்ளை பெண்பேசினவழக்குத்தீர்மானமின்னுஞ்சொல்லவில்லையென்றுவந்தது. ௰௫-௳ வடக்குன்குளம் சிரிலைகுண்டம் பிள்ளை மகன் விசேசிராமுத்துப்பிள்ளைக்குக் கலியாணத்துப் பாக்குவந்தது தொம்மைப்பிள்ளை மூலமாய் வந்தது ஷை கலியாணம் ௰௮-௳யாம்.

---

+

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத் தரக்கடவது.

இவடத்தில் யாவருஞ்சேமம். அப்படியே அவடத்துச்சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். போன௴ ௨௫-௳யும் ௨௮-௳யும் மெழுதிய கடிதங்கள் ௩௰-௳ வந்துசேர்ந்தது. அதற்குமுன் ஈ - ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு கனம் பிக்போரட்டு ஐயரவர்கள் கடிதம்வரவும் ஓலைகூற உத்தரவு இடையங்குடியிலிருந்து வரவும் ஷை காரியங்களைக்குறித்தசெய்திகள் தெரியவில்லையே என்ற கவலைகள் மிகுதியாயிருந்ததுக்குத் தங்கள் கடிதத்தினால் சற்றுருதலாயிருந்தார்கள். அவர்கள் நம்மையற்பமாயெண்ணிக் கடைசியாய் ஒரு கடிதமெழுதவேன் வந்தவன்வரட்டும் வராதவன் போகட்டு மிப்பொழுது துரிதத்தில் நடத்தவேண்டுமென்று சொன்னதினால் இவ்வளவுதடையும் தாமிதமும் வந்ததென்பதுதான் மிகுந்த வெள்க்கம். நான் ௰ - நாளுக்குள்ளாக வெழுதி உத்தரவுவந்தபின், உத்தரவுசொல்லுவோமென்றதுக்கு சம்ம



திபாதபிள்ளை யிப்பொழுது சகலரும் சத்தனித்துக்கொண்டு ஓலைகூறவும் கூடத்தடைப்பட்டபின் மதுரேந்திர ஐயருக்குத் தெரியாதா தெரிந்ததுகளுக்குக் காயிதம்வராதாவென்றுங் காத்திருந்துங் காகிதங்கள்வந்ததுகளிலென்ன எழுதினார்களென்றறியவும் விரும்புகிறதும் எப்படியிருக்கிறது என்னவென்ற எண்ணந்தான் எனக்கு அவசரக்காரனுக்குப் புத்திமட்டை என்றதுபோல சகல சிலவும் சகல சாமானுமெத்தனமாயிருக்கிறதஞ் சில[வு]ம்பல கஷ்டங்களாகிறதுக்கும் யேதுவாய் நேரிட்டது. ஆகிலும் கர்த்தர் கிருபையாயிருப்பாரென்று நம்புகிறேன். சிலவேளைகளிற் பிள்ளையவர்களுக்குண்டாகிற யோசனைகள் நம்முடையவர்களில் அனேகர் வரமாட்டார்களென்றிருக்கிறதும் வராதிருந்தால் எவ்வளவு சிலவுசெய்தாலுஞ் சிறப்புங் கனிசமுந் தோன்றாதென்றும் எண்ணிச்சிலவிடங்களிற் சொல்லியும் என்னிடத்திலும் தங்களையும் மரியசவரிமுத்துப்பிள்ளை முதலானவர்கள் சமுசாரங் குழந்தைகளும் வருவார்களாவென்றும் ஆபிரகாம்பிள்ளை முதலானவர்கள் வரமாட்டார்களென்றுங் கேட்டார்கள். அவர்கள் வருவார்கள், மதுரேந்திர ஐயர் வீட்டார், சவரிமுத்துப்பிள்ளை வீட்டார் மழைதண்ணீர்க் காலமும் வண்டி வாடகை முதலான சிலவும் அதிகமாய் நேரிடுமே. அதினால்த்தான் ஆண்பிள்ளைகள்தான் வருவார்கள்போல நினைக்கிறேனென்றேனவர்களப்படியானால் அதுசரியா அப்படியே எல்லாருமிருந்திட்டாலென்ன சிறப்பு என்றும் அப்படியவர்களிருக்கிறது சரியல்லவென்றுஞ் சொன்னார். அதப்படியிருக்க இதுவரையுந் தங்களுக்காவது தம்பிமார்க்காவது கலியாணமென்ற காரியத்தைப் பற்றியவர்களெழுதாதிருக்கிறார்களென்பதுஎங்களுக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. மற்றுங்காரியங்களிலும் எங்கள் சங்கடம் வெளியேசொல்ல ஏதுவில்லை, கர்த்தர் கிருபையாய் ஷை காரியங்கள் நிறைவேறினாற் போதுமென்று மனப்பூர்த்தியாயிருந்தும் வருகிறோம்.

அவடத்துக் கனம் கார்வேல் ஐயரவர்கள் ஷை யோவான்பிள்ளை வழக்கு முடிவாக வெழுதியது கேற்றுப்போகிறதாய் ஷை சாமுவேல்பிள்ளை ஈ - ஸ்ரீ பிள்ளையவர்களுக் கெழுதினதாகவும் சொன்னார்கள்.

வடதிருநெல்வேலியில் கனம் ரொக்லாண்டய்யரவர்கள் வந்தகாரியம் இவடத்தில் ௨௫-௳ அறிந்தோம் கனம் ஐயரும் அம்மாளும் மிகவும் துக்கப்பட்டு எங்களுக்கு ஆள்சொல்லிவிட்டு நாங்கள்போனபோ தங்கவனமாய்ப் புத்திசொன்னார்கள். ஷை ஐயரவர்களுக்கு சந்தோஷமாய் முடிந்த காரியம் நமக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. ஆனால் தேவசித்தத்தின்படியாவதாக வென்று நாமுமிடங்கொள்ளுவோமாக.

தம்பி மரியசவரிமுத்துப்பிள்ளைக்கு ஒரு கடிதமெழுதியிருந்தது போய்ச் சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன்.

வியாகப்பன் நமதிடம் விட்டுப்போன முகாந்தரமென்ன அவன்வேலைக்குப்பதில் ஆரோ. சொக்கங்குடியாள்மகளுமவளு மெவடத்திலிருக்கிறார்கள்.

நம்முடைய பிள்ளைகளிற் சவரிராயன் தேவசகாயமிருவருக்கும் படிப்புக்காரியமப்படியேதானிருக்கிறதாக்கும். அவர்களை இவடம்வரையுங் கூட்டிவந்துபோனால் நலமாயிருக்குமென்றும் ஆசையாயிருக்கிறதுமன்றியும் மற்றயாவரையும் கலியாணக்காலமன்றிமற்றக்காலங்களில் காணுகிறதுமரிதாயிருக்கும். உங்கள் மனம்போலக் காரியம்நேரிட்டதற்குச் சரியாய்நடக்கும்.

நாங்கள் யாவரும் உங்களனைவருக்கும் வாழ்த்துதலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம். கர்த்தர் எல்லாரையும் காப்பாற்றக் கடவர். இவடத்திற் பதமழையும் குளமழையும் இல்லை. இதுவே யிவடத்துச் சனங்களுடைய பேச்சுகள். வேறுவிசேஷமில்லை.

௲அ௱௫௮-௵ இப்படிக்கு,
நவம்பர்மீ ௨-ட சவரிராயன்.

---

நவம்பர் ௴ ௰௬-ட கனம்பிக்போறட்ஐயரவர்கள் ஷெ. யோவான்பிள்ளை தடைதீர்த்து உத்தரவுவந்ததினால் சாமுவேல்பிள்ளைக்கு க-ம் ஓலைகூறப்பட்டது. ௰௫-உயிற் கலியாண நாளைக்குறித்து திட்டஞ்செய்து ௨௰௪-ட புதன்கிழமை கலியாணமென்றறிவித்து கடிதமெழுதி, ௰௪-ட சாயந்திரம் சுரண்டைக்கும்புலவனாருக்கும் அருணாசலம்வசம் கடிதமனுப்பிற்று.

௰௭-ட யில் ஷெயாருக்கும் ஒரு ஓலை கூறிற்று. ௨௧-ட மூன்றாமோலை முடிந்து பின்னும் ஷெ சாமுவேல்பிள்ளை தமதாரங்கிபெரிதென்று காட்ட இரண்டு ஒன்றாய் முடிக்கப்படாதென்றும் பின்னுந்தமக்கு வஸ்திர முதலான சாமான் வரவேணுமென்றும் ௨௫-ட தமக்குக் கலியாணம் முடிக்க வேண்டுமென்றதினால் ௨௫-ட இரண்டு முடிக்கத்தான் தீர்மானித்து அவர்க்குமாத்திரம் பெருமையாய் நாற்காலியிலிருந்து விவாகஞ்செய்யவென்றதற்கு கனம் சாப்பட்டர்ஐயரவர்களும் அம்மாளவர்களும் மற்ற மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்குமப்படியேசெய்கிறதென்றும் இனிமேலும் விசாரணை உபதேசிமார் பிள்ளைகளுக்குமப்படியே செய்கிறதென்றுந் தீர்த்துப் பேசினார்கள். ௨௩-டயில் அநேகர் கலியாணத்துக்காக வந்ததினால் மறிய முதல் நானுத்தரவுபெற்று உக்கிராண அலுவல்பார்க்கும்படி போனேன். பெரும்பத்து தம்பி சமுசாரம்வந்தது. ௨௪-ட புலவனூர் தம்பி சவரிமுத்துப்பிள்ளை சமுசாரமி



தத்துடன் வந்தார். மதுரோந்திர ஐயர் கடிதம் அன்றுவருகிறதாயிருந்ததுவரவில்லை. ௨௫-ட காலையில் இடையங்குடி மாப்பிள்ளைவந்தபின்னெல்லாருங் கூடக்கோவிலுக்குப்போனோங் கனம் கால்வெல் ஐயரவர்களும் வந்திருந்து ஷெ சாப்பட்டர் ஐயரவர்கள் விவாகமுறைமை வாசித்து விவாகம் நிறைவேற்றினார்கள் முதலாவது சாமுவேல் பிள்ளைக்கும் அருளம்மாளுக்கும் இரண்டாவது வியாகப்பபிள்ளைக்குஞ் செபத்தியாயிக்கும் பின்பு ஐயர் பங்களாவுக்குப் போய் ஷெ பெண்களுக்குச் சந்தோஷமாக வேதாகம புஸ்தகமுதலானதுங் கொடுத்தனுப்பினார்கள். பின்பு ஊர் வெத்திலை பாக்குச்சுருள் மொய் முறைப்படி விளம்பினது. ௨௬-ட மதியத்துக்குமேல் இடையங்குடிக்கு சாமுவேல்பிள்ளையும் அருளம்மாளும் அநேகர் நமது உடந்தைச் சனங்களுங் கூடப்போனார்கள்.

௨௭-ட உதையத்தில்வந்தது மற்ற சனங்கள் ஞானசமரியாள் ௨௫-ட ஷெ கலியாணம்நிறைவேறினபின்வந்தானுத்தரவுவரதாமதப்பட்டதினால் ஷெயானும் மனவியும் மரியசவரிமுத்துபிள்ளையும் மனவியும் அவர்கள் தாயுங்கூடப்போய்வந்தார்கள். ஷெ சவரிமுத்துப்பிள்ளையும் அவர் தாயும் டிசம்பர்மீ ௨-ட புறப்பட்டு சுரண்டைக்குப்போனார்கள். ஷெ ஞானசமரியாம்பிள்ளையும் சமுசாரமும்பெரும்பத்துக்கும்தெய்வாயியும்அவள்மகளும் ஆல்வாய்ப்பிள்ளையும் அவர் சமுசாரமும் கடைவீடு மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளையும் அவர்சமுசாரமும் ஷெ சென்றமீ ௩௰-ட வடக்குன்குளத்துக்குப்போனார்கள்.

௩-ட மதுரோந்திர ஐயர் கடிதங் குழந்தை பிறந்ததாகவந்தது.

௯-ட இடையங்குடி மாப்பிள்ளையும் அருளம்மாளும் மறுவீடழைக்கப்பட்டுவந்ததின் செபத்தியாயியும் அவள் மாப்பிள்ளையும் அழைக்கப்பட்டார்கள். நானும் இன்னாசிஅம்மாளும்தருமநாதனுங்கூடப்போனோம். இரவில் செபத்தியாயிக்குக்குளிர்போலவந்தது நமது வீட்டுக்குத் திரும்பவந்துவிட்டாள். ௰-ட இடையங்குடியாருக்குக் கொடுக்கிறதைக் கொடுத்தனுப்பினோங் காலையில். சாயந்திரஞ்செபத்தியாயிக்குங் கொடுத்து பங்களா வடக்கு அறையிற் சமயலுக்குத் திட்டஞ்செய்து அவடத்திற் பிள்ளையவர்கள் வீட்டாரும் நாங்களுங்கூடப்போயிரவிற் சாப்பிட்டுவந்தோம். கூடக்கிளாக்குளம் சவரிமுத்துப்பிள்ளையும் கூடவந்தார். ௰௪-ட சவிக்கமில்லாதிருந்து, ௰௫-ட வடக்குன்குளத்துக்குப்போனார்.

௰௬-ட நாலாந்துலா மாஜிவிசாரணை உவாத்தியார் முத்துசுவாமியாபிள்ளை பெண்சாதி ஆறுமீக் கெற்பம்விழுந்ததினாற் சன்னியுண்டா யிறந்ததாக ஆள்வந்தது.

௰௮-ட பிள்ளையவர்களும் நானும்போய்த்துட்டிகேட்டுவந்தோம்.

+

கர்த்தர் தமது ஆவியைத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினலே சேமம். அப்படியே அவ
டத்துச் சேமாதிசயங்களுக்கு இதுமுன் னெழுதிய ௪ - கடிதங்களும் வந்
து சமாசாரங்கள் தெரியவந்தது. அப்படியே மென்மேலுமறியவிரும்புகி
றேம். இதுவரையும் அவடத்துக்கு கடிதமெழுதாததுக்கு முகாந்தரம் முத
லாவது கலியாண அலுவல். இரண்டாவது பாக்குங் கடிதமுமனுப்பினது.
மூன்ருவது வருவீர்களென்ற எண்ணம். நாலாவது உங்கள் தாயார் வருகி
றது இவைகள்தான். இன்னமுங் கலியாண உக்கிரணக் கணக்கும் வரவு
செலவு கணக்கும் இருப்பதினலும் இப்பொழுது கோவிலுக்குப்போய்வருகிற
துமாத்திரம். இதுநிற்க தங்கள் கடிதத்தில்வரும்படி யெழுதின நோக்கந்
தெரிந்து உடனே புறப்படக்கலியாணம் நெருங்கிற்று. பின்பு தம்பி சவரி
முத்துப்பிள்ளை யவடத்துக்குப்புறப்பட தாமிதப்பட்டதுவுமாக அவசரத்துக்
குங்கள் தாயார்வர ஏதுவில்லாமற்போயிற்று. ஆகிலுங் கர்த்தர் உங்களோடி
ருந்து மரியம்மாளுக்கு பிரவசகாலத்திலுதவிசெய்து அவளையும் குழந்தையை
யுங் காப்பாற்றினதே பெரிதான இரக்கம். அதற்கு நன்றியறிதலாய் கர்த்த
ருக்கு இஸ்தோத்திரஞ்செய்தேன்.

மேலுமவடத்தில் கனம் பிக்போரட்டு ஐயர் பங்களாவில் வந்த
மோசத்திலுமவர்களையும் அம்மாள் முதலானவர்களையும் தங்களையும் பிள்ளை
கள் முதலானயாவரையும் இதுவரையும் காத்ததற்க்காகவும் கர்த்தருடை
யபெரிதான இரக்கத்தையும் நினைத்தவருக்குத்தோத்திரஞ்செலுத்துகிறேன்.
இவடத்தில் நிறைவேறின கலியாணங்களையும் கர்த்தர் நிறைவேறச்செய்து
இவ்விடத்தில் யாவருக்கும் செய்த தயவுக்காகவும் தோத்திரம். ஷெ கலியா
ணத்தின் சிறப்புஞ்செய்த விசேஷங்களும் மற்றுமறுபடி முதலானதுக்குப்
போய்வந்தது. மற்றுமிவடத்துக் காரியங்கள் யாவுமவடத்துக்குவந்திருக்கி
ற உங்கள் தாயாரும் தம்பி சவரிமுத்துப்பிள்ளை முதலானவர்களால் விபரமா
யறிந்துகொள்ள ஏதுவிருப்பதினலே நானெழுதவில்லை. ஷெ உங்கள் தாயா
ரும் தம்பியும் புறப்பட்ட மறுநாள் ௯-௳ வெள்ளிக்கிழமையில் செபத்தியா
யியையும் அவள் மாப்பிள்ளையையும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பிடாரியி
ன்னபங்களாவில் பள்ளிப்பிள்ளை படிக்கிற அறைக்கு வடக்கு இரண்டு அ
றை கனம் ஐயரவர்கள் உத்தரவுப்படிக்குண்டான இடத்துக்கு ௱ - ஸ்ரீ பிள்
ளையவர்கள் ஷெயார்களுக்குக்கொடுக்கிறதைக்கொடுத்தனுப்பத் திட்டஞ்செய்
தார்கள். ஆனல் நான்ஷெ இரண்டு பேருந் நமது வீட்டில் அ - நாள் இருக்



கவும் பின்பவடத்துக்குப்போகவும் கேட்டுக்கொண்டு நமது வீட்டுக்கழைத்து
வந்தேன். அப்படியானபின்பு ஷெயார்கள் தங்கள் மருமக்கள் மக்களையும்
மறுவீட்டழைக்கும்படி யோசித்து ௯-௳ திங்கள்க்கிழமையிலிடையங்குடிக்கு
ஞானப்பிரகாசம்பிள்ளையும் வண்டியும் அனுப்பியவர்கள் வந்தபின்பு மூத்த
மருமகனையும் மகளையும் அழைத்தார்கள். முறைப்படி வழைப்புச் சுருளும்
வைத்து ஷெ விருந்துக்கு நமது வீட்டாருங்கூட அழைத்துக்கொண்டார்
கள். ஷெ விருந்துக்குக் கடாய் கோழி ரொட்டி முதலானதும் காப்பியும்.
மற்றுங்கறிகளுபாயந்தான். இப்படியாக ௯ - நாள் ஆனபின்பு, அ-௳ புத
ன்கிழமை இரவில் ௱ - ஸ்ரீ பிள்ளையவர்கள் தங்கள் வழக்க நிலைமையில் இ
ருந்துகொண்டு என்னையும் ஷெ மாப்பிள்ளைமார் இரண்டு நாலாந்துலை பழய
வி. உவா. முத்துசுவாமியாபிள்ளையையும் பின்னும் புறசாதியார் மூ - ன்
முதலானவர்களையும் கூட்டிவைத்து தங்கள் குமாரன் ஞானப்பிரகாசத்
தையும் அழைத்துவந்து ஷெ ஞானப்பிரகாசம்பிள்ளைக்கு இரண்டுவாரத்து
க்குள்ளாக கலியாணமுடிக்கவேண்டுமென் மனதுக்கு சம்மதியானபெண்ணை
திட்டஞ்செய்வேன் அதைத்தான் அதற்கு நகை குறைவிருக்குமானல் நானே
யென் பிள்ளைகளுக்குச்செய்த விதஞ்செய்வேனென்றும் அதற்குச் சம்மதிப்
பாயாக இல்லையாகில் உன் சகோதரி செபத்தியாயி வீடு அல்லது உங்கள்பெ
ரனுர்வீட்டில் சாப்பிட்டுக்கொண்டுன் சம்பளத்தையும்யெடுத்துக்கொள்ளென்
றுஞ்சொன்னுர்கள். அதற்கு ஷெ ஞானப்பிரகாசம்பிள்ளை தனக்கு இப்போ
து விவாகந்தேவையில்லையென்றும் ஷெ சகோதரி வீட்டிலாவது மற்ற வீட்
டிலாவது நான்போகவேண்டுவதும் ஷெ பெண்ணும் உங்கள் மனப்படிசெய்
யவும் காரியமில்லை என்றுந் தகுந்தபடி பிரதியுத்தாரஞ் சொல்ல ஷெ யார்கள்
அதற்கும் ஆட்சேபித்து அப்படியானல் அலுவல்செய்யக்கூடாது விட்டு வி
டென்றும் பலவிதமாய்ப் பேசினதைவிட்டு இதற்குத்தான கூப்பிட்டது
என்றும் நாளைக்குப் பேசிக்கொள்ளலாமே என்று போய்விட்டான் பதிக்
௧. அதன்பின்பு என்னையும் பலவிதமாய்ப் பேசி ஷெ யார்கள் காரியங்களு
க்கு பிள்ளைகள் கீழ்ப்படியாததுக்கு காரணம் நானும் உங்கள் தாயாருமெ
ன்றும் பலவிதமாய்ப் பேசினுர்களதற்கு நானும் அது மெய்தானென்று ஒத்
துக்கொண்டது போல நகுப்பிக்கொண்டு கடந்து ஷெ யார்களுக்குள் நமக்
குண்டான காரியங்கள் கடந்துபோக வேண்டுமென்று தீர்மானித்து அப்ப
டியானல் நாங்கள் இவடம்விட்டு கடந்துபோகிறதென்றேன். அவர்களும்
மப்படிச்செய்தால் நலமென்முர்கள். இப்படி பலவிதமாய் மனதுக்கு மனது
விரோதமாயிருக்கிறதாயினும் அவர்களும் நம்மைக்கொண்டு பின்னை காரியத்

ளைத முடிக்கவும் நாமுமவர்களைக்கொண்டு ஷை பிள்ளை காரியங்களையாகப்பண்ணவும் யோசனையாயிருக்கிறது. இதினால் பிரியவும் ஏதுவில்லை யினைங்கியிருக்கவும் ஏதுவில்லையென்ற கவலையினால் எனும்புருச்சியாய் இருக்கிறது. இதுநிற்க. ௩-௨ ஷை மாப்பிள்ளைமாருக்கு ஆளுக்கு ௫ ரூ சுருளும் பலகாரத்துக்கு ரூ ௨-௨ - மாகக்கொடுத்து ஷை அமுதுபடியும் மரக்கால் - ௫ மற்றுஞ் சாமான்களும் வெத்திலை பாக்கு முதற் சகலமும் விபரப்படியெல்லாம் வைத்துக்கொடுத்து வெங்கலபாத்திரங்களுக்கு ரூ - ௬௦ என்று தீர்மானித்து ௰-௨ காலையில் ஷை இடையங்குடி மாப்பிள்ளையும் பெண்ணும் அனுப்பப்பட்டது. பின்பு செபத்தியாயியையும் அப்படியே முன்குறித்த இடத்துக்கு அனுப்ப அவள் அவர்கள் எங்கள் இரண்டு வீட்டாரும் இன்று அவர்கள் கூடவந்து சமையல்செய்து சாப்பிட்டு வரக்கேட்டுக்கொண்டாள். அப்படிச்செய்தோம். நமது மாப்பிள்ளை கிளாக்குளம் சவரிமுத்துப்பிள்ளையுங்கூடத்தான். அவர்வந்தது; பிள்ளையவர்களிடத்தில் போனவருஷ பனைமரத்துக்குப் பணம்கொடுத்திருந்ததைக்கேள்க்க அன்றுதான்வந்தது. ஷை ஞானப்பிரகாசம்பிள்ளை கலியாணத்துக்கு மறுநாள் சம்மதிபோல தன் மச்சினமாரிடத்திற் சொன்னதாகச் சொன்னார்கள். அதின்பின் ஷை பிள்ளையவர்கள் அவன் மாமனாராகிய ஐயருக்கும் எழுதி யோசிக்கவென்றதாக முடித்தார்களாம். அதின்பின்பு தகப்பனாரும் மகனுமென்னபேசுவார்களோ. ஷை ஞானப்பிரகாசம்பிள்ளை பட்டிணத்துக்குப்படிக்கப்போகிறேனென்று சொல்லிக்கொள்ளுகிறார். ௱ - ஸ்ரீ மாப்பிள்ளை முனிசுப்பிள்ளையவர்கள் காரியமுந்தித் தங்களுக்கெழுதியிருந்ததின் பின்புசெய்தியொன்றும் நமக்குயெழுதவில்லை யவர்களுக்கு நான் கலியாணத்துக்குவரும்போது செலவுக்கு ரூ - ௪ கொண்டுவாருங்கள் யென்றெழுதினேன். அவர்கள் ௱ . ஸ்ரீ பிள்ளையவர்களுக்குத்தான் ஷை தாயில்லாப்பிள்ளைகளுக்கு ஒன்றுஞ்செய்ய திருவாகயில்லாததுபோலவும் பெண்சாதியும் பிள்ளையையும் வைத்தாதரிக்கவும் அவர்களவர்களுக்குள்ளிருக்குகாலம்போர்டத்தக்கதில்லையென்றுதன்னையினைவரிசையிற் சேராதிருக்கவும் கேட்டுக்கொண்டார்கள்.

பின்னும் பிள்ளையவர்கள் தங்கள் பிள்ளைகள் கலியாணத்துக்கு வரச் சொல்லி எழுதிப்பாக்கு அனுப்பியும் ஷையார் பதில் எழுதவும் தான்வரவுமில்லை. வியாகப்பபிள்ளையிடத்தில் உங்கள் சித்தி வருவாளானால்வரட்டும் என்றுமாத்திரஞ் சொன்னார்களாம்.

ஷையான் வசத்தில் இன்னாசியம்மாள் தனக்கு கலியாணச் செலவுக்கு ரூ - ௫ கொடுத்துவிட்டால் நான் வருகிறேனென்று சொல்லியனுப்பினாள்.



அதற்குப்பதில் ஆயாவது கடிதமாவது இதுவரையும் வரவில்லை. இவடத்திற் கனம் ஐயரவர்களும் அம்மாளவர்களுமென்னிடத்தில் ஷை யின்னாசியம்மாள் செய்தி விசாரித்து ஷையாளை யனுப்பு அல்லது கனம் சார்சென்று ஐயரவர்களுக்கு அவளைப்பற்றி யெழுது யென்றும் முன்சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஷை கலியாணமுடிந்தபின்னனுப்பிவிடுவேனென்று சொல்லியிருந்தேன். இப்போது ஷை மாப்பிள்ளை காரியமப்படி யிருக்க எப்படி யனுப்பலாம் அவளும்போகிறதெப்படி என்கிறாள். ஆகிலும் கனம் சார்சென்றய்யரவர்களுக்கு அல்லது குருசாந்துரையவர்களுக்கு யெழுதியதின் பேரில் வருஞ்செய்திபறிந்து அனுப்பலாமென்றிருக்கிறேன். உங்கள் தாயாரும்தம்பியும் வரும்போது எனக்குப் பிரிந்துபார்க்க நேரமில்லை. இனிமேல் நான் அவடத்துக்குவந்து பேசிக்கொள்ளவும் பிள்ளைகளையும் மரியமாளையும் பார்க்கவும் மிகுந்த ஆவலிருக்கிறது. கனம் ஐயரவர்களும் உத்தரவுகொடுப்பார்களாகிலுமிவடத்தில் இன்னாசியம்மாளும் குழந்தைகளும் தம்பி தர்மநாத சஞ்சீவியும் இருக்கிறதினாலிந்த இடத்தில் விஷபேதி நடப்பாய் இங்கே சுவிசேஷபுரத்தில் அசனூரிலிருந்து வந்தவர்களில் இரண்டுபேர் மரித்தார்கள். சமாரியா சபையிற் சேர்ந்தவர்களில் நாலுபேரும் மாதவன்குளத்திற் சிலரும் மரித்தார்கள் என்று கேள்வி. யல்லாமலும் எங்கும் ஷை செய்திகளுமுண்டு. இந்த வாரிலுஞ் சிலர் வியாதிப்பட்டு சுகமானார்கள். இதினால் சங்கத்துக்கு முன் எங்குஞ் சுகசெய்தி கேட்டால் வருவேன். ஆனால் தேவசித்தம் எப்படியோ தெரியாது.

காலாந்துலாவில் பழய விசாரணை வாத்தியார் முத்துசுவாமியாபிள்ளை மனைவி ஆறுமாசக்கெற்பம் விழுந்ததினால் சன்னியுண்டாய் ஞு மீ ௰-௩-௨ மரித்துப்போனாள். அவளுக்கு ஆறுபிள்ளைகளிருக்கிறது. ரெம்ப பரிதாபமான நிலமையிலிருக்கிறார்கள். இது நிற்க. நம்முடைய மாப்பிள்ளை கிளாக்குளம் சவரிமுத்துப்பிள்ளையவர்கள் ௰-௨ இவடத்துக்குவந்து தமக்கு சீட்டுக்கட்டப் பனைமரத்துக்கு பிள்ளையவர்களிடத்தில் திட்டஞ்செய்யும்படியிருந்து ௰-௩-௨ ஊருக்குப்போனார்கள். முதலாம் நாள் ஒருதரம் வாந்தியும் இரண்டு மூன்றுதரம் பேதியுங்கண்டு மருந்துகொடுத்து மூனுநாளுஞ் சாப்பிட யேதுவில்லாமற் கிடந்து மறுநாள் சாப்பிட்டுப்போனார்கள். பிள்ளையவர்கள் வீட்டில் ௬ - போது சாப்பிட்டு ௧ . ரூ மொய்க்கொடுத்துபிள்ளையவர்கள் வாங்க மனமில்லை என்னிடத்திற் கொடுத்ததினால் நான்கணக்கில்வைத்துப்போட்டேன். இன்னமுஞ் சிலநாள் சென்றபின் வண்டிவரும் மரத்துக்கு. ஷை வடக்குன்குளத்துச்செய்திகள் தெரியாது. பெரும்பத்துத் தம்பி

கடிதம்வந்ததில் அவருக்கு சிலநாள் சுரம்வந்துவிட்டதாயும் அண்ணம்மாளுக்கு கண்வலியும் குழந்தைக்குச் சிரங்குமாயிருக்கிறதாயும் செய்தி. தம்பி ஏசுதாசபிள்ளையைக்கனம் ஐயரவர்கள் இவடத்துக்குவர மனமிருக்குமாவென்று என்னிடத்திற்கேட்டுக் கடிதத்திலவன் பேரும் எழுதியவனுக்கு சம்பளமென்ன கொடுக்கிறார்களென்றார்கள். அதின்பின்னிதுவரையும் ஒருசெய்தியும் தெரியவில்லை யவனும் கடிதமெழுதவில்லை யெனக்கும் எழுதக் கூடவில்லை மற்றுங்காரியங்களுந் தெரியாது. பாளையங்கோட்டையிலும் விஷவியாதி நடக்கிறதாங் கல்விச்சாலையிலும் ஒருசமுசார மனிதனிறந்ததாயும் கேள்வி. இன்னாசியம்மாள் பிள்ளைகள் இரண்டுக்குஞ் சிரங்குகள் அதிகம். அதிலுஞ் சின்னதுக்கு அதிகஞ் சரீரமுழுதம் அதின் உபத்திரம் மிகுதி. அந்தப்பிள்ளைகளும் ஆத்தாள் பேரில் மிகுந்த தேட்டம். அப்படியே தருமநாதசஞ்சீவிக்கும் அவன் தாயாருக்குமொரு காயிதமெழுதியிருக்கிறான். செபத்தியாயிக்குத்தான் கலியாணத்துக்குப்பின் சிலநாளாத்தாள் தன்கூடயிருந்துதான் மறுவீட்டுக்குப்போகும்போது கூடவரவில்லை என்பது மிகுந்த எண்ணமாம். அவடத்துச் செய்தி உங்கள் தாயார்வந்து சேர்ந்ததுவும் தம்பிமார் மற்றவர்கள் சுகசெய்திகளும் அறியவிரும்புகிறேன். செபத்தியாயி தங்கள் யாவருக்கும் மிகுந்த தாழ்மையாய்த் தோத்திரமும் மற்றபிள்ளைகளுக்கு வாழ்த்தலும் இன்னாசியம்மாளுமப்படியே சொல்லுகிறார்கள். நானுமப்படியே உங்களனைவருக்கும் வாழ்த்தலுஞ் சொல்லுகிறேன். கர்த்தர் நம்மெல்லாரையும் காப்பாராக. தர்மநாதன் உங்களுக்குத் தோத்திரஞ் செய்கிறான். அவன் வெகுசுகமாயும் சந்தோஷமாயும் நேற்று முதற் பள்ளிக்கூடத்துக்குப் போகிறான். கனம் அம்மாளுக்குச் சுகமில்லாதிருந்து இப்போ சுகமாயிருக்கிறார்கள். கனம் ஐயரவர்களும் மற்றுந் துரைமார்களும் மிசியம்மாளுஞ் சுகத்துடனிருக்கிறார்கள். கோட்டையத்திலிருந்த மூத்த துரை ௨௪-௳ வந்திருக்கிறார்கள். வேறுவிசேஷமில்லை. கர்த்தர் கிருபைசெய்வாராக.

௧௲௮௱௫௰௮-௵ இப்படிக்கு
டிசம்பர்மீ ௨௰-௳ இரவு எழுதி முடித்தேன். சவரிராயன்.

---

௨௨-௳ லேயாள் பேதியினால் மரித்தாள்.

௨௩-௳ ௨௪-௳ யிலுஞ் சிலர் வியாதிப்பட்டதில், ௨௫-௳ யிரவில் சுரைகுருபாதம் மகனும் அன்பாயிமகன் ஞானமுத்து மரித்தது.

௨௬-௳ காலை யவர்களை யடக்கம் பண்ணினபின் செபத்தாளென்றவகம் பெண்ணிறந்து மதிய செபத்துக்கு முன்னடக்கம் பண்ணப்பட்டது. ௨௧-௳ ஏசுதாசன் கடிதம் வந்ததில் முருகன்குறிச்சி முதலான விடங்களெல்லாம்



பேதிவார்த்தி மிகுதமென்றுங் கல்விச்சாலையில் உதவிக்காரரில் சமுசாரக்காரர் இரண்டுபேர் யிறந்ததாகவுஞ்செய்தி. ௨௩-௳ ஐயரவர்களுக்குக் கடிதம் வந்ததினால் திருநெல்வேலியில் ஆசுப்பத்திரியில் விஷவியாதியினாலிறந்த கிறிஸ்தவனை முருகன்குறிச்சிக்கு கொண்டுவரவிடாமல் ஷை ஊரார் தடை செய்ததினால் தாசல்தார் கொத்துவால் முதலானவர்கள் போனதுக்கு மீறினதாற் கலெக்கட்டர்துரை தானும் பட்டாளமும் போனவர்களையும் மீறி கற்களால் யெறிந்து கலைப்படுத்தினதினால் ஷை பட்டாள சிப்பாயிகள் சுடவும் அந்தக்கலகக்காரரில் சிரேஸ்தா வீரபத்திரபிள்ளையவர்கள் மகன் முதலான ௨௰௫ பேர் வரை மரித்ததாகவும் கேள்க்கப்பட்டது ௨௪-௳ மாப்பிள்ளை கிளாக்குளத்து சவரிமுத்துப்பிள்ளை நாலுவண்டியுங்கொண்டு மரம் எடுக்கவந்தார். ஷை வண்டிகூட தங்கச்சி ஒத்தேரியம்மாள் மகன் ஞானப்பிரகாசமுமாக இரண்டுபேரும் நமது வீட்டிற் சாப்பிட்டு ௨௪-௳ மதியத்துக்குமேல் போனார்களுநக்கு. ௨௫-௳ மதுரோந்திர ஐயரவர்கள் கடிதம் தமது மனைவிக்கு ௰௭-௳ முதற் குளிருஞ் சுரமும் வந்து இப்போ சுகமென்றும் மற்றுஞ் சுற்றுக்கிராமங்களிலும் உவாந்தி பேதி நடக்கிறதென்றும் வந்தது. ௨௪-௳ செபத்தியாயியையும் மாப்பிள்ளையையும் விருந்துக்கழைத்தோம். மறுநாள் கர்த்தர் பிறந்த பண்டிகையன்று மதியத்துக்குமேல் பிள்ளையவர்கள் வீட்டிலழைத்தார்கள்.

௨௭-௳ சறவிளைமகன் பாக்கியநாதன் ஷை லேயாள் குழந்தையும் ஆ௨ மரித்ததுசாயுங்காலம் கனம்ஐயரவர்கள் தங்கள்பெண்பள்ளிக்கூடத்துக்கு யேசுதாசனை வைக்கமனதுண்டா கலியாணம் எப்போது முடிப்பாய் முடித்தால் நல்லதென்றார்கள் என்னிடத்தில். ஷை வியாகப்ப பிள்ளையை இடையன்குடிக் கனுப்பவும் சம்பளம் ௮-௰ ஆகுமென்றும் அவனைவிட அம்மாளுக்கு மனம் இல்லை யென்றும் அவனவடத்துக்குப்போக மனதிருந்தாலவனை வைத்து வேலைபார்க்க கூடாதென்றுஞ் சொன்னார்கள்.

௩௰-௳ பரமானந்தன் மகன் மரித்தான்.

௩௧-௳ ஞானயுதமகன் மரித்தடக்கம் பண்ணப்பட்டது. இரவில்பிச்சைகுட்டியிருப்பான் மகளிளையவளும் கெங்கம்மாள் மகன் உடையானும் மரித்து மறுநாட்காலையிற் அடக்கஞ்செய்தோம் ஷை ௩௧-௳ யில் வாணம்கம்பம் முதலான வேடிக்கையும். இவ்விதமாய்ச்சந்தோஷத்துடன் மனச்சலிப்புமாக யிருந்ததன்றி கர்த்தர் கிருபையாய் நமது சனத்தை யிரட்சித்து காப்பாற்றி விக்கினமின்றி இந்த ௧௮௫௮-ம்௵த்தை முடிக்கச்செய்த கர்த்தருக்கு ஸ்தோஸ்த்திர முண்டாவதாக ஆமென்.

## ௲௮௱௫௰௯ சனுவரிமீ முதல் சவரிராயன் ரிப்போறட்டு.

௧-௳ காலைச்செபம்பண்ணினது கனம் ஐயரவர்கள். பின்பு ௰-மணிக்கு சந்திப்பு ஷை ஐயரவர்கள் அம்மாள் மக்கள் பெரிய துரை உவ்லியந் துரை மிசியம்மாள் சின்னத்துரை சாயர்புரத்துத் துரையிவ்வளவுபேருமிருந்து சந்தோஷமாய் பின்பு ஊரில்வியாதிக்குளப்பத்தினாலுடனே போகச்சொல்லிவிட்டார்கள்.

௰-௳ வடக்குன்குளம் தம்பி டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் முதலியார்பட்டிச்செட்டியாரும் வந்தார்கள். பிள்ளையவர்கள் வீட்டிற் சாப்பிட்டு ௰௧-௳ மதியத்துக்குப்பின்புபோய்விட்டார்கள். இடையங்குடி பருளம்மாளுக்கும் செபத்தியாயிக்கும் மூப்பிறப்புப் படி ஒவ்வொருவருக்கும் ரூ - ௫ கொடுத்தார்கள். ஷை தேவசகாயம்பிள்ளை முதலானவர்களை மொய்வாங்கவில்லை. ௰-௳ தரித்திரர் சங்கம் உதவிசங்கமுமிவடத்தில் நடப்பித்தோம் பாளையங்கோட்டை சங்கத்துக்குப்போகிறவர்கள் ௰௧-௳ புறப்பட்டுப்போனார்கள். நான் போகவில்லை வாடை வினையனும் தலையிடியுமிருந்ததினால். ௰௨-௳ ஷை சங்கங்கள். மதுரேந்திர ஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளையும் வரவில்லை. பெரும்பத்திலிருந்து ஞானசமரியரன்பிள்ளை வந்ததாகவும் ௰௩-௳ கேள்வி.

௰௪-௳ கோட்டையத்துக்கு சாப்பட்டர் பெரிய துரை பயணம் கூட ஞானப்பிரகாசம்பிள்ளை அமிர்தநாயக உவாத்தியும் திருவனந்தபுரம் மட்டும் போகும்படிக்குப் போனார்கள். இரவில் காரிகோவில் உபதேசியார் தேவசகாயம்பிள்ளை வந்தவர் சொன்னது: அருமைநாயகம்பிள்ளை மனவியும் மூவுள்ள மகன் ஞானமுத்துப்பிள்ளையும் ஷையார் சம்மந்தக்காரன் உபதேசியார் ஞானப்பிரகாசம்பிள்ளையும் பேதியினாலிறந்ததாகச் செய்திகேட்டோம்.

௨௰-௳ வியாளக்கிழமை வியாகப்பபிள்ளையும் மனவியும் வந்தார்கள்.

௨௧-௳ ரூ. ஞானப்பிரகாசம்பிள்ளை குழந்தைக்கு சிட்டியில் கால்சட்டை மேல்ச்சட்டையுந் தைத்து அனுப்பினேன்.

௨௨-௳ வடக்குன்குளம் வியாகப்பபிள்ளையும் செபத்தியாயியும் அவர்கள் வீடுபார்க்கப்போனார்கள் கூட வியாகப்பபிள்ளையும் மனவியும் சேமத்தாளும் மரியவியாகப்பனும் முதலூரிலிருந்துவந்த பெரியநாயகம்பிள்ளை மதினியுங்கூடப்போனார்கள்.

௨௩-௳ கனம் சாப்பட்டரவர்கள் ௩௨ - பேருக்கு ஞானஸ்நானங்கொடுத்தார்கள். நான் யாக்கோவு வைத்தியன் மகன் ஜான்யென்றிக்கும் பனையேறி குருபாதம் மகன் அருள்நாயகத்துக்கும் ஞானத்தகப்பனாயிருந்தேன். கொல்லத்து சாப்ளானாகிய கனம் ஐயரவர்கள் பிரசங்கம் துரை தமிழ் திருப்பினது.



௨௪-௳ ஏசுதாசபிள்ளைக்கு சுரமென்று கேட்டோம். பின்பு பெரியநாயகம்பிள்ளையும் சத்தியநாத நாயக்கரும் பிராமண ஐயனும் வந்தார்கள் பங்களாவில். இரவில் பெரியநாயகம்பிள்ளையும் ௨௫-௳ காலை ஷை பிராமண ஐயரும் சாயந்திரஞ் சத்தியநாத நாயக்கரும் செபம்பண்ணினார்கள். ௨௬-௳ நல்லதம்பி காயிதத்தில் ஏசுதாசபிள்ளைக்குச்சுகமென்றும் முற்றிலுஞ் சுகமாகுமென்றும் கடிதம் வந்ததினால் தெரியவந்தது. ௨௭-௳ வடக்குன்குளத்துக்குப் போன வியாகப்பபிள்ளை முதலானவர்களும் வந்தார்கள். ௨௫-௳ முதல் இன்னாசியம்மாள் சுகயில்லாமற் புறப்பாடுபோல அலகுக்குள் வியாதியுண்டாய் படுத்துக்கொண்டாள்.

௩௧-௳ கனம் ஐயரவர்கள் இளஞ்சிலைக்குப்போனார்கள். செபஞான உப. பெத்திலேகேம்ஊருக்கும் ஞானயுத உப. சுவிசேஷபுரத்துக்கும். நான் சுரண்டைக்குப் போய்வர ௨ - வாரம் உத்தரவு. சுவாமி உபதேசியாருக்குக் காயுதங்கொடுத்து நல்லூருக்கு அனுப்பிவிட்டார்கள். அவர் கடன் ரூ முப்பத்தொன்றேகாலே மாகாணிக்கு விசாரணைப்பிள்ளையவர்கள் உதவியினாலும் உபதேசிவாத்தியாவராலும் தீரப்பட்டது.

பிற்பரவரிமீ ௩-௳ சுரண்டைக்கு நான் புறப்பட்டேன். மதியத்துக்குமேல் நன்னிகுளத்துப் பாதைமார்க்கமாய் இரவில் மூலைக்கரைப்பட்டியில் தங்கி ௪-௳ காலை ௰௧ - மணியிற்போய் முருகன்குறிச்சியில் ஏசுதாசனிடத்திற்போயிருந்து சாயுங்காலந் தபாற்காரன்கூட சேதபற்பநல்லூர் சத்திரத்திற்தங்கினேன். விடியற்காலம் ௫-௳ நல்லூரில்தம்பிமரியசவரிமுத்துப்பிள்ளையைக்கண்டுபேசிக்கொண்டபின் சுரண்டையில் ௰ - மணிக்குப்பின் சேர்ந்து எல்லாரையுங்கண்டு கர்த்தருக்குள் சந்தோஷமானேன். சாயுங்காலம் கனம் வால்பி ஐயரவர்களையும் அம்மாளவர்களையும் கண்டேன்.

௬-௳ ஓய்வுநாளை யாசரித்தோம்.

௭-௳ சிறியவபுத்தூரிலிருந்து சாக்கு உவாத்தியார் வந்தார். ௮-௳ அவர் மச்சினன் பேரின்பமுத்துபதேசியார் வந்தாரவரைத்தேடி. ௯-௳ அவர்களிரண்டுபேரும் சாயந்திரம்போனார்கள் சாத்தன்குளத்துக்கு. பின்பு மரியம்மாளுக்குச் சாருங்கழுத்துப்பிடியுங் குத்துமுண்டாயிருந்தது.

௰-௳யில் சற்று வாசியாயிருந்ததினாற் பேசவேண்டிய காரியங்களெல்லாம் பேசிக்கொண்டு ௰௧-௳யிற் புலவனூர் மார்க்கமாய்வரப் புறப்பட்டோம். எனக்கு ஒருசவடி வேட்டியும் அவர்கள் தாய்க்கு பட்டுக்கோட்டைச் சேலையும் வாணத்தார்ச்சேலை ஒன்றும்ரொக்கம் ௹ ௰-ங் கொடுத்துச்செபம்பண்ணின பின்பு எல்லாரையும் அனுப்பிக்கொண்டு தருமநாதபிள்ளையுடனேகூட புலவனூருக்கு இரவில் ௮-மணி நேரத்தில்வந்து சேர்ந்தோம். ௰௨-௳ அங்கிருந்து ஆகவேண்டியதெல்லாம்செய்துவண்டில்கிடையாது. ௰௩-௳ ஓய்வுநாளிரண்டுதரங்கோவிலிற் செபஞ்செய்தேன். மரியசவரிமுத்துப்பிள்ளை பிரசங்கம் மதியம். சகாயனுபதேசியார் என்னைப்பார்க்கவும்செய்தியறிவிக்கவும் வந்தார். அவருக்கு கனம் கிளார்க்கு ஐயரவர்கள் உத்தரவு சமுசாரத்துடன் நல்லூரில்வந்திருக்கவும் பட்டணத்திலிருந்து உத்தரவுவந்தபின் ஒரு கிராமத்துக்கு அனுப்பலாமென்றதினால் கூடவரவந்தார்.

௰௪-௳ கூடப்புறப்பட்டுச் சீவலசமுத்திரமென்னும் ஊரில்வந்து தங்கினோம், அந்த ஊர் உபதேசியாரும் அவர் மனவியும் நல்லவர்கள் அன்பாய் விசாரித்தார்கள்.

௰௫-௳ வழியில்வரும்போது சுரமுண்டானதினாற் கூடவந்தவர்களும் நானுங் கருசற்குளத்தில் சங்கரநாராயணபிள்ளைவீட்டில்வந்திருந்து சாயுங்காலம் முருகன்குறிச்சிக்கு வந்து தெய்வசகாயம்பிள்ளையவர்கள் வீட்டுக்குப் போய்த்தங்கினோம்.

௰௬-௳ சுவிசேஷபுரத்துக்கு காயிதமனுப்பினேன்நாளதிகப்பட்டுப்போகுமென்று. ௰௭-௳யில் தங்கி, ௰௮-௳ புறப்பட்டு ௰௯-௳ காலையில்வந்து சேர்ந்தேன்.

௨௫-௳ வியாளக்கிழமை மாப்பிள்ளை முனிசப்பிள்ளையவர்கள் வந்தார்கள். ௫௬-௵ சுலாய்மீ வந்த தன்சமுசாரத்தை யழைக்க வந்தவர்கள் ௨௬-௳ விடியற்காலம் ஷெ. சமுசாரங் குழந்தைகளை யழைத்துப்போனார்கள்.

௨௭-௳ சாயுங்காலஞ் செபத்தியாயியும் மேலவீட்டுப்பிள்ளைகளுங் கூட இளஞ்சுனைக்குப்போனார்கள்.

௲௮௫௯-௵ மார்சுமீ ௨-௳ ஏசுதாசபிள்ளை காயுதம் தான் சுரண்டைக்குப்போகிறதாயும் ஷெயார் ௹ ௫-ம் வந்தது.

௪-௳ பிள்ளையவர்களிடத்தில் கேட்டுச் சந்தைக்குப்போனேன் திசையன்விளைக்கு.

௬-௳ அதிசயபுரத்துக்கு ராப்போசனத்துக்குப்போய் என்சமுசாரத்துக்கு சுகமில்லாததினால் வந்துவிட்டேன்.

173



௭-௳ சம்பளத்துக்குப்போகவில்லை.

௮-௳ இளஞ்சுனைக்குப்போனேன் சம்பளத்துக்கு. செபத்தியாயி வீட்டிற் பிள்ளையவர்களுங்கூட வந்தவர்களுஞ்சாப்பிட்டோம். ௯-௳ காலமே புறப்பட்டு வந்தேன். நாற்பதுநாள்த் துவக்கமானதினால் ஆராதனைசெய்தோம்.

௰௨-௳ பெரும்பனைக்குச் செபம்பண்ணப் போகுமுன் மதுரேந்திர ஐயர் கடிதமவர்களத்தானவர்களுக்கு வந்ததில் ஞானப்பிரகாசம் பிள்ளைக்குக் கலியாணமுடிக்க தங்கள்மனதுக்கிசைந்த இடத்தில் பெண்விசாரித்துச்செய்து கொள்ளவு மென்றுவந்தது. ௰௫-௳யில் எனக்குவந்த காயிதத்திலவர்கள்குதிரையை விற்றுப்போடவும் பிள்ளைகளைச் சிரிவலபுத்தூருக்கு படிக்கும்படி அனுப்புகிறதாகவும் எழுதியிருந்தது.

௨௫-௳ யில் என்சமுசாரத்துக்கு மஞ்சள்காமாலைவியாதி அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறதென்றும் உதவிக்கு ஆளில்லையென்றும் விசாரணைப்பிள்ளை எழுதினதறிந்து இளஞ்சுனையிலிருந்த என்பேத்தியார் செபத்தியாயி வருகிற ஆள்க்கூடவந்தாள்.

ஏப்ரில்மீ ௧-௳ முதல் நாளுக்குநாள் சற்றுலகுவாய் ஷெ. வியாதிக்கு உள்ளுக்குமருந்துந் தப்பளமுஞ் செய்து தயிலம் வைத்து முழுகி வரவர ௰-௳ நீர்மஞ்சள்நிறமாறிச் சுத்தமாயிற்று.

---

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவயிரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். தாங்கள் ௨௧-௳ யெழுதியது ௩௧-௳ வந்துசேர்ந்ததினாற் சகலமுமறிந்தோம். தாங்கள் பலகவலைப்பட்டதினாற் பலவீனமாயிருக்கிறதுபோல இனிமேலும் கவலைப்படாமலிருந்து காரியங்களை யெல்லாங்கர்த்தரின்கையில் ஒப்புவித்துத் திடமனதாயிருக்கவேண்டியது. உங்கள் தாயாருக்கு தம்பி தேவசகாயம் பிள்ளை டாக்கிட்டர் எழுதியனுப்பியபடிக்கு ௩-நாள் உள்ளுக்கும் தலைக்குத்தப்பளம் ௩-நாளும்போட்டு பின்பு கொடப்பைத் தயிலமும்வைத்து முழுகியப்பேசது ஷெ. வியாதி அனாவாசி சுகமாயிற்று. முற்றிலுங் கர்த்தர் தமது கிருபையினாலுந் தங்கள் வேண்டுதலினாலுஞ் சுகமாகிப்போகுமென்றும் நம்பிக்கையாயிருக்கிறோம். கீழ்காய் நெல்லித் தயிலமும் வைக்கவும் முழுகவும்வேண்டிய எத்தனஞ்செய்கிறோம்.

செபத்தியாயி பேத்தியாருக்குச் சுகமில்லையென்று அதிக மதிகமாய்த்

துக்கப்பட்டுவருகிற ஆள்க்கள்கூடப்புறப்பட்டுப் போனமீ ௨௯-௳ வந்து சேர்ந்துதவிசெய்தாள். அதுவரையிலெனக்குத்தான் அதிகவேலை. இனி மேற் சுகமான உடனேவருகிற வாரத்திற்போவாள். வடக்குன்குளத்தில் விசாரணைப்பிள்ளையவர்கள்மருமகள் புருஷனிறந்துபோனார். கடப்பில் வியாதிப்பட்டிருந்ததினால் பேதியில். தக்கிடியாம்பிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை மகள் இளையவள் ஒருகால் முடமாயிருந்தவளும் பசுவந்தனைத் தேவசகாயம் மகள்சிறுபிள்ளை ஒன்றுஞ்செத்ததாம். மற்றயாவருஞ் சேமம். இவடத்திலும் இளஞ்சுனையிலும் கனம் ஐயரவர்கள் அம்மாளவர்கள் துரை முதலான யாவரும் நம்முடையவர்களும் இடையங்குடி சாமுவேல் பிள்ளையும் அருளம்மாளுமவர்கள் தாயாருஞ் சேமம். வேறு விசேஷமில்லை. கர்த்தர் உங்களனைவரையும் காப்பாற்றுவாராக. தம்பி ஏசுதாசபிள்ளை முருகன்குறிச்சிக்கு வந்த உடனே காகிதமனுப்பவும். புலவனூர்த் தம்பிக்கும் அவர் சுகசெய்திக்குமெழுதவும் உத்தரவாகவேண்டியது. நாங்கள் உங்களுக்கும் பிள்ளைகள் யாவருக்கும் வாழ்த்தலும் தங்கச்சி செபத்தியாயி யிருந்த தாழ்மையாய்த் தோத்திரமும் வாழ்த்தலுஞ் சொல்லுகிறோம்.

௲௮௱௫௯-௵ ஏப்பிரல்மீ ௬-௳ — இப்படிக்கு சவரிராயன்.

[இவை சான்லடையிலிருக்கும் கனம் மதுரோந்திர ஐயரவர்களுக்கு வருவது.]

---

௮-௳ ஷை செபத்தியாயி மாப்பிள்ளை வந்திருந்து ௰௧-௳ இளஞ்சுனைக்குப்போனார்கள். கூடத்தருமகாத்தசஞ்சீவியும் போனான். வடக்குன்குளத்து ஞானசமரியாம் பிள்ளை மரித்த அட்டிக்கு ௱ - ஸ்ரீ விசாரணைப்பிள்ளை ௯-௳ புறப்பட்டு ௭-௳ போயுடனே கிராமவிசாரணைக்குப்போய்வந்தார்கள் ௰௩-௳ இரவில்.

௰௪-௳ ஏசுதாசபிள்ளை காயிதத்தில் ௱ - ஸ்ரீ ஞானவுயிர்ப்பிள்ளை மகள் பாக்கியம் மரித்ததாகவந்தது.

௨௧-௳ காலை கனம் ஐயரவர்களுந் துரையும் வந்தார்கள்.

௨௨-௳ கிறிஸ்து பாடுபட்ட திருநாள். செபம் பிரசங்கம் கனம் ஐயரவர்களுந் துரையும்.

௨௪-௳ உயிர்த்தெழுந்தநாள் மதியம் ராப்போசனம் எல்லாச் சேகரத்தாருக்கும். பவுல்ஐயர் உதவிக்குவந்திருந்தது. வியாகப்பபிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளையும் வந்தார்கள்.



௨௫-௳ சம்பளக்கூடுதல் உபதேசி உவாத்தி உவாத்திச்சிகள்க்கும் அன்பின்விருந்து இரண்டுவேளையும் கடாய்க்கறி சமையல்.

௨௬-௳ கனம் ஐயரவர்களும் ௨௩-௳ இரவில்வந்த அம்மாளும் மிஸியம்மாளுங்கூடப்போனார்கள். ௨௭-௳ சம்பளங்கொடுத்துத் தீர்ந்தது. கனம் துரைபோனார் இளஞ்சுனைக்கு. ஷை சாமுவேல்ப்பிள்ளையும் வியாகப்பபிள்ளை ஞானப்பிரகாசம்பிள்ளை இடையங்குடிக்குப்போனார்கள். ஷை ஞானப்பிரகாசம்பிள்ளை சீர்மைக்குப்போகவேண்டுமென்ற பேச்சை நிறுத்தும்படி பிரயாசப்பட்டுப்புத்திசொல்லி நிறுத்தினோம். ஏலியோன் சரித்திரபுஸ்தகம் வாசித்துப் புத்திசொல்லும்படி புதன்கிழமைதோறுமென்று ஐயருத்தரவும்படிக்கு மேய்மீ ௪-௳ புதன்கிழமையிற் துவக்கினோம்.

---

+

பிரியமுள்ள தம்பி ரு. ஞானப்பிரகாசம்பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருந் தேவகிருபையினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். உங்கள் தாயாருக்கு யிருந்த வருத்தமுண்டாயிருந்து பலமருந்துகள்செய்தும்வருகிறசமயத்தில் மார்ச்சுமீ ௨௫-௳ தமக்கு ஒரு ஓலையும் எழுதி ௲ ௰௪ - ம் டோனூர்பெரிய மனிசி பரிபூரணத்து வசமாயனுப்பினேன். அதின்பின்பு ஷை உங்கள் தாயாருக்கு எனக்கும் உதவிக்காளில்லாததினாலும் பத்தியபாக அன்னப்பாவும் ஷை மருந்துந் தலைக்கு தப்பளந்தாரையூத்து, எண்ணெயிற் தயிலம் முதலான மருந்துகளுஞ்செய்கிறதுக்கு விசாரப்பட்டுத் தமக்கு எழுதி அன்னம்மாளும் இருவரும்வரும்படிக்கு ஆளனுப்பஎத்தனமாயிருக்கையில் ஷை ௨௬-௳ சனிக்கிழமையில் ஷை காரியங்களெல்லாம் இளஞ்சுனையிலிருந்த நமது செபத்தியாயி கேள்விப்பட்டு உடனேவந்து சேர்ந்தாள். அவள் வந்ததினாலும் உமக்குக்கனம் ஐயரவர்கள் உத்தரவு கிடைக்குமோ கிடையாதோவென்பதினாலும் உங்களண்ணாச்சி ௱ - ஸ்ரீ ஆபிரகாம்பிள்ளையவர்களும் கனம் ஐயரவர்களுக்கு அறிவித்து உத்தரவுக்கு ஒருவேளை உதவிசெய்வார்களோ என்னமோவென்றும் உத்தரவு கிடைக்காவிட்டால் இவடத்து வருத்தத்தை யறிந்தால் நீரும் அன்னம்மாளும் கிலேசப்பட்டு மயங்க ஏதுவாயுமிருக்குமென்றும் உமக்கிதுவகையான செய்தியனுப்பவுமில்லை. ஆனாலும் தேவகிருபையினாலே நாங்கள்செய்த பிரயத்தனமான மருந்துகளால் நானது ஏப்பிரல்மீ ௧-௳ முதல் நாளுக்கு நாளாய்ச்சுகப்பட்டு ௮-௳ வரையில் நல்லசுகமாக

ய் கண்ணும் நீரும் மஞ்சள் நிறமுமாயிச்சுகமாயிற்று. ௰௨ ஷெ செபத்தியாயி இளஞ்சுனைக்குப்போனாள். அதுமுதலிதுவரையில் நல்லசுகமாயுமது தாயார் கூடமாடித் திரிகிறாள் வீடுமட்டும். நானுமவளுக்குவேண்டிய உதவி செய்து சாப்பாடும் தலைமுழுக்கும் நடந்துவருகிறது. ஆனாலிவடத்துக் காரியமிப்படியிருந்தும்உங்களைப்பற்றிய கவலைகள் அதிகமாயிருக்கிறது. தாமிதுவரையும் இவடத்துச் சுகத்தையும் அவடத்துச் சுகத்தையுமாவது அறிய ஒரு ஆளாவது ஓலையாவது அனுப்பாதிருந்துவிட்ட காரணம் தெரியாததே அதிகக்கவலை. ஷெ ரூ ௰௩-ம் வந்திருக்குமென்று நம்புகிறோம். அதற்கு நெல்லை எத்தனை ரூ கோட்டையொன்றுக்கென்பது தெரியாதிருனால் ௩ —கோட்டை நெல்லுக்கும் ஷெ நெல்லிவடத்துக்குவர வண்டிவாடகைக்கும் மறுபடி ரூ யனுப்பத்திட்டந்தெரியவில்லை. ஆகிலுமிவடத்தில் ௩-ரூ, நாலே அரைக்கால், ௩ஷ ஆக விற்கிறதாகக் கேள்வி. விசையபாருமணத்திலும் அப்படியென்றும் கேள்வி. சுரண்டையிலிருந்து கடிதம்வந்ததில் யாவருஞ் சேமம். அவடத்தில் நெல்லை ரூ௧, ரூ௩-க்கும் விற்கிறதாகவும் நல்லமழைகள்பெய்து சகலமும் மறுபடியும் மறுபடியும் விளைவாகிறதற்கு மேதுவாயிருக்கிறதென்றும் எழுதியிருந்தது. கல்லூர் புலவனூர் தம்பி சவரிமுத்துப்பிள்ளையுமப்படியே எழுதி யுங்களையும் விசாரிக்கிறார்கள். தம்பி யேசுதாசபிள்ளையும் முருகன்குறிச்சியில்வந்து சுகத்துடன் வேலைபார்க்கிறார். ஷெ இன்னாசியம்மாளுங் குழந்தைகளும் முனிசுப் பிள்ளையவர்கள் விசாரணைக்குள் சுகமாயிருக்கிறார்களாம். வியாகப்பபிள்ளை முருகன்குறிச்சியில் தமக்கு வீடுகெட்டுகிறதிற் சாக்கிரதையாயிருக்கிறதும் இவடத்திலிருந்து ஷெ வீட்டுக்கு நிலைகள் சன்னல் நிலைகளுஞ் சருராய் வேலைசெய்தனுப்பப்படுகிறது. இடையன்குடிச் சாமுவேல்பிள்ளையும் அருளம்மாள் முதலானவர்களும் இளஞ்சுனையிலிருக்கிற ஞானப்பிரகாசம் பிள்ளை முதலானவர்களும் வியாகப்பபிள்ளை செபத்தியாயிதருமகாதசஞ்சீவி முதலானயாவரும் சேமமாயிருக்கிறார்கள். இவடத்திலும் மழையுமுண்டு. குளப்பெருக்கில்லை. குளிர்ச்சிதான். மீண்டிடாது அவடத்தில்கறிக்குவருத்தமாயிருக்குமேஎன்றுஇவடத்திலிருந்து உதவுகிறது ஒன்றுஞ்சாளேனும். ஒரு ரூ கொடுத்தனுப்பினால் உப்புக்கண்டம் போட்டனுப்பலாமென்றும் நினைக்கிறோம். கனம் முத்துசுவாமி ஐயரவர்களும் அம்மாள் முதலானவர்களுடைய சுகசெய்தியும் ஷெ அம்மாள் குழந்தை பெற்றதும் ஏ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்களுமவர்கள் வீட்டாரும் சேமமாயிருக்கிறதையும் அறியவிரும்புகிறோம். நம்முடைய சின்னப் பிள்ளையைக்காண மிகுந்த ஆவலாயிருக்கிறது. அவனுடைய பேச்சுஞ் சிரிப்பும்



நடையும் பார்க்கவிரும்புகிறோம். அவனுக்குப்பேத்தியாள் அனேகமுத்தஞ் செய்கிறதாகச்சொல்லவும். நாங்கள் எல்லாருக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறோங் கர்த்தர் எல்லாரையும் இதுவரையும்பலதுன்பத்திலும் காத்ததற்காகத் தோத்திரஞ்செய்வோமாக.

எப்பிரல்மீ ௰௯-ௗ எழுதினது. இவடத்தில் ஆள்கிடைக்கவில்லை யிதினால்த் தாமதித்தது. மேலே யெழுதினிப்பொழுது. நெல்விலை மலிவுண்டாயிருக்கிறது. தருமகாதசஞ்சீவி வந்திருக்கிறான். சாமுவேல்பிள்ளையும் வியாகப்பபிள்ளையும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் இவடத்துக்கு உயிர்த்தெழுந்த பண்டிகையிலிங்கிருந்து பின்பு புதன்கிழமையிற்போனார்கள். இப்பொழுது செபத்தியாயிக்கு இது ஆறுமாசக்கெர்ப்பம். ஷெ அருளம்மாளுக்குமப்படித்தான். கனம் சாப்பட்டர் துரை சீர்மைக்குப் பட்டம்பெறப்போகிறதாயிருக்கிறது ஜூன்மீ. ௮-நாள் மழை யிவடத்தில் குளங்களும்பெருகிற்று. குளிர்ச்சியும் பிற்பயிர் செய்யவும் மாட்டுக்கு மேய்ச்சலும் குறைவில்லை. பதிநீர்குறை ஒன்றுண்டு. ஞானப்பிரகாசம்பிள்ளை ஷெ துரைகூடச் சீர்மைக்குப்போவேனென்று துடர்ந்தான். அதற்கு வேண்டிய புத்திசொல்லி நிறுத்தியிருக்கிறது. திசையன்விளையில் சர்க்கார் பள்ளிக்கூடமாக இங்கிலீசுப்பள்ளிக்கூடம் ஸ்தாபித்து அதற்கு வியாகப்பபிள்ளையை உபாத்தியாயராகவும்வைக்கத் திட்டஞ்செய்ய யோசித்திருக்கிறார்கள் கனம் ஐயரவர்கள். அந்தப்படிக்குமாகும். இப்பொழுது காகிதங்கொண்டுவருகிறவனை யிதுமுன்வழக்கப்படி ௩-துட்டுப் போகமாட்டேனென்று ௨௰-நாளாய்க்கடத்தி யிப்பொழுது ஏ-துட்டுக்கொடுத்துத் தீர்த்து இன்று சம்மதித்தனுப்பினேன். ஆகையாலவனுக்குச் சாப்பாடு யாதொன்றுங்கொடாமல் நெல்விலையும் தாம் எப்பொழுது நெல்லனுப்புகிறது என்பதும் எழுதியனுப்பிவிடவும். இனிமேல் நெல்மலியுமென்று தாமதஞ்செய்யாமல் விற்கிற விலைக்குவாங்கித்துரிதத்தில் அனுப்பவும். உமக்குளவ்விதமும் உத்தரவுவாங்கிக்கூடவந்துங்கள் தாயாரையும்பார்த்துக்கொண்டுபோகவேண்டியது. மற்றுங்காரியங்களெல்லாமுகதாவிற்பேசலாமென்றுமிகுந்தஆசையாயிருக்கிறோம்.

கர்த்தர் கிருபைசெய்து காப்பாற்றுவாராக. இப்பொழுது ரூ ௨ அனுப்பியிருக்கிறது. நெல் இப்பொழுது வாங்கியனுப்பக்கூடாதிருந்தாலிவடத்திலுமந்த விலைக்கு வாங்கலாம். நல்லநெல்லாயிராது. ஆக உமக்கனுப்பு ரூ ௰௯-ம் வந்ததுக்குஞ் செலவுக்கும் எழுதவும்வேண்டியது.

௲௮௱௫௰௯-ஞு } இப்படிக்கு
மெய்மீ ௯-ௗ } சவரிராயன்.

[இது பெரும்பற்றிலிருக்கும் பிரியமுள்ள தம்பி கு. ஞானப்பிரகாசம் பிள்ளை உபதேசியாருக்கு வருவது.]

௫௯-௵ மேய்மீ ௫-௳ சந்தைக்குப் போய்வந்தேன்.

௬-௳ ஞானசமரியான்பிள்ளை கடிதம் வந்ததில் முத்துசுவாமி ஐயர்சமுசாரம் ஒருஆண்குழந்தைபெற்றதாயும் அவர்கள் மதினி தருமவடிவு பார்க்கப் போனதாயும் ஆபிரகாம்பிள்ளைமகன் மூந்தினமீ சனமந்திருக்கிறதாயும் அவள்க்குத் துணையாயிருந்து மற்றக்குழந்தைகளையும் விசாரித்துத் தருமவடிவு வரும்வரையில் அவடத்திலிருக்கும்படியாயும் ஷை யோர் சமுசாரம் அன்னம்மாள் பேறுஆநருக்குப்போயிருக்கிறதாயும் எழுதினார். ஷை சனமந்த பெண்ணுக்கு ௩ ௪௳-விற் சிலவும் கொடுத்ததாம்.

---

+

கர்த்தர்தமதாவியின் வரப்பிரசாதத்தால் நடத்துவாராக.

இவடத்தில் யாவரும் தேவஇரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதி சயங்களையும் அறிய மிகவும் விருப்பமாயிருக்கிறோம். தம்பி இயேசுதாசபிள்ளை வரும்போது எழுதிய காயிதத்துக்குப்பின்னிதுவரையும் தங்கள்காகிதம் வரவில்லையென்பதினால் மிகவும் விசாரப்படுகிறோம். இவடத்தில் போனமீ உ௪-௳ முதல் கனம் ஐயரவர்களும் துரையும் மிசியும் பெரியம்மாளும் வந்திருந்து பண்டிகைகொண்டாடி உ௫-௳ உபதேசிமார், உவாத்தி, உவாத்திச்சிகள் யாவருக்கும் அன்பின் விருந்தென்றுகடாய்கள் அறுத்து விருந்துசெய்தார்கள். என்னையுங்கூடக் குறித்திருக்கிறதாகத் துரையவர்கள் சொன்னார்கள். மற்றப்பிள்ளைமார் ௯-பேரும் அதிற் சேராததினால் நானுமதிற் சேரவில்லை. செபத்தியாயியும் மாப்பிள்ளையும் சேமத்தான் முதலான பிள்ளைகளும் இளஞ்சுனையிலிருந்தும் சாமுவேல்ப்பிள்ளையும் அவர் வீட்டார்களும் பண்டிகையிலிவடத்துக்கு விருந்துக்கு வரும்படிக்கு ௱-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் கடிதமெழுதி முன்னாடியனுப்பினதற்கு ஷை சாமுவேல்ப்பிள்ளை தமது சமுசாரம் வரக்கூடாது உத்தரவுபோல நடந்துகொள்ளுகிறேனென்று எழுதினதினால் இளஞ்சுனைக்கு வண்டியனுப்பாமலிருந்தவர்களையும் அழைக்கவில்லை. ராப்போசனத்துக்காகவும் சம்பளக்கூடுதலுக்காகவும் வியாகப்பபிள்ளையும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வந்தார்கள். சாமுவேல்ப்பிள்ளை ஷை உ௫-௳ வந்தார். பிள்ளையவர்கள் வீட்டில்த்தானிருக்கு உஎ-௳ உங்கள் தாயாரைக்கூட வரச்சொல்லி விரும்பினார். அவளிப்போ சுகமாய்க்கொஞ்சகாலமானதினால்ப் போகவில்லை. துரையவர்கள் சீர்மைக்குப்பட்டம் பெறும்படி போகிறவர்கள்கூட ஷை ஞானப்பிரகாசம்பிள்ளை போகவேண்டுமென்று யோசனைசெய்ததை ஷை துரையும் ஐயரவர்



கள் நாங்கள் யாவருந்தடுத்து நிறுத்தினோம். இவடத்திலும் ஷை பண்டிகைக்கனிக்கரிநும் பின்னுமுன்னுமாக ௰-௳ - நாள்க்குறிகம் மழைபெய்து குளங்களும் பெருகிற்று. இப்பொழுது இவடத்தில் காய்ச்சல் மிகுதியாயிருக்குமின்னம் மெய்சாற்றுயில்லையானதால் அவடத்திலிப்பொழுதெப்படியிருக்குமோ. நம்முடையபிள்ளைகள் திருச்செந்தூரிலிருந்து சுகத்துடன் அவடத்துக்குவந்து சேர்ந்ததாகவும் சுரண்டைத் தபால்வரவில்லையென்றார்தம்பி ஏசுதாசபிள்ளை ௱ உ-௳ எழுதினான். அவனுக்குத்தன் சிலவினால் வஸ்திரச் சிலவுசெய்யக் கனம் ஐயரவர்களுத்தரவு என்றும் எழுதினான். பெரும்பத்துத் தம்பியும் சமுசாரங் குழந்தைகளுஞ் சுகமாயிருக்கிறதாக எ-௳ காயிதம்வந்தது. அவடத்திலும் விசயநாராயணத்திலும் நெல்கோட்டை க-க்கு ௩ ௪-ம் ௪௳-மாயிருக்கிறது. ௱-ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு மிந்த வருசம் நெல் விளைச்சற்குறைவில்லை. நாட்டு சற்று எல்லாவஸ்தும் அதிகதாழ்வில்லையென்று நினைக்க யேதுவுண்டு. கனம் முத்துசுவாமி ஐயருக்கு இப்போது ஒரு ஆண்குழந்தை பிறந்ததாயும் அவர்கள் சமுசாரத்துக்கு கொஞ்சம் சுகமில்லையென்றுங்கேள்வி. வேறுவிசேஷமில்லை. வியாகப்பபிள்ளைக்குத்திசையன்விளையில் இங்கிலீசுப்பள்ளிக்கூடம் வைத்துச் சர்க்கார் சம்பளமுமாக்கிவைக்கிறதுக்கென்று கனம் காப்பட்டய்யரவர்கள் பிரயத்தனஞ்செய்கிறார்கள். சுவிசேஷபுரம் ஊருக்குத் தெற்கே ஒரு சத்திரங்கட்ட எத்தனமாயிற்று. நமதுசெபத்தியாயியை நம்முடைய வீட்டிலும் அருளம்மாளையவர்கள் வீட்டிலும் பேறுகாலத்துக்கழைத்துக்கொள்ளுகிறதென்று பிள்ளையவர்கள் தீர்மானம். இதற்குமுன்னொரு காயிதம் தம்பி சவரிமுத்துப்பிள்ளைக்குந் தங்களுக்குமெழுதினேன். சவரி ஞானதேசியாரிதுவரையு மிவடத்துக்கு காயிதமெழுதவில்லை யவருடையசெய்தி ஒன்றுந்தெரியவில்லை. உங்கள் தாயாரிந்த வருஷம் நன்றாய் மரணத்துக்குத்தப்பினாள். இப்போதெல்லாவேலையும் அவள்தான்பார்க்கிறாள். சிரிவைகுந்தூரிலிருக்கிற பிள்ளைகள் கடிதம்வந்ததா. அவர்கள் சுகத்தையும் அறியவிரும்புகிறோம். நமது குதிரை விற்றதா நிற்கிறதா. தம்பி பசுமாட்டை விலைக்குக்கொண்டுபோனதால் நமக்குப்பாலுக்கு மாடில்லையே அதின் காரணமென்ன. ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் உங்களுக்கு யோசனையாக உறுட்டாப்பிறட்டாய் எவ்விதத்திலுமலிந்த வேளைகளில் நெல் முதலானதுக்குத் தடையில்லாமல் வாங்கிக்கொள்ளவேண்டியது, அப்படிச்செய்ய அவர்களுக்கு மனமிராதுயென்றார்கள். நானுஞ்செபத்தியாயியும் அப்படித்தான். ௫ கோட்டை நெல்லுக்குப்பணம்கொடுத்தோம். தருமநாதசஞ்சீவி யிவடத்தி

ல்த்தானிருக்கிறான். தங்கச்சி யின்னாசியம்மாள் குழந்தைகள் சுகசேரும் தம்பி மூலமாய்த்தங்களுக்குத் தெரியும். வேறுவிசேஷமில்லை. நாங்களுங்களுக்கும் அம்மாளுக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்த்தலும் செபத்தியாயி உங்களெல்லாருக்குந் தோத்திரமும் வாழ்த்தலுஞ் சொல்லுகிறோம். கர்த்தர் எல்லாரையும் காப்பாராக.

௲௮௱௫௰௩ம் ௵ — இப்படிக்கு
மேய்௴ ௩-௳ — சவரிராயன்.

[இது சாண்டையிலிருக்குங் கனம் மதுரேந்திர ஐயரவர்களுக்கு வருவது.]

---

௰-௳ முதல் எனக்கு வாய்வு கழிச்சலுமிளைச்சலும் சாப்பாடு வெறுப்புமிருந்து ௰௨-௳ வரை மருந்துசாப்பிட்டுஞ் சுகமில்லை.

௰௩-௳ வியாகப்பபிள்ளையும் சத்தியநாதனென்ற ஒருபையனும் சாராயமுங்குடித்து உவாத்திமார் கல்விச்சாலையின் பங்களாவில் நிற்கிற தென்னமரத்திற் தேங்காய் பறித்ததாயும் அதைக்கண்டுபிடித்து கனம் இஸ்பிராற்றய்யரவர்கள் போலீசுக்கு ஷை வியாகப்பபிள்ளையை விட்டு மற்றவனையனுப்பினதாய்க் கேள்வி. ௰௪-௳ ஏசுதாசபிள்ளை கடிதத்தில் ஷை வியாகப்பபிள்ளை அலுவலை இராசிநாமாக் கொடுத்ததாக வந்தது. சாயந்திரம் நாலாந்தலா முத்துசுவாமியாபிள்ளை மகள் பொன்னம்மையைக் கலியாணமுடித்தமாப்பிள்ளைவிசாரணைப்பிள்ளையவர்கள் வீட்டுக்கு வந்தவருக்கூட அவர்கள் மனவியார் சுருளாகவைத்தது.

௰௮-௳ பிள்ளையவர்களிடத்தில் கேட்டுக்கொண்டு இடையங்குடி சாமுவேல்பிள்ளையவர்கள் வீட்டுக்குப்போயிருந்து ௨௰-௳ விடியவந்தேன்.

௨௨-௳ வடக்குன்குளத்திலிருந்து தம்பி டாக்கிட்டர் தேவசகாயம்பிள்ளையும் சிரிவைகுண்டம் தேவசகாயம்பிள்ளையும் வந்து ௨௩-௳ விசாரணை சவரிமுத்துப்பிள்ளையவர்களிடத்தில் வீட்டு விலை ரூ ௱-ங்கொடுத்து முறியும் எழுதிவாங்கிக்கொண்டு போனார்கள். ஷை முறிக்கு அறிவுசாட்சிக்கு கையெழுத்தும் நான் போட்டேன். நாலாந்தலா ஆவத்துக்காத்தபிள்ளை குமாரர் தாயாதிவிருத்திக்கருர்ாமா உடன்படிக்கைக்கும் அறிவுசாட்சிபோட்டேன்.

௨௪-௳ மணியாபிரகாமகள் கலியாணத்துக்கு இளஞ்சுனைக்கு உதவி உபதேசியார் போனார். என்சமுசாரமும் தருமநாதசஞ்சீவியும் இடையங்குடியிருப்புக்குப்போனார்கள்.

௨௫-௳ இளஞ்சுனையிலிருந்து துரையவர்கள் வந்தார்கள். இரவில் பு



தன்கிழமை ஆராதனைசெய்து ௨௩-௳ போய்விட்டார்கள்.

௨௬-௳ ஆசீர்வாதபுரத்திலிருந்து வந்த ஆள்மூலமாய் அவடத்திற் சின்னம்மாள் பேறுகாலத்துக்கு வந்திருந்து ஷை யாளுக்குப் பேறுகால வருத்தமுண்டாகிறதாகவும் அறிந்தோம் இரவில். ௨௮-௳ விடிய ஆண்குழந்தைபிறந்ததாகக்கேள்வி.

௩௰-௳ வடக்குன்குளம் மாப்பிள்ளை இன்னாசிமுத்துப்பிள்ளை வந்தார் ௩-௳ பாளையங்கோட்டைக்குப்போனார்.

ஜூன்௴ ௨-௳ பெருப்பத்துக்கு நெல்வாங்க ரூ ௨௧ கொடுத்து இரண்டுவேண்டியும் ஓலையும்எழுதியனுப்பினேன்.

௪-௳ இளஞ்சுனையிலிருந்து செபத்தியாயியும் மாப்பிள்ளையும் வந்தார்கள். ௩-௳ பங்களாவுக்குப்போனார்கள். ஷை பெரும்பத்து தம்பி குசைமரியாம்பிள்ளை யிடத்தில் முன்னாடி மாற்கு௴ ௨௫-௳ ௪-கோட்டை நெல்லுக்குப் பணத்தையனுப்பியிருக்கஅவர் மலிவில்வாங்கியனுப்பாமல் ஷைஜுன்௴ ௪-௳ விற்கிறவிலைக்கு வாங்கியனுப்பினார்.

௰௩-௳ இரவிற் கனம் சாப்பட்டர் ஐயரவர்கள் செய்தி காயிதம் வாசித்ததில் ௰௫-ம் வெள்ளைக்காரரும் ஒருகுருவும் பாப்புமார்க்கத்தை விட்டு சுவிசேஷமார்க்கத்தைச் சேர்ந்ததாக எழுதிவந்ததென்று சபையாருக் கறிவித்தார்கள் செபத்தில்.

௨௰-௳ கனம் ஐயரவர்களிடத்திலவந்திருந்த துலுக்கப்பிள்ளை பொட்டற்குளம், அதில் தமையன் ஒருவன்மாத்திரமிருக்கிறதாகவும் அவடத்திலென்னைப்போயறிவித்து ஷைபிள்ளைக்குடையவர்கள் கூட்டிப்போகாதிருந்தாலதில் வியாச்சியமில்லையென்றுங்கேட்டுவர உத்தரவு. அப்படியே விசாரணைப்பிள்ளை ஓலைதெக்குவீட்டுத்தரகருக்கும் வாங்கிப்போய்விசாரித்ததிலவடத்திலுள்ள துலுக்கப்பிள்ளையென்பதுநிச்சயப்படவில்லை. இரவிலும் விசாரணைசெய்து ஆள் நாளைக் கனுப்புவோமென்றந்த ஊர்மனிதர் சொல்லிவிட்டபடிக்குவந்து கனம் ஐயரவர்களுக்கும் அறிவித்தேன். ௨௨-௳ ஷை துலுக்கர் இரண்டுபேர்வந்து உம்மாசாட்சியென்ற துலுக்கப்பிள்ளையை கூட்டிப் போய்விட்டார்கள்.

௨௩-௳ இரவிற் கனம் ஐயரவர்களென்னை கூப்பிட்டுத் துரைவிருந்துக்குத் தருமநாதன் சாப்பிடவில்லையென்பதுக்கு மனஸ்தாபமாய்ப்பேசினார்கள்.

௨௪-௳ இன்னாசியம்மாள் பிள்ளைகளுக்குப் பிரளி எண்ணெயும் உரமருந்தும் அனுப்பிறோம்.

---

கர்த்தர் தமதாவியின் வரப்பிரசாதத்தைத்தந்து நடத்தக்கடவராக.

இவ்விடத்தில் யாவருந்தேவ இரக்கத்தினாலே சுகமாயுஞ் சேமம். அப்படியே அவ்விடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். அவ்விடத்தில் ௰௬-ஆம் தேதி யெழுதிய காகிதம் ௰௮-ஆம் வந்து சகலமுமறிந்து கர்த்தருக்குத் தோத்திரமுஞ் செய்தோம். பிள்ளைகள் காரியங்களவ்விடத்தில் விதிமுறைகளுக்குத் தக்கதாய் யோசித்துக்கொண்டு அதிக நாளாகாமலவ்விடம் வரையும் வந்துபோகிறது அல்லது கொஞ்சநாளாகவவ்விடத்திலிருக்கும்படி செய்கிறது. மரியசுந்தரிக்கு அழுக்கிறவேர்க்குரணம். உடனே முறைப்படி செய்து சாப்பிடலாமென்று யோசிக்கிறேன். வயித்தியனிடத்தில் அவள் குணசேதத்தையறிவித்து இப்போதே அந்த வியாதியைத் தீர்க்கவேண்டும். அது சிறுப்பத்திலே சக்கலுக்கு மருந்துகள் செல்லாத முகாந்திரத்தினால் வந்ததென்றதினால் சக்கலற மருந்துசெய்யவேண்டும். அதிற் சாக்கிரதையாயிருக்கும்படி விரும்புகிறோம். ஆண்டவர் கிருபைசெய்வாராக. இன்னாசியம்மாளைப்பற்றி நாம் விசாரமுந் துக்கமுமுள்ளவர்களாகிறது நம்முடைய ஏழைக் குணந்தான். அவளுக்குக் கர்த்தர் அமைப்புயென்றதயிரியமாயிருக்கவேண்டியதுதான். அவளின் முடிவையும் ஒருவேளை காணுகிறதாயுமிருக்குமோவென்று நினைக்கிறேன். அது தேவசித்தம் நமக்குத்தெரியாது. மற்றநம்முடைய காரியங்களெல்லாமும் உலகத்திற் சந்தோஷமில்லை. கர்த்தரிடத்தில் சேரும்போது நமக்கு அவர் கிருபையாற் கிடைக்கும்பாக்கியமே சந்தோஷத்தைக்கொடுக்கும். பெரும்பத்திலிருந்த தம்பியை மாத்தி வள்ளியூருக்கு மேற்கே வடலிவிளையதில் மிசியோன் கிராமஞ் சகாயபுரமென்றிருக்கிறதாம் ஒரு ஊரதில்மாத்தி ஜுன் மீ ௰எ-ஆம் போயிருக்கிறதாய்க் கேள்வி; அவனுக்கு நமக்கும் அடிக்கடி செய்திவர வேதுவில்லை. ஆள்கிடையாது. கூலிக்கு ஒரு காயிதத்துக்கு ௩ வ - கொடுத்தால் செய்திவறியலாம். முன்னிருந்த இடத்துக்கு துட்டு ௪௰ கொடுத்தாலுமாள் கிடைக்கிறது வருத்தமிப்படி போனமீ காயிதம்வந்தது. இந்தமீ ௫-உம்வந்தது. தம்பியும்சவுசாரங்குழந்தையும் சேமந்தான். அந்தச்சேகரம் உபதேசி, உவாத்தி முதலானவர் யாவருக்கும் மிகுந்த கலக்கந்தான். கனம் ஐயரவர்கள் கண்டிப்பாய் நடத்துகிறதினாற் சில இராசிநாமாக் கொடுத்தும் தள்ளுதலும் சற்சபயினின்மோவும் சிலருக்கு நடந்து இருக்கிறது. மிதுதானவ்விடத்துக் கலக்கம் வேறில்லை சுமந்து தம்பிபேரிற் குற்றத்தினாலல்ல அந்த ஊருக்கு அவர்போனாற் சேமப்படுமென்றுதான் மாற்றினது. இவ்விடத்தில் வேறுவிசேஷமில்லை. மற்



றங்காரியங்கள் முதலாவிற்பேசுகையைக் கர்த்தர்கொடுத்தால் சந்தோஷமேசிக்கொள்வோம். நாங்களுங்களனைவோருக்கும் வாழ்த்துச்சொல்லுகிறோம். செபத்தியாயியும் தோத்திரமுமவன் சம்மந்திமாருக்கும் வாழ்த்துமுமுத்தம்மிகிறதாகவும் சொல்லச்சொல்லுகிறான். பிரியமுள்ள மரியசுந்தரி காயிதமெழுதினதற்காக நன்றியறிதலாயுமிருக்கிறோமென்றுமறிவிக்கவும் வேணும்.

௲௮௱௫௰௯      இப்படிக்கு
ஜுன்மீ ௨௯-ஆம்      சவரிராயன்.

[இது சாண்டையிலிருக்கும் கனம் மதுரோந்திர ஐயரவர்களுக்குக் கொடுப்பது.]

---

௨௯-ஆம் ஞானசமரியாம்பிள்ளை வள்ளியூருக்குச் சமீபமான வடலிவிளையாகிய சகாயபுரத்துக்குப் போனவாரத்தில் ௰எ-ஆம் ௰அ-ஆம் யிற் போயிருக்கிறாரென்ற செய்தி திட்டமாயறிந்து ஒரு ஓலை யெழுதினேன் அவருக்கு ௨௮-ஆம் டோணாவூர்க் கணக்கு முத்தையபிள்ளை வசமனுப்பு. அருணாசலகம்பிள்ளை மகன் சத்தியநாதபிள்ளை முதல்நாள் வந்திருந்து கனம் சாப்பட்டர் ஐயரவர்களிடத்தில் தானுபதேசியாயிருக்கிறதுக்கு சரட்டிபிக்கட்டு வாங்கிப் போனார்.

௲௮௱௫௰௯ சலாய்மீ ௬-ஆம் இரவிற் புறப்பட்டு ௫-ஆம் ௰௧ மணிக்கு பாளையங்கோட்டையிலின்னாசியம்மாள் வீட்டுக்குப் போனேன். ௯-ஆம் சங்கம், ௭, ௰௨ - மணிக்கு, இரவில் ௬௰ - மணிக்கு ௨ - சங்கம். மதுரோந்திர ஐயர் முத்துசுவாமி ஐயர் மரியசவரிமுத்துப்பிள்ளையும் வந்தார்கள். ஞானசமரியாம்பிள்ளை வரவில்லையவன் குழந்தைக்குச்சுகமில்லையாம். இரவில் ஷை மதுரோந்திர ஐயர் சவரிமுத்துயேசுதாசனும் நானுந்தனித்துப்பேசி யேசுதாசனுக்கு விவாகஞ்செய்ய யோசித்ததில், ஷை பெண்களிரண்டு, பேதுருபிள்ளைமகளும்தெய்வநாயகம்பிள்ளை மகளுமாக இரண்டும் யோசித்ததில். ஷை தெய்வநாயகம்பிள்ளை மகளை கேட்கும்படிக்கு மதுரநாயகம்பிள்ளையிடத்திற்சொல்லி வந்துவிட்டேன் ௭-ஆம் அ-ஆம் காலையிற்புறப்பட்டு கலுங்குவிளையிற் தம்பிநாகியம்பிள்ளை வீட்டிற்றங்கி ௯-ஆம் காலையில் ௯ - மணிக்குவந்தேன். ஸ்ரீ பிள்ளையவர்கள், இடையங்குடிக்குச்சாமுவேல்பிள்ளை வீட்டுக்கு ஷை யார் சமுசாரங்குழந்தைகள் ஷை அருளம்மாளுக்குச் சீவந்தப்பலகார முதலானவைகள் கொண்டுபோகிறவர்கள் கூடப்போகச்சொன்னார்கள். நான்மனமில்லையென்று சொல்லிப்போட்டேன். சாயந்திர மற்றவர்கள்போனார்கள். போகிறபோது

வீட்டிலிருந்த தருமநாதனை யவர்கள் மனைவிவந்து கைப்பிடித்திழுத்து வாருமென்றதினால்போனான். மறுநாள் ௰-௳ இராவில் வந்தார்கள்.

௰௨-௳ ஷை பிள்ளையவர்கள் மறுதலித்த முத்துசுவாமியாபிள்ளையின்று நல்லதினம் மசியத்துக்கு செபத்தியாயியை அழைத்துவருகிறது நல்லதென்றுசொன்னதைக்கேட்டு கூட்டிவந்து: நமது வீட்டிலிருக்கமனதானாலிரு, இல்லையானாலுங்கள் பேரனார் வீட்டுக்குப்போவென்ன ஷை செபத்தியாயி முன்பேசினதுபோல அவர்கள் வீட்டுக்குப்போகிறேனென்று வந்தாள்.

௰௩-௳ கல்விச்சாலையிலிருந்து தருமநாதபிள்ளையும் இடையங்குடி ஞானப்பிரகாசம்பிள்ளையும் வரும்போது இங்கேவருவேனென்றழுத ஸ்பேத்தி கிருபைபெற்ற மரியம்மாளையும் கூட்டிவந்தார்கள்.

௰௫-௳ ஷை மாப்பிள்ளை சொல்ப்படிக்கு முனிசுப்பிள்ளைக்கு காயிதமெழுதி அறை வீட்டுக்கு ஒரு சிறு கதவமனுப்பினேன். பின்பு ஷை தருமநாத பிள்ளை இடையங்குடிக்கு அருளம்மாள் வீடுபார்க்கப்போனார்.

௰௬-௳ குருவினத்தத்திலிருந்து தெய்வாயிவந்தாள்.

---

+

கர்த்தர் தமதாவியைத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவருந் தேவ கிருபையினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம்.

தங்களைவிட்டுப் பிரிந்தபின்பு சாயுங்காலம்வரையும் முருகன்குறிச்சியில் த்தானேயிருந்து தம்பி யேசுதாசபிள்ளை காரியத்தைக்குறித்துப் பேசும்படிக் குக்ஸம் முத்துசுவாமி ஐயரவர்களை விசாரித்ததில் அவர்கள் பன்றிகுளத்துக் குப்போய்விட்டதினால் கலுங்குவிளைப் பாக்கியம்பிள்ளை யிடத்திலியல்பாயவர் விசாரித்ததின்பேரில் அவரிடத்தில் தெய்வநாயகம்பிள்ளையவர்கள் மனபாகத்தையறிந்து சொல்லுமென்ன, அப்படியே ஆகட்டுமென்றவர் சொன்னபின்பு ஷை யேசுதாசனும் ஷையார் மருமகன் சாமுவேல்ப்பிள்ளையிடத்திற் சொல்லிவையுங்களென்றதினா லவரிடத்திலுஞ் சொன்னேனவர்களுஞ் சந்தோஷமாய் நமது வீட்டில்க்கொடுக்க மனந்தானென்று இராவிற்கேட்டு ஷை பாக்கியம்பிள்ளைவசஞ் சொல்லியனுப்புவேனென்றார். நான் தங்கச்சி வீட்டுக் குவந்துவிட்டேன். அன்றமுழுதுமிரவிலு ஷை தெய்வநாயகம்பிள்ளைக்குக் கடுப்புஞ் சுரமும்பேச அவாசமற்றுக் கிடந்ததினால் ஷை பெண்காரியம் பேசவில்லை. விடியக்காலம் ஷை பாக்கியம்பிள்ளைவந்து சொன்னார். பின்பவ





ரும் ஈரனுங்கூட கலுங்குவிளைக்குவந்து தங்கியிருந்து ௯-௳ காலையில் வீட்டுக் குவந்து சேர்ந்தேன். ஷை காரியங்கள் நமக்குள்ளே யோசித்ததையுங்கள் தாயாருக்குமறிவித்தேன். அவளுக்கும் எனக்கும் ஷை தெய்வநாயகம்பிள்ளையவர்கள் வியாதிக்காரராயிருக்கிறதினாலும் அந்த வீட்டுக்கு ஆதரவுள்ள வேறுபிள்ளைகளாலும் மற்றவர்களாலுமவருக்குப் பின்னுதவியில்லாமற் குட்டியும் குழந்தையும் வருத்தப்பட்டுத் திரிப்போமானாலும் ஏழைக்குணமுள்ள யேசுதாசன் பொறுப்பாய்ச் சுமக்கவேண்டியதாய்வருமாக்குமென்று ஷை பிள்ளையைத்தவிர மற்றப்பிள்ளையாலெல்லாக்காரியத்திலும் அவனைப்பெறுவதற்கும் நலமாயிருக்குமென்றும் யோசித்துக்கொண்டிருக்கிறோமாகையால் அக்காரியத்தை வெளியிடவில்லை. இன்னமும் ஷை தம்பி மனதும் ஷை மதுரநாயகம்பிள்ளை கேட்டுச்சொல்லுகிறதும் இந்த ஆறுமாசத்துக்குள்ளாக நடக்கிற காரியங்களுமறிந்து தீர்மானிக்கிறது வென்றிருக்கிறது.

செபத்தியாயிக்கு நான்வருமுன் செலவுக்குப்பலகாரங்களும் அரிசி கறிகளுங்கொண்டுபோய்ச் சமைத்துக்கொடுத்து மாமியார் அடுக்களைச் சருகும் சிலந்தச் சருகுமாக ௲ அடி - யும் வைத்துத் தீர்ந்தது. ஷை பிள்ளையை ௰௨-௳யில் அவர்களய்யாதானே ஞானப்பிரகாசத்தைவிட்டுக் கூட்டிவந்து இன்றுதானே யிவடத்துக்குவந்தவிடு, இங்கே யிருக்கமனதானாலிங்கிரு, பேரனார் வீட்டுக்குப்போயிருக்க மனமானாலவடத்திற் போயிருவென்றதால்: ஷை செபத்தியாயி நமது வீட்டுக்குவந்திருக்கிறாள்.

உங்கள் சித்தி தெய்வாயி ௰௬-௳ வந்தாளவள் காரியங்கள் மிகுந்த நிற்பாக்கியமாயிருக்க அவள் சொக்காரனு மக்களுஞ்செய்துகொண்டு அவள் நிலத்தையும் விற்கவும் வாரத்துக்கடைந்துக்கொடுக்கவும் கணக்கு வழக்குண்டானதைத் தீர்க்கவும் வடக்குன்குளத்துத் தலாவடி முறியைக்கொடுக்கவும் செய்யவொட்டாதிருக்கிறதுமன்றி என்னைவந்து கணக்கு வழக்குத்தீர்த்துக் கொள்ளக் கூட்டிவரவும் சொல்லுகிறதாக வந்திருக்கிறதாகச்சொன்னாள். அதற்குவேண்டியதைச் சொல்லியும் கேளாததினால் குருவினத்தம் இளையவர் மகனுக்குமற்றவர்களுக்கும் பொதுவாக: எனக்கவள் ஆஸ்திவேண்டியதுமில்லை, இதுமுன்னவள் மாப்பிள்ளையிடத்திலாவது எதாவது பத்தினதுவும் இல்லை, தாங்களே அவளுக்கு ஆகவேண்டியதைச்செய்து கொடுத்தவள் பிள்ளைக்குங் கலியாணமுடித்துவைத்து அவள் நிலங்கள் வேண்டுமானால் எடுத்துக்கொள்ளுங்கள், அல்லது அந்தப்பிள்ளையைக் கட்டுகிறவனுக்கு எல்லாங் கொடுத்துச்செய்யவேண்டியதைச் செய்யுங்களென்றும் எழுதினேன். ஷை யவளை கிளாக்குளத்துப் பிள்ளைமார்கள் கலியாணத்துக்குக் கூப்பிடவுமில்லை

யாம்-இத்தாண்டிட்டி மரியமுத்து நம்முடைய பேரில் மிருந்த அவலாதியும் சொல்லியவன் நாயார் நமக்கு அனேக காரியங்களை செய்து விருத்தினதுபோலனும் நன்றியற்றவர்களாயிருக்கிறதுபோலவும் சொல்லுகிறுளாம்.

தம்பி ரு- ஞானப்பிரகாசம்பிள்ளை செய்திக் காரியதமைவுற வாங்கெய்தியாவது தெரியவில்லை. இடையன்குடியில் யாவருஞ் சேமம். அருணம்மாளுக்கும் ஷை செபத்தியாயிக்குச் செய்ததுபோல கூட பிள்ளையவர்களுக்கு சமுசார முதலான யாவரும்போய்ச்செய்ததைச்செய்து ஷை பிள்ளையைத் தங்கள் வீட்டுக்கழைத்துவரச்சொன்னது. ஷை சாமுவேல்பிள்ளை தாயார் அவடத்திலிப் பார்த்துக்கொள்ளுகிறதென்று விடவில்லை. மரியாருக்கு சஞ - ஆ வில் ஒருசேலை சப்பங்காச்சிக்கொடுத்ததாகவும் வியாகப்பபிள்ளை ௬௦ - ஆ வில் பச்சைச் சீலை வாங்கிக்கொடுக்கிறதாயும் கேள்வி. எங்களை விசாரணைப்பிள்ளைப்பிள்ளை கூடப்போகச் சொன்ஞர்கள். ஷை இரண்டிடத்துக்கும்போகவில்லை. தருமநாதசஞ்சீவிமாத்திரம் விளையாட்டாய்ப்போனன். வியாகப்பபிள்ளை தகப்பனுர் வீட்டில் வந்திருக்கிருர். சமுசாரம் ஆசீர்வாதபுரத்திலிருக்கிறது. மற்றுங்காரியங்கள் யாவும் எழுதக்கூடியதில்லை. வேறு விசேஷமில்லை. கர்த்தரிதுவரையும் நம்மை நடத்திக் காப்பாற்றினதுபோல இனிமேலுங் காத்து ஷை தாயில்லாப்பிள்ளைகளையும் காக்கக்கடவது. தெய்வசகாயம்பிள்ளை மாப்பிள்ளைக்கு நல்லதம்பியாபிள்ளை மகளைத் திட்டஞ்செய்து ரு - விராகன் மணியும் ருஇ - ஆச்சேலையும் கொடுத்திருந்த பெண்ணைக் கந்தமாய்வேண்டாமென்று சொல்லிப்போட்டதாய் ஷை பாக்கியம்பிள்ளை சொன்ஞர். பேதுருப்பிள்ளை மகளை இடையன்குடியில் ஞானப்பிரகாசம்பிள்ளைக்குக் கலியாணமுடிக்க மனதிருக்கிறது. ஆனல் பெண்ணின்தாய் மனமெப்படியோ. அந்தப்பிள்ளையின் பேரில் நமக்கும் மனமிருக்கிறது. கர்த்தரின் சித்தத்தின்படி யாவதாக. நானுமுங்கள் தாயாரும் உங்களெல்லாருக்கும் வாழ்த்தலும் செபத்தியாயி தோத்திரமுஞ் சொல்லுகிறோம்.

இன்ரா ருக-ருப<br>சலாய்ஞ ம அ-உ

இப்படிக்கு<br>சவரிராயன்.

தருமநாதபிள்ளையும் இருபைபெற்ருளும் ம௬-உ இவடம்வந்தார்கள். ஷை தருமநாதபிள்ளை இடையன்குடி உபரியெல்லாம் பார்த்துவந்து நாளைக்கு வடக்கன்குளத்துக்கு உங்கள் சித்தியுங்கூடப்போகிருர்கள். ஷையாரும் உங்களுக்குத் தோத்திரஞ் சொல்லுகிருர்.

[இது சாண்டையிலிருக்கும் ஞானம் மதுரேந்திர ஐயரவர்களுக்கு வருவது.]



ம அ-உ ஷை தருமநாதபிள்ளை உபரிக்கும்போய் தேவசகாயம்பிள்ளைவீட்டிற் சனிக்கிழமை ஷைம௬-உயில்போயவர்களை விசாரித்து வந்ததாகவும் சொல்லிவந்தார். ஷைதெய்வாயிகிலங்கள் முதலானதைவிக்கவும்வாரத்துக்குஅடைக்கவும் மற்றும்வழக்குக் கணக்குத் தீர்க்கவும் என்னைகூட்டிவர வந்ததினுல் நான்வரக்கூடாதென்று ஷையார் தேவசகாயம்பிள்ளைக்கு: நமக்குமவளாஸ்திக்குஞ்சம்பந்தமில்லையவளுக்குமவள் பிள்ளைக்குஞ் சம்பந்தப்பட்டபொருளவளுக்கு ஆகச்செய்து ஷை பெண்பிள்ளையைக் கலியாணங்கட்டிக்கொடுத்தலைக்கவேண்டியதுங்கள் கடமையென்றுமெழுதிக்கொடுத்தேன். ம௬-உஷை தருமநாதபிள்ளையும் ஷைதெய்வாயியும்சலந்தபனைக்கடுத்தவடலிவிளையிலிருக்கும் ஞானசமரியாம்பிள்ளை வீட்டுக்குப்போய் வடக்குன்குளத்துக்குப்போகும்படி போனுர்கள். வாத்திமார் வாத்திச்சிகள்க்குச்சர்க்கார்சோதனை ம அ-உ முதல் நடக்கிறது உக-உ முடிந்தது. ஆசீர்வாதபுரம்விசாரணை உவாத்தியார் சத்தியநாதபிள்ளையவர்கள் வந்தார்கள். ௱ - ஸ்ரீ விசாரணைப்பிள்ளையகத்தியமாய்வரச்சொல்லிக்கடிதமனுப்பினுர்களாம். உஉ-உ ஷை பிள்ளையவர்கள்கூட வண்டியுங்கொண்டுபோய் வியாகப்பபிள்ளை தன் சமுசாரத்தை யழைத்துவரப் போனுர் ஆசிர்பாதபுரத்துக்கு. உ௬-உ சனிக்கிழமையில் ஷை வியாகப்பபிள்ளை சமுசாரங் குழந்தையும் ஷையார் மாமி சுந்தரியும் வந்தார்கள். உச-உ ஞானஸ்நானங் குழந்தைக்குக் கொடுத்தார்கள். அன்று ராப்போசனம்.

உரு-உ சம்பளக் கூடுதல்., இராவிற் செபம் பிரசங்கம் நான்செய்தேன். ௭௬ - ம் சங். ௬ - வாக்கியம். உ௬-உ நற்குணத்தான் வாத்தியார் பிரசங்கம். பின்பு கனம் சாப்டர் துரையவர்கள் சீர்மைக்குப் பட்டம்பெறப்போகிற தமக்காகத்தனிச்செபத்திலும் லித்தானியாவில் மிகுத்திலும் நீரிலுமென்றவாக்கியம் வாசிக்கையிலும் தம்மை நினைத்துச்செபஞ்செய்யக் கேட்டுக்கொண்டார்கள். உஎ-உ சாயந்திரம் ௬ - மணிக்கு பங்களாவில் ௱உக - சங்கீதத்தை வாசித்து கனம் சாப்பட்டர் ஐயரவர்கள் செபம்பண்ணின பின்பு அனுப்பினோம். அன்புள்ள துரை போகிருர்கள். அவர்களை கர்த்தர் திரும்பிவரச்செய்து நானவர்களைக் காணவைப்பாரோ வென்றெனக்குள் துக்கமுண்டாயிற்று. கர்த்தர்கிருபைசெய்து அவர்களைக் காணப்பண்ணுவாராக.

---

கர்த்தர் தமதாவியைத்தந்து நடத்துவாராக.

இவடத்தில் யாவரும் தேவ யிரக்கத்தினுலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். தாங்களனுப்பியகாயிதம்

வந்தாளிவ் மூந்தி ஒரு கடிதமனுப்பினேன். அதின்பின் னிதுவரையும் பல அலுவலாய்க் காயிதமெழுதக்கூடாதிருந்தது. ௨௬-௳ முதல் ௨௮-௳ வரையும் அப்படியிருந்தது. ராப்போசனம் சம்பளக்கூடுதல். கனம் துரை யவர்களையனுப்பினது ௨௭-௳. ௨௮-௳ மகசனம் கன்காணியாரவர்கள் குறி த்தபடி ஆராதனை. முன் நானனுப்பிய கடிதத்தினால் இவடத்து சகிசெய்தி யறிந்திருப்பீர்கள். இப்பொழுதுண்டாகிய காரியங்களிலிவடத்திலெனக்கு ம் உங்கள் தாயாருக்கும் பிரியமுள்ள செபத்தியாயிக்கும் சந்தோஷமும் மன க்கலக்கமான விசாரமுண்டாயிருக்கிறது. அதற்குக்கனம் சாப்டர் ஐயர வர்கள் சொல்லுகிற யோசனைகளினால் எனக்கு ஆறுதலுண்டாகிறது. அது வென்னவெனிற் கனம் துரைசிர்மைக்குப்போகிறதினால்தங்களுக்கு உதவிக் கு ஆராவது வேண்டுமென்று கனம் தோமாசு ஐயரவர்களையும்மற்றுஞ்சில ரிடத்திலுங் கேட்டதிலவர்களிடத்திலுதவிக்கு இடமில்லையென்றும், கனம் வால்பி ஐயரவர்களிடத்திற்ச் சொல்லிக்கொண்டபோது, அவர்கள்தானே நான் பிலமுள்ளவனாயிருப்பதினால் தங்களுக்கு மதுரோக்கிர ஐயரை கொடுக் கிறேனென்றதாகவும், அதற்கு மதுரோக்கிர ஐயரைக்கேட்க ஷெ துரையை அவடத்துக்கு அனுப்பினதாகவும், அப்போதுதாங்கள் கிராமத்துக்குப்போயி ருந்ததினாலவர்கள் காணமல்வந்துவிட்டபின்பு, கனம் ஐயரவர்கள் முன் தங் களிடத்திற் பேசின அன்று தங்களுக்குதவிசெய்ய எனக்குக்கடமைதானெ ன்றதையும், ஷெ வால்பி ஐயரவர்கள் சொன்னதையும், தமக்கும் மனமிருக் குமென்றும் கம்பிக் கமட்டியாருக் கெழுதினதாகவும் உத்தரவு சந்தோஷ மாய்க் கொடுத்திருக்கிறதாயும், ௨௯-௳ ஷெ காயிதத்தைப் பார்த்தவுடனே என்னை யழைத்துத் தனித்துச்சொல்லி, யவருக்குவரமனமிருக்குமா விருக்கு மா வுனக்கும்சந்தோஷமாவென்றார்கள். நானதுக்கு, தங்களிடத்திலிருக்க அவருக்கும் பிரியந்தான், எனக்குஞ் சந்தோஷமுமென்றும் மற்றுங்காரி யங்களைப்பற்றி இந்த இடத்திலிருக்க மனமுண்டோ யில்லையோ தெரியா தென்று சுருக்கமாய் நமது காரியத்தை யறிவித்தேன். அதற்கவர்களாறுத லாக அவருக்கு அதிசயபுரஞ் சேகரத்தைக் கொடுப்போம். அவர் ஞானகா ரியத்தில் மாத்திரம் இருப்பாரென்றும், விசா. சவரிமுத்துப்பிள்ளை சேகரத் தை யவருக்குக்கொடோமென்றும், இப்போ கசப்பாய்த் தோன்றுகிற காரி யம் கர்த்தர் தித்திப்பாய் முடியச்செய்வாரென்று மின்னுமநேக யோச னைபுத்தியும் சொல்லி,யவர்மனம் இவடத்துக்குவருவரென்று அறிகிறவரை யும் ஒருவருக்குஞ் சொல்லாதிருக்கக் கட்டளையிட்டார்கள். ௩௦-௳ கனம் துரையை சாயந்திரம் ௫ - மணிக்கு அனுப்பினோம். அதின்பின்னுமவர்கள்



தனித்துக்கூப்பிட்டு, ஷெ காரியங்களையும் அறிவித்து உமது குமாரனுக்கு எழுத நினைத்தேன், கூடவில்லை, வால்பி ஐயருக்கு எழுதியிருக்கிற தென்றார்கள். ஆகையாலவர்மனமிருந்தால் வருவாரென்றதினால் தங்கள் மனம் என்னமோவென்று கலக்கமிருக்கிறது. தேவசித்தமுமவர் நடத்துத லுமெப்படியோ அப்படியாவதாக. தம்பி சவரிமுத்துப்பிள்ளையும் கிரியபுத் தூரிலிருக்கிற பிள்ளைகளுந் தூரமாயிருப்பார்கள். அவர்களுக்கு மிகவும் வி சாரமும் நாம் ஒன்றாயிருந்தால் நமக்கும் அவர்களைப்பற்றிய விசாரமுமதி கமாயிருக்கும். இந்த மாறுதலில் முன்னிருந்த யோசனையும் விசாரமும்வே றுவிதமாய் மாறுகிறது. ஆனால் தேவசித்தம். தாங்கள்வருகிறதாயிருக்கு மானால் நமதிடத்திலிருக்குஞ்சகலசாமான்களும் ஒருவருக்கும் கொடாமலும் விலைக்கும்கொடாமலும் வாடகைச் செலவு எவ்வளவுவந்தாலும் கொடுத்து இ வடம்வந்துசேரவேண்டியது. இவடத்திலவர்தயின் ஒருவஸ்துவாவது மூட் டெப்பட்டதாய் ஒருவரிடத்திலும் கேளாமலிருக்கவேணும். ஏதாவது நமக்கு அவசரமில்லாததென்று செலவு செய்யாதபடிக்கு நானுமுங்கள் தாயாரும் கேட்டுக்கொள்ளுகிறோம். அவடத்தைவிட்டுவிடுகிறதானால் அவடத்திலினி எந்தக் கண்மணியாயிருந்தாலும் நமக்குவசரத்துக்குதவார்கள். ஆகையால்த் தாங்களும் மரியம்மாளும் யோசனையோடே காரியத்தோடும் பார்த்துக்கொ ள்ளவும். முன்போலவீணான செலவுக்கிடங்கொடுக்கக்கூடாது. ஆனாலுங்கள் மனம். என் எண்ணத்தையும் எனக்குள்ளிருக்கிற பலகாரணத்தையும் என் னியறிவித்தேன். இது நிற்க: வியாகப்பபிள்ளையும் சமுசாரங் குழந்தைகளு ம் இவடத்துக்கு ௨௯-௳யிலழைத்துவரப்பட்டார்கள். ௨௯-௳ குழந்தைக்கு க் கனம் ஐயரவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். பேர் சாப்டர் சத்திய நாதன்சவரிமுத்து. ஞானத்தகப்பன்தாய்வடக்கன்குளம் வியாகப்பபிள்ளையும் வி. சாமுவேல் உவாத்தியாரும், ஈ - ஸ்ரீ பிள்ளையவர்கள் மனைவி அன்னம்மை யும். இரவில்க்கடாயறுத்துவிருந்தும் நடந்தது. ஏகநாதனெழுதினது, தான் விடுமுறைக்குச் சுரண்டைக்குப்போயிவடத்துக்குவருகிறதாகவும் முன் நாம் பேசிக்கொண்ட காரியத்துக்கு ஷெ தெய்வநாயகம்பிள்ளை வீட்டார்கள் யாவ ரும் பரிபூரணமனதாயிருக்கிறார்களென்றும்தமக்கு ௨ - நாளுப் செல்லவேண் டுமென்றதாயிருக்கிறதுயென்றார். ஆனலவன் கடுத்தலாய்ச் சொல்லுகிற மூகாந்திரந் தெரியவேணும். பின்னும் வருகிறமீ முதல் ௲ ௬ - தனக்குத் தொடுக்கிறதாய் ஐயர் சொல்லிருக்கிறதாகவும், தெய்வநாயகம்பிள்ளைக்குப்பே ரியிருந்த கல்லதம்பியாபிள்ளை மகனை ஷெ மாப்பிள்ளை வேண்டாமென்றதை

த்தனைக்குக்கொடுக்க இன்னாசியம்மாளிடத்திற் பேசினதாயும், தமக்குமனமில்லையென்றுத்தரவுசொன்னதாயும், அதின் தமக்கு ஒருபெண் திட்டமாயிருக்கிறதாகவும் சொன்னானும். இப்படியுமப்படியும் பேசுகிறான். இவடத்தில் யாவருக்கும் பேதுருப்பிள்ளை மகளைப் பரிபூரண சந்தோஷமும், தெய்வநாயகம்பிள்ளை மகளைப் புகலத்தவிதமாய்ச் செய்கிறதாகவுமிருக்கிறது.

ஷ தங்கள் காரியங்களைப்பற்றி யவனுக்குத்தெரியாது. தெரிந்தால் எல்லாச் செய்தியும் நமக்கெழுதமாட்டான்.

தங்கள் காயிதம்வருகிறதும் கனம் வால்பி ஐயரவர்கள் உத்தரவுவருகிறதையும் பார்த்திருக்கிறோம். தம்பி ரு. ஞானப்பிரகாசம்பிள்ளை முதலானயாவருஞ் சேமமென்று செய்திவந்தது. இடையங்குடிப் பிள்ளைகளுஞ் சேமந்தான். வேறுவிசேஷமில்லை. நாங்களெல்லாருமுங்களுக்கும் அமமாருக்கும் பிள்ளைகளுக்கும் வாழ்த்தலுந் தோத்திரமுஞ் சொல்லுகிறோம்.

௲அஎ௱௫௰௯ இப்படிக்கு
சுலாய்மீ ௨௮-உ சவரிராயன்.

[இது சாண்டையிலிருக்கும் கனம் மதுரேந்திர ஐயரவர்களுக்கு வருவது.]

---

௨௧-௨ இடையங்குடிக்குப்போய் அருளம்மாள் முதலானவர்களையும் பார்த்துவந்தேன் ௩௰-உ.

ஆகஸ்ட்மீ ௨-உ செம்புலிங்கம்வசம் குருவினத்தத்துத் தெய்வாயிக்கனுப்பும்படிக்கு ஒருசேலை ஆ ஒன்னே முக்காலே அரைக்காலுக்கு வாங்கி பாளையங்கோட்டை மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை மூலமாய்க் காயிதமெழுதியனுப்பினேன்.

௩-உ மதுரேந்திர ஐயரிந்தச்சேகரத்துக்குவருகிறதாகக்காயிதம்வந்தது.

எ-உ எசுதாசன்தனக்குப் பேதுருப்பிள்ளை மகளை கலியாணத்துசம்மதமாயெழுதினான். பதிலுத்தரவு எழுதி ௰-உ யனுப்பினேன். மதுரேந்திர ஐயருக்குமந்தப் பெண்காரியத்தைபேசும்படி யெழுதியனுப்பினேன்.

௰௨-உ வடக்குன்குளத்திலிருந்துவந்த சவரிமுத்துப்பிள்ளை உங்கள் சிறியதாயாருக்கு அவஸ்தைகொடுத்து வருத்தமாயிருக்கிறது, உம்மைக்காணயிருந்த ஆவலாய்த்தேடுகிறாளென்றதினால் உடனே கனம் சாப்பற்றையரவர்களிடத்தில் உத்தரவு வாங்கி வண்டியும் அமத்திரானுமென் சமுசாரமும் புறப்பட்டோம். பிள்ளையவர்கள் தங்களுக்கு வர வியாதியாயிருக்கிறதென்று





தங்கள் மூத்த குமாரன் வியாகப்பபிள்ளையையும் அனுப்பினார்கள். ௰௩-உ சாயந்திரம் ௬ - மணிக்குள்ளாக ஷ வடக்குன்குளத்துக்குப்போய்ச்சேர்ந்தோம். ஷ என் சிறியதாயார் என்னைத்தன்பிள்ளைபோலச் சிநேகித்துவந்தவளானதினால் அவள் வியாதிப்பட்ட ௫ ௮-உ முதல் ஓயாமல் எல்லாரிடத்திலும் என்னைவரச்சொல்லியும்வரவில்லையாவென்றும்விசாரித்தும்வந்ததுமன்றி நாங்கள் போய்ச்சேர நாலு நாழிகைக்கு முன் நாங்கள் வருகிறதாக அறிவித்த தன் மகன் தேவசகாயம்பிள்ளையிடத்திலும் வருகிறானா நான் போய்பார்க்கப்போகட்டாவென்றாளாம். அப்படிப்பட்ட தாய்க்கு நாங்கள் போகிறபோது அறிவுமயக்கமுஞ் சிலேற்றுக் கொதிப்பும் மேல்மூச்சு முண்டாயிற்று. நான் வெகுவாய்க்கூப்பிட்டுத்தோத்திரஞ்சொல்ல என்னையாவென்றும் தோத்திரமுஞ்சொன்னாள். அரைகுறையாய்க்கேட்டது. அந்தமயக்கத்திலப்பின்னுமென்னைக்குறித்தறிவித்தவர்களுக்குந் திட்டமாயுத்தரவு இல்லை. பின்னுஞ் சித்தி யென்னைத்தேடினையாமே யென்றதுக்கும் ஆமாவென்றுஞ்சொன்னாள். போய்ச்சேர்ந்தநேரமுதலவள்மரணமாய்அவள்கண்ணும்வாயும்மூடுகிறவரையும் அவள் கிட்டவேகாத்திருந்து தண்ணீர்கொடுத்து கைகால் சிலபேணியும் இருந்தேன். கடசியாக நானேயவள் வாயைமூடினேன். பின்பு துக்கப்பட்டமூது வெளியே அவளைக் கொண்டு குளிர்ப்பாட்டக்கொண்டுவரும்வரையிருந்தேன், ௰௪-உ காலை ௰-மணி நேரமட்டும். அப்போதொருமனிதன் அவள் பேத்தியைக்கொண்ட பாக்கியம்பிள்ளை என்னை யழைத்து அவளையெடுத்துப் போடக்கம்பண்ணமட்டும்வேறு இடங்களுக்குப்போயிருந்துவாருங்களென்றார். அப்படியானான், என்தாய்க்காகஇங்குவந்தது, அவள்க்குச் செய்யவேண்டியதைச்செய்தும் முடிந்தது,உங்களுக்குமெங்களுக்கும் என்ன காரியமிருக்கிறது, இப்போதே சந்தோஷமாய்ப் போகிறோமென்று பிள்ளைகளையுங் கூட்டிப்போய்விட்டோம். பின்பு அடக்கஞ்செய்த பின்பு ஷ என் தாய்க்கு மகனாகிய தேவசகாயம்பிள்ளை யிடத்திற்போய், நீர் ஆயாசப்படாதிருமென்றும் ஷ பாக்கியம்பிள்ளை யிடத்திற் சொன்னபடியேசொல்லி ஆறுதல்படுத்திப் புறப்பட்டோம். பின்பநேகர் தங்கள் வீடுகளில் வந்திருந்துபோகலாமென்றதுக்கும் இனி உங்களுக்குமெங்களுக்குஞ் சம்பந்தமென்ன, நீங்களுங்கள் மட்டு நாங்களெங்கள் மட்டுந்தான், என்தாயின் அன்புக்கு நான்செய்யவேண்டியதைச் செய்துபோகிறோமென்று வந்துவிட்டோஞ் சுண்டைவிளையிலிருக்கும்உபதேசியார் முத்துசுவாமியாபிள்ளையவர்கள்வீட்டுக்கு. இரண்டுவருஷமாய்ப்பள்ளிக்கூடத்திலும் உதவிச்சாலையிலுஞ் சாப்பிட்டுப்படித்துவந்த என்தங்கச்சி மகன் தருமராதபிள்ளையையும் அந்த ஊரார்

அவர் தாய் தகப்பனுக்கும் பண்ணிவந்த நெருக்கங்களினாலுந் துர்ப்போதனை செய்ததினாலும் அவனைத் தங்கள்வசமிழுத்துக்கொண்டு மறுதலித்துப்போனான். இந்தக்காரியமும் ஞானம்மாளுக்கு கல்லறிவுந் திடனும்பேசுமிருக்கும் போது வந்தவளை சந்திக்காததுவுமே எங்களுக்குச்சொல்லமுடியாத துக்கமாயிருந்ததன்றி மேற்படி ளர் நமதுபெந்து சனங்களைவிட்டுப்போகிறோமென்கிறதாவது பின்னுமவர்களைப்பார்க்கவேண்டுமென்கிற மனமுமோ இல்லை. மேற்படி தேவசகாயம்பிள்ளை வீட்டில்ப்போனவுடன் சாப்பிட்டதன்றி பெருங்குடியாற்றில் வந்து குளிர்ந்ததண்ணீர் சாப்பிடும்வரை பசிதோன்றவில்லை. மேற்படி சன்னடைவிளையில் எங்களுக்கு குளிக்க வெந்நீரும்வைத்துத் தந்து சாப்பாடும் உபசாரமும் வெகுவாய்ச்செய்தார்கள்.

௰௫-ௗ வடலிவிளையிலிருக்கும் ஞானமரியாம்பிள்ளை வீட்டுக்குப்போய் பிள்ளைகளை விசாரித்து மறுநாளுமிருந்து ௰௭-ௗ சுவிசேஷபுரம் வந்துசேர்ந்தோம்.

௨௪-ௗ இரவில் மதுரேந்திர ஐயரவர்கள் சமுசாரங் குழந்தைகள் ௨-ம் வேலைக்காரர் ௨ ஆ ௬ - பேரும் வாடகை வண்டியில்வந்து சேர்ந்தது. பங்களாச் சுத்தம்பண்ணும்படி செய்துமுடிக்கும்வரையும் நமது வீட்டிலிருந்தார்கள். வண்டிக்காரன் ௨௭-ௗ போனான். வேலைக்காரர் ௨௯-ௗ போனார்கள். பதில் வேலைக்காரன் பாளையங்கோட்டையிலிருந்து சமுசாரத்துடன் வந்து வேலைசெய்துவருகிறது.

௩௰-ௗ செட்டிமலம்பட்டி மாப்பிள்ளை மிக்கேல்ப்பிள்ளை வந்துடனே போய்விட்டார்.

செப்தெம்பர்மீ ௪-ௗ சனிக்கிழமை மேற்படி ஐயரவர்கள் சமுசாரத்துடன் பங்களாவுக்குப்போய் குடியிருந்தார்கள். நாயிற்றுக்கிழமை ராப்போசனம். சேபத்தியாயிக்கு இடுப்புக் குத்து வலித்திருந்ததினாலவளும் பேத்தியாளும் வராவில்லைக் கோவிலுக்கு. இடையன்குடி ஞானப்பிரகாசம்பிள்ளை வந்தவர் தமதுமதினி அருளம்மாளுக்கும் மூன்று நாளாயப்படித்தாளென்றார். மேற்படி அருளம்மாள் மதியத்துக்குப்பிறகு - ௪ இ - மணிக்கு பெண் குழந்தை பிறந்ததாக சாயந்திரம் விசாரணைப்பிள்ளைக்கு காயிதம்வந்தது. பின்பு இரவில்ப் பத்து மணிக்கு சேபத்தியாயி ஆண்குழந்தை பெற்றாள்.

௫-ௗ முதல் நாங்களெல்லாரும் மேற்படி ஐயர் வீட்டிற் சாப்பிட்டோம்.

௰௨-ௗ காலையில் ஏசுதாசபிள்ளை வடலிவிளையிலிருக்குந் தமையனார் வீட்டுக்குப்போனார் தவசிப்பிள்ளையுங்கூட. ௰௪-ௗ காலையில் வந்தார்கள்;



௨௯-ௗ வரை மேற்படி ஐயரவர்கள் வீட்டிற் சாப்பாடு. ௩௰-ௗ இன்னாசியம்மாளுக்கு வியாதி வதிசப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டு அவன் தாயனைப் பாளையங்கோட்டைக்கு அனுப்பினேம். ஏசுதாசபிள்ளையுங் கூடப்போனார்.

௩௧ ௵ அகஸ்டோபர்மீ ௧-ௗ மதுரேந்திரஐயர் அதிசயபுரஞ் சேகரம் பார்க்கப்போனார்.

௨-ௗ இரவில் வியாகப்பபிள்ளை கொழும்புக்குப்போகும்படிக்கு சுனம் சாப்பட்டர் ஐயரவர்களும் தகப்பனாரவர்களுந் தம்பி ஞானப்பிரகாசம் பிள்ளையுமாக ரூ ௨௧ - வரையும் செலவுக்குக் கொடுத்தனுப்பினார்கள். அதற்கு முந்தி செப்தெம்பர்மீ ௰௯-ௗ மாமியாள்கூட சண்டைபிடித்துக் கொண்டதினாலவர்மனைவி ஆசீர்பாதபுரத்துக்கு மேற்படி ௨௧-ௗ போய்விட்டாள். பாளையங்கோட்டையிலிருந்து ௪-ௗ ஏசுதாசபிள்ளைகாயிதம்வந்ததில் இன்னாசியம்மாள் தாய் போகாவிட்டால்ப் பிழைக்கமாட்டாள், ஆண்டவர் சற்றுசுகந்தைக்கொடுத்திருக்கிறார், முற்றிலுஞ் சுகமாக்குவாரென்பதே, நாஞ்சிநாட்டிலிருந்து நித்தாண்பட்டிப்பாக்கியம் தன்மகளையுங்கூட்டிக்கொண்டு வீரபாண்டியன்பட்டினத்தில் சுவாமியாரிடத்தில்ச் சேர்க்கப்போகவந்ததில் கூடவந்தவர்கள் விட்டுப்போய்விட்டதினாலிவ்விடத்துக்குவந்ததென்றுவந்தான்.

௫-ௗ ஐயர் வீட்டிலிருந்து ௬-ௗ பகற் சாப்பிட்டு சாயந்திரந் தவ்வார்க்காரன்கூடப்புறப்பட்டுப்போகத் தீர்மானித்து ௭-ௗ விடியக்காலம் போனார்கள். பின்பு சுனம் ஐயர்வந்தவன் செய்தி கேட்டு மேற்படியாள் மகளை யிங்கு விட்டுப்போகச்சொல்லவாமேயென்றார். முழுதுமவளையும் பிள்ளையையும் நம்பக்கூடாததினால் பேசாதிருந்ததென்றேன்.

௮-ௗ சனிக்கிழமை சுனம் சாப்பட்டர் அம்மாள் தான்பிறந்த நாள் கொண்டாடினார்கள்.

௯-ௗ சாயந்திரம் பாளையங்கோட்டையிலிருக்கிற இன்னாசியம்மாளுக்குக்கருவாடும் அவள்தாய்க்குத்தயிலம்முழுகவும் அனுப்பினேன்.

௰௩-ௗ மெஞ்ஞானபுரம் விசாரணை மிக்கேல்ப்பிள்ளையவர்கள் மகன் கலியாணம். நமக்குக் காயிதமனுப்பினார்கள். எனக்குப்போகவும் மற்றும் பிள்ளைகளும்போக ஏதுவில்லாமல் என்சமுசாரம் பாளையங்கோட்டைக்குப்போயிருந்தாள். சேபத்தியாயியும் அவள் குழந்தையும் என்வீட்டிலிருந்தார்களவர்களுக்கு உதவிசெய்யவேண்டியதினாற்போகவில்லை. மேலவீட்டில் ஞானப்பிரகாசம்பிள்ளை மாத்திரம் போய்வந்தார்.

௰௮-ௗ இரவில் சமுசாரக்காரியாகிய ஒருதி வீட்டில் விவாகஞ்செய்யாத ஒரு வாலிபன் போனதை மேற்படியான் புருஷன்பிடித்து பிள்ளையவர்கள் முக

நாவில் விசாரணைக்கிடமாகி ௰௧-உ கனம் ஐயரவர்களுக்கறிவித்து ௨௧-உ யில் ஷ டி விபசாரிருவருக்கு சாணுங்கி அலக்கிவிளக்குமாறுவழித்ததவும் எருக்கலமாலையுந் தொப்பு தப்புங்கொண்டுவரப்பட்டது, இப்படியவர்களுக்கு வெட்கமும் மற்றவர்களுக்கு எச்சரிப்பாகவும் செய்யப்பட்டது.

ஈ - ஸ்ரீ பிள்ளையவர்கள் செபத்தியாயி மகனுக்கு அரைக்கொடியும்மோதிரமும் ௯ ௫ - க்குச் செய்தவர்தனைக்கையிற் போட்டார்கள்.

௨௪-உ என்சமுசாரம்வழியில்த்தானே காச்சலும் பூசந்திரப்பருவென்று வியாதியும் உண்டாய்வந்தாள்.

௨௯-உ வந்த பார்பரம்மாள் தன்மகளிடத்திலும் பேரனிடத்திலும் தன் மருமகனுக்கு வியாதிபதிகமென்றுசொல்லாமலும்மகளைக் கூட்டிப்போகாமலுமிருந்துவிட்டாள். பின்னுங் கட்டாயமாகப்போனார் வியாகப்பபிள்ளையனுப்பினதுபோல ௨௮-உ ஷ வடக்குன்குளத்துக்குப்போனார்கள் ஷ பார்பரம்மாளுமவள் மகளும். ௩௧-உ ஷ வியாகப்பபிள்ளைக்குக் காயிதமெழுதினது தவைப்பட்டு ௩௩-உசாயந்திரம்வந்தது. அதில்மேலப்பக்கத்திலவர் தகப்பனார் சவரிமுத்துப்பிள்ளை வியாதிவருத்தமா யிருக்கிறதாக எழுதினதைப் பார்த்துடனே வியாகப்பபிள்ளை புறப்பட்டு தஞ்செங்கபுரத்தில்தங்கி மறுநாள்ப்போய்ச்சேர முன்தகப்பனார் மரித்ததைக் கேட்டாராம். அவர்போய் ௫ - நாளிகைக்குமேல் அடக்கஞ்செய்யப்பட்டதாம் நவம்பர்மீ ௧-உ.

௫௩-௫௯ நவம்பர்மீ ௪-உ இரவில் வியாகப்பபிள்ளை அவைக்கு ஒரு முதலிச்சியைக் கூட்டிக்கொண்டு வந்துசேர்ந்தார். எ-உ திங்கள்கிழமை ஷ மாப்பிள்ளை வியாகப்பபிள்ளை தமது வீட்டுக்குத்தன் சமுசாரங் குழந்தையையும் அழைத்துப்போனார். வடக்குன்குளத்துக்கு ஷ தட்டிக்குப்போன ஞானப்பிரகாசம்பிள்ளை வந்தார். சேமத்துக்காரியவன் அத்தான் நல்லதம்பியாபிள்ளையைவண்டிவைத்துக் கூட்டிவருகிறதாக அவடத்திலிருக்கிறாராம்.

௯-உ மதியத்துக்குமேல் ஷ நல்லதம்பியாபிள்ளையும் மக்களும்மிகுந்த வெள்ளத்திலும் காட்டாற்றிலும் வருத்தப்பட்டுவந்து சேர்ந்தார்கள் ஈ-ஸ்ரீ விசாரணைப்பிள்ளையவர்கள் வீட்டில்.

௰-உ சாயந்திரம் கனம் சாப்பட்டம்மாளவர்களுக்குப் பேதியென்று எ - மணிக்குக்கேட்டோம். அ-மணியில் மரித்துப்போனார்கள். கூடயிருந்த கனம் சாப்பட்ட ஐயரவர்களும் மதுரேந்திர ஐயரும் மிசியம்மாளும் பின்பு ஊரார் எல்லாரும் போய்ப்பார்த்தார்கள். இரவிற் கனம் கார்வேல் ஐயரவர்தள்வந்துடனே விடியக்காலம் ஷ அம்மாளை முருகன்குறிச்சிக்கு எடுத்துப்



போகவும் கூட கனம் ஐயரவர்களும் உபதேசி உவாத்தி உ - பேருமவிசாரணை பாக்கியமாத உபதேசியாரும் சபையாரும் போனார்கள். கனம் கார்வேல் ஐயரவர்கள் இடையங்குடிக்கு மிசியம்மாளையும் சின்னத்துரையையுங்கூட்டிப்போனார்கள். ௰௪-உ மாலை மணி அ - ல் முருகன்குறிச்சியிலடக்கம் பண்ணப்பட்டதாக ௰௨-உ செய்திவந்தது.

௰௯-உ மதிய ஆராதனையில், மதுரேந்திர ஐயர், லாசருவைக் கிறிஸ்துநாதர்நாலாம்நாள் எழுப்பினதுக்கு முன்னுள்ள வாக்கியத்தின்பேரில் யோவா. ௰௧. ௨௫, ௨௬, பிரசங்கம் பண்ணினதில் ஷ யம்மாளவர்களும் மரணமாகி நாலாம் நாளின்றென்று சபையாருக்கு முதலான புத்தி சொன்னார்.

௰௮-உ காலைமணி அ - க்குள்ளாக ஷ ஐயரவர்கள் மூத்தகுமாரராகிய பால்த்துரையவர்கள் கோட்டையத்திலிருந்து இயல்பாய் வரும்போது வழியிற்போன இவடத்துக் கூலியாள் காவற்கிணைத்துமடத்துக்கிட்ட ஷ துரைக்குக் காயிதங்கொடுத்தார்களாம். உடனே துக்கமாயிவடம் வந்துசேர்ந்தார். பங்களாவிலொருவருமில்லை. இதுவும் அதிக துக்கமாயிருந்தது. அவருக்கும் மதுரேந்திர ஐயர்தான் உதவியாயிருந் தாறுதற்படுத்திக் கொண்டிருந்தார். ௰௫-உ விடியக்காலம் மிசியம்மாளுஞ் சின்னத்துரையும் வந்தார்கள். ௰௬-உ கனம் ஐயரவர்கள் பாளையங்கோட்டையிலிருந்து வந்தார்கள்.

௰௮-உ ஏகநாசன் காயிதம்வந்ததில் இன்றுசியம்மாள் பிள்ளை அன்னமரிய வியாகுலம் அவர்கள் தலைவாசல் ஓடையில் விழுந்து தண்ணீரிழுத்துப்போகிறபோது தட்டான் பெண்சாதி கண்டெடுத் பிள்ளையோ வென்றெடுக்க நமது பிள்ளையாகக் கண்டு, கொண்டுவந்துபார்த்து பிழைத்ததாகச் செய்தி.

௨௩-உ கனம் கண்காணியாரவர்கள் காலையில்வந்து திடப்படுத்தல் முடித்து சாயந்திரம் உபதேசிமார் உவாத்திமார் பள்ளிப்பிள்ளைகள் சந்திப்பு. ௨௪-உ காலை ௫ - மணிக்குப்புறப்பட்டு டோனவூருக்குப்போய்விட்டார்கள்.

௩௧-உ வரையும் ஞானமுத்து உபதேசியாரிருந்து, மாற்றி சுப்பிரமணியபுரத்துக்குப்போனார். இரும முதல்பிடி எனக்குள்ளாயிற்று.

டிசம்பர்மீ ௪-உ செவ்வாய்க்கிழமை காலை எ - மணிக்கு நேமத்துநல்லதம்பியாபிள்ளை மரித்து பின்பு அனேக்கமா உபதேசிவந்தபின் ௰௨ - மணிக்கு சவிசேஷபுரத்துக்குக் கிழக்கேயிருக்கிற கல்லறைத்தோட்டத்துக்கு வடக்கே யிருக்கிற குருசடிக்கு வடபக்கத்தில் அடக்கஞ்செய்தோம். விசாரணைப்பிள்ளையும் மகன் ஞானப்பிரகாசம்பிள்ளையும் வியாகப்பபிள்ளையும் சவரிராயன் மதுரேந்திர ஐயர் முதலான பிள்ளைகளும் அனேக்கமா உபதேசியும் பா

வன் அந்தோனியும் பாத்திசளும் நம்முடைய சபை மூக்கத்தன்மாருஞ்சில சபையாரும் சில உபதேசிகளுங் கூடநின்றடக்கஞ் செய்யப்பட்டது. அவர் பிள்ளைகளிவடத்தில் ௩ - பேரிருந்தார்கள்.

௰௧-ௌ இரவில் மதுரேந்திர ஐயர் பண்ணைவிளையில் பட்டம்பெறும்படிக்குச் சோதினைக்குப்போனார்கள். மழையிருதியினால் ௰௨-ௌ மூக்குப்பூதி குடியிருப்பு வரை வண்டிபோயிற்று. அதின்பின் வண்டிபோக வழியில்லாததினால் பின்பு கால் நடையாகப் பவுலையரவர்களிருவரும் போனதாகச் செய்தி.

---

+

பிரியமுள்ள தம்பி ஞானசமரிய ஞானப்பிரகாசம்பிள்ளைக்குத் தேவ கிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருந்தேவகிருபையினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறேம். நமதிடத்துக்குவந்தபோது நமது சுகவீனத்தைக் குறித்தும் அந்த விடத்தைக் குறித்தும் பலவித யோசனை செய்துகொண்டும் பின்னும் நாமிவடத்துக்குவருவேன், அண்ணாட்சியவர்களைப் பார்க்கும்படிக்கு என்றுஞ் சொல்லியிருந்ததின் பின்னும் தம்பி யேசுதாசபிள்ளை யிடத்தில் பேய்ப்பூலாங்குளத்தில் பங்களாக்கெட்டி முடிந்தபின்பு கனம் ஐயரவர்களிடத்தில் உத்தரவுவாங்கிவருவேனென்றும் சொல்லியிருந்து மிதுவரையும் வருவீரென்று பார்த்திருந்தும்வரவும் இல்லை காயிதமுஞ் சுகசெய்தியும் தெரியப்படுத்தவும் இல்லை. ஆனது உங்களெல்லாரையுங் குறித்த கவலை எப்போதுமிருக்கிறது. ஆனால் ஒரு ஆளனுப்பவேண்டுமானாலுங் காலரு. கொடுத்தாலுங் கிடையாது. மழையும் சேருஞ் சகதியும் விதைப்பும் பல அலுவலுஞ் சனங்களுக்கு. ஆகையால் இதை தபால்மூலமாய் அனுப்பினேன். இவடத்தில் நேமத்துங்கள் அம்மான் நல்லதம்பியாபிள்ளை யிவடத்துக்கு வியாதியினால் நவம்பர் ௴ ௬-ௌ வந்துசேர்ந்தார். ௰-ௌ கனம் சாப்பட்ட அம்மான் மரித்தார்கள். ஷைமனிதனுக்கு விஷபாண்டு வியாதியும் சிலேற்பன இளைப்பிருமலுமாயிருந்ததற்கு இவடத்து வயித்தியனைக்கொண்டு கூடியமட்டும் ௱ - ஸ்ரீ மாப்பிள்ளை விசாரணைப்பிள்ளையவர்கள் வீட்டில்த்தான் பார்த்தார்கள். சிலவும் அவர்கள்தான். டிசம்பர் ௴ ௯-ௌ மரித்தபோதுமவர்கள்தான் வெட்டிவாங்கிப்போட்டு அனேக்கமா உபதேசிக்கும் ஆளனுப்பியவர்வந்து அவர்கள் வழக்கப்படி செபஞ்செய்து நமது கல்லறைத்தோட்டத்துக்கு வடபக்கமாயிருக்கிற குருசடிக்கிட்டப் புதைத்தோம். அவர்பெண்சாதியும் மூன்று பெண்குழந்தைகளும்



நேமத்தில்த்தானிருக்கிறார்கள். அவர் பூதப்பாண்டி டாணாவுக்கு மாற்றப்பட்டுவரும்போது மூத்தமகள் ஞானப்பூ மூத்தமகன்ஞானசமரியான்பின்னும் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் ஆக ௪ - பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஷை பூதப்பாண்டிக்கு வந்தபின்பு ஷை வியாதி யதிகப்பட்டவே திவாணிசுக்கு எழுதி உத்தரவுவாங்கிப் பதிலாள் ஷை டாணாச் சேவகத்துக்குவைத்து வடக்குன்குளம்வந்து சேர்ந்தார்கள். அவடத்திலும் வியாதிக்குப்பார்க்கவும் உதவிசெய்யவும் ஆளில்லாமல் வருத்தப்படுஞ் சமயத்தில் நம்முடைய செபத்தியாயிமாமனார் வடக்குன்குளத்திலிறந்து போனார் நவம்பர் ௴ ௩-ௌ ஷை தட்டிக்கு நேமத்தாளும் ஞானப்பிரகாசம்பிள்ளையும் போனார்கள். அவர்கள் ஷை நல்லதம்பியாபிள்ளையின் வியாதியும் அவருக்குண்டான மற்றவருத்தத்தையும் பார்த்து வண்டிதிட்டஞ்செய்து மிகுந்த மழையும் தண்ணீருமாயிருக்கிற சமயத்தில்த்தானே ஷை மாசம் ௬-ௌ வருத்தப்பட்டுவந்தார்கள். உங்கள் தாயார் அதற்குமுன் பாளையங்கோட்டையி லின்று செயம்மாளுக்குக் காய்ச்சலில்தோஷம்பிறந்து மிகுந்தவருத்தமாயிருக்கிறதென்று கேள்விப்பட்டு அவடத்துக்குவண்டிவைத்துப்போய் இருபத்தைந்துநாள்வரையும் இருந்து ஷை அம்மாளுக்குச் சுகமாய்ப்புறப்பட்டுவருகிறவழியிலும் முடைய தாயாருக்குச் சுரமும் முன்னவன் மூகத்திலிருந்த பருப்போல மறுபக்கத்திலுமுண்டாய் வழியில்வண்டியிலேயே மூன்று நாளவதிப்பட்டு அகஸ்டோபர் ௴ ௨௯-ௌ வந்துசேர்ந்தாள். அவளுக்குவேண்டிய மருந்து பத்தியமும் பார்த்து சுகமாயிருந்த சமயத்தில் ஷை யவன் தம்பி நல்லதம்பியாபிள்ளைக்கு உதவிசெய்யத்திறப்பட்டாள். அவள் பிரயாசம் வீணாய்ப்போயிற்று அவர் மரித்ததினால்.

இப்பொழுது அவளுக்கும் நமக்குமிப்படிப்பட்ட துக்கமும் விசாரமுமதிகமாயுந் தீராததாயும் இருக்கிறது. ஏனென்றால் ஷையார் மனைவியும் மூன்றுபிள்ளைகளும் நேமத்தில்ஒரு ஆதரவுமில்லாமலுமிருக்கிறது. ஷை சேவகமும் அவர் மகனுக்குக்கிடைக்குமென்ற நம்பிக்கையும்இல்லை இவடத்திலும் மூன்றுபிள்ளைகள் தகப்பனைச்சாகக்கொடுத்துயிருக்கிறது. மூத்த ஞானப்பூ மாத்திர முன்னமே அவள் புருஷனிடத்தில் கோட்டாத்திற்குப்போய்விட்டாள். இந்தப்பிள்ளைகள் மூன்றில் மூத்தவன்தான் நேமத்துக்குப் போகவேண்டும். இப்போது மழையும் வெள்ளமும் வெள்ளக்காடுமாயிருக்கிறதினாலவனவடத்துக்குப்போகவும் அவடத்திலிருக்கிறது யிவடத்துக்குவரவும் ஏதுவில்லை. இதில்வரச்சிலவு போகச் சிலவுக்கும் வருத்தமாயிருக்கிறது. இதில் நம்மாலுந் தாங்காத சமுசாரமுஞ் சிலவுமாயிருக்கிறது. இப்படியும் இன்னமும் பலகாரணங்களினாலும் நமக்குண்டான துக்கஞ் சொல்லமுடியாதிருக்கிறது.

இப்பொழுது நாளது ௰௨-௨ உங்களண்ணாட்சி பட்டத்துக்காக பண்ணைவிளைக்குப்போயிருக்கிறார்கள். கனம் முத்துசுவாமி ஐயரவர்களும் போயிருப்பார்களென்று நம்புகிறோம். தாமிந்த காயிதங்கண்டவுடனே பதில் போனவூருக்கனுப்பித் தபால் மூலமாய்த் தம்பி இயேசுதாசபிள்ளைக்கு வரவும் அவரிவடத்துக்கு அனுப்பவும் எழுதவேண்டியது. புலவனூரிலிருக்கும் உங்களண்ணாட்சியும் மற்றவர்களுஞ் சேமம். அவர் மனைவி வியாகம்மைக்கு இது௴. பேறுகாலத்துக்கு உதவிக்கு உங்கள் சிறியதாயார் தெய்வாயியை வரும்படி யாளனுப்பியிருக்கிறதாம். மற்றயாவருங் கர்த்தருடைய கிருபையால்க் காக்கப்பட்டிருக்கிறோம். முற்றிலுங் கர்த்தர் காப்பாராக.

௲௮௱௫௰௯ டிசம்பர்௴ ௰௨-௨

இப்படிக்கு
சவரிராயன்.

---

௰௩-௨ வடலிவிளையிலிருந்து ஞானமரியாம்பிள்ளை வந்தான் கூடவையனுமாக இரண்டுபேரும். பின்பு நேமத்து நல்லதம்பியாபிள்ளை சமுசாரங் குழந்தைகளுங் கூட கோட்டார்வந்து சேர்ந்தபின் ஷை மாப்பிள்ளை இறந்தசெய்தி கேட்டபின் மகள் வீட்டில் மற்றப்பிள்ளைகளைவிட்டு கைப்பிள்ளையுடனே கூட ஒருபெண்பிள்ளையுங் கூட்டிக்கொண்டு சாயந்திரம் வந்தாள். ௰௭-௨ வடலிவிளையில் அன்னம்மைக்குச் சுரமுண்டாயிருக்கிறதென்று ஆள்வந்தது.

௰௮-௨ விடியக்காலஞ் ஞானமரியாம்பிள்ளை புறப்பட்டுப் போனான். பகல் ஆராதனை முடிந்து வந்தபின்பு ஷை நல்லதம்பியாபிள்ளை பெண்சாதிக்குத் தாலிவாங்கினார்களாம். மாலையில் கனம் சாப்பட்டையர் பண்ணைவிளைக்குப்போனார்கள்.

௰௯-௨ ஏசுதாசபிள்ளைக்கு இன்னாசியம்மாள் தன் புருஷனார் செய்யுமிடுக்கங்களைக் கனம் ஐயரவர்களுக்குத் தெரியப்படுத்தவும் கண்டிப்பாய் எழுதினேன். அதற்குப்பதில்வரவில்லை ௨௭-௨ வரையும்.

௨௭-௨ கோட்டையம் பாஸ்த்துனா புறப்பட்டுப்போனார். ஷை ௰௮-௨ மதுரேந்திர ஐயர் இரண்டாம் பட்டம்பெற்று ௨௩-௨ இரவில்வந்து சேர்ந்தார் கால்நடையாய். ௨௪-௨ ஞானமரியாம்பிள்ளை பெண்சாதிக்கு சற்று சுகமாயிருக்கிறதென்று ஓலைவந்தது. பின்பு ஏசுதாசன் காயிதமும்வந்தது சுகசெய்திக்கு. மதுரேந்திர ஐயர் செபத்தியாயிக்கு ஒரு கிடாரிப் புரமாணமாடு ரூ ௪ - க்கு வாங்கி சீதனமாய்க்கொடுத்தார்.

இந்த ௲௮௱௫௰௯ முடிவைக்காணக் கர்த்தர் எங்களுக்குச்செய்த தயவுக்கு நன்றியறிதலாய்த் தோத்திரஞ்செய்யக் கடனாளிகளாயிருக்கிறோம். கர்த்தருக்குஸ்தோத்திரம்.



## ௲௮௱௬௰ சனுவரி௴ முதல்.

௧-௨ ஓய்வுநாள்.

௨-௨ ஐயன்மார்கள் சந்திப்பு. உதவி சங்கம், எளியவர்கள் சங்கமும். மதுரேந்திர ஐயர் கானவந்த விசாரணை உபதேசிமார், உபதேசிகள், உவாத்திகள் வாத்திச்சிகள் சில சபையார் வைரார் முதலானவர்களுக்கு ரூ ௨ - க்கு வெத்திலை பாக்கு வாங்கிச் செலவுசெய்தார்.

௪-௨ இடையன்குடியிலிருந்து சாமுவேல்ப்பிள்ளையும் சமுசாரத்துடன் கூடப்பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்தார்கள். ௰௪-௨ ஷை சாமுவேல்ப்பிள்ளையும் ௨௩-௨ ஷை சமுசாரம் அருளம்மாளுங் குழந்தையும் அவர்களூருக்குப் போனார்கள்.

௨௫-௨ நானும் மதுரேந்திர ஐயரும் விசாரணை பாக்கியநாத உபதேசியாரும் பாளையங்கோட்டை சங்கத்துக்குப்போனோம். நமதாளில் அவடத்தில் புலவனூர் தம்பி சவரிமுத்துப்பிள்ளை மாத்திரம்வந்தார். ஞானமரியஞானப்பிரகாசம்பிள்ளை வரவில்லை. ௨௬-௨ சாயுங்காலம் இன்னாசியம்மாள் வீட்டிற் சாப்பிட்டேன். ௨௭-௨ பகல் மதுரேந்திர ஐயரும் நானுங்கூடவந்தவர்களுஞ் சாப்பிட்டு இரவு தங்கி ௨௮-௨ விடியக்காலம் புறப்பட்டு இரவில் ௮ - மணிக்கு வந்துசேர்ந்தோம்.

௨௯-௨ ராப்போசனம். ௩௰-௨ சம்பளக்கூட்டம். இந்த௴ எனக்கு ரூ ஒன்று கூட்டி சம்பளங்கொடுத்தார்கள்.

பிற்பரவரி௴ ௰௧-௨ ஞானமரியாம்பிள்ளைக்கு வடலிவிளைக்கு எழுதினது: அவர் மனைவி பேறுகாலத்துக்கு வருகிறதானால் ரூ ௧ - ௴ - ௧ - க்குக் கொடுக்கவும், இப்போது ரூ ௰௫ - அனுப்பவும் எழுதினேன். அதற்குப்பதில் ௰௪-௨ வந்ததில் ஷையார் செலவு முட்டும் ஷை ரூ ௩ - கொடுத்தால்த் தமக்குஞ் செலவுக்கு இல்லை, இவடத்தில்தானே தன் சமுசாரத்தைவைத்து ஒரு ஆளுதவிக்குவைத்துப்பார்க்கவும் எனக்குவரத்தில்குறைவாயிருக்க ரூ - ௰௫ கொடுக்கக்கூடாதென்றும் எழுதினார். ௰௮-௨ நானனுப்பிய காயிதத்தில் அப்படி வருத்தப்படாமல் மனைவியும் பிள்ளையும் இவடத்துக்கு அனுப்பவும் தவசிப்பிள்ளை வைத்துக் குறைவில்லாமற் சாப்பிடவும் அல்லது கனம் ஐயரிடத்திற் சாப்பட்ட ஐயரவர்களுக்குகாயிதம்வாங்கிவரவும் அல்லது இராசினாமாக்கொடுக்கவும் எழுதினேன். அவன் காரியம் பரதாபமாயிருந்தது.

௨௰-௨ மரிய சவரிமுத்துப்பிள்ளைக்கு அனுப்பிய காயிதத்திலிவடத்

துவருத்தங் கடன் முதலானதுக்கு உதவிசெய்யும்படிக்கு கேட்டெழுதினது ௲ உ௫-க்கு.

உ௪-உ திரிபலபுத்தூரிற்படித்த தேவசகாயஞ் சவரிராயனிருவரும் விடுமுறைக்குவந்தார்கள். உ௫-உமுதல் ௬-நாள்பிள்ளையவர்கள்வீட்டில்விருந்து.

உ௭-உ தத்தம்பள்ளி அந்தோனிமுத்தும் பெண்சாதி அருளாயியும் பிள்ளையவர்கள் வீட்டுக்குவந்தார்கள்.

உ௮-உ நேமத்து நல்லதம்பியாபிள்ளை மனைவியும் பிள்ளைகள் இரண்டும் பிள்ளையவர்கள் மாமி சுவாமியடியாள் தமையன் பெண்சாதியும் பிள்ளைகள் இரண்டும் வந்தார்கள்.

மாற்சுமீ ௩-உ எசுதாசபிள்ளை வந்தான். ௪-உ அதிசயபுரம் ராப்போசனத்துக்குபோனேன். ௲த்துகை சனம் உ௱ய - க்கு சுவிசேஷபுரம் ௫௦. ௫-உ சம்பளக்கூடுதல் நானிங்கிருக்கவேண்டியது. ௬-உ தத்தம்பள்ளி அந்தோனிமுத்துப்பிள்ளை பெண்சாதியும் போனார்கள். ௮ - ஸ்ரீ விசாரணை பிள்ளை ௲ - க - ஷை யானுக்கும் பெண்சாதிக்கும் கும்பிட்டு கட்டென்றுகொடுத்தார்களாம். என் வீட்டில் மூன்றுநாள் சாப்பாடுமாத்திரங் கொடுத்தோம். நேமத்து நல்லதம்பியாபிள்ளை பெண்சாதியும்பிள்ளைகளும் உ-உ முதல் ௰-உ வரையும் சாப்பிட்டுப்போனார்கள் வடக்குன்குளத்துக்கு. மதுரேந்திர ஐயர் சேலையொன்று ௲ உ- ஷை மகனுக்கு வேட்டி ௲ இ- ப- அ- ரொக்கம் வாங்கிக்கொடுத்து ஒருகோரம்பாயும் ஒருபடி சிறுபயறும் கையில் ௲ வ - ங்கொடுத்தனுப்பினார்கள்.

௰௩-உ ஞானசமரியாள்பிள்ளைக்கு ஒருகாயிதமெழுதி ஞானமுத்து வசமனுப்பினேன். ௰௫-உ சாயந்திரமவன் மாறுத்தரவுங்கொண்டு வந்தான். யாவருஞ் சுகமாயிருக்கிறார்கள்.

௰௭-உ மோசே உபதேசியார் இவ்விடத்திலொருசெபக்கூட்டம்வைத்துப்பரிசுத்த ஆவிக்காக செபஞ்செய்தார். நான் ஆயித்தமில்லாதிருந்ததினாற் போகவில்லை. மதுரேந்திர ஐயர் கிராமங்களுக்குப்போனார்.

உ௪-உ வடலிவிளையிலிருந்து ஞானசமரியாம்பிள்ளை பெண்சாதியும் பிள்ளையும் வந்தார்கள்.

உ௬-உ எசுதாசன், தேவசகாயம், சவரிராயன்மூன்றுபேரும் இடையன்குடியில் அருளம்மாளையும் மற்றவர்களையும் பார்க்கப்போனார்கள். உ௭-உ சாயந்திரம் வந்தார்கள். ௩௰-உ இராவிற் பயணப்பட்டு ஆசீர்பாதபுரம் பாதைக்கு ஷை தேவசகாயமுஞ் சவரிராயனும் கூட வேலைக்காரன் ஞானமுத்தும் திரிபலபுத்தூருக்குப்போகத்தான்.



ஷை வடலிவிளையிலிருந்து வந்தவர்கள்கூடவண்டியும் ஷை துணையாள் - க ௲ வந்த வண்டிக்காரனுக்கும் ஷை ஆளுக்கும் மாட்டுக்குந் தீவனமும் உ௭-உ வடம்போய்ச்சேருமட்டுஞ்செலவு நம்மோடே. ௩௰-உ திரிபலபுத்தூருக்குப் பிள்ளைகள்போகப் புறப்பட்டு ஆசீர்பாதபுரம்வரையும் கூட வேதநாயகம் போய்விட்டுவந்தான். திரிபலபுத்தூருக்குப்போகிற பிள்ளைகள் சட்டைகள் முதலான சில சாமான் அனுப்பிக் காயிதமும் கூலிகொடுத்து வேதநாயகத்தையனுப்பினோம்.

ஏப்பிரல்மீ க-உ இராவிற்.

மதுரேந்திர ஐயர் காயிதம்.

உ-உ ஈசாக்கு உவாத்தியார் சமுசாரங் குழந்தைகள் தாயுங்கூட ஆறுமாக ௬ - சனம் ஷை ஐயர் வீட்டுக்குவந்தது, ஷை யீசாக்குஉவாத்தியார் மனைவி, பிள்ளைகள் பேரில்ச்சொன்ன ஆவலாதியினிமித்தம் பிள்ளைகள் பாளையங்கோட்டையிலிருந்து ௬-உ புறப்பட முன் காயிதமனுப்ப அருளுசைலத்துக்குகூலி கொடுத்தது.

வியாகப்பபிள்ளை மனைவி ஷை உ-உ பிள்ளையவர்கள் வீட்டுக்கு வந்தாள். அவளை ஷை பிள்ளை வீட்டில் நன்றாய் விசாரிக்கவில்லை.

௪-உ இராவில் இளஞ்சுனைக்குப்போயிருந்த பிள்ளைகளெல்லாரும் பாடுபட்டபண்டிகைக்கு வந்தார்கள். ஷை வியாகப்பபிள்ளை கொழும்பிலிருந்து ஆசீர்பாதபுரத்துக்குவந்து இருந்துதகப்பனுருக்குக்காயிதமனுப்பினார் ஷையார்கள் தன்மனைவியை ஆசீர்வாதபுரத்துக்கு அனுப்பும்படி. ஷையார்கள்மருமகளை நன்றாய்விசாரியாததினால் செபத்தியாயி வீட்டில்நாலுநாளாய் சாப்பிட்டாள். அவளிடத்தில் ஷை காயிதத்தைக் கொடுத்தப்போக மனதானாற் போகட்டுமென்றுஞ்சொல்லிவிட்டார்கள். அவள்போகாதிருக்க. ஞானப்பிரகாசம்பிள்ளை தமையனைக் கூப்பிட எ-உ சாயந்திரம்போய் கூட்டிக்கொண்டிரவில் தானேவந்தார்கள்.

அ-உ உயிற்றபண்டிகை.

௯-உ ஷை ஈசாக்கு உவாத்தியார் மனைவி முதலானவர்களுக்கும் ஐயர் வீட்டுப்பிள்ளைகளுக்கும் செபத்தியாயியும் அவள் மாப்பிள்ளைக்கும் தருமநாத சஞ்சிவிக்கும் பிள்ளையவர்கள் வீட்டில் விருந்து. ௰-உ ஷை ஐயர் வீட்டிலுங் கடாய் அறுத்து ஷை கொழும்புக்குப் போய்வந்தவர் மனைவி பிள்ளையவர்கள் வீட்டுக்குழந்தைகளுக்கும் எங்களுக்கும் விருந்து.

௰௩-உ சாயந்திரம் ஷை இளஞ்சுனையிலிருந்துவந்த பிள்ளைகளுங்கூட செபத்தியாயியுங் குழந்தையுங்கூட இளஞ்சுனைக்குப்போனார்கள்.

௰௨-உ ௸ சாக்கு வாத்தியார் சேகரம் சாத்தன்குளத்துக்குப் போனார்கள். கூடத்துணைக்கு கூலி ஆள் ஒன்றுக்கு ௲ அணாக்கால் ஐயர் கொடுத்தனுப்பினார். சிறிபலபுத்தூருக்கு கூடப்போன ஞானமுத்துஞ் சுகத்துடன் பிள்ளைகள்போய்ச்சேர்ந்து காயிதமுங்கொண்டு வந்தான். ௸ ௭-உ பாளையங்கோட்டை மாப்பிள்ளை முனிசுப்பிள்ளை எழுதியகாயிதத்தில் கிறிஸ்தியான் பிள்ளைமகன் மாசில்லாமணிவந்திருந்து சாத்தானுவேல் ஐயரின் பெண்சாதியைக் கூட்டிக்கொண்டுபோகவும் அவனைப்பிடித்து கலெக்கட்டர் கச்சேரிக்கனுப்ப ௸யானுக்கு அவாதம் ௲ ரூ௰-கொடுக்கவில்லையானால் ஆறுமாசத்தீர்ப்புமாக்கியிருக்கிறதென்றெழுதினார்கள். பண்டிகைக்குவந்திருந்த சனம் சாப்பிட்ட ஐயரவர்கள் பங்களா ஆலமரத்தில் பந்தலுக்கு கால்வெட்டின சாமுவேல் வாத்தியாரையும் வெளியிற் கள்ளிசெறுவைக்கு வெட்டும்படி உத்தரவு கொடுத்த மதுரேந்திர ஐயனையும் விசாரித்துப்பின்புவிசாரணைப்பிள்ளைக்குச்சொல்லி ௸சங்கதிக்குக்காவல்க்காரர்பேரில்பாரதுபோட்டுவாங்கும்படி சொல்லிப்போனதாகவுங்கேள்வி. ௸யாரெழுதினபடி காவல்க்காரனுக்கு கட்டளைவந்தது. ௸காவல்காரன் ௸ ஐயரவர்களுக்குக்கொடுக்கும்படிக்கு ௸கம்புக்குங் கள்ளிக்கும் ௲ ஒன்னேகாலே அணாக்காலும் உத்தரவில்லாமல் வெட்டினதுக்கு ௲ அரையே அணாக்காலுமாக ரூ. உ, மதுரேந்திர ஐயனிடத்திலும் விசாரணை சாமுவேல் உவாத்தியாரிடத்திலும் வாங்கி ௸ ஐயருக்குக்கொடுத்துத் தீர்த்தான்.

௨௪-உ இன்னாசியம்மாளும் பிள்ளையும் கூடவேலைக்கு பாப்பாத்தியுங் கூட்டிவந்து சேர்ந்தாள்.

௨௫-உ இளஞ்சனைக்குப்போயிருந்த முத்து மரியவியாகுலமு மற்றப் பிள்ளைகளும் வந்தது. யோவான்பிள்ளையும்அவர் பெண்சாதியும் வந்தார்கள் சனம் வால்பிஐயரும் அம்மாளும் வந்தார்களவர்களும் சனம் சாப்பிட்டர் ஐயருக்குச் சுகிக்கியமில்லையென்பதினால் பாளையங்கோட்டைக்குப் போகும்படிக்கு மிசியுங்கூடவந்துபோனார்கள் ௸ ஐயரவர்கள் சாத்தன்குளத்துபாதைக்குப்போனார்கள்.

௨௮-உ இளஞ்சனைக்குப்போயிருந்த யாவருந் தருமதாசசஞ்சீவி செபத்தியாயியும் வந்தார்கள்.

மெய்ஞ்ஞசாக்கு வாத்தியார் மனைவியும் பிள்ளைகளும் சிறிபலபுத்தூருக்குப்போகும்வழியில் குடவண்டி சாய்ந்து ௸ மகன் சாமுவேல் கைமுறிந்துபோனதாகச் செய்திவந்தது. ௸ ஆசிர்வாதபுரத்திலிருந்த சத்தியநாதபிள்ளை, மருமகன் கொழும்புக்குப்போனகாலத்தில் மகளுக்கு சாப்பாடுகொடுத்த





துக்குக்கணக்குப்பார்த்து ௸ வியாகப்பபிள்ளை ரூ. ௭௩ - கொடுத்துவந்ததாக ஒரு பேச்சுண்டானபோது சொன்னார். இப்படிப் பிள்ளைக்கு சாப்பாடுகொடுத்ததுக்கு ௸யார் ரூவாய் வாங்கிறது நியாயமாவென்றும்பேசிக்கொண்டிருந்தோம். அந்தப் பட்டிவங்கிஷ மப்படிக்கு அருமைகெட்ட சனமென்றுசொல்லிப் பேசாதிருந்தோம்.

---

+

பிரியமுள்ள தம்பி ஞானப்பிரகாசம்பிள்ளைக்குத் தேவகிருபையுண்டாவதாகவும்.

இவடத்தில் யாவருந் தேவரிரக்கத்தினாலே சேமம். அப்படியே அவடத்துச் சேமாதிசயங்களையும் அறியவிரும்புகிறோம். நாளது ௴ ௰௪-உ வெள்ளிக்கிழமை யிரவில் ௰௨ - நாழிகையிற் கர்த்தருடைய அளவுருக்கப்படாத இரக்கத்தினாலே விசேஷ புதுமையாகக்காப்பாற்றி அன்னம்மாள் ஒரு பெண்குழந்தை பெற்றாள். ௰௬-உ சாமுண்டாகியும் பின்னுஞ்சுகத்தைக்கொடுத்தார். குழந்தைக்கும் ௰௫-உ சுகந்தாள்வாயிருந்து அதற்குங் கர்த்தர் சுகத்தையருளினார். இவ்விதமாயிதுவரையும் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இதுக்கு முன்னும் குழந்தைபிறந்தபோதுந் தமக்குக் காயிதமெழுதும்படிக்கும் அனுப்ப ஆள்விசாரித்ததிற் கிடைக்கவில்லை. அதினால் அவடத்துச்செய்தியும் இவடத்துச்செய்தியும் அறியவில்லையென்று மிகவும் விசாரப்பட்டதபாலிற்காயிதமனுப்பலாமானாலும் தமதிடத்தில் எப்போசேரும் என்றும் நினைத்திருக்கையில்நேற்று இரவில்நாகமணிநாடான்வந்தது சந்தோஷமானகாரியமாயிற்று, கர்த்தர் முற்றிலுஞ் சந்தோஷத்தைக்கட்டளையிடுவாராக. தாம் எண்ணெயனுப்பியதில் முன்வாங்கின நாளிக்குவாங்காமல் சின்னப்படிக்கு வாங்கினதால்ஒருபடி எண்ணெ குறைவாய்க்கண்டது. ஆனால் இப்போதிவடத்தில் சின்னபடிக்கு ௲ காலே அணாக்கால்விலையாயிருக்கிறது. அப்படியே அவடத்தில் சேருக்கும் நமது வீட்டு நாளிக்கு நல்ல எண்ணெயாயவடத்திற்கிடைத்தால் ௬ - படி யெண்ணெ வாங்கிக்கொண்டுவருகிற ஆள்வசத்திலனுப்பினால் நல்லது. கூலியாள் கொடுக்கிறதானால் இலாபமில்லை. இது நிற்க. தமதுடைய சிறியதாயார் இதுவரை யிவடத்துக்கு வருவாளென்றே பார்த்தோம். அவள் வாராததினால் இவடத்து வேலைக்கு வருத்தப்படாமல் கர்த்தர்கிருபையாய் இன்னாசியம்மாள் பாளையங்கோட்டையிலிருந்து பாப்பாத்தியும் கூடக் கூட்டிவந்தாள். இதுவரையும் இவடத்து வேலைக்குக் குறைவில்லை. யவனுக்

கு ஒரு சேலைவாங்கிக்கொடுக்கவேண்டும். அன்னம்மாளுக்கு உடையாத்துச்சேலைக்காக ரூ.-ஒன்றே முக்காலே மாகாணிக்கு. கருத்தயானத்தார் சேலை வாங்கிக்கொடுத்திருக்கிறது. தாம்முந்தின கணக்கில் பதினாலணாவே அரைக்கால் ரூ. வந்தது. ஷை வரவு ரூ. ௧. அதற்குத்தாம் பற்று ரூ. ௰௪ - போக வரவு ரூ. ஒன்றணாவே அரைக்கால். ஆக உம்முடைய பற்றுத்தான் அதிகமாயிருக்கிறது. சின்னபிள்ளையாண்டானுடைய தொந்தரவு மிகுதி, யிதுவும் அன்னம்மை உங்களம்மையைக் குரங்காட்டம் பண்ணுதல் மிகுதி. இதுவும் உம்முடைய தாயின் வைழக்குணத்தினால் ரொம்ப உபத்திரவப்படுகிறாள். மிகவும் ஒடுங்கிப்போயிருக்கிறாள். பிலவீனத்தில் வியாதியுங்கூடத்தான். அதோடு உபத்திரவப்படுத்தத்தக்கவர்களும் வருகிறார்கள். செலவும் வருகிறது. இப்படி எங்கள் பாக்கியமிருக்கிறது. பணக்குறைவின்றி வேறுகுறையொன்றும் நமக்கு இல்லை. எல்லாம் தேவயிரக்கமே. மற்றுங்காரியங்களெழுதவேண்டியதால் ஷை காட்டான் துரிதமாய்ப்புறப்பட்டதினாலிம்மட்டில் முடிக்கிறேன். கர்த்தருக்குச்சித்தமானால் ௰-௳க்குள்ளாக ஒரு அன்வருமம்போது எழுதுவேன். கர்த்தர் நம்மெல்லாரையும் காப்பாற்றி ரட்சிப்பாராக.

௲௮௱௬௰-ம்௵ இப்படிக்கு

மெய்மீ ௨௰-௳ சவரிராயன்.

[இது சகாயபுரம் உபதேசியார் ஞானப்பிரகாசம்பிள்ளைக்கெழுதியது].

---

ஜுன்மீ ௨-௳ பாளையங்கோட்டை சின்ன மாசில்லாமணிப்பிள்ளை மகன் விசுவாசத்துக்கும் செங்குளம் கல்லத்தியாபிள்ளைமகளுக்கும் ௭-௳ கலியாணமென்று இருவருங் காயிதம் எழுதி வந்தது. ஷை தெய்வயில்த்தானே வடக்கன்குளம் மிராசுப்பிள்ளைக்கு இளையகுடியாள் மகன் பெத்தியானுக்குத் தம்பாபிள்ளைமகள் இளையபிள்ளையை விவாகமுடித்ததாக குருவின்றத்தம் கனகப்பபிள்ளை யவடத்துக்குப்போயிருந்து ௰௩-௳ வந்து சொன்னார். திங்கள்கிழமையுஞ் செவ்வாய்க்கிழமையும் நமது வீட்டிலும் ௱-ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டிலுங் கூடவந்த வண்டிக்காரனுமவரும் விருந்து சாப்பிட்டுப் போனார்கள். புதன்கிழமை காலமே சாப்பிட்டுப் போனார்கள்.

௰௪-௳ சகாயபுரத்திலிருந்து ஞானசமரியாள்பிள்ளைவந்து தன்னை சண்டைவிலக்கு மாத்திரிருக்கிறதாகவும் சொன்னார்.

௰௫-௳ காலமேமுதல் ௰௭-௳ வரையும் மதுரோந்திர ஐயர் பிள்ளைகளுக்கு ௱-ஸ்ரீ விசாரணைப்பிள்ளைவீட்டிலிருந்து. ஞானசமரியான் பிள்ளைக்கும் இரண்டுவேளை சாப்பாடுகொடுத்தது. ௰௯-௳ விடியக்காலை போனார் ஷை சகாயபுரத்துக்கு.

---



## ௲௮௱௬௰-ம்௵ ஜூலாய்மீ முதல் சவரிராயன் ரிப்போர்ட்டு.

௧-௳ கனம் சாப்பட்டர் ஐயரவர்களிடத்தில் சமாரியாவிலிருந்த என்சொந்தவீட்டைப் பிடுங்கிக்கொண்டதையறிவித்தேன்.

௩-௳ ஆல்வாய்பிள்ளை பெண்சாதியும் மூத்த மகளும் வியாகப்பபிள்ளை வீட்டுக்கு வந்தார்கள்.

௯-௳ பாளையங்கோட்டை சங்கத்துக்குப்புறப்பட்டு மதுரோந்திர ஐயரவர்களும் பிள்ளைகள் நாலு பேரும் நமது வீட்டிலிருந்த பாப்பியும் பிள்ளையவர்கள் குமாரன்வியாகப்பபிள்ளையும் அவர்மச்சினர் வியாகப்பபிள்ளையுங்கூட திருமலாபுரத்தில் தங்கியிருந்து,

௰-௳ பாளையங்கோட்டையில் காலை ௯-மணிக்குச்சேர்ந்தோம். ௰௧-௳ கைம்பெண் சங்கம், தமிழ் தரும சங்கம், புஸ்தக சங்கமுமாயிருந்தது. அவ்விடத்தில் மரியசவரிமுத்துப்பிள்ளையும் ஞானசமரியாப்பிள்ளையும் ஏசுதாசபிள்ளையும் வந்திருந்தார்கள்.

௰௨-௳ ஷை மதியத்துக்குமேல் ஷை முத்தமரியவியாகுலம் முதலான நாலு பிள்ளைகளுஞ் சாண்டைக்குப் படிக்கும்படிபோனார்கள். ஆசீர்வாதபுரம் விசாரணை வேதநாயகம் உபதேசியார் மகன் ஏசுதாசனுக்கும் பேரின்பமுத்து உபதேசியார் மகளுக்குங் கலியாணமுடிந்தது. எனக்குப் பேதியும் பின்பு சுரமும் தலையிடியுமுண்டாயிருந்தது. ௰௩-௳யும் அவ்விடத்திலிருந்து ௰௪-௳ விடியக்காலம் புறப்பட்டுவந்தோம். தெய்வாயியும் அவள் மகள் விசுவாசமும் பேத்தியுங்கூடவந்தார்கள். யிரவில் ௰-மணிக்குவந்துசேர்ந்தோம்.

௰௮-௳ ஷை ஆலவாய்பிள்ளை சமுசாரமு மகளும் போனார்கள் வடக்குன்குளத்துக்கு.

௨௰-௳ வடலிவிளைக்கு அன்னம்மையை அனுப்பினோம் கூடத்தெய்வாயியும் கூலியாள் இரண்டுபேரும்போனார்கள். ௨௧-௳ சாயந்திரம் பாளையங்கோட்டை மாப்பிள்ளை இராயப்பபிள்ளை வந்தார்கள். ௨௭-௳ சாயந்திரம்வரையும் இருந்து சட்டிச்சை தங் கட்டிக்கொண்டுபோனார்கள். இரண்டுநாள்த்தவிர மற்றநாள் கனம் மதுரோந்திர ஐயர் வீட்டில் சாப்பாடு.

௨௮-௳ ஷை ஐயர் கிராம விசாரணைக்கு கீள்சேகரத்துக்குப்போனார்.

௨௯-௳ கனம் சாப்பட்ட ஐயரவர்கள் சுகமில்லாமல் ௯ - மணிக்குப் புறப்பட்டுப் பாளையங்கோட்டைக்குப்போய்ச் சுகமாய் ஆகஸ்டுமீ ௧-௳ இரவில் வந்துசேர்ந்தார்கள்.

ஆகஸ்டுமீ ௪-உ சாயந்திரம் வடக்குன்குளத்துக்குப்போயிருந்த வியாகப்பபிள்ளை கிறிஸ்தியான்பிள்ளையையும் கூட்டிவந்தார்.

௨-உ காலை தெய்வாயி.வடக்குன்குளத்திலிருந்து தன்மூத்தமகளையும் அவள் பிள்ளைகளையுங் கூட்டிவந்தாள் ஐயனையும்மனைவி பிள்ளைகளையும் பார்க்க. ஷை ஐயர் கிராமத்துக்குப்போயிருந்தார். ௬-உ சாயந்திரம் தமது வீட்டுக்குவந்தார். அதுக்குமுன்னவர்கள் மனைவி ஷை தெய்வாயியையும் மகளையுந் தாதவிசனமாய்ப்பேசினுளென்று அவள் மாமி தட்டிக்கேள்க்கப்போனவளையும் விசனமாய்ப்பேசினதுமன்றி ஷைஐயர் வரட்டுமென்றும்இ னியவன் பிள்ளைகளுக்கும் மக்கள் மருமக்களுக்கும் முன்னெளவுக்குப் போட்டதுபோலப் போடவேணுமென்றும் அநேகங்கொடுமை அவளுக்கு முன்செய்ததுபோலவுஞ்சொன்னதினுல் ஷை தெய்வாயி சேகரம் நமது வீட்டிலிருந்து ஷை இரவில் ஷை ஐயனை கண்டுகொண்டு மறுநாள் ௬-உ அணைக்கனைக்குப்போனுர்கள். ஷைசண்டைச்செய்தி ஐயருக்குத்தெரிந்தது ஒன்றுந்தட்டிக்கேட்டுத்தாயாரைச் சமாதானப்படுத்தாததினுல் அவள் ௫-உராப் போசனத்துக்கும்வரவில்லை. ஷை ௬-உ கொழும்பு அருமைநாயகஉபதேசியார் ஷை ஐயர் வீட்டுக்குவந்து கூட ஒரு ஆணுமாக ஏழெட்டு நாள்வரையுமிருந்துபோனுர்கள்.

௮-உ செபஞான வாத்தி ஷை ஐயரிடத்தில்வந்து கூடக் கிராமத்துக்குப்போய்ப் போதித்துவந்துமிருந்தும். ௨௬-உ நன்னிகுளங் கிராமத்துக்கும்ஐயர்கூடப்போய் சாப்பிட்டு பின்பு ஐயர் ௫-உ ஒன்று சர்த்தருடைய ராமத்துக்காகக் கொடுத்து அனுப்பி விட்டதினுல்போனுர்.

௬௰-உ காலையில் ஏகதாசபிள்ளை சாண்டை, புலவனூர், சேர்மாதேவி முதலான இடங்களுக்குப் போயிருந்துவந்தான்.

௩௧-உ காலை க மணிக்குமேல் இன்னுசியம்மாள் குழந்தை பெற்றுள்.

௲அ௱௬௰-ஹு செப்தெம்பர்மீ

க-உ சனிக்கிழமை விடியக்காலம் ரு மணிக்கு ஈ-ஸ்ரீ சவரிமுத்து பிள்ளையவர்களுக்கு ௬-வது ஆண் பிறந்தது. ஷை பிள்ளை மகன் வியாகப்பபிள்ளை சமாரியாவில் புதுப்பள்ளிக்கூடங் கட்டியிருந்ததில் இங்கிலீசுப்படித்துக் கொடுக்கத் துடங்கினுர்.

௰-உ திங்கள்கிழமை கனம் மதுரேந்திர ஐயரவடத்துச்குப்போய்ச் செபம்பண்ணி பிரதிஷ்டை செய்தார்கள். ஷை அ-உ வடக்குன்குளத்து சிரிலவகுண்டம் தேவசகாயம் ஈ-ஸ்ரீ பிள்ளையவர்கள் வீட்டில்வந்து, என்னுடைய தகப்பனுர் அவர் தகப்பனுரிடத்தில் கடன் முறிகைகளைக்கும் எழுதிக்கொடுத்து வாங்கினது என்னிடத்தில் கேட்டுவந்ததைக் குடாதிருந்



ததுபோலவும், இப்போதவனதை வாங்கவந்திருக்கிறதுபோலவும், ஷைபிள்ளையவர்களிடத்திலு மதுரேந்திர ஐயரிடத்திலுஞ்சொல்லிப்போய் ௰-உ கனம் சாப்பட்டர் ஐயரவர்களிடத்தில் அவர்கள் சுவாமியார் கடிதமுங் கொண்டுபோய்க்கொடுத்துப் பேசினுன். ஷை ஐயரவர்கள் என்னை வருத்தி விசாரித்தார்கள். நான்சொன்னது: நான் இந்தக் காரியத்தை யென் தகப்பனுர் இருந்த காலத்திலும் அவர்கள் மரித்துப்போனபின் என் தமையனுரும் நானும் ஆஸ்திபிரிக்கும்போதும் ஷை கடன்கொடுத்திருக்கிறதாகவும் அது எனக்குத்தரவேண்டுமென்றுவது ஷை முதலாளி மிக்கேல் பிள்ளை சொன்னதுங் கேட்டதுவுமில்லை; ஷை என் சகோதரனுர் இறந்துபோனபின் ஷை கடன்கொடுத்திருந்ததாகவும் அதுபின்னுலே வாங்கலாமென்றிருந்ததாகவும் அதற்கு ஷை தகப்பனுரும் தமையனுரும் இறந்துபோனுர்களே அதினுல் அந்தக்கடனவர்களோடே போச்சென்றும் எனக்குச்சொன்னுர்; நானென்றுஞ்சொல்லவில்லை; அதின்பின்புமவடத்திலிருந்தும் ஒருபோது என்னிடத்தில் அந்தப்பேச்சுப்பேசவில்லை; ௲௫-ஹு நான் மிசியோனில்ச்சேர்ந்து அலுவல் பார்த்துவந்தகாலத்தில் சத்தியநகரத்திலிருந்து ஒருவதலி வடக்குன்குளத்துக்குப்போனபின் ஷை கடனிருக்கிறதை உன்னிடத்தில்ச்சொல்லுகிறேனென்றுர்; பின்னொருகாலத்திலவடத்துக்கு நான் போனபோது ஷை முறிகைக்களைக்கு இரண்டும் என்னிடத்தில்த் தந்து யேதாவதுகொடுவென்றுர்; நான் பேசாமல் ஷை சீட்டு இருக்கட்டுமென்றுகுடுத்துவிட்டுவந்தேன்; அதைவாங்கிவராதது என்தப்பிதம்; ஆனுல் என் முகாந்திரம்: முற்காலங்களில்க் கேளாமலும் இப்போதிந்த வேதத்தில் வந்ததினுல் அல்லவாகேள்க்கத்துணிந்தாரென்றும் அப்படியானுல் முறியை நாம் வாங்கக்கூடாதென்றும் நினைத்தேன்; இனியவரும் நானுங் கோட்டில்ப்போனுல்எங்கள் காரியந்தீருமென்றேன். அதற்கு கனம் ஐயரவர்கள் சொன்னது: இது சங்கதி வெகுகாலக்காரியமானதையால் ஒன்றுஞ்சொல்லயேதுவில்லை, ஷை கடன்முறிகளைக்குப்படிக்கும் உன்தகப்பனுர்வாங்கியிருக்கும் என்றும் அதுகொடுக்கவேண்டுமென்று முன்மனதிலிருக்குமானுல் இப்போதல்ல நடப்பிலேயே கொஞ்சங் கொஞ்சமாய்க் கொடுக்கலாம் என்றுர்கள். அதற்கு நான் ஷை கடன் வாங்கியிருக்கலாம், அவராலிவர் அநேக நன்மைபெற்றிருப்பார், அதினுல் மன்னித்திருப்பார், நான் என்மனதின்படியொன்றுங்கொடுக்கத்தக்கதில்லையென்றேன். அப்போதுஷை தேவசகாயம்: இவர்களுங் கடன்வாங்கியிருக்கிறுர்களென்றுன். அதற்குநான், ஒருதுட்டாவது எனக்குஅவர்கையினுல்தந்துவாங்கினதில்லை, துலாவடித்தீர்வைவகையில்த்தீ கதி கொடுக்கவேண்டியதிருந்ததுக்குநானுமவர்களுக்குச்செய்வதேலே

ளுக்குசம்பளமும்வாங்கவில்லை; பின்னும்பருத்தித்தண்டம்ஒன்றுக்குநீர்வை கூ இ கொடுக்கவேண்டுமென்றந்தப்பருத்தியையும் அவர்கள்வேருெருவருக் கடைத்துப்போட்டார்களென்றேன். பின்னுங்கனம் ஐயாவர்கள் எனக்கு: உன்மனதில் ஏதாவது கொடுக்கவேண்டுமென்றிருக்குமாகுல் உங்களுக்குள் ளே பேசிக்கொண்டுகொடுக்கலாம்; நாமொன்றுமிதிற் சொல்லத்தக்கதில்லைப் போகலாமென்றுத்தரவு கொடுத்தனுப்பினர்கள். ஷை தேவசகாயம் இராவில் என்வீட்டுக்குவந்து: ஏதாவது தாங்கள் தயவுசெய்யுங்கள், கஷ்டப்படுகிறே னென்றான். நானிந்தசமையத்திலவனிடத்தில் ஒன்றும் பேச நியாயமில்லை யென்றெண்ணி: நாங்களெளியவர்களென்றுமின்றும் நீ முதலாளியென்றுசொ ல்ல: அவன் இப்போது எங்கள்காரியங்கள்கஷ்டந்தான்; உங்களுக்கிப்போ குறைவென்ன இருக்கிறதென்றான். அதற்கு: எங்கள் காரிய மக்காலமுதலிக் காலம்வரையும் சாப்பாடு வஸ்திரங்கள் எல்லாங் குறைவில்லை; நாங்கள் ஒரு தரிடத்திலும் எங்கள் குறைவு இப்படி யென்றுசொல்லி வாங்கினதுமில்லை; எங்கள் பிள்ளைகளை வளர்த்துக்கொள்ளுங்களென்று சொல்லிவிட்டதுவு மி லையாதுவென்றுசொன்னேன். பின்பவன்போகிறேன், நானெக்கு உத்தரவு கொடுக்கவென்றான். அதற்கு, நீ யாரைக்கேட்டுவருகிறாய், ஆரைக்கேட்டுப் போகிறாய். உத்தரவென்னவென்றேன். போய்விட்டான். ௰௬-௳ ஷை பிள் ளையவர்கள் வீட்டிலிருந்தான். ஷை பிள்ளையவர்களிரவில் என்னிடத்தில் வந்து ஷையான் வந்திருக்கிறானே யென்றும், ஷை கனம் ஐயாவர்கள்சொன் னதுதான் சரியான காரியம், உங்கள் மனதின்படி யேதாவது கொடுக்கிற துண்டாவென்றார்கள். என் மனதின்படி கொடுக்கத்தக்க தொன்றுமில்லை ஷை கணக்கு முறிகள் பார்த்ததில் ஷையான் மாமனூர் என்னிடத்திக்கணக் கெழுதிவாங்கினதுபோலிருக்கிறது, யிவனுமப்படியே பழைய கணக்குவைத் துக்காயிதா சாட்சியுண்டாக அங்கங்கே சொல்லிப் பின்பு வாங்கலாமென்று வந்திருக்கிறானைகையால் என் மனதிலேதாவது கொடுக்கவேண்டியதில்லை யென்றேன். அவர்கள், ஷை ஊரில் உங்கள் மனையிருக்கிறதை ஒருவிலைபோட் டுக்கொடுத்து ஷை முறிசீட்டை வாங்கிக்கொள்ளலாமா, பின்னு மவன், க டன்தரவேண்டும் தந்தானில்லை யென்றும் இளப்பமாய்ச்சொல்ல யேதுவிரா தே யென்றார்கள். நான் சொன்னது: அந்த இளப்பச்சொல்லெல்லாம் இது முன் நம்முடைய யிடங்களெல்லாஞ்சொன்னதவுங் கேட்டாயிற்று, இது க்காக ஞாயமில்லாத காரியத்தையிப்போசொடுக்கவுங்கூடாது, ஷை யனைபிதா ப்பிதாக்கள் காலத்து மனையையும் விற்கிறதுமில்லை யென்றுஞ் சொன்னே னதுவுமன்றி, உங்கள் மனமெப்படி, உத்தரவுப்படிக்குஞ் செய்கிறேனென்



றேன், அவர்களிது காரியத்தில் நானுஞ் சொல்லத்தக்கதொன்றுமில்லை, யவ னைப் போகச்சொல்லுகிறேனென்று போய்விட்டார்கள். ௰௭-௳ விடியக் காலம் அனுப்பிவிட்டார்கள்.

௰௯-௳ குநவினைத்தஞ் சஞ்சீவிநாதனுங்கடைவீட்டுசவரிராயபிள்ளையும் பிள்ளையவர்கள் வீட்டுக்கு வந்தார்கள். ஏசுதாசபிள்ளை விடுமுறைமுடிந்து ௰௯-௳ விடியக்காலம் பாளையங்கோட்டைக்குப் போனான். ஷை சஞ்சீவி நாதன் குருவினைத்தந்தத்தங்கள் வீட்டுக்குவழிவிட்டிருந்த நிலத்தகால் வி யாட்சியதுக்குச்சிபாரிசுக்காயிதம் பிள்ளையவர்களிடத்திலுங் கனம் மதுரேந் திர ஐயரிடத்திலும் வாங்கிப்போனான்.

௰௭-௳ ஷை ஏசுதாசன் ஒரு மரப்பெட்டியனுப்பினான் எமக்கு. செபத்தி யாயிக்கு எப்போதுந்தன் புருசன் செய்துவருகிற செஸ்ட்ரேந்திமயின்னு மவன் பேசியடித்ததைக்குறித்துக் கனம் சாப்பட்டர் ஐயாவர்களிடத்திலும் பாரது சொன்னான். ஷை சாயந்திரம் கனம்சாப்பட்டஐயாவர்களுக்குச் சுகமி ல்லாததினுல் பாளையங்கோட்டைக்குப் போனார்கள்.

௨௧-௳ நமது தருமதாதசஞ்சீவியும் யாக்கோவு சவரிராயனும் மரிய வியாகப்பனும் ஷை பாளையங்கோட்டைக்கு இங்கிலீசுபடிக்கும்படிக்கு அ னுப்பினோம்.

௨௨-௳ ஷை ஐயாவர்கள் சுகமாய்வந்து சேர்ந்தார்கள்.

௨௩-௳ முனிசப்பிள்ளையவர்கள் கடிதம்வந்ததில் அருளப்பபிள்ளைக்கு ஒரு ஆண் குழந்தைபிறந்ததாக எழுதியிருந்தது.

௨௫-௳ பள்ளிப்பிள்ளைகள் சர்வசோதனை.

௨௮-௳ குசைமரியான்பிள்ளை காயிதம்வந்ததில் பள்ளிக்கூடம் முருக ன்குறிச்சியில் புதிதாய் வாத்திச்சிகளைப் படிக்கும்படி செய்கிறதாயிருக் கிறதில்த் தமது மனைவிக்கும் தனக்கும் அலுவலுக்குகேள்க்க கனம் பிராட்ட ஐயாவர்களிடத்தில் தம்பி ஏசுதாசன் மூலமாய் விசாரிக்கும்படி எழுதினார்.

அக்டோபர்மீ ௧-௳ அச்சங்குளம் சவரிமுத்துப்பிள்ளை மகன் விசேக் கிமுத்து வடக்குன்குளத்திலிருந்து வந்தான். இரவு சாப்பாடு. ௨-௳ காலை சாப்பாடும் கூ மாகாணியும் கொடுத்தேன். மதுரேந்திர ஐயர் கூ க கொடுத் தனுப்பினர்.

௰௫ ௳ வியாகப்பபிள்ளை சமுசாரத்துடன் சமாரியாபுரத்திற்குப்போ ய்ச்சேர்ந்தார்.

நவம்பர்மீ ௨௩-௳ வியாகப்பிள்ளை பின்னுமெம்மான் பாளையங்கோட் டைக்குப்போனான்.

௨௫-௳ சண்டைவனேரி ஞானமுத்து உவாத்தியார் பெண்சாதி முத்தாவரணம்பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு தகப்பனுருஞ் சம்பந்தியுங்கூடவந்து மதுரேந்திர ஐயா வீட்டிலிருந்து, ௨௮-௳ யவள் கைக்குழந்தைக்கு ஞானஸ்நானங்கொடுத்து முத்துசுவாமியென்ற பேரிடப்பட்டது. ஷை ஐயர் ஞானத்தகப்பனும் அம்மாள் தாயுமாக நியமிக்கப்பட்டு ஷை ஐயர் தான் ஞானஸ்நானமுங் கொடுத்தார்கள். ௨௯-௳ காலமே வைத்தியலிங்கபுரத்துக்கு ஷை யார்கள் போனார்கள். ஷை ஐயரும் விசாரணை பாக்கியநாத உபதேசியாரும்பேதுரு ரீடனைத் தேசாந்திரியாக நியமித்திருக்கிறதுக்கு, பட்டணைகட்டி விளைமுதலான இடங்களுக்குப்போனார்கள்.

டிசம்பர் மீ ௩-௳ வடக்குன்குளத்துச் செபத்தியாயியும் அவள் மூத்தமகளும் இளையவளும் அகஸ்டு மீ ௨௪-௳ முதல் பிள்ளையவர்கள் வீட்டுக்கு வந்திருந்து போகிறார்கள். சேலை இரண்டுங்கையிலும் ரூ யும் கொடுத்து விடுகிறார்களென்றுகேள்வி.

௬௰-ம் ௵ டிசம்பர் மீ

௨-௳ மரியவியாகுலம் நமது வீட்டில் ௨-வது சாமித்தியம்.

௰-௳ திங்கட்கிழமை காலை ௮-மணிக்கு கண்டிக்கு உபதேசியாய்ப்போயிருந்த ஞானப்பிரகாசம்பிள்ளை கருத்தறுடைய கிருபையாற் சுகத்துடன் வந்தார்.

௬௧-ம் வருஷப் பிறப்பை கர்த்தர்கிருபையினாற்கண்டோம். ௬-௳ கிளாக்குளம் அத்தான் மதுரேந்திரம்பிள்ளையவர்கள் வடக்குன்குளத்துக்குப்போனார்கள். ௯-௳ விசாரணைபிள்ளையவர்கள் சகோதரி சின்னயியம்மாள் ஷையவர்கள் வீட்டுக்குவந்தாள்.

---